ராசி
பட்டுப்புடவைகள்
எமது
தீபாவளி
வாழ்த்துக்கள்!
ராசி பட்டுப் புடவைகளும், பருத்தி நூல்
ஆடைகளும், திருமணங்கள், பண்டிகைகள்,
மற்றும் சாதாரண நாட்களில்
அணியச் சிறந்தவை.
"ராதா சில்க்கின் ராசி
உன்னத வாழ்விற்கு ஆசி"
ராசி உற்சாக திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்.
ராதா சில்க் எம்போரியம் (பி) லிட்.
(உங்கள் ஜவுளித் தேவைகள்
அனைத்தையும் வாங்க ஏற்ற இடம்)
மைலாப்பூர், சென்னை-600004
சார்பு நிறுவனம்:
ராதா சில்க்ஸ்
'தன் பில்டிங்ஸ்' மவுண்ட் ரோடு,
சென்னை-600002

With the best compliments from

AMARJOTHI FABRICS

AMARJOTHI BUILDINGS
P. Box No. 22, Karur (Tamilnadu)

Estd : 1940 Cable : "AMARJOTHI" Phone : 451 Two Lines

Manufacturers & Exporters of Handwoven Bedcovers, Furnishing and Dress Materials, Seer Sucker and Casement in all types.

Bombay Office:
Bank of India Bldg,
Sheikh Memon Street,
Bombay - 2.
Phone : 335761

Madras Agents:
Amarjothi Traders,
99, Godown Street,
Madras - 1.
Phone : 28438

அன்பர்களுக்கு மனமார்ந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

நன்னாளில் சேமிக்க ஆரம்பியுங்கள்!

**கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் கொடுத்து
இனிய சேவை செய்யும் வங்கி**

லக்ஷ்மி விலாஸ் வங்கி லிட்.

பதிவு அலுவலகம்:
693, ஜவஹர் பஜார்
கரூர்

C. R. K. செட்டி
சேர்மன்

தமிழகத்தில் தங்கள் சேவைக்கென
பல கிளைகள் உள்ளன.

LVB:104

கலைமகள்

தீபாவளி மலர், 1972



எழில்

- திருத்தணிகைத் தரிசனம்
- காவேரி தோன்றும் இடம்
- காஞ்சிப் பெரியவர்கள்
- வண்ண வண்ணச் சேலைகள்
- அப்பாவும் பிள்ளையும்
- எழிலரசி ஊர்வசி

எழுத்து

- முதல்வரின் கட்டுரை
- பிரதம நீதிபதி ரசித்தவை
- 22 - கதைகள்
- 7 - கட்டுரைகள்
- சிறுவர் பகுதி
- கவிதைகள்

அட்டைப் படம்:
'எடுக்கவோ
கோக்கவோ?'

ட்ரான்கோ
வால்வுகள்
விவசாயத்திலும் பணி
புரிகின்றன!
உணவு உற்பத்தி அதிகரிக்க ட்ரான்கோ
வால்வுகள் உதவி புரிகின்றன.
நிலங்களிலே டிராக்டர்கள் ஓடுகின்றனவா?
அவைகளின் சப்தம்தான் நாட்டில்
நடக்கும் பசுமைப்புரட்சியின் கீதம்.
யந்திர விவசாயத்தின் நாதம். ஆம்,
டிராக்டர் என்ஜின்களின் இதய கீதத்தை
இசைப்பது எது? ட்ரான்கோ வால்வுகள்!
டிராக்டர்களை இயக்கும் இன்றியமையாத
ஒரிஜினல் உறுப்பாகும்.
இன்று செயல்படும் அநேக ரக
டிராக்டர்களின் இதயத்தை இயக்குவது
ட்ரான்கோ வால்வுகளே. மோட்டார்கள்,
விவசாய என்ஜின்கள் தொழிற்சாலை
என்ஜின்கள் முதலியவற்றையும்
இயக்க ட்ரான்கோ வால்வுகள்
செயல்படுகின்றன.
என்ஜின் வால்வ்ஸ் லிமிடெட்.
சென்னை-16
FDSEV120E

அழகுமயம்!

உலகம் முழுவதும் அழகுமயம்! வானவெளியை நோக்கினால் நீலமுகில்களும் செங்கதிரவனும் வெண்ணிலவும் வைர ஒளிவிடும் விண் மீன்களும் அழகுக் கொள்ளை. நிலவுலகத்தைப் பார்த்தால் மலரும் கனியும், செடியும் கொடியும், மானும் யானையும் அழகு வடிவங்கள். குழந்தையும் மகளிரும் அழகுக்கு ஆஸ்தான பீடங்கள்.

இயற்கையின் எழில் நலங்களைக் கண்டு களிகொள்ளும் மனிதன் செயற்கையாகவும் அழகை வளர்க்கிறான்; விளக்குகிறான். அவன் எழுதும் ஓவியம் அழகு! அவன் கட்டும் கோயில் அழகு! அவன் படைக்கும் சிற்பம் அழகிலும் அழகு!

இந்த அழகை அநுபவிக்கும் திருநாள் தீபாவளி. இந்த விழாவில் ஏற்றும் சுடர் விளக்கு அழகு! விடும் வண்ண மத்தாப்பு அழகு மழை! உடுத்தும் ஆடைகள் அழகுப் பரப்பு! உண்ணும் விருந்துகூடப் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கிறது!

இந்த அழகுத் திருநாளில், அழகை உணர்ந்து நுகரும் திருவிழாவில், உங்கள் அழகுணர்ச்சிக்கு விருந்தாக, கண்ணுக்கு அரிய வண்ணக் கோலக் காட்சியாக, கருத்துக்கு இனிய கற்பனைக் கோல அழகாக இந்த மலர் மலர்கிறது.

அருள் விளக்காகத் திகழும் நீலாயதாட்சியின் கோலத்திலே தெய்விகப் பேரழகு; தவக்கனலால் புடம்போட்ட பொன்னுக ஒளிரும் ஸ்ரீமத் ஆசார்ய சுவாமிகள் திருமுகத்திலே தவத்திரு வனப்பு; பாண்டுரங்கனைச் செங்கல்லில் நிறுத்திய புண்டரீகன் வரலாற்றைச் சொல்லும் படக்கோவையிலே பக்தியின் செளந்தர்யம்; ஊர்வசியும் புரூரவஸும் நடத்திய இன்ப வாழ்க்கைப் படத்திலே காதலின் எழில்; திருத்தணிப் பயணத்தைப் படம் பிடித்துக் காட்டும் பக்கங்களிலே நம்பிக்கையின் கவின்; காவேரி பிறந்த இடத்துக் காட்சிகளைக் காட்டும் படங்களிலே தூய்மை நலம்; சிறையில் எழுந்த கவிதை பற்றிய படங்களிலே அருளின் செம்மை; வண்ண வண்ணச் சேலைகள் நூலிலிருந்து சேலை வரைக்கும் பல நிலைகளில் மாறி மாறி உருவாகும் படங்களில் கலைவண்ணம்; அப்பாவும் பிள்ளையும் பல கோணங்களில் இணையும் நிலைகளைக் காட்டும் நிழற்படங்களிலே வாத்ஸல்யத்தின் சோபை— எல்லாம் அழகு, எல்லாம் எழில், எல்லாம் வனப்பு!

படித்து, சிந்தித்து, சுவைக்க எத்தனை கதைகள், கட்டுரைகள்! கணவனும் படிக்கலாம்; மனைவியும் படிக்கலாம்; இருவரும் சேர்ந்து படிக்கலாம். இருவரையும் விட்டுக் குழந்தை தனியே படிக்கவும் பார்க்கவும் தனியே ஒரு பகுதி இருக்கிறது. நீங்களே பார்க்கப் போகிறீர்களே!

எல்லோருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

ஆசிரியர்

குடகு... மூன்றெழுத்து
காவிரி... மூன்றெழுத்து
காப்பி... மூன்றெழுத்து

AIYANGAR'S COFFEE COMPANY ACC MADRAS-2

• காவிரி என்றவுடன் அது உற்பத்தியாகும் குடகும்.
• குடகு என்றவுடன் அங்கே சிறப்பாக விளையும் காப்பியும் நினைவுக்கு வருதல் இயல்பே. • காப்பி என்பதுடன் 'தரம்' என்ற மூன்றெழுத்தையும் சேர்த்து எண்ணும்போது, நினைவில் நிற்பது —

அய்யங்கார்ஸ் காப்பி

அலுப்படைந்த உடலில் அயர்வு நீங்க அய்யங்கார் காப்பி அருந்துவீர்!

அய்யங்கார்ஸ் காபி கம்பேனி

சிந்தாதிரிப் பேட்டை
• 45, சுவாமி நாயக்கன் தெரு
தொலைபேசி: 24131

மயிலாப்பூர்
• 15, தெற்கு மாடவீதி
76773

தி. நகர் ஏஜென்சி
சாந்தி & கோ
• 18, உஸ்மான் ரோடு
446387.

உங்கள் தீபாவளி பண்டிகையை குதூகலமாக்க அய்யங்கார்ஸ் காபி இன்றியமையாதது.

DRINK THE DELIGHT OF AIYANGAR'S COFFEE

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

மலர்களின் இனிய நறுமணத்தை தருவது...

TRADE MARK
BKR PERFUMERY

தாழம்பூ
லெவண்டர்
மரிக்கொழுந்து
முல்லைப்பூ
பத்திகள்

Mfrs:
B.K.R. பெர்ப்யூமரி, கோயமுத்தூர்-1

வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

MAHENDRA

"மகேந்திரா"

மோட்டார்கள், பம்பு செட்டுகள், மானோபிளாக்குகள்
விவசாயத்திற்கும், தொழிலுக்கும் சிறந்தது.



★

"மகேந்திரா" டொமெஸ்டிக் பம்புகள்
வீட்டு உபயோகத்திற்கு தாராளமான
தண்ணீர் வசதியை அளிக்கிறது.

"மகேந்திரா" பம்பு செட்டுகள் அரசாங்க கடன் உதவி கொண்டு வாங்கலாம்.
தமிழக அரசினரால் அங்கீகாரம் பெற்றது.

தயாரிப்பாளர்கள்:

மகேந்திரா இன்ஜினீயரிங் ஒர்க்ஸ்

6/433, P. N. பாளையம் ரோடு, புலியகுளம், கோயமுத்தூர்-18.
போன்: 30138

OSR

COLOUR MATCHING -- A SPECIALITY...

-- FOR Excellence in printing, by
Letterpress or Offset --
For a fine range of printing inks,
matched against specific requirements,
and backed by on the Spot Service

NATIONAL INKS ---

NATIONAL PRINTING INK CO.

G. 3, Ambattur Industrial Estate,
Madras-58 Ph: 60686

BANK OF BARODA
நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ
பாங்க் ஆஃப் பரோடா
இந்தியாவிலும், வெளிநாடுகளில் யு. கே.,
கிழக்கு ஆப்பிரிக்கா, மொரீசு, பிஜி தீவுகள் மற்றும்
கயானாவிலும் 650க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன.
Shilpi BOB-23A/72 Tam

ஸ்பென்ஸர்ஸ்

டீ

உங்களுக்கு உண்மையிலேயே திருப்தி தருகிறது

ஸ்பென்ஸர் அண்ட் கோ. லிமிடெட்,
சென்னை மற்றும் கிளைகள்

FDSST1303TM

Diamond
Presents
Faremaster
TAXI AND RIKSHAW METERS

TAXI METER
Regd. Design
No. 139081

DIAMOND HAS ACHIEVED ITS NAME IN FARE METERS WITH 11 YEARS' EXPERIENCE IT HAS ACHIEVED MOST ACCURATE TECHNICAL DESIGN FOR FARE METERS. IT NOW PRESENTS *Faremaster* TAXI AND RIKSHAW METERS

- **F**LAWLESS MECHANISM
- **A**CCURATE READING
- **R**EASONABLE PRICE
- **E**ASY OPERATIONS
- **MASTER** IN-FAREMETERS

PRICE:
Rs. 1300/- FOR TAXI METER
Rs. 700/- FOR RIKSHAW METER
(In Maharashtra: All Inclusive. Out Of Maharashtra: Local Taxes Extra)
WITH **2** YEARS GUARANTEE

RIKSHAW METER Regd.DesignNo.139078

Manufacturers:
DIAMOND CLOCK MFG. CO. PVT. LTD.
1180, BUDHWAR PETH, POONA-2.
SOLE SELLING DISTRIBUTORS
KOHINOOR SALES CORPORATION
1241 (New) Sadashiv Peth, Poona-30.

INSIST FOR 'FAREMASTER'



தீபாவளி வாழ்த்துகள்

வீல்ஸ் இந்தியா லிமிடெட்
இந்தியாவில் சக்கரத் தொழிற்சாலைகளில் மிகப் பெரியது
பாடி, சென்னை-50

வண்ணங்களில் உங்கள் எண்ணத்தை
பிரதிபலிக்கச் செய்யும்
அசல் காஞ்சீபுரம் பட்டுப்புடவைகளை
நியாய விலையில் தேர்ந்தெடுக்க சிறந்த இடம்
கோ-ஆப்டெக்ஸ்
குறளகம், தி. நகர், லஸ் மற்றும்
காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி.
CriterionCO 2757 TM

திருவிழா நாள்



வழிபட வேண்டிய நேரம் ... மகிழ்வோடு இருக்க வேண்டிய நாள்

நம் தாய் நாட்டின் பெருமையுடைய கலாச் சாரத்தையும் செழிப்பான மரபுரிமையையும் இன்று நினைவு கொள்கிறோம். தங்களின் விலைமதிக்க முடியா உயிர்த் தியாகத்தாலும் நற்பணிகளாலும் பெருமகான்கள் இதை மகத்தானதாக உருவாக்கினார்கள்.

இக்குதூகல நாளிலே 'பிஇஎல்'லில் அதிக உற்பத்திக்கும் நல்ல அபிவிருத்திப் பணிகளுக்கும் நாங்கள் மறு உறுதி கொடுக்கிறோம். ஏனெனில 'பிஇஎல்'லில் எங்களுக்கு 'உழைப்பே வழிபாடு'.

பிஇஎல் ஒவ்வொரு நாளும் பலவழிகளில் உங்களுக்கு நல்ல நல்ல முறையிலே பணி புரிகிறது.

BEL **பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட்.**
பதிவு அலுவலகம்: ஜாலஹள்ளி, பெங்களூர்-13.

Phone: 4501 (6 Lines)

HOTEL AJANTHA

VEGETARIAN BOARDING AND LODGING

JUNCTION ROAD, TRICHY-1

Centrally Located—Closer to junction

Central & State Transport Bus Stand and Air-Port

Single, Double, Family and Air-Conditioned Rooms—All bath attached

Telephones in Rooms, Lawn and Car Parking facilities

Well-Furnished 'HALL' for 'Conference', 'Meeting' and 'Tea' and 'DINNER PARTIES'

VAIRAVAN

HMT gives you something to be proud of

At HMT we believe a man should be proud of his watch. So we give you a watch to be proud of.

HMT PILOT—There is no mistaking the dashing black dial with its luminous hands and hour marks. The Pilot keeps its head —shocks or water. It is anti-magnetic and is built round an unbreakable mainspring. A distinctive watch, HMT PILOT, not for just for everybody.

HMT Watches—A gift of time.

HMT Watch Factory, BANGALORE-31



THERE'S SO MUCH MORE TO M & M

Not just the famous 'JEEP' vehicles. M & M are equally active in

STEEL- M & M make available to the country a wide range of steel and alloy steels.

MACHINE TOOLS- M & M bring you a choice of machine tools from U.K., West Germany, Canada and India.

INSTRUMENTATION- M & M provide Industrial Instruments, Process Controls and Automation Equipment.

ELECTRONICS- M & M manufacture Industrial Controls, Professional Grade Components, Electro-Medical Instruments and Military Equipment.

AGRO-AVIATION- M & M undertake aerial agricultural and anti-malarial spraying.

For technical progress with a social purpose.

Jeep

MAHINDRA & MAHINDRA LTD.
Gateway Building, Apollo Bunder, Bombay-1.

புத்தாடைகள், தித்திக்கும் விருந்துகளுடன் கூடிய மகிழ்ச்சிகரமான பண்டிகை தீபாவளித் திருநாள். இந்நன்னாளைப்போல் எதிர்காலமும் கவலையற்றதாகத் திகழ ஆயுள் இன்சூரன்சு மூலம் வகை செய்யுங்கள்.

ஆயுள் இன்சூரன்சுபோல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை.

அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

"SVE" மாவரைக்கும் இயந்திரம்

ஹோட்டல்கள், கேன்டீன்கள், வீடுகளுக்கு
மிகவும் இன்றியமையாதது

ஊறவைத்த தானியங்கள் மின்சாரத்தால் தானகவே
அரைக்கும் ஆட்டுக் கல் பல சைஸ்களில் கிடைக்கும்.

மினி டைப் (MINI TYPE) எங்களுடைய விசேஷ தயாரிப்பு



MINI TYPE
WET GRINDER



எங்களுடைய இதர தயாரிப்புகள்

"SVE" டொமெஸ்டிக் பம்புகள் & சிங்கிள் ஃபேஸ் மோட்டார்கள்

"SVE" டொமெஸ்டிக் பம்புகளை உபயோகித்து
தாராளமான தண்ணீர் வசதியைப் பெறுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினீயரிங் ஒர்க்ஸ்

54, மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர்-11 போன்: 32023 & 31577

வியாபார விசாரணைகள் வரவேற்கிறோம்.

OSR

Happy Deepavali Greetings
to Kalaimagal Readers

From

M/s Rainbow Ink & Varnish Manufacturing Co., Pvt. Ltd.,

133-C, Vakola, Santacruz (East), Bombay-55

Tel: 533234—533235
Gram: RAINBOINK

A cool idea on gracious living



Live with an elegant table Rallifan. Chic, streamlined. With the famous Rallifan quality built into every feature: whisper-silent operation, greater cooling power, excellent after-sales service. And a 2-year guarantee.

You're cooler with a

Rallifan

A product of the Ralli Group

Hearty Deepavali Greetings

Shardlow India Limited

(Drop Forgers and Stampers)

Huzur Gardens, Madras-11

Phone : 669541 (5 Lines) Grams : "STAMPINGS"

"எங்கள் வீடெங்கும் மலர்களின் நறு மணம் வீசுகிறதென்று வியந்தயே அதன் இரகசியம் இது தான் ! பான்-ஸாகா பரிமளவில்லே ! நாகரீக நல் வாழ்விற்கு இன்றியமையாத ஓர் நவீன தயாரிப்பு"

பான்ஸாகா

பரிமளவில்லே

துர்நாற்றத்தை அகற்றி
நீங்கள் விரும்பும் மலர்களின் நறுமணம்
எங்கும் பரவச்செய்கிறது பான்ஸாகா
அத்துடன் துணி மணி புத்தகங்களை
நாசப்படுத்தும் பூச்சிகளையும் ஒழித்து விடுகிறது

தயாரிப்பாளர்கள்

மில்டன் கெமிபிளாஸ் கார்ப்பொரேஷன்

பெங்களூர்-10

எண்ணிய வண்ணமே!

ரூபி டஸ்ட் தேயிலையின்
வெற்றிச் சாதனை உங்களைப் போன்ற
மக்களுக்கே உரித்தானது.

ரூபி டஸ்ட் : நிறைந்த ருசி ; நல்ல நிறம் ;
நொடியில் தயாராகும் பானம்.
வேறெந்தத் தூள் தேயிலையையும் விட
அதிகக் கோப்பைகள் அளிப்பது கூட.

லிப்டன் ரூபி டஸ்ட்

தூள் தேயிலைகளில்
ஒப்புயர்வற்ற
மன்னன்

பாக்கிங் செய்த
தேயிலை மட்டுமே
புதிதாகவும்,
மணத்துடனும்
கிடைக்கிறது

LIPTON

லிப்டன்
என்றாலே
நல்ல டீ



LRDC-7R/72 TAM

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

தி பாலக்காடு கிரெடிட் கார்ப்பரேஷன் (ரிஜிஸ்டர்ட்)
(ஸ்தாபிதம்: 1950)

தலைமை அலுவலகம்: 5, நாணுராவ் நாயுடு தெரு, தி. நகர், சென்னை-17

ரெக்கரிங் டிபாசிட்டுகள் :

பிரதி மாதம் கீழ்க்கண்ட மாதங்களுக்குப் பின் திரும்பப் பெறக்கூடிய தொகை

ரூ.	12 மாதம்	24 மாதம்	36 மாதம்	75 மாதம்	100 மாதம்
5-00	62-50	130-00	205-00	500-00	720-00
10-00	125-00	260-00	410-00	1,000-00	1,440-00
20-00	250-00	520-00	820-00	2,000-00	2,880-00
50-00	625-00	1,300-00	2,050-00	5,000-00	7,200-00
100-00	1,250-00	2,600-00	4,100-00	10,000-00	14,400-00
250-00	3,125-00	6,500-00	10,250-00	25,000-00	36,000-00
500-00	6,250-00	13,000-00	20,500-00	50,000-00	72,000-00

பிக்சட் டிபாசிட்டுகளும்

1 வருடத்திற்கு 9% P.A. வட்டி 2 வருடங்களுக்கு $9\frac{1}{2}$% வட்டி 3 வருடங்களுக்கு 10% வட்டி

வீதம் பெற்றுக்கொள்ளப்படுகிறது

குறைந்தபட்ச டிபாசிட் ரூ. 100 பிரதி மாதம் வட்டி வழங்கப்படும்

5 வருட காஷ் சர்டிபிகேட்டுகள்

ரூ. 100, ரூ. 1000க்கும் முறையே ரூ. 62/-, ரூ. 620/- வீதம் வழங்கப்படுகிறது.

A. S. P. அய்யர், மானேஜிங் பார்ட்னர்

கிளைகள்: சென்னை நகரம்: (1) 231/233, தம்புசெட்டி தெரு, ஜியார்ஜ் டவுன். (2) 9, கோனூர் ஹைரோடு. அய்யனாவரம். (3) 14, தங்கசாலை தெரு, சென்னை-3. (4) 2/96, பெரிய தெரு, திருவல்லிக்கேணி.
இதர இடங்கள்: (1) 85, ஒப்பண்ணக்காரத் தெரு, கோயமுத்தூர்-1. (2) பெரியபஜார், பாலக்காடு-1. (3) 3-6-345/A, பஷிர் பாக், ஹைதராபாத்-29. (4) தீபக் வில்லா, பிளாட் நிர் 105/ , கோவண்டி ரோடு, செம்பூர், பம்பாய்-71.
வாராந்திர விடுமுறை. தி. நகர் & திருவல்லிக்கேணி கிளைகள்: புதன். பம்பாய் கிளை: திங்கள்.

'ரூபி' ஸ்தாபனத்தார் உங்கள் அனைவருக்கும்
தீபாவளி, ரம்ஜான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிருர்கள்

ஜவுளியில் நீங்கள் லாபமடைய வேண்டுமென்ருல்

மற்ற கடையில் வாங்கிவிட்டு பார்ப்பதைவிட, வாங்குவதற்கு முன் 'ரூபி'யில் தேவையான ஜவுளிகளைப் பாருங்கள். நீங்களே ஒரு முடிவுக்கு வந்துவிடுவீர்கள்.

ஜவுளி விலைகளில், தரத்தில்

இவ்வளவு வேறுபாடு இருக்கிறதா! என்று வியந்து உடனே வாங்கிவிடுவீர்கள் 'ரூபி'யில்.
நவீன சூட்டிங்ஸ், சர்ட்டிங்ஸ், சேலைகள், வேஷ்டிகள் இன்ன பிற ரகங்கள்
உங்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் நிச்சயமாக. ஆலை ரகங்களின் அற்புதங்கள் நிறைந்த

ரூபி ஸ்டோர்ஸ்

ஜவுளியில் நவீனத்தை அறிமுகப்படுத்துபவர்கள்
20, அம்மன் சன்னதி, மதுரை-1. போன்: 25045

—ராஜம்

டிவிஎஸ் ரீடிரெட் எப்பொழுதும் பத்திரமானது

டிவிஎஸ் ரீடிரெடிங் செய்யும் டயர்கள் புதிய டயர்களைப் போலவே தோன்றுகின்றன. ஆனால், ரீடிரெடிங் செய்யும்போது, ஒவ்வொரு. அம்சத்தையும் ஊன்றிக் கவனித்துக் கண்ணும் கருத்துமாகச் செய்யும் வேலை, டயர்களுக்குப் புதிய தோற்றத்தைக் கொடுப்பதற்காக மட்டும் அன்றி அவை சாலைகளில் நன்கு பதிந்து செல்லவும், நீண்ட காலம் உழைக்கவும் துணை புரிகின்றது.

ஒவ்வொரு டயரையும் ஒரு முறைக்கு இரு முறையாகப் பரிசோதிக்கின்றனர். டயரில் ஆணி, கண்ணாடித் துண்டு முதலியவை அணுவளவு இருந்தாலும், டயர் பழுதாகிவிடும். ஆகையால் நவீன இயந்திரங்களில் அனுபவமுள்ள நிபுணர்கள் செம்மையாகப் பணியாற்றுகின்றனர். உறுதியாக இருக்கவேண்டும் என்பதற்காக டி.வி எஸ் ஸ்தாபனம் காமெல்பாக் ரப்பரைத் தானே சொந்தமாகத் தயாரிக்கின்றது.

டிவிஎஸ் ரீடிரெட் டயர்கள் வேறு எந்த ரீடிரெட் டயர்களைக் காட்டிலும் அதிக நாள் உழைக்கின்றன.

இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் ரீடிரெட் செய்வது டி.வி.எஸ்.

TVS

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், பங்களூர் - கோயமுத்தூர் - கலமசேரி - மதராஸ் - புதுக்கோட்டை - சேலம் - செகந்திராபாத் - திருநெல்வேலி - விஜயவாடா

SI-6073

தீபாவளி வாழ்த்துக்கள்

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை ஆபீஸ் : கல்கத்தா

எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் தேசத்தினருக்கும் நாங்கள் சௌக்யத்தையும் ஐஸ்வரியத்தையும் வேண்டுவதுடன் நாட்டின் முன்னேற்றத்திற்கான எல்லாச் செயல்களிலும் தொண்டு செய்யும் எங்கள் வாக்குறுதியை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

UCO-14/72

சௌத் மதராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் லிமிடெட்

தென்னூர், திருச்சிராப்பள்ளி-17.

தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டத்தில் 8,28,800 ஹெக்டேர் நிலப்பரப்பில் தற்போது 83,000 வாடிக்கையாளர்களுக்கு மின்விசை வழங்கும் அனுமதியாளர்.

மின்விசை வேண்டுவோர் விண்ணப்பிக்கலாம். அவர்களது கோரிக்கைகள் உடனடியாகக் கவனிக்கப்படும்.

'ஆம் ஜானகி, எனக்குத் தெரிந்த ஆரோக்கியமுள்ள குடும்பங்களில் அனைவரும் 'ஹார்லிக்ஸ்' பருகுகின்றனர். ஊட்டத்தின் முக்கிய. ஆதாரமே அதுதான்'

என்கிறார் ஜானகியின் டாக்டர்.

அவர் 'ஹார்லிக்ஸ்' தரும் சிறந்த ஊட்டத்தின் குணங்களைப்பற்றி நன்கு அறிந்தவர். ஜீவாதாரமான புரதம் மற்றும் பால், கோதுமை, மால்டெட் பார்லி, இவை தரும் ஊட்டச் சிறப்பும் இயற்கைச் சத்துக்களும் அடங்கியதால் 'ஹார்லிக்ஸ்' நிகரற்று விளங்குகிறது. உதாரணமாக, பாலிலிருக்கும் ஊட்டச் சத்தை இருமடங்காகப் பெருக்குகிறது 'ஹார்லிக்ஸ்'.

குடும்பத்தினரின் ஆரோக்கியத்தைப் பொறுத்த வரையில் மிகச் சிறந்ததென கருதப்படுவது 'ஹார்லிக்ஸ்' தான்.

'ஹார்லிக்ஸ்'—ஒரு பதிவு பெற்ற ட்ரேட் மார்க்.

ஹார்லிக்ஸ்'—ஒரு பதிவு பெற்ற ட்ரேட் மார்க்

முழுமையான ஊட்டம் பெற-'ஹார்லிக்ஸ்'

என்பீல்டு



எல்லா சுமைகளையும் ஏற்கிறது!

எங்கள் மோட்டார் சைக்கிள்களையும், விவசாயம் மற்றும் தொழில்களுக்குப் பயன்படும் வில்லியர்ஸ் என்ஜின்களையும் குறிப்பிடவில்லை. ஏனெனில் அவை மிகப் பிரபலமானவை. இங்கே நாங்கள் குறிப்பிடுவது எங்கள் நிறுவனத்தை.

என்பீல்டு நிறுவனத்தின் முக்கியமான அம்சம் தொழில், போக்குவரத்து, பாதுகாப்பு, வேளாண்மை, வேலை வாய்ப்பு ஆகிய பல துறைகளிலும் அது ஆற்றிவரும் தொண்டுதான்.

பாதுகாப்புத் துறையில் தகவல் தொடர்புக்கென எங்களது மோட்டார் சைக்கிள்கள் இடையருது பணி புரிகின்றன.

தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்கள், பொறியாளர்கள், உயர் அதிகாரிகள் என்று பல மட்டங்களில் நிறையப் பேருக்கு என்பீல்டு நிறுவனம் வேலை வாய்ப்பளித்திருக்கிறது. இவர்கள் எல்லோருமே 1956-ம் ஆண்டில் திருவொற்றியூரில் உள்ள என்பீல்டு தொழிற்சாலை முதலாவது மோட்டார் சைக்கிளை உற்பத்தி செய்ததிலிருந்து எங்கள் நிறுவனத்துடன் இணைந்து வளர்ந்திருப்பவர்கள்.

பட்டினத்தாரால் பாடப்பெற்ற புகழ்வாய்ந்த திருவொற்றியூர் ஒரு காலத்தில் சந்தடி ஏதுமற்ற சின்னஞ்சிறு கிராமமாக இருந்தது. இன்று மாபெரும் தொழிலகங்களின் இருப்பிடமாக அது உருமாறியிருக்கிறது.

சென்னையின் இந்தப் புறநகர்ப் பகுதியில் வாழும் மக்கள் சமுதாயத்தின் ஓர் அங்கமாகவே என்பீல்டு விளங்குகிறது. தனது தயாரிப்புகளுக்கான உறுப்புக்களை உற்பத்தி செய்வதற்கென எண்ணற்ற சிறு தொழில்களை என்பீல்டு துவக்கி வைத்து, உதவியும் புரிந்திருக்கிறது.

வில்லியர்ஸ் என்ஜின்களைப் பல விதங்களில் பயன்படுத்தும் ஆயிரக்கணக்கான விவசாயப் பெருங்குடி மக்களையும் தொழிலதிபர்களையும் பற்றிப் பெருமிதம் கொள்கிறது என்பீல்டு.

இவர்கள் எல்லோருமே என்பீல்டு நிறுவனத்தின் இன்றைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள்.

ஏறத்தாழ 100% உள்நாட்டு மூலப் பொருள்களையே கொண்டு தயாரிக்கப்படும் என்பீல்டு தயாரிப்புகள் அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவதுடன் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்தும் தருகின்றன. இப்போது இம்மாநிலத்தின் பின் தங்கிய மாவட்டம் ஒன்றில் ஆயிரம் பேருக்கும் அதிகமாக வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய புதிய தொழிற்சாலை ஒன்றைத் துவக்குவதில் என்பீல்டு முழுமூச்சுடன் முனைந்திருக்கிறது.

என்பீல்டு சுமைகளை விரும்பி ஏற்கிறது!

ENFIELD INDIA

என்பீல்டு இந்தியா லிமிடெட்
சென்னை 19

FD961/1752 TM

நமது நாட்டின் விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படை நீர்ப்பாசனமும், மின்சாரசக்தியும் ஆகும். முன்னேற்றத் திட்டம் எதிலும் மின்சாரசக்தி முதல் இடம் பெறும் என்பதில் ஐயமில்லை.

— பிரதம மந்திரி இந்திராகாந்தி

நினைவு இருக்கட்டும்-

ஈசன்

ரசாயனம், மின்சாரம், உணவு அல்லது உருக்கு ஆகிய தொழில்களில், எந்தத் தொழிலாக இருந்தாலும் தேவையான மின்சாரம் மற்றும் இயந்திரங்கள் அமைப்புத் திட்டத்தில் உங்களுக்கு உதவ ஈசன் எப்பொழுதும் தயாராக இருக்கிறது. எல்லா இன்ஜினியரிங் துறைகளுமே ஈசனின் சிறப்பு இயல்புகள். மாநில மின்வாரியங்கள், ரெயில்வேக்கள், பாதுகாப்புத்துறை இன்னும் முக்கியமான பொதுத் துறை தனியார்துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஈசன் சேவை செய்து வருகிறது.

● HHE பவர் அண்ட் டிஸ்ட்ரிபியூஷன் டிரான்ஸ்பார்மர்கள் ● ஈசன் ஸ்விட்ச்கீயர் ● கன்ட்ரோல் அண்ட் ரிலே போர்டுகள் ● அலிஸ் சாமர்ஸ் பவர் எக்யுப்மென்ட் ● CCI ட்ரோபோடோர் கேபிள்களும் வயர்களும் ● F & G கேபிள்கள் ● WMW மெஷின் டூல்கள் ● மெஷினன் பாப்ரிக் ரெயின்ஹாஸன் ஆன்-லோட் டாப் சேஞ்சிங் கீயர்கள் ● எஸ்பார் எலெக்ட்ரிக்கல் ஸ்டாம்பிங்குகள் ● மெரைன் இன்ஜினியரிங் எக்யுப்மென்ட் அண்ட் சர்வீஸ்கள் ● தொழிற்சாலைகளுக்கான மின்சார அமைப்பு முழுமையும் ● ஜெனரல் இன்ஜினீயரிங் மற்றும் ஸ்டரக்சுரல் சர்வீஸ்கள் ● வீடுகள், கிராமங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பொது வாட்டர் சப்ளை அமைப்புகள் ● பம்புகள், மோட்டார்கள் மற்றும் குளோரினேட்டிங் எக்யுப்மென்ட் ● 220 KV வரை முழு ஸப்ஸ்டேஷன் அமைப்பது உட்பட, திட்டமிடுவது, நிர்மாணிப்பது, சப்ளை, டெஸ்டிங், விற்பனைக்குப் பின் சேவை ஆகியவை ● ஏற்றுமதிகள் ● கன்ஸ்ட்ரக்ஷன் அண்ட் கான்ட்ராக்டிங் இன்ஜினியர்கள்.



ஈசன் இன்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்
ஹாக்பிரிட்ஜ்-ஹெவிடிக் அண்ட் ஈசன் லிமிடெட்
ஈஸ்வரன் அண்ட் ஸன்ஸ் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட்
ஈசன் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை-1

அலுவலகங்கள் உள்ள இதர இடங்கள்:
புதுடெல்லி, பம்பாய், கல்கத்தா & லண்டன்.

EP.EE.15

எல்லா ஹேர் ஆயில்களுமே உங்கள் கேசத்தை
அலங்காரமாக வைக்கின்றன. ஆனால்

ஸ்வஸ்திக் பெர்ஃப்யூம்ட் கேஸ்டர் ஹேர் ஆயில்

உங்கள் கேசத்தை அடர்த்தியாக, ஒளிசிந்த
வைக்கிறது; ஆரோக்கியமாக வைக்கிறது.
அத்துடன் கேசம் எழிலோங்கச் செய்கிறது.

இக்காரணங்களால்தான், ஆண்டுதோறும் அநேக குடும்பத்தினர் நறுமணமுள்ள
ஸ்வஸ்திக் பெர்ஃப்யூம்ட் கேஸ்டர் ஹேர் ஆயில் உபயோகிக்கத் தொடங்குகின்றனர்.

Shilpi HPMA 27/72a Tam

NCM-35/71 TAM

தேவி! நின் திருவடி பணிந்தேன்
தினமும் அருள்வாயே!
தின்னத் திகட்டா நியூட்ரின் மிட்டாய்
தினமும் தருவாயே!
நியூட்ரின்
கன்பெக்ஷனரி
கம்பெனி
பிரைவேட் லிமிடெட்,
சித்தூர் (ஆ.பி.)
nutrine
தின்னத்தின்ன திகட்டாத மிட்டாய்!

Pearl

EYEBROW

PENCIL

Frame your eyes the
mod-mod way with
PEARL Eyebrow Pencil.

Manufactured by :

THE MADRAS PENCIL FACTORY

3, STRINGERS STREET, MADRAS-1

Excitement Entertainment and Knowledge

Indrajal comics whisk you from the dull world of daily routine into an unmatched experience of fabulous fantasy. In its pages, you will find the breath-taking exploits of the invincible Phantom, Mandrake the magician, Flash Gordon and others. There's a great, big thrill in store for you and your children in each issue of Indrajal Comics, presented in superb full-colour pictures and published in six languages—English, Hindi, Marathi, Gujarati, Tamil and Bengali.

Make sure this exciting thriller reaches your home each time.

INDRAJAL COMICS

PRICE 70 PAISE

A TIMES OF INDIA PUBLICATION

OBM/9960

"உலகத்திலேயே
எங்க அம்மாதான்
சிறப்பாக புட்டிங்
செய்கிறாள்!"

சுவைமிக்க புட்டிங் தயாரிக்க 5 எளிய நிலைகள்:

- ஒரு கிண்ணத்தில் 7 மேசைக் கரண்டி (தலை தட்டிய அளவு) பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடரையும், 3 மேசைக் கரண்டி (தலை தட்டிய அளவு) சர்க்கரையையும் போடவும். அரை லிட்டர் குளிர்ந்த பாலிலிருந்து சிறிதளவை அத்துடன் கலந்து விழுது போலாக்கவும்.
- மீதியுள்ள பாலை சூடாக்கவும்.
- அத்துடன் கஸ்டர்டு பவுடர் கலவையைச் சேர்த்து, கொதிக்கும் வரை கிளறவும்.
- ஒரு தேக்கரண்டி வெண்ணை சேர்த்து விழுதாகும் வரை மரக் கரண்டியால் கிளறவும்.
- பின்னர் நெய்தடவிய அச்சில் கொட்டி, படிய விடவும்.

மென்மையிலும் வளமையிலும் மேலானது பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர். எப்போதும் கைவசம் வைத்திருந்தீர்களானால், ஃபிர்னி, ஐஸ்க்ரீம், ட்ரைபிள் போன்ற விதவிதமான பழத் தின்பண்டங்களையும் புட்டிங்குகளையும் எளிதில் தயாரிக்க உதவும். ஜெல்லி அல்லது பழ சாலாடுடனே, தேன் கலந்த உலர் பழங்களின் மீது ஊற்றியோ சாப்பிட்டால் சுவையாக இருக்கும். அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப் பட்டதால், கஸ்டர்டு பவுடர்களிலேயே மிகச் சிறந்தது பிரவுன் & போல்ஸன்.

உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்.

பிரவுன் & போல்ஸன்
கஸ்டர்டு பவுடர் (முட்டை கலவாதது.)

இலவசம்! பிரவுன் & போல்ஸன் பக்குவ முறை நூல் நெ. 5 தயவுசெய்து இன்றே ஒரு பிரதிக்கு எழுதுக:

பப்ளிஸிடி டிபார்ட்மென்ட்.
கார்ன் பிராடக்டஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். சோமானி மார்க்,
பம்பாய்-1.

With best compliments from

Simco Meters Limited

TIRUCHIRAPALLI-20

(Manufacturers of electricity energy meters,
Maximum Demand Indicating Meters,
Electronic Components and Instruments)

VAIRAVAN

விரைவாக - வேகமாக ஏ பீ டி பார்சல் சர்வீஸ்

சேவை செய்கிறது.

விரைவுக்கு
அனுமன்



"எண்ணுக்கும் அளவிலாத அறிவினோர் இருந்து நோக்கும
கண்ணுக்கும் கருதும் தெயவ மனத்துக்கும் கடியன் ஆனான்." கமபர

ஏ பி டி பார்சல் சர்வீஸ்

A | N. MAHALINGAM | GROUP

RAS

"This year
the heavens will
shower blessings
on you.
Your fields
will be full of crops
and you will
have plenty"

RALLIS TREE BRAND FERTILIZERS

RALLIS INDIA LIMITED Fertilizers & Pesticides Division
21, Ravelin Street, Bombay-1.

AdI



மூர்த்தி சிறிதானாலும்...

அகத்திய முனிவருடைய உருவம் சிறியதே. ஆனாலும் அவருடைய சக்தி மிகப் பெரியது. பொங்கும் மகா சமுத்திரத்தையே பருகிவிடக்கூடிய அளவு பெருமை பெற்றிருந்தது.

அதே போன்று, அகத்தியா டெபாஸிட் திட்டத்தில் நீங்கள் சேமிக்கக் கூடிய தொகை சிறியதேயானாலும் அது பெருமளவில் வளர்ந்துவிடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

சிறுவர் முதல் பெரியோர் வரை யாவரும் இத் திட்டத்தில் சேர்ந்து இல்லத்திலிருந்தே சேமித்துப் பயனடையலாம்.

விவரங்களுக்கு அருகிலுள்ள இந்தியன் பாங்கின் கிளையை அணுகவும். அரியதொரு பரிசு காத்திருக்கிறது அங்கே!

இந்தியன் பாங்க்

(முழுவதும் இந்திய அரசுடைமையானது)

17, வடக்கு கடற்கரை சாலை, சென்னை - 1

முன்னூறு கிலோமீட்டர் வண்டி ஓட்டிய பிறகும் களைப்பே தெரியவில்லை!

"என் லாரியில் காற்றழுத்த பிரேக்குகள் பொருத்தப்பட்டிருப்பதுதான் காரணம். கவலையோ பரபரப்போ இன்றி வண்டி ஓட்டுகிறேன். இதனால் என்னால் சாலையில் அதிகக் கவனம் செலுத்த முடிகிறது. என் வண்டியிலுள்ள பிரேக்குகள் திறமையாக இயங்குபவை, பாதுகாப்பானவை, நம்பிக்கைக்கு உகந்தவை என்பதுதான் எனக்குத் தெரிந்த விஷயமாயிற்றே!"

காற்றழுத்த பிரேக்குகள் வண்டி ஓட்டுபவர்களின் சிரமத்தைக் குறைக்கின்றன. அவை நம்பகமானவை, பாதுகாப்பானவை என்று அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

இந்தியாவில் தயாராகும் நவீன கமர்ஷியல் மற்றும் ஹெவி வண்டிகளில் — பஸ்கள், லாரிகள், டிரெய்லர்கள், டிராக்டர்கள், எர்த் மூவர்கள் — ஆகியவற்றில் காற்றழுத்த பிரேக்குகளே பொருத்தப்பட்டுள்ளன.

இந்தியாவில் CD-TVS மட்டுமே ஃபுல்-ஏர் மற்றும் ஏர்-அஸிஸ்ட் பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்களையும், அவற்றுக்கான அசல் உதிரி உறுப்புகளையும் தயாரிக்கிறார்கள்.

20615

CD TVS

— சாலைப் பாதுகாப்புக்கு ஒரு சின்னம்

சுந்தரம் - க்ளேட்டன் லிமிடெட்

(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)

பாடி, சென்னை-50

FDS-SC-1825 TM

பல லட்சம் பேர்கள் உபயோகிப்பது



ப்ளேடோ. இது ஒவ்வொருவருக்கும் பிடித்தமான பேனா. ஏனெனில் அனைவரின் விருப்பத்திற்கேற்ப ப்ளேடோவில் பல ரகங்கள் கிடைக்கின்றன. தவிர, குறைந்த விலையில் உயர்ந்த தரத்துடன் கிடைக்கிறது பிளேடோ.

நினைவிருக்கட்டும் ப்ளேடோ. தரமுயர்ந்த எழுது பொருள்களைக் குறிக்கும் பெயர் அது.

PLATO

மாத்ரே தயாரிப்பு

தயாரிப்பாளர்கள்:

மாத்ரே பென் அண்ட் பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரீஸ் பி. லிட். பம்பாய்.

ஏகபோக விநியோகஸ்தர்கள்:

தி பெஸ்ட் பவுண்டன் பென் டெப்போ. த.பெ. எண் 24, பம்பாய் 2.

Shilpi-MP1A/72 TM

மகிழ்வு அளிக்கும் தீபத்தை ஏற்றுங்கள்!

தீபாவளி ஒளித் திருவிழா மட்டும் அல்ல; அடுத்த ஆண்டில் குடும்பத்தின் மகிழ்ச்சிக்கும் வளத்துக்கும் திட்டமிடும் திருநாள்.

ஒழுங்கான சேமிப்பினால் சந்தோஷமும் வளமும் வரும். உங்கள் சேமிப்புக்கு, சென்ட்ரல் பாங்க், பரந்த பலவித முறைகளை வகுத்திருக்கிறது—தனி மனிதனின் வசதிகளுக்கு ஏற்றபடி.

இந்தத் தீபாவளி, சென்ட்ரல் பாங்கில் உங்கள் திட்டமிட்ட சேமிப்பின் தொடக்கமாக இருக்கட்டும்.

CBI

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

Baygon spray
Kills all vermin rapidly
பல பிரயோகங்களுக்கு ஏற்ற
பேகான் ஸ்ப்ரே
கொசு, ஈக்கள், கரப்பான் பூச்சிகள்
வீட்டில் இதர பூச்சித் தொல்லை-
களை கட்டுப்படுத்துவதன்
மூலம் எங்கும் செயல்படுகிறது
மற்ற
BAYER
பாயரின் தரமான
பூச்சி மருந்துகள்
..போல் பலனளிக்க வல்லது.
S-B/802 (792)

காலம் ஒவ்வொன்றுக்கும்
உண்டு ஒரு வர்ணம்—
இது காமெட் பெயிண்ட்ஸ் காலம்

காமெட் பெயிண்ட்ஸ்

வல்லப் வித்யாநகர், குஜராத்.
தொழில்நுட்ப கூட்டுறவாளர்கள்:
போர்ட்டர் பெயிண்ட்ஸ் லிட்.,
லண்டன்

aditya/cp1/tam.


HE'S GOING TO LIVE A LONG, LONG TIME
ONCE UPON A TIME YOU COULDN'T BE SURE THAT A NEW BORN CHILD WOULD SEE HIS FIRST BIRTHDAY. MODERN MEDICINE HAS CHANGED ALL THAT.
KILLER DISEASES CAN NOW BE CONTROLLED. MANY MORE CAN BE TOTALLY PREVENTED. MALNUTRITION IS DISAPPEARING.
PFIZER IS VITALLY INVOLVED IN ALL THESE AREAS OF DARKNESS.
MILLIONS HAVE BEEN SPENT TO THROW THE LIGHT OF RESEARCH ON THEM.
T.B. FOR EXAMPLE, AND DIABETES AND HYPERTENSION.
IN INDIA, PFIZER HAS A RECORD OF CONTRIBUTION.
PFIZER IS A LEADER IN THE PHARMACEUTICAL INDUSTRY AND MANUFACTURES AND MARKETS A WIDE RANGE OF ESSENTIAL LIFE-SAVING DRUGS AND MEDICINES, NUTRITIONAL PRODUCTS AND ANIMAL HEALTH PRODUCTS.
AND THE MOTTO HAS BEEN TO PUT ALL ITS KNOW-HOW ON RESEARCH AND SCIENCE TO WORK FOR THE WELFARE OF THE PEOPLE.
Pfizer
SCIENCE FOR THE WORLD'S WELL-BEING
PHARMACEUTICALS
PHARMACEUTICAL CHEMICALS
AGRICULTURAL
AND
ANIMAL HEALTH PRODUCTS
NUTRITIONAL PRODUCTS
OBM

நீங்கள்
எங்கிருந்தாலும்
நம்பகமான
மோட்டார்
உறுப்புகளை
டிவிஎஸ்ஸின்
20 ஆபீஸ்கள்
1000க்கு மேற்பட்ட
விநியோக
ஸ்தலங்கள்
மூலமாகப்
பெறலாம்

தரமான மோட்டார் உறுப்புகள் நடைமுறைச் செலவைக் குறைக்கின்றன என்பதை டிவிஎஸ் உணருகிறது. அதனால்தான் முதல்தரமான மோட்டார் உறுப்புகளைத் தயாரிக்கும் பெரிய நிறுவனங்களின் சாமான்களை, தென்னாடெங்கும் நான்கு மாநிலங்களில் எங்கள் 20 ஆபீஸ்கள், 1000க்கு மேற்பட்ட விநியோக ஸ்தலங்கள் மூலம் விநியோகிக்கிறோம். இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மோட்டார் உறுப்புகள் எப்பொழுதும் கைவசம் உள்ளன.

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்-எர்ணாகுளம்

சுந்தரம் மோட்டார்ஸ்
(உரிமையாளர்கள்:
டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை)
மதராஸ்-பங்களூர்-மைசூர்-செகந்திராபாத்-விசாகப்பட்டிணம்

மெட்ராஸ் ஆட்டோ சர்விஸ்
(உரிமையாளர்கள்:
டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை)
மதராஸ்-பங்களூர்-விஜயவாடா-கள்ளிக்கோட்டை-மங்களூர்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & அக்ஸஸெரீஸ் லிமிடெட்,
சென்னை-டில்லி

TVS
உங்கள்
நம்பிக்கைக்கு
உரியது
டிவிஎஸ்

TVS/6409 R2

HEARTY DEEPAVALI GREETINGS

Bimetal Bearings Limited

(Manufacturers of CLEVITE thinwall engine bearings, bushings and thrust washers)

2, Arts College Road, Coimbatore-18

ஓர் முதல் தரமான சந்தர்ப்பம்

உங்கள் **சிறு தொழிலைத்** தொடங்க

டி ஐ ஐ ஸி

நிதியுதவி

விபரங்களுக்கு உடனே அணுகவும்:

டி ஐ ஐ ஸி

இதயபூர்வமான நிதியுதவி

தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்

எல். எல். ஏ. பில்டிங்ஸ்

150-ஏ, மவுண்ட் ரோடு, சென்னை-2.

கிளைகள்: 1231, தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர்.

247, நாயக்கர் புதுத் தெரு, மதுரை.

பால் நிலையம் 6/37, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர்-18.



பேடேகர் தயாரிப்புகள் மிகச் சிறப்பானவை

நீங்கள் முன்பே இதை அறிந்திருக்கிறீர்கள். மக்களின் ஆதரவுடன், அரசாங்க ஆதரவும் அவற்றுக்குக் கிடைத்துள்ளது. உங்களுக்கு விருப்பமான பேடேகர் மாங்காய் ஊறுகாய்க்கு இந்த ஆண்டிலும் முதல் பரிசு கிடைத்திருக்கிறது. நீங்கள் பேடேகர் தயாரிப்புக்களை வாங்கும்போது உயர்ந்த தரமான பொருள்களைப் பெறுகிறீர்கள்; வாடிக்கையாளரின் இந்த நம்பிக்கையின் பலத்தில்தான் இன்றுவரை நாங்கள் பல பரிசுகளைப் பெறுவதில் வெற்றி எய்தியிருக்கிறோம்.

பேடேகர் மஸாலேவாலே

பம்பாய்-4
புனா-30

விளையாட்டாக நினைத்து விடாதீர்கள்!



சாதாரண ஜலதோஷமும் அபாயகரமானதாக ஆகக்கூடும். தடவுங்கள் ரபெக்ஸ்— சக்திமிக்கதொரு நிவாரணி—ஜலதோஷத்திலிருந்து பாதுகாக்கிறது. நிச்சயமாக குணமளிக்கிறது.

* விரைவாக செயல் புரிகிறது—ஆழமாக ஊடுருவிச் செல்கிறது. உடல் உஷ்ணத்தை அதிகரிக்கிறது. * 7 ஜலதோஷ எதிர்ப்பு மருந்துவப் பொருள்கள் அடங்கிய ரபெக்ஸ் ஜலதோஷத்திலிருந்து நல்ல பாதுகாப்பளிக்கிறது. மற்றும் மார்புச் சளி மூக்கடைப்பு, தலைகனம், இவற்றிலிருந்து விரைவாக நிவாரணமளிக்கிறது. ரபெக்ஸ் மார்பில் இறுக்கத்தைத் தளர்த்துகிறது—மூக்கடைப்பை அகற்றுகிறது—தலைவலியிலிருந்து நிவாரணமளிக்கிறது

6 கிராம் டப்பாக்களிலும், 20 கிராம் மற்றும் 65 கிராம் பாட்டில்களிலும் கிடைக்கிறது.

ரபெக்ஸ்

everest/371f/ACW Tam

ஸ்ரீ நீலாயதாட்சியம்பிகை

போட்டோ: ஹரலிங்கம்

1972



ஸ்ரீ நீலாயதாட்சியம்பிகை

போட்டோ: ஹரலிங்கம்

1972

ஆதி பராசக்தி

'ஜோதி'

ஆதி பராசக்தி அன்னையைக் கும்பிட
ஆயிரம் ஆயிரம் கைவேண்டும்;
சோதி வடிவுடைச் சுந்தரி யின்புகழ்
சொல்லப்பல் லாயிரம் வாய்வேண்டும்.

நாகைப் பதியினில் நீலாய தாட்சியாம்
நாமம் விளங்க எழுந்தருள்வாள்;
ஏக பராபரை அன்னவள் பொன்னடி
எண்ணி வணங்கி அருள்பெறுவோம்.

அண்டங்க ளாகிய பந்துக ளைநிதம்
ஆகாய வீதி உருட்டுகிறுள்;
பிண்டத்தில் ஆதாரம் ஆறிலும் பற்பல
பேருடன் நின்று விளங்குகிறுள்;

கையில் பிடித்த கிளிஅவள் வாயிதழ்
கண்டுகொவ் வைக்கனி என்றிருக்கும்;
மெய்யிற் கிளர்ந்த எழிலினைக் கண்டன்பர்
மேனி சிலிர்த்து மனம்நெகிழ்வார்.

அஞ்சலென் னும்கரம் கண்டபின் அன்பர்கள்
அந்த யமனுக்கும் அஞ்சுவரோ?
விஞ்சுவரத கரத்தினைக் கண்டவர்
மெய்யருள் எய்துதற் கையமுண்டோ?

காலில் சதங்கை சிலம்பு கலந்து
கலின்கலின் என்று குரல்கொடுக்கும்;
ஞாலத்தில் இங்கே சரணம் அடைந்தவர்
நலிவடை யாரென் றினிதுரைக்கும்;

மருந்திவள் சன்மப் பிணிக்கு; நன் முத்தி
வழங்கும் தயாபரி, நாகையிலே
கருந்தடங் கண்ணி என அருள் பாலிக்கும்
கன்னி மலர்ப்பதம் தாழ்ந்திடுவோம்.

ஆட்டிப் படைக்கின்ற சத்தியாம் நீலாய
தாட்சி திருப்பெயர் வாழியவே!
ஊட்டி வளர்க்கின்ற அன்னை அவள்அருள்
உலகினில் என்றென்றும் வாழியவே!

ஒளி படைத்த கண்ணினாய் வா! வா!



மாண்புமிகு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி



ஆண்டுதோறும் நண்பர் கி. வா. ஜ. அவர்கள், கவிதை வடிவில் எனக்கொரு மடல் தீட்டி, கலைமகள் மலருக்கு என்னையும் கவிதை தருமாறு பணிப்பார். ஆனால் இந்த ஆண்டோ, அவர் கடிதம் கவிதை வடிவில் வந்தது; என்னை ஒரு கட்டுரை வரையுமாறு கேட்டுள்ளார். என் மனத்திற்குகந்த கண்ணொளி வழங்கிடும் திட்டம் பற்றி எழுதிட விழைகின்றேன்.

''இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி,
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.''

நாட்டு மக்களின் அகக் கண்களைத் திறக்கும் அரும் பணியின் பெருமை பற்றிப் புதுயுகக் கவிஞர் பாரதி இவ்வாறு சொல்லிச் சென்றார். அந்த வரிகளை வைர வரிகளாக மதித்துச் செயற்படும் தமிழக அரசு, அகக் கண்களைத் திறக்கும் பணியில் மட்டுமல்ல, புறக் கண்களைத் திறக்கும் பணியிலும் இன்று முனைப்பாக ஈடு பட்டுள்ளது.

''அறியாமைதான் துயரத்தின் தாய்'' என்று மேல்நாட்டு அறிஞர் ஒருவர் சொல்லியிருப்பதாக நினைவு. அறியாமை காரணமாகத்தான், குணப்படுத்த முடிகின்ற நோய்களைக்கூடக் குணப்படுத்த முடியாத நோய்களாக மாற்றி விடுகிறார்கள் நமது நாட்டு மக்கள். ''நம் செயலாவதென்றில்லை நமச்சிவாயவே'' என்று கருதிக்கொண்டு, தம்மால் இயன்ற செயலைக்கூடச் செய்யாமல் தங்களுக்கும் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் தொல்லைகள் ஏற்படுத்தி வருகிறார்கள்.

அறியாமை காரணமாக ஏற்படுகின்ற இத்தகைய அல்லல்களை நீக்குவதற்கு இந்த அரசு பாடுபட்டு வருகிறது.

தமிழகத்திலே ஏறத்தாழப் பத்து இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் கண்ணொளி குன்றியவர்கள், நகர்ப்புறங்களிலே குறைவாகவும் கிராமப்புறங்களிலே அதிகமாகவும், இன்றைக்கு இருக்கிறார்கள். தங்களுக்கு வந்துற்ற நோய் இன்னதென்றே தெரியாது, பாமரர்களாய், பட்டிக்காட்டு மக்களாய், நாகரிகம் புரியாத நிலையிலும், புரிந்தாலும் அதைத் தொடர முடியாத - எட்டாத தொலைவிலும் இருக்கின்ற காரணத்தால் அவர்களை எல்லாம் தேடிச் சென்று, அவர்களுக்கு நவீன வசதி அளித்திட, அவர்களது தவிப்பை நீக்கிட, அரசு தானே வலுவிலே சென்றும், ஆங்காங்கு உள்ள வள்ளல் தன்மை வாய்ந்த பெரியவர்கள், நண்பர்கள் ஆகியோரின் உதவியைக் கொண்டும், கண் சிகிச்சை முகாம்களை உருவாக்கிக் கண்ணொளி தரும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

இந்த அரும் பணிக்கு அடித்தளம் எனது அமெரிக்கப் பயணம் என்று குறிப்பிடுவதில் தவறு இருக்காது எனக் கருதுகிறேன்.

அமெரிக்க நாட்டுக்குக் கண் சிகிச்சைக்காக நான் சென்றிருந்த போது அங்கே என் அகத்திலே தோன்றியது ஓர் எண்ணம்.

'நாம் அமெரிக்காவிலே வந்து கண் சிகிச்சை செய்து கொள்ளும் அளவுக்கு ஓரளவு வசதி பெற்றிருக்கிறோம். ஆனால் நம்முடைய நாட்டின் ஏழை எளிய மக்கள் அடுத்த கிராமத்திற்குச் சென்று, அல்லது ஐந்து கல் தொலைவு கடந்து பக்கத்திலே உள்ள நகரத்திற்குச் சென்று, கண்சிகிச்சை பெற முடியாத நிலையில் இருக்கிறார்களே!' என்று எண்ணினேன். மறுவிநாடி வெட்கம் என்னை ஆட்கொண்டது; வேதனை என் நெஞ்சத்தை அழுத்தியது.

அமெரிக்க நாட்டிலே நான் கண்ட காட்சிகள் எல்லாம் என் இதயத்தின் ஆழத்தில் ஒரு வலுவான உணர்வினை உருவாக்கிவிட்டன.

அமெரிக்காவில் நான் ஆர்லாந்தோ நீருற்றைக் கண்டாலும், அழகான சோலைகளைக் கண்டாலும், வண்ண வண்ண ஓவியங்கள் எனது கண்களிலே தென்பட்டாலும், பரந்து கிடக்கும் ஆகாயத்தைத் தொடுவதற்குத் துடித்துக்கொண்டிருக்கும் மாட மாளிகைகளைப் பார்த்தாலும் அப்படிப்பட்ட நேரத்தில் எல்லாம் எனது சிந்தனை தமிழ்நாட்டிலே கண் வைத்தியத்திற்கான முனைப்பு இயக்கத்தை எப்படித் துவக்குவது என்கின்ற அடிப்படையில் இருந்தது.

அமெரிக்காவிலிருந்து தாயகம் திரும்பியதும் கண்ணொளி தரும் பணியினைத் தொடங்கிட இயலவில்லை. இந்தியாவுக்குத் திரும்பியவுடனேயே, போர்ச் சூழ்நிலை இங்கே உருவாகிவிட்ட காரணத்தால் ஓரிரு திங்கள் இடைவெளி விட்டு, போர்ச் சூழ்நிலை மாறிய பிறகுதான், கண்ணொளி தரும் திட்டத்தைச் செயலாக்க முடிந்தது.

எனது பிறந்த நாள் பரிசாக மாலைகளும் மற்ற மரியாதைகளும் செய்வதை விடக் கண்ணொளி வழங்கும் திட்டத்திற்காக அனைவரும் நிதி வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். அன்று ஒரு நாளிலேயே மக்கள் கொடுத்த நிதி ஒன்பது இலட்ச ரூபாயைத் தாண்டி விட்டது. ஆகஸ்ட் திங்கள் வரை 12 லட்ச ரூபாய் நிதியாகக் கிடைத்திருக்கிறது. இன்னும் ஏராளமாகக் கிடைக்கும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

பத்து இலட்சம் பேருக்குக் கண்ணொளி வழங்க வேண்டும் என்கின்ற தீவிரத் திட்டத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு மட்டும், ஓர் இலட்சம் பேருக்குக் கண்ணொளி வழங்குவதென்று திட்டம் தீட்டி அந்தப் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

வரலாற்றுப் பெருமையும், புராணப் பெருமையும் படைத்த திருவாரூரில்தான் கண்சிகிச்சை தீவிரத் திட்ட முகாம் முதல் முதலில் தொடங்கப்பெற்றது. அங்கே 2035 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்து கண்ணொளி வழங்கப்பட்டது. அதனையடுத்துக் குமாரபாளையத்தில் உருவான கண் சிகிச்சை முகாமில் 1051 பேர்களுக்குக் கண் சிகிச்சை செய்து, கண்ணொளி வழங்கப்பட்டது. கோபியில் 2102 பேருக்குக் கண் சிகிச்சை செய்து கண்ணொளி வழங்கப்பட்டது. பழனியில் 847 பேருக்குக கண்ணொளி வழங்கப் பட்டுள்ளது, கல்லக்குடியில் 2167 பேர் கண்ணொளி பெற்றனர். அம்பத்தூரில் 403 பேருக்குக் கண்ணொளி வழங்கப்பட்டது.

ஆயிரம் பேருக்குக் கண்ணொளி வழங்க வேண்டுமென்றால், ஏறத்தாழ ஓர் இலட்ச ரூபாய் செலவாகிறது. இதில் ஓர் உண்மையை நாம் உணர வேண்டும். ஏழை மக்களுக்கு நாம் கண்ணாடி மட்டும் வழங்கவில்லை; கண்ணொளியும் வழங்குகின்றோம். கண் நோயாளி ஒருவருக்குச் சாப்பாட்டு வசதி, அறுவைச் சிகிச்சைக்கு ஆகின்ற செலவு, அந்தப் பணியில் ஈடுபடுகின்ற மருத்துவர்கள், அரசுப் பணியாளர், மற்றத் தொண்டர்கள், இடவசதி- இவை அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் ஒரு நபருக்குக் கிட்டத்தட்ட 50 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரை செலவாகிறது.

கண் சிகிச்சையால் கண்ணொளி பெற்றவர்கள் தவிர, வெளி நோயாளிகள், கண்களிலே இருக்கின்ற சங்கடங்களை எடுத்துச் சொல்லி அதற்காக மருந்து பெற்றுக் கொள்கிறவர்கள், கண்ணாடி மாத்திரம் பெற்றுக் கொள்கிறவர்கள் என்று கணக்கெடுத்தால், திருவாரூரில் 1,505 பேரும், குமாரபாளையத்தில் 5,048 பேர்களும், கோபியில் 10,693 பேர்களும், பழனியில் 4,650 பேர்களும், திருச்செந்தூரில் 4,699 பேர்களும், கல்லக்குடியில் 14,328 பேர்களும், அம்பத்தூரில் 2,500 பேர்களும் வெளி நோயாளிகளாக இருந்திருக்கின்றனர். இவ்வாறு, கண்ணொளி வழங்கும் புனிதப் பணி கடமை உணர்வின் அடிப்படையிலே பிறந்து, வளர்ந்து வருகிறது. தமிழகத்தில் கண்ணொளி பெற வேண்டியவர்கள் மொத்தம் பத்து இலட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் இன்னும் ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் கண்ணொளி வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு செய்து முடிக்கும்; இந்தப் பத்து இலட்சம் பேருடன் முடிந்துவிடுமா என்றால், முடியாது. ஐந்தாறு ஆண்டுக் காலத்திற்குள் இன்னும் ஓரளவு எண்ணிக்கை அதிகரிக்கலாம். அவர்களுக்கும் சிகிச்சை தர வேண்டும் என்பதை நாம் முன்கூட்டியே திட்டமிட்டு, அதற்குரிய வழியில், நமது தொண்டை நிறைவேற்றிட வேண்டும்.

இந்த அருந்தொண்டுக்கு உறுதுணையாக விளங்கும் நன்கொடையாளர்கள், மருத்துவத் துறை வல்லுநர்கள், செவிலியர்கள் அனைவரையும் தமிழ் மக்கள் என்றும் நினைவில் வைத்துப் போற்ற வேண்டும்.

கண்ணொளி வழங்கும் புனிதப் பணியில் தம்மை அர்ப்பணித்துக்கொண்டிருக்கின்ற அன்பு உள்ளங்களுக்கெல்லாம் நாம் எந்நாளும் நன்றி சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். ★

நான் கண்டவை

காவியுடை தரித்த இளைஞர்கள்; நெற்றியில் கீற்று நாமம்; மொட்டையடித்துக்கொண்ட தலையின் உச்சியில் சில கேசங்கள்; கையில் ஜால்ரா, வாயில் கிருஷ்ண நாமம்; தங்களை மறந்து ஆடிப் பாடிப் பஜனை செய்கின்றனர். இளம் பெண்களும் இந்தக் குழுவில் சேர்ந்து பாடுகின்றனர். காவித் துணியைப் புடைவையாக உடுத்திருக்கின்றனர். மெய்ம்மறந்து பாடிக் களிக்கின்றனர்.

இவர்களின் விநோத உடையும் பழக்க வழக்கங்களும் புதிதாகப் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றன. காவியுடை உடுத்தட்டும்; தலையை மொட்டை அடித்துக் கொள்வானேன்? தாடியும் மீசையும் வளர்த்துக் கொள்ளலாமே? இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற நியதியை யார் ஏற்படுத்தினார்கள்?

என் ஐயங்களைப் போக்கிக்கொள்ள ஓர் இளைஞரை அணுகிக் கேட்டேன். ''நீங்கள் ஏன் காவியுடை தரித்திருக்கிறீர்கள்?''

என்னை அவர் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''உங்கள் தொழில் என்ன?'' என்று திருப்பிக் கேட்டார்.

''நீதிபதி'' என்றேன்.

''நீங்கள் இந்த உடுப்புடன்தான் நீதிமன்றம் செல்வீர்களா?''

''இல்லை. கறுப்புக் கௌன், கழுத்துப் பட்டை போன்ற நீதிபதிகளுக்கென்றிருக்கும் உடுப்புக்களை அணிந்துதான் போவேன்.''

''அந்தமாதிரி உடைகளை எதற்காக அணிந்து செல்கிறீர்கள்?''

''தொழிலுக்கேற்ற உடை, பழக்கமாகி விட்டது.''

''அதே மாதிரிதான் எங்களதும்.''

இதற்கு மேல் அவரிடம் கேட்க என்ன இருக்கிறது? சமீபத்தில் இத்தாலி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேலை நாடுகளுக்குச் சென்றிருந்தேன். சிகாகோ மாநிலத்திலுள்ள 'ஹரே கிருஷ்ணு' இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் என் கவனத்தைக் கவர்ந்தார்கள். அவர்களில் பலர் லட்சாதிபதிகளாம்; ''பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது? அது அமைதியையும் மனநிறைவையும் அளிக்கவில்லையே!'' என்று கேட்கிறார்கள். சொத்தைத் துறந்து இந்த இயக்கத்தில் மனநிம்மதியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள் நம் பெண்களைப் போல் புடைவை உடுத்துகிறார்கள்.

சர்வ தேசச் சட்ட மகாநாடு (nternational Law (onference) நியூயார்க்கில் ஆறு நாட்கள் நடந்தது. அந்த மகாநாட்டில் கலந்துகொள்ள இந்தியாவிலிருந்து ஆறு பிரதிநிதிகள் சென்றோம். இந்தியத் தலைமை நீதிபதி திரு ஸிக்கிரி, நான், இன்னும் நான்கு வழக்கறிஞர்கள் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டோம்.

இண்டர்நேஷனல் லா அஸோஸியேஷன் என்று ஓர் அமைப்பு புருஸேல்ஸில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு துவங்கியது. அந்த அமைப்பின் இந்தியக் கிளைக்குத் தலைமை நீதிபதி திரு ஸிக்கிரியும் அதன் சென்னைப் பிரிவுக்கு நானும் தலைவர்கள். இந்த அமைப்பின் நூற்றாண்டு விழாவை அடுத்த ஆண்டு புருஸேல்ஸில் கொண்டாடப் போகிறார்கள்.

இந்த மகாநாட்டில் உலக நாடுகள் எல்லாம் கலந்துகொண்டன. சுமார் 300 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இந்த மகாநாட்டின் முக்கியக் கூட்டங்கள் ஐ. நா. வின் அஸெம்பிளிக் கட்டிடத்தில் நடந்தன. முக்கியமாக, 'உலகத்தில் இனிமேல் சண்டைகள் ஏற்படாமலிருக்க எந்த எந்த வகையில் சமாதானமாகப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வது?' என்பது பற்றியும், சமீப காலங்களில் அதிகமாக நடக்கும் விமானக் கடத்தல், பிற நாட்டினர்க்கு அரசியல் புகலிடம் அளித்தல், சர்வதேசத் தண்ணீர்ப் பிரச்னை, ஆழ்கடல் சுரங்க வேலை என்பன போன்ற சர்வதேசப் பிரச்னைகள் பற்றியும் விவாதித்தோம்.

சட்டப் பிரச்னைகளைப் பற்றிய விவாதங்களில் என்ன சுவை இருக்க முடியும்? ஆனால் நான் கண்டு களித்த பிற காட்சிகள், மக்கள், தொழிற்பெருக்கம் முதலியவை மிக மிகச் சுவையானவை.

இந்த நாளில் விமானப் போக்குவரத்து மிகவும் முன்னேறியிருக்கிறது. நாங்கள் பம்பாயிலிருந்து நியூயார்க்குக்கு 747 ஜம்போ ஜெட் விமானத்தில் சென்றோம். 350 பிரயாணிகள் செல்ல வசதியுடைய இந்த விமானத்தைப் பார்த்தால் அழகான பெரிய தெருவைப் போல் விசாலமாக இருக்கிறது. மணிக்கு அறுநூறு மைல் வேகம் செல்லக்கூடிய ஸப் - ஸானிக் விமானங்களைவிடச் சூபர்-ஸானிக் விமானங்கள் 1974-இல் பயணிகள் போக்குவரத்துக்கு வரப்போகின்றன. இந்தச் சூபர்-ஸானிக் விமானங்கள் இப்போது ராணுவ உபயோகத்துக்கு மட்டுமே இருக்கின்றன. இதையும்விட வேகமாகச் செல்லும் கன்கார்டி (oncardy) ரக விமானங்களைப் பிரான்ஸும் இங்கிலாந்தும் கூட்டாக நமக்காகத் தயாரித்து வருகின்றன. இந்த விமானங்கள் மணிக்கு 1500 மைல் வரை செல்லும். ஒலி செல்லும் வேகத்தைவிட இரண்டு மடங்கு அதிகம். நமக்காகத் தயாராகியுள்ள இரண்டு கன்கார்டி ரக விமானங்களைப் பாரிஸில் பார்த்தேன். மிக நீளமான முன் பகுதி; இறக்கைகள் பக்கவாட்டில் இல்லாமல் பின்னோக்கி அமைந்துள்ளன. இந்த விமானத்தில் 300 பேர் சௌகரியமாகப் பிரயாணம் செய்யலாம். ஆனால் இது பயணிகள் உபயோகத்துக்கு வந்தால் இரட்

பிரதம நீதிபதி கே. வீராசுவாமி

டிப்புக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். ஜெட் விமானங்களைவிடப் பத்து மடங்கு அதிகச் சத்தம் கன்கார்டி விமானங்கள் போடுவதால், இந்த விமானங்கள் அமெரிக்காவுக்குள் வரக்கூடாது என்று மூன்று வாரங்களுக்கு முன் தடை விதித்திருக்கிறார்கள்.

இவை தவிர, மணிக்கு 4000 மைல் வேகம் செல்லக் கூடிய ஹைபர்-ஸானிக் விமானங்களைத் தயாரிக்க முயற்சிகள் நடந்து வருகின்றன. இந்த நூற்றாண்டின் இறுதியில் ஹைபர்-ஸானிக் விமானங்கள் உபயோகத்துக்கு வரலாம்.

இத்தாலியிலுள்ள ரோம் நகரம் மிகப் பழைய நாகரிகத்தின் சின்னமாக இன்று நிற்கிறது. எத்தனையோ சாம்ராஜ்யங்கள் அங்கே உருவாகி வாழ்ந்து அழிந்திருக்கின்றன. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளின் சரித்திரத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, அந்த நகரம் மட்டும் பழமைப் பொலிவுடன் காட்சியளிக்கிறது. 'அழிந்த சாம்ராஜ்யங்களின் அநாதைத் தாய்' (Lone mother of dead empires) 'என்று லார்டு பைரன் கூறியிருப்பது அந்த நகரத்தைப் பார்த்ததும் நினைவுக்கு வந்தது.

சரித்திரப் பிரசித்திபெற்ற கொலாசியம் என்ற பெருங் கட்டிடம் இன்று அழிந்த நிலையில் இருக்கிறது. எழுபது அடி உயரமும் முப்பது அடி அகலமும் உடைய சுவர்களைக் கொண்ட பெரிய அரங்கு இது. அந்த நாட்களில் பிரபுக்கள், இந்த அரங்கில் அடிமைகளையும் கொடிய விலங்குகளையும் சண்டை போடச் செய்து, அந்தக் காட்சியைக் கண்டு ரசிப்பார்களாம்.

தனிச் சுதந்தர நாட்டைப் போல் இத்தாலிக்குள் விளங்குவது வாடிகன் நகரம். போப்பாண்டவர் வாழும் புனித நகரம் இது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கலைப் பொருள்கள், சிற்பங்கள், பைபிளின் அரிய கையெழுத்துப் பிரதிகள், அழகான ஓவியங்கள் முதலியவற்றைக் கொண்ட வாடிகன் மியூஸியம் என்னை மிகவும் கவர்ந்தது. இதற்குள்ளேயே இருக்கும் ஸிஸ்டர்ன் சேப்பல் என்ற மாதா கோயிலில்தான் போப்பாண்டவர் தேர்வு நடக்குமாம். இந்தக் கோயிற் சுவர்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன் தீட்டிய சித்திரங்கள் இன்னும் புதுமை மாறாமல் விளங்குகின்றன. பைபிளில் வரும் நிகழ்ச்சிகளை ஓவியங்களாகத் தீட்டியிருக்கிறார்கள். போப்பாண்டவர் தேர்வு என்பது சில சமயம் பல நாள் ஆகுமாம். இந்தக் கோயில் விதானத்தின்மேல் உயர்ந்த குழாய் ஒன்றிருக்கிறது. போப்பாண்டவர் தேர்வு முடிந்துவிட்டால் இந்தக் குழாயில் வெண்மையான புகை வருமாம். அந்தப் புகையை மக்கள் கண்டதும் போப்பாண்டவர் தேர்வு முடிந்துவிட்டது என்று தெரிந்து கொள்வார்களாம்.

வாடிகன் நகரத்துக்குள் இருக்கும் ஸெயின்ட் பீட்டர்ஸ் சர்ச்சுதான் உலகத்திலேயே மிகப் பெரிய மாதா கோவில். பிரம்மாண்டமான கட்டிடம் இது. இதனுள் இழைத்திருக்கும் சிற்ப எழிலையும் கண்ணாடி வேலைப்பாட்டையும் வருணிக்கவே முடியாது. முக்கியமான சில கார்டினல்களின் பூதவுடலைப் பாடஞ் செய்து அப்படியே இங்கே பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். பாவமன்னிப்புக் கோரும் அறைகளும் இங்கே இருக்கின்றன. பாவமன்னிப்புக் கோருகிறவரும் எதிரில் இருக்கும் பாதிரியாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள முடியாதபடி அமைத்திருக்கிறார்கள். பல போப்பாண்டவர்கள் சேகரித்த அரிய பொக்கிஷங்கள் இங்கே உள்ளன. வைரம், வைடூரியம், தங்க விக்கிரகங்கள், வைரம் இழைத்த கிரீடங்கள், ஆசனங்கள் முதலியவை இங்கே காணக் கிடக்கின்றன. சரித்திர முக்கியத்துவமும் மதிப்பும் வாய்ந்த இன்னும் பல பொருள்களையும் இங்கே வைத்துப் பாதுகாக்கிறார்கள்.

ரோமிலிருந்து நூறு மைல் தூரத்திலுள்ள பாம்ப்பே (Pompai) என்ற நகரத்தைப் போய்ப் பார்த்தேன். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு விசூவியஸ் என்ற எரிமலை சில நிமிஷங்களில் அக்கினிக் குழம்பை வாரி வீசி இந்த நகரத்தையே மூடிவிட்டது. அழிந்த நகரம் 1500 ஆண்டுகளாக அப்படியே இருந்தது. இருநூறு, முந்நூறு ஆண்டுகளாக அந்த நகரத்தைத் தோண்டியெடுக்க முற்பட்டார்கள். பழைய நகரத்தின் முக்கால் பாகத்தை இப்போது வெளிக்கொணர்ந்து விட்டார்கள். உயர்ந்த நாகரிகத்தின் அழிந்த சின்னங்களாக அந்த நகரம் இப்போது காட்சி அளிக்கிறது.

நாகரிக யுகத்தில், இப்போதுள்ள மாதிரியான கடைவீதிகள், தெருக்கள், ஏழைகள் வசித்த வீடுகள், பணக்காரப் பிரபுக்கள் வாழ்ந்த பங்களாக்கள், கோயில்கள் எல்லாம் அங்கே, அந்தக் காலத்திலேயே இருந்திருக்கின்றன. சுத்தப்படுத்திய நீர் விநியோக முறை இருந்திருக்கிறது. பஞ்சாயத்துக்களும், நகர சபைகளும் இருந்ததன் அடையாளங்கள் உள்ளன. பணக்காரர்களின் பங்களாக்களின் உட்சுவர்களிலும் மேல் கூரைகளிலும் காமக் கலையின் பலவித நிலைகள் அற்புதச் சித்திரங்களாகத் தீட்டியிருப்பதைக் காண ஆச்சரியமாக இருக்கிறது. பித்தளை, செம்பு போன்ற உலோகப் பாத்திரங்களை அவர்கள் ஆண்டிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மிக உயர்ந்த நாகரிகம் அங்கே உருவாகியிருந்திருக்கிறது.

இந்தப் பாம்ப்பே நகரத்திலிருந்து முப்பது மைலில் நேபிள்ஸ் நகரம் உள்ளது. 'நேபிள்ஸைப் பார்த்துவிட்டு இறந்து போ' என்று சொல்வதுண்டு. அந்த அளவுக்கு விசேஷமாக இந்த நகரத்தில் ஒன்றும் கிடையாது. மிகவும் அசுத்தம் மலிந்த நகரம் பழைய நேபிள்ஸ். புது நேபிள்ஸ் நகரம் கொஞ்சம் சுமாராக இருக்கிறது; நம் உதகமண்டலம், கூனூர் மாதிரி தோன்றுகிறது.

நான் படித்த காலத்தில் டைபர் நதியைப் பற்றி ஆங்கிலத்தில் படித்திருக்கிறேன். ஷேக்ஸ்பியர், ஜூலியஸ் சீசரில் இந்த நதியைப் பற்றிப் பிரமாதமாக வருணித்திருக்கிறார். சீசர் இந்த நதியில் விழுந்து நீந்த முடியாமல் தவித்ததாகவும், மூழ்கிவிடும் நிலையில் 'என்னைக் காப்பாற்றுவார் யாரும் இல்லையா?' என்று அலறியதாகவும் சொல்லியிருக்கிறார். அதைப் படித்த பிறகு, 'இந்த நதி மிகப் பெரியது போலிருக்கிறது' என்றே எண்ணி வந்தேன். ஆனால் நேரில் பார்த்ததும் சற்று ஏமாற்றமாகவே இருந்தது. நம் கூவம் நதியைப் போல் இன்னும் ஓரிரு பங்கு பெரிதாக இருக்கிறது!

இதைவிட ஆச்சரியமான செய்தி: இத்தாலி நாட்டு மக்களைப் பார்த்தால், இந்த நாட்டிலா சர்வாதிகாரி முஸோலினி தோன்றினார் என்றே எண்ணி வியக்க வேண்டியிருக்கிறது. அதிக முன்னேற்றமானவர்களாக மக்கள் தோன்றாவிட்டாலும் விருந்தினர்களை உபசரிக்கும் திறனில் தேர்ந்திருக்கிறார்கள்; சாந்த குணம் படைத்தவர்களாகத் தோன்றுகிறார்கள். ஆங்கிலம் தெரிந்தாலும் இத்தாலி மொழியிலேயே அதிகமாகப் பேசுகிறார்கள். பிரான்ஸிலும் இப்படித்தான். அதனால் வேற்று நாட்டில் இருக்கிறோம் என்ற எண்ணம் நமக்கு அடிக்கடி உண்டாகிறது.

ஆனால் இங்கிலாந்தில் இந்த எண்ணமே எழுவதில்லை. இந்தியாவில் இருப்பது போலவே இருக்கிறது. நிறைய இந்தியர்களும் மற்ற நாட்டினரும் இங்கே வாழ்கிறார்கள். தொழிலில் ஏற்றத் தாழ்வு கிடையாது. பணக்காரன் ஏழை என்ற பேதமும் காணப்படவில்லை.

லண்டன் டவர், வெஸ்ட் மின்ஸ்டர் கட்டிடம், பக்கிங்ஹாம் அரண்மனை போன்ற பல இடங்கள் நம் மனத்தைக் கவர்கின்றன. பக்கிங்ஹாம் அரண்மனை வாயிலில் நிதம் காலை பதினொரு மணிக்கு நடக்கும் காவலர்கள் பணி மாறும் காட்சி மிகக் கவர்ச்சியானது. பல வண்ண உடைகளை அணிந்த சிப்பாய்கள் வாத்தியங்களுடன் அணிவகுத்து வந்து, காவல் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்

நிகழ்ச்சி, பல நூற்றாண்டுகளாகக் காலமும், கவர்ச்சியும் மாறாமல் நடப்பது சிறப்பாக இருக்கிறது. இதே மாதிரி அமெரிக்காவில் கென்னடி அடக்கமான இடத்திலும் சிறு அளவில் காலை பதினொரு மணிக்கு நடக்கிறது.



சிகாகோ விமான நிலையத்தில்

பிரசித்தி பெற்ற ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையைப் போய்ப் பார்த்தேன். ஜி. யூ. போப் மொழிபெயர்த்த திருக்குறள் பிரதியையும் அரிய பல கையெழுத்துப் பிரதிகளையும் கண்டேன். அத்துடன் ஜி. யூ. போப்பை அடக்கம் செய்த கல்லறையை, பல கல்லறைக் கூட்டத்தினிடையே அடையாளம் கண்டு காட்டினர். ஜி. யூ. போப், சில காலம் தமிழ் நாட்டில் வாழ்ந்தவரென்றும், தமிழ் அபிமானி என்றும், தமிழ் மொழியின் சிறப்புக்களை அறிந்த அறிஞர் என்றும் அவர் கல்லறையின்மேல் குறித்திருக்கிறார்கள்.

மேடம் துஸாட்டின் மெழுகுச் சித்திரக் காட்சி ஒப்புயர்வற்று விளங்குகிறது. மகாத்மா காந்தியுடன் பல தலைவர்களின் தத்ரூப உருவங்களை அந்த அம்மையார் அங்கே அமைத்து வைத்திருக்கிறார்கள். உலகப் புகழ்பெற்ற கிரிமினல்களின் உருவங்களும் இருக்கின்றன. டிரபால்கர் சண்டையை விளக்கும் உருவ அமைப்பு, அந்தச் சண்டையின் பயங்கரத்தை உணரச் செய்கிறது.

இங்கிலாந்தில் பல நீதிமன்றங்களுக்குப் போய்ப் பார்த்தேன். அதே முறையை நாமும் பின்பற்றுவதால் அங்கே புதுமை ஒன்றும் தென்படவில்லை. ஆனால் மக்களிடம் பழகியதில் ஒன்று தெரிகிறது. ஆங்கிலேயர்கள் சட்டத்துக்கு மரியாதை காட்டுகிறார்கள்; ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். முந்நூறு ஆண்டுகள் அவர்கள் நம்மை ஆண்டும் நமக்கு அந்தப் பண்பு வராதது குறைதான்.

அங்கேயும் இளைஞர்கள் சமுதாயத்தில் சில கட்டுப்பாடற்ற நிலைமைகள் காண்கின்றன. முக்கயமாக ஆண் - பெண்களிடத்தில் வாழ்க்கை வரையறைகள் காணக்கிடைக்கவில்லை. விருப்பம்போல் சுதந்தரமாக வாழ்வது என்ற போக்கு மிகுந்து காணப்படுகிறது. வயதான பெற்றோர்களிடம் கொஞ்சமும் அன்பு கிடையாது. அரசாங்கம் அவர்களைக் கவனித்துக் கொள்கிறதோ, அவர்கள் பிழைத்தார்கள்! ஆண்டுக்கொரு முறை பெற்றோரின் பிறந்த நாளன்று போய்ப் பார்த்துக் குசலம் விசாரிப்பதோடு இளந் தலைமுறையினரின் பொறுப்புத் தீர்கிறது.

சம்பாதிக்க ஆரம்பித்ததும் வீட்டைவிட்டு வெளியே போய்விடும் இளைஞர்களும் யுவதிகளும் கூட்டம் கூட்டமாக வாழ்கிறார்கள். வரையறை இல்லாத வாழ்க்கை அது. நான் சில இளைஞர்களையும் யுவதிகளையும் கண்டு பேசினேன்.

''திருமணம் செய்துகொள்ளாமல் இப்படி வாழ்கிறீர்களே; ஏன்? இந்த வாழ்க்கையில் என்ன பாதுகாப்பு இருக்கிறது?'' என்று கேட்டேன்.

''திருமணமா!'' என்று ஆச்சரியத்தோடு எல்லாருமே கேட்டார்கள்.

''அது எதற்கு ஒரு கட்டுப்பாடு? திருமணம் செய்துகொண்டால் ஒரு தளை ஏற்படுகிறது. கணவனுக்கோ, மனைவிக்கோ பிடிக்காவிட்டால், விவாக ரத்துக் கோரிக் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும். வக்கீல் வைக்க வேண்டும். அது வேறு செலவு. நீதிபதி விவாக ரத்து அளிப்பாரோ மாட்டாரோ என்ற வேதனை. இவை எல்லாம் வீண் தொந்தரவுதானே?'' என்று ஓர் இளைஞர் கேட்டார்.

''நாங்கள் தனித் தனியாக இருக்கிறோம் என்றே வைத்துக்கொள்ளுங்கள். என்ன பயன்? தனித்தனியாக அறை வாடகைக்கும் சாப்பாட்டுக்கும் கொடுக்க வேண்டியிருக்கும். ஒரே அறையில் பத்துப் பேர் தங்கினால், வாடகை எவ்வளவு மிச்சம்! பொருளாதார லாபத்தைப் பார்க்கும்போது ஆணாகத் தங்கினால் என்ன? ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து தங்கினாலதான் என்ன?'' என்று மற்றோர் இளைஞர் கூறினார்.

இவர்களுக்கு என்ன பதில் கூற முடியும்? அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற மேலை நாடுகளில் இளைஞர்களும் யுவதிகளும் சாலைகளில் கை கோத்துக்கொண்டு செல்வதும், முத்தமிட்டுக்கொள்வதும் சர்வ சாதாரணக் காட்சிகள். இளைஞர்களின் பண்பு குறைந்திருப்பது ஸ்காண்டிநேவியாவில் மிக அதிகம்.

அமெரிக்காவிலுள்ள மினிஸோட்டா மாநிலத்தில் ஆண்களும் பெண்களுமாக நிறையப் பேர் இணைந்து வாழ்கிறார்கள். அப்படி வாழ்வதை அங்கே 'குழுத் திருமணம்' (Group marr age) என்று அழைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குள் திருமணம் நடப்பதில்லை. 'குழுவாக விருப்பம் போல் வாழ்கிறார்கள் குழு வாழ்க்கை (Group ving) என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். ஆண்களும் பெண்களும் நீண்ட குடுமி வைத்துக் கொண்டு கவுன் போன்றே அணிவதால், பின்னால் பார்த்து ஆணா, பெண்ணா என்று கண்டுபிடிக்க முடிவதில்லை. ஆணும் பெண்ணும் முழுக் குடுமி வைத்துக்கொள்வது இப்போது 'பாஷ'னாகியிருக்கிறது.

பிரான்ஸில் மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு உல்லாசப் பிரியர்களாக இருக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு உழைப்பாளிகளாக இருக்கிறார்கள். பிரான்ஸில் பணக்காரர்களைவிட, அறிவாளிகளுக்குத்தான் மதிப்பும் செல்வாக்கும் அதிகமாக இருக்கின்றன. ஆனால் அமெரிக்காவில் பணக்காரர்களுக்குத்தான் மதிப்பு. தொழிலை விட்டு வந்தால், பிரெஞ்சு மக்கள் நேராக வீட்டுக்குப் போகாமல், பொழுது போக்குகிற உல்லாச இடங்களுக்குத்தான் போகிறார்கள். 'நைட் கிளப்'பும் மதுபானங்கள் நீரைப் போல் உபயோகமாவதும் பிரான்ஸுக்கே உரிய சிறப்பு.

அமெரிக்காவிலும் நிறைய உல்லாச விடுதிகள் (நைட் கிளப்) இருக்கின்றன. இரவு வெகு நேரம் வரையில் மக்கள் இந்த விடுதிகளில் இருந்தாலும், காலையில் தொழிலகங்களுக்கு எட்டு மணி என்றால் 'டாண்' என்று ஆஜர் ஆகிவிடுகிறார்கள். உழைப்பு மிகுந்த மக்கள் அவர்கள். எந்த வேலையையும் தாங்களே செய்து கொள்கிறார்கள். கூலியாள், வேலையாள் என்ற பேச்சே கிடையாது.

உறவினர்களை அழைக்க நாம் ஸ்டேஷனுக்குப் போனால்கூட, 'ஸ்டே-

ஷன் சென்று அழைப்பதே பெரிய செயல்; இவர் மூட்டை முடிச்சுகளை யார் தூக்குவது? கௌரவக் குறைவு' என்று நினைக்கிறோம். போர்ட்டரைச் சுமக்கச் சொல்கிறோம். ஆனால் அமெரிக்காவில் நம்மை எதிர்கொண்டழைக்கப் பிரபுக்களும், உயர்ந்த பதவியில் உள்ளவர்களும் வந்தாலுங்கூட, அவர்கள் நம்மை வரவேற்பதுடன், நம் பெட்டி படுக்கைகளையும் அவர்களே தூக்கிக்கொள்கிறார்கள்!

அமெரிக்காவில், ஓரிடத்தில் விவசாயத் தம்பதிகள் வாழும் ஒரு பண்ணையைப் போய்ப் பார்த்தேன். கணவனும் மனைவியுமே அவ்வளவு பெரிய பண்ணையைக் கவனித்துக் கொள்கிறார்களாம். உழுவதிலிருந்து அறுவடை வரையில் எல்லாப் பயிர்ச் செலவு வேலைகளையும் யந்திரங்களே செய்கின்றன. "நீங்கள் உதவிக்கு ஆள் வைத்துக்கொள்ளக் கூடாதா?" என்று கேட்டேன். அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். "உதவிக்கு ஆளா? இங்கே யார் கிடைப்பார்கள்? கிடைத்தாலும் அவர்களுக்குச் சம்பளம் கொடுத்துக் கட்டுபடியாகுமா?" என்று கேட்டார்கள்.

விவசாயமும் தொழிலும் தொழில் நுணுக்கங்களும் விஞ்ஞானமும் அமெரிக்காவில் செழித்திருக்கின்றன. இந்தியர்கள் நிறைய அங்கே பல இடங்களில் பணிபுரிகிறார்கள். அவர்கள்கூடக் காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து குளித்துச் சாப்பிட்டுவிட்டு எட்டு மணிக்கே பணிமனைக்குச் சென்றுவிடுகின்றனர். சுறுசுறுப்பும் துடிப்பும் அவர்களிடம் எப்போதும் காணப்படுகின்றன. அங்கே மணிக் கணக்குப்படி ஊதியமாகையால் எத்தனை மணிநேரம் உழைக்கிறோமோ, அத்தனையும் டாலர்! ஆனால் அவர்களே இந்தியாவுக்கு வந்துவிட்டால், அந்தச் சுறுசுறுப்பும் துடிப்பும் மறைந்து விடுகின்றனவே! நான் பல நாடுகளிலும் பார்த்த இந்தியர்களில் பெரும்பாலோர், நமது உயர்ந்த பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் கைவிட்டு, ஆங்கில மோஸ்தரில் வாழுகிறார்களே, அதுதான் எனக்கு வேதனையை அளிக்கிறது.

அமெரிக்காவில் எல்லாத் தொழில்களையுமே யந்திரமயமாக்கியிருக்கிறார்கள். அதாவது கம்ப்யூட்டர்கள் செயல் புரிகின்றன.

ஓரிடத்தில் என்னிடம் இருந்த செக்கை மாற்ற முயன்றேன். பாங்கி எங்கிருக்கிறது என்றே புரியவில்லை. ஆனால் ஒரு கட்டிடத்தின் முன்னால் ஒரு கௌன்ட்டர் மாதிரி இருக்கிறது. அங்குள்ள ஒரு பொத்தானை அழுத்தினால், எதிரில் டெலிவிஷன் திரையில், எங்கோ தூரத்திலுள்ள பாங்கில் பணிபுரியும் பெண்ணின் முகமும் என் முகமும் தெரிகின்றன. 'என்ன வேண்டும்?' என்று கேட்கிறாள். 'செக்கை மாற்ற வேண்டும்' என்று சொன்னதும், மற்றொரு பொத்தானை அழுக்கச் சொல்கிறாள். அதை அழுத்தினதும் குழாய் வடிவில் வாய் திறந்த பெட்டி போன்ற அமைப்பு ஒன்று வெளியே தெரிகிறது. அதில் செக்கைப் போட்டதும், மறுவிநாடி அந்தப் பெட்டி மறைகிறது. திரையிலுள்ள அந்தப் பெண், 'எந்த இனச் சில்லறையாக வேண்டும்?' என்று கேட்கிறாள். நான் கேட்ட சில்லறையாக, அந்தப் பெட்டியின் மூலமே எனக்குக் கிடைத்து விட்டது. பாங்கைத் தேடிப் போய், கியூவில் நிற்காமல் எத்தனை லகுவில் செக்கை மாற்ற முடிகிறது!

இத்தனை வசதிகள் இருந்தும், சில இடங்களில் வழிப்பறிக் கொள்ளைகளும் கொலைகளும் நடக்கின்றன. அபின், கஞ்சா போன்ற லாகிரிப் பொருள்களைச் சாப்பிட்டுப் பழக்கமானவர்கள், கையில் காசு இல்லாவிட்டால் வழிப்போக்கர்களை மிரட்டியோ கொலை செய்தோ பணம் பறிக்கிறார்கள். நியூயார்க், வாஷிங்டன், சிகாகோ முதலிய மாநிலங்களில் சில குறிப்பிட்ட இடங்களுக்கு மாலை ஆறு மணிக்கு மேல் போகக்கூடாது என்றே தடை விதித்திருக்கிறார்கள்.

பணமும் வசதியும் அபரிமிதமாக இருந்தாலும் அமெரிக்கர்கள் உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள்.

'ஹரே கிருஷ்ணா!'

அதே சமயத்தில் பணத்தைத் துச்சமாகத் துறந்த, 'ஹரே கிருஷ்ணா' இயக்கத்தினர் ஒரு பக்கமும், போதைப் பொருள் வாங்கப் பணம் இல்லாமல் கொலை செய்யும் பாதகர்கள் மற்றொரு பக்கமும் வாழ்கிறார்கள். உழைத்தால் ஊதியம் நிறையவே கிடைக்கிறது. பகுதி நேர வேலை செய்தாலே கணிசமான வருமானம் கிடைக்கும்.

அமெரிக்காவிலுள்ள கனக்டிக்கெட் மாநிலத்தில் எனக்கு ஒரு வரவேற்பு அளித்தார்கள். அதன் முடிவில், இரு கரங்களையும் கூப்பி மார்பு அருகில் வைத்தபடி, அன்பர்களுக்கு வணக்கம் செலுத்தினேன். அவர்கள் வழக்கப்படி அநேகர் 'ஸலூட்' அடித்துச் சென்றனர். இடையில் வயதான அம்மையார் ஒருவர் "ஸலூட் அடிக்காமல் இரு கரங்களையும் குவித்திருக்கிறீர்களே, ஏன்?" என்று கேட்டார்.

"நீங்கள் நெற்றியில் கை வைத்துச் செல்கிறீர்களே, ஏன்?" என்று நான் கேட்டேன்.

"ஏதோ பழக்கந்தான்; வேறு என்ன?" என்றாள் அந்த மூதாட்டி.

"அப்படி அல்ல. நான் சொல்கிறேன் கேளுங்கள். நெற்றியில் கை வைத்து வணங்குவதால், 'உங்கள் அறிவின் உயர்வுக்கு வணக்கம் செலுத்துகிறேன்' என்று பொருள் கொள்ளலாம். ஆனால் இதயத்தில் கைகளைக் குவித்து வணக்கம் தெரிவித்தால், 'உங்களை என் இதயத்தில் வைத்துப் போற்றுகிறேன்' என்று பொருள் கொள்ளலாம், அல்லவா?" என்றேன்.

என் விளக்கம் அந்த மூதாட்டிக்கு மட்டும் அல்ல, அங்கே குழுமியிருந்த மற்றவர்களுக்கும் திருப்தி அளித்தது. மற்றவர்களும் என்னைப் போலவே வணக்கம் செலுத்திச் சென்றார்கள். சின்ன விஷயந்தான். இருந்தாலும் என் விளக்கத்தால் திருப்தியடைந்த அவர்கள் இந்தியப் பண்பை வியந்தார்கள். அவர்கள் யாவரும் இரு கரம் கூப்பி வணங்கிச் சென்றது இந்தியப் பண்பின் உயர்வை அவர்கள் உணர்ந்தது போல, எனக்கு மகிழ்ச்சியை அளித்தது! வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் நம் பண்பாட்டை மறக்காமல் மேற்கொண்டால், அவர்களுக்கும் சிறப்பு. பாரதப் பண்பின் உயர்வையும் வெளிநாட்டவர்கள் அறிந்து போற்றுவார்கள். நம் நாட்டைப்பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலும் அவர்களுக்கு ஏற்படும். ★



செய்கை பலவகை

௫





தானியம் அள்ளும் கை, வாத்தியமும் இசைக்கும். சோற்றைக் கிளறும் கரம், அபிஷேகம் செய்வதுடன், பூவும் பின்னுகிறது. பாக்கை வெட்டும் பாணி ஊசியும் போடும்; சிற்பத்தையும் செதுக்கும். சிகரெட் ஏந்தும் ஒய்யாரம், பானை வனையும் லாகவம், செதுக்கி உருவாக்கும் தேர்ச்சி - எல்லாம் கையின் கலை வண்ணமே!

போட்டோ: என். ராமகிருஷ்ண



ஆகுகன்

கிருபானந்த வாரியார்

இமாசலம்

வானுறும் தேனுறும் பாய விண்ணளவு வீறு கொண்டு ஓங்கி நிற்கின்றது இமாசலம். அங்கே சித்தர்களும் முத்தர்களும் கட்டை போலே அசைவற்று அரிய பெரிய தவஞ் செய்கின்றார்கள். பலப் பல வகையான நிறங்களும் நறு மணங்களும் உடைய மலர்களைப் பூத்து அணியணியாக மரங்கள் நிற்கின்றன. கொடிய விலங்குகள் இரவு பகலாக இரை தேடி உலாவுகின்றன. சிங்கமும் யானையும் போர் புரிகின்றன. காண்டாமிருகங்கள் கர்ஜிக்கின்றன. மயில்கள் அகவுகின்றன; குயில்கள் கூவுகின்றன; பஞ்சவர்ணக் கிளிகள் கொஞ்சுகின்றன. கற்புடைய மாதர்களைப் போல் பூங்கொடிகள் நெளிந்து நிற்கின்றன. இலைகளும் பூக்களும் உதிர்ந்து தரை மெத்தென்று காட்சி தருகின்றது.

ஆகுகன்

இத்தகைய மாட்சியுடன் காட்சி தருகின்ற பனிமலையில் ஆகுகன் என்ற வேடர்தலைவன் வாழ்ந்து வந்தான். ஆகுகன் தோள்வலியும் வாள்வலியும் மிகுந்தவன். இருண்டு சுருண்ட தலை மயிரும், முறுக்கிய மீசையும், தருக்கிய சிந்தையும், பொருப்பன்ன தோளும், செருப்பணிந்த காலும் படைத்தவன்.

அவனுடைய பார்வையில் வீரமும், உள்ளத்தில் ஈரமும் தவழ்ந்தன; தேனும் ஊனும் உண்டு பருத்த உடம்பும், கறுத்த நிறமும் கொண்டு, எப்போதும் வில்லேந்தியவனாய் உலாவுவான்.

அவன் வேட்டையாடும்போது, மக்களுக்குத் தீங்கு புரிகின்ற விலங்குகளையே கொல்லுவான். விலங்குக் குட்டிகளையும், வயது முதிர்ந்த விலங்குகளையும், சாதுவான விலங்குகளையும் கொல்லமாட்டான். அவ்வழி வந்த சாதுக்களுக்குத் தேனும் தினை



மாவும் தந்து உபசரித்து வழியனுப்பு வான்.

ஆகுகி

இந்த வேடவேந்தனுடைய மனைவி ஆகுகி. இவள் கணவனுடைய கருத் தறிந்து ஏவல் செய்வாள். கணவ னுடைய சொல்லை வேதவாக்காகச் சிரமேற்கொண்டு நடப்பாள். கணவன் வேட்டையாடிக் கொண்டு வந்து தருகின்ற ஊன்களைப் பக்குவஞ் செய்து, தேன் கலந்து சுவையூட்டிக் கணவனுக்குக் காலந் தவறாது தரு வாள். பாவச் செயல்களுக்குக் கூசு வாள். பாலமுதம் போல் இனிமை யாகப் பேசுவாள். பிறர் துன்பம் களையும் கருணையுள்ளம் படைத்தவள்.

ஆகுகனும் ஆகுகியும் ஒருவர் மீது ஒருவர் பற்று வைத்து ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். இருவரே தங்கக் கூடிய குகையில் அவர்கள் வாழ்வு நீண்ட காலமாக அமைந்திருந்தது. நல்ல மனைவி நமக்குக் கிடைத்தாளே என்று கருதி ஆகுகன் ஆனந்தமடை வான். உத்தமனை கணவனை நாம் பெற்றோம் என்று எண்ணி எண்ணிப் பெருமிதம் அடைவாள் ஆகுகி. சில வேடர்கள் இவர்களின் ஒற்றுமை யைக் கண்டு பொறுமைப்பட்டார்கள்.

சாது முனிவரின் சந்திப்பு

காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சர்யம் என்ற ஆறு பகைவரையும் வென்றவரும், அஞ்செழுத்தை நெஞ்சழுத்திய வரும், அருமறையில் வல்லவரும், திரு நெறியில் நின்றவரும், திருநீறு பூசிய நெற்றியும், கண்டிகை தவழும் திரு மார்பும், தாழ்ந்த சடைக்கற்றையும், யோகதண்டம் ஏந்திய கரமும், கருணை பொழிகின்ற கண்களும் உடைய ஒரு சாது முனிவர் ஒரு நாள் மாலை வேளையில் அங்கு வந்தார்.

அருந்தவ முனிவரைக் கண்ட ஆகுகன் அன்புடன் பணிந்தான்.

"தபோதனரே! தங்கள் வரவு நல்வரவு. தங்களைக் கண்ட கண்கள் நல்ல கண்கள். கொடிய விலங்குகள் உலாவுகின்ற கொடிய கானகம் இது. நஞ்சுடைய நாகங்கள் நிறைந்த வனம். பல கல் சுற்றளவுள்ள இந்த மலைக்காட்டுக்கு நீர் வந்துவிட்டீர். இப்போது மாலை நேரம். இரவிலே தான் விலங்குகள் இரை தேடி மிகுதி யாக உலாவும். காட்டைக் கடந்து போகுமாறு உம்மை விடுவதற்குப் போதிய நேரம் இல்லை. பெரிய துன்பம் நிறைந்த இக் காட் டுக்கு ஏன் வந்தீர்? தங் களுடைய நற்காலத்தால் நான் தங் களைச் சந்தித்தேன். அடியேன் குடி யிருக்கும் குகைக்குச் சீக்கிரமாக வாருங்கள். இன்றிரவு அங்கே தங்கி நாளைக் காலை புறப்பட்டுப் போக லாம்" என்று அவருக்கு இன்னுரை கூறி, முனிவரைத் தன் குகைக்கு அழைத்துச் சென்றான்.

ஒடுக்கமாக உள்ள குகைக்குள் மான் தோலை விரித்து முனீந்திரரை இருத்தி ஆகுகனும் ஆகுகியும் பல முறை பணிந் தார்கள். அவருக்குப் பலாச் சுளைகளைத் தேனில் கலந்து உண்பித்தார்கள். தேன் கலந்த தீஞ்சுவைத் தண்ணீர் தந்து, இன்முகங் காட்டிக் கனியமுத மன்ன இனிய மொழிகள் கூறி உபசரித்தார்கள்.

முனிவர் பெருமான் அவர்களின் அன்பைக் கண்டு அகமிக மகிழ்ந்தார்; ஆசி கூறினார். 'வெட்டு குத்து, அடி, உதை கொல்லு' என்று கர்ஜனை புரிகின்ற கொடுங் குணம் படைத்த வேடர் குலத்திற் பிறந்த இவர்கள், நம்மிடம் தாயினும் சாலப் பரிந்து அன்பு செய்கின்றார்களே? இது பேராச்சரியம். ஆ! என்ன அன்பு! எத்தனை பண்பு! முன்பின் அறியாத என்னிடம் பலகாலம் பழ கியவரைப் போல் அன்பு செய்கின் றார்கள். இவனுடைய குலத்துக்கும் குணநலத்துக்கும் சம்பந்தமே இல்லை' என்று முனிவர் எண்ணினார்.

அறிவுரை

முனிவர், "அம்மா! அப்பனே! உங்கள் மனம் பால் போன்றது. உங்களை மனப்பூர்வமாக வாழ்த்து கின்றேன். உங்களுக்கு மங்களம் உண்டாவதாக. ஓர் உத்தமமான தத்துவத்தை உங்களுக்கு உபதேசிக் கின்றேன். ஒருமைப்பட்ட உள்ளத் துடன் கேளுங்கள்.

"அறிவுடையவன் அறிவுடையவ னிடம் சேருவான். மூடன் மூட னுடன் சேருவான். இனம் இனத் துடன் சேரும்; குடியன் குடியனுடன் சேருவான்; பொடியன் பொடிய னுடன் சேருவான்; தடியன் தடிய னுடன் சேருவான்; கள்ளன் கள்ள னுடன் சேருவான். இதுதான் உலக நியதி.

"இந்த உடம்பு அசித்து (அறிவில்லா தது). உயிர் சித்து (அறிவுடையது). சித்து சித்துடன் சேரும். அசித்து அசித்துடன் சேரும். ஆனால் இந்த நியதிக்கு மாறாக, உயிராகிய சித்துப் பொருள் உடம்பாகிய அசித்துடன் சேர்ந்துள்ளது.

"மாட்டு வண்டியைப் பாருங்கள். மாடு சித்து; வண்டி அசித்து. மாடு தானே சென்று வண்டியில் நுழையாது; வண்டியும் தானே போய் மாட்டின் மேல் ஏறாது. எப்படி மாடும் வண்டி யும் ஒன்றுபட்டுள்ளன? வண்டிக்கும் மாட்டுக்கும் எஜமான், மாட்டை இழுத்துப் பிடித்து வண்டியின் நுகத் தடியை மாட்டின் கழுத்தில் வைத்துப் பூட்டாங்கயிறு பூட்டி, வண்டியில் அமர்ந்து அதனைச் செலுத்துகின்றான்.

"இதுபோல் அந்த அந்த உயிர்களை, அதனதன் கன்மங்களுக்கு ஏற்ப அந்த அந்த உடம்புக்குள் சேர்த்துப் பிராண வாயுவாகிய பூட்டாங்கயிற்றைப் பூட்டி இறைவன் உள்ளே அந்தர் யாமியாக இவற்றைச் செலுத்திக் கொண்டிருக்கின்றான். கடவுவதாலே கடவுள் என்ற பெயர் இறைவனுக்கு ஏற்பட்டது.

"அவிழ்த்து விடுகின்ற நேரம் மாட்டுக்கும் தெரியாது; வண்டிக்கும் தெரியாது. அதுபோல் இந்த உயிர் உடம்பினின்றும் பிரிகின்ற காலம் யாருக்கும் தெரியாது. ஜோதிட நூல் வல்லான் தடபுடலாக ஜாதகக் குறிப்பைப் பார்த்துச் சண்டப் பிரசண்டமாகப் பலாபலன்களைக் கூறு வான். ஆனால் உயிர் பிரியும் மரணத்தை நிச்சயிக்க முடியாது.

''ஆதலால் உயிர் பிரிகின்ற மரணம் வருமுன் இறைவனுடைய சரணத்தை அடைய வேண்டும். இதுதான் வேத ரகசியம். வேத இருதயமாக விளங்குவது 'சிவாயநம' என்ற ஐந்தெழுத்து. இதனை நீவிர் ஓதி உய்வு பெறுங்கள்'' என்று நுட்பமான தத்துவத்தை இனிது உபதேசித்தருளினார்.

தியாக சிகரம்

இரவு 11 நாழிகை. உறங்க வேண்டிய நேரம். அந்தக் குகையில் இருவர் மட்டுமே உறங்க முடியும். மூவர் உறங்க முடியாது.

ஆகுகன் முனிவரை நோக்கி மொழிகின்றான்; ''ஞானத் தந்தையே! இக் குகையில் இருவர் மட்டுமே படுக்க முடியும். நானும் இவளும் படுத்து, தேவரீர் வெளியே படுத்தால், விலங்குகள் உம்மைக் கொன்று போடும். தேவரீரும் நானும் படுத்து, இவள் வெளியே படுத்தால் அபலையாகிய இவளைச் சிங்கம் புலி முதலிய கொடிய விலங்குகள் கொன்றுவிடும். நான் ஆயுதபாணி. நான்தான் வெளியே இருக்க வேண்டும். தாங்கள் ஆசாபாசமற்ற அருந் தவச்செல்வர். இவள் பரம பதிவிரதை. தந்தையும் மகளும் ஒன்றாக இருக்கலாம். பிழையில்லை. எனவே நீரும் இவளும் உள்ளே படுத்து உறங்குங்கள். அடியேன் ஆயுதம் ஏந்தி வெளியே இருப்பேன்'' என்றான்.

மாதவ முனிவர் வேடனுடைய மாசற்ற மனப்பண்பை எண்ணி அகமகிழ்ந்தார். 'என்ன பண்பு! என்ன தியாகம்! மனைவியுடன் மற்றொருவன் தனிமையில் இருக்க எவன் உடன்படுவான்? இவனைப் போன்ற உத்தமர்களைக் காண்பது அரிது' என்று எண்ணி இதயம் உருகினார். அவனுடைய வேண்டுகோளை மறுக்க இயலாது அன்புக்குக் கட்டுப்பட்டார்.

குகைக்குள்ளே முனிவரும் ஆகுகியும் படுத்தார்கள். கதவை மூடி, வில்லேந்திய கையுடன் குகைப்பாறை மீது சாய்ந்து இமையாது நின்றான் ஆகுகன். திருஐந்தெழுத்தை உச்சரித்தவண்ணம் முனிவர் உறங்கினார். பதியின் பதமலரைச் சிந்தித்தவண்ணம் ஆகுகி கண்ணயர்ந்தாள்.

நடுநிசி. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. நாயும் பேயும் உறங்குகின்ற நேரம். வேடனும் சிறிது கண்மூடி நின்றவண்ணமே உறங்கிவிட்டான். கையிலிருந்து வில் நழுவிவிட்டது. இரைதேடி வந்த சிங்கம் அவனை அடித்துக் கொன்று தின்றுவிட்டுச் சென்றது.

விடியற்காலை. கணவனைச் சிந்தித்த வண்ணம் ஆகுகி கண் விழித்தாள். சிவத்தைச் சிந்தித்த வண்ணம் முனிவர் விழித்தார். ஆகுகி கதவைத் திறந்து வெளியே வந்தாள். எலும்புக் கூடாக இருந்த கணவனைக் கண்டாள். அவள் உத்தம பத்தினி. ''ஆ! பிராண நாதா!'' என்று அலறினாள். கணவனுடைய எலும்புக் கூட்டின் மீது சாய்ந்தாள்; அக்கணமே மாய்ந்தாள். முனிவர் இந்த அவலக் காட்சியைக் கண்டு வருந்தினார். ''அந்தோ! விதி செய்த விளையாட்டு என்னே! நம்மால் இந்த இருவரும் மாய்ந்துவிட்டார்கள். பெற்ற பிள்ளைகளைப் போலே, இடந் தந்து, உணவு தந்து, இன்சொல் கூறி உபசரித்த இவர்கள் முடிவு பெற்றார்கள். நான் மாண்டிருந்தால் யாருக்கும் நஷ்டம் இல்லை. இந்த வேடர்பெருமான் பரம உபகாரி. இந்தக் காட்டுக்கு வரும் வழிப்போக்கர்களுக்கு நலஞ் செய்பவன். கணவன் மறைந்த கணமே இவள் உயிர் துறந்தாளே? எத்தனை அன்பு!'' என்று கூறிப் புலம்பியழுதார்.

ஓமாக்கினியை வளர்த்தார். மந்திர நீரால் இரு உடம்புகளை அலம்பினார். கட்டைகளை அடுக்கி இரு உடம்புகளையும் வைத்து ஓமாக்கினியை வைத்து மூட்டினார். இரு பிணங்களும் தீயில் வேவதைப் பார்த்து அவரால் துயரம் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த எரியில் அவரும் மூழ்கிவிட்டார். மூவருடைய ஆன்மாக்களும் சாந்தியடைந்தன.

முனிவருக்கு உணவும் இடமும் தந்த தியாகத்தின் பயனாக ஆகுகன் என்ற வேடன் நளச் சக்கரவர்த்தியாகப் பிறந்தான். கற்புடைய ஆகுகி தமயந்தியாகப் பிறந்தாள். முனிவர் பெருமான் அன்னமாகப் பிறந்து, தம்மால் பிரிந்த தம்பதிகளைத் தூது சென்று ஒன்றுபடுத்தினார். ★

STICK
PUBLIC ATTENTION
to YOUR PRODUCTS
with
Rhaenko
PUBLICITY
STICKERS

For wide range of applications — on cars, windows, walls, counters, packings, etc. — these self-adhesive decorative/ publicity stickers have:

- **BETTER VISIBILITY —** Thanks to our 'Seri-glo' fluorescent inks.
- **BETTER BASE —** No stretching, no fraying, easy-to-stick.
- **GREAT ECONOMY —** Impact for impact, they cost little.

Follow the industrial leaders!

Contact: Rhaenko
SCREEN PRINTERS
WINNERS OF INTERNATIONAL AWARDS
38B, Mount Road, Madras-6 Phone: 811510/519

FDS-RSP-1688A

வாலிப உலகமும் கல்வி நிலை வளர்ச்சியும்

தொழிலதிபர் நா. மகாலிங்கம்

உலகம் முழுவதும் இளைஞர் சமுதாயத்தினிடையில் புரட்சிகரமான கிளர்ச்சி மனப்பான்மை தோன்றியுள்ளது. கறுப்புநிற நீக்ரோ வகுப்பினருக்கு உரிமை வேண்டும் என்ற அமெரிக்க நாட்டுக் கிளர்ச்சிக்கு இன்று வெள்ளை இளைஞர்களும் ஆதரவு தருகிறார்கள். 'அமெரிக்கர்கள் வியட்நாம் சென்று ஏன் போர் புரிய வேண்டும்?' என்ற கேள்வியும் அவர்களின் மனத்தில் எழுந்துள்ளது.

'படித்துப் பயிற்சி பெற்று யந்திர வேகத்தில் ஏன் வீணாக வேலை செய்ய வேண்டும்?' என்ற கேள்வியும் இங்கிலாந்து நாட்டு இளைஞர்களிடையே எழுந்து, இயக்கமாக அது வடிவெடுத்திருக்கிறது. வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், படித்தவுடன் தொழில் வாய்ப்புப் பெறும் வளம் படைத்தவர்களுங் கூடத் தம் பெற்றோர்களை, காலத்துக்கு ஒத்து வராத பத்தாம் பசலிகளாக எண்ணிப் புறக்கணித்துவிட்டு வெளியேற முற்பட்டிருக்கிறார்கள்.

வளர்ச்சி அடைந்த ருசிய நாட்டிலும், சிந்தனைச் சுதந்தரம் தங்களுக்கு வேண்டும் என்பதால், வசதியான தம் வேலைகளையும் உதறிவிட்டுப் பல அறிஞர்கள் சிறை செல்லும் அளவுக்கு எதிர்ப்பைக் காண்பிக்கிறார்கள். வேறு சிலர் வெளிநாடுகளுக்கே குடியேறிவிடுகின்றனர்,

படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் உள்ள வேற்றுமையைப் போக்கச் சில ஆண்டுகள் பல்கலைக் கழகங்களையே சீன நாட்டில் மூடினார்கள். 'சமுதாய வேறுபாடுகளை வன்முறையின் மூலந்தான் மாற்ற முடியும்' என்ற 'மாவின்' கொள்கைகளை உலகமெங்கும் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

பாரத நாட்டில்கூடப் பல்கலைக் கழகங்களிலும் பள்ளிகளிலும் குழப்பங்கள் சில நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றன. கல்லூரித் தேர்வு எழுதுவதற்குத் தங்களுக்குக் கட்டுப்பாடு எதுவும் கூடாது என்று மாணவர்கள் கிளர்ச்சி செய்வதும், தங்கள் பிள்ளைகளுக்கு எப்படியாவது 'மார்க்கு' வந்தால் போதும் என்பதற்காக முறையில்லாத முறைகளைப் பெற்றோர்கள் மேற்கொள்வதும், அரசியல்வாதிகள் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்காக மாணவர்களின் படிப்பு வாழ்க்கையைப் பலியாக்குவதும், ஆக மூன்று முனைகளிலும் கல்வித்துறையில் உள்ள அமைதி கடுமையாகத் தாக்கப்பட்டு வருகிறது.

பிற்போக்கு நிலையில் உள்ள நாடுகளில், அதிகம் பேருக்கு வேலை கொடுக்கும் ஒரு பெரிய துறையாகக் கல்வித்துறை இருப்பதால் ஆசிரியர் வேலைக்காகக் கடுமையான போட்டியும் நடந்துகொண் டிருக்கிறது. எரிந்துகொண் டிருக்கிற விளக்குத் தானே வேறு விளக்குகளை ஏற்றுவதற்கு உதவும்? அதுபோல நாளுக்கு நாள் திறமையையும் தகுதியையும் கூர்தீட்டிக் கொள்ளும் உணர்ச்சி வாய்ந்த ஆசிரியர்கள் உருவாகி வர வேண்டும். ஓய்வு நேரத்தின்போது கூட, ஆசிரியர்கள் தமக்குரிய கல்வி உலகத்தில் எத்தகைய மாற்றங்களை எப்படி ஏற்படுத்தலாம் என்ற சிந்தனையில் மூழ்கியிருக்க வேண்டும். ஆனால் பல ஆசிரியர்கள் தங்கள் கல்லூரி நேரம் தவிர, எஞ்சிய நேரங்களில் கல்வித்துறைக்குச் சம்பந்தமில்லாத விவசாயம், வியாபாரம் முதலியவற்றில் ஈடுபடுகிறார்கள். இது ஆசிரியர்களின் தகுதியைத் தாழ்த்துகிறது என்றுதான் நான் நினைக்கிறேன்.

கல்வி வளர்ச்சிக்காக நாம் ஏராளமாகச் செலவு செய்கிறோம். நம்முடைய நாட்டின் பொருளாதார நிலைக்கு அதைத் தாங்க முடியுமா என்றுகூடப் பரிசீலனை செய்ய வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆண்டுதோறும் 100 கோடி ரூபாயைக் கல்விக்குச் செலவு செய்தும், 40 சதவீதத்துக்கும் குறைந்த அளவில்தான், மக்கள் படிப்பு வசதியைப் பெற்றிருக்கிறார்கள். அரசியல் சாசனத்தின்படி 14 வயது வரையில் கட்டாய இலவசக்

கல்வியை மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற திட்டத்தை அமல் நடத்த வேண்டியிருக்கும்போது, உயர்கல்விக்காக அரசாங்கம் செலவு செய்து வருகிற அதிகத் தொகை பொருத்தமானதுதானா என்பதையும் சிந்தித்துப் பார்க்கும் காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.

இன்று உயர்நிலைப் பள்ளிக் கல்வி 11 ஆண்டுப் படிப்பாக இருக்கிறது. அதை எளிதாக 10 ஆண்டுக் காலப் படிப்பாகச் சீரமைத்து விடலாம். ஆனால் இந்தப் பிரச்னையைப் பற்றி யோசிக்கும்போது, இதனால் ஆசிரியர்களுடைய வேலை வாய்ப்புக் குறைந்து போகுமே என்றுதான் எண்ணுகிறோமே தவிர, விளையும் பயிர்களின் வாழ்வும் காலமும் வீணாகின்றனவே என்பது பற்றி நாம் சிந்திப்பதில்லை. கட்டாய இலவசக் கல்வியை ஆறு வயது முதல் பதினாறு வயதுக்குள்ளாகவே முடித்துக் கொள்வது நல்லது. அரசாங்க அலுவல்களில் இருப்பவர்களும், தொழிலதிபர்களும், பெரிய கம்பெனிகளில் பணியாற்றுகின்றவர்களும் தங்கள் குழந்தைகளுடைய கல்வித் திறம் தரமாக அமைய வேண்டும் என்று நம்பி, கான்வென்ட் பள்ளிகளுக்கு அதிகச் சம்பளம் கொடுத்து அனுப்புகிறார்கள். அதேபோல் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கும் நிறையச் சம்பளம் கட்டித் தங்கள் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். சம்பளம் இல்லாத சலுகையைக் கொடுத்தும், கொஞ்சம் வசதி உள்ளவர்கள்கூடத் தங்கள் குழந்தைகளைச் சர்க்கார்ப் பள்ளிகளுக்கு அனுப்புவதில்லை. அப்படியே அனுப்புவதாக இருந்தாலும், பெற்றோர்கள் விரும்பும் நல்ல பள்ளிக்கூடங்கள் மிகச் சிலவாகவே இருக்கின்றன. சம்பளமில்லாத கல்வி என்ற வசதி இருந்தும் சம்பளத்தைக் கட்டிக் கான்வென்டுகளில் சேர்க்கும் மனோபாவம் அதிகமாக நம்மிடம் இருக்கிறது. இந்த நிலையில் ஏதாவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். எஸ். எஸ். எல். சி.ப் பள்ளிகளை எல்லாம் தனியார் துறையினர் சம்பளம் வாங்கி நடத்தலாம் என்றாவது மாற்றிவிட வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் பொழுதுகூட, ஆறாவது வகுப்பிலிருந்தே மாணவ மாணவிகள் வேலை செய்து பழகும் வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். உழைப்பினுடைய உயர்வை அவர்களுக்கு இளம் பருவத்திலிருந்தே உணர்த்த வேண்டும். 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்; கவலை உனக்கில்லை ஒப்புக்கொள்' என்ற நாமக்கல் கவிஞரின் வாசகம் நினைவிற்கு வருகிறது. ஆறாவது முதல் எட்டாவது வரை படிக்கின்ற மாணவர்கள் ஆண்டொன்றுக்கு 75 அல்லது 100 நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்றும், 9, 10, 11 வகுப்பில் படிக்கின்ற மாணவர்கள் 100 அல்லது 125 நாட்கள் உழைக்க வேண்டும் என்றும் நிபந்தனை கொண்டு வர வேண்டும். எல்லா உயர்நிலைப் பள்ளிகளையும் காலை 7-30 அல்லது 8 மணிக்கு ஆரம்பித்து 1 மணிக்கு முடிப்பது என்று வகுத்துக் கொண்டால், பிற்பகலில் அவர்கள் வேலை செய்வதற்கு வாய்ப்பாக அமையும்.

பெரிய நகரங்களில், இட நெருக்கடி காரணமாக இடர்ப்படுகின்ற பள்ளிகளில் இரண்டு நேர மாற்றுமுறையை (ஷிப்டு முறை) மேற்கொண்டு நடத்தலாம். ஆசிரியர்களின் சம்பளத்திற்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்கக்கூடாது என்றும், மாணவ மாணவிகள் தங்கள் உழைப்பின் மூலம் பெறும் பணத்தைத்தான் ஆசிரியர்கள் ஊதியமாகப் பெற வேண்டும் என்றும் மகாத்மா காந்தியடிகள் கருதினார். முன்னாள் குடியரசுத் தலைவரான ஜாகிர் உசேன் உள்ளிட்ட பெருங் கல்வி நிபுணர்கள் ஆராய்ந்து, காந்தியடிகள் கண்ட இக் கல்விமுறைகளை ஏற்றுக் கொண்டார்கள். நம்முடைய நாட்டில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்றாலும், ருஷ்ய நாட்டிலும், அமெரிக்க நாட்டிலும் மாணவர்களிடையே உழைக்கும் பழக்கம் வெற்றி பெற்றிருக்கிறது.

இந்த உழைக்கும் உணர்வை மாணவர்களிடத்தில் நாம் உருவாக்காமற் போனதனால், கட்டுப்பாடு இல்லாத சுயேச்சையை விரும்பும் உணர்ச்சி, வாலிப நிலையில் இளைஞர்களிடத்தில் மேலும் வளர ஆரம்பித்துள்ளது.

அதனால் கல்லூரிகளில் கலவரம், பல்கலைக் கழகங்களில் பரீட்சை எழுதாப் போராட்டம், தேர்வு எழுதுவதற்குப் புத்தகங்களின் துணை வேண்டும் என்ற கூக்குரல், தொழிற் பயிற்சி பெறுகின்ற பாலிடெக்னிக் மாணவர்கள் நேரடியாகப் பொறியியலில் சேர வேண்டுமென்று எழுப்பும் பிரச்னை முதலிய பல குழப்பங்கள் பல இடங்களில் பரவலாக நடைபெறுவதைக் காணலாம்.

கல்லூரியில் புகுமுக வகுப்பு இலவசமாக இருக்கிறது; சேருவதும் எளிதாக இருக்கிறது. பல மாணவர்களுக்கு வகுப்பில் நடைபெறும் பாடங்களைப் புரிந்து கொள்ளும் திறன் வேறு போதாமல் இருக்கிறது. இந்த நிலையில் சமுதாயத்தில் கிளர்ச்சிகளுக்கான சந்தர்ப்பங்கள் வரும் போதெல்லாம், இந்த வாலிப உள்ளங்கள் அதற்கு வசப்பட்டு விடுகின்றன. இந்தச் சூழ்நிலையை மாற்றி, உழைப்பாலும் ஊக்கத்தாலும் உயர்கின்ற மனப்பக்குவத்தை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். கல்வி அறிஞர்களும், அரசாங்கமும் இதுபற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

உயர்நிலைப் பள்ளி மாணவர்களைவிடக் கல்லூரி மாணவர்கள் இன்னும் சற்று அதிகமாக உழைக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளியிலிருந்து காலை ஏழரை மணி முதல் பயிலும் பழக்கமும், படிக்கும் பழக்கமும், உழைக்கும் பழக்கமும் தோன்றுமானால் அவை கல்லூரிகளில் அதே அளவில் மேலும் வளர்ச்சி பெற்றுவிடும். கட்டிடங்களுக்கும் நூலகங்களுக்கும் சோதனைக் கூடங்களுக்கும் அரசாங்கம் உதவி நிதி அளிக்கலாம். ஆனால் ஆசிரியர்கள் சம்பளத்திற்காக உதவி நிதி அளிப்பதை நிறுத்தி மாணவர்கள் உழைப்பின் மூலம் ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலே குறிப்பிட்டது போலத் தம் உழைப்பின் பயன்தான் ஆசிரியரின் ஊதியமாகிறது என்பதால் மாணவர்களுக்குப் பெருமையும், மாணவர்

களின் உழைப்பினால்தான் தங்கள் வாழ்வு நடைபெறுகிறது என்பதனால் ஆசிரியர்களுக்குப் பொறுப்பு உணர்வும் உண்டாக வாய்ப்பு இருக்கிறது. உழைக்கிற பயிற்சி இல்லாமற் போனதனால்தான் பல பேதங்கள் ஏற்பட்டுவிட்டன. அரசியல்வாதிகள் மாணவர் உலகத்தை ஆக்கிரமிப்பதற்கும், ஆசிரியர்களும் தாங்கள் கொண்ட விருப்பு வெறுப்புக்கேற்பக் கட்சிக் கண்ணோட்டத்தில் கருத்துக்களைப் பரப்புவதற்கும் துணிகிறார்கள். உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்கும் உரிய வருமானங்களில் உள்ள வேறுபாடுகளைக் குறைப்பது மிகவும் அவசியமான செயலாகும். 'உலக சரித்திரத்தில் தொடக்கத்திலிருந்து இதுநாள் வரையிலும் படித்தவன் படிக்காதவனைச் சுரண்டுவது ஒரு பெரிய அநியாயமாக இருக்கிறது' என்று காந்தி அண்ணல் குறிப்பிட்டிருக்கிறார். உடல் உழைப்பை மேற்கொள்ளுகிறவன் ஒரு தொழிற்சாலையில் சாதாரணமாக ரூ. 300 முதல் ரூ. 500 வரை பெறுகிறான். ஆனால் மூளை உழைப்பினாலே பணி ஆற்றுகிறவன் ரூ. 2000 முதல் ரூ. 3000 வரையும் கூடுதலாகவும் பெற முடிகிறது.

அமெரிக்க நாட்டில் மூளை உழைப்பினாலே சம்பாதிக்கிறவர்கள் உடல் உழைப்பினாலே சம்பாதிக்கிறவர்களை விட 50 சதவீதத்துக்கு மேல் அதிக வருமானம் பெறுவதில்லை. ஜெர்மனியில் திறமையான ஒரு தொழிலாளிக்கு 800 மார்க் சம்பளம் என்றால் ஓர் இன்சினீயருக்கு 1200 மார்க் வரையில்தான் சம்பளம் இருக்கிறது. அதுபோல் நம் நாட்டிலும் அறிவுக்கும் உழைப்பிற்கும் அளிக்கப்படும் வருமானத்தினிடையே அதிக வேறுபாடின்றிக் கட்டுப்படுத்த வேண்டும்.

இந்த நிலை இருக்கும் அமெரிக்க நாட்டிலேயே மாணவர்களிடம் அமைதியின்மையும் அதிருப்தியும் இருக்கின்றன. 18 வயது நிரம்பிய வாலிபர்களை எல்லாம் வியட்நாமோடு போராடுவதற்காக இராணுவத்தில் வற்புறுத்திச் சேர்க்கிறார்கள். வாலிபர்களோ இளமையிலே திருமணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டும், போதைப் பொருள்களை உட்கொண்டும், ஒழுங்கீனமான வாழ்க்கையை நடத்திக்கொண்டும் இருப்பதன் மூலம் இராணுவத்தில் சேர்வதற்குப் பொருந்தாத செயல்களைக் கடைப்பிடித்துத் தப்பித்துக் கொள்கிறார்கள். மேற்சொன்ன குறைபாடுகள் இருந்தால் இராணுவத்தில் எடுக்கமாட்டார்கள். விபரீத மனங்கொண்ட ஒரு ஹிப்பி சமுதாயமே இதனால் உருவாகியிருக்கிறது.

கண்டிப்பும் வற்புறுத்தலும் எந்த நிலைக்கு இழுத்துச் செல்கின்றன என்பதைப் பார்க்கிறபோது, நல்ல வேளையாக நம் நாட்டில் கட்டாய ராணுவ சேவை முதலிய வற்புறுத்தல் இல்லாதது பாராட்டத்தக்கது. நம் நாட்டிலும் 'ஹிப்பி' மனப் போக்குக்குச் சில பத்திரிகைகள் ஊக்கம் கொடுத்து வந்தாலும், நம் இளைஞர்கள் சிகை, உடை அலங்காரத்தில் 'ஹிப்பிபோல' மாறினாலும் உண்மையில் ஹிப்பி மனமாகிய கோணல் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். சிகை, உடை முதலிய கோலங்களைக் கண்டிப்பது எனக்கு அவசியமானதாகப் படவில்லை. "இவற்றுக்குக்கூட எங்களுக்கு உரிமை கிடையாதா?" என்பார்கள். 'காட்டுமிராண்டிகளைப் போல' இருக்கும் கருத்து வளராதவரை நம் இளைஞர்களை நாம் பாராட்டலாம். ஹிப்பிகளிலும் சுற்றுப்பயணம் மட்டும் செய்துவிட்டுப் பிறகு தாயகம் திரும்பி வாழ்வில் பொறுப்போடு காலம் கழிப்பவர்களாகப் பலர் இருக்கிறார்கள். இளங்கன்று பயமறியாமல் பரபரப்போடு துள்ளித் திரிவது போன்ற நிலையைத்தான் இதற்கு ஒப்பிட வேண்டும். வேகமான காலமும், வசதிகளின் பெருக்கமும் இப்படிச் சில மாறுபாடுகளை உருவாக்கத்தானே செய்யும்?

உழைப்புக்கும் அறிவுக்கும் சமுதாயத்தில் இடம் இல்லை, திறமையுள்ள இளைஞர்களுக்கு வாய்ப்பில்லை என்ற கருத்து, சமுதாயத்தில் இடம் பெறும்படியாக விடுவது நல்லதல்ல. எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்றவர்கள் கல்லூரிகளில் இடம் பெறுவது என்றால் தகுதியடிப்படையில் அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். மேலும், மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதலியவற்றில் மாணவர்களைத் தேர்வு செய்யப் புதிய முறைப் பரீட்சையை உருவாக்க வேண்டும். சிபாரிசுக்கும் சலுகைக்கும் விருப்பத்துக்கும் இடமில்லாத தேர்வுகளை வகுக்க வேண்டும். இராணுவம், பாங்குகள் முதலியவற்றுக்காக வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் தேர்வுமுறையை இங்கும் பின்பற்றலாம். 3 மணி நேரத்தில் 300, 400 கேள்விகளுக்குப் பதில் எழுதியாக வேண்டும். பரீட்சை முடிவுகளைக் கம்ப்யூட்டர் யந்திரம் மூலம் சோதனை செய்து 2, 3 நாட்களுக்குள் தேர்வு முடிவை முடித்துவிடுகிறார்கள். இது இளைஞர்கள் உள்ளத்தில் ஊக்கத்தையும் விருப்பத்தையும் ஏற்படுத்தும். இப்போதும் அமெரிக்க நாட்டிற்குச் செல்ல விரும்பும் டாக்டர்கள் இ மாதிரித் தேர்வில் வெற்றி பெற்றுத்தான் அநுமதி பெறுகிறார்கள்.

அரிஜனங்கள், பிற்பட்ட வகுப்பினர்க்கான இட ஒதுக்கீட்டையும் இதே பரீட்சை முறையில் வைத்துக் கொள்வதில் அதிகச் சிரமம் இல்லை. இதை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் வீணாகச் சிபாரிசுக்கு இடமில்லாமல், முயற்சிக்கு ஊக்கமும், உழைப்புக்கு உற்சாகமும் உண்டாகும்.

கல்வி முறை வசதியாகவும் நெறியாகவு அமைந்தால் தான் நாட்டின் அடிப்படை வளர்ச்சி ஒழுங்காக உருவாகும். மக்களைத் 'தக்கவர்களாக' மாற்றுவதுதான் ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு வழி செய்யும். நாடும், நல்லறிஞர்களும் இன்றைய நிலையையும், எதிர்கால விளைவையும் ஆழ்ந்து சிந்தித்து நல்ல முடிவெடுப்பதன் மூலம், வாலிப உள்ளங்களையும் கல்வி வளர்ச்சியையும் வழிப்படுத்தி இணைக்க முடியும்.

எவ்வழி நல்லர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!
—ஔவையார். ★


1872
1972
நூற்றாண்டு வருடம்
வைத்யரத்ன. பண்டிட், D.கோபாலாசார்லு
ஆயுர்வேத புனருத்தாரணர்," ஆயுர்வேதாஸ்ரமம்" ஸ்தாபகர்..
பிரசித்திபெற்ற
ஜீவாம்ருதம்
தயாரிப்பாளர்

பண்டரபுரம் பிறந்தது!

ஜன்னு முனிவரின் புதல்வன் புண்டரீகன் மனைவியின் அழகில் மயங்கி, அவளுடன் விருந்துண்டு மகிழ்ந்தான்; வயதான பெற்றோரைப் புறக்கணித்தான். அவர்கள் ஒரு நாள் தம்மைக் காசியாத்திரைக்கு அழைத்துச் செல்ல அவனை வேண்டினர். அவன் அவர்களைத் திட்டி வெளியே அனுப்பினான். 'மகனிடம் துன்புறுவதைவிட, காசி விசுவேசுவரரைத் தரிசித்து அங்கு வாழ்வது மேல்' என்று அவர்கள் கருதினர்.

1972

முதியவர் இருவரும் பல இடையூறுகளைத் தாங்கி, நடந்தே காசிக்குச் சென்றார்கள். சில நாள் கழித்துப் புண்டரீகனும் காசிக்குப் போக விரும்பினான்; தனக்கும் மனைவிக்குமாக இரண்டு குதிரைகளை அமர்த்திக் கொண்டான்; வேகமாக, உல்லாசமாகச் சென்றான்; வழியிலுள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தான். காசிக்கு அருகில் வழிதப்பி, மாலையில் ஓர் ஆசிரமத்தைக் கண்டான். அது குக்குட முனிவரின் ஆசிரமம் என்று அறிந்து அங்கே தங்கினான். முனிவர் அவனை வரவேற்று எல்லா வசதிகளும் செய்து கொடுத்தார்.



நள்ளிரவில் பெண்குரல் கேட்டுப் புண்டரீகன் வந்து பார்த்தான். வாசலை ஒருத்தி பெருக்க, மற்றொருத்தி நீர் தெளிக்க, இன்னொருத்தி கோலம் போடுவதைக் கண்டான். அவர்கள் கங்கை யமுனை சரஸ்வதி என்ற நதிமங்கையர். தங்களிடம் மக்கள் விட்டுச் செல்லும் பாவம் நீங்கத் தினமும் வந்து அவர்கள் முனிவரை வணங்கிச் செல்வதை அறிந்தான். பெற்றோருக்குச் செய்த பணிவிடையின் பயனாகவே முனிவருக்கு இவ்வளவு அரும் பெரும் சக்தி வந்ததைத் தெரிந்துகொண்டான். பெற்றோரைச் சந்தித்து, அன்றுமுதல் அவர்களைத் தெய்வமாகப் போற்றினான்.



தாய்தந்தையரிடம் அவனுக்கு இருந்த பக்தியைக் கண்டு வியந்து, தெய்வமே ஒரு நாள் புண்டரீகன் வீட்டு வாசலில் வந்து நின்றது. அவன் ஒரு செங்கல்லைப் போட்டு, தன் கடமை முடிந்து வருமளவும் இறைவனை அதில் நிற்கச் சொன்னான். தந்தைக்குப் பணிவிடை முடிந்ததும் வந்து, அவன் கிருஷ்ணனை வரவேற்றான். ''நான் எப்போதும் இந்தச் செங்கல்மேல் நின்று, அன்பர்களுக்கு வரமளிப்பேன்'' என்று கூறி, விட்டலன் அங்கே சந்நிதி கொண்டான். அன்றே பண்டரபுரம் என்ற பக்திநகரம் பிறந்தது.

ஓவியர் : உமாபதி

சகுந்தலா

எச். வி. ஆர். ஐயங்கார்

1942-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் பின்பகுதியில் கிருஷ்ணகுமார் என்பவர் பிகாரில் ரெயில்வேக்குச் சேதம் உண்டாக்கச் சதி செய்தாரென்று குற்றஞ் சாட்டிக் கைது செய்யப்பட்டார். ரெயில்பாதையில் சில இணைப்புத் தகடுகளை அகற்றியிருந்தார்கள்; போர்க் கருவிகளைக் கொண்ட ஒரு கூட்ஸ் வண்டியைத் தண்டவாளத்திலிருந்து இறங்கச் செய்தார்கள்; அதனால் பெரும்பாலான கருவிகள் மிகவும் சேதமாயின. இந்தச் சதியில் அவர் சேர்ந்தவர் என்று குற்றம் சாட்டினார்கள். பிரிட்டிஷ் படைகள் பர்மாவிலிருந்து பின்வாங்கியிருந்த காலம் அது. ஜப்பானியப் படைகளில் முன்னேறிய பகுதிகள், காட்டு வழிகளில் சென்று மணிப்பூர் ராஜ்யத்திலுள்ள இம்பாலைச் சூழ்ந்து கொண்டிருந்தன. அந்தக் காட்டு வழிகள் ஒழுங்காக அமைக்கப்பட்ட படைகளால் பயன்படுத்த முடியாதவை என்று பிரிட்டிஷ் படைத் தலைவர்கள் எண்ணியிருந்தார்கள். அந்த வழிகளில்தான் ஜப்பானியர் முன்னேறினார்கள். ரெயில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் பண்ணும் முயற்சிகளைக் கொடிய குற்றம் என்று பிரிட்டிஷ் அதிகாரிசள் கருதினார்கள்.

கிருஷ்ணகுமார் குற்றவாளி என்பதற்கு நேரடியான சாட்சி ஏதும் இல்லை; ஆனால் தண்டவாளத்திலிருந்து வண்டி பெயர்ந்த பிறகு அவர் அந்த நிகழ்ச்சி நடந்த ஊருக்கருகில் இருந்தார்; அங்குள்ள மக்களிடம் ‘வெள்ளையனே வெளியேறு’ என்ற இயக்கத்தைப் பற்றிப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார். உண்மையில் அவர் மகாத்மா காந்தியின் அஹிம்ஸைக் கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர். அத்தகைய செயல்கள் அதர்மமானவை மட்டுமன்றி, இந்தியா விடுதலையடையும் திறத்தில்கூடச் சக்தியற்றவை என்று எண்ணினார். அவர் பாரிஸ்டராக இருந்தார். ஓரளவு நியாயமாக முன்னுக்கு வந்திருந்தார். ஆனால் தேச விடுதலைக்காகத் தம் பங்கை ஆற்ற வேண்டுமென்ற விருப்பத்தினால் ‘வெள்ளையனே, வெளியேறு’ என்ற இயக்கத்தில் கலந்து கொண்டார். அவர் போயிருந்த கிராமத்தார் அதுவரையில் தந்திக் கம்பிகளை அறுப்பதுபோன்ற சில சிறிய சேதச் செயல்களைச் செய்துகொண் டிருந்தார்கள். அவர் அங்கே கிராம மக்களுக்குக் காந்தியடிகளின் கொள்கைகளைப் பிரசாரம் செய்யப் போனார். அவரைக் கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்தியபோது அவர் வாதிட மறுத்துவிட்டார். அவருக்கு எதிராக நேர்முகமான சாட்சி ஏதும் இல்லாவிட்டாலும் அவருக்குப் பல வருஷங்கள் சிறைத் தண்டனை விதித்தார்கள்.

1947-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் சுதந்தரம் வந்தபோது முதல் முதலாக விடுதலையானவர்களில் அவரும் ஒருவர். சமீபத்தில் பிரதமர் வழங்கிய தாமிரபத்திரத்தை அவர் பெற்றார். அவர் அதற்குத் தகுதியானவர் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் அதைப் பெறுவதற்கு நியாயமான தகுதி உள்ளவள், அல்லது அவரைவிட அதிகமான தகுதியுள்ளவள் அவருடைய மனைவி சகுந்தலாவே என்பதை அவரே ஒப்புக்கொள்வார்.

இங்கே நான் சொல்பவை அவர்களுடைய உண்மையான பெயர்கள் அல்ல. இந்தக் கதை வெளிவந்தால் கிருஷ்ணகுமார் மிகவும் சங்கடப்படுவார். சகுந்தலா இன்று உயிரோடு இருந்தால் இந்தச் செய்திகளை வெளியிடுவதற்காக என்மேல் உண்மையில் கோபம் கொண்டாலும் கொள்ளலாம். அவர்களிடம் எனக்குப் பெரு மதிப்பு உண்டு. அவர்களை என் இளம் பிராயத்திலிருந்து தெரியும். ஆகவே அவர்களுக்கு வருத்தம் உண்டாக்க விரும்பவில்லை.

கிருஷ்ணகுமாருக்கு வக்கீல் தொழிலில் நல்ல வருவாய் வந்தது. நன்றாக வாழ்ந்து வந்தார். வசதியான பங்களா, கார், பல வேலைக்காரர்கள். விருந்தினர்களைத் தாராளமாக உபசரித்தார். சகுந்தலா இந்த வசதிகளை நன்றாக அநுபவித்தாள். முக்கியமாக விருந்துகளை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்பாடு பண்ணினாள். அவர்களுடைய நண்பர்கள் பலர். எப்போது விருந்துக்கு அழைப்பாள் என்று அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். அவள் வழங்கும் விருந்துகளில் தனியான மணம் கமழும்; கண்ணியமும் கவர்ச்சியும் அவற்றில் காணலாம். உணவுவகை மிகச் சுவையாக இருக்கும் என்பது மட்டும் அன்று; (பல பண்டங்களைச் சகுந்தலாவே பண்ணியிருப்பாள்.) மலர்களை அழகாக அலங்கரிப்பதிலும் விளக்குகளை ஒழுங்காக அமைப்பதிலும் கலைநயம் தெரியும். விருந்தாளிகளை அணுகி அவர்களோடு பேசி, தாம் மகிழ்ச்சியோடு இருப்பதைக் கண்டு அவள் இன்பத்தை அடைகிறாள் என்று அவர்கள் உணரும்படி செய்வாள். பார்க்க அழகாக இருப்பாள். இந்தியப் பெண்களிடம் இல்லாத உயரம் அவளுக்கு—கிட்டத்தட்ட 5 அடி 6 அங்குலம்; மெல்லியல்தான்; என்றாலும் வளமான அங்க அமைப்பு; அவள் கண்களில் எப்போதும் மகிழ்ச்சி துள்ளி விளையாடும். அத்தகைய பெண்மணியை மனைவியாகப் பெற்ற கிருஷ்ணகுமார் மிகவும் அதிருஷ்டசாலி என்று அவருடைய நண்பர்களெல்லாம் எண்ணினார்கள்.

ஆனால் கிருஷ்ணகுமார் சிறிதளவு கூடப் பணம் சேர்க்கவில்லை. அவர் சுகமாக வாழ்ந்தாலும் மாசத்துக்கு மாசம் வரும் வரும்படியை வைத்துக் கொண்டு வாழ்ந்தார். எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு உருவாகக் கூடிய சில இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகளில் போட்டிருந்த பணந்தான் அவர் சேர்த்து வைத்த சொத்து. இதனால் கிருஷ்ணகுமாரைச் சிறைப்படுத்திய போது உண்மையில் சிறிதளவு பணங்கூடக் கையில் இல்லை என்பது சகுந்தலாவுக்குத் தெரிய வந்தது.

2

இதனால் சகுந்தலா அஞ்சவில்லை. அவள் செல்வர் குடும்பத்தில் பிறந்த

ள். இருந்தும் அவள் தந்தையார் ஆபத்தான வியாபாரங்களில் சிக்கிப் பணத்தையெல்லாம் தொலைத்துவிட்டார். அவருக்கும் வியாபாரத்துக்கும் வெகு தூரம்; ஆகவே சுலபமாக அவரை சுற்றவர்கள் ஏமாற்றிவிட்டார்கள். பத்தாம் வயசிலிருந்தே சகுந்தலா வறுமையிலும் கஷ்டத்திலும் வாடினவள். அவளுக்கு இரண்டு சகோதரர்கள்; இரண்டு சகோதரிகள்; அவள் அன்னை நெடுங்காலமாக ஒன்றுக்கும் உதவாத நோயாளி; வீட்டு வேலை எதுவும் செய்ய முடியாது. ஆகவே குடும்பத்தைக் கவனிக்கும் பாரம் முழுவதும் இளம்பெண் சகுந்தலாவின் தலையில் விழுந்தது. அவள் விடியற்காலை நாலரை மணிக்கே எழுந்து வீட்டுவாசலில் சாணம் தெளித்துக் கோலம் போடுவாள்; கோலம் போடுவதில் அவள் கெட்டிக்காரி. குளியலறையில் அடுப்பு மூட்டி வெந்நீர் போடுவாள். பிறகு தன் தாய் தந்தையரை எழுப்பி, அப்பால் சகோதரர்களையும் சகோதரிகளையும் எழுப்புவாள். அவரவர்கள் வயசுக்குத் தக்கபடி எழுப்பிவிடுவாள். அவர்கள் நீராடும்போது சமையல் செய்யச் சமையலறையில் புகுவாள். அவளுக்கு ஒவ்வொன்றும் திருத்தமாக இருக்க வேண்டும்; பாத்திரங்களும் தட்டுக்களும் பளிச்சென்று இருக்க வேண்டும்; காய்கறிகளை ஒழுங்காக நறுக்க வேண்டும்; அரிவாள்மணையை நன்றாக அலம்பி உரிய இடத்தில் வைக்க வேண்டும். சாப்பிடும் தட்டுக்கள் அவற்றிற்குரிய மூலையில் அளவுக்குத் தக்கபடி அடுக்கியிருக்க வேண்டும். சமையலறை எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். யாராவது ஈரக் காலோடு நுழைந்து, தரையை அழுக்காக்கிவிட்டால் அவளுக்குக் கோபம் வந்துவிடும். அம்மாவைக்கூடச் சும்மா விடமாட்டாள். அம்மா ஜாக்கிரதையில்லாத, எதற்கும் உதவாத பிராணி; தன் மகள் சின்னதற்கெல்லாம் கோபிக்கிறாளே என்று அவள் எண்ணினாள்.

துவைப்பதற்கு எத்தனையோ இருந்தன. துண்டு கிழிந்திருக்கலாம்; ஆனால் அது சுத்தமாக இருக்க வேண்டும். பாவாடைகள் பழையனவாக இருந்தாலும் உடுத்துக் களைந்தவுடன் அவற்றைத் துவைத்து வைக்க வேண்டும். அவளுடைய சகோதரர்களும் சகோதரிகளும் அவளைவிடச் சின்னவர்கள்; ஆகையால் துணிகளையெல்லாம் அவள் ஒருத்தியே துவைக்க வேண்டியிருந்தது. வீட்டில் குழாய் இல்லை; கிணற்றிலிருந்து தான் தண்ணீர் சேந்தி எடுத்துவர வேண்டும். இந்த விஷயத்தில் தம்

மால் இயன்ற உதவியை அப்பா செய்வார். ஆனால் அவர் அவ்வளவு பலமில்லாதவர்; ஆகையால் பல தடவை அவளே கிணற்றிலிருந்து சேந்திக் கொண்டு வர வேண்டியிருக்கும். இப்படியெல்லாம் இருப்பதனால் காலை நேர வேலைகள் முடியப் பத்து மணியாகிவிடும். அவள் பள்ளிக்கூடத்துக்குப் பத்து மணிக்குப் புறப்பட வேண்டியவள்; ஆகையால் பல சமயங்களில் அவள் பள்ளிக்கூடத்திலிருந்து பிற்பகலில் திரும்பி வருகிறவரைக்கும் அவள் சாப்பிடாமல் இருக்க வேண்டி நேர்ந்தது. பள்ளிக்கூடமோ இரண்டு மைல் தூரத்தில் இருந்தது. அவள் வீட்டுக்குப் பக்கத்தில் நான் குடியிருந்தேன். ஆகையால் சகுந்தலா பள்ளிக்கூடம் போகும் காட்சி இன்னும் தெளிவாக என் அகக் கண்ணில் நிற்கிறது. உயரமான அழகான உருவம்; வழவழப்பான தந்த நிற மேனி; அது வெயிலால் வாடியிருக்கும்; தோளில் ஒரு பை. காலில் செருப்பில்லை; மழைக்குக் குடையும் இல்லை. செருப்பும் குடையும் அவள் குடும்பத்தார் வாங்க முடியாத டம்பப் பொருள்கள்.

வீட்டில் தோட்டம் இல்லை. ஆனால் சகுந்தலாவுக்கு மலர்களென்றால் பிடிக்கும். மலர்களைப்பற்றி அவள் எப்படியோ பல விஷயங்களைத் தெரிந்துகொண்டிருந்தது ஆச்சரியம். அவள் பிறந்த நாளில் அவள் அப்பா ஏதாவது வாங்கிக் கொள்ளும்படி நாலணாக் கொடுப்பார். அவள் கடைக்கு ஓடிப்போய்ச் சில மலர்களை வாங்கி வந்து ஒரு தம்ளரையே பூந்தொட்டியாக எண்ணி அதில் அவற்றை அழகாக வைப்பதில் நெடு நேரத்தைச் செலவழிப்பாள். பிராணிகளைப்பற்றிப் பல விஷயங்களை அவள் தெரிந்து கொண்டிருந்தாள். அதுவும் ஆச்சரியந்தான். பிற்காலத்தில் கிருஷ்ணகுமாரை அவள் மணந்தபிறகு தோட்டக் கலையில் வல்லவர்களுடனும் பிராணிசாஸ்திரம் தெரிந்தவர்களுடனும் நெடுநேரம் உரையாடுவாள். அரசினருடைய கலைத் தோட்டத்தின் மேற்பார்வையாளர் தம் நண்பர்களிடம், ''திறமையைப் பார்ப்பதாக இருந்தால் இந்த அம்மாள் என்னுடைய ஸ்தானத்தில் இருக்கத் தக்கவள்'' என்று சொல்லுவார். உள்ளூர் மிருக வைத்தியசாலை மேலாளரைச் சில சமயங்களில் தான் வளர்த்து வந்த அஞ்சாறு நாய்களைக் கவனிப்பதற்கு வரச் சொல்வாள். அப்போதெல்லாம் அவர், ''இந்த விஷயங்களையெல்லாம் இந்த அம்மாள் எங்கே கற்றுக்கொண்டாள்!'' என்று தமக்குள் வியந்து போவார்.

சகுந்தலாவின் அப்பா தம் பிள்ளைகளைப் படிக்க வைப்பதில் ஆர்வமுடையவர். எவ்வளவு படித்தாலும் நல்லது என்பவர். தம் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கும் கல்லூரிக்கும் போகும்படி ஏற்பாடு செய்தார். சகுந்தலா இண்டர் வகுப்பப் படிக்கும்போது அவள் வயசு 18. அவள் பருவத்துக்கு மிஞ்சிய அறிவும் அழகும் உள்ளவள். வீதியில் போகிறவர்கள் அவளைப் பார்ப்பார்கள்; கடந்த பிறகும் திரும்பி உற்று

நோக்குவார்கள். அவளுக்குக் கல்யாணம் பண்ணும் பருவம் வந்துவிட்டது என்று அவளுடைய அப்பா எண்ணினார். அதிருஷ்டவசமாகக் கிருஷ்ணகுமாருடைய தாய் தகப்பனாருக்கு அவரிடம் சிரத்தை உண்டாயிற்று. ஜாதகம் பார்த்தார்கள்; பொருத்தமாக இருந்தன. இப்படிப் பொருத்தமுள்ள ஜாதகங்களைப் பார்த்ததில்லை என்று ஜோசியர்கள் சொன்னார்கள். “இந்தப் பெண்ணால் இவள் கணவனுக்கு நல்ல அதிருஷ்டம் உண்டாகும். நிறையப் புத்திரபாக்கியம் உண்டு” என்றார்கள். உண்மையில் அவளால் அவள் கணவருக்கு அதிருஷ்டம் உண்டாயிற்று; சாமானியமான வக்கீலாக இருந்தவர் விரைவில் சௌகரியமான நிலைக்கு உயர்ந்தார். ஆனால் அவர்களுக்கு ஒரே ஒரு குழந்தை; ஸுநீதா என்ற மகள் ஒருத்திதான்.

3

கிருஷ்ணகுமார் சிறைக்குச் சென்றபோது குடும்பத்தை நடத்த மிகவும் கொஞ்சந்தான் பொருள் இருக்கிறதென்பதைத் தெரிந்து கொண்ட சகுந்தலா ஏதாவது வேலை பார்க்கலாம் என்று தீர்மானித்தாள். அதிருஷ்டவசமாகக் கிருஷ்ணகுமாருக்கு நன்றாகத் தெரிந்த ஓர் உயர்நிலைப் பள்ளிக்கூடப் புரவலர்கள் அந்தப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியை வேலையை அளித்தார்கள். அவள் வாடகைக்கு இருந்த பங்களாவை விட்டாள்; நாற்காலி முதலிய சாமான்களில் பெரும்பாலானவற்றை விற்றாள்; பள்ளிக்கூடத்துக்கருகில் உள்ள சிறிய வீடு ஒன்றிற் குடியேறினாள். எப்போதும் போல் அதையும் துப்புரவாக வைத்துக் கொள்வதில் அவள் தவறவில்லை. முப்பதே ரூபாய் வாடகையுள்ள ஒரு வீட்டை அவ்வளவு சுத்தமாகவும் கவர்ச்சிகரமாகவும் அவளால் எப்படி வைத்துக்கொள்ள முடிந்ததென்றும் மக்கள் வியந்தார்கள். சன்னல்களில் திரைகள் சலவைக்குப் போட்டுச் சுத்தமாக இருக்கும். கிடைத்த பாத்திரத்தையே பூந்தொட்டியாக வைத்து மலர்களை வைத்திருப்பாள். சமையலறை ‘உள்ளே வா, வேலை செய்’ என்று அழைக்கும். தன் மாமனார் மாமியாரை மிகவும் அன்புடன் கவனித்துக் கொண்டாள். அவர்களுடைய நண்பர்கள், “இவள் தவறி உங்கள் மருமகளாக வந்துவிட்டாள்; இவள் உங்கள் பெண்ணாகப் பிறந்திருக்கவேண்டும்” என்பார்கள்.

ஒவ்வொரு மாசமும் அவள் ஆவலோடு எதிர்பார்த்த நிகழ்ச்சி—சிறையிலுள்ள தன் கணவரைப் போய்ப் பார்த்து வருவது. தன் பெண் ஸுநீதாவையும் அழைத்துச் செல்வாள். கிருஷ்ணகுமாருக்கு அந்த நாள் விசேஷ நாளாக இருக்கும். அவள் அவரிடம் எப்படி அன்பாக இருந்தாளோ அப்படியே அவரும் இருந்தார். ஆனால் மூன்றாவது அல்லது நான்காவது தடவை அவர்கள் சந்தித்துப் பிரிந்தபோது இனம் புரியாத ஏதோ அதிருப்தி உண்டாயிற்று.

“உன்னைப் பார்த்தால் மிகவும் களைப்படைந்தவளாகத் தெரிகிறது. என்ன சமாசாரம்? நன்றாகத் தூங்குகிறதில்லையா?” என்று கேட்டார் அவர்.

“ஆமாம். நேற்று ராத்திரி நெடுநேரம் கழித்தே படுத்துக் கொண்டேன். நான் விசுவநாதன் மனைவியோடு ஒரு பஜனைக்குப் போயிருந்தேன்; யாரைச் சொல்கிறேன் தெரியுமோ? கலெக்டருடைய மனைவியின் சகோதரி. பஜனை மிகவும் அற்புதமாக இருந்தது” என்றாள். இதைச் சொல்லும்போது அவள் கண்ணில் ஓர் ஒளி படர்ந்தது.

“பஜனையில் என்ன அற்புதம்?” என்று கேட்டார் கிருஷ்ணகுமார்; அந்த மாதிரி விஷயங்களில் அவருக்கு அதிக நம்பிக்கை கிடையாது.

“இப்படி நடந்த பிறகு—” என்று சொல்லிக்கொண்டே சிறைக்கூடத்தைச் சுற்று முற்றும் பார்த்தாள்; அவருடைய சிறை வாசத்தையே அவள் குறிக்கிறாள் என்று தெரிந்தது; “இப்படி ஏன் நமக்கு வரவேண்டும் என்று யோசித்தேன். ஒரு நாள் விசுவநாதன் மனைவியிடம் நான் பேசிக்கொண்டிருந்தேன். டவுனில் நாடி கிரந்தத்தை வைத்திருக்கும் மிக அற்புதமான பண்டிதர் ஒருவர் இருக்கிறாரென்று அவள் சொன்னாள். தன் ஜாதகத்தின் பலனை வாசிக்கக் கேட்டதாகவும் அது மகா அதிசயமாகவும் சரியாகவும் இருந்ததாகவும் சொன்னாள். நான்கூட அவரிடம் போய் உங்கள் ஜாதக பலன்களைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று சொன்னாள். அதற்கு நூறு ரூபாய்தான் செலவாகுமாம்.”

“நூறு ரூபாயா?” என்று வியப்பினால் கூவிய கிருஷ்ணகுமார், “அது உன்னுடைய ஒரு முழு மாதத்துச் சம்பளமாயிற்றே!” என்றார்.

அவள் மெதுவாகப் பேசினாள். “ஆமாம்; ஆனால் அந்தப் பணத்துக்குத் தக்க பலன் இருக்குமே. நான் அந்தப் பண்டிதரிடம் போய் உங்கள் ஜாதகத்தையும் பலனையும் வாசிக்கச் சொன்னேன். அவர் ஜோசியர் அல்ல; நாடி கிரந்தம் வைத்திருப்பவர். அவர் அதை வாசிக்கிறபோது நமக்குக் காலும் தெரியாது; தலையும் தெரியாது. எந்த மனிதருக்கும் தெரியாத பாஷை அது. அவர்தாமே அதற்கு அர்த்தம் சொல்ல வேண்டும். அவர் உங்களைப் பற்றி எவ்வளவு கச்சிதமாக விஷயங்களைச் சொன்னார் தெரியுமா? உதாரணம் பாருங்கள். உங்களுக்கும் சட்டத்துக்கும் சம்பந்தம் இருக்கும் என்றார். நீங்கள் வக்கீல் என்று சொல்வதற்கும் அதற்கும் என்ன வித்தியாசம்? சொல்லுங்கள் மிகவும் அழகான பெண்ணை நீங்கள் கல்யாணம் செய்து கொள்வீர்கள் என்றும் சொன்னார்.” இப்படிச் சொல்லும்போது அவளுக்கு வெட்கம் வந்துவிட்டது. “நீங்கள் சிறைக்குப் போவீர்களென்று நேரே சொல்லவில்லை; ஆனால் இது உங்களுக்குப் போதாத வேளை என்று சொன்னார். அது கிட்டத்தட்டச் சரிதானே? ஆனால் அவர் சொன்னதற்குள் மிகவும் அதிசயமானது என்ன தெரியுமோ! நம் குழந்தையினுடைய பெயரின் முதலெழுத்து ஸு என்று சொன்னார்.”

“இதையெல்லாம் தெரிந்து கொள்ள நீ அந்தப் பேர்வழிக்கு நூறு ரூபாய் கொடுத்தாயாக்கும்! நம் பெண்ணுக்கு ஸுநீதா என்று பெயர் என்பது உனக்கு நன்றாகத் தெரியுமே. போதாத வேளை என்பது, சர்ச்சைக்குரிய விஷயம். சிறைப்பட்டது போதாத கால விளைவு என்று நான் நினைக்கவில்லை. நான் உண்மையில் இதற்காகப் பெருமை கொள்கிறேன்.”

“நீங்கள் எப்போதும் வக்கீல் மாதிரியே பேசுகிறீர்கள். இந்த மாதிரி விஷயங்களை, கடவுளை, நீங்கள் நம்ப வேண்டும்.”

“இந்தப் பைத்தியக்கார விஷயங்களுக்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்?” என்று சற்றே கோபத்தோடு அவர் கேட்டார். அவள் கண்ணில் நீர் ததும்பியது.

“நான் ஓடாய் உழைக்கிறேன்; உங்கள் அம்மா அப்பாவைக் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் பெருமைப்படும் வகையில் இருக்க வேண்டுமென்று ஸுநீதாவை வளர்க்கிறேன். இவ்வளவு செய்தும் நான் கடவுளிடம் நம்பிக்கை வைப்பதற்காகக் குறை கூறுகிறீர்கள்!”

அவரிடமிருந்து ஒரு பெருமூச்சு எழுந்தது. கவலையோடு மார்பில் கைகளை வைத்துக்கொண்டார்.

அவள் மேலும் பேசலானாள்: “சீக்கிரத்தில் நமக்கு நல்ல காலம் வரப் போகிறதென்று பண்டிதர் சொன்னார். நாம் சில சாந்தி மட்டும் பண்ண வேண்டுமாம். அதற்கு ஆயிர ரூபாய் ஆகுமாம். அது கொஞ்சம் அதிகமான தொகைதான். ஆனால் என்ன? இன்னும் என்னிடம் சில தங்கத்துண்டுகளும் சிறிய நகைகளும் இருக்கின்றன. அவற்றை அடகு வைக்கலாம்; அல்லது விற்றுவிடலாம். போன ஜன்மத்தில் நீங்கள் அடுத்த வீட்டுக்காரனுக்கு எதிராகப் பொய்ச் சாட்சி சொல்லி அவனைச் சிறைக்குப் போகச் செய்தீர்களாம். அந்தக் கர்மத்தின் பயனை இப்போது அநுபவிக்கிறீர்களாம். இப்படி அவர் சொன்னார். இருந்தாலும் சீக்கிரத்தில் எல்லாம் சரியாகிவிடுமாம். நான் சாந்தியை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறேன். சாந்தி நடக்கிற இடத்தில் பஜனைகள் நடக்கின்றன; இரவு நெடுநேரம் நடக்கின்றன.”

அவருக்கு உண்மையாகவே கோபம் வந்துவிட்டது. காவலாளி சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்தான். சுற்றிச் சூழ உள்ளவை அவர்கள் சிறையில் இருப்பதை நினைவுறுத்தின. “இவர்கள் மாதத்துக்கு ஒரு தடவைதான் சந்திக்கிறார்கள்; அரை மணி பேசுகிறார்கள்; உடனே சண்டை போட்டுக் கொள்கிறார்கள். இவளைப் பார்த்தால் படித்த பெண்மணியாகத் தோன்றுகிறாள். ஆனால் என் பெண்டாட்டியைப் போல இவளும் பொல்லாத சண்டைக்காரி போலிருக்கிறது” என்று காவலாளி தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பல மாதங்களுக்குப் பிறகு கிருஷ்ணகுமாரை வேறு ஒரு நகரத்திலுள்ள சிறைக்கு மாற்றினார்கள். சகுந்தலா பள்ளிக்கூடப் புரவலர்களைப் பார்த்து, தன்னையும் அந்த நகரப்பள்ளிக்கு மாற்றும்படி கேட்டுக் கொண்டாள்: அங்கே தங்கள் பள்ளிக்கூடம் ஒன்றும் இல்லையென்று அவர்கள் சொன்னார்

லட்சோப லட்ச
விளக்குகள்
பிரகாசிக்கட்டும்!
பெங்கால்
லாம்புகள் டியூபுகள்
இந்தியாவின்
முதல் மின்
விளக்கு
BENGAL
COOL DAY LIGHT
MADE IN INDIA
ON
DGS & D
எமது தீபாவளி வாழ்த்துக்கள்
பெங்கால் எலக்ட்ரிகல்ஸ் கோ.,
பெங்களூர்-1, சென்னை-17, திருவனந்தபுரம்-14
chari

கள். அவள் அவர்களை அடிக்கடி தொந்தரவு பண்ணவே, தம் நண்பர்களிடம் சொல்லி அந்த நகரத்தில் வேலை கொடுக்க ஏற்பாடு செய்தார்கள்.

ஒவ்வொரு மாதமும் குறித்த நாளில் அவள் சிறைக்குச் சென்று தன் கணவரைப் பார்த்து வந்தாள்.

முதலில் சந்தித்தபோது, அவர், ''சாந்தியும் அந்தப் பஜனைகளும் எப்படி இருக்கின்றன? அந்தப் பைத்தியக்கார வேலைகளை நிறுத்திவிட்டாய் என்று நம்புகிறேன்'' என்றார்.

''இவைகளைப்பற்றி ஒன்றுமே தெரியாதவர் போலப் பேசுகிறீர்களே'' என்று கோபத்துடன் பேசத் தொடங்கினாள் அவள்; ''மிகப் பெரியவராக உங்களை எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு நன்மை செய்யத்தானே இதையெல்லாம் செய்கிறேன்? இந்தச் சாமானிய விஷயங்கூட உங்களுக்குப் புரியவில்லையா?''

''எனக்குத் தெரியவில்லை'' என்று சுருக்கமாக அவர் பதில் சொல்லிவிட்டு, ஸுநீதாவைப் பார்த்து அவள் வகுப்பைப் பற்றிச் சில கேள்விகளைக் கேட்டார். அந்தச் சந்திப்புச் சாரமற்றதாக முடிந்தது.

அவர் நியாயம் இன்னதென்று அறியும் உள்ளமுடையவர். அவர் வாழ்க்கை என்பது பெரிய மர்மம் என்பதை உணர்ந்திருந்தார்; உண்மையில் மனிதனால் ஆழங் காண முடியாத பெரிய மர்மம் அது. அதன் போக்கிலே அதை விட்டுவிட்டார்.

''நாம் யார், நாம் எத்தகையவர், நாம் ஏன் இங்கே வந்திருக்கிறோம் என்று எனக்குத் தெரியாது. ஆழங் காண முடியாத மர்மத்தைத் தெளிவதற்கு முயன்று காலத்தை வீணாக்க வேண்டாம். ஆனாலும் நாம் இந்தப் பேதை உலகத்தில் வாழும்படி நேர்ந்திருப்பதால் நம்முடைய வாழ்க்கையைப் புத்திசாலித்தனமாக ஒழுங்கு படுத்திக் கொள்வோம். தர்மம், அன்பு, உண்மை ஆகியவற்றில் எனக்கு நம்பிக்கையுண்டு. அவை நம் வாழ்க்கை ஒழுங்காக அமைய உதவுகின்றன. ஆனால் உன்னைத் தன் பிடியில் அகப்படுத்திக்கொண்டிருக்கிற இந்த அர்த்தமற்ற வார்த்தைகளை நான் ஏன் நம்ப வேண்டும்?'' என்று அவர் சகுந்தலாவிடம் அடிக்கடி சொல்வதுண்டு.

நாலுதடவை அவரை வெவ்வேறு சிறைக்கு மாற்றினார்கள். நாலுதடவையும் அவள் அந்த அந்த ஊரில் வேலை பெற்று ஒவ்வொரு மாதமும் அவரைச் சந்தித்து வந்தாள். ஒரு சமயம் அவரைப் பார்க்கும் நாளில் அவளுக்குக் கடுமையான குளிரும் ஜுரமும் இருந்தன. ஆனாலும் அவள் அவரைப் பார்க்கச் சிறைக்குப் போனாள். அவளைப் பார்த்தால் பயங்கரமாக இருந்தது. அவள் போயிருந்த அந்தப் பிற்பகல் வேளை கடுங்குளிராக இருந்தது. அவருக்கு அதிகக் கோபம் உண்டாகிவிட்டது. ''உடம்பு சரியில்லை, அதனால் வர முடியவில்லை என்று சொல்லியனுப்பியிருக்கக்கூடாது? உனக்கு நிமோனியா வந்து செத்துப் போனால் ஸுநீதாவுக்கும், என் அம்மா அப்பாவுக்கும் என்ன கதி உண்டாகும்?'' என்று கேட்டார்.

''எனக்கு அப்படி ஏதாவது நேர்ந்துவிட்டால் அவர்களைக் கடவுள் கவனித்துக்கொள்வார்'' என்றாள் அவள்; ''நான் சுமங்கலியாகச் செத்துப் போனால் அழியாத மகிழ்ச்சி எனக்கு உண்டாகும்; அதுவே எப்போதும் என் பிரார்த்தனை. இன்று இங்கே உங்களைப் பார்க்க வரும்போது எனக்கு ஜுரம் இருப்பது உண்மைதான். ஆனால் உங்களைப் பார்ப்பதனால் நான் ஆனந்தம் அடைகிறேன். அந்த ஆனந்தத்தை ஏன் நீங்கள் பறிக்க விரும்புகிறீர்கள்?'' என்றாள்.

இப்படியே, உண்மையில் ஒருவருக்கொருவர் ஈடுபாடு கொண்டிருந்த அந்த இரண்டு பேருக்கும் இடையே இந்தச் சண்டை நடந்து கொண்டே வந்தது. பிறகு அந்தப் பெருமை பெற்ற நாள், 1947-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15 - ஆம் தேதி, வந்தது. சகுந்தலா ஸுநீதாவுடனும் வயசான மாமனார் மாமியாருடனும் சிறைவாயிலில் வந்து நின்றாள். அந்தப் பெரியவர்கள் முதுமையையும் தேக அசௌக்கியத்தையும் பொருட்படுத்தாமல் தாமும் வர வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். காலையில் எட்டு மணிக்குச் சிறைக்கதவுகள் திறந்தன. கிருஷ்ணகுமார் வெளியே வந்தார். அவர் தம் தாய்தந்தையர் காலைத் தொட்டு வணங்கினார்; ஸுநீதாவைத் தூக்கிக் கொண்டார்; மனைவியை அணைத்துக் கொண்டார். அந்தக் கணத்தில் பரிபூர்ண ஆனந்தம் நிலவியது.

4

பழைய வாழ்க்கையை மீண்டும் தொடங்கி நடத்தக் கிருஷ்ணகுமாருக்கு நீண்ட நாள் பிடிக்கவில்லை. அவர் ஐந்தே வருஷங்கள் சிறையில் இருந்தார்; இன்னும் ஓரளவு இளமையாகவே இருந்தார். விடுதலைப்போர் வீரர் என்ற பெருமதிப்பு வேறு அவருக்கு இருந்தது. அவர் சேதம் விளைவிக்கும் வேலையில் ஈடுபட்டவர் அல்ல என்பதை மக்கள் நன்றாக அறிவார்கள். அவர் அப்படிச் செய்திருந்தாலும் அதைப்பற்றிக் குறையாக எண்ணியிருக்கமாட்டார்கள். ஆனால் வழக்கில் வாதிட மறுத்தாரே, அதனால் அவருடைய ?.கௌரவம் உயர்ந்தது. அவருடைய பழைய கட்சிக்காரர்கள் அவரிடம் வரத் தொடங்கினார்கள். மறுபடியும் அவர் வருவாய் கணிசமாக உயர்ந்தது. அவரும் சகுந்தலாவும் பழைய மாதிரி வசதியாக வாழத் தலைப்பட்டார்கள்.

ஆனால் ஒரு வித்தியாசம் இருந்தது. சகுந்தலாவுக்கு இப்போதெல்லாம் விருந்து அளிப்பதில் உள்ள மோகம் போய்விட்டது. முன்பெல்லாம் பணக்கார விருந்தினரை அழைத்து நிறைய உண்ணவும் குடிக்கவும் வழங்கினாளே, அதுபோன்ற நிகழ்ச்சியை இப்போது விரும்பவில்லை. கிருஷ்ணகுமாரின் மனைவி என்ற முறையில் அவள் தன் கடமையை நன்றாகச் செய்தாள்; ஆனால் முன்பு இருந்த உற்சாகம் போய்விட்டது. ''முன்பெல்லாம் இத்தகைய விருந்துக் கூட்டத்தில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். இப்போது அப்படி இல்லை. அவையெல்லாம் அர்த்தமற்றவை என்று எண்ணுகிறேன். ஆனால் உங்களுக்காகவே அவற்றில் நான் கலந்து கொள்கிறேன்'' என்று தன் கணவரிடம் அவள் சொல்வாள்.

''நன்றி அம்மையாரே!'' என்று பரிகாசமாக அவர் பதில் சொல்வார்.

அத்தகைய கூட்டங்கள் வரவரக் குறைந்து வந்தன; அடிக்கடி நடைபெறுவதில்லை; அடியோடு நின்றும் விடவில்லை. தான் ஒரு தடையாக இருப்பதாகத் தன் கணவர் கூறுவதைச் சகுந்தலா விரும்பவில்லை. அத்தகைய கூட்டங்களில் அவள் பழையபடியே நன்றாக ஆடையணிந்து கொண்டாள்; சுமுகமாகப் பழகினாள். ஆனால் இந்தக் கூட்டங்களெல்லாம் பெரும்பாலும் வேறு வகையானவை. அவை பக்திக் கூட்டங்கள். சமூகத்தில் பல படித்தரங்களிலும் உள்ள பெண்மணிகள், முக்கியமாக ஏழைப் பெண்கள் கலந்து கொள்ளும் கூட்டங்கள். அவர்களைச் சகுந்தலா ஆவலோடு வரவேற்று உபசரித்தாள். பஜனைப் பாட்டுக்கள் அதிகமாக இருக்கும்; ஒரு சமயம் ஆட்டங்கூட இருந்தது. சில பெண்கள் கிருஷ்ண விக்கிரகத்தைச் சுற்றிச் சுற்றி வந்து ஆடினார்கள்; பாடினார்கள். விரைவில் கூட்டத்தில் உத்வேகம் அதிகமாயிற்று; சகுந்தலாவும் சேர்ந்துகொண்டாள். இந்த நிகழ்ச்சியின் முடிவில் அவள் முகத்தில் ஒரு களை இருந்தது; தேக முயற்சியினால் மட்டும் வந்தது அல்ல அது.

அவள் எளிதில் இளைப்பாறலாம்; ஆனால் அப்படிச் செய்வதில்லை. அவள் இன்னும் 4-30 மணிக்கே எழுந்துவிடுவாள். வீட்டில் வேலைக்காரி இருந்தாலும் இளம் பிராயத்தில் செய்த மாதிரி தானே வீட்டுவாசலில் தண்ணீர் தெளித்துக் கோலம் போடுவாள். வெளிச்சம் நன்றாக வந்தவுடன் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து இரண்டு தோட்டக்காரர்களுக்கும் விரிவான ஏவல்களை இடுவாள். அவர்கள் அவள் சொன்னபடி நடக்காவிட்டாலும் சும்மா இருந்தாலும் அவளுக்குக் கோபம் வந்துவிடும்; ''இந்த நாலு நாளாக இந்தப் பாத்தியைக் கொத்தச் சொல்கிறேன்; நீங்கள் கொத்தவில்லை; ஏன்?'' என்று பொங்குவாள். அவர்கள் பேசமாட்டார்கள். ''நீங்கள் ஊமைகளா? ஏன் பதில் சொல்லாமல் இருக்கிறீர்கள்?'' என்று அவள் மேலும் கேட்பாள். அவர்களோ வாயையே திறக்கமாட்டார்கள். அவளோ சீறுவாள்.

ஆனால் அவர்களில் யாராவது நோயாகப் படுத்துவிட்டால் அவனைக் காரில் ஏற்றித் தானே டாக்டரிடம் அழைத்துச் செல்வாள். சாரதி இல்லாவிட்டால் தானே காரை ஓட்டிச் செல்வாள். அவர்களுடைய அசௌக்கியத்தைப் பற்றிப் பிரமாதப்படுத்துவாள்; சமையலறையிலிருந்து அவர்களுக்குக் கஞ்சி போகும். சுடச்சுடக் காபியை அனுப்புவாள். அவளுடைய உயர்ந்த பண்புகளைக் கண்டு ஒரு பக்கம் வியப்பும், ஓய்வெடுத்துக்கொள்ளாமல் இருப்பதைக் கண்டு ஒரு பக்கம் வருத்தமும் கிருஷ்ணகுமாருக்கு உண்டாகும்.

ஒரு நாள் பிற்பகல் ஐந்து மணிக்கு அவர் கச்சேரியிலிருந்து வந்தபோது

உங்களுக்கு பணி புரிய இரட்டையர்

LUCAS-TVS

LUCAS
INDIAN SERVICE

லூகாஸ் - டிவிஎஸ்
தரமான
மின் உறுப்புகளை
தயாரிக்கிறது

லூகாஸ் இந்தியன்
ஸர்விஸ் அத் தரத்தை
பாதுகாக்கிறது

லூகாஸ் - டிவிஎஸ் லிமிடெட்
பாடி, மதராஸ் 50.
லூகாஸ் இந்தியன் சர்விஸ் லிமிடெட்
மதராஸ் - பம்பாய் - கல்கத்தா.

LTVS-5333

அவள் தான் வெளியிலே போவதற்கவும் நேரங் கழித்து வரலாமென்றும் சொன்னுள்.

''எங்கே போகிருய்?'' என்று கேட்டார் அவர்.

''போகிறபோது எங்கே போகிருய் என்று கேட்கக் கூடாது. அது அபசகுனம்'' என்று பதில் வந்தது.

பாதிராத்திரி வரையில் அவள் வரவில்லை. வந்தபோது அவள் கண்கள் ஒளி வீசின. ''ஆகா! எவ்வளவு அற்புதமாக இருந்தது!'' என்று உற்சாகத்துடன் கூறினுள்; ''என்ன தெரியுமா? அந்தச் சுவாமிகளின் கையிலே ஒன்றும் இல்லை; உண்மையில் வெறும் கைகளாக இருந்தன. ஆனுல் அந்தக் கைகளிலிருந்து விபூதி வந்தது; சில பூக்கள் வந்தன; இந்த வெள்ளி விக்கிரகம் வந்தது. விக்கிரகத்தை எனக்குக் கொடுத்தார். இதோ பாருங்கள்.'' அதைப் பெருமிதத்துடன் அவருக்குக் காட்டினுள்.

அவர் சொன்னுர்: ''அவர் போலிச் சித்தராக இருக்கக் கூடும். அவர் அப்படித்தான் இருப்பவர் என்று சொல்ல வரவில்லை. இம்மாதிரி காரியங்கள் நடப்பதைப் பலரும் அறிவார்கள். இத்தகைய அற்புதங்களைப் பெரிய ஞானிகள் செய்கிறதில்லை. மகாஞகிய ராமகிருஷ்ண பரமஹம்சர் இப்படி ஒன்றும் செய்யவில்லை. ரமண மகரிஷியும் செய்யவில்லை. ஆன்மிக விஷயத்தில் கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் செய்யும் சாதாரணச் செப்பிடு வித்தைகள் இவை. ஆன்மிக வளர்ச்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. வெறும் வெளியிலிருந்து சாமான்களை வருவிக்கும் ஒரு பையனைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; பணத்தை மோசம் பண்ணினுனென்ற குற்றத்துக்காக அவன் சிறைக்குப் போனுன்.''

''இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் நீங்கள் இழிவாகப் பேசுகிறீர்கள். நீங்கள் கொஞ்சம் விநயமாக இருக்க வேண்டும்'' என்று அவள் எதிர்மொழி கூறினுள்.

அவள் தன் குடும்பத்தைப் பற்றிப் பெருமையாக எண்ணினுள். கலைத்திறமை அவளிடம் இருந்தது. அவள் வீட்டில் செய்த அலங்காரங்கள் கண்ணுக்கு விருந்தாக அமைந்திருந்தன. ஆனுல் அவற்றிற்காக அவள் அதிக நேரம் செலவழித்தாள். ஒரு பித்தளை விளக்குக்காக அவள் பல நாட்கள் செலவழித்தாள். கடைக்காரரிடம் தன்னை நம்பி அதைக் கொடுக்கும்படி சொல்லி வாங்கி வந்து, அதை வெவ்வேறு மூலையில் வைத்துப் பார்த்துக் கடைசியில் இன்ன இடத்தில் இருக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தாள். தச்சனையும் கொல்லத்துக்காரனையும் அழைத்து வந்து அதற்கு ஒரு புரை செய்யச் சொன்னுள். அவர்கள் செய்ததைக் கண்டு அவளுக்குத் திருப்தி உண்டாகவே இல்லை. மறுபடியும் எல்லாவற்றையும் மாற்றி அமைக்கச் சொன்னுள். வேலை முடிந்த பிறகு கிருஷ்ணகுமாரிடம், ''எப்படி இருக்கிறது? உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டாள்.

''எல்லாம் சரியாக இருப்பதாகத்தான் படுகிறது'' என்று மேலெழுந்தவாரியாகச் சொன்னுர்.

அதைக் கண்டு அவளுக்குக் கோபம் மூண்டது. ''இங்கே நான் ராத்திரியும் பகலுமாக இந்த விளக்கை எப்படி வைத்தால் நன்ருக இருக்கும் என்று யோசித்துக்கொண்டும், தச்சனிடமும் கொல்லத்துக்காரனிடமும் முட்டிக்கொண்டும் இருக்கிறேன். இவ்வளவும் உங்களுக்காகச் செய்கிறேன். நீங்களோ இதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படுகிறவர்களாகத் தோன்றவில்லையே! என்னுடைய முயற்சிகளை நீங்கள் பாராட்டவே இல்லையே!''

அவர் அலுப்புடன், ''நான் பாராட்டுகிறேன், சகுந்தலா'' என்று சொல்லி மேலும் தொடர்ந்தார்; ''விஷயம் என்னவென்ருல் இது மிகவும் வசதியான வீடு; சுகமான வீடு; பண்டங்களை மாற்றி வைக்கும் விஷயத்தில் நீ ஏன் காலத்தையும் சக்தியையும் வீணடிக்கிருய் என்று தெரியவில்லை. அவை இருக்கிறபடியே இருப்பதில் நான் முழுமையான திருப்தி அடைகிறேன். நீ ஏன் கோபித்துக்கொள்கிருய் என்று எனக்குப் புரியவில்லை.''

அவள் சொன்னுள்: ''கோபம் கொள்வதில் என்ன தவறு என்று எனக்குத் தெரியவில்லை. இந்த உலகமே கோபத்திலிருந்து தோன்றியது தான். தெய்வங்கள்கூடக் கோபம் அடைகின்றன. எத்தனை மகரிஷிகள் கோபம் அடைந்து சாபங்கள் இட்டிருக்கிருர்கள்!''

கிருஷ்ணகுமாரிடம் பெண் ஒருத்தி விவாகரத்து வழக்கு ஒன்றில் கணவனுக்கு எதிராகத் தன் சார்பில் வாதிட விரும்பினுள். அவள் சகுந்தலாவைப் போல இல்லாவிட்டாலும் பார்க்க அழகாகவே இருந்தாள். அவள் அழகு வேறு ஒரு வகையானது. அந்த வழக்கே மட்ட ரகமானது; அவளைப்பற்றி நல்ல எண்ணம் உண்டாக்கும்படி இல்லை. ஆனுலும் அவர் அவளைப் பற்றிக் கற்பனை செய்து பார்ப்பார். அவளைத் தாம் மணந்திருந்தால் எத்தனை விசித்திரமாக இருந்திருக்கும் என்று எண்ணுவார். இப்படி எண்ணினுரோ இல்லையோ உடனே சகுந்தலாவை நினைத்து, அவளால் கிடைக்கும் ஆனந்த மயக்கத்தையும் எண்ணுவார். அவளை அவர் அணைய வேண்டுமென்று எண்ணிய பல சமயங்களில் அவள் மிகவும் அலுத்திருப்பாள். ஆனுல் அத்தகைய சமயங்களிலும் அவள் தடைசொல்வதில்லை. மாருக அவள் தூங்கவேண்டுமென்று விரும்பினுலும் தன் அலுப்பை மீறிப் புன்னகை பூப்பாள்; அவருடன் இன்பத்தில் ஒன்றி விட்டவளாக அவரை உணரச் செய்வாள்.

நாளடைவில் ஸுநீதாவுக்குக் கல்யாணம் ஆயிற்று. பழைய சம்பிரதாயப்படியே எல்லாச் சடங்குகளும் செய்ய வேண்டுமென்று சகுந்தலா வற்புறுத்தினுள். ராத்திரியும் பகலுமாக உழைத்தாள். அவள் எப்போது படுக்கிருள்; எப்போது எழுகிருள் என்பதே கிருஷ்ணகுமாருக்குத் தெரியாது. நாளைக்கு இரண்டு மணி நேரமே தூங்கியிருப்பாள்; இப்படி ஏழு நாள் இருந்தாள். ஏழைகளாகிய உறவினர்களை நன்ருகக் கவனிக்க வேண்டும் என்பதில் அவளுக்கு அதிக அக்கறை.

பிறகுதான், அவர் பயந்தபடியே அது நிகழ்ந்தது. ஒரு நாள் இரவு ஒரு மணி இருக்கும்; அவள் படுக்கையருகில் வந்து அவரை எழுப்பினுள். ''எனக்கு அசாத்தியக் களைப்பாக இருக்கிறது'' என்ருள். அவருக்குத் தூக்க மயக்கம்; ''எப்போதும் அப்படித்தானே?'' என்ருர். ''ஆனுல் இப்போது வேறு வகையான களைப்பாக இருக்கிறது. எங்கேயோ பெரிய சூனியத்தில் ஆழ்வதுபோல உணர்கிறேன். உங்களைக் கவனித்துக் கொள்ளுங்கள். நீங்கள் மாத்திரைகளை ஒழுங்காகச் சாப்பிடுகிறதே இல்லை; சில சமயங்களில் சாப்பிடாமலே விட்டு விடுகிறீர்கள்.'' அவள் கொட்டாவி விட்டாள்; ''நாம் மலையிலிருந்து கொண்டுவந்த பூச்செடிகளை அந்த முட்டாள் தோட்டக்காரன் தவருன இடத்தில் நட்டிருக்கிருன்.'' அவள் நெடிய உடம்பு அவரை நெருங்கியது; அவரைக் கட்டியணைத்தாள்; ''நான் மிகவும் அதிருஷ்டக்காரி. நீங்கள் எனக்கு நல்லவராக இருந்தீர்கள். சுமங்கலியாகப் போவதில் எனக்கு மிகவும் சந்தோஷம்.'' அவள் பெருமூச்சு விட்டாள். சில நிமிஷங்களில் அவள் உடம்பு ஜில்லிட்டுப் போனதை உணர்ந்தார். அவள் இறந்துவிட்டாள் என்று தெரிந்தது.

5

இப்போது நாடி கிரந்தத்தை வைத்திருக்கும் பண்டிதரிடம் அவரே போனுர். அவள் போன பல மாதங்களுக்குப் பிறகு அவருக்குள் ஒரு போராட்டம் எழுந்தது; அவளிடம் இன்னும் நயமாக நடந்துகொண்டிருக்கலாமே, அவளை நன்ருகப் புரிந்துகொண்டிருக்கலாமே என்று எண்ணி அங்கலாய்த்தார். பிறகு ஒரு நாள் பண்டிதரிடம் போய் அவளுடைய ஜாதகத்தைப் பற்றிய விவரங்களைச் சொன்னுர். சிறிது முயற்சி செய்த பிறகு பண்டிதர் ஜாதகத்தைக் கண்டுபிடித்துப் பலன்களைப் படித்து மொழிபெயர்த்துக் கொண்டே போனுர். என்ன ஆச்சரியம்! அவர் சொன்னவை எல்லாம் அப்படி அப்படியே உண்மையாக இருந்தன; அவள் வளமான குடும்பத்தில் பிறந்தது, அவள் தகப்பனுர் வறுமை அடைந்தது, சிறுபிராயத்தில் அவள் கஷ்டப்பட்டது, கல்யாணமான பிறகு சுகப்பட்டது, பிறகு உண்டான இன்னல்கள் எல்லாம் படித்தார். ''கடைசியில் இன்ன சமயத்தில் மிகவும் கடுமையான நோய் வருமென்று தெரிகிறது!'' என்று சொல்லி, அவள் இறந்து போன காலத்தைக் குறிப்பிட்டார்.

''இன்ன இன்ன சாந்தியைச் செய்தால் இந்த நோயினின்றும் மீளலாம். அதற்கு ஆயிர ரூபாய் செலவாகும்'' என்ருர்.

கிருஷ்ணகுமார் கோபத்துடன் அந்த அழுக்கடைந்த அறையிலிருந்து போவதைக் கண்டு பண்டிதர் ஆச்சரியப்பட்டார். அவர் கிருஷ்ணகுமாரை அழைத்து, ''இந்த ஜாதகத்தில் இன்னுமோர் அசாதாரணமான அம்சம் ஒன்றைக் காண்கிறேன். இந்த ஜாதகருக்குப் புனர்ஜன்மமே கிடையாது'' என்ருர். ★


G.K.Murthy

ONLY A FEATHER TOUCH
THE CAR COMES TO A DEAD STOP

FIT
SURESTOP

THE RELIABLE POWER BRAKE

Unconditionally **GUARANTEED** *for* **ONE YEAR**

Busy roads mean a busy right foot,
bring a need for SURESTOP braking.
Only light pedal pressure is needed,
making car handling far less tiring.
The fresher you stay the safer you are

SURESTOP
FEATHERLIGHT
BRAKING BY ROOTS

Manufacturers:
AMERICAN AUTO SERVICE
Ganapathy • Coimbatore-6
Phone: 22030 • Grams: ROOTS

AAS 487

மக்கள் மகிழ்ச்சியே
எங்கள் மகிழ்ச்சி

எங்கள்
மனமார்ந்த
தீபாவளி
வாழ்த்துக்கள்

பாங்க் ஆப்
மதுரை லிட்

—வைரவன

அறிந்தும் புரியாதது

கி.வா.ஜகந்நாதன்

"இந்தப் பெண்பிள்ளைகளுக்கெல்லாம் அறிவே கிடையாது. கையில் கொஞ்சம் காசு இருந்தால் போதும்; அங்கே போகலாம், இங்கே போகலாம் என்று கிளம்பிவிடுகிருர்கள்.''

இவ்வாறு சொல்லிக்கொண்டு வந்தார் சங்கரன். ஒவ்வொரு நாளும் ஒரு முறையாவது அவருக்கு என்னைப் பாராவிட்டால் சரிவராது; எனக்கும் அப்படித்தான்.

அவர் யாரைப்பற்றிச் சொல்கிருர் என்று தெரியவில்லை. நிச்சயமாகத் தம்முடைய மனைவியைப்பற்றி அப்படிச் சொல்லியிருக்க மாட்டார். அவர் அரைமணி நேரம் என்னுடன் பேசிக்கொண்டிருந்தால் அதில் ஐந்து நிமிஷமாவது அவருடைய மனைவியைப் பற்றியதாக இருக்கும். அவளுடைய பொறுமையையும், எதற்கும் சலிக்காத இயல்பையும், இது வேண்டும் அது வேண்டும் என்று கேளாத தன்மையையும் எடுத்துச் சொல்வார். மற்றக் குணங்களெல்லாம் இருக்கட்டும். 'எனக்கு அந்தப் புடைவை வேண்டும்; இந்த நகை வேண்டும்; இந்தப் பாத்திரம் வேண்டும்' என்று ஆசைப்படாத பெண்மணி ஒருத்தி இருந்தால் அவளைக் கோவிலிலே வைத்துக் கும்பிடலாமே. ''என்னைவிட எங்கள் பார்வதி எவ்வளவோ சாமர்த்தியசாலி'' என்று அவர் பெருமைப் பட்டுக்கொள்ளும் போது, அவருடைய வாழ்க்கையில் நிம்மதி பெற்று வாழ்வதில் என்ன வியப்பு இருக்கப் போகிறது?

அத்தகையவர் இப்போது தம் மனைவியைக் குறை கூறுவாரா? ''யாரைச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டேன்; ''உங்கள் மனைவியைச் சொல்ல நியாயம் இல்லை'' என்று சொல்லிப் புன்னகை பூத்தேன்.

மனைவியைப்பற்றிச் சொன்னவுடனே அவருக்கிருந்த கோபம் போய்விட்டது; சிரித்தபடியே, ''சே,சே! அவளைச் சொல்லுவேனு?'' என்ருர்.

''பின்னே யார் அந்தப் பெண் பிள்ளை?''

''என் தங்கையைத்தான் சொல்கிறேன். அவள் இங்கே வந்திருக்கிருள். சிதம்பரம் போகிருளாம். பிறகு எங்கெங்கோ ஸ்தல தரிசனம் செய்யப் போகிருளாம்.''

''போனுல் உங்களுக்கு என்ன?''

''என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? அந்தக் குடும்பத்தையே முன்னுக்குக் கொண்டு வந்தவன் நான். அவளுக்குக் கல்யாணம் செய்தது, அவள் குழந்தைகளை வளர்த்தது எல்லாம் நான்தான். இரண்டு குழந்தைகளைப் பெற்றபிறகு அவள் கணவர் காசியோ கேதாரமோ போய்விட்டார். திரும்பவே இல்லை. அவளுடைய பெண்ணை என் தம்பிக்குக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன். பிள்ளையைப் படிக்க வைத்து வேலை வாங்கித் தந்தேன்.''

''அதெல்லாம் சரி; அந்தக் குடும்பத்துக்கு நல்லதைச் செய்திருக்கும் நீங்கள் உங்கள் தங்கை விரும்புவதை நிறைவேற்றுவதுதானே முறை?'' என்று கேட்டேன்.

''அவளிடமே பணம் இருக்கிறது. நான் ஒன்றும் உதவ வேண்டாம்.''

''அப்படி இருக்கும்போது எதற்காக அவளுடைய ஸ்தல யாத்திரைக்கு முட்டுக்கட்டை போட வேண்டும்?'' என்று கேட்டேன்.

அவர் ஒரு சிட்டிகை பொடியை எடுத்து உறிஞ்சினுர். பிறகு, ''நான் சொல்கிறேன், கேளுங்கள்'' என்று நிமிர்ந்து பேசத் தொடங்கினுர்.

''நீங்கள் அவளைப் பார்த்தால் தெரியும், என் கோபத்துக்குக் காரணம். நாலடி அவளால் நடக்க முடியாது. இரண்டு காலும் பூமியில் சரியாகப் பாவுகிறதில்லை. தள்ளாடித் தள்ளாடி நடக்கிருள். இந்த உடம்போடு ஸ்தல யாத்திரை என்ன வேண்டிக் கிடக்கிறது? அது மட்டும் அல்ல. அங்கே இவளுடைய பையன் நன்ருகச் சம்பாதிக்கிருன். அவனுக்குச் சிறிது உடம்பும் சரியில்லை. ஒரு கைக் குழந்தை. அவர்களோடிருந்து ஏதோ தன்னுலான உதவியைச் செய்துகொண்டு வேளைக்குச் சாப்பிட்டுக்கொண்டு, அக்கடா என்று விழுந்து கிடக்கக்கூடாதா?''

''ஒருகால் மருமகளைப் பிடிக்கவில்லையோ, என்னவோ?''

''மருமகளைப் பிடிக்காவிட்டால் பெண் இருக்கிருள்; என் தம்பி மனைவி. அங்கே சௌக்கியமாக இருக்கலாம். எங்கும் நிலையாகத் தங்குகிறதில்லை. இவளுடைய பிள்ளை மிகவும் நல்லவன். என் மருமான் தானே? நான் வளர்த்தவன்தானே? அவன் எவ்வளவோ சொல்லிப் பார்க்கிருன். இவள் சேர்ந்தாற் போல் ஒரு மாதம் தங்குவதில்லை.''

அவர் பேசுவதைக் கேட்டால் ஒரு விதத்தில் நியாயமாகப் பட்டாலும் இவ்வளவு ஆத்திரம் ஏன் இவருக்கு வருகிறது என்றே எண்ணினேன்.

அந்த அம்மாள் எங்கள் வீட்டுக்கு வந்தாள். தள்ளாடித் தள்ளாடித்தான் நடந்து வந்தாள். என் மனைவியோடு பேசிக்கொண்டிருந்தாள். அவளுடைய பேச்சில் அவளுடைய மனோ தைரியம் தெரிந்தது. ''அண்ணுவைப் பார்த்துவிட்டுச் சிதம்பரம் போகலாம் என்று வந்திருக்கிறேன்'' என்ருள்.

''சிதம்பரத்தில் உங்கள் சொந்தக்காரர் இருக்கிருர்களா?'' என்று என் மனைவி கேட்டாள்.

''நடராஜாதான் சொந்தக்காரர். ஏதோ தெரிந்தவர்கள் வீட்டில் தங்குவேன்'' என்ருள் அந்த அம்மாள்; பிறகு, ''தெரிந்தவர்கள் என்ருல் அக்கா தங்கை போலப் பழகுகிறவர்கள்'' என்று விளக்கினுள்.

மறுநாள் சங்கரன் வந்தார். ''சிதம்பரத்தில் ஒருவரும் உறவு இல்லையாமே!'' என்று அவர் வாயைக் கிண்டினேன்.

''உறவாவது கிறவாவது! இவள் போய் யார் வீட்டிலேயாவது தங்கி அவர்களைத் தொந்தரவு படுத்தப்

போகிருள். எனக்காக அவர்கள் தாட்சிண்யம் பார்ப்பார்கள். எங்கள் ஊர் சிதம்பரந்தானே?''

மறுபடியும் அவர் ஒரு பாட்டம் தம் தங்கையைப் பற்றி ஆரம்பித்துவிடக் கூடாதென்று பேச்சை மாற்றினேன்.

சங்கரன் பம்பாயில் பெரிய உத்தியோகத்தில் இருந்தவர். மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கினவர். அவர் தம்பி அங்கேதான் உத்தியோகம் பார்க்கிருர். அவ்விருவரும் இலக்கியத்தில் பிரியம் உடையவர்கள். நன்ருகப் பேசுவார்கள். பம்பாய் போனுல் அவர் வீட்டில்தான் தங்குவேன்.

அவருக்கு ஒரே பிள்ளை. அவனுக்கு இன்னும் படிப்புப் பூர்த்தியாகவில்லை. பக்தி, உபாசனை, சமய உணர்வு எல்லாம் உடையவர் சங்கரன். நாள்தோறும் பூஜை செய்கிறவர். வேலையினின்றும் ஓய்வு பெற்றபிறகு சென்னைக்கு வந்து ஒரு வீடு எடுத்துக்கொண்டு வாழ்ந்து வந்தார். வந்து இரண்டு ஆண்டுகளே ஆயின. இங்குள்ள கோவில், குளம், பஜனை எல்லாம் அவருக்குப் பிடித்திருந்தன. பிறருடைய கையை எதிர்பாராமல் தம் வருவாயைச் சேமித்து அதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டே குடும்பத்தை நடத்தி வந்தார். எதையும் ஒளிமறைவில்லாமல் பேசிவிடுவார்.

''ஒருவிதமாக என் தங்கையை அனுப்பிவிட்டேன்'' என்று சொல்லிக்கொண்டே வந்தார் அவர்.

''எங்கே, பம்பாய்க்கா? சிதம்பரத்துக்கா?''

''சிதம்பரத்துக்குத்தான். நான் கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்; இந்த வயசில் இப்படியெல்லாம் அலையக் கூடாதென்று; சற்றுக் கடுமையாகவே பேசினேன். அவள் காதில் வாங்கிக் கொண்டால்தானே? அறிவில்லாத ஜன்மங்கள்!'' உதட்டைப் பிதுக்கிக்கொண்டு அவர் சொல்லும்போது அவர் உள்ளத்திலே இருந்த வெறுப்புத் தெளிவாகத் தெரிந்தது.

இப்போதும் பேச்சை மாற்றினேன். அந்தச் சமயம் ஏதோ ஒரு பூனை அங்கே ஓடியது. அதைக் கண்டவுடன் அவர், ''நீங்கள் பூனை வளர்க்கிறீர்களா?'' என்று கேட்டார்.

''எந்தப் பிராணியையும் வளர்க்க எனக்கு ஆசை இல்லை'' என்றேன்.

''எனக்கும் அப்படித்தான். ஆனல் எங்கள் கல்யாணத்துக்காகப் பார்க்க வேண்டியிருக்கிறது.''

கல்யாணம் என்றது அவர் பிள்ளையை. அவனுக்காக அவர் எதை வேண்டுமானுலும் செய்வார்.

''உங்களுக்கு இப்போது ஏதாவது வேலை இருக்கிறதா?'' என்று சங்கரன் கேட்டார்.

''ஒன்றும் இல்லை.''

''அப்படியானுல் எங்கள் வீட்டளவும் வாருங்கள். அங்கே வந்து பாருங்கள்'' என்று அழைத்தார். அவர் வீடு அடுத்த தெருவில்தான் இருந்தது. அங்கே போனேன்.

அங்கே அவருடைய பிள்ளை பூனை ஒன்றைக் கொஞ்சிக்கொண்டிருந்தான். உள்ளே நுழையும்போதே, ''எங்கே, குண்டம்மா வரவில்லையா?'' என்று கேட்டபடியே நுழைந்தார்.

''குட்டியம்மாதான் வந்திருக்கிறது. குண்டம்மா இன்னும் கொஞ்ச நாழிகையில் வந்து விடும்'' என்று கூறினுன் பையன்.

''இதென்ன குட்டியம்மா, குண்டம்மா?'' என்று வியப்புடன் கேட்டேன்.

''அதைக் காட்டத்தான் உங்களை அழைத்து வந்தேன். இந்தப் பூனைக்குக் குட்டியம்மா என்று பேர். கல்யாணத்துக்கு இது செல்லம். அதோ, அதோ, வருகிறது பாருங்கள், அதுதான் குண்டம்மா.''

முன் இருந்ததைவிடச் சற்றே பெரிய பூனை ஒன்று உள்ளே நுழைந்தது. சங்கரன் உள்ளே இருந்து பிஸ்கோத்துக்களைக் கொண்டு வந்து இரண்டு பூனைகளுக்கும் போட்டார். அவை கறமுறவென்று அவற்றைத் தின்றன.

''இந்தப் பூனைகளுக்கு எத்தனை நாகரிகம் தெரியுமோ? பழையது போட்டால் தின்கிறதில்லை. அன்றன்று சமைத்துப் போட வேண்டியிருக்கிறது!'' என்று மகிழ்ச்சியுடன் சொன்னுர்.

''என்ன பார்வதி, ஸார் வந்திருக்கிருர்; பார்க்கவில்லையோ?'' என்று தம் மனைவியை அழைத்தார். அவள் வந்து, ''வாருங்கள்'' என்ருள்.

''பூனைக் குடும்பம் வந்திருக்கிறது போல் இருக்கிறது!'' என்றேன்.

''ஆமாம்; ஏதோ நாம் சாப்பிடுவதில் துளி அவற்றிற்கும் போடுகிறேம். பூனை ஆனுலும் என்ன அறிவு தெரியுமோ? சமையலறைக்குள் வருகிறதே இல்லை. ஒரு நாள் அதட்டினேன். அதிலிருந்து அதற்குத் தெரிந்துவிட்டது, உள்ளே போகக் கூடாதென்று'' என்ருள்,

''ஊருக்குப் போய் உங்கள் நாத்தனார் கடிதம் போட்டாளா?'' என்று அந்த அம்மாளைச் சும்மா கேட்டுவைத்தேன்.

அவள் பதில் சொல்வதற்குள் சங்கரன் முந்திக்கொண்டார்; ''அவளாவது கடிதம் போடுகிறதாவது! ஏதாவது சங்கடம் வந்தால் போடுவாள். அப்படிப் போட்டாலும் நான் பதில் எழுதப் போகிறதில்லை. எக்கேடு கெட்டுப் போனாலும் போகட்டும்.''

''இந்தப் பூனை கர்ப்பமாக இருக்கிறது போலிருக்கிறதே!'' என்று சிறிய பூனையைச் சுட்டிக் காட்டினேன்.

''ஆமாம்; அதற்குப் பிரசவ காலந்தான். பிரசவத்துக்கு அதோ ரேழியில் படுக்கையெல்லாம் தயார் பண்ணி வைத்திருக்கிறேன். பாவம்! அது எங்கே போகும்?''

நான் மறுபடியும் அவர் வாயைக் கிளறினேன். ''உங்கள் தங்கைக்கு அங்கே உடம்பு சரியில்லாமல் போனால் யார் கவனித்துக் கொள்வார்கள்?''

''சீரழியட்டுமே! பம்பாயில் சௌக்கியமாக இருப்பதை விட்டுவிட்டு ஊரார் கழுத்தை அறுக்கப் போயிருக்கிறாள். உடம்புக்கு வரவேண்டும்; அல்லற்பட வேண்டும் என்றே நடராஜாவைப் பிரார்த்திக்கிறேன்.''

''பூனைக்குப் பால் வைத்தாகிவிட்டதோ?'' என்று கல்யாணம் கேட்டான்.

''இன்னும் அரைமணி போகவேண்டும்..ஸார், இந்தப் பூனைக்காக நான் அரை லிட்டர் பால் வாங்குகிறேன். இந்தப் பூனை குட்டி போட்டால் கொஞ்சம் கூட வாங்க வேண்டியிருக்கும்.''

அவர் எதிலும் கணக்குப் பார்க்கிறவர். ஒவ்வொரு மாதமும் 'பட்ஜெட்' போடுவார். அதன்படியே செலவழிப்பார். ஏதாவது கூடுதலாகிவிட்டால், வேறு எதையாவது குறைத்துக் கொள்வார்; அல்லது வட்டிப் பணத்தில் சிறிது அதிகம் எடுத்துச் செலவு செய்வார். எதையும் குறைக்கமாட்டார்; அநாவசியமாகக் கூட்டவும் மாட்டார்.

பூஜைக்கு இவ்வளவு பால், பூனைக்கு இவ்வளவு பால், காபிக்கு இவ்வளவு பால், தயிருக்கு இவ்வளவு பால் என்று திட்டமாகக் கணக்குப் போட்டு வாங்குவார். விருந்தாளிகள் வந்தால் அதற்கும் கணக்கு உண்டு. அப்படிக் கணக்காக வாழ்ந்ததனால்தான் இப்போது சுகமாக இருக்கிறார்.

பூனை குட்டி போட்டுவிட்டது. நான் போன அன்று அதைக் காட்டினார். ''வெள்ளை வெளேரென்று எவ்

நகை நட்டுமாய் இன்றுபோல் என்றும்
அனைவரும் மகிழ்ச்சியாய் இருக்கவேண்டும்
என்பதே எங்கள் தீபாவளி பிரார்த்தனை!
சோட்டாபாய் & கம்பெனி
அரசினர் அங்கீகாரம் பெற்ற மதிப்பாளர்கள்
தங்க, வைர நகை வியாபாரிகள்
(ஏர்கண்டிஷண்ட் ஷோரும்)
191, நேதாஜி போஸ் ரோடு, சென்னை-1. போன் 32024.
chari

வளவு அழகாக இருக்கிறது, பாருங்கள்!'' என்றார். ''இதில் ஓர் அதிருஷ்டம் பாருங்கள். இந்தக் குட்டி ஆண்குட்டி'' என்று கூறினார்.

அவர் என்ன எண்ணி இப்படிச் சொல்கிறார் என்று எனக்கு விளங்கவில்லை. அவர் முகத்தைப் பார்த்தேன். ''பெண்குட்டியாக இருந்தால் அது பெரிதாகிக் குட்டி போடும். குடும்பம் பெரிதாகும். பெரிய தொல்லை அல்லவா?'' என்று விளக்கினார்.

ஆண்பூனையைச் சுற்றிக் குட்டிகள் அலைவதில்லையே!

அப்போது தபால்காரன் வந்து ஒரு கார்டை வீசிவிட்டுப் போனான். பையன் அதை எடுத்தான். ''யார் எழுதியிருக்கிறார்கள்?'' என்றார் சங்கரன். ''அத்தைதான்'' என்று பதில் வந்தது.

''அதைக் கிழித்துப்போடு. உடம்பு கிடம்பு சரியில்லையோ? இது ஒன்று வந்து கழுத்தை அறுக்கிறது... என்ன எழுதியிருக்கிறாள்?.......அப்போதே சொன்னேன், போகாதே என்று. இப்போது அங்கே போய் ஊராருக்குச் சுமையாய் உடம்போடு கிடந்தால் யார் கவனிப்பார்கள்? கர்மம்! கர்மம்!''

''அத்தை கும்பகோணம் போகிறாளாம்!'' பையன் சொன்னான்.

''குசாலாப் போகட்டும்; பூப்பிரதட்சிணமே பண்ணட்டும். வையாளிக் குதிரை! எங்கே வேண்டுமானாலும் சுற்றலாம் அல்லவா?''

நான் மேலே அவர் பேச்சைக் கேட்க மனம் இல்லாமல் விடை பெற்றுக்கொண்டேன்.

சில நாள் கழித்துச் சங்கரன் வந்தார். அவர் முகம் வாட்டமாக இருந்தது. ''என்ன சங்கதி? உங்கள் தங்கை சௌக்கியமாகத்தானே இருக்கிறாள்?'' என்றேன்.

''அவளுக்கு என்ன கேடு?'' என்று சொல்லிவிட்டுத் தாழ்ந்த குரலில் பேசத் தொடங்கினார்: ''அன்றைக்குக் குண்டம்மாவைப் பார்த்தீர்களே! அதற்கு இப்போது உடம்பு சரியில்லை. முன்புபோல வெளியிலே போகிறதில்லை. எப்போதும் படுத்துக்கொண்டே கிடக்கிறது. எதையும் தின்னமாட்டேன் என்கிறது. வாயெல்லாம் புண்ணாக இருக்கும் போலிருக்கிறது. அதற்கு என்ன சங்கடமோ! வாய்விட்டுச் சொல்லவா தெரிகிறது? நம்மால் என்ன செய்ய முடியும்?''

அவர் குரலில் துயரம் ஒலித்தது. நான்கு நாள் கழித்துக் குண்டம்மா இறந்து போயிற்று. அந்தச் செய்தியை அவர் வந்து சொன்னார்.

''பேசாமல் படுத்துக்கொண்டே இருந்தது. கண்ணை மூடிக்கொண்டிருந்தது. குண்டம்மா என்று கூப்பிட்டால் ஹூம் என்று ஒரு சிறிய ஒலியை எழுப்பியது. அதைத் தொட்டாலும் அந்த ஒலி உண்டாயிற்று. பிறகு.... இன்று பிற்பகல் மூன்று மணிக்கு உயிரை விட்டுவிட்டது. அதற்காக யார் அழப்போகிறார்கள்? வாயில்லாப் பிராணி....''—இப்படிச் சொன்னவர் அழுதேவிட்டார். ''தோட்டத்தில் ஒரு குழி தோண்டி அதில் புதைத்துவிட்டேன். மேலே நாலு பூவைப் போட்டு, 'ஆண்டவனே, இதற்கு நல்ல ஜன்மமாகக் கொடு' என்று வேண்டிக் கொண்டேன்.''

நெருங்கின சொந்தக்காரரை இழந்த துயரம் அவர் குரலில் இருந்தது.

'இந்தச் சங்கரன்தாமா தங்கையிடம் சீறி விழுகிறார்?' என்ற எண்ணம் என் உள்ளத்தே தோன்றியது. கடவுள் பக்தர்; ஜீவகாருண்யம் உடையவர். இவரிடம் இந்த இரட்டை வேஷம் ஏன்? இவர் மனத்தில் என்ன கோளாறு?

அடுத்த வாரம் அவர் தங்கை வந்தாள். தான் போய் வந்த ஊர்களைப் பற்றியும் சுற்றிய கோயில்களைப் பற்றியும் சொன்னாள். அவர் அவற்றைக் காது கொடுத்தே கேட்கவில்லை. அவளோடு சரியாகப் பேசவே இல்லை. இதையெல்லாம் அந்த அம்மாள் என் மனைவியிடம் சொல்லிக் குறைப்பட்டுக் கொண்டாள். ''பிள்ளையிடம் இரு, மாப்பிள்ளையிடம் இரு என்கிறார். இவருக்கு என்ன தெரியும், நான் அங்கே படும் பாடு? எனக்கு எதற்கு ஒருவர் கையை எதிர்பார்க்க வேண்டும்? ஏதோ கொஞ்சம் பணம் இருக்கிறது; வட்டி வருகிறது. அதைக் கொண்டு நான் பிழைத்துக் கொள்கிறேன்'' என்று எடுப்பாகப் பேசினாள் அந்த அம்மாள். இரண்டு நாள் கழித்து அவள் பம்பாய்க்குப் புறப்பட்டுப் போய்விட்டாள்.

சங்கரன் வந்தார். ''உங்கள் தங்கை பம்பாய்க்குப் போய்விட்டாள் போலிருக்கிறதே!'' என்று கேட்டு வைத்தேன்.

''பம்பாய்க்குப் போகட்டும்; லண்டனுக்குத்தான் போகட்டும். அதைப் பற்றி எனக்கு என்ன கவலை?''

என்னைத் தேடிக்கொண்டு யாரோ வந்தார்கள். சங்கரன் எழுந்து சென்றார்.

சில மாதங்களுக்குப் பின். அவர் வீடு சென்றேன். மூன்று புதிய பூனைக் குட்டிகள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. ''என்ன ஸார், குடும்பம் பெருத்துவிட்டதே!'' என்றேன்.

''ஆமாம்; இந்தக் குட்டியம்மாள் மூன்று குட்டிகள் போட்டிருக்கிறது. இரண்டு பெண்குட்டிகள்; ஆண்குட்டி ஒன்று; ஏற்கனவே உள்ள வெள்ளைக் குட்டி வளர்ந்துவிட்டது. இத்தனை சம்சாரத்தையும் வைத்துக்கொண்டு நம்மால் தாங்க முடியாது. 'பட்ஜெட்' வளர்ந்து போகிறது.''

''என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''இன்னும் இந்தக் குட்டிகளுக்கு நாம் வைக்கும் பாலைக் குடிக்கத் தெரியவில்லை. தாய்ப்பாலைத்தான் குடிக்கின்றன. கொஞ்ச நாள் ஆகட்டும். பிறகு எங்கேயாவது குட்டிகளைக் கொண்டு போய் விட்டுவிடச் சொல்லலாம் என்று இருக்கிறேன். இப்போதே விட்டால் தாய்ப்பால் இல்லாமல் செத்துப் போகும். கொஞ்சம் வளர்ந்துவிட்டால் எப்படியாவது பிழைத்துக்கொள்ளும்.''

அவரே ஒரு நாள் வந்து சொன்னார்; ''ஸார், பூனைக் குடும்பம் குறுகிவிட்டது; தாய்ப்பூனை, முதல்பிள்ளை—இவ்வளவுதான். மற்ற மூன்று குட்டிகளையும் வெளியிலே கொண்டுபோய் விட்டுவிடச் சொல்லிவிட்டேன். ஒரு பெரிய பாரம் கழிந்தது'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

''உங்களைப் பார்த்தால் கௌபீன சம்ரட்சணத்துக்காகப் பூனை வளர்த்த சந்நியாசி கதைதான் நினைவுக்கு வருகிறது.''

''ஆமாம். இந்தக் குடும்பம் பெருகினால் அதற்கு எல்லையே இல்லை. உலகத்தில் எத்தனையோ பிராணிகள் திண்டாடுகின்றன. நம்மால் வளர்க்க முடியுமா, என்ன? ஏதோ போனால் போகட்டுமென்று குண்டம்மா, குட்டியம்மாவை வளர்த்தோம். குட்டியம்மாவுக்கு ஆண்குட்டி பிறந்தது; குண்டம்மா செத்துப் போயிற்று. இரண்டோடு நின்றால் பரவாயில்லை. இந்தக் குடும்பம் வளர்ந்துகொண்டே போனால்......?''

பின்னும் ஒரு மாதம் சென்றது. சங்கரனுடைய வீட்டுக்குப் போனேன். என்ன ஆச்சரியம்! சற்று வளர்ந்த அந்த மூன்று குட்டிகளும் அங்கே விளையாடிக்கொண்டிருந்தன. அவற்றோடு சங்கரனின் குடும்பமே விளையாடிக் கொண்டிருந்தது. எனக்கு வியப்புத் தாங்க முடியவில்லை. ''என்ன சங்கரன் இது?'' என்று குரல் கொடுத்தேன்.

''வாருங்கள், வாருங்கள்'' என்று என்னை வரவேற்று உட்காரச் சொன்னார்; ''பார்த்தீர்களா, இந்தக் குட்டிகளை? எவ்வளவு அழகாக இருக்கின்றன!''

''மறுபடியும் உங்களைத் தேடி வந்துவிட்டனவா?'' என்று கேட்டேன்.

அவர் சிரித்துக்கொண்டார்; ''இல்லை; நான்தான் அழைத்து வந்தேன்'' என்றார்.

''எப்படி?''

''இந்தக் குட்டிகளை ஒரு சாக்கில் போட்டு அதோ உள்ள சந்தில் கொண்டுபோய் விடச் சொன்னேன். ஓர் ஆள் கொண்டு போய் விட்டுவிட்டான். தாய்ப்பூனை இருக்கிறதே, குட்டியம்மா, அது அந்தப் பூனைகளைக் கொண்டு வந்து அடுத்த வீட்டுக் கக்குசு மூலையில் வைத்துப் பால் கொடுத்தது. தான் உண்ணும்போது மட்டும் தாய்ப்பூனை இங்கே வரும். பிறகு குட்டிகளை நாடிப் போய்விடும். என்ன அறிவு பாருங்கள்! 'இவர்கள் அவற்றை ஒதுக்கிவிட்டார்கள், இங்கே கொண்டுவரக் கூடாது' என்று தெரிந்திருக்கிறது பாருங்கள்.''

''பின்னே இங்கே எப்படி வந்தன?''

''அந்த வீட்டில் குட்டிகள் இருக்குமிடத்தில் யாராவது போனால் தாய்ப்பூனை உஸ் என்று சீறியது. அதைக் கண்டு பெண்கள் பயப்பட்டார்கள். வீட்டுக்காரர் அவற்றை எடுத்து வெளியிலே போடச் சொல்லிவிட்டார். அதைப் பார்த்தேன். கண்ணராவியாக இருந்தது. தாய்ப்பூனை மலங்க மலங்க விழித்தது. பேசாமல் எங்கள் வீட்டுக்கே எடுத்து வந்துவிட்டேன், பாவம்! அந்தக் குட்டிகளுக்குப் போக்கிடம் ஏது? ஏதோ பூர்வ ஜன்மத் தொடர்பு போல இருக்கிறது. இப்போது எப்படி விளையாடுகின்றன பாருங்கள்!''

அவர் முகத்தில் ஒளி ஏறியது. அவருடைய இரக்கம் நிரம்பிய உள்ளத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. 'இவரா தம் தங்கையிடம் சீறினார்?' என்று உடனே நினைத்தேன். அதற்கு என்ன காரணம்? புரியாதது போலவும் இருக்கிறது; ஒரு வகையில் புரிகிறது போலவும் இருக்கிறது. ★

பிச்சை எடுப்பதும் ஒரு கலை!

"அம்மா! வயிறு பசிக்குதே! பிச்சை போடுங்கள் அம்மா!" என்று கேட்கிறவன் கலப்பில்லாத அப்பட்டமான பிச்சைக்காரன். ஆனால் தனக்குத் துணையாக வாத்தியத்தையோ மாட்டையோ வேறு எதையோ வைத்துக்கொண்டு வீதியில் வருகிறவர்கள் ஒருவகைக் கலைஞர்கள். பிச்சை எடுப்பதிலும் கலையை இணைத்துக் கொள்கிறார்கள்.



அலகுகுத்தி அலங்காரம் பண்ணிக்கொண்ட பெண்களை நடத்திக் கொண்டு பறையடித்துத் தன் தொழிலை நடத்துகிறான் ஒருவன்.

ஒற்றைத் தந்தித் தம்புராவை மீட்டி இனிமையாய்ப் பாடும் கலைஞன் அவன்; ஆனாலும் அவனைப் பிச்சைக்காரன் வரிசையில் தான் நாம் சேர்க்கிறோம்.

"கோவிந்தா! கோவிந்தா!" என்று திருப்பதி வேங்கடேசப் பெருமாளுக்கு உண்டியல் எடுப்பதாக ரோட்டில் உருளும் கலையில் தேர்ந்தவனைப் பக்திமான் என்று நாம் நினைப்பதில்லை; அவனும் பிச்சைக்காரனே.

சங்கு ஊதிச் சேகண்டி தண்டிப் பிழைக்கிறவன் ஒரு பிச்சைக் கலைஞன்.

'பூம் பூம்' என்று தோல் கருவியை முழங்கிக் கொண்டு வரும் பெருமாள் மாட்டுக்காரனும் அந்த வரிசையில் சேர்ந்தவனே.

போட்டோ:
பி. வி. சுப்பிரமணியம், திருச்சி

KEEPING A NATION ON THE MOVE

Many airlines of international repute avail of INDIANOIL's expert refuelling service. In the growth of India's transport and communications, INDIANOIL has been playing a distinct role. But that is not to belittle its contribution to the nation's agriculture and industry. In a short span of a decade, INDIANOIL has emerged as the biggest oil refining and marketing organisation in India—meeting more than half of the nation's total requirements of petroleum products.

With a chain of refineries processing indigenous crude, a vast pipeline transportation system, and a countrywide storage and distribution network, INDIANOIL has ensured an uninterrupted flow of oil for India's defence and development.

As part of the nation's planned development INDIANOIL ceaselessly strives to take the country towards self-reliance and self-sufficiency in petroleum.

INDIANOIL

—a national trust for economic prosperity

INDIAN OIL CORPORATION LIMITED

எமது தீபாவளி
வாழ்த்துக்கள்

இம் மலரிலுள்ள கலர் பிளாக்குகள்
யாவும் எங்களால் செய்யப்பட்டவை.

ஸ்தாபிதம் 1890 போன்: 21902

M. C. அப்பாசாமி செட்டி & கம்பெனி
14, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.

மனைவியை மறந்த கணவன்

நாடோடி

காட்சி 1

[தேவேந்திர சபையில் மேனகை நாட்டியமாடி முடிக்கிறாள். எல்லாரும் கைதட்டி ஆரவாரிக்கிறார்கள்.]

தேவேந்திரன்: மேனகா, இன்று உன் நாட்டியம் மிகச் சிறப்புற்று விளங்கியது. அதற்காக உனக்கு என்ன பரிசு வேண்டும், கேள்!

மேனகை: வெகு நாட்களாகவே உங்களை ஒன்று கேட்கலாமோ, கூடாதோ என்று யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறேன்....

தேவே: தயங்காதே. என்ன வேண்டுமானாலும் கேள்.

மேன: வேறு ஒன்றும் இல்லை. என் பெண் சகுந்தலை....

தேவே: ஆம், உனக்கும் விசுவாமித்திரருக்கும் பிறந்த பெண்; துஷ்யந்த மன்னனை மணந்து, பாரத நாட்டுக்கே தன் பெயரை ஈந்த பரதனை ஈன்றவள்.

மேன: ஆம், அந்தச் சகுந்தலையைப் பற்றிக் கவி காளிதாசர் வெகு அழகான நாடகம் ஒன்று எழுதியிருக்கிறார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதை இங்கே சபையில் நாம் எல்லாரும் கேட்கும்படி தாங்கள் ஏற்பாடு செய்ய முடியுமானால்....

தேவே: பூ, இவ்வளவுதானா? இவ்வளவு சின்ன காரியத்துக்கா இத்தனை தயக்கம்? உடனே ஏற்பாடு செய்கிறேன்.

[ஒரு தேவதூதன் முன்வருகிறான்.]

தேவதூதா, நீ உடனே போய்க் காளிதாசரைப் பார்த்து நாளைச் சபையில் அவர் தம் சாகுந்தலத்தை வாசித்துக் காட்ட வேண்டும் என்று நான் கட்டளையிட்டதாகச் சொல். தேவலோகத்திலுள்ள எல்லாரையும் நான் சபைக்கு வரச் சொன்னதாகச் சொல். சரி, சபை கலையலாம்.

காட்சி 2

[தேவேந்திர சபையில் அடுத்த நாள். காளிதாசர் தம் சாகுந்தல நாடகத்தைப் படித்துக் காட்டிக்கொண்டிருக்கிறார். துஷ்யந்தன் சகுந்தலையை விட்டுப் பிரியும் வரையில் படித்தாகிவிட்டது. அப்பொழுதென்று தேவேந்திர சபைக்குள் துர்வாச முனிவர் நுழைகிறார்.]

தேவே: துர்வாச முனிவரே, வர வேண்டும், வரவேண்டும். ஏன் கால தாமதம் ஆகிவிட்டது? நாடகத்தின் ஆரம்பம் விட்டுப் போச்சே!

துர்வாசர்: பரவாயில்லை, காளிதாசன் தொடர்ந்து படிக்கட்டும். நான் புரிந்துகொள்வேன்.

[காளிதாசர் படிக்காமல் வாயை மூடிக்கொண்டு இருக்கிறார்.]

தேவே: என்ன காளிதாசரே, படிப்பதை நிறுத்திவிட்டீர்களே! தங்கள் நாடகத்தை மேலே கேட்கத் துர்வாசர் மிகவும் ஆவலாக இருக்கிறார்; நாங்களும் ஆவலாக இருக்கிறோம். மேலே படியுங்கள்.

காளி: இல்லை, இத்துடன் இன்று போதும். இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாமே!

தேவே: வெகு அழகாக இருக்கிறதே! துஷ்யந்தனைப் பிரிந்த வருத்தத்தில் சகுந்தலை சோகமாக இருக்கிறாள். இந்தச் சோக கட்டத்திலா நிறுத்துவது? மேலே படியுங்கள்.

காளிதாசர்: இல்லை, இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம்.

துர்வாசர்: என்ன காளிதாசா, இதுவரையில் நடந்த கதையை நான் கேட்கவில்லை. தேவேந்திரன் சொன்னதிலிருந்து துஷ்யந்தன் சகுந்தலையைப் பிரிகிறான் என்று தெரிகிறது. அதற்கு மேலே என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ள எனக்கே ஆவலாக இருக்கிறது. ஆகவே, படி.

காளி: இல்லை, துர்வாச முனிவரே, மேலே படிக்க எனக்கே பயமாக இருக்கிறது.

துர்வா: உன் நாடகத்தைப் படிக்க நீ பயப்படுவானேன்? தைரியமாகப் படி.

தேவே: காளிதாசரே, காலதாமதம் செய்யாதீர். மேலே படியும்.

காளி: (படிக்கிறார்)

[திரைக்குப் பின்னால் ஒரு குரல் கேட்கிறது.]

அதிதி வந்திருக்கிறேன்.

அனசூயா: சகி, யாரோ அதிதி வந்திருக்கிறாப் போலத் தோன்றுகிறதே.

பிரியம்வதா: சகுந்தலைதான் பர்ணசாலையில் இருக்கிறாளே, அவள் கவனித்துக்கொள்வாள்.

[திரைக்குப் பின்னால் குரல்.]

அதிதியை அவமானப்படுத்துகிறவளே, நீ எவனை நினைத்துக்கொண்டு தவக் களஞ்சியமாகிய என்னைக் கவனிக்காமல் விட்டனையோ அவன், எப்படிக் குடிகாரன் குடிப்போதையில் பேசிய பேச்சை மறந்துவிடுவானோ, அதுபோல உன்னை மறந்துவிடுவான்.

பிரியம்வதா: அச்சச்சோ! ஆபத்து ஆபத்து! பூஜிக்கவேண்டிய யாரையோ சகுந்தலை தன் ஞாபக மறதியில் பூஜிக்காமல் விட்டு விட்டாள் என்று தோன்றுகிறது. அதோ அவரே போகிறாரே! துர்வாச முனிவர் அல்லவா போகிறார்? கோபத்துக்குப் பெயர் போன துர்வாச முனிவர் சகுந்தலைக்குச் சாபம் கொடுத்துவிட்டுப் போகிறாரே!

[தேவேந்திர சபையில் உட்கார்ந்திருந்த துர்வாச முனிவர் கோபத்துடன் தம் ஆசனத்திலிருந்து எழுந்திருக்கிறார்.]



துர்வாசர்: டேய் காளிதாசா, என்னடா வீணுக்கு என் பெயரை உன் நாடகத்தில் இழுத்திருக்கிருய்? நான் எப்பொழுதடா கண்வர் ஆசிரமம் சென்றேன்?

காளிதாசன்: முனிவரே, நான் மேலே தொடர்ந்து படிக்கப் பயந்தது இந்தக் காரணத்தினுல்தான். அந்தச் சமயமும் சரி, மற்ற எந்தச் சமயமும் சரி, தாங்கள் கண்வர் ஆசிரமம் சென்றதாக மகாபாரதத்தினுள்ள மூலக் கதையில் இல்லை.

துர்வா: மூலக் கதையில் இல்லாத விஷயத்தை நீ எப்படியடா உன் நாடகக் கதையில் எழுதுவாய்?

நாரதர்: துர்வாச முனிவரே, ஒன்றும் இல்லாததற்கெல்லாம் பூலோகத்தில் எத்தனை பேர் என் பெயரை இழுக்கிருர்கள் என்கிறீர்கள்! நான் ஏதாவது கோபித்துக் கொள்கிறேனு?

துர்வாசர்: வெகு அழகாக இருக்கிறதே நீங்கள் சொல்வது, நாரதரே! பாவம்! கணவனை விட்டுப் பிரிந்து வாடி நிற்கும் அந்தக் குழந்தையை நான் சபித்ததாகக் காளிதாசன் எழுதினுல் நான் பொறுப்பேனு, நாரதரே? கணவனையும் மனைவியையும் பிரித்து வைத்தேன் என்கிற அபகீர்த்தியை எனக்கு எப்படியடா கொடுப்பாய்? இதோ உன்னைச் சபிக்கிறேன், பார்!

தேவேந்திரன்: முனிவரே, தயவு செய்து கோபம் வேண்டாம். காளிதாசரைச் சபிக்க வேண்டாம். நான்தான் அவரைக் கூப்பிட்டுச் சாகுந்தலம் படிக்கச் சொன்னேன்.

துர்வா: இந்தக் காளிதாசன் எதற்கு நான் சாபம் கொடுத்ததாக எழுத வேண்டும்? சாகுந்தலம் படித்த அத்தனை பூலோக வாசிகளும் என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருப்பார்கள்? உண்மையிலேயே, நான் அந்தச் சமயம் கண்வர் ஆசிரமம் சென்றிருந்தாலும் துஷ்யந்தன் பிரிவினுல் சகுந்தலை வருத்தத்தோடு இருக்கிருள் என்று என் ஞான திருஷ்டியினுல் கண்டு கொண்டிருக்கமாட்டேனு?

தேவே: அப்படியானுல் உண்மையில் நடந்ததுதான் என்ன?

நாரதர்: ஏன், சகுந்தலையையும் துஷ்யந்தனையும் கூப்பிட்டுக் கேட்டால் போகிறது.

தேவேந்திரன்: யார் அங்கே? [ஒரு தேவதூதன் முன்னுல் வருகிருன்.] போய்ச் சகுந்தலையையும் துஷ்யந்தனையும் இங்கே அழைத்து வா.

[துஷ்யந்தனும் சகுந்தலையும் வருகிருர்கள்.]

துஷ்யந்தன், சகுந்தலை: தேவேந்திரா, நமஸ்கரிக்கிருேம்.

தேவேந்திரன்: ஸர்வ மங்களாநிபவந்து. சகுந்தலே, துஷ்யந்தன் உன்னைக் காந்தர்வ முறைப்படி விவாகம் செய்து கொண்ட பிறகு ஊர்

திரும்பினுன். அப்பொழுது துர்வாச முனிவர் உன் ஆசிரமத்துக்கு வந்து உனக்கு ஏதாவது சாபம் கொடுத் தாரா?

சகுந்தலே: யார் வந்தார்கள், யார் போனுர்கள் என்று தெரிந்துகொள் ளும் நிலேயிலேயே நான் அப்பொழுது இல்லேயே!

காளி: எதற்காகச் சகுந்தலேயைக் கேட்க வேண்டும்? அவள் கதை தான் மகாபாரதத்தில் வரு கிறதே! அதைப் பார்த்து விட்டுத் தானே நானே இந்த நாடகத்தை எழுதினேன்? அப்பொழுது துர்வாச முனிவர் அங்கு வரவில்லே என்று நானேதான் ஒப்புக்கொள்கிறேனே!

துர்வாசர்: பின், நான் வந்து சாபம் கொடுத்ததாக எதற்காக எழுதினுய்?

காளி: நாடக அலங்காரத்துக்காக எழுதினேன். சாபம் கொடுத்த நீங்கள், அடுத்த கணமே சாபவிமோச னத்துக்கு வழியும் கூறியதாக எழுதி யுள்ளேன். அதைப் படித்துக் காண் பிப்பதற்குள்தான் நீங்கள் கோபித் துக்கொண்டுவிட்டீர்கள்.

துர்வா: முனிவர்கள் சாபம் கொடுத்தால், சாப விமோசனத்துக் கும் வழி கூற வேண்டும் என்று ஒரு நியதி இருக்கிருப்போலத் தோன்று கிறது. சரி, நான் என்ன சாபவிமோ சன வழி கூறினேனென்று நீ கற்பனே செய்தாய்?

காளி: துஷ்யந்தனுக்குச் சகுந்தலே ஏதாவது அடையாளப் பொருள் காட்டினுல் உடனே துஷ்யந்தனுக்கு அவளேப் பற்றிய ஞாபகம் வந்து விடும் என்று நீங்கள் சாபவிமோசனம் கூறியதாக எழுதியுள்ளேன்.

துர்வா: அப்படி அவள் அடையா ளப் பொருள் காட்டித் துஷ்யந்தனே அடைந்தாள் என்று நாடகத்தில் வருகிறதா?

காளி: அவள் அப்படி உடனே அடையாளப் பொருள் காட்டித் துஷ்யந்தனை அடைந்துவிட்டால் நாடகம் சிறக்காதே! நாடகம் என்றால் அதில் ஒரு சிக்கல் ஏற்பட வேண்டுமென்று நாடக அலங்காரம் கூறுகிறதே! அதற்காக..

துர்வா: அதற்காக என்ன செய்தாய்?

காளி: அதற்காக, துஷ்யந்தன் சகுந்தலைக்குக் கொடுத்த மோதிரத்தை, அவள் அடையாளப் பொருளாகக் காட்டவொண்ணாமல் செய்ய ஒரு மீன் அதை விழுங்குவது போலக் காட்டியுள்ளேன்.

துர்வா: பேஷ்! மீன் எங்கிருந்து வந்தது?

நாரதர்: மீன் எங்கிருந்தும் வராது, தண்ணீரில்தான் இருக்கும்.

காளிதாசன்: சகுந்தலை அரசனைத் தேடி அரண்மனைக்கு வரும் வழியில், சசி தீர்த்தத்தில் நீராடுகிறாள். அப்பொழுது மோதிரம் வழுக்கித் தண்ணீரில் விழுந்து விடுகிறது.

நார: ஏன் விழாது? துஷ்யந்தனின் விரல் பெரியது, சகுந்தலையின் விரல் சிறியது. அது தெரிந்து அவன் எப்படித் தன் மோதிரத்தை அவளுக்குக் கொடுக்கலாம்? அப்படித்தான் மோதிரத்தை அணிந்தாளே, அதில் ஒரு கயிற்றைச் சுற்றி அணிந்திருக்க வேண்டாம்?

காளி: தண்ணீரில் விழுந்த மோதிரத்தைத்தான் அங்கிருந்த ஒரு மீன் விழுங்கிவிடுகிறது.

துர்வாசர்: பேஷ்! உன் நாடகம் ருசிகரமாக அமைய வேண்டும் என்பதற்காக இத்தனை கற்பனைகளா!

தேவேந்திரன்: ஆனால் உண்மையில் நடந்தது என்ன? துஷ்யந்தா, நீ சொல்.

துஷ்யந்தன்: தேவேந்திரா, காந்தர்வ முறைப்படி சகுந்தலையை மணம் புரிந்துகொண்ட நான், அரண்மனை திரும்பியதும், தக்க மரியாதையுடன் அவளை அழைத்துக் கொள்வதாகத் தான் அவளிடம் வாக்களித்தேன். அப்படிச் செய்யத்தான் நானும் விரும்பினேன். ஆனால் கண்வர் இல்லாத சமயத்தில் அவருக்குத் தெரியாமல் நான் சகுந்தலையை மணந்ததனால் அவர் என்ன சொல்வாரோ, என்ன சாபம் கொடுப்பாரோ என்ற பயம் எனக்கு இருந்துகொண்டே இருந்தது. இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் நான் பயந்துகொண்டே இருக்க, நாட்கள் மாதங்களாக மாறின; மாதங்கள் வருஷங்களாக மாறின.

தேவேந்திரன்: என்ன, மாதங்கள் வ ரு ஷ ங் க ள ா க மாறினவா? என்ன, பல வருஷங்களாகவா நீ சகுந்தலையை அரண்மனைக்கு அழைக்காமல் வாயை மூடிக்கொண்டிருந்தாய்?

துஷ் : அதற்குக் காரணம் இருக்கிறது. கண்வ முனிவரைக் கண்டு பயந்த நான், பிறகு என் நாட்டு மக்களைக் கண்டு பயப்பட ஆரம்பித்து விட்டேன். சகுந்தலைக்குக் குழந்தை பிறந்து விட்டது என்ற தகவலும் எனக்கு எட்டிவிட்டது. என்னுடைய குடிமக்கள் முன்பின் பாராத ஒரு பெண்ணை என் மனைவி என்றும், பட்டமகிஷி என்றும், அவளுடைய பிள்ளையை என் பிள்ளை என்றும், யுவராஜப் பட்டத்துக்கு உரியவனென்றும் நான் எப்படிக் கூற முடியும்? அதைத்தான் அவர்கள் எப்படி ஒப்புக்கொள்வார்கள்? அரசன் தவறான வழியில் சென்றால் மக்களும் அல்லவா தவறான வழியில் செல்வார்கள்? அவர்கள் என்னைப் போலத் திடீரென்று ஒரு பெண்ணையும் குழந்தையையும் அழைத்து வந்து, ''இவள்தான் என் மனைவி; இதுதான் என் குழந்தை'' என்று சொல்ல ஆரம்பித்தால் என்ன ஆகும்? அரசனுக்கு ஒரு நீதி, மக்களுக்கு ஒரு நீதி என்று நான் சொல்ல முடியுமா? இதனால் நாட்டில் குழப்பம் அதிகரிக்கத்தானே செய்யும்? அதனால்தான் பயந்துகொண்டு, என்ன செய்வது என்று தெரியாமல் நான் தவித்துக்கொண்டிருந்தேன்.

தேவே: அப்படி எத்தனை வருஷம் பேசாமல் இருந்தாய்?

துஷ்யந்தன்: பதினைந்து வருஷம்.

தேவே: என்ன! பதினைந்து வருஷங்களா! பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு சகுந்தலையை அழைத்து வரப் பரிவாரங்களை அனுப்பினவன் முன்னாலேயே அனுப்பியிருக்கலாமே!

துஷ்: நான் யாரையும் அனுப்பவில்லை. சகுந்தலையாகத்தான் என்னைத் தேடி வந்தாள்.

தேவே: ஏனம்மா சகுந்தலே, பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு கணவனைத் தேடிப் போன நீ முன்னாலேயே சென்றிருக்கலாமே!

சகுந்தலை: அவர் சொன்ன காரணந்தானே எனக்கும்? தம் பரிவாரங்களை அனுப்பி, என்னை ராஜ மரியாதைகளுடன் அரண்மனைக்கு அழைத்துப் போவதாக அவர் சொல்லியிருக்கையில் நான் எப்படி வலுவில் அரண்மனை செல்ல முடியும்?

தேவே: பின், கடைசியில் எப்படிச் சென்றாய்?

சகுந்: என் மகன் பரதனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்ய வேண்டிய நாள் நெருங்கிவிட்டது என்று கண்வரே தம் சிஷ்யர்களுடன் என்னைத் துஷ்யந்தனின் அரண்மனைக்கு அனுப்பிவைத்தார்.

காளிதாசன்: இந்த வம்பையெல்லாம் தவிர்ப்பதற்காகத்தான் சகுந்தலை கர்ப்பமாக இருக்கும்போதே கணவனைத் தேடிச் சென்றதாக நான் என் நாடகத்தில் எழுதினேன்.

தேவேந்திரன்: சரி, துஷ்யந்தா, அத்தனை வருஷங்களுக்குப் பிறகு தான் சகுந்தலை உன்னைத் தேடி வந்தாளே! நீ எல்லார் முன்னிலையிலும் அவள்தான் உன் மனைவி என்று ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே?

துஷ்யந்தன்: நான்தான் வெகு தர்ம சங்கடமான நிலையில் இருந்தேன் என்று சொன்னேனே! நான் ஒப்புக்கொண்டிருந்தாலும் மக்கள் ஒப்புக்கொண்டிருக்க மாட்டார்களே!

தேவே: அதற்காக?

துஷ்: இத்தகைய நிலை ஏற்பட்டால் என்ன செய்வதென்று எனக்குப் பல வருஷங்கள் யோசனையே தோன்றவில்லை. கடைசியில் ஒரு நாள் ராமாயணம் படித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் பளிச்சென்று எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று. ஒரு வேளை சகுந்தலை தானாகவே என்னைத் தேடிக்கொண்டு வந்தால் சீதை விஷயமாக ராமர் என்ன செய்தாரோ அதையே நானும் செய்வது என்று தீர்மானித்தேன்.

தேவே: ராமர் செய்த காரியமா?

துஷ்: ஆம், சீதை களங்கமற்றவள் என்று தெரிந்தும், பல மாதங்கள் ராவணனின் சிறையில் இருந்ததனால், மக்கள் அவளை ஏற்றுக்கொள்வார்களோ, மாட்டார்களோ என்று பயந்து, ''நீ எங்கு வேண்டுமானாலும் போ. நான் உன்னை ஏற்றுக்கொள்ள முடியாது'' என்று ராமர் சொல்லிவிட்டார். உடனே சீதை தீயில் குதிக்க, அக்கினிதேவன் அவள் களங்கமற்றவள் என்று உலகறியச் சொன்னான். அதே முறையில் நானும் சகுந்தலையை அறியாதவன் போன்று நடித்தேன். அப்பொழுது சகுந்தலை என்னவெல்லாம் பேசினாள்!

சகுந்தலை: அப்பொழுதுதானே எனக்குப் பேச ஒரு சந்தர்ப்பம்? பட்டமகிஷியாகப் போகும் நான் எத்தனை விஷயங்களை அறிந்தவள் என்று மக்கள் அறிந்துகொள்ள வேண்டாமா?

துஷ்யந்தன்: நான் எதிர்பார்த்தபடியே ஆகாசவாணி, ''சகுந்தலை உன் மனைவி. பரதன் உன் மகன். அவர்களை ஏற்றுக்கொள்'' என்று எல்லாரும் அறியச் சொன்னாள். அதனால் அவளை நானும் மக்களும் ஏற்றுக்கொள்வது எளிதாயிற்று.

துர்வாசர்: நீ செய்தது சரிதான். ஆனால் இந்தக் காரியம் பதினைந்து வருஷ காலத்துக்குப் பிறகு நடந்ததுதான் எனக்குப் பிடிக்கவில்லை.

காளிதாசன்: துர்வாச முனிவரே, தங்களைப் போல் எனக்குந்தான் பிடிக்கவில்லை. அதற்காகத்தான் நான் சகுந்தலை உடனே அரண்மனைக்கு வருவதாகவும், ஆனால் உங்கள் சாபம் காரணமாக அரசன் அவளை மறந்ததாகவும்....

துர்வா: காளிதாசா, நீ சொல்வதைப் பார்த்தால் நடந்த கதையை விட உன் நாடகக் கதைதான் சிறந்து விளங்குவதாக எனக்குத் தோன்றுகிறது.

காளி: அதற்காகத்தான் நீங்கள் சாபம் கொடுத்ததாக..

துர்வா: பரவாயில்லை. என்னை யார் அலட்சியம் செய்தாலும் நான் உடனே சாபம் கொடுத்துவிடுவேன் என்று உன் நாடகத்தின் மூலம் உலகத்துக்குப் பறை சாற்றினாயே, அது எனக்கு எத்தனை பெரிய உபகாரம் தெரியுமா? என்னை இனி யாரும் அலட்சியம் செய்யமாட்டார்கள். சரி, காளிதாசா, உன் நாடகக் கதையில் நான் ஒரு குறையும் காணவில்லை. உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்.

காளி: பூலோகம் உள்ளவரையில் என் சாகுந்தல நாடகத்தை எல்லாரும் படித்து மகிழ வேண்டும் என்று அருள்புரிய வேண்டும்.

துர்வா: எல்லாரும் மகிழ்வது இருக்கட்டும். நான் முதலில் கேட்டு மகிழ வேண்டும். விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து படி. எங்கே விட்டாய்? ''திரையின் உள்ளே குரல்: நான் அதிதி வந்திருக்கிறேன்.'' சரிதானா? சரி, மேலே படி. ★

இதன் விலையுள்ள இனத்திலேயே இணையில்லாத இத் தனிச் சிறப்புகளைக் கொண்டது புதிய மர்பி மாஜிக் ஒன்றுதான்:

நீங்கள் விரும்பும் குரல் நயத்தைப் பெறுவதற்கான ஹை-லோ டோன் கண்ட்ரோல்.

6V D. C. வெளிப்புற மின் தொடர்புக்கான தனி ஸாக்கெட்.

உச்ச அளவு மின்சக்தி வெளியீடாகிய 650 MW—வேறெந்த 2-பேண்டு ஸெட்டையும் விட 30 சதவிகிதம் அதிகம்.

தவிர, இப் பண்புகள் யாவும் பொருந்தியுள்ளன:

- தொலைதூர நிலையங்களை இம்மி பிசகாமல் கவர்வதற்கான நேர்த்தி நய டியூனிங் உத்தி.
- வெள்ளி அலங்கார முலாமிட்ட, நவீனமான, எழில் நவினக்களையுடைய, திண்மையான பாலிஸ்டரீன் கேபினெட் (வெளிநாட்டு ஸெட்டுகளையும் வெட்கவைத்திடும்.)
- அதி-நவீன ஸர்க்யூட் அமைப்பு: பழுதற்ற இயக்கத்திற்கான 8 டிரான்ஸிஸ்டர்கள், டயோடுகள்.
- உள்ளமைவான 2 ஏரியல்கள்—மத்திய அலைக்கென ஃபெர்ரைட் ராடு ஏரியல், சிற்றலைக்கென லூப் ஏரியல். வெளித்தட ஏரியலுக்கும், எர்த் பிணைப்புக்கும் தனி ஸாக்கெட்டுகள்.
- தத்ருப ஒலிப்புக்கென 10 செமீ. நிரந்தரக் காந்த ஸ்பீக்கர்.
- உடையவே உடையாத அனோடைஸ்டு அலுமினியம் கைப்பிடி.

நேயமிக்க மர்பி விற்பனையாளரிடம் சென்று, கேட்டுப் பாரீர் புதிய மர்பி மாஜிக்—மந்திரம் போன்ற அதன் ஒலியிலே மதிமயங்கிப் போவீர்கள்.

மர்பி இல்லத்தை மகிழ்விக்கிறது!

SIMOES/MU/30B Tam.

20615

அலகாபாத் பாங்கில்
ஸேவிங்ஸ் பாங்க் கணக்குத்
தொடங்குவது சிறுபிள்ளை
விளையாட்டுப் போன்றது

இன்றே ஒரு ஸேவிங்ஸ் பாங்க் கணக்குத் தொடங்குங்கள்

அலகாபாத் பாங்கிற்கு வந்து எங்களில் யாரிடமாவது கேளுங்கள். ரூ. 5 மட்டும் செலுத்தி, உடனே ஒரு சேமிப்புக் கணக்குத் தொடங்கி விடலாம். அவ்வளவு சுலபம். நீங்கள் ஒழுங்காகச் சேமித்து வரும் சிறு தொகை எவ்வளவு சீக்கிரமாகப் பெருகி வருகிறது என்று ஆச்சரியப்படுவீர்கள். இன்னும் சௌகரியங்கள், சேவைகள்......

■ ரெக்கரிங் டிபாஸிட்டுகள் ■ கரண்ட் அக்கௌண்ட் ■ பிரயாணிகள் செக்குகள் ■ ஃபிக்ஸட் டிபாஸிட்டுகள் ■ ஸேஃப் டிபாஸிட் லாக்கர்கள் ■ விவசாயத்திற்கான பணவசதி ■ சிறு தொழில்களுக்கு கடனுதவி ■ உத்தியோகஸ்தர்களுக்குக் கடனுதவி

அலஹாபாத் பாங்க்
ஹெட் ஆபீஸ்: 14, இந்தியா எக்ஸ்சேன்ஜ் பிளேஸ், கல்கத்தா-1
நீங்கள் தாராளமாகப் பழகுவதற்குரிய தென்று உணர்த்துகிறது பாங்க்

தந்தி: "FAITH" ஸ்தாபிதம்: 1924 போன்: 22113

ஆதரவாள அன்பர்களுக்கு அன்புத் தீபாவளி
● நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக ●

அன்றும் இன்றும் என்றும் உத்தரவாதமுள்ள தங்க நகை,
வெள்ளிப் பாத்திரங்களுக்கு உங்கள் அபிமானம் பெற்ற

A. S. S. M.

சோமசுந்தரம் செட்டியார் & கோ.,

தங்க நகை, வெள்ளிப் பாத்திர வியாபாரிகள்
124, தெற்காவணி மூல வீதி, மதுரை-1.

ரிஜிஸ்டர்ட் **M. S.** டிரேட் மார்க்



காவிரி பிறக்கும் இடம்

மனிதர்கள் பிறக்கிறார்கள்; வளர்கிறார்கள்; மறைகிறார்கள். காவிரியும் பிறக்கிறாள்; துள்ளி நடை போடுகிறாள்; ஓடுகிறாள்; நடக்கிறாள்; கடலோடு கலக்கிறாள். ஆனால் என்றும் பிறந்துகொண்டே இருக்கிறாள்; என்றும் ஓடிக்கொண்டே இருக்கிறாள். பத்து ஆண்டுகளுக்கு முன் பிறந்த குழந்தையை இன்று போய்ப் பார்த்தால் குழந்தையாகத் தொட்டிலிலா கிடப்பான்? இப்போது வளர்ந்து நடை போடுவான். ஆனால் காவிரியை இன்றும் குழந்தையாகப் பிறக்கும் இடத்தில் பார்க்கலாம். குழந்தைக் காவிரியைத் தொட்டிலில் பார்க்கலாம்; ஆம், காவிரிக் குண்டம்



இருக்கிறது. அங்கே போய்ப் பார்க்கலாம், வாருங்கள். அந்த இடத்தைப் போய்ப் பார்த்து நீராடிப் பூஜை செய்து பயன்பெற இன்றும் பல பக்தர்கள் வருகிறார்கள். கூட்டம் கூட்டமாகப் பஸ்ஸில் வருகிறார்கள். காவிரி எங்கே உண்மையாகப் பிறக்கிறது என்று அதன் மூலத்தை எப்படிக் கண்டுபிடிக்கிறது? நதி மூலம், ரிஷி மூலம் தெரியாத இரகசியங்கள் அல்லவா? குடகைச் சேர்ந்த சஹ்யாத்ரி என்ற மலையில் பிறக்கிறது அது. காவிரிக் குழந்தையை முதல் முதலாகத் தலைக் காவேரியில் பார்க்கலாம்.







அங்கே உள்ள பூசாரி வருகிறவர்களுக்குச் சங்கல்பம் சொல்லிவைக்கிறார்; பூஜை பண்ணுகிறார். காவேரியம்மன் கோயில், காவேரிக் குண்டம், குள ஆகியவற்றைத் தரிசித்து நீராடி பூஜை செய்த பிறகு இந்தப் பகுதியிலே சுற்றியுள்ள அழகிய காட்சியைக் கண்டு களிக்க வேண்டாமா? அருகில் உள்ளது பிரம்மகிரி. அதன் மேல் ஏறிப் பார்த்தால் இயற்கைத் தேவி எழிலரசியாக விளங்குவதைக் காணலாம்.



ஒரு சிறிய தொட்டி; அதற்குக் காவேரிக் குண்டம் என்று பெயர். அதன் கரையில் ஒரு சிறிய கட்டிடம். அதுதான் காவேரியம்மன் கோவில். தொட்டியில் ஊற்று ஊறிக்கொண்டே யிருக்கிறது. அந்த நன்னீரை எடுத்துப் பயபக்தியுடன் தலையில் ஊற்றிக்கொள்கிறார்கள். காவேரிக் குண்டத்திலுள்ள நீர் அருகில் உள்ள குளத்துக்குப் போகிறது. அந்தக் குளத்தில் இறங்கிப் பலர் நீராடுகிறார்கள். புண்ணிய தீர்த்தமாகிய அதில் நீராடினால் நினைத்த காரியம் கைகூடும் என்ற நம்பிக்கை. குளத்தில் இறங்கப் படிக்கட்டுகள் உண்டு. துலா மாதமாகிய ஐப்பசியில் தீர்த்த யாத்திரையாக இங்கே அன்பர்கள் வந்து காவிரியின் பிறப்பிடத்தைத் தரிசித்து நீராடுவது மிகச் சிறந்த புண்ணியச்செயல் என்று கருதுகிறார்கள். காவேரிக் குண்டத்துக்கு அருகில் உள்ள கோயிலில் அலங்காரம் செய்திருக்கிறார்கள். குண்டத்திலும் மலர் இட்டுப் பூஜை செய்கிறார்கள். தேங்காய் பழம் வைத்து நிவேதனம் செய்கிறார்கள். தேங்காய் மூடியிலேயே தீபத்தை ஏற்றுகிறார்கள்.

இருகரையும் புரண்டோடும் அகண்ட காவிரியைப் பார்த்தவர்களுக்கு, காவிரிக் குழந்தையின் தொட்டிலைப் போல இருக்கும் குண்டத்தைப் பார்த்தால் வியப்பாக இருக்கும். அந்தச் சிறு குண்டத்தில் ஊற்றாகத் தோன்றிய காவிரியென்னும் பெண் குழந்தை, வளர்ந்து பரந்து தன் கரையின் இரு மருங்கும் உள்ள தலங்களுக்குச் சிறப்பை உண்டாக்கி, அங்கங்கே வயல்களுக்கு நீரூட்டி, மனித குலத்துக்கு உணவு வழங்கி, ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் சக்தியுடையனவாக்கி, அணைகளில் தேங்கி, அங்கிருந்து வேகமாக ஆலித்துப் பாய்ந்து, மலையையும் கடலையும் இணைத்து ஓடுகிறது. சிறிய விதையிலிருந்துதானே ஆல் தோன்றுகிறது? ஆனால் விதையைக் காணும்போது ஆலமரம் இல்லை; ஆலமரத்தைக் காணும்போது விதை இல்லை. இங்கேயோ விதையையும் காணுகிறோம்; விளைவையும் காணுகிறோம். தலைக்காவிரியில் குழந்தையாகத் தொட்டியில் காட்சி தரும் காவேரியன்னை பூம்புகாரில் தன் கணவனாகிய கடலோடு கலந்துவிடுகிறது. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை என்று வரும் எல்லாப் பருவங்களிலும் காவிரிமகள் காட்சியளிக்கிறாள். இது பெரிய வியப்பு அல்லவா?



படங்கள்: ஹரலிங்கம்

ஒரு கிராமவாசி சுதந்தர தினத்தன்று சிறைப்படுகிறுன்

நா. பார்த்தசாரதி

ஜயனுர் ஊருணியிலிருந்து நகரத்துக்குப் புறப்படும் கடைசிப் பஸ் இரவு ஏழரை மணிக்கு இருந்தது. அப்போது மணி ஏழு. வேல்சாமியின் கையில் பனமரத்தில் நுங்கு வெட்டுவதற்காகக் கொண்டு வந்திருந்த வீச்சரிவாள் இருந்தது. அரிவாளைக் கொண்டுபோய்க் குடிசையில் போட்டுவிட்டுப் பஸ் ஏற நேரமில்லை. ஊருக்குள் போய் அரிவாளைக் குடிசையில் போட்டுவிட்டு வருவதற்குள் கடைசிப் பஸ் போய்விடும். அரிவாளுடனேயே நகரத்துக்குப் பஸ் ஏற அவனுக்குக் கூச்சமாக இருந்தது. நகரத்துக்குச் சென்று திரும்பும் ஆசையையும் அவனுல் விட முடியவில்லை. சுதந்தர தின வெள்ளி விழாவுக்காக நகரை ஒளிமயமாக அலங்கரித்திருக்கிறுர்களாம். அந்த வெள்ளி விழா அலங்காரத்தின் கோலாகலத்தைப் போய்ப் பார்க்கும் ஆசையில் மாலையிலிருந்தே கிராமத்தில் பலர் நகரை நோக்கிப் பஸ் ஏறியிருந்தார்கள்.

அதிகத் தூரமில்லை. ஒரு மணி நேரப் பயணந்தான். ஏழே கால் பஸ்ஸைப் பிடித்தால் எட்டேகாலுக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். சுதந்தர தினக் கோலாகலத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இரண்டாவது ஆட்டம் படம் பார்த்தபின், பஸ் ஸ்டாண்டுக்கு வந்து கொஞ்சம் தூங்கினுல் காலை நாலரை மணிக்கு முதல் பஸ்ஸில் கிராமத்துக்குத் திரும்பிவிடலாம். முடிவில் ஆசைதான் வென்றது. பனை மேட்டிலிருந்து களத்தில் குறுக்கே நடந்து மெயின் ரோட்டில் இறங்கிப் பஸ் நிற்கிற இடத்துக்கு வந்து சேர்ந்தான் வேல்சாமி. சட்டைப் பையில் மூன்று ஒரு ரூபாய்த் தாள்களும் ஐந்து பத்துப் பைசாக்களும் இருந்தன.

பஸ் வந்தது. இடித்துப் பிடித்து ஏற முடிந்தும் விட்டது.

''எங்கேய்யா போவணும்? மீசையைப் பார்த்தாலே அருவா மாதிரி இருக்குது? அருவா வேறே எடுத்தாந்துட்டியே? பயமாருக்குப்பா....'' என்று கேலி செய்தபடியே டிக்கட்டைக் கிழித்தான் கண்டக்டர்.

அரிவாளை வைத்துவிட்டு வந்திருக்க வேண்டும் என்று தோன்றியது வேல்சாமிக்கு.

''நுங்கு வெட்ட எடுத்தாந்தேனுங்க. மறுபடி வூட்டாண்டே போயி வச்சிட்டு வரலாம்னு அதுக்குள்ளார பஸ்ஸை விட்னு போயிடுவீங்க. அதான் இப்பிடியே வந்திட்டேன்'' என்று உள்ளே எழுகிற ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையுடன் அந்தக் கண்டக்டருக்கு அவன் பதிலும் சொன்னுன். மனம் நகரத்தையும் அதன் விளக்கொளி அலங்காரங்களையும் காணும் ஆவலில் படபடத்தது. பஸ்ஸிலேயே பலர் அதைப்பற்றித்தான் பேசிக்கொண்டு வந்தார்கள்.

''இத்தினி ஸீரியல் ஸெட், அலங்காரங்களை இந்த இருபது வருசத்திலே நான் பார்த்ததில்லை. ஊரே ஜெகஜோதியா இருக்குது. முதல் சுதந்தர தினத்தன்னைக்கிக்கூட நான் இவ்வளவு வெளக்குப் பார்க்கலை.''

''ஸில்வர் ஜூப்ளி இல்லியா? பின்னே....?''

வேல்சாமி பக்கத்துப் பிரயாணியை விசாரிக்கலானுன்: ''ஒரு மணி நேரத்துலே பார்க்கணும்னு எதை எதைப் பார்க்கலாங்க?''

''பஸ் ஸ்டாண்டிலே எறங்கினதும் எதிர்த்தாப்ல முனிசிபல் ஆபீஸ் பாரு! பிரமாதமா அலங்கரிச்சிருக்காங்க. அப்புறம் பக்கத்திலேயே சுதந்தர நாள் பூங்கா, ரெயில்வே ஸ்டேஷன், எல்லாம் பாரு.''

பஸ் நகரில் நுழைந்து விட்டது. நகரத்தின் விளக்கு ஒளிகளும், ஒலிபெருக்கிச் சப்தங்களும், ரேடியோ இசைகளும், ரோட்டைத் தேய்க்கும் டயர்களின் இழுவையும் ஒரே சமயத்தில் செவியைத் தாக்கின; கண்களைக் கூச வைத்தன.

வேல்சாமி பஸ் ஸ்டாண்டிலேயே ஓர் ஓட்டலில் இட்டிலி தோசை சாப்பிட்டுவிட்டுப் பணம் கொடுக்கக் 'கேஷ்' கவுன்டரின் அருகே போனதும் அரிவாளை எங்கேயாவது வைத்துவிட்டுத்தான் மடியிலிருந்து பணம் எடுக்க முடியும் போலிருந்தது. பணத்தை வைக்க வேண்டிய மேஜையில் அரிவாளை வைத்ததும், வாங்குகிறவன் ஒரு கணம் துணுக்குற்றுன். மடியைத் திறந்து பணம் எடுத்துக் கொடுத்ததும், ''நல்ல ஆளப்பா நீ! பில் கொடுக்கிற இடத்திலே அருவாளையா வைக்கிறது? என்னவோ ஏதோன்னு பயந்தே போனேன்'' என்றுன் 'கேஷில்' இருந்தவன்.

வேல்சாமிக்கு மறுபடியும் கூச்சமாக இருந்தது. முனிசிபல் ஆபீஸ் பிரமாதமாக வண்ண வண்ணப் பல்புகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நீரூற்றுக்கள்கூட நீலம் பச்சை சிவப்பு மஞ்சள் என்று நிறம் நிறமாகப் பீச்சிக்கொண்டிருந்தன. வெளியிலே ஒரு நடைபாதை ஸ்டூடியோக்காரன் பிரம்மாண்டமான மூவர்ணக் கொடியைக் கட்டி வைத்து அந்தக் கொடியோடு சேர்த்துப் போஸ்ட் கார்டு சைஸ் படம் எடுத்துக்கொள்ள மூன்று பிரதிகளுக்கு இரண்டு ரூபாய்தான் என்று கூப்பாடு போட்டு ஆள் சேர்த்துக்கொண்டிருந்தான். வேல்சாமிக்கும் அப்படி ஒரு போட்டோ எடுத்துக்கொள்ள ஆசையாக இருந்தும் பணம் குறைவாக இருப்பது காரணமாக அந்த எண்ணத்தைக் கைவிட்டான். முனிசிபல் ஆபீஸைப் பார்த்து முடிக்கிறபோதே ஒன்பதே கால் மணி ஆகியிருந்தது. சுதந்தர நாள் பூங்காவைப் பார்க்கப் புறப்பட்டான் அவன். முதல் சுதந்தர தினமான 1947 ஆகஸ்டு பதினைந்தாம் தேதிதான் இந்தப் பூங்காவை முனிசிபாலிட்டியார் இந்திய சுதந்தரத்தின் நினைவாக அமைத்தார்கள். இப்போது சுதந்தரத்துக்கும் இந்தப் பூங்காவுக்கும் இருபத்தைந்து வயதாகியிருந்தது.

பூங்காவில் மரங்களில், செடிகளில், கொடிகளில், எங்கும் வண்ண வண்ண விளக்குகள் பளிச்சிட்டன. அந்தப் பூங்காவின் நடு மையமாக மகாத்மா காந்தி சிலையொன்று உண்டு. மிகப் பெரிய அந்தப் பூங்காவின் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு வேல்சாமி காந்திசிலை அருகே வரும்போது பத்து மணிக்கும்

மேலே ஆகிவிட்டது. சிலையைச் சுற்றி இருட்டாக இருந்தது. தட்டி, மூங்கிற்பாய் வைத்துக் கீழ்ப் பகுதியை மறைத்திருந்தார்கள். மேலே காந்தி சிலை இருட்டாக இருந்தது. வேல்சாமி துணுக்குற்ருன். அவ்வளவு ஒளிமயமாகப் பூங்காவை அலங்கரித்தவர்கள் காந்தி சிலையை மட்டும் ஏன் இருளில் மூழ்க விட்டுவிட்டார்கள் என்பது புரியவில்லை. பக்கத்தில் இருவர் அவனைப் போலவே சந்தேகப்பட்டு அதைப்பற்றி விவாதித்துக்கொண்டு போனது அவன் காதில் விழுந்தது.

''இப்ப இருக்கிற முனிசிபல் சேர்மனுக்கு இந்தச் சிலையைப் பிடிக்காது. அதான் இருட்டிலே தவிக்க விட்டிட்டாரு. ஏன்னு இது பழைய சேர்மன் காலத்துலே திறந்து வச்சது..''

தான் மெய்யான காரணம். இதா கீழே தட்டி போட்டு மூடியிருக்கிறதைப் பார்த்தாலே தெரியலே?''

அதில் எது உண்மை என்று வேல்சாமிக்குப் புரியவில்லை. எது உண்மையில்லை என்ருலும் காந்தி சிலை அப்போது இருட்டில் இருந்தது என்ற உண்மையை அவன் கண்ணாரக் கண்டான். அவன் மனம் வேதனைப்பட்டது. ஐயனூர் ஊருணி கிராமத்து முச்சந்தியிலுள்ள காந்தி சிலைக்கு அவனும் மற்றக் கிராமவாசிகளும், வெள்ளிக்கிழமை தவருமல் அகல் விளக்கு ஏற்றி 'ரகுபதி ராகவ' பாடுவது உண்டு. அந்த மரியாதைகூட இந்த 'முனிசிபல் காந்தி'க்குச் சுதந்தர தின வெள்ளி விழா நாளில் கிடைக்கவில்லை என்பதைப் பார்த்தபோது அவன் மனம் கொதித்தான்.



''எந்தச் சேர்மன் திறந்து வச்சதானு என்ன? சிலை யாருதுங்கறதுதான் முக்கியமே ஒழிய யார் திறந்து வச்சாங்கங்கிறது முக்கியமில்லை. காந்தி சிலையை அலங்கரிக்காமே ஒரு சுதந்தர வெள்ளி விழா நடக்கலாமா?''

''நடக்கிறதே?''

மூன்ருவதாக எதிர்ப்பட்ட வேருெருவர் இந்த இருவரின் பேச்சில் குறுக்கிட்டார்: ''சே சே! நீங்க ரெண்டு பேருமே தப்பாகச் சொல்றீங்க. சிலையோட கீழ்ப்பாகம் உப்புப் பரிஞ்சி ரிப்பேர் நடக்குது. ரிப்பேர் முடியலே. அலங்கரிக்காததுக்கு அது

நகரங்களில் காந்தியை மறந்துவிட்டார்களோ என்றுகூடத் தோன்றியது அவனுக்கு. சுதந்தர தின வெள்ளி விழாவில், சுதந்தர நாள் பூங்காவில் காந்தி இருட்டில் கிடப்பதை அவனுல் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இரண்டாவது ஆட்டம் படம் பார்க்கும் எண்ணத்தை அவன் கைவிட்டுவிட்டான்.

உடனே அந்தப் பூங்காவிலிருந்து வெளியேறிக் கடைவீதிக்குப் போனுன் அவன். இரவு பதினெரு மணிக்கு அவன் அங்கே மீண்டும் திரும்பியபோது, அவன் கையில் ஓர் அகல் விளக்கு எண்ணெய் நிரப்பப்பட்டுத்திரியிடப்பட்டு இருந்தது. அதை அவன் சிலையின் பீடத்தினடியிலே மூங்கில் தட்டி ஓரமாக வைத்துவிட்டுத் தீப்பெட்டியை எடுத்துப் பற்றவைத்தான்.

வேல்சாமியின் பின்னுல் பூட்ஸ் சத்தம் கேட்டது. தீக்குச்சியைக் கீழே போட்டுவிட்டுத் திரும்பினுன். இரண்டு போலீஸ்காரர்களும் பார்க் வாட்ச்மேனும் நின்றனர்.

''ஏண்டா காலிப் பயலே! காந்தி சிலைக்கு நெருப்பு வைக்கவா பார்க்கறே? அப்பவே 'வாட்ச்மேன்' வந்து சொன்னுன், 'ஒரு ஆளு அருவா

ளும் கையுமா காந்தி சிலையைச் சுத்திச் சுத்தி வாரான்; பயமாயிருக்குதுன்னு. நடடா ஸ்டேஷனுக்கு!''

''இல்லீங்க எசமான். நான்....'' வேல்சாமியை அவர்கள் பேசவிடவே இல்லை. பிடரியில் கையைக் கொடுத்து ஒரு தள்ளுத் தள்ளினான் கான்ஸ்டேபிள். காந்தி சிலையின் கீழே கும்பிடுவது போல் தலைகுப்புற விழுந்தான் வேல்சாமி.

அவனுடைய நெற்றியில் காந்தி சிலை அடித்தளத்தின் சிமிண்டு விளிம்பு மோதி இரத்தம் கசிந்தது. அவனுடைய விளக்கத்தைக் காதில் ஏற்றுக்கொள்ளாமலே போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கொண்டு போய், 'காந்தி சிலையருகே நள்ளிரவில் அரிவாளும் கையுமாக வந்து நெருப்பு வைக்க முயன்றதாக'ச் சார்ஜ் ஷீட் எழுதி விலங்கு மாட்டி, அவனை உள்ளே தள்ளினார்கள் போலீஸ்காரர்கள்.

வேல்சாமி சிறைக்குள் மௌனமாக அமர்ந்து கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தபோது முனிசிபல் கட்டிடத்தின் வாசலிலிருந்து,

''ஆடுவோமே பள்ளுப்
பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து
விட்டோமென்று ஆடுவோமே....''

என்று ஒலிபெருக்கியின் மூலம் பாட்டு எழுந்து ஒலிக்கத் தொடங்கியது. இருண்ட சிறையின் மூலையில் ஓர் இந்தியக் கிராமவாசி விலங்கு பூட்டிய தன் கைகளோடு குத்தவைத்து உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். அந்தச் சுதந்தர வெள்ளிவிழா நாளில் அவன் மட்டுந்தான் தனியாக அழுதானா? இல்லை! பூங்காவின் இருளில் ஓர் உத்தமனின் சிலையுங்கூட அழுதிருக்கக் கூடும், கற்களுக்கும் அழும் சக்தி இருக்குமானால். ★

ஜலதோஷமும் ஃப்ளூவும்—சில முக்கிய தகவல்களும், முறியடிக்கும் முறைகளும்

"அனுஸின் எனக்குப் பெரிதும் உதவுகிறது", என்கிறார் நர்ஸ் ஏஞ்சலா ஃபெர்னாண்டஸ்.

நோய் தொற்றுதல்: ஜலதோஷமும் ஃப்ளூவும் பாதிக்கப் பட்டவர்களிட மிருந்து, காற்றிலே பரவி வரும் விஷ அணுக்களால் உண்டாகின்றன. சாதாரணமாக இந்த விஷ அணுக்களை எதிர்க்கும் ஆற்றல் உங்கள் உடலுக்கு உண்டு. ஆனால், அளவுக்கு மீறிய உழைப்போ அல்லது சத்துப் பற்றுக்குறையோ உங்கள் உடலை பலவீனப் படுத்தி, நோய் எதிர்ப்பு ஆற்றலைக் குறைத் திருககக்கூடும்.

அறிகுறிகள்: தலைகனம், தலைவலி. மூக்கிலே ஒழுக்கு ஆகியவை ஜலதோஷத்தின் முன் அறி-குறிகளாகும். 18 முதல் 72 மணிகளுக்குள், இவற்றைத் தொடர்ந்து, மஞ்சளான சளி மூக்கிலிருந்து வெளி-வரக்கூடும்.

வியர்வை அல்லது நடுக்கம் ஃப்ளூ தோன்றுவதற்கான பொது எச்சரிக்கை யாகும்; சோர்வு, பலவீனம், உட-லெங்கும் வலி, பசியின்மை மந்த நிலை, தலைவலி, குளிர் முதலியவை பின் தொடரக் கூடும். வறட்டு இருமலோ அல்லது தொண்டைப் புண்ணோ கூடத்தோன்றலாம்.

குணமடைதல்: குணமடைவதற்குச் சாதாரணமாக 2-3 நாட்கள் போதும், சில சமயங்களில் அதற்கு மேலும் கூட ஆகலாம்.

நர்ஸ் ஏஞ்சலா ஃபெர்னாண்டஸ், ஜலதோஷத்-தையும், ஃப்ளூவையும் எதிர்த்து, விரைவிலே வலிகளிலிருந்து நிவாரணமளிக்கப் போது-மான சக்தி வாய்ந்தது அனுஸின் என்பதைக் கண்டு அறிந்தவர்: "குழந்தைகளுக்கும் கூட அது நம்பகமானது" என்கிறார் அவர்.

சிக்கல்கள்: ஃப்ளூவைக் கட்டுப் படுத்தாவிடில், அது நிமோனியாவிலும் மேல் சுவாசக் குழல், சுவாசகோசம் மற்றும் காதுகளில் நோய் தொற்றுவதிலும் முடியக் கூடும். ஃப்ளூ அல்லது கடுமை-யான ஜலதோஷம் இருந்தால் உங்கள் டாக்டரிடம் செல்லுங்கள்.

மறு-முறையும் நோய் பாதிக்கலாம்: நீங்கள் தகுந்த கவனம் செலுத்தாவிடில், நோய் திருப்பிக் கொள்ளக் காரணமுண்டு. அடித்து வரும் பாதிப்பு முன்னதை விடக் கடுமையாகவே இருக்கக்கூடும்

நீங்கள் செய்ய வேண்டியதென்ன?

1. உங்கள் வீட்டில யாருக்காவது முன்னமேயே கடுமையான ஜலதோஷம் அல்லது ஃப்ளூ இருந்-தால், அவருக்குப் படுக்கையிலே பூரண ஓய்வு கொடுக்க வேண்டும். கூடிய மட்டும் அவரை ஒதுக்கித் தனியாக வைக்க வேண்டும். அவர் குணம் பெற்ற உடனேயே அவரது துணிமணிகளை குறிப்பாக கைக்குட்டைகள் மற்றும் மெத்தைத் துணிகளை, கிருமி நாசினி கொண்டு நன்கு சுத்தப் படுத்த வேண்டும்.

2. அறைகளைத் தக்க காற்றோட்டத்துடன் வைத்-திருங்கள்.

3. தினம் இருதடவைகளாவது ஆண்டி-ஸெப்டிக் அல்லது உப்புக்கரைத்தநீரினால் தொண்டையைக் கொப்பளிக்கவும்.

4. கொதிக்க வைத்த நீரை-யே பருகுங்கள். பானங்-களை குறிப்பாக ஆரஞ்சு அல்லது எலுமிச்சை ரசத்-தை அதிகமாக அருந்துங்கள். சத்துமிகுந்தஉணவை உண்ணுங்கள். உடம்புக்கு அதிகஉழைப்புவேண்டாம். போதுமான ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்

அனுஸின் உங்களுக்கு உதவ முடியும்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவினால் ஏற்படும் வலிகளைத் தணித்து உங்கள் வேதனைகளைக் குறைக்கிறது அனுஸின்.

அனுஸின் சக்திவாய்ந்தது உலகெங்கும் டாக்டர்கள் அதிகமாகச் சிபாரிசு செய்யும் வலிநிவாரணியை அது அதிக அளவில் கொண்டது. அனுஸின் நம்பகமானது-டாக்டர் கொடுக்கும் மருந்தைப் போல, நம்பகமான மருந்துகளின் கலவை அது.

எனவே ஜலதோஷம் அல்லது ஃப்ளூவின் முதல் அறிகுறி தோன்றியதுமே அனுஸின் சாப்பிடுங்கள்—நாளைக்கு 4 தடவை தண்ணீருடன் சேர்த்து.

சக்திவாய்ந்தது, நம்பகமானது

அனுஸின்

இந்தியாவிலேயே உச்ச விற்பனையுள்ள வலி நிவாரணி.



Regd. User: Geoffrey Manners & Co. Ltd.

A-38

மகன் தந்தைக்கு

சுஜாதா

எனக்கு ஐம்பத்தெட்டு வயது. ரெவின்யூ இலாக்காவில் லஞ்சம் வாங்கத் தைரியமில்லாமல் இஷ்டமில்லாமல், அதனால் காசு சேர்க்காமல், 'கிடைக்கிற பென்ஷன் போதும்' என்று மூன்று வருஷம் முன்பு வேலை ஓய்வு பெற்ற நான் 1972-இல் ஒரு மியூசியம் பிறவி. அப்படித்தான் எல்லாரும் என்னைக் கருதுவதாக நான் நினைக்கிறேன். எனக்கு இன்றைய நாட்களில் நடக்கிற காரியங்களில் பல புரியவில்லை. என் புத்திக்குச் சில விஷயங்கள் எட்டவில்லை. ஏன் எல்லோரும் இவ்வளவு அவசரப்படுகிறார்கள்? ரேடியோ ஏன் படுக்கையறைச் சம்பவங்களில்கூடக் குறுக்கிடுகிறது! பெண்கள் ஏன் இப்படி அர்த்தமில்லாமல் சிரிக்கிறார்கள்? சினிமாவில் ஏன் இத்தனை கொடூரம், இத்தனை அசிங்கமான இனக் கவர்ச்சி? நகரச் சுவர்களில் ஏன் இத்தனை புகழ்வார்த்தைகள், இத்தனை நாத்திகம், இத்தனை தெய்வ பக்தி?

நான் தற்கால உலகத்துடன் இழைந்து வாழத்தான் விரும்புகிறேன். மற்றவர்கள் என்னை அப்படி இருக்க அனுமதிப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் எல்லாரும் 'நீ வாழ்ந்தாகிவிட்டது. இனிக் கேள்வி கேட்காமல் விலகிப் போவதுதான் உனக்கு நல்லது. இறந்து போ கிழவனே!' என்று சொல்வதாகத்தான் உணர்கிறேன். இந்த உலகம் வயதானவர்களுக்கு அல்ல. ''பாத்து ஏறு தாத்தா!'' என்று கண்டக்டர் சொல்லும்போது எனக்கு மகா கோபம் வருகிறது. அவனைப் பார்த்து, 'என் அருமை நண்பனே, உன்னைவிட என் கண்பார்வை துல்லியமாக இருக்கிறது. உன்னைவிட என் பற்கள் திறமையாக அரைக்கின்றன. இரவு வேளைகளில் ஊசிநூல் கோக்கக் கூடிய நான்..' என்று சொல்லும்படி ஆத்திரம் வருகிறது. இதெல்லாம் வெளி விஷயம். அவர்கள் என்ன சொன்னாலும் நான் பிடிவாதமாக வாழத்தான் விரும்புகிறேன் - என் மகனுக்காக. என் அருமை மனைவியை இழந்ததிலிருந்து (அவள் படம் ஹாலில் மாட்டியிருக்கிறது. நெற்றியில் அகலக் குங்குமம். படத்தைச் சுற்றி மாலை. புன்னகை! தினசரிப் புன்னகை!) என் மகனுக்காக நான் பட்ட அவஸ்தையை எல்லாம் சொன்னால், 'கிழவன் ஆதங்கம் தேடுகிறான்' என்று அலட்சியமாக இருந்துவிடுவீர்கள். ஆனால் அப்பா பிள்ளை என்று வேண்டாம்; ஒரு மனிதனுக்கு மனிதன் ஆதாரமாகச் சில அன்புகள் வேண்டாம்? அன்புகூடத் தேவையில்லை; ஒரு மரியாதை அல்லது அக்கறை அல்லது ஒரு சின்ன பார்வை! அல்லது, 'அப்பா, எப்படி இருக்கிறீர்கள்? நேற்று, தலைவலி என்றீர்களே' என்று ஒரு வாக்கியம்! ம்ஹூம்!

நான் என்ன பாவம் செய்தேன்? என் ஒரே மகனை மனைவியின்றித் தனியாக வளர்த்து, பீஸ் கொடுத்துப் படிக்க வைத்து இவன் மூன்றாவது வகுப்பில் பாஸ் செய்ததற்கு நான் இரவு முழுவதும் கவலைப்பட்டு, என்ன என்னவோ பன்னாடைகள் எல்லாவற்றையும் சந்தித்துப் பல் இளித்து, 'அப்பா தாயே' என்று கெஞ்சி, எவன் வீட்டுக்கோ நெல் பர்மிட் வாங்கிக் கொடுத்து, எவனுக்கோ பத்திரம் ரெஜிஸ்தர் செய்து, எவனுக்கோ வைப்புச் சண்டையெல்லாம் தீர்த்து வைத்து, லஞ்சம் கொடுத்துக் கடைசியில் என் மகனுக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்தேன். அதற்கு என் மகனிடமிருந்து ஒரு 'தாங்க்யூ!' உண்டா? கிடையாது. பாசம் வேண்டாம், ரத்தபந்தம் வேண்டாம், இரக்கங்கூட வேண்டாம்; நன்றி? இதோ வருகிறான் பாருங்கள், நான் தேடிக் கொடுத்த வேலைக்குப் போய்விட்டு!

சாயத்தை இறைத்த மாதிரி ஷர்ட், தொளதொளவென்று பான்ட், நெற்றியை முழுவதும் மறைக்கும் கேசம். (திடீரென்று அவனைக் கோழிக்குஞ்சைப் போல் அமுக்கி நன்றாக ஒட்ட வெட்டி விடலாமா?) சிகரெட் பிடித்துக் கறுத்த உதடுகள். என்னைப் பார்த்துவிட்டால், பிடித்துக்கொண்டிருக்கும் சிகரெட்டை மிதித்துத் தேய்த்து அணைப்பான். அதுமட்டும் மரியாதை இருக்கிறதே! போகிறது! கழுத்தில் இரும்புச் சங்கிலி, ஆமாம்; இரும்பு!

செருப்பை உதறிவிட்டு நேராக மாடிக்குப் போகிறான். நான் உட்கார்ந்திருக்கிறேன். நான் இந்த உலகத்தில் வசிப்பதாகவே இவனுக்குப் பிரக்ஞை இல்லாததுபோல் போகிறான்! பெயர் கிருஷ்ணகுமார். என் பெயர் கிருஷ்ணன்; அவன் கிருஷ்ணகுமாரன். என்னைப் பற்றவைக்கப் போகிற ஏக புத்திரன்.

''குமார்!'' என்றேன்.

''என்ன?'' என்று என் பக்கம் பொதுவாகத் திரும்பினான். என்னை நேராகப் பார்க்க மாட்டான். என் மார்பை அல்லது இடப் பக்கத்து ஜன்னலைப் பார்த்துக்கொண்டுதான் பேசுவான். என்னிடம் பேசும் போது சிக்கனம்! சின்னச் சின்ன வார்த்தைகள்.

''ராமநாதன் வந்திருந்தார்'' என்றேன்.

''ம்'' என்றான்.

''ட்ரெஸ் பண்ணிக் கொள். காலை சொன்னேனே, ஞாபகம் இருக்கிறதா?''

''என்ன சொன்னிங்க?''

''ராமநாதன் வீட்டுக்குப் போகிறோம் நாம்.''

''நீங்க போய்ட்டு வந்துவிடுங்களேன்!''

''இல்லை, நீயும் வர வேண்டும். கல்யாணம் உனக்கு.''

''நான் ராதிகாவைப் பார்த்திருக்கேன்.''

''உனக்கு இஷ்டமா இல்லையா என்று சொல்ல வேண்டும். நாம் இந்த மாதிரி சரியாக அவர்களுக்கு விடை சொல்லாமல் இருக்கக் கூடாது.''

''அப்பா, நான் இப்பக் கல்யாணம் செய்துகொள்றதா இல்லை!''

''பின் எப்ப?''

''இன்னும் ஒரு வருஷமாவது!''

''ராதிகாவைப் பண்ணிக்கொள்கிறாயா? சொல்லிவிடவா?''

''அடுத்த வருஷத்துக்கு இப்பவே சொல்லிவிடணுமா என்ன?''

''வேறு ஏதாவது பெண்ணைப் பார்த்து வைத்திருக்கிறாயா?''

''இல்லை.''

''அவர் பெரிய மனுஷர். அவருக்கு நம்மிடம் பிடிப்பு இருக்கிறது. அவரை இப்படி அலைய வைக்கிறது நன்றாக இல்லை. உண்டு இல்லை என்று சொல்லிவிடலாமே! அந்தப் பெண் அழகாக இல்லையா? படிக்கவில்லையா?''

''அப்பா, நான் கல்யாணத்துக்கு இன்னும் தயாராகவில்லை.''

''ஏன், மந்திரங்கள் எல்லாம் நெட்டுருப் பண்ணப் போகிறாயா? தயார் என்னடா தயார்? குமார், எப்பொழுதாவது யோசித்திருக்கிறாயா, உன் அப்பாவுக்கு நீ செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கிறது என்று? இந்த வீட்டில் காபி போட்டு, சொந்தமாக மிளகு ரசம் வைத்து....ஹோட்டலில் எடுப்புச் சாப்பாடு சாப்பிட்டு எனக்கு அலுத்துப் போயிருக்கலாம் என்று எப்போதாவது எண்ணிப் பார்த்திருக்கிறாயா?''

''சமையக்காரனை வெச்சுக்கலாம் அப்பா!''

''இது என்ன பொறுப்பான பதிலா குமார்?''

''சமையலுக்காக ஒரு பெண்ணை நான் கல்யாணம் பண்ணிக்கணுமா?''

''சமையல் இல்லைடா! இந்த ஹாஸ்டல் வீடா மாறறதுக்கு; எனக்கு உயிர் போறதுக்கு முன்னாலே என் வம்சம் தழைக்கிறதுக்கு. உனக்கு எப்படிச் சொல்றது என்றே புரியவில்லை!''

''நாளைக்குப் பேசலாம் அப்பா!''

''நாளைக்கு என்ன நாளைக்கு? இன்னிக்கே பேசிடலாம். உன்கிட்டப் பேச வேண்டியது நிறைய இருக்கு. குமார், ஏன் என்னை இந்தமாதிரி நடத்தறே?''

''எந்தமாதிரி?''

''உன் அப்பாவை நீ அலட்சியமாப் பேசித் துன்புறுத்தறே என்கிறது எப்பவாவது உனக்குத் தெரிஞ்சிருக்கா?''

''கல்யாணம் கொஞ்சநாள் கழித்துப் பண்ணிக்கொள்கிறேன் என்றால் தப்பா அப்பா?''

''தப்பில்லை. தப்பு நீ அதைச் சொல்ற விதம்! தப்பு நீ என்கிட்ட நடந்துகொள்ற விதம்; அலட்சியம்! இந்த வயசானவனுக்கு நீ காட்டுகிற நன்றி....அந்த ராமநாதன் உனக்கு வேலை வர்ங்கிக் கொடுக்க எத்தனை உதவி பண்ணியிருக்கார் தெரியுமா?''

''தெரியும். அதற்குப் பதிலா அவர் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டாக் கடன் தீர்ந்துவிடும். இல்லையா? அப்படித்தானே?''

''போடா! நீ என்னோட பேசவேண்டாம்!''

''இல்லை, பேசணும் அப்பா! ராமநாதன் அவ்வளவு சிரத்தையா எனக்கு வாங்கிக் கொடுத்தாரே அந்த வேலை; அதை நான் இன்று விட்டுட்டேன்!''

''என்னது?''

''ஆமாம். ரெஸிக்னேஷன் இன்னிக்கு எழுதிக் கொடுத்துவிட்டேன். நாளையிலிருந்து நான் ஆபீஸ் போகப் போவதில்லை.''

''ஏண்டா? ஏன்?''

''எனக்கு இந்த வேலை பிடிக்கவில்லை.''

''ஏன் ஏன்?''

''அங்கே சூழ்நிலை சரியாக இல்லை. மனுஷனை நடத்த மாட்டேங்கறான். மானேஜர் வீட்டுக்குச் சர்க்கரை வாங்கிண்டு வா என்கிறான். மரியாதை இல்லை.''

''குமார், நிஜமாவே நீ வேலையை விட்டுட்டியா?''

''ஆமாம்.''

''உன்னுடைய 'தர்ட் க்ளாஸ்' அழகுக்கு இதைவிட நல்லதா வேறே வேலை கிடைக்குமா? என்னடா, இது என்ன?''

''கிடைக்கிறதாத் தேடிப் பார்க்கப் போறேன்.''

எனக்கு உடம்பு பதற ஆரம்பித்துவிட்டது. இவனுக்கு இந்த வேலை வாங்கிக் கொடுக்க எவ்வளவு அலைந்தேன்? எத்தனை சிபாரிசு! எத்தனை கௌரவக் கேடு! ஒரு மாதம் முழுவதும் செல்லவில்லை; பிடிக்கவில்லையாம்!

''என்னிடம் ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா குமார்?''

''சொல்லியிருந்தா என்ன சொல்வீங்க? ரொம்பக் கஷ்டப்பட்டுக் கிடைத்த வேலை; விட்டுடாதே! அப்படித்தானே? எனக்குச் சரிப்பட்டு வரவில்லை அப்பா!''

''சரி, வீட்டிலேயே இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டு எதிர் எதிரே இருக்கலாம். என் பென்ஷனிலே நாம ரெண்டு பேரும் எடுப்புச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டு ஒருத்தரை ஒருத்தர் வெறுத்துக்கொண்டு இருக்கலாம்; அப்படித்தானே!''

''அப்படி வேண்டாம் அப்பா. நான் உங்களுக்குச் சரியான மகனல்ல. நீங்க வாங்கிக் கொடுத்த வேலையை ஒத்துக்கலை. நீங்க சொன்ன பொண்ணை ஒத்துக்கலை. உங்கள் எதிர்பார்ப்புக்கு நான் ரொம்பக் கீழே இருக்கேன்! எனக்கு என்னவோ அந்த வேலை சரிப்பட்டு வரலை. இன்னொரு வேலை கிடைச்சாப் பார்க்கலாம். சொந்தமாத் தேடறேன். உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன். என் பெட்டி படுக்கை எல்லாத்தையும் எடுத்துண்டு போய் ஏதாவது ரூம்லே இருக்கேன். உங்க பென்ஷன்லே சமாளிக்கிறது கஷ்டம். நான் ஏதாவது டெம்பரரியாப் பெட்ரோல் பங்கிலே பெட்ரோல் போடறேன். அல்லது என்னவோ செய்துக்கறேன். ஐ கேன் ஸர்வைவ்!''

''இடியட்! நான் எதுக்காக உயிரோட இருக்கேன் தெரியுமா? உனக்காகடா!''

''இல்லை அப்பா, எனக்காக நீங்க இவ்வளவு அலைய வேண்டாம்; மனசு கஷ்டப்பட வேண்டாம். நான் விலகிக்கிறேன்! எனக்கு ஒருத்தரும் சோறு போட வேண்டாம்.''

''அடேய்! நான் அப்படிச் சொல்லவே இல்லை. நீ எனக்குப் பாரம் அல்ல. ஆனா உன்கிட்டச் சிலதை எதிர்பார்க்கிறது தப்பா? உன்னைப் படிக்க வெச்சது தப்பா? உனக்காக அலைஞ்சது தப்பா? உனக்கு வேலை வாங்கிக் கொடுத்தது தப்பா? அப்படி வாங்கிக் கொடுத்த வேலையை நீ செருப்பு உதறுகிறப்பலே உதறி எறிஞ்சா, 'ஏண்டா விட்டேன்னு?' கேட்டது பெரிய தப்பு! இல்லை? அதனாலே உடனே, 'வீட்டை விட்டுப் போறேன், நானா பொழைச்சுக்கறேன்'னு கிளம்பிடறதா?''

''இல்லைப்பா. எனக்கு அவமானமா இருக்கு, உங்களுக்குப் பாரமா இருக்கிறது.''

''உனக்கு அவமானம்; எனக்கு வருத்தம். அந்த வருத்தத்தைப் பற்றி யோசித்தது உண்டா நீ? கிழவன் மனசை ஊசியால் குத்தறோம் என்று தெரியலையா உனக்கு? வீட்டை விட்டுப் போகிறேன் என்கிறாயே!''

''இல்லை, எனக்கும் சுதந்தரமா இருக்கணும் என்று ஆசையா இருக்காதா, அப்பா?''

''உனக்கு ஏன் சுதந்தரம் இல்லையா? உனக்கு இஷ்டமில்லைன்னா வேலையை உதறுகிற சுதந்திரம் இல்லையா? உன் அப்பாவோட இவ்வளவு அப்பட்டமாப் பேசற சுதந்தரம் இல்லையா? குமார், ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லிவிடு. நீ வேணுமென்றே என்னை இப்படிச் சித்திரவதை பண்ணுகிறாய். அதற்குக் காரணம் நிச்சயம் இருக்கணும். ஏன்? நான் என்ன செய்தேன்? ஏன் இப்படி என்னை நடத்துகிறாய்? அதை மட்டும் சொல்லிவிடு.''

''அப்படி எல்லாம் இல்லை அப்பா. நம்ம இரண்டு பேருக்கும் நடுவிலே கம்யூனிகேஷன் இல்லை. என்னை உங்களாலே புரிஞ்சுக்க முடியலை. உங்களை என்னாலே புரிஞ்சுக்க முடியலை. நீங்க வந்து உங்களோட கோணத்திலிருந்தே என்னைப் பார்க்கிறீங்க. நான் என்னோட கோணத்திலிருந்தே உங்களைப் பார்க்கிறேன். உதாரணமா, அம்மாவை நீங்க ட்ரீட் பண்ணினது சரியில்லை. அது என் கோணம். உங்க கோணத்திலிருந்து அதற்குக் காரணம் இருக்கலாம். சர்ச்சை அதைப்பற்றி இல்லை. உங்க பார்வையிலிருந்து எனக்கு நீங்க விரும்பறது ஸ்திரமான வேலை. சமூகத்திலே பத்திரம், கல்யாணம், அப்புறம் வம்ச விருத்தி. உங்களைப் போல நானும் மகனைப் பெற்றுக் கொண்டு, இதே வீட்டிலே முப்பது வருஷம் கழிச்சு அவனோட வாதாடணும். இந்தக் கதை தொடர்ந்து நடக்கணும். நான் என்னை எப்படிப் பார்த்துக்கறேன்? சொல்றேன். நான் ஒரு ஸைபர்; மூணாவது கிளாஸ் பி.ஏ. என் அப்பா தயவாலே, ராமநாதன் தயவாலே, ஏதோ ஒரு அட்டைப் பெட்டி தயாரிக்கிற கம்பெனியிலே மானேஜரின் மனைவிக்கு ஸானிடரி டவல் சக்கரை எல்லாம் வாங்கிக் கொடுக்கிற வேலை பார்க்கணும்! கொடுக்கிற சம்பளத்திலே சொல்ற பெண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கணும். தினம் காலை ஷேவ் பண்ணிண்டு, பஸ் ஏறி ஆபீஸ் போய்த் திரும்ப வந்து மனைவியைப் பார்த்துச் சிரித்து அவளோட சினிமாவுக்குப் போய், டான்ஸ் கச்சேரிக்குப் போய், பிறர் பார்வைக்காகச் சந்தோஷமான குடும்பத் தலைவனா வாழற வாழ்க்கை எனக்கு, என் மனசுக்குப் பிடிக்காததா இருக்கலாம்னு யோசிச்சுப் பார்க்க முடியுமா உங்களாலே?''

''எனக்கு எதிர்காலத்தைப் பத்தி, இந்த ஜனங்களைப் பத்திக் கவலையா இருக்கலாம். எனக்கு வேறு வித ஆசைகள் இருக்கலாம். எனக்குச் சித்திரம் வரைய அல்லது சின்னச் சின்னதாக் கவிதை எழுத ஆசை இருக்கலாம். இல்லை, செவிட்டு ஊமைப் பையன்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒரு பைத்தியக்கார ஆசை இருக்கலாம். புதுசா வேறு விதமா ஒரு ஃபிலிம் எடுக்க ஆசை இருக்கலாம். இல்லை, கவலையே இல்லாம பனாரஸ்லே அலையறதுக்கு ஆசை இருக்கலாம். அல்லது.. இதெல்லாம் உங்களுக்குப் புரியாது அப்பா!''

அவன் மாடிக்குச் சென்றுவிட்டான். புரியவில்லைதான். என் மகனை எனக்குப் புரியவில்லைதான். எதிரே என் மனைவி படத்தைப் பார்த்தேன். அந்தப் புன்னகை; நிரந்தரமான புன்னகை! சற்று நேரம் யோசித்தேன். இந்தப் பாசமும் கவலையும் என்னை விடவில்லையே? பயம் காட்டுகிறானே! தனியாகப் போய்விடுவானோ? போக மாட்டான்; அப்படியெல்லாம் செய்ய மாட்டான்.

சட்டையை மாட்டிக்கொண்டு, செருப்பில் காலைச் செருகிக்கொண்டு கிளம்பிவிட்டேன். ராஜரத்தினத்தைப் பார்க்க வேண்டும். அவர் என் மகனுக்கு ஒரு வேலை வாய்ப்பைப் பற்றிச் சொல்லியிருந்தார். சிபாரிசு கேட்கலாம்.

மறுபடி முயன்று பார்க்கிறேன்! ★


Deepavali Greetings
from
Rane
MANUFACTURERS OF:
TIE ROD ENDS
STEERING LINKAGES
CLUTCH PLATES
RANE (MADRAS) LIMITED
47, Velacheri Road, Madras-32.
Criterion RE 2478

உங்கள் எல்லோருக்கும்

எங்கள் மனமார்ந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

எங்களிடம் உங்களுக்குத் தேவையான உயர்ந்தரக

வைரங்கள்

மாணிக்கங்கள்

மரகதங்கள்

நீலங்கள்

கோமேதகம்

வேலைப்பாடுள்ள

தங்க நகைகள்

வெள்ளிப் பாத்திரங்கள்

இன்னும்

அருமையான பரிசு

வகைகள்

(CUPS-TROPHIES-CASKETS & REPLICAS)

நிறைய கைவசம் உள்ளன.

எங்கள் ஷோ-ரூமுக்கு விஜயம் செய்யுமாறு உங்களை அழைக்கிறோம்

பாபாலால் & கம்பெனி

(ஸ்தாபிதம்: 1910)

வைர, தங்க நகை வியாபாரிகள்

ராட்டன் பஜார் : : : : மதராஸ்-3.

தந்தி: "NECKLACE" போன்: 32396 39573

ஹேமா நல்ல உயரம்

ஆர். சூடாமணி

அங்கேதான், அந்த வாசல் ஜன்னலுக்குப் பின்னால், அவள் நின்றுகொண்டிருப்பாள். பாதியளவுத் திரைச் சீலைக்கு ஓரடி மேலே முகம் தெரியும். நல்ல உயரம் அவள்.

அவளைப் பார்ப்போரின் கவனத்தில் முதலில் பதியும் அம்சம் அந்த உயரந்தான். அவளது தேர்ந்த அழகுகூட அதன் பிறகு ஒரு பின்னினைவாகத்தான் உணர்வில் எழும். பார்ப்பவர்கள் மேல் தவறில்லை. கண்ணில் படும் உயரம் அல்ல அவள் உயரம்; கண்ணில் அறையும் உயரம். உட்கார்ந்திருக்கும்போதுகூட அவ்வளவாகத் தெரியாது. எழுந்து நின்றாளானால் பார்க்கும் கண்கள் குபீரென்று ஏணி ஏற வேண்டியதுதான்.

அலுவலகத்திலிருந்து மாலையில் வீடு திரும்பும்போதே ஜன்னலின் மேற்பகுதி முழுவதையும் வியாபித்துக்கொண்டு நிற்கும் அவளைப் பார்த்துப் பரசுராமனுக்கு ஒரு கணம் தூக்கி வாரிப் போடாத நாளே இல்லை. மேலாக உயர்த்திய பார்வையில் அந்தக் காட்சியைப் பதித்துக்கொண்டு உள்ளே நுழைபவர் அவளிடம், "ஏன் எப்பப் பார்த்தாலும் வாசலைப் பார்த்துண்டு அந்த ஜன்னல்கிட்டயே நிக்கறே? பொண்ணாய் லட்சணமாய் அடக்கத்தோட உள்ளே இருக்கக் கூடாது?" என்று கடிந்துகொள்ளும் போதும் அவளை அண்ணாந்து பார்த்துத்தான் கடிந்துகொள்ள வேண்டும். அவரைவிட அவள் ஐந்து அங்குலம் அதிக உயரமானவள்.

அவளைப் பார்க்கும்போதெல்லாம் பரசுராமனுக்கு ஒரே எண்ணந்தான்: 'இந்தக் குடும்பத்தில் இவள் எப்படி இவ்வளவு உயரமாக இருக்கிறாள்?'

அவர் உயரம் ஐந்தேகால் அடிதான். இறந்து போய்விட்ட அவர் மனைவி ஐந்தடிக்கு மயிரிழை குறைவாகவே இருப்பாள். சந்ததியான மூன்று பெண்களில் முதல் இருவரும் பெற்றோரின் வாகு; ஐந்தடி உயரந்தான். இந்த ஹேமா மட்டும் ஐந்தடி எட்டு அங்குலத்துக்கு எப்படி வளர்ந்தாள்? 'ஃபைவ் எய்ட்! கடவுளே! ஒரு சராசரி ஆண்பிள்ளையின் உயரம்!' தெருவில் நடந்தால் எல்லோரும் அவளை வெறித்துப் பார்ப்பார்கள். அவளைவிடக் குள்ளமான ஆண்கள் ஒரு புறமாய் ஒதுங்கி நடக்க, மற்றப் பெண்கள் வாய்பிளந்து அண்ணாந்து பார்க்க, தன் வளர்த்திக்கு மன்னிப்புக் கேட்பவள் போல் அவள் முதுகைக் கூனித் தலைகுனிந்து சங்கடத்துடன் வேகமாய் நடந்து போவாள்.

'என் குடும்பத்திலோ அவள் தாயின் குடும்பத்திலோ யாரும் உயர வாகு கிடையாது. பின்னே இவள் யாரைக் கொண்டு இப்படி நெட்டையாய் வளர்ந்திருக்கிறாள்? எத்தனையோ தலைமுறைகள் முன்னால் வாழ்ந்த யாரைப் போலவாவதுகூட ஒரு குழந்தை பிறக்க முடியுந்தான். நாங்கள் அறியாத யாரோ ஒரு மூதாதை நல்ல உயரமாக இருந்திருக்கலாந்தான். எனினும்....'

அந்த 'எனினும்' பரசுராமன் திரும்பத் திரும்ப மோதிக்கொள்ளும் குறுக்குச் சுவர்.

அந்தச் சுவருக்குப் பின்னால் என்ன இருந்தது? அவர் அதை யோசிக்க விரும்பவில்லை. ஆனால் அடிமனத்தின் ஊமைப் பிரக்ஞையில் அந்த யோசனை அகலவேயில்லை.

ஹேமாவின் தாய் மிகவும் அழகாக இருந்தவள். செதுக்கு நேர்த்தி படைத்த அந்த அமைப்புத்தான் ஹேமாவின் உறுப்புக்களிலும் பொலிந்தது, எல்லாம் சற்றுப் பெரிய அளவுகளில். இந்தச் சீரிய அழகை இப்படி ஓர் உருவத்தில் படைப்பதற்காக நான்முகன் முதலில் சின்ன அளவில் பயிற்சி செய்து பார்த்துக் கொண்ட 'ரஃப் காப்பி' தானோ அவள் தாய் என்று வியக்கும்படி இருந்தது அந்த உருவ ஒற்றுமை.

'உயரத்தைத் தவிர மற்ற எல்லா அம்சத்திலும் ஹேமா அப்படியே அவள் அம்மாவின் அச்சு' என்று பரசுராமன் நினைத்துக்கொள்வார். அந்த எண்ணத்திலேயே உணர்வில் ஏதோ நெருடும். ஹேமா தாயின் சாயல். பெரிய பெண்கள் இருவரும் அவருடைய சாயலாக அல்லவோ இருந்தார்கள்?

இவள் ஏன் அவர் சாயலாக இல்லை? அப்படியே தாயின் மறு வார்ப்புத்தான். ஆனால் அதிலிருந்து ஏதும் நிர்ணயமாகவில்லையே? சாயல் ஒற்றுமை இல்லாவிட்டாலும் ஒரு குழந்தையின் தாய் யார் என்பது உலகம் அறிந்த வெளிப்படைதான்; தந்தையின் விஷயந்தானே....?

"அப்பா!"

"என்னை அப்பான்னு கூப்பிடாதே!"

ஹேமாவுக்கு ஒன்றும் புரியவில்லை; "ஏன்?"

பரசுராமன் முகத்தில் அசடு தட்டிவிட்டது. இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்லமுடியும், தம் ஆண்மைக் கௌரவத்துக்கு இழுக்கு நேராமல்? அதை அவளுக்குத் தெரியவிடுவதும் அவருக்கு அவமானமாக இருந்தது. இத்தனை இருந்தாலும் அவள் அப்பா என்னும்போதெல்லாம் திடுக்கிடலும் ஆத்திரமும் இல்லாமல் அதைச் செவியுற முடியவில்லை.

"மேல்நாடுகளில் அப்பாவைப் பேர் சொல்லியே கூப்பிடறாளாமே சிலபேர், அப்படிக் கூப்பிடணுங்கறேளா?" ஹேமா சிரிப்பில் தன் வேதனையை மறைத்துக் கொண்டே கேட்டாள். வழக்கம் போலவே அவள் பார்வை அவர் மீதின்றி ஒதுங்கியிருந்தது. தலையைக் குனித்து தந்தையைப் பார்க்க வேண்டிய அவசியம் அவளுக்கு எப்போதுமே ஒரு சங்கடமான

அநுபவந்தான். தன்னை அறியாமல் முதுகைக் கூனிக்கொள்வாள்; அல்லது சட்டென்று உட்கார்ந்துவிடுவாள்.

''நீ எதுவுமே கூப்பிட வேணும். ஏதாவது சொல்லணும்னா நேரே விஷயத்தையே சொல்லிடு. ஒண்ணுமில்லேன்னா வாயை மூடிண்டு சும்மா இரு.''

அப்பா ஏன் அவளை இவ்வளவு வெறுக்கிறார்? இரண்டு அக்காமாரிடமும் சகஜமாகத்தானே, இயல்பான பாசத்துடன் பழகுகிறார்? அவ்விருவரும் மணமாகித் தாயாகி வேறு ஊர்களில் குடித்தனம் செய்து கொண்டிருந்தாலும் அவர்கள் இங்கு வரும்போதெல்லாம் அன்பைப் பொழிகிறாரே. அவளிடம் மட்டும் ஏன் இந்த மீளாத கடுப்பு? அவரைவிட உயரமாக இருப்பதனாலா?

''இப்போ என்ன சொல்ல வந்தே? அதைச் சொல்லித் தொலை.''

''ஒண்ணும் இல்லே. என் சிநேகிதி ஒருத்தியும் நானும், புது ஹிந்திப் படம் ஒண்ணு வந்திருக்காம், ரொம்ப நல்ல படமாம்....அவ போறா..''

''பேஷாப் போய்ட்டு வரட்டும். நீ உள்ளே போய் உன் வேலையைப் பார்.''

''அப்பா!''

''அப்பா அப்பான்னு என்ன எப்பப் பார்த்தாலும் கூப்பிட்டுண்டிருக்க வேண்டியிருக்கு! பச்சைக் குழந்தையா? அதான் குதிர் மாதிரி வளர்ந்து நிக்கறியே!''

''இல்லே, அந்தச் சினிமா....''

''உனக்கு ஹிந்தி என்ன புரியும்?''

''அவளுக்குப் புரியும்; அதான் என் சிநேகிதிக்கு. அவ விசாரத் படிச்சிருக்கா. எனக்கு அவ விளக்கிச் சொல்வா.''

''அப்படியாவது இன்னொருவர் பிராணனை வாங்கிச் சினிமாப் பார்க்காட்டா, தலையா வெடிச்சுடும்?''

நிச்சயம் இல்லை; எதுவுமே நிச்சயம் இல்லை. இதுபோன்ற ஒரு சந்தேகங்கூட ஏன் எழ வேண்டும் முதலில்? அதற்கு இடம் கொடுக்கும்படி அவர் மனைவி என்றுமே நடந்துகொண்டதில்லையே. எனினும்....

அத்தகைய ஒரு பேரழகியைத் தாம் முழுமையாக அடைந்திருக்க முடியுமா என்ற தாழ்வு மனப்பான்மையால் விளைந்த ஒரு தவிப்பா? சுயசந்தேகம் அவரை விட்டு என்றுமே நீங்கியதில்லை. அது காரணமாக எப்போதும் தம் அதிகாரத்தை நிலைநாட்டிக்கொண்டே இருப்பார். அந்த அழகிய மனைவியிடம் மீதமீறி ஈடுபட்டிருந்ததும் அதன் இன்னொரு வெளியீடு. தாம் முற்றும் அவளுக்கு அடிமையாகிவிடவில்லை என்று அவளுக்கு நிரூபித்துக் காட்டுவதைப் போல் அவ்வப்போது வேலி கடத்தும் போயிருக்கிறார். கைநீட்டி அவளை அடித்ததும் உண்டு. அந்த அழகிய சிறு படிமம் போன்ற உருவில் பெருங் கண்கள் நோவினால் கூசிச் சுருங்கும்போது அதில் தம் ஆதிக்கத்தைக் கண்டு கொண்டாற்போல் ஓர் உக்கிரமான மகிழ்ச்சி கொள்வார்.

அவ்விதமான தமது கொடிய நடப்புக்குப் பழிவாங்கத்தான் அவள் ஒருவேளை....ஒருவேளை....

ஹேமா மட்டும் எப்படி இவ்வளவு உயரமாக இருக்கிறாள்?

அவருடைய நண்பர்களில், அவர் மனைவியின் உறவினர்களில், அவளுக்குத் தெரிந்தவர்களில், உயரமான ஆண்பிள்ளை யார் இருக்கிறார்கள் என்று சிந்தித்துக்கொண்டிருப்பதிலேயே பல இரவுகள் தூக்கமின்றிக் கடந்தன.

ஹேமா வளர வளர இதே சிந்தனைதான்.

சாயலில், பேச்சு முறையில், ஒரு சைகையில், ஒரு நடைப் பாணியில், ஒரு சாப்பாட்டு ருசியில், ஏதேனுமொன்றில் ஹேமா அவரைப் போன்றிருந்தால்? ஆனால் ஒவ்வொன்றிலுமே அவள் தன் தாயின் வாரிசுதான். இதனால் குற்றம் ஏதும் ருசுப்பட்டுவிடவில்லை என்பது உண்மையே. ஆனால் மனநிம்மதிக்கான ஊர்ஜிதமும் கிடைக்கவில்லையே!

அந்த ஐயம் வளர வளர மனைவியிடம் கொடுமையும் வளர்ந்தது. ஆனால் வெளிப்படையாக அவளை அவர் கேட்டதில்லை. தமக்கு அவமானம் என்ற எண்ணம். தம்மிடமே தாம் அவநம்பிக்கை கொள்வதை அவளுடைய முகத்தின் ஓர் ஏளனக் குறிப்பில் கண்டுவிடுவோமோ என்ற கூச்சம். எல்லாவற்றையும் விட, நேரான கேள்விக்கு அவள் என்ன பதில் சொல்லிவிடுவாளோ என்ற திகில். இடியாக விழக்கூடிய நிச்சயத்தை விட இந்தத் தெரியாத தவிப்பைச் சகித்துக்கொள்வதே எளிதாக இருக்கும் போலிருந்தது. ஆனால் மனைவி



இறந்தபிறகு, பெரிய பெண்களைத் திருமணம் செய்து அனுப்பிவிட்ட பிறகு, வீட்டில் அவரும் ஹேமாவும் மட்டுமாக வாழ்ந்துகொண்டிருந்த போது, அந்த நிச்சயமின்மையின் பிடி நாளுக்கு நாள் அதிகப் பயங்கரமாயிற்று.

மணமான பெண்கள் வருவார்கள். அவர்கள் குழந்தைகளை அவர் தாபத்துடன் கவனிப்பார். மாப்பிள்ளைகள் சராசரி உயரம் இருந்த போதிலும் குழந்தைகள் யாவரும் பொடிச் சரக்குத்தான். படியும் உழக்கும் ஆழாக்குமாய் வீடு நெடுக விளையாடுவார்கள். அந்தக் கீழ்த் தலைமுறையிலேனும் ஏதாவது ஒரு குழந்தை உயரவாகு படைத்திருந்தால் அவருக்கு ஆறுதல் உண்டாகியிருக்கும். யாராவது ஓர் உயர மூதாதையை அவர்கள் கொண்டிருக்க முடியுமானால் ஹேமாவும் அப்படியே செய்திருக்கலாம் அல்லவா? ஆனால் இந்த எல்லாக் குழந்தைகளும் அல்லவோ பொம்மை வடிவங்களாக இருக்கின்றன?

அவர்களுக்கு ஹேமாவென்றால் உயிர். அவள்மேல் ஏறிக் குதிப்பார்கள். தங்களைத் தூக்கிக்கொள்ளச் சொல்லி அவள் தோள்மேல் ஏறி நின்று, ''நான் இப்ப மானம் வரைக்கும் ஒசந்துட்டேன்!'' என்று எக்காளமிடுவார்கள். ''சித்தி ஒரு பன மரம்!'' என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

சித்தியா? ஆமாம், ஒரு தாய் வயிற்று மக்கள் என்றாலும் சகோதரிகள்தாமே? சே! என்ன நினைப்பு! இதெல்லாம் கூடாது.

ஏன் கூடாது?

ஹாலில் ஹேமா சிரித்துக்கொண்டே படுத்திருக்க, குழந்தைகள் அவள் மேல் விழுந்து புரள்வார்கள். கதவில் சாய்ந்து நின்று அக்கா, ''கலிவரும் லிலிபுடன்ஸும் மாதிரி இருக்கு!'' என்று வேடிக்கை செய்வாள்.

'திக்'கென்னும். எப்படி இவள் மட்டும் இத்தனை உயரமாக இருக்கிறாள்?

''அப்பா, இவாளெல்லாம் விளையாடற அழகைச் சித்த உக்காண்டு தான் பாருங்களேன்!''

''போருண்டி! அவாளுக்குச் சரியா விளையாட நீயும் குழந்தையா? அப்பா அப்பான்னுண்டு.... நிமிஷத்துக்கு நூறு அப்பாவா?''

குழந்தையரின் தோழமையினால் அவள் முகத்தில் அவரையும் பொருட்படுத்தாமல் வெடித்து எழுந்திருந்த இன்பம் உடனே கருகிப் போய்விடும்.

அப்பா ஏன் அவளை இப்படி வெறுக்கிறார்?

அவளுக்காகப் பணம் செலவழித்துக் கல்லூரியில் சேர்க்க அவருக்கு விருப்பம் இல்லை. ஆனால் முதல் இரண்டு பெண்களுக்கும் பட்டப்படிப்பு அளித்திருந்தபோது அத்தனை வெளிப்படையாக வித்தியாசம் காட்டவும் முடியவில்லை.

ஒரு நாள் அவள் - அப்போது அவளுக்குப் பதினெட்டு வயது - அவரிடம் வந்து சொன்ன தகவலைக் கேட்டு அவர் ரௌத்திராகாரமாகி விட்டார்.

அவருடன் பேசுவதிலுள்ள தயக்கம், அவரது சுடு சொற்களுக்கு அஞ்சும் துடிப்பு, அவரை நெருங்கிப் பழகச் சுவாதீனமில்லாத அந்நியத் தன்மை - இவற்றையெல்லாம் மறந்துவிட்டு அவள், உற்சாக முகத்துடன் கண்கள் மின்ன அவரருகில் வந்து நாணமும் மகிழ்ச்சியும் கலந்து ஒலிக்கும் குரலில் செய்தி சொன்னபோது அவர் வெகுண்டெழுந்தார்.

''அடி பாவி! இத்தனை கொழுப்பேறிப் போச்சா உனக்கு? எவன் மேலேயோ ஆசை, கல்யாணம் பண்ணிக்கணும் அப்படின்னு வெட்கம் மானம் இல்லாம வந்து எங்கிட்டே சொல்ற அளவுக்குத் துளிர்த்துப் போயிட்டியா? எனக்குப் பழி ஏற்படுத்தறத்துக்குன்னே சனியன்மாதிரி வந்து பொறந்திருக்கியே!''

''இதில் பழி என்னப்பா இருக்கு? கல்யாணம் பண்ணிண்டால் தப்பா?''

''சீ கழுதை! வாயை மூடு. பெரியவா பார்த்துப் பண்ணி வைக்காம நீயா எவனையோ பிடிச்சுண்டு வந்து கல்யாணம் செஞ்சுக்கறேன்னு சொல்றியே; எத்தனை நெஞ்சுரம்!''

''அப்பா!''

''அப்படிக் கூப்பிடாதே என்னை. ரொம்ப நன்னாயிருக்கு உன் நடத்தை! இதோ பார், கண்ட பயலையும் நீ கல்யாணம் பண்ணிக்க முடியாது. முதல்லே ஒரு முழுக்குப் போடு அந்த ஆளுக்கு.''

''நாங்க ரெண்டு பேரும் பரஸ்பரம் விரும்பறபோது....''

''கூடாதுங்கறபோது பல்லுமேலே நாக்குப் போட்டு எதிர்த்துப் பேசற அளவுக்குத் துணிச்சல் வந்துடுத்தா உனக்கு? இதெல்லாம் காலேஜுக்குப் போறேன்னு வெளியே போய்ச் சுத்த

பட்டுப் போன்ற மிருதுவான
மேனி எழிலுக்கு

ராஜா

ஸ்னோ

ராஜா

டால்கம் பவுடர்



தயாரிப்பாளர்கள் : **மண்யம் & கம்பெனி** பெங்களூர்-20

2000 ஊசிகள் போட்டவர்

ஆஸ்த்மா சுகம்

T. S. கிருஷ்ணப்ப செட்டி,

309, மெயின் ரோடு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2. 8-8-1971

பெரியோர்களே!

22 வருஷங்களுக்கு மேலாக ஆஸ்த்மா என்னும் இளைப்பு நோயால் துன்பப்பட்டுக்கொண் டிருந்தேன். ஆங்கில வைத்தியத்தில் அவ்வப்போது சுகம் கிடைத்தது. ஊசிகள் போட்டது மட்டும் 2000 இருக்கும்.

நிரந்தரமான சுகம் தேடித் தண்டபாணி வைத்தியசாலைக்கு வந்தேன். 1966-ல் 2 மண்டலம் மருந்துகள் வாங்கிச் சாப்பிட்டேன். நிரந்தரமான சுகம் கிடைத்துவிட்டது. 6 வருஷமாக நோய் வருவதில்லை. தூசி பட்டாலும் வருவதில்லை. மழை, பனி எதிலும் வருவதில்லை. சுகவாழ்வு வாழ்கிறேன்.

(ஒ-ம்) T. S. கிருஷ்ணப்ப செட்டி 8-8-1971

இதுவரை ஆஸ்த்மா நோய்கள் 2000 கேஸ்களுக்கு மேல் சுகப்படுத்தியிருக்கிறோம். உங்கள் நோய் எதுவாக இருந்தாலும் விவரமாக எழுதவும். வசதிப்பட்டவர்கள் நேரில் வரலாம்.

புதிய கேட்லாக் இலவசம்

தண்டபாணி வைத்தியசாலை

புகைவண்டி நிலைய சாலை, பழனி (மதுரை மாவட்டம்) போன்: 250

கிளை: 2/63, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. போன்: 85843.

றதால் வர விபரீதம்: போரும் உன் காலேஜ் படிப்பு!''

கண்ணை உறுத்தும் அவளை இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கல்யாணம் செய்து கொடுத்து வெளியே அனுப்பிவிட்டால் என்ன என்று தோன்ருமல் இல்லை. ஆனுல் அதைவிட அவள் விருப்பத்தைச் சிதைப்பதிலும் அவள் கண் விங்க அழுவதைப் பார்ப்பதிலும் அவருடைய எரிச்சலுக்கு அதிக ஆறுதல் கிட்டியது போலிருந்தது. 'வெளியில் போனுல் தவருன எண்ணங்கள் வந்து கெட்டுப் போகிருள்' என்று ஒரு சாக்குச் சொல்லிக் கல்லூரியிலிருந்து நிறுத்தியதோடன்றி, எங்குமே அவளை அதிகம் போக விடாமல் வைத்திருந்ததில் ஒருவித வெற்றி உணர்வாகியது. உருவத்தில் அவள் பெரியவளாக இருந்ததனுல் அவளுடைய சிறைத் தண்டனை இரு மடங்கு பரிதாபகரமாக இருந்தது. அந்த அளவுக்கு அவருடைய வெற்றியுணர்விலும் சுவை கூடியது. பெரியதைச் சிறைப்படுத்த இயன்றுவிட்ட சிறியதன் எக்காளம் அது.

அதன் பிறகுதான் அவள் வாசல் ஜன்னலிடம் நின்று தெருவைப் பார்த்துக்கொண்டிருக்க ஆரம்பித்தாள். போவோர் வருவோரைப் பார்ப்பது ஒரு பொழுதுபோக்காகவும், வெளியுலகத்துடன் ஒரு தொடர்பாகவும் இயங்கியது. அங்கு நின்றுகொண்டிருப்பவளைப் பார்த்தபடியே மாலையில் பரசுராமன் சிடுசிடுப்புடன் வீட்டுக்குள் நுழைந்து, ''எவனையானும் கண்ணுலேயே மயக்கிடலாம்னு அப்படி ரோடை வெறிச்சுப் பார்த்துண்டு நிக்கறியா? மானங்கெட்டவளே, போ உள்ளே!'' என்று சீறும் போது உள்ளத்துள் அவருக்கு என்ன என்னவோ எண்ணங்கள் வரும். நிஜத்திலேயே தன்னைப் பறை சாற்றிக் கொள்ளும் ஒரு விலைமகளைப் போலத்தான் அங்கு நிற்கிருளோ? எவன் மீதோ காதல் என்று சொன்னதுகூட அடிப்படையில் ஒழுக்கக் குறைவினுல் நேர்ந்ததுதானே? மற்றவற்றைப் போல் இதிலும் தாயைக் கொண்டிருந்தாளானுல்.... அப்படியானுல் அவர் மனைவியுந்தானே....? சேசே!

ஆனுல், இவள் மட்டும் எப்படி இத்தனை உயரமாக இருக்கிருள்?

அவளை நிமிர்ந்து பார்க்க வேண்டியிருந்த உடற்போக்கான அவசியம் ஆண் என்ற முறையிலும் அவருக்கு ஓர் அவமானமாக இருந்து எரிச்சலை இரு மடங்காக்கியது. ''வாசலைப் பார்த்துண்டே நிக்கரு. ஒரு வேலைக்கும் துப்பில்லாமல். மரமாட்டம் வளர்ந்துட்டாப் போதுமா? ஆம்புளைக் கணக்காய் இது என்ன ஒரு ஒசரம்! கோரம் கொதிச்சுண்டு?''

அப்பாவுக்கு அவளிடம் ஏன் இத்தனை வெறுப்பு?

ஜன்னல் சிலைக்கு ஒரடி மேலே தெரிந்த முகம் அதிர்ச்சியில் மாறியது. அவள் தெருவுக்கு ஓடி வந்தாள். ஆட்டோ ரிக்ஷாவில் மோதுண்டு கீழே மயங்கி விழுந்திருந்த பெரியவரைச் சுற்றி அதிகக் கூட்டம் இல்லை. பிற்பகலின் ஓய்வில் தெரு சோம்பிக் கிடந்தது. விபத்தைக் கண்டு கூடியிருந்தவர்களில் அவள் தான் அதிக உயரமாக இருந்தாள். இளமையின் வாளிப்பான வலிமை வேறு. வயது முதிர்ந்து உலர்ந்து போயிருந்த கிழவரை ஒருத்தியாகவே தூக்கி அவரை மோதியிருந்த ரிக்ஷாவிலேயே கிடத்தினுள். இப்போது தன் உயரத்துக்காகக் கூனிக் குறுகாமல் உயரமே ஒரு தகுதியாக நிமிர்ந்து நின்று தன்னை மறந்து செயற்பட்டபோது அவளிடம் அலாதியான ஒரு கம்பீரம் வந்துவிட்டாற்போல் இருந்தது. மற்றவர்கள் அவளை வழக்கமான விசித்திரப் பார்வையால் அளந்தபோதே அந்தப் பார்வையில் இப்போது ஒரு மரியாதையும் தெரிந்தது.

ஆட்டோ ரிக்ஷா காலியாகத்தான் இருந்தது. கையைப் பிசைந்து தவித்தவாறு, ''நான் சரியாய்த்தான் வந்தேன், அவருதான்....'' என்று திரும்பத் திரும்பச் சொன்ன சாரதியைப் பார்த்து ஹேமா, ''அவரை நேரே ஜி. எச்சுக்கு ஓட்டிண்டு போங்க'' என்று இயல்பாக உத்தரவிட்டதும் அவன் உடனே அடங்கிப் போய், அதேபோல் இயல்பாக அந்த ஆணையை ஏற்றுக்கொண்டான். பெரியவருடன் வந்திருந்த ஒரு பையனும் வண்டியில் மெல்ல ஏறிக் கிழத் தலையைத் தன்மீது சாய்த்துக் கொண்டு உட்கார்ந்ததும் ஆட்டோ பட்டாசு வெடித்துக் கொண்டு விரைந்து போயிற்று. சிறு கும்பலும் இன்னெரு முறை ஹேமாவை ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கலைந்தது.

அவள் திரும்பினுள். எதிரே ஒருத்தி மிஞ்சியிருந்தது அப்போதுதான் தெரிந்தது. நடுத்தர வயதுடைய அந்த மாது ஹேமாவை அண்ணுந்து பார்த்துப் புன்னகைடன், ''நீங்க ரொம்ப உயரம்!'' என்ருள்.

சிறிது நேரம் விடுதலையுற்ற பின் மீண்டும் பழைய தளைகள் யாவும் தன்னைப் பிணைத்துக்கொண்டுவிட்டாற்போல் ஹேமா சட்டென்று முதுகைக் கூனியவளாய் வாட்டத்துடன், ''ஆமாம்....ஸாரி'' என்ருள்.

மற்றவள் சிரித்துவிட்டாள். ''ஆபத்துச் சமயம்னு ஆளையே அலாக்காய்த் தூக்கிக் காப்பாத்த முடியுதே உங்களுக்கு! இந்த மாதிரி நாலு பேர் எங்க விடுதியில் இருந்தா ரொம்பச் சௌகரியமாயிருக்கும்.''

''என்ன விடுதி?''

''நாங்க சில தோழிகளாய் ஒரு அநாதையர் விடுதி நடத்திட்டு வரோம். அங்கே திக்கில்லாம வந்து சேர்றவங்களை யெல்லாம் பார்த்தாக் கண்ணிலே ரத்தம் வந்துடும். வாழ்க்கையிலும் வறுமையிலும் நொந்து பாதி உசிராய் வரவங்களும் நோயில்

விழறவங்களும்....நாங்க மனப்பூர்வமான தொண்டுதான் செய்யறோம். இருந்தாலும் இன்னும் நிறைய உதவி தேவையாய்த்தான் இருக்குது.''

''உதவின்னு? பண உதவியா?''

''பணபலம் ஓரளவு இருந்ததனுல்தான் இந்த முயற்சியையே தைரியமாய்த் தொடங்கினேம். எங்களுக்கு வேண்டியது முக்கியமாய் மனுஷ உதவிதான். அந்த அநாதைகளைக் கவனிச்சுக்கவும் மேற்பார்க்கவும் எழுதப் படிக்கவோ வேறு தொழில்களோ கத்துக் கொடுக்கவும் இன்னும் பல அலுவல்களுக்கும் போதுமான ஸ்டாஃப்தான் இல்லே.''

ஹேமா அவளையே பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தப் பேச்சைக் கேட்கக் கேட்க அவள் கண்களில் புதியதோர் ஒளி சுடர்விட்டது.

தொடர்ந்து சில நாட்கள் ஹேமா அந்தப் பெண்மணியைச் சந்தித்துப் பேசினுள். பிறகு ஒரு நாள் பரசுராமனிடம் தன் முடிவை அமைதியாகத் தெரிவித்தாள்.

''என்னது! வீட்டை விட்டுப் போறியா? விளையாடறயா என்ன? காலை உடைச்சுடுவேன், மூதேவி!'' என்று அவர் குதித்தார். உடனே அந்த மிரட்டலின் அசட்டுத்தனம் உணர்வாகி முகம் சிவந்தது. தாம் அவளைவிடக் குள்ளம் என்பதனுல் அவளை நெருங்கி நிற்கவும் கூச்சப்பட்டுக்கொண்டு எப்போதும் தூரத்திலிருந்தே இரைச்சல் போடுபவர் அவள் காலை உடைப்பது எங்ஙனம்?

ஹேமாவின் அமைதி மாறவில்லை. அந்த அநாதை விடுதியிலேயே வசித்துக்கொண்டு அங்கே பணியாற்றலாம் என்பதை அறிந்துகொண்டது முதல் அவளிடம் மகத்தான ஒரு நிம்மதி வந்து பொருந்திவிட்டது.

''என் காலை நீங்க உடைக்கச் சட்டம் இடம் கொடுக்காதுப்பா! எனக்கு இருபத்து மூணு வயசு ஆறது. என் வாழ்க்கையை நானுகவே தேர்ந்தெடுத்துக்க எனக்கு உரிமை இருக்கு.''

''எங்கே போகப்போறே? எவனையாவது இழுத்துண்டு ஓடிப்போகத்தானே திட்டம்?''

அவள் அழகிய முகம் சினம் கொண்டு கனன்றது. தான் நேர்மையான பாதையில்தான் போகப் போவதை விளக்கி அவருக்கு விவரங்களைச் சொல்லி அந்தக் குற்றச்சாட்டை மறுக்க வேண்டுமென்று ஒரு கணம் எழுச்சி கொண்டாள். ஆனுல் மறுகணமே அந்த வேகம் கடந்து, ஓர் ஆழ்ந்த அலட்சியம் இடம் பெற்றது. தன்னைப் பற்றி இப்படித்தான் நினைக்க முடியுமா அவரால்? அப்படி என்ன பகை அவளிடம்? இப்படிப்பட்ட ஒரு கேள்வி கேட்கக் கூடியவர் அவளைப் பற்றி என்ன நினைத்தால்தான் என்ன? அவரிடம் போய் எதற்காக விளக்கம் சொல்ல வேண்டும்? இந்த நரகத்திலிருந்து மீட்சி பெற்றுப் போய்விட வேண்டுமென்ற தாபத்துக்கு முன் வேறு எதுதான் முக்கியம்? இனி அவள் வேலை பார்த்தாலும் மணம் புரிந்து கொண்டாலும் என்ன செய்தாலும் அவள் வாழ்வு அவரினின்று தனி. அதற்கு மேல் என்ன?

''நீங்க எப்படி வேணும்னுலும் வச்சுக்கலாம்'' என்றுள்.

''இத்தனை திமிரா! இத்தனை அலட்சியமா! சரிதான், இப்போ எனக்குச் சந்தேகமே இல்லே.''

''இதோ பாருங்கோ அப்பா!''

''சீ ஓடுகாலி! என்னை அப்பான்னு கூப்பிடாதே. நான் உன் அப்பா அல்ல.''

அவள் அதிர்ந்துபோய் அவரைப் பார்த்தாள். ''என்ன பேச்சு இது? தெரிஞ்சுதான் பேசறேளா?''

''எனக்கு எப்பவுமே சந்தேகந்தான். நீ இப்போ பண்ற காரியம் அதை ஊர்ஜிதப்படுத்தருப்பல...''

வார்த்தைகள் அவர் வாயிலேயே உறைந்துபோயின. அப்படி ஒரு தீவிர நெருப்புக் கொழுந்தாக அவள் பார்வை அவர் முகத்தில் ஒட்டிக்கொண்டு தகித்தது. உணர்ச்சி மிகுதியினுல் வேகமாய் வந்த மூச்சில் அவள் உடல் முழுவதும் ஏறித் தணிந்தபோது பின்னும் பிரம்மாண்டமாய் ஆகிவிட்டாற்போல் அவள் உருவம் ஒருவித அச்சத்தை விளைவித்தது. தம்மை அறியாமல் அவர் சற்றுப் பின்னடைந்தார்.

''இதுதான் காரணமா உங்க வெறுப்புக்கு? இதுக்காகத்தான் என்னை அணு அணுவாய் வதைச்சேளா?'' அவள் கண்களில் இகழ்ச்சி நிறைந்தது. தந்தையின் முன் தான் உயரமாக நிற்கும் சங்கடத்தை முதல் முறையாக அவள் உள்ளம் மறந்துபோயிற்று. அவள் வெகு நிதானமாக அவரைக் குனிந்து நோக்கினுள். உருவத்தின் சிறுமையாக மட்டும் அவர் இப்போது அவளுக்குத் தோன்றவில்லை.

''உங்க சந்தேகம் தப்பாய்த்தான் இருக்கணும். ஏன்னு என் அம்மா நெறி தவறக் கூடியவளல்ல. ஆனுல்....'' திடீரென்று அவள் முகத்தில் வெறுப்பும் கசப்பும் உச்சநிலை தொட்டுத் தூலமாய்க் கொப்புளித்தன. ''ஆனு அது உண்மையாய் இருந்திருந்தா நான் ரொம்பச் சந்தோஷப்பட்டிருப்பேன்!'' ★

சிற்பத்தில் பாசம்

சிறுமியின் பெருமிதம்

போட்டோ: ஆர். உதயபாஸ்கர்

ட்யூப்லைட்களின் சரித்திரத்தில் ஓர் முக்கியமான முன்னேற்றம்.



அதிக ஒளிதந்து முனைகள் கறுப்பதை தடுத்து நிறுத்தும் ட்ரிப்பிள் காயில் மற்றும் ஆனோட்ரிங்க் இணைப்பை பிலிப்ஸ் அறிமுகப்படுத்துகிறது.

ட்ரிப்பிள் காயில் மற்றும் ஆனோட் ரிங்க் இணைப்பு:
சாதாரண ட்யூப்லைட்களின் முனைகளில் காயில் செய்யப்பட்ட காயில் எலெக்ட்ரோடுகள் உள்ளன. புதிய பிலிப்ஸ் 40 மற்றும் 65/80 வாட் ட்யூப்லைட்களில் மும்முறை காயில் செய்யப்பட்ட ஃபிலமெண்ட் உள்ளது. அதுதான் ட்ரிப்பிள் காயில். ட்ரிப்பிள் காயிலைச்சுற்றி மற்றும் ஒரு புதிய சாதனம் உள்ளது. அதுதான் ஆனோட் ரிங்க். இவை இரண்டும் சேர்ந்து நீங்கள் இதுவரை கண்டிராத சிறந்த ஃப்ளூரோஸென்ட் ஒளியை உங்களுக்கு அளிக்கின்றன.

பிரகாசமான, நெடுநாட்களுக்கு நீடித்திருக்கும் ஒளி.
சாதாரண ட்யூப்லைட்களில் சிறிது சிறிதாக நாளடைவில் பிரகாசம் குறைந்து விடுகிறது. புதிய பிலிப்ஸ் ட்யூப்லைட் ஆரம்பத்தில் அதிகப் பிரகாசமாக இருக்கிறது; இந்த பிரகாசத்தை மற்ற சாதாரண ட்யூப்லைட்களைவிட நெடுநாட்களுக்கு நிலைக்க வைக்கிறது.

முனைகள் கறுப்பதில்லை.
சாதாரண ட்யூப்லைட்கள் முனைகளில் கறுத்து பயனளிக்கக் கூடிய ஒளியை மறைத்து விடுகின்றன. ட்ரிப்பிள் காயில் மற்றும் ஆனோட் ரிங்க் இணைப்பு முனைகள் கறுப்பதைத் தடுக்கிறது.

சிறந்த வர்ணப் பிரதிபலிப்பு:
சிறந்த ஒளியையும் சீரான வர்ணப் பிரதிபலிப்பையும் பிலிப்ஸ் லாம்புகள் ஒருங்கே அளிக்கின்றன. அதனால் பொருள்களை சரியான ஒளியில் காணுகிறீர்கள்.

நவீனமான, எல்லா வசதிகளும் உள்ளடங்கிய தொழிற்சாலை:
பிலிப்ஸ் லாம்பிலுள்ள ஒவ்வொரு உறுப்பும், பிலிப்ஸ் தொழிற்சாலையில் தயார் செய்யப்பட்டது. இது ஜப்பான் தவிர, ஆசியாவிலேயே மிகப்பெரியதும், நவீன வசதிகள் உள்ளடங்கியதுமான தொழிற்சாலை ஆகும். அதனால் முழுமையான தரப் பரிசோதனைகள் செய்யப் படுகின்றன.

அடுத்த முறை ட்யூப்லைட் வாங்கும் போது, மிகச் சிறந்த ட்யூப்லைட்டான பிலிப்ஸ் வாங்குங்கள்.

பிலிப்ஸ் அளிக்கும் மற்ற ஒரு சாதனம் TLF ரிஃப்ளெக்டாலைட், உள்ளேயே ரிஃப்ளெக்டர் இணைக்கப்பட்ட ஒரு ட்யூப்லைட்.

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்.

பிலிப்ஸ PHILIPS

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா? பிலிப்ஸ் வாங்குங்கள்.

STATE BANK OF TRAVANCORE

(Subsidiary of the State Bank of India)

Head Office: TRIVANDRUM

"Of course, "STATE BANK OF TRAVANCORE", affords your deposits

FULL PROTECTION

Your Saving is a sacrifice for the Nation. It forms part of our national resources and when you save through the

State Bank of Travancore

Your Sacrifice pays you.

As Part of the State Bank Group of Banks, we are fully represented in the whole country. Branches in States Viz. Kerala, Tamil Nadu, Maharashtra, Mysore and West Bengal.

Meet your nearest Branch Manager who will be most happy to help you with the details of various types of services available.

Sakthi Sugars Limited

Manufacturers of :

BEST QUALITY WHITE SUGAR

and

SAKTHI HYBRID SORGHUM

and

BAJRA SEEDS

Factory :

Sakthi Nagar P. O.,
Bhavani Taluk,
Erode R. M. S.

Regd. Office :

72, Sengupta Street,
Ramnagar P. O.,
Coimbatore-9

தொண்டர் தம் பெருமை

டி. என். சுகி சுப்பிரமணியன்

ஒளியைத் தரும் விளக்கின் அடியில் இருள் இருக்கும். ஒளியும் இருளும் நிரம்பியதுதான் வாழ்க்கை. இந்த ஒளியும் இருளும் எல்லார் வாழ்க்கைக்கும் பொருந்துமா?

இன்பமயமாய் அமைகிறது சிலருக்கு; துன்பமயமாய் அமைகிறது பலருக்கு.

அந்தப் பலருள் தொண்டர் சுப்பையாவும் ஒருவர். காந்தி இயக்கத்தின் போது கணகணவெனத் தண்டோரா தட்டுவார். ''பாரத் மாதாவுக்கு ஜே'' என்பார். ஊர்வலத்தின் முன்வரிசையில் தோள் நிமிர்த்தித் தாயின் மணிக்கொடியைத் தாங்கி வீரநடையுடன் போவார். 'சுதந்தரச் சங்கு' பத்திரிகையை வீதி வீதியாகக் கூவி விற்பார்.

மெலிந்த தேகம். ஒட்டிய கன்னம். முரட்டுக் கதர் வேஷ்டி. முரட்டுக் கதர் ஜிப்பா. ஒட்டிய வயிறு. ஆனால் கண்களில் சுதந்தரக் கனல்; குரலில் விடுதலை முழக்கம். நொடிக்கு நொடி 'வந்தே மாதரம்' என்னும் சிம்மக் குரல்.

அவரும் நானும் காலமென்னும் ஏணியில் சந்தித்தோம். நான் இளமைப் படிகளில் ஏறிக்கொண்டிருந்தவன். அவர் காலமென்னும் ஏணியில் இறங்கிக்கொண்டிருந்தவர்.

அவரைப் பார்த்து நான் தெரிந்து கொண்டது இதுவே: பெரிய தலைவர்களின் சிறிய தியாகத்தால் இந்த நாடு பயனடையாது. சிறிய சிறிய மனிதர்களின் பெரிய தியாகத்தால் இந்த நாடு பயனடையும். இதற்குச் சான்று தொண்டர் சுப்பையாவின் குடும்பம்.

அவருக்குப் பஞ்சணையின் சுகம் தெரியாது. பால்சோறு தெரியாது. உலக இன்பங்கள் தெரியா. தெரிந்தனவெல்லாம் 'காந்திஜிக்கு ஜே', 'பாரதமாதாவுக்கு ஜே', கள்ளுக்கடை மறியல், அந்நியத் துணி பகிஷ்காரம்!

அவர் உடையிலே அழுக்கு; உள்ளம் ஸ்படிகமான பளிங்கு. நிமிர்ந்த நடை; நேர்மையான பார்வை; அமைதி தவழும் முகம்.

அவர் சுதந்தரத்துக்காகவே வேலை செய்து ஒடுங்கிப் போனவர். தொண்டு அவரைப் பலவீனமாக்கியது. வேலை செய்ய இயலாத பலவீனம். சாவுக்குள் ஆழ்ந்து போகாத உடல்நலம். சோற்றுக்குக் கைநீட்டக் கூசும் கர்வம். எனினும் அவர் தேசபக்தர்.

காந்தியத் தொண்டர் சுப்பையாவின் பூர்விகம் சிந்துபூந்துறை; பொருநை பாயும் பூந்துறை. ஆற்றிலே சிந்திய பூக்கள் யாவும் எங்கு வந்து ஒன்ருக ஒதுங்குகின்றனவோ அந்த இடம் சிந்துபூந்துறை; பூக்கள் சிந்தும் துறை.

சிந்துபூந்துறைச் சுப்பையாவுக்குத் தேசப்பற்றும் காந்திய மார்க்கமும் பித்தாகப் பிடித்துக் கொண்டன. அவரது தாயும் தந்தையும் வயோதிக காலத்தில் மகன் காப்பாற்றுவான், கஞ்சி ஊற்றுவான் என்று எதிர்பார்த்தார்கள்.

அவனே, அடியால் காயம் பட்ட உடம்போடும், கிழிபட்டதனுல் பஞ்சையான சட்டையோடும் வீட்டுக்குள் வந்து நிற்பான். உண்ணுதும் உறங்காதும் கூட்டத்தின் முதல் வரிசையில் கொடி பிடிப்பான்; தலைவர்களுக்கு மாலை மரியாதை செய்வான். தேசத்தின்மீது அன்புள்ளவர் தாமே அஹிம்சை முறையில் சண்டை போடும் இயல்பு உடையவர்கள்?

போலீசாரின் தடியடியில் முதல் தாம்பூலம் அவனுக்குத்தான். அந்த வாலிப உடலுக்குத்தான் எத்தனை அடி! எத்தனை போலீசார் பூட்சு உதை! அம்மம்மா!

''அம்மா! அப்பா!'' என்று ஒரு நாள்கூட, அடிபட்ட சுப்பையா - உதைபட்ட சுப்பையா - அரற்றியதில்லை. ஊஹூம். அவர் கர்ஜனை தேச விடுதலை. அவர் முழக்கம் கதர் இயக்கம். அவர் தொண்டு அந்நியத் துணி பகிஷ்காரம். 'பறையருக்கும் புலையருக்கும் விடுதலை! விடுதலை!' என்று முழங்குவார்.

அவரது வயதொத்த வாலிபச் சிங்கங்கள் காவாலியாகத் திரிந்தவை எத்தனை எத்தனையோ. கல்யாணச் சந்தையில் லாபக் கணக்கில் கண் பதித்து விற்பனையானவை எத்தனை எத்தனையோ. ஆனுல் தொண்டர் சுப்பையா....?

தாமிரவர்ணி ஆற்றுப்பிள்ளையார்ப் பக்கம் கூட்டமா? தைப்பூச மண்டபத்தின் பக்கம் பொதுக் கூட்டமா? பாளையங்கோட்டை ஹைகிரவுண்டில் பொதுக் கூட்டமா? பேட்டை வீரராகவபுரத்திலா? எங்கே எந்த ஊர்வலம் புறப்பட்டாலும் சுவரொட்டி, துண்டு விளம்பரம், அறிவிப்பு வந்தாலும் முன்னுல் நிற்பார் தொண்டர் சுப்பையா. ஜணஜணவென்று சண்டமாருதம் போலத் தண்டோரா முழங்கும். கணகணவென்று தேசிய கீதங்கள் முழங்கும். போலீசாருக்கு இவர் சிரிப்பு, இவர் வீரநடை, இவர் தண்டோராவால் பெரிய வாதனை, மாபெரும் தலைவேதனை.

திருநெல்வேலிச் சீமைக்குள் காந்திய வெள்ளம் பாய்வதற்குக் கண்மாயாக இருக்கும் தொண்டன் சுப்பையாப் பயல் ஒழிந்து போனுல்? தொலைந்து போனுல்? பூண்டற்றுப் புல்முளைத்துப் போனுல்?

தானுகப் போகமாட்டான் தேசபக்தன். தடிகொண்டு அடித்தாலும் சாகமாட்டான் தேசபக்தன். அவனைப் போக்க வேண்டும்! போலீஸ் இன்ஸ்பெக்டர் நெல்லையப்பனின் மூளை வேலை செய்தது. அவரது மாமனுர் ராவ்பகதூர் நடராஜ பிள்ளையவர்களின் மூளையும் துணை நின்றது. ராவ்பகதூர் பிள்ளையவர்கள் என்ருல் அந்நிய ஆட்சியாளரின் அடிவருடி; காந்தீயத்தின் காலபைரவர்! ராவ்பகதூரின் தூண்டுதலினுலும் தமது போலீஸ் அந்தஸ்துத் துணிச்சலினுலும் இன்ஸ்பெக்டர் நெல்லையப்பன் துணிகரமான வேலை ஒன்றைச் செய்யப் புறப்பட்டார்.

ஒரு நாள் வைகறைப்போது.

தேசபக்தர் சுப்பையாவின் பெற்றோர்களது கையையும் காலையும் ஒடித்துப் போட்டால் தேசப்பற்று மிக்கவன், குடும்பப் பாசத்தால் குருடாகிப் போவான். பெற்றோர் துயரையும் அழுகையையும் பார்த்து வீட்டோடு முடங்கிக் கிடப்பான் தொண்டன்.

ஏற்கனவே தெரு விட்டுத் தெரு துரத்தினார்கள். வளைவு விட்டு வளைவு விரட்டினார்கள். இப்போது சிந்துபூந்துறை ஊருக்குக் கிழக்கே ஆற்றோரம் நெல்லி மரமும் நாவல் மரங்களும் தோப்பாய்ப் பரந்து கிடக்கின்றனவே, அங்கே ஒரு மாமரத்தடியில் சிறு ஓலைக் குடிசைக்குள் குடியேற்றி விட்டார்கள். சுப்பையாவின் பெற்றோர் அந்தக் குடிசைக்குள் குற்றுயிரும் குலையுயிருமாகப் பசியும் பட்டினியுமாக வாழ்ந்து வருகிற சமயம்.

இவர்களுக்குக் கூப்பிடு தூரத்தில் மயானபூமி. சில சமயத்தில் மயான பூமியின் அந்திமகாலப் புகைச்சுருள் மாமரத்தடி ஓலைக் குடிசைக்குள் புகுந்து குமையும். எனவே, இன்ஸ்பெக்டர் நெல்லையப்பன், பிறர் கவனம் தம்மீது விழா வண்ணம் தீர்த்துக் கட்டக்கூடிய வாய்ப்பான சூழ்நிலை.

காலைப்போது. பூச்சிந்தும் ஆற்றுத் துறைக்கு எவரும் குளிக்கப் புறப்படவில்லை. சுடலைத் தீயில் முன்னாள் பிணம் சாம்பலாகிவிட்டதா என்று பார்க்க எழுந்து போய்க்கொண்டிருந்தான் பிணச் சங்கொலிக்கும் முத்தன். அவன் போன பின்னர் இன்ஸ்பெக்டர் நெல்லையப்பன் தொடர்ந்தார். அவர் கரத்தில் மணியான மூங்கில்தடி.

சின்னக் குடிசையின் உள்ளாகப் பெற்றோர் உறங்கிக்கொண் டிருந்தார்கள். குடிசையின் முகப்பிலே சுப்பையா தூங்கிக்கொண் டிருந்தார். மாவிலைச் சருகுகளில் காலடியோசை கேட்கிறது. ஏதோ சலசலப்பு. பாதித் தூக்கக் கலக்கம்.

''யாரது?'' என்ற வாலிபர் சுப்பையா தலைமாட்டிலிருந்த நெருப்புப் பெட்டியைக் கீறினார். அது பார்த்த முகம். அவை பழகிய கண்கள். இமைப்பொழுதில் யோசனை செய்தார்.

அதற்குள் கம்பு அவர் நெற்றிக்கு இறங்கியது. அடித்துப் பழகிய கை; பட்டுப் பழகிய முன்நெற்றி. இரத்தம் சில்லென்று கொட்டியது. நாலெட்டு நடந்து கால் தள்ளாடி அவர் மயக்கமாக விழுந்தார்.

இறந்துவிட்டான் தொண்டன். இனித் தண்டோராவுக்கு ஆள் இல்லை; கொடி பிடிக்க நாதி கிடையாது; பிட்நோட்டீஸ் கொடுக்க ஆள் கிடையாது. இவ்வாறு முடிவு செய்தவர் குடிசைக்கும் முடிவு வைத்துவிட்டு ஓடியே போனார்.

சுப்பையாவுக்கு நினைவு வந்து, உடலில் வலிவு துளித்து எழுந்து பார்க்கிறார். எதிரே குடிசை இல்லை; சாம்பற் குவியல் இருக்கிறது.

''இறந்தவர்களே! என்னவர்களே! இனியவர்களே! வாழ்க வாழ்க வாழ்க!'' என்று இரத்தக் கறை படிந்த உடலோடு வாழ்த்தினார்.

சுப்பையாவின் பொறி கலங்கியது. தொண்டனுக்கு அவனொத்த ஏழை நண்பர்கள் அதிகம். அவர் ஊரை விட்டு ஓடிப் போக நண்பர்கள் பணம் உதவினார்கள். பணம் அவரது காலடியில் வீழ்ந்தது, குவிந்தது.

பத்தாம் நாள் கருமங்களைச் செய்து முடித்துவிட்டுச் சிந்துபூந்துறையை விட்டு ரெயிலேறினார் தொண்டர் சுப்பையா.

மதுரைக்கு வந்தார். அங்கும் போலீஸ் கண்காணிப்பு. மண்டையில் அடிபட்டதனால் அடிக்கடி கிறுகிறுப்பு, மயக்கம்.

மதுரை மீனாட்சியைப் போல ஒரு பெண், அவர் வாழ்க்கையில் குறுக்கிட்டாள். அவளோடு அவர் இல்லறம் நடத்தினார்.

தேசத்துக்கு விடுதலை வந்தது. தேசிய கீதங்கள் முழங்கின. சுப்பையாவுக்கு மதுரை பழகிவிட்டது. நெல்லையம்பதிக்கு வரச் சொல்லி அன்பர்கள் வேண்டினார்கள். சிந்துபூந்துறையின் மாந்தோப்பு மயானக் கரையை மீண்டும் காண விரும்பவில்லை அவர்.

மதுரை மீனாட்சியுடன் சென்னைக்குக் குடி வந்தார். தருமமிகு சென்னையில் கடைக்கணக்கு என்னும் மாதாந்தர அவதிகள் பலவற்றை இழுத்துப் போட்டு, வயிற்றுப் பெருமானுக்குப் பாடங் கற்பித்தார். தேவாரமும் திருவாசகமும் அவருக்குப் பொழுது போக்கு. ராட்டையில் நூற்பது, நூற்றதைக் கட்டுவது என்னும் சித்தாந்தங்களைப் பழக்கி வைத்தார். இல்லறச் சகடம் புதிய பாதையில் தடம் பிடித்தது.

தொண்டர் சுப்பையா பலர் மனசிலிருந்து கனவாய்ப் பழங் கணக்காய் மறைந்து போனார்.

அவருக்கு இரண்டு வாரிசுகள் துப்பாக்கி வயிற்றில் பீரங்கியாகப் பிறந்தன. ஒருவனுக்குப் பெயர் காந்தி. அடுத்தவனுக்குப் பெயர் சுபாஷ். காந்திக்கு எப்போதும் படிப்பு. உழைப்பாளிகள்மீது கருணை, கரிசனை. முதலாளித்துவச் சுரண்டலை ஒழிக்கவும் பூர்ஷுவாக்களின் ஆதிக்க வெறியை நிர்மூலமாக்கவும் கனவு கண்டான். பள்ளிப் படிப்பை மறந்து அவன் கம்யூனிசத்தின் வேர்ப்பலா ஆனான்.

காந்தி வாலிபனாக வளர்ந்தபோது மாஜித் தொண்டர் சுப்பையாவுக்குச் சதா இருமல். இடையறாத கம்பிக் கோழை. நோயுற்ற தகப்பனையும் உடலை ஒடுக்கிப் பாடுபடும் தாயையும் விடச் சகோதரத் தொழிலாளர் நலமே மூத்த பையனுக்குப் பெரிதாகப் பட்டது.

எங்கே கதவடைப்பு? எங்கே ஊர்வலம்? அங்கே காந்தியின் கோஷம் சங்கநாதம் போல அலைபாயும். ''முதலாளித்துவம் ஒழிக! தொழிலாளர் நலம் ஓங்குக!''

''வாழவிடு அல்லது வழியை விடு!''

ஒரு தினம், ரெயில்வேத் தொழிலாளர் சங்கத்தின் வேலைநிறுத்தத்தில் இவன் தலையிட்டான். தொழிலாளர்கள் இரண்டு கட்சியாகப் பிரிந்தனர்; கருத்து வேற்றுமையால் கைகலந்தார்கள். அஹிம்சையின் வாரிசு, ஹிம்சையில் உயிரை வைத்திருந்தான்.

வயது இருபதாக இருந்தபோது, அரும்பு மீசை அழகு கட்டியபோது, வாலிபன் காந்தி தன் கட்சிக் கொள்கைக்காக உயிர் நீத்தான்.

தொண்டன் காந்தியின் சவ அடக்க ஊர்வலத்தில் சுப்பையாக் கிழவர் கலந்து கொண்டார். அவர் பெற்றோர் அநாதையாகப் பொருநை யாற்றங்கரைக் குடிசைக்குள் எரிந்து சாம்பலானதைப் போல அவர் மகன் ஆகவில்லை. இழப்பிலும் பெருமிதம்!

மைல் நீள ஊர்வலம். கம்யூனிஸ்ட் காந்திக்கு நூற்றுக் கணக்கான மாலைகள், வாழ்த்தொலி மரியாதைகள். கிருஷ்ணாம்பேட்டை மயானபூமிக்குள் அவன் அமரனானான்.

சுப்பையாவுக்கு அழுகை வந்தது. துக்கம் மறைந்து ஆனந்தமும் வந்தது.

''தொழிலாளர் தலைவன் சுப. காந்தி இருந்திருந்தால் நமது கட்சிக்கு இன்னும் வலிமை அதிகம். அவன் நமது இதயம். அவன் நமது இமயம். இந்த நாட்டின் புரட்சித் தலைவன் வாழ்க!'' உழைப்பாளி உலகம் இவ்வாறு பாராட்டிப் பேசிற்று. பத்திரிகைகள் பத்தி பத்தியாகக் கம்யூனிஸ்ட் காந்திக்கு அஞ்சலி செலுத்தின. பக்கம் பக்கமாக அவனது வீரச் செயல்களை வரைந்தார்கள்; குவியல் குவியலாக அவனது புகைப்படங்களை வெளியிட்டனர்.

கிழவர் சுப்பையா அத்தனையும் வரி விடாமல் படித்தார்; பரவசமானார். தியாகத்தின் வாரிசு தியாகியாகி மறைந்தான்.

சுப்பையாவுக்கு இனி அவரது இளைய மகன் சுபாஷ் ஒருவனே பற்றுக்கோடு. அவனோ தீவிரத் தி. மு. க. தி. மு. கழகத்தார் நடத்திய மொழிப் போரில் இந்தி ஒழிப்பில் இறங்கிவிட்டவன். தமிழுக்காகத் தன்னை அர்ப்பணம் செய்து தீக்குளிக்க எழுந்த இளம் தலைமுறையில் இவனும் ஒருவன். இந்தி எழுத்துக்களைக் கண்ட இடங்களில் இவன் கைகள் சுறுசுறுப்பாக ஓடின. மொழிப் போராட்டத்தில் முன் நின்றான்; முதல் கர்ஜனை புரிந்தான்.

முட்டியிலே அடி. பொதுக் கூட்டத்திலே குதிரைகளின் நடமாட்டம். ஆனாலும், தணியாத தமிழ் வெறிக்குத் தன்னை அர்ப்பணம் செய்தான் சுபாஷ். மொழி காக்கும் வீரர்களில் இவனும் ஒருவன்.

அடிக்கடி அடிதடி, சதா கண்ணீர்ப் புகை, சிறைவாசம், பட்டினி, வயிற்றுக் கடுப்பு - இப்படி ஏதாவது ஒரு குடைராட்டினச் சலுகையைப் பெற்றான் இளையவன் சுபாஷ்.

அமைதிக்குப் பங்கம் வரும்போது துப்பாக்கிப் பிரயோகம் நடக்குமே; அதிலே வீர மரணம் பெற்றான் சுபாஷ்; பெறற்கரிய பேறு பெற்றான்.

இரண்டாவது பீரங்கியும் மறைந்தது.

இந்தச் செய்தி கேட்ட மறுவிநாடி அவன் தாய் மீனாட்சியின் உயிரும் பிரிந்தது; உடலும் வீழ்ந்தது.

கிழவர் சுப்பையாவின் நோயுடல் தனித்து விடப்பட்டது. இப்போது அவர் வெறும் துப்பாக்கிகூட இல்லை; வெறும் கட்டை; தனிக்கட்டை. அவர் பெற்ற பீரங்கிகள் இரண்டும் மறைந்து போயின.

தாம் வணங்கிய காந்திஜியின் படத்தைப் பார்த்தார். தமது மூத்த மகன் காந்தி வணங்கிய லெனின் படத்தைப் பார்த்தார். தமது இளைய மகன் சுபாஷ் வணங்கிய அண்ணா படத்தைப் பார்த்தார் சுப்பையா.

''சொல்லுங்கள் தலைவர்களே, நான் ஏன் சாகவில்லை? என் குழந்தைகள் இறந்தன. நான் இருக்கிறேன். என் ஆதரிசங்களைக் கொண்டுபோய் விட்டீர்கள். அவரவர் நம்பிக்கையில் வித்தாகிப் பயிராக்கிப் பூத்துக் குலுங்கும்படி விளைவித்து விட்டு அவர்கள் தங்கள் கடையை மூடிவிட்டார்கள். அவர்கள் ஆத்மா சாந்தியடைக!''

மறுகணம் திரும்பிப் பார்க்கிறார். மனைவியின் சடலம்.

அவள் வணங்கும் பழநியாண்டியின் படத்தைப் பார்த்தார் கிழட்டுச் சுப்பையா.

''நானும் இப்போது ஆண்டிப் புயல், என்னிடம் பைநிறையப் பணம் இல்லை. வயிறு நிறையப் பசி இருக்கிறது. என் கடினமான குறிக்கோள்களை ஜீரணம் பண்ணிய உடம்பில் இப்போது இருப்பது பசி. இது ஒன்றே என்னை ஜீரணிக்கிறது.''

நல்ல காலம். சுபாஷின் கழகத் தோழர்கள் வந்து சவ அடக்கத்துக்கு ஏற்பாடு செய்தார்கள்.

''கட்சித் தொண்டர்கள் வீர மரணம் எய்த வேண்டும்; கட்சித் தலைவர்கள் சிரஞ்சீவியாக இருக்க வேண்டும்; அப்போதுதான் அவரவர் குடும்பம் நலமாக இருக்கும்.''

தோழன் சுபாஷ்பேரில் மன்றங்கள், படிப்பகங்கள் தோன்றத் தொடங்கின.

கிழவர் சுப்பையாவின் சென்னை வாழ்க்கை வறண்ட பாலைவனம் ஆயிற்று.

சுப்பையா ஏன் இறக்கவில்லை? அவருக்குக் காரணம் தெரியாது. தம்மை இனம் காட்டாத புதிய பிரதேசத்துக்குள் ஐக்கியப்படுத்த எண்ணினார்.

அவர் மைசூர் நகரம் நாடிப் போனார். ஏதோ சில வேலைகள்; கிழட்டு உடம்புக்குத் தெம்பு இருக்கும்வரை வேலைகள். கொஞ்சம் கொஞ்சம் வருமானம். போதுமான உணவு இல்லை.

அவர் கையில் இருப்பதெல்லாம் ஐந்து ரூபாய் நோட்டு. வேலை செய்யவே முடியாத உடல் பலவீனம்; ஆயினும் உயிர் பிரிந்து போகாத அளவுக்கு உடல்நலம். சோற்றுக்குக் கைநீட்டத் தெரியாத கர்வம்.

பூங்கா ஒன்றில் அமர்ந்து தம்மை நினைந்தார். சிந்துபூந்துறையின் இளமைக் கனவுகள், தேசியக் கொடிப் போராட்டம், காந்திஜியின் தமிழ் நாட்டுப் பயணம், மதுரைக்குள் வந்து புகுந்த அடைக்கலக் கதை, மீனாட்சியின் தளிர்க் கரங்கள், குடும்ப வாழ்வு, சிங்கக் குட்டிகளான குழந்தைகள், அவர்கள் விட்டுச் சென்ற வீரச் சுவடுகள் - எல்லா நிகழ்ச்சிகளும் ஒவ்வொன்றாக அவரது நெஞ்சக் கடலிலே மிதந்துகொண் டிருந்தன.

''நான் ஏன் சாகாது இருக்கவேண்டும்? எனக்குப் பின்பு பிறந்தவர்கள் ஏன் சாக வேண்டும்?''

விடை தெரியவில்லை. அவர் அருகாகக் கிழவன் ஒருவன் கிழிசல் கோட்டும், எண்ணெய் கண்டறியாத தலையுமாக வந்தமர்ந்தான்.

அவன் பேசினான். தன் விதியை நொந்து விழிநீர் பெருக்கினான். அவனுக்குப் பல பற்கள் விழுந்து இரண்டொரு பற்கள் பாக்கியிருந்தன.

''ஐயா பெரியவரே! நான் வசதியாக வாழ்ந்தவன். மாடிவீடு, மாடு

கன்று, பதவி பட்டம், மோட்டார் யாவும் இருந்த வீட்டில் பிறந்தவன். வாழ்ந்து கெட்டவன். வாய்க்கரிசி இல்லாமல் நடுத் தெருவில் நிற்கிறேன். கொஞ்சம் தர்மம்!'' அரைப் பட்டினியைப் பார்த்து முழுப் பட்டினி சொல்லி முடித்தது.

தொண்டு கிழவர் சுப்பையா தமது அருகாக அமர்ந்து பஞ்சப் பாட்டுப் பாடிய கிழவரைப் பார்த்தார்.

''வரவுக்கு அதிகமாகச் செலவு செய்தேன். என் குடும்பத்தார் அனைவரும் அப்படியே. பொன்னும் பொருளும் தந்த யோகத்தில் வாழ்ந்தேன். எல்லாம் இழந்து பிச்சையெடுக்கிறேன்.'' குரலில் பிச்சைக்காரத்தனம் குமிழிட்டது.

''ஐயா, நான் சாப்பிட்டு ஒரு வாரம் ஆயிற்று'' என்றார் கிழவர். அவர் சொல்வது உண்மை. கிழவர் மீது கருணை பிறந்து தர்மம் செய்யும் ஆசையும் பிறந்தது. கிழவன் முகத்தைப் பார்த்தால் மறக்கக் கூடிய முகமா?

நெருப்புக் கண்ட பஞ்சுபோல அவர் நெஞ்சும் படபடத்தது. அவர் இதயம் நிறைய இரத்தம் வந்து குபுக்கென அடைத்தது. நாடிநரம்பு நாளங்கள் வெடித்துவிடுமோ என்று ஒரு கணம் எண்ணினார் கிழவர் சுப்பையா.

இரந்து நிற்கும் கிழவர் தம்மை அடித்தவர், தமது பெற்றோரைத் திக்கிரையாக்கிய மாஜி போலீஸ் இன்ஸ்பெக்டர் நெல்லையப்பன்!

எத்தனை யுகமானாலும் மறக்கக் கூடிய முகமா? தம் முகத்தை இனம் கண்டது போல அத்தனை தெளிவு. கனவா அல்லது நனவா?

கால வெள்ளத்தில் மிதந்த சருகாக எதிர்பாராத நிலையில் கிழட்டுக் கோலத்தில் இருவரும் சந்திக்கிறார்கள். நல்ல வாய்ப்பு. சுப்பையாவின் கைக்கு எட்டும் தூரத்தில் அகப்பட்டிருக்கிறார். தாம் சுப்பையா என்று துளிச் சந்தேகம் வந்தாலும் கிழவன் பசியை மறந்து ஓடிவிடுவான்.

மனத்தை அடக்கிக்கொண்டு அமைதியாக இருந்தார் சுப்பையா. நாடித் துடிப்பும் நாளங்களும் அமைதியாக வேலை செய்தன.

சுப்பையா தமது ஆட்காட்டி விரலைத் தூக்கித் தமது நெற்றியில் வைத்தார். உரத்து, ''வே! என்னை அடையாளம் தெரியுதா?'' என்றார்.

கிழவன், ''உங்களைப் பார்த்தால் தமிழர் போல் இருக்கிறது. நீர் கன்னடர் இல்லையா?'' என்றார்.

''என்னை இனம் தெரியலே உமக்கு?''

''இல்..லே..பசி தெரிகிறது.''

''என்னைத் தெரியலே உமக்கு? உம்மை நல்லாத் தெரியுது.''

மறுகணம் கரங்களால் கிழவரின் தாடியை எட்டிப் பிடித்தார். நோஞ்சானாக இருந்தவர் சோளத் தட்டை போல வெலவெலத்திருந்தார். அவர் மாஜி போலீஸ் இன்ஸ்பெக்டர். ஒரு நெறிப்பு, ஒரே நெறிப்பு, ஓர் அமுக்கு! ஆசாமியைப் பஸ்மமாக்கி விடலாம். கீரைத் தண்டை ஒடிப்பது போலத் தலை வேறு உடல் வேறு ஒடித்துத் திசைமாற்றி எறிந்துவிடலாம். பாவம்! அவ்வளவு பலவீனமான எலும்புகள்!

சுப்பையாவின் கைக்குள் இரும்பன்ன வலு ஓடிப் பரவிற்று. அமுக்கப்பட்டது குரல்வளை; கத்த முடியாமல் கண் பிதுங்கியது. பசியால் வாடிய துன்பம். திமிற முடியாத பலவீனம்.

''சை! சத்து இல்லாத சக்கை! கிழட்டு ஜன்மம்!'' என்று விரலை விடுவித்துக் கொண்டார். சுப்பையாவின் கண்முட்ட அழுகை வந்தது. தம் பெற்றோர் மனைவி மக்களை நினைந்து அதனால் பிறந்த கண்ணீர்த் துளிகள் அல்ல. இயலாமை, இல்லாமை இரண்டும் போர் புரியும் வயோதிகத்திடம் அநுதாபம் கொண்டார் சுப்பையா.

''நான் பட்டினி. ஒரு வாரம் பட்டினி ஸார்'' என்றது பிச்சைக்குரல்.

சுப்பையாவின் இளகிய உள்ளத்துக்குத் தாங்க முடியவில்லை. ''வே நெல்லையப்பன், மாஜி போலீஸ் இன்ஸ்பெக்டர், உம்ம கதையும் இப்படியா?''

''நீங்க யார்?''

''நான் யாரோ!''

சுப்பையா தமது விரலில் அழுத்திப் பிடித்திருந்த ஐந்து ரூபாய் நோட்டைக் கிழவரிடம் நீட்டினார்.

''போய்ச் சாப்பிடும் போம்! என் கண்முன் நில்லாதேயும். நான் அஹிம்சாவாதி. நான் நிற்கவில்லை. நான் போகிறேன்'' என்றார் தொண்டர் சுப்பையா கிழவர்.

நோட்டு, கைமாறிற்று.

''நீங்க நல்லா இருக்கணும் ஐயா!'' என்று கைகூப்பியபடி, உண்பதற்காக ஓடினார் கிழவர் நெல்லையப்பன்.

அவரை விட்டு வேறு திக்கில் வேகமாகப் போய்க்கொண்டிருந்தார் காந்தீயத் தொண்டு கிழவர் சுப்பையா. ★

கிழக்கும் மேற்கும்



ஃபோட்டோ: ஆர். பி. எஸ். மணி

Right now somewhere, innocent eyes watch the feed being mixed.

You don't even realise it but our cans have been helping to bring you the things you use every day: baby foods, cosmetics, fruits, fish, ghee and vanaspati, pharmaceuticals, paints, motor-oils. All with their quality intact.

Our way of doing it is with the most modern technology.

We are an associate of the world's largest can manufacturer, the American Can Company. Through us, the fruits of their over $ 20,000,000 annual research and development programme are available to canners and consumers in India.

Which means, better and more cans for you, naturally.

Things you can't do without, Poysha can

POYSHA
INDUSTRIAL CO. LTD.

Bombay • Ghaziabad • Cochin
Subsidiaries: Kaira Can Co. Ltd., Anand
Colrige Ltd., Bombay

CMPI-61-203

Trayons Trayophane protects while it attracts

Whatever your packaging need, go for India's tried and trusted Trayons Trayophane cellulose packaging film.

In India's widest range: Plain transparent-Moisture-proof-Laminate-Opaque-Coloured.

Write for sample folder. If you need advice, we will be happy to help you.

The Travancore Rayons Limited

Pioneer manufacturers of rayon yarn and cellulose film in India

SALES OFFICE:

I. O. B. BUILDING, 151, MOUNT ROAD, MADRAS 2



சிறையில் எழுந்த கவிதை

பாண்டிய மன்னன் அரண்மனையின் மேல்தளத்தில் உலாத்திக் கொண்டிருக்கிறான். அப்போது அவன் ஓர் அரிய நறுமணத்தை நுகர்கிறான். எங்கிருந்து வருகிறது என்று திரும்பிப் பார்க்கையில் மற்றொரு கோடியில் தன் பட்டமகிஷி கூந்தலை ஆற்றிக்கொண்டிருப்பதைக் கண்டு வியக்கிறான். அவள் கூந்தலுக்கு இயற்கையாகவே மணம் உண்டு என்பதை அறிந்து மகிழ்கிறான். இறைவனுடைய படைப்பு எவ்வளவு அற்புதமானது என்று எண்ணி உருகுகிறான்.

இந்த உண்மையைக் கவிதையாக வடிக்க வேண்டுமென்று எண்ணித் தமிழ்ச் சங்கப் புலவர்களை அழைத்துத் தன் உள்ளக் கருத்தைக் கவியாகப் பாடவேண்டு மென்கிறான். அவர்கள் பாடித் தர அவற்றைக் கண்டு திருப்தியடையாமல் இருக்கிறான்.

ஆயிரம் பொன் கொண்ட கிழி ஒன்றைச் சங்க மண்டபத்தின் முன்னே **கோல் நட்டு அதில் தொங்க விடுகிறான். தன் மனத்திலுள்ளதை யார் பாடுகிறார்களோ அவர்கள் அந்தக் கிழியை எடுத்துக்கொள்ளலாம் என்று முரசு அறையச் செய்கிறான்.**



மதுரைத் திருக்கோயிலில் பூஜை செய்யும் தருமி என்னும் சிவாசாரியப் பிரமசாரி தனக்குக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் பணம் வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறான். தன் வரையில் வளர்ந்து வந்த தொண்டு பின்னும் தொடர்ந்து வரத் தன் வம்சம் வளர வேண்டுமென்று அவனுக்கு ஆசை.

பாண்டியனுடைய விருப்பமும் தருமியின் விருப்பமும் ஒருங்கே நிறைவேற வேண்டுமென்று இறைவன் திருவுள்ளம் கொள்கிறான். அதோடு கல்வியினால் செருக்குற்றுப் பண்பு இழந்திருந்த புலவர்களுக்கும் அறிவு வரும்படி செய்ய நினைக்கிறான். பீடத்தின்மேல் ஓர் ஓலையை வைக்கச் செய்கிறான். அதில் ஒரு பாட்டு எழுதியிருக்கிறது. பெண்களின் கூந்தலுக்கு இயல்பாகவே நறுமணம் உண்டு என்ற கருத்து அழகாக அந்தப் பாட்டில் அமைந்திருந்தது. ''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'' என்று தொடங்கும் பாடல் அது. **"இதைக் கொண்டுபோய்ப் பாண்டியனிடம் காட்டினால் அவன் ஆயிரம் பொன் தருவான். அதைப் பெற்றுத் திருமணம் செய்துகொள்"** என்று இறைவன் சொல்கிறான்.



தருமி அந்த ஓலையை எடுத்துக் கொண்டு பாண்டியனிடம் காட்டுகிறான். பாண்டியன் மனம் மகிழ்ந்து பொற்கிழியை எடுத்துக்கொள்ளும்படி தருமியிடம் சொல்கிறான். தருமி சங்கத்தின் முன் சென்று பொற்கிழியை அறுத்துக்கொள்ளப் போகும்போது சங்கத்தில் இருந்த நக்கீரர் தடுக்கிறார். தருமி பாண்டியன் கட்டளைப் படியே வந்ததாகச் சொல்லிப் பாட்டைச் சொல்கிறான்.

சிறந்த புலவராக இருந்தாலும் அகந்தையும் பொறாமையும் அவர் கண்ணை மறைக்கின்றன: 'நம்முடைய பாடலைப் பாராட்டாத அரசன் இவன் பாட்டைப் பாராட்டவாவது!' என்ற எரிச்சல் மூளுகிறது. அவர், ''இந்தப் பாட்டில் பிழை இருக்கிறது; இதைப் பாடித் தந்த புலவனை அழைத்துக் கொண்டு வா'' என்று சொல்கிறார்.

தருமி முகம் வாடி இறைவனிடம் போய் முறையிடுகிறான். இறைவன் தலையில் பாகை, கச்ச வேஷ்டி, மேல் அங்கவஸ்திரம், கைவிரல்களில் மோதிரம் இந்த வேஷத்தோடு புலவராகத் தன்னுடன் சில மாணவர்கள் வர, தருமியும் உடன் வரப் புறப்படுகிறான்.



இறைவன் சங்கத்தின் முன் வந்து, ''யார் என் கவிக்குக் குற்றம் சொன்னவர்?'' என்று கேட்க, நக்கீரர், ''நான்தான்'' என்கிறுர். ''என்ன பிழை?'' என்று இறைவன் கேட்க, ''பொருட் குற்றம் இருக்கிறது. மகளிரின் கூந்தலுக்கு இயல்பான மணம் இருப்பதாகச் சொன்னது தவறு. செயற்கை மணந்தான்'' என்று சொல்கிறுர்.

இறைவனுக்கும் நக்கீரருக்கும் வாதம் நடக்கிறது. ''தேவப் பெண்கள் கூந்தல் எப்படி?'' என்று இறைவன் கேட்க, ''அவர்கள் கூந்தலுக்கும் செயற்கை மணந்தான் உண்டு'' என்கிறுர் நக்கீரர். ''சரஸ்வதி, லக்ஷ்மி, அம்பிகையின் கூந்தல்கள் இயற்கை மணம் உடையன அல்லவா?'' என்று படிப் படியாக இறைவன் கேட்க, எல்லாவற்றையும் மறுத்து, ''இல்லே'' என்கிறுர் நக்கீரர்.

அப்போது சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணைச் சிறிதே திறந்து காட்ட நக்கீரர், **"நெற்றிக் கண்ணைக் காட்டினுலும் குற்றம் குற்றமே!" என்று சாதிக்கிறுர்.**

பொறுமையால் அறிவுநிலை குழம்பிய புலவரைத் தண்டித்தால் அன்றித் தெளிவு வராது என்று எண்ணிச் சிவபெருமான் இன்னும் சிறிது விழித்துப் பார்க்க, நக்கீரருக்குத் தொழுநோய் (குஷ்டம்) உண்டாகி விடுகிறது. அந் நோய் தாங்காமல் மதுரைக் கோயிலில் இருக்கும் பொற்றாமரைக் குளத்தில் விழுகிறார். எழுந்து தம் குற்றத்தை மன்னிக்க வேண்டும் என்று வணங்கி அழுது புலம்புகிறார். ''என் பாட்டுக்குக் குற்றம் கூறியதை விடப் பெரிய பிழையை நீ செய்தாய். தெய்விக மகளிருக்கு அபசாரம் செய்தமையால் நீ கைலாச தரிசனம் செய்தால் இந்த நோய் தீரும்'' என்று சிவபெருமான் சொல்லி மறைகிறான்.

நக்கீரர் அழுதுகொண்டே மதுரையை விட்டுப் புறப்படுகிறார். ''இனி என்று மதுரையைக் காண்பேன்! எப்போது பாண்டிய மன்னனைப் பார்ப்பேன்! எப்போது புலவர்களைக் கண்டு மகிழ்வேன்!'' என்று மனம் வருந்தியவாறே போகிறார். அவர் திருப்பரங்குன்றத்தை அடைகிறார். பூஜைபண்ணும் நேரமாகி விட்டதால் அங்கே உள்ள குளத்தில் நீராடிக் கரையில் இருந்த ஆலமரத்தின் அடியில் அமர்ந்து பூஜை செய்யத் தொடங்குகிறார்.

ஆலமரத்திலிருந்து ஒரு பழுப்பு இலை பாதி தண்ணீரிலும் பாதி தரையிலுமாக விழுகிறது. தண்ணீரில் விழுந்தது மீனாகவும், தரையில் விழுந்தது பறவையாகவும் மாறி ஒன்றை ஒன்று இழுத்துக்கொண்டு நிற்கிறது. சிவபூசையில் இருந்த நக்கீரர் அந்தக் காட்சியைத் திரும்பிப் பார்த்து வியந்து சிறிது நேரம் பூசையை மறந்திருக்கிறார்.

அப்போது ஒரு பூதம் அவரைப் பிடித்துச் சென்று குகைக்குள் அடைக்கிறது. இப்படிப் பல காலமாக அந்தப் பூதம் செய்து வருகிறது. சும்மா பற்றிச் செல்லாமல் சிவபூசையைச் சரியாகச் செய்யவில்லை என்ற குற்றத்துக்காகத் தண்டனை கொடுப்பது போலத் தோன்றும்படி இவ்வாறு செய்கிறது.

அங்கே முன்பே 999 புலவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நக்கீரரைக் கண்டு ஆத்திரத்துடன் வைகிறார்கள்; ''இதுவரையில் பூதத்தின் அருளால் நல்ல உணவு கிடைத்தது. சுகமாக இருந்தோம். இப்போது நீர் வந்துவிட்டீர். இனிமேல் நாம் பூதத்தின் உணவாகப் போகிறோம். இந்தக் குகையை விட்டுப் பூதத்தின் வயிற்றுக்குள் புகப்போகிறோம்'' என்று கூறிப் புலம்புகிறார்கள்.

ஒவ்வொருவராக அடைத்து அடைத்து ஆயிரம் பேரானவுடன் தின்று விடுவது பூதத்தின் வழக்கமென்பதைத் தெரிந்துகொள்கிறார் நக்கீரர். எங்கே போனாலும் தமக்குத் துன்பம் வருகிறதே என்று எண்ணி வருந்துகிறார். குகையில் இருந்தபடியே அவர் பல எண்ணங்களில் ஈடுபட்டிருந்தபோது தகராகாசமாகிய குகையில் எழுந்தருளியிருக்கும் குகனாகிய முருகனுடைய நினைவு வருகிறது. உடனே முருகப் பெருமானைத் தியானித்துத் திருமுருகாற்றுப்படை பாடுகிறார். 317 அடிகளால் அமைந்த அந்த அற்புதமான பாடல் முருகன் ஆறுபடைவீடுகளில் எழுந்தருளியிருக்கும் சிறப்பைச் சொல்கிறது. தேவர்களும், முனிவர்களும், அந்தணர்களும், நாகரிகம் படைத்த மக்களும், குறவர்களும் தங்கள் தங்கள் இயல்புக்கு ஏற்றபடி முருகனை வழிபட்டு வணங்கும் வகையை அந்தப் பாடல் ஓவியமாகக் காட்டுகிறது. முருகனைத் தரிசித்து அருள்பெற வேண்டும் என்ற ஆர்வமுடைய புலவன் ஒருவனுக்கு, இன்ன இன்ன இடங்களில் சென்றால் அவனைக் காணலாம் என்று வழிகாட்டும் முறையில் திருமுருகாற்றுப்படை அமைந்திருக்கிறது. அதைக் கேட்ட முருகன், எழுந்தருளி வந்து வேலால் பூதத்தைக் கொன்று, சிறையில் இருந்தவர்களை விடுவிக்கிறான்.

நக்கீரர் முருகன் காலில் விழுந்து தம் வரலாற்றைச் சொல்லி, அருள்புரிய வேண்டுமென்று கேட்கிறார். முருகன் தன் தந்தையார் இட்ட சாபத்தை மாற்ற முடியாதென்றும், கைலாசத்துக்குப் போகாமல் காளத்திக்குச் சென்று அங்குள்ள பொன் முகலியில் நீராடினால் கைலாச தரிசனம் பெறலாமென்றும் அருள்கிறான்.

நக்கீரர் காளத்தி சென்று பொன் முகலியில் மூழ்கிக் கைலாச தரிசனம் செய்கிறார். நோய் நீங்கிப் பிறகு கோயிலுக்குள் சென்று இறைவனைத் துதிக்கிறார். கைலைபாதி காளத்திபாதி அந்தாதி பாடுகிறார். இறைவனுக்குப் பிழை செய்தால் வரும் துன்பங்களையும் அன்பு செய்தால் வரும் இன்பங்களையும் புலப் படுத்திக் கோபப் பிரசாதம் என்ற துதியைப் பாடுகிறார். அங்கே உள்ள கண்ணப்பரைத் தரிசித்து, கண்ணப்பதேவர் திருமறம் என்ற பாடலையும் பாடுகிறார். பிறகு மதுரை வந்து அடைகிறார்.

திருமுருகாற்றுப்படை, கடைச் சங்க நூல்களைச் சேர்ந்த பத்துப் பாட்டில் முதல் பாட்டாக விளங்கு கிறது. சைவத் திருமுறைகளில் பதினோராந் திருமுறையிலும் சேர்ந்து பொலிகிறது.

சித்திரம்: உமாபதி

செல்வம் எங்கே?

அநுத்தமா

ஊரெங்கும் தீபாவளி களை கட்டி விட்டது. கடைத் தெருவில் வண்ண விளக்குகளின் ஒளி, மக்களுடன் சிரித்து விளையாடியது. அந்த நெரிசலைத் தாண்டி, சங்கரின் பெரிய கார் கப்பல் போல மிதந்து, சிருங்காரக் குழலோசையோடு வீடு நோக்கிப் பறந்தது.

டிரைவர் கார்க் கதவைத் திறக்கும் வரையில் காத்திருந்துவிட்டு, சங்கர் கம்பீரமாக இறங்கி, படிக்கட்டுகளில் ஏறி வீட்டினுள் நுழைந்தான். அவன் சோபாவில் அமர்ந்ததும், வேலைக்காரன் மின்விசிறியை முடுக்கிவிட்டு மறைந்தான்.

''வந்தூட்டேளா? இதோ வருகிறேன்'' என்று மிக்க குதூகலத்துடன் அவனுக்கு முகமன் கூறி வரவேற்றுவிட்டு, அவன் மனைவி விநோதா பரக்கப் பரக்க உள்ளே விரைந்தாள். சங்கர் வியப்புடன் அவள் சென்ற திக்கையே நோக்கினான்.

ஒரு கையில் ஆவி பறக்கும் காபியும் ஒரு கையில் நெய் மணம் கமழும் வெண்பொங்கலுமாக எடுத்து வந்து, சங்கர் எதிரே உள்ள சிறு மேஜைமீது வைத்துவிட்டு, ஆவலோடு கணவன் முகத்தை உற்றுநோக்கினாள் விநோதா.

சங்கர் ஒரு விநாடி அவள் முகத்தையே பார்த்துக்கொண் டிருந்துவிட்டு, பிறகு மிகுந்த அதிருப்தியுடன் பலகாரத்தைப் பார்வையிட்டான்.

''ஏன்? என்னவோ போல் பார்க்கிறீர்களே? வெண்பொங்கல் என்றால் உங்களுக்கு உயிராயிற்றே! இதோ இருங்கள், தொட்டுக் கொள்வதற்குப் புளிகொத்ஸு கொண்டு வருகிறேன்'' என்றாள் விநோதா.

''சே! நீயும் உன் புளிகொத்ஸும்!'' என்று அருவருத்துக் கொண்டான் சங்கர்.

''என்ன நடந்தது? ஏன் அலுத்துக் கொள்கிறீர்கள்?''

''பலகாரத்தைக் கொண்டு இங்கே ஏன் வைக்கிறாய்? அதற்கென்று சாப்பாட்டு மேஜை இல்லை? அதற்கென்று இடமில்லை?'' சங்கர் அதிருப்தியுடன் கக்கினான் வார்த்தைகளை.

''இருக்கு, இருக்கு. உங்களை எழுப்புவானேன் என்று இங்கேயே கொண்டு வந்துவிட்டேன். அங்கேயே கொண்டு வைக்கட்டுமா? எழுந்து வருகிறீர்களா?''

''சீ சீ! என்ன பேசறே? சமையற்காரன் எங்கே போனான்? சர்வர் பையன் எங்கே போய்விட்டான்? நீ எதற்கு இதையெல்லாம் சுமந்து வந்து நிற்கிறே?''

''அவ்வளவுதானே?'' என்றாள் விநோதா, சாவதானமாக; ''அதனால் என்ன?''

''அதனால் என்னவா? விளையாடறியா?''

''விளையாடுவானேன்? அவர்கள் இரண்டு பேரும் ஊருக்குப் போயிருக்கிறார்கள். எனக்கு அதில் சந்தோஷம். சொல்லக் கூடாதே தவிர ....'' விநோதா சட்டென்று நாக்கைக் கடித்துக்கொண்டாள்.

''என்ன ஆயிற்று?'' என்று கணவன் எரிச்சலுடன் கேட்டான்.

''ஒன்றுமில்லை. நம் சமையற்காரருடைய தகப்பனார் செத்துப் போய்விட்டாராம். தந்தி வந்தது.''

''உம். அப்புறம்?''

''அப்புறம் என்ன? பணம் தந்து அனுப்பினேன். பாவம்! அம்மா இருக்கிறாளாம்....''

''உன் பாவ புண்ணியமெல்லாம் அப்புறம் இருக்கட்டும். சர்வர் சிதம்பரம் எங்கே?''

''அவனுந்தான் போயிருக்கிறான். தாயாதியாயிற்றே; போகாமல் எப்படி இருக்க முடியும்?''

''தாயாதியா, என் தலைவிதியா? நாளைக்கு நான் பத்துப் பேரைச் சாப்பிடக் கூப்பிட்டிருக்கிறேனே! நம் டின்னர்தான் முதல் தீபாவளி விருந்து நம் வட்டாரத்தில். இதுகூட உனக்குத் தெரியவில்லையா?'' சங்கரின் குரல் எழும்பியது.

''தெரியாமல் என்ன? ஆனால் பிறப்பும் இறப்பும் நம் கையிலா இருக்கின்றன? பெற்ற தகப்பனார் போனால் கொள்ளி போடப் போக வேண்டாமா?''

''ஊர்க் கதையெல்லாம் எதற்கு? இன்னும் ஒரு நாள் இருந்துவிட்டு நாளைக்குப் போயிருக்கலாம். என்னைக் கேட்காமல் எப்படி நீ லீவு கொடுத்து அனுப்புவாயாம்?''

''சிவ, சிவ! சாவுத் தீட்டோடு அந்த மனுஷன் சமைக்க முடியுமா? மனசுதான் கேட்குமா? அவர் உடனே போக வேண்டியது கடமை இல்லையா?'' என்று பதிலளித்தாள் விநோதா.

''எனக்கு நீ உபதேசம் செய்கிறாயா?''

''பத்துப் பேருக்கு என்ன பிரமாதம்? நான் சமைக்க மாட்டேனா? உங்களுக்குப் பிடிக்குமே என்று மணக்க மணக்கப் பொங்கலைக் கொண்டு வைத்தால் அதைச் சாப்பிடாமல் ஏதேதோ......''

''விநோதா, இனிமேல் இப்படிச் செய்யாதே. நாளைக்கு நீ சமையற்காரி மாதிரி அடுப்படியில் வெந்துவிட்டு, விரல்நுனியில் எண்ணெய்ப் பிசுக்குடன் நிற்பாயா?'' சங்கரின் குரல் மிகவும் உரக்கக் கேட்கவும், வெளிப்பக்கம் இருந்த வேலைக்காரன் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்,

விநோதா இதை ஓரக் கண்ணால் கவனித்தாள். ''சரி, அதைப் பற்றி அப்புறம் பார்த்துக்குவோம். பலகாரத்தைச் சாப் பிடுங்கோ. ஆறியே போச்சு. வேறே கொண்டு வரட்டுமா?'' என்று கூறிக்கொண்டே குனிந்து தட்டுக்களை எடுக்கப் போனாள்.

''போதும்!'' என்று கர்ஜித்துவிட்டுச் சங்கர், ''முனுசாமி!'' என்று ஒரு குரல் கொடுத்தவுடன், கதவருகில் நின்றிருந்த ஆள் உடனே வந்து எதிரே நின்றான்.

''இதையெல்லாம் எடுத்துக்கொண்டு போகச் சொல்'' என்றான் சங்கர்.

''சரிங்க'' என்றான் முனுசாமி.

எங்கிருந்தோ ஒரு பணிப்பெண் வந்து, சங்கர் தொடாமல் வைத்துவிட்ட பலகாரத்தையும் காபியையும் அப்புறப்படுத் தினாள்.

சங்கர் தன் மனைவியின் முகத்தை நோக்கினான். அவள், கண் களில் நீர் மல்க, கற்சிலை போல் எதிர் சோபாவில் அமர்ந்திருந் தாள்.

''இப்ப நான் செய்த பெரிய குற்றம் என்ன? எதற்காக இந்தத் தண்டனை?'' விநோதா தாழ்வான குரலில் தன் கணவ னிடம் பேசினாள். நிதானமாகத்தான் கேட்டாள் அவள்.

''சமையற்காரனை என்னைக் கேட்காமல் நீ எப்படி அனுப்ப லாம்? வீட்டிலே டெலிபோன் இல்லை? என்னைத்தான் கேட்க வில்லை. வேறு யாரையாவது சமையலுக்கு ஏற்பாடு செய்தாயா?''

''எதற்காக? என் சமையல் என்றால் உங்களுக்குப் பிடிக் குமே! விருந்துச் சமையல் நான்தான் செய்ய வேண்டும் என்பீர் களே? பதினைந்து நாட்கள் சென்றால் நம் சமையற்காரரே வந்துவிடுவார்.''

''அதெல்லாம் பழைய காலம். இப்பப் பதினைந்து நாட்கள் நீ சமைக்க, நான் பார்க்கணுமா?''

''பெண்களுக்குச் சமைப்பது என்பது....''

''உனக்கு இப்பொழுது அந்தஸ்து இருக்கிறது. வீடு நிறைய ஆட்கள் இருக்கிறுர்கள். நீ அடுப்படியில் போய், வேர்க்க விறுவிறுக்க வேலை செய்தால் அவர்கள் சிரிக்க மாட்டார்களா? என் மதிப்பைப் பற்றித் துளியேனும் யோசித்துப் பார்த்தாயா?'' புரியாத குழந்தைக்குப் பாடம் கற்றுக் கொடுப்பது போலப் பேசினுன் சங்கர்.

விநோதா ஒரு விநாடி, நெற்றியில் இரு கோடுகள் தோன்ற, யோசித்தாள். ஏதோ வாயெடுத்துப் பேச ஆரம்பித்தாள். பிறகு பேசாமல் இருந்துவிட்டாள்.

''என்ன விழிக்கிறே?'' என்று அவளைப் பேச்சுக்கு இழுத்தான் சங்கர்.

''கணவனுக்குப் பிடித்தபடி சமைத்துப் போடுவது மதிப்புக் குறைவா? எங்கள் அம்மா சொல்லுவாள்—மனிதனுடைய இதயத்துக்கு வாசல் வயிறுதான் என்று. பெண்ணின் செங்கோல் கரண்டி என்பாள்.''

''உங்கள் அம்மா ஓர் அன்னக்காவடி. அந்தப் பேச்சைப் பிரமாதமாகச் சொல்ல வந்தூட்டியா இங்கே? வயிறுதான் வாசலாம்! ஹும்!''

விநோதா பதில் ஒன்றும் கூருமல் தன் இடத்தை விட்டு எழுந்தாள்.

''இப்ப என்ன செய்யப் போகிருயாம்?'' என்று கேட்டான் கணவன்.

''நீங்கள் எதைச் சொன்னுலும் அதைச் செய்கிறேன்'' என்று சொல்லும்போது விநோதாவின் தொண்டை அடைத்தது.

''எதற்கு இப்பொழுது நீலித்தனம்?''

''ஒன்றும் இல்லையே! வெறும் பொங்கலாக உங்கள் கண்ணுக்குத் தெரிந்ததே, அதை நினைக்கும் போது வேதனையாக இருக்கிறது.''

''ஏன், நீ செய்தது தங்கச் சுரங்கமா? உலகத்தில் காணுத அதிசயமான பொருளா?''

''எங்கள் அன்பெல்லாம் அந்தச் சுவையில் குழைத்து, எங்கள் ஆசையெல்லாம் அதில் தாளித்து நிற்கிறேம். நீங்கள் நன்முக இருக்கிறது

என்ருல் சொர்க்கமே கண்டது போலத் தோன்றுகிறது எங்களுக்கு. இல்லாவிட்டால் வாழ்க்கையே சப்பிட்டு விடுகிறது. இது இல்லறத்தின் சுவைகளில் ஒன்று. அதன் இன்றியமையாத அழகுகளில் ஒன்று.''

''விநோதா, இப்பத்தான் எனக்குப் பளிச்சென்று ஒன்று புரிகிறது'' என்று கூறி நிறுத்தினன் சங்கர்.

''என்ன அது?''

''உன் பெயரை மாற்றினதனுலேயோ, உன் உடையை மாற்றினதனுலேயோ, உன்னை என்னுல் மாற்ற முடியவில்லை பார்!''

''தெரு வீட்டை விட்டு, தனிப் பங்களாவுக்கு வந்ததனுலேயே உள்ளமுங்கூட மாற முடியுமா என்ன?''

''மாற வேண்டும் என்று நினைத்தால் மாறலாம். நீ என்னை மதிக்கவில்லை. அதனுல் வந்த கோளாறுதான் இது.''

''என்ன கோளாறு ஆகிவிட்டது? நீங்கள் இன்று வேண்டுமென்றே பட்டினி கிடக்கிறீர்கள். ராத்திரி யார் சமைப்பார்கள் என்று தெரியவில்லை. அவ்வளவுதானே?'' என்று சொல்லிக் கொண்டே ஒருவித அசதியுடன் எழுந்து இரண்டடி நடந்த விநோதா மீண்டும் அமர்ந்துவிட்டாள்.

''விநோதா, நீ செய்த தவறு உனக்குப் புரியவில்லை, பார்த்தாயா? இந்த ஆட்கள் ஒவ்வொருவரையும் நான் எப்படிப் பொறுக்கி எடுத்திருக்கிறேன், தெரியுமா?''

''எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?'' உயிரற்றுக் கேட்டாள் விநோதா.

''எல்லோரும் பெரிய பெரிய கோடீசுவரன் வீட்டிலே இருந்து இருந்து பழக்கப்பட்டவர்கள். அவர்கள் எதிரே நீ கொஞ்சங்கூடக் கம்பீரமில்லாமல் அடுப்படிக்கும் துடுப்படிக்கும் போவது சரியே அல்ல. உன் பின்னுடி எவ்வளவு சிரிப்பார்கள் தெரியுமா?''

''அப்படியா? சிரிப்பார்களா?'' என்று கேட்டாள் விநோதா, ஏதும் உணர்ச்சியற்ற குரலில்.

''ஆமாம். பிறகு நம் சிநேகிதர்கள் முன்னுல் நாம் தலைகாட்ட முடியாது. சரி, இனிமேல் எனக்கு அதிருப்தி அளிக்கும் வகையில் நடந்து கொள்ளாதே. போ, போ'' என்ருன் சங்கர்.

விநோதா மெதுவாக எழுந்து போய்ப் படுக்கையில் பொத்தென்று விழுந்தாள். துக்கம் அவள் நெஞ்சை அடைத்தது. கூரையின் மீது பார்வையை நிறுத்தினுள். அவள் மனக் கண்முன் பழைய வாழ்வு நிழற்படம் போல் விரிந்தது.

''பழைய காமாட்சியாகவே இருந்திருக்கக் கூடாதா? ஏன்தான் இந்த ஐந்து லட்சம் ரூபாய் லாட்டரி விழுந்ததோ தெரியவில்லையே? விநோதாவாமே! பெயர் விநோதம் போல்தான் வாழ்க்கையும் வேடிக்கையாக இருக்கிறது'' என்று தனக்குத் தானே பேசிக்கொண்டாள் விநோதா.

கணவன் மாடி ஏறி வருவது கேட்டது. விநோதா அசையவில்லை. ஆனுல் அவன் நேரே தன் அறைக்குப் போகாமல், விநோதாவின் அருகில் வந்து நின்ருன்.

''என்ன விநோ, என்ன பலமான யோசனை?'' என்று மிக்க பரிவுடன் விசாரித்தான் சங்கர். அவனது கோபம் தணிந்துவிட்டது போலும்.

''நாம் லாட்டரிச் சீட்டு வாங்கினுேமே, அந்த நாளை நினைத்துப் பார்த்தேன். அந்தப் பையன் எங்கே போனுனே?''

''பழைய கதை, விநோதா. நாம் வேர்க்கடலையைத் தின்றுகொண்டே, மெரினு பீச்சிலே நடந்து வந்துகொண்டிருந்தோம், இல்லை? அந்தப் பையன் கீச்சுக் குரலிலே கத்திக்கொண்டே வந்தான்....'' என்ருன் சங்கர்.

''ஆமாம், நம் கையிலே இருக்கிற காசையெல்லாம் திரட்டி, லாட்டரி டிக்கட்டை வாங்கிக்கொண்டு, பஸ்ஸுக்குக் காசு இல்லாமல் மாம்பலம் வரையில் நடந்தோமே!''

''உன் கால் வீங்கிவிட்டது. வீட்டுக்கு வந்து வெந்நீர் வைத்து..''

''நீங்களே வெந்நீர் காய்ச்சித் தந்தீர்கள். காலையும் உங்கள் கையால் நீவுவேன் என்றீர்கள்.'' ஒரு பெருமூச்சு அவளை மீறி வெளியே வந்தது.

''என் அன்பு குறைந்து விட்டதா இப்போ? இதோ பார்'' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே, தன் பின்னுலிருந்து ஒரு புடைவையை எடுத்து அவள்முன் விரித்தான் சங்கர். உடலெல்லாம் ஜரிகை போட்ட பனுரஸ் புடைவை அது.

''இது எனக்கா?'' என்று கேட்டாள் விநோதா.

''பின்னே யாருக்கு?''

''நாளைக்கு விருந்துக்குக் கட்டிக் கொள்ளணுமா?''

''இல்லை, இல்லை. தீபாவளியன்று தொழிலதிபர் கந்தசாமி வீட்டில் விருந்தாயிற்றே? அதற்குத்தான்.''

''அவர் பெயர் சொன்னதுமே எனக்குப் பழைய நினைவு வருகிறது.

"இதோ வந்துட்டேன்!"



போட்டோ: ஆர். பி. எஸ். மணி

அன்றைக்கு மெரினாவிலிருந்து நடக்க முடியாமல் நான், பாலம் கண்ட இடத்திலெல்லாம், திண்ணை கண்ட இடத்திலெல்லாம் உட்கார்ந்தேனே; கந்தசாமி பங்களா வாசலில், காம்பவுண்டுச் சுவர்ப் பக்கத்து ஒட்டுத் திண்ணையில் உட்கார்ந்ததும், கூர்க்கா விரட்டினானே, நினைவிருக்கிறதா?'' என்று கேட்டாள் வினோதா.

சங்கரனும் பழைய நினைவில் லயித்தான்.

''இங்கே உட்காரக் கூடாது. எஜமான் வர நேரம்!'' என்று கூர்க்கா அவர்களை விரட்டினான் அன்று.

''நாங்கள் யார் எனறு உனக்குத் தெரியவில்லையா? சரி, கிடக்குது போ'' என்றான் சங்கர்.

''யார் நீங்க?'' என்று கேட்டான் கூர்க்கா.

''ஏன் ஐயா, எஜமானின் தங்கை மகன்கூட அடையாளம் தெரியவில்லையா? சின்னம்மாவை டாக்டர் நடக்கச் சொன்னாங்கள்னு நாங்கள் கிளம்பினால்....புரியவில்லையா?''

கூர்க்கா ஒரு விநாடி திகைத்தான். அந்த இருட்டு நேரத்திலே உற்று நோக்கினான்.

''வா, காமு, போகலாம். மாமா வேறே பார்த்துட்டா உள்ளே வா என்பார். நாழிகையாகும். நாம் பார்ட்டிக்குப் போகணும்'' என்று உண்மைபோலச் சங்கரன் பேசினதும், கூர்க்கா மலைத்துவிட்டான். வெகு நேரம் அவன் அவர்களையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்க, அவர்கள் இருட்டில் நடந்து மறைந்தார்கள்.

''அந்தக் கூர்க்காகிட்டே ஏன் அப்படிப் பேசினீங்க?'' என்று ரசித்துக் கேட்டாள் அன்றைய காமாட்சி.

''சும்மாதான் குஷி. கூர்க்கா ஏமாந்துவிட்டான் பார். பணக்காரனாக இருந்தால் எத்தனையோ மருமான்!'' என்று பதிலளித்தான் அவள் கணவன்.

இன்று, வினோதா எழுந்து அமர்ந்து, இரு கைகளாலும் முகத்தைத் தேய்த்து விட்டுக்கொண்டு, இப்பொழுது நடந்தது போலப் பழைய நிகழ்ச்சியைச் சுவைத்தாள்.

''என்ன சிரிக்கிறே, வினோதா?''

''இப்பக் கந்தசாமி வீட்டுக்குப் போகும்போதெல்லாம் அந்தக் கூர்க்காவைப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது.''

''ஏன் வினோதா?''

''அடையாளம் கண்டுவிட்டாலோ என்று நினைக்கத் தோன்றுகிறது.''

''நீ மகா அசடு, வினோ. காமாட்சியும் சங்கரநாராயணனும் பழங்கதையாகி விட்டார்கள். அவர்களை மறந்துவிடு. அதற்காகத்தானே நான் நம் பழைய நண்பர்களை அறவே கத்தரித்துவிட்டேன்? உன் பிறந்தகத்தாரையும் ஓரளவு விலக்கிவிட்டேன்!''

''ஓ, அப்படியா?''

''வினோ, நான் எதற்கு வந்தேன், தெரியுமா? நல்ல சமையற்காரனும் சர்வரும் ஏற்பாடு செய்துவிட்டேன். விளக்கு அலங்காரத்துக்கு, பெரிய எலெக்ட்ரிக் கம்பெனி வருகிறது. கால்கீழே இருக்கும் ரத்தினக் கம்பளங்கூடப் பழையது கிடையாது. புதிதாக வரப்போகிறது.'' உற்சாகமாகப் பேசினான் சங்கர்.

''நாம் இரண்டு பேருந்தான் பழசாக்கும்?'' என்று கேட்டாள் வினோதா, சாதாரணக் குரலில்.

''நாமும் புதியவர்கள்தாம்; நினைவிருக்கட்டும்!'' என்றான் சங்கர், திடீர்க் கண்டிப்புடன்.

''ஆமாமாம்'' என்றாள் வினோதா. எழுந்து, கண்ணாடி முன் அமர்ந்து தன் உருவத்தை நோக்கினாள். கணவன் பின்னால் தன் அருகில் நிற்பது தெரிந்தது. புது விதமான தலையலங்காரம், நாகரிக உடை—இவை மனிதர்களின் உருவத்தை மாற்றித்தான் விட்டன என்று ஓடியது அவள் மனம்.

சங்கர் அவள் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டுத் தன் இடத்துக்குத் திரும்பினான். போகுமுன் இருவர் அறைக்குமிடையே இருந்த கதவின் அருகில் ஒரு விநாடி, நின்று திரும்பி அவளைப் பார்த்து, ''இன்றைக்கு ராத்திரி ஹோட்டல் ஜயந்தியில் சாப்பாடு'' என்றான்.

''சரிதான்'' என்றாள் வினோதா, திரும்பாமலே.

கொஞ்ச நேரம் படுத்துக்கொண்டிருந்து விட்டு அவள் எழுந்து கீழே சென்றபோது, அவள் கணவன் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான். அவளை நிமிர்ந்து நோக்கும்போது பெருமிதத்தில் அவன் முகம் மலர்ந்தது.

''நான் கொஞ்சம் கடைத்தெருவுக்குப் போய்விட்டு வருகிறேன். என்னைப் பார்த்தால் கல்யாணத்துக்குப் போகிற மாதிரி இருக்கிறதோ?'' என்று கேட்டாள் அவள், தன் உடையைச் சுட்டிக் காட்டி.

''இல்லையே? பொருத்தமாகத்தான் இருக்கிறது. சீக்கிரம் வந்துவிடு. என்ன?'' என்றான் கணவன்.

வினோதா தலையை ஆட்டிவிட்டு வெளியே சென்றாள். கார் வந்து நின்றது. அவள் ஏறி அமர்ந்ததும் வண்டி பறந்தது.

எங்கெல்லாமோ போய்விட்டு அவள் திரும்பியபோது, சங்கர் ஹோட்டலுக்குப் போக உடை மாற்றிக்கொண்டிருந்தான். வினோதா அவன் கருத்தைக் கவரும்படி ஆடை அலங்காரம் செய்துகொண்டு வந்தாள்.

''பேஷ்! தேவகன்னிகை மாதிரி இருக்கிறாய். நாளைக்கும் இப்படியே....''

''ஓ! ஆகட்டுமே'' என்று அலட்சியமாகப் பதிலளித்தாள் வினோதா.

ஹோட்டல் சாப்பாட்டின்போது அவள் வெகு நாசுக்காக நடந்துகொண்டாள். சங்கர் பெருமையோடு அவளை ஒரு முறை பார்ப்பதும், சுற்றுப்புறத்தை ஒரு முறை பார்வையிடுவதுமாக ரசித்தான். திரும்பி வீடு வந்தபோது, காரில் அவள் தோள்மீது ஒரு கை போட்டபடியே வந்தான்.

அவன் அன்பைப் பார்க்கும்போது அவள் நெஞ்சம் ஒரு கணம் உருகிற்று. ஆனால் உடனே அவளையறியாமல் ஒரு பெருமூச்சு வெடித்து வந்தது.

மறுநாள் காலை விடியும்போதே புதிய சமையற்காரரும் சர்வரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு விவரம் கற்றுக் கொடுப்பதில் முனைந்தாள் வினோதா.

அவளைத் தனியாகக் கூப்பிட்டான் சங்கர். ''இதோ பார், வினோதா. அந்த ஆள்கள் பின்னாலேயே சுற்றாதே. இங்கே சோபாவில் உட்கார். அவர்கள் வந்து கேட்டுக்கொண்டு போகட்டும்'' என்றான்.

வினோதா முன்பக்கத்திலேயே அமர்ந்திருந்தாள். வைர நகைகளைப் போட்டுக்கொண்டு, சாண் அகல ஜரிகைக் கரை போட்ட பட்டுப் புடைவையும் அணிந்துகொண்டு, தங்கப் பதுமை போல வீற்றிருந்தாள். கணவன் அவள் எதிரே வந்து, ''இப்படித்தான் இருக்கவேண்டும், வினோ. அசடு மாதிரி நடந்துகொண்டு என் கோபத்தைக் கிளறி விடுகிறாயே! நம் மதிப்புக்கேற்றபடி நாம் நடந்துகொண்டால்தான், மற்றவர்களும் நம்மை மரியாதையுடன் நடத்துவார்கள்'' என்றான்.

''ஆமாம், இப்பத்தான் எனக்குப் புரிகிறது, எது மதிப்பு, எது மதிப்பு இல்லை என்பது'' என்றாள் வினோதா.

''ஆமாம். வினோ. நீ புத்திசாலிதான். ஆனால் பழைய பட்டிக்காட்டுக் குணம் போகமாட்டேன் என்கிறது சில சமயம்.''

''சரிதான்.''

''நாளைக்கு அந்தப் பழைய சமையற்காரன் திரும்பி வந்தால், வீட்டில் சேர்க்காதே; என்ன?''

''நாளைக்கு வரமாட்டார்கள். எல்லாக் காரியங்களும் முடிந்துதான் வருவார் சமையற்காரர். சர்வர் பையன் மட்டும் நாளைக்கு மறுநாள் வருவான்.''

''ஏன்?''

''சாவுக்குப் போனால், அவரவர்களுக்குச் சில சடங்குகள், விதிகள் உண்டு. அதெல்லாம் முடிந்துதானே வருவார்கள்?''

''இப்படியெல்லாம் இடம் கொடுக்கக்கூடாது, வினோதா. இப்பொழுது வந்திருக்கும் புது ஆட்களையே நியமித்துவிட்டேன். அவர்கள் வந்ததும் கணக்குத் தீர்த்துவிடு'' என்றான் சங்கர்.

வினோதா ஒன்றும் பதில் பேசவில்லை. முகத்தைச் சட்டென்று வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள்.

அன்று விருந்து மிகவும் விமரிசையாக நடந்தது. சங்கரையும் விநோதாவையும் பாராட்டாதவர் இல்லை. சங்கர் மிகவும் உற்சாகத்துடன் இருந்தான். விநோதாவிடம் மீண்டும் மீண்டும் வர்ணித்தபடி இருந்தான்.

''ஐஸ் க்ரீமை வீடு மாதிரி செய்திருந்தான், பார்த்தாயா? பாதாம் கேக்கை அன்னம் மாதிரி செய்து, எதிரே சிங்காரக் குளத்திலே மிதக்கவிட்டது போல வைத்ததை எல்லாரும் ஆச்சரியத்தோடு பார்த்தார்களே; நீயும் கவனித்தாயா?'' என்றான்.

''ஆமாம், கவர்னர் பார்ட்டியில் கூட இப்படி இல்லை என்றார்கள்.''

''ஏன் விநோதா, ஏன் உற்சாகமில்லாமல் பேசுகிறாய்?''

''தலையை வலிக்கிறது. அதிகமான வெளிச்சம், அர்த்தமற்ற பேச்சு, பாட்டு, சரியாக நடக்க வேண்டுமே என்ற கவலை - எல்லாம் சேர்ந்து மண்டையை உடைக்கின்றன. நான் படுக்கப் போகிறேன்.'' எழுந்துவிட்டாள் விநோதா. விருட்டென்று போய்விட்டாள்.

சங்கர் வெகு நேரம்வரை, வீட்டின் அலங்காரத்தையும், விருந்தின் மேன்மையையும் மனசோடு ரசித்தவண்ணம் முன்பக்கம் ஹாலிலேயே அமர்ந்திருந்தான். வேலையாட்கள் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்துவிட்டு, அவரவர்களும் உறங்கப் போய்விட்டார்கள். சங்கர் தன் படுக்கைக்குச் சென்றான்.

மறுநாள் காலை அவன் விழித்துக் கொண்டபோது மிகவும் நேரமாகிவிட்டிருந்தது. காலைப் பலகாரம் சாப்பிட அவன் கீழே வந்தபோது விநோதாவைக் காணவில்லை.

''அம்மா இந்த லெட்டரைக் கொடுக்கச் சொன்னாங்க'' என்று சொல்லிக்கொண்டே, விநோதாவின் வேலைக்காரி ஒரு கடிதத்தை நீட்டினாள்.

''அம்மா எங்கே?'' என்று அவளைக் கேட்டான் சங்கர், கடிதத்தைப் பிரிக்காமலே.

''விடியற்காலம் யாரோ வந்திருந்தாங்க. அவங்களுடன் டாக்ஸியில் போய்விட்டாங்க.''

''நீயும் கூட ஒத்தாசைக்குப் போவதற்கு என்ன?'' என்று கேட்டான் சங்கர்.

''அம்மா வேண்டாம் என்று சொன்னாங்க. அங்கே போகிற இடத்தில் ஆட்கள் இருக்காங்களாம்'' என்று பணிவோடு கூறிவிட்டு, வேலைக்காரி போய்விட்டாள்.

தன்னிடம் சொல்லாமல், தன்னை எழுப்பாமல் விநோதா எங்கே போயிருப்பாள்? யார் வந்திருப்பார்கள்? ஒரு விதமாகப் பலகாரத்தை முடித்துக்கொண்டு, மாடிக்குப் போனான் சங்கர். கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

''அன்பரே,

''இந்தக் கடிதம் எழுதும் துணிச்சல் எனக்கு எங்கிருந்து வந்தது என்று எனக்கே புரியவில்லை.

''சமையற்காரர் விவகாரமும், நான் செய்த பொங்கலும் வாழ்க்கையையே பாதிக்குமா என்று நினைக்கையில் ஆச்சரியமாக இருக்கிறது. இரண்டு நாட்களாக ஆலோசித்து ஆலோசித்து, என் மண்டை குடைய ஆரம்பித்துவிட்டது.

''பணம் என்பது என்ன? நம்மையும் வசதியாக வைத்து, பிறர் துக்கத்தையும் போக்கப் பயன்படும் போதுதான் அது தெய்வமாகத் தெரிகிறது. 'லக்ஷ்மி' என்று அதை வழிபடுகிறோம். அந்தச் செல்வம் நம் இதயத்தை மறைக்கும் திரைச்சீலையாகவும், பரிவு என்னும் ஈரத்தை அறவே துடைக்கும் சுருணைத் துணியாகவும் மாறும்போது, நாம் தெய்வத்தையே இழிவுபடுத்துவதுபோலத் தோன்றுகிறது.

''நேற்று அவசரப்பட்டு ஒரு வேலை செய்தேன். உங்கள் துணி பீரோவைத் திறந்து பார்த்தால், ஜவுளிக்கடைப் பதுமை ஒன்று இருக்கும். உங்களுக்கு இப்பொழுது தேவை அது போல ஒன்றுதான். வாடாத புன்னகையும், எதிலும் ஈடுபடாத கடினமும் ஒரு பொம்மைக்குத்தான் இருக்கும். நீங்கள் தந்த புடைவையையும் வைர அட்டிகையையும் அதற்கு அணிவித்துவிட்டேன். தீபாவளி விருந்துக்கு அதையே கூட்டிச் செல்லுங்கள் என்று எழுதி வைத்துவிட்டு வந்தேன். ஆனால் நின்று யோசிக்கையில் அது சிறுபிள்ளைத்தனமாகத் தோன்றுகிறது. என்னை மன்னித்துவிடுங்கள். ஆனாலும், வைர அட்டிகை என் கழுத்தை நெறிக்கும் சுருக்காகத் தோன்றும்போது அங்கேயே இருந்து நாடகமாட என் மனம் ஒப்பவில்லை. அதனால் என் அம்மாவிடம் வந்துவிட்டேன்.

''புதுப் பணம் ஒரு புதுப் பொம்மை போல; கொஞ்ச நாள் அநுபவித்ததும் திருப்தியடைந்து, பழையபடி ஆகிவிடுவீர்கள் என்று கனவு கண்டேன். ஆயினும், அது லாகிரி வஸ்து போலும். வசதியாக இருக்கவேண்டிய ஒன்று, வியாதியாக மாறலாமா?

''எனக்கு ஆயிரம் பரிசுகள் அளித்தீர்கள். ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக மனுஷத்தனம் என்று ஒன்று உண்டல்லவா? அதையே நான் விரும்புகிறேன். மேலும், நம் பணத்தைச் செலவழித்து, நமக்கு நாமே காவல்களை அமர்த்திக்கொண்டது எனக்கு மூச்சை முட்டுகிறது; சுதந்தரந்தான் எனக்கு உகந்த பரிசு.

''என் அம்மாவிடமிருந்து கடிதம் வந்தது. என் தங்கை விஜயாவின் வயிற்றைக் கிழித்துக் குழந்தையை எடுத்தார்களாம். தெரிந்ததும் என் மனம் தவித்தது. உங்களை அநுமதி கேட்டால், கிடைக்காது என்று எனக்குத் தெரியும். என் தம்பியை டாக்ஸியுடன் வரச் சொல்லி ஃபோன் செய்துவிட்டு வந்துவிட்டேன். இந்த நிலையில் உங்கள் காரை எடுக்க மனம் ஒப்பவில்லை.

''ஒரு பானைக்கு ஒரு சோறு பதம் பார்ப்பார்கள். நான் பல பார்த்தேன். சமையற்காரர் விவகாரமும் பொங்கல் விஷயமும் சின்னவையாக இருந்தாலும், வருங்காலத்தைப் பயங்கரமாகத் திட்டிக் காட்டுகின்றன. அந்த நாளைக் காண நான் அஞ்சுகிறேன்.

''நான் அவசரப்பட்டுக் கொண்டு இந்த முடிவுக்கு வரவில்லை. ஜயந்தி ஹோட்டலில் சாப்பிடப் போன போதும், கடைத்தெருவுக்குப் போன போதும் என் அலங்காரம் நடை உடை பாவனையையும் கவனித்திருப்பீர்கள். உங்கள் புது மோகம் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று நாடி பார்த்தேன். உங்கள் அன்புக்கு வெளிப்பூச்சுத்தான் அளவுகோலாக அமைவதைக் காண என் மனம் வருந்துகிறது.

''இன்று நம்மிடம் பொருட்செல்வம் நிறைய இருக்கிறது. அன்று நம்மிடம் காசுக்குப் பஞ்சமாக இருந்த நேரத்தில் ஒரு செல்வம் இருந்ததே—மனநிறைவும், பிறநலம் பேணும் பண்பும்—அந்தச் செல்வம் எங்கே?

''என் மனக் குழப்பம் தீரவும், உங்கள் சிந்தனை தெளிவு பெறவும் அவகாசம் தேவை. அவசரப்பட்டு என்னை அழைக்க வராதீர்கள்.

''வேலைக்காரர்களுக்கு என்ன சொல்லிச் சமாளிப்பீர்களோ?

''பழையபடி இருந்திருந்தால் உங்களை எழுப்பாமல், உங்களுக்குத் தெரியாமல் என்னால் வெளியேற முடிந்திருக்குமா என்று நினைக்கும் போது எனக்குச் சிரிப்பு வருகிறது. பணக்காரியாக இருப்பதில் இப்படி ஒரு வசதி!

அன்பு,

காமாட்சி.''

சங்கர் கடிதத்தை இரண்டு முறை படித்தான். தான் இழுத்த இழுப்புக்கெல்லாம் தங்கக் கம்பியாகத் துலங்கிய விநோதாவா இப்படி எஃகுப் போல ஆகிவிட்டாள்? அவனால் நம்ப முடியவில்லை.

வேலைக்காரர்கள் ஒவ்வொருவராக வந்து ஏதேதோ உத்தரவுகள் கேட்டார்கள். எதையோ சொல்லி எல்லோரையும் அனுப்பிவிட்டான் சங்கர். தன் அறையை உட்புறம் தாழிட்டுக்கொண்டு பீரோவைத் திறந்தான்.

தங்கத் தகிடிப் புடைவையும், வைர நெக்லெஸுமாகப் பதுமை அவனைப் பார்த்துச் சிரித்தது. கடிதம் அவன் கையிலிருந்து கீழே விழுந்தது. அவன் அதை எடுக்கக் குனிந்தான். ''காமாட்சி'' என்ற அவளுடைய கையெழுத்து அவன் மண்டையில் குத்தி ரீங்காரம் செய்தது.

வெளியே யாரோ பாணம் விட்டார்கள். விஷ்ணுசக்கரம் சுழன்று தீப்பொறி கக்கியது. சங்கரின் மூளையிலும் சிந்தனை சுழன்றது. எண்ணங்கள் பொறி பறக்கத் தொடங்கின. ✻

முன்னேற்றப் பாதையில்
சுதந்திர இந்தியா
ஒரு நாட்டின் வாழ்க்கையுடன் ஒப்பிடுகையில், 25 ஆண்டு சுதந்திரம் என்பது குறுகிய காலந்தான்; ஆனல் இந்தியாவுக்கோ இது மாபெரும் மாற்றம்; மகத்தான சாதனைகள்.
1915-இல் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பெரிய இயக்கம் ஒன்றைத் துவக்கினர்; அகிம்சா முறையில் இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக.
1947-இல் சுதந்திரக் கனவு நனவாகியது; பிறகு குடியரசாக மலர்ந்தது; உலகின் மாபெரும் ஜனநாயகம் வேரூன்றி நின்றது; நிற்கின்றது.
உலகின் 'உயர்ந்த விமான தளம்' லடாக்கில், 14230 அடி உயரத்தில் இருக்கிறது.
ஆசியாவின் நீண்ட, நவீன கயிற்றுப்பாதை — மலைப்பிரதேசப் போக்குவரத்து மார்க்கம் — டார்ஜிலிங்கில் இருக்கிறது.
வடிவத்தில் உலகின் பிரம்மாண்ட அணைக்கட்டுகளின் வரிசையில் இடம் பெற்றவை நாகார்ஜுன சாகர், ரீவாஸ் அணைகள். பெரும்பாலும் கைவண்ணம் படைத்த கட்டுமானங்கள்!
உலகின் மாநெடும் அணை ஹிராகுத் அணைதான்!
உலகின் மிகப் பெரிய நீர் மின்சார நிலையங்களில் பக்ரா அமைந்திருக்கிறது.
ஆசியாவிலேயே பெரியது, புதுமையானது பம்பாயிலுள்ள அணுச்சக்தி நிலையம்.
இந்தியாவிலேயே நுணுக்கத்துடன் நூதனமும், பல்வேறு இயந்திர சாதனங்களின கட்டுக்கோப்புமுடைய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை சென்னையில் இருக்கிறது. பலவகைப்பட்ட இயந்திரங்களுக்கும் அத்தியாவசியமான மசகு எண்ணெய்களை (லூப்ரிகேஷன் ஆயில்களை) ஏராளமாகத் தயாரிப்பதும் சென்னை ஆலையே. அதோடு, பலவகையான எண்ணெய் பொருட்கள், ரசாயனப் பொருட்களின் உற்பத்திக்கு ஆதாரமாகத் தாய்போலத் தாங்கி நிற்பதும் சென்னை ஆலை.
1901-இல் இந்தியாவில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்ப் பொருட்களின் மொத்த உற்பத்தி 5 லட்சம் டன்களே. ஆனல், இப்பொழுதோ 2 கோடி டன்கள்!
நிலத்தில், கடலில், வானவெளியில் சுகமான சொகுசுப் பயணம், பசுமைப் புரட்சி, உணவில் தன்னிறைவு, இல்லத்தரசிகள் எரிவாயு அடுப்பின் குமிழியைத் திருகியவுடனே வெகு சீக்கிரம் சமையல்!
ஒளிமயமான எதிர்காலத்தை—சிறந்த நல்வாழ்வை—நோக்கி இந்தியா முழுவதுமே புத்தெழுச்சியும், உத்வேகமும் கொண்டிருக்கிறது. அதில் சென்னை சுத்திகரிப்பு ஆலைக்கும் பங்கு உண்டு.
MRL
மதராஸ் ரி:பைனரீஸ் லிமிடெட்
மணலி, சென்னை-68.

maa. MRL 2324

தி சவுத் இண்டியா பாங்கு லிமிட்டெட் (டின்னவேலி)

(பதிவு அலுவலகம்: 62, கீழ ரத வீதி, திருநெல்வேலி டவுண்)

ஷெடியூல்டு பாங்கு ஸ்தாபிதம்: 1903

கிளைகள்

அம்பாசமுத்திரம்	காரைக்குடி	பாளையங்கோட்டை	திருச்செந்தூர்
அரியநாயகிபுரம்	குலசேகரம்	பண்பொழி	திருநெல்வேலி ஜங்ஷன்
ஆய்க்குடி	மதராஸ்	புளியங்குடி	திருநெல்வேலி டவுண்
திண்டுக்கல்	மதுரை	ராஜபாளையம்	தூத்துக்குடி
கடையம்	மணவாளக்குறிச்சி	ராஜசிங்கமங்கலம்	விக்ரமசிங்கபுரம்
கடையநல்லூர்	நாகர்கோவில்	சாயர்புரம்	வீரவநல்லூர்
களக்காடு	நாங்குநேரி	செங்கோட்டை	விருதுநகர்
கல்லிடைக்குறிச்சி	நசெரேத்	சுரண்டை	
கண்டரமாணிக்கம்	ஒட்டநத்தம்	தென்காசி	

கீழ்க்கண்ட இடங்களில் எமது கிளைகள் விரைவில் செயல்பட இருக்கின்றன:

1. A. கலையம்புத்தூர் *(மதுரை ஜில்லா)*
2. குமாரபாளையம் *(சேலம் ஜில்லா)*
3. ஆனந்தூர் *(ராமநாதபுரம் ஜில்லா)*
4. மேற்கு ரெங்கராஜபுரம் *(மதராஸ்)*
5. சூளைமேடு ஹைரோடு *(மதராஸ்)*

டிபாசிட்டும் - வட்டி விகிதமும்

சேவிங்ஸ் பாங்கு *(தினசரி இருப்புத் தொகையின் மீது)* ... $4\frac{1}{2}\%$

தவணை டிபாசிட்டுகள் ... 2% முதல் $7\frac{3}{4}\%$ வரை

எல்லா விதமான வங்கி அலுவல்களும் செய்யப்படும்.

இதர விவரங்களுக்கு அருகாமையிலுள்ள எமது கிளை அலுவலகத்தை அணுகுங்கள்.

T. N. சுப்பையா, செக்ரட்டரி, K. C. ராமசந்திரன், சேர்மன்.

—சரவண

Gram : GURUCURES
Phone : 5648
Post Box No. 22

M.G.S.T. No. 108507
C.S.T. No. 4435

Dr. A. Mathuram Sons

Guru Medical Hall, Tiruchirapalli-17

Managed by: **Dr. B. L. J. Mathuram,** M.B.B.S., F.I.C.S.

GURU MEDICINES ARE OVER 90 YEARS OF FAME, NAME & EXPERIENCE

குரு மருந்துகள் 90 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை

குரு தைலம் - குரு பல்பொடி

குழந்தைகளுக்கு:

குரு ஆஸ்த்மா டிராப்ஸ்	குரு பிரசவ காயதிராவகம்	
குரு மயிர் பூச்சிவெட்டு மருந்து	குரு வல்லாரை லேகியம்	குரு கஸ்தூரி கார மாத்திரை
குரு கிருமிபூச்சி மாத்திரை	குரு ஜீவாமிர்த லேகியம்	குரு கோரோஜனை மாத்திரை
குரு மலையாளம் கூந்தல் தைலம்	குரு ஆயுள்வேத லேகியம்	குரு வேப்பெண்ணை தைலம்
குரு மலையாளம் வாய்வு சூரணம்	குரு ஸ்நானத் தைலம்	குரு பாலர் டாணிக்
குரு சோகை சஞ்சீவி		குரு பாலர் வயிற்றோட்ட நிவாரணி

உங்கள் ஊர் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். இல்லாவிட்டால் எங்களிடம் எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ், குரு மருந்துசாலை, திருச்சிராப்பள்ளி-17.

விதியின் சதி

கி. சந்திரசேகரன்

அன்று காலையில் அயோத்தி நகரமே புன்னகை பூத்துப் புது மோகன எழிலைப் பெற்றிருந்தது. நாயகனைப் பிரிந்த காதலி, காத்திருந்த அன்பன் திரும்பி வருகிறான் என்ற செய்தி கேட்டுத் தன் முகப் பொலிவுடன் வரவேற்பு அளிக்கத் தன்னை அலங்கரித்துக்கொள்வது போல நகரம் காட்சி அளித்தது. இராமன் கானகத்திலிருந்து வருகிறான். பரதனை நந்திக் கிராமத்தில் முதலில் சந்தித்துவிட்டான். இன்னும் சில விநாடிகளில் அயோத்தியிலே அவன் காலடி எடுத்து வைப்பான் என்ற செய்தி எங்கும் பரவியிருந்தது.

ஏற்கனவே இராவண வதத்தையும், சீதையை இலங்கையிலிருந்து மீட்டதையும், இன்னும் காட்டில் விளைந்த பல கஷ்டங்களையும்பற்றிக் கதை கதையாக எங்கும் மக்கள் பேசினார்கள்; அந்தச் செய்திகள் அவர்கள் மனத்தில் இராமனிடம் ஒரே மோகத்தை எழுப்பியிருந்தன.

அரண்மனை அந்தப்புரம் முழுவதிலும் பெண்கள் அப்படி அப்படியே தம் தம் கடமைகளைச் சற்று நேரம் நிறுத்திவிட்டு, அண்ணலைக் கண்டு தங்கள் மன எழுச்சியை விளக்கும் விழாவில் கலந்துகொள்ளும் நேரத்தையே அவாவுடன் எதிர்நோக்கி நின்றனர். குதூகலமும் பரபரப்பும் எங்கும் பொங்கி வழிந்தன.

ஒரே ஓர் இடத்தில் மட்டும் அமைதி நிலவியது. தினசரி வாழ்க்கையில் எந்த விதமான மாறுதலையும் அவ்விடத்தில் காணவில்லை. ஆம்; ஊர்மிளையின் தனி மாளிகையில்தான் வழக்கம்போல் அதிகாலையில் பூஜையறையில் ஆராதனையின் ஏற்பாடுகள் ஒழுங்கு கெடாமல் செய்யப்பட்டிருந்தன. தூபம் கம்மென்று மணந்தது. தீபச் சுடர் விளக்குகளில் பளிச்சென எரிந்தது. மலர்களின் மணம் எங்கும் கமழ்ந்தது. மாலைகள் வரிசையாக அலங்கரிக்க வேண்டிய இடங்களில் தொங்கவிடப்பட்டிருந்தன. மணியோசையும் மந்திர கோஷமும் செவிகளில் மெல்ல விழுந்தன.

ஊர்மிளை ஜனார்த்தனன் விக்கிரகத்துக்கு எதிரில் தன் இமைகளை மூடி உதடுகள் மட்டும் அசையும்படி மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு வீற்றிருந்தாள். பாங்கி ஒருத்தி ஓடோடியும் வந்தவள், ''அம்மணி, சுமித்திரா தேவியார் தங்கள் வரவை எதிர்பார்க்கிறார்கள். தங்கள் கணவர் வரும் வேளை நெருங்கியதை ஞாபகப் படுத்தச் சொன்னார்கள். எல்லோரும் நகர வாயிலுக்குச் செல்கிறார்கள். தங்களையும் தயாராக இருக்கும் ரதத்தில் ஏறிக்கொண்டு மற்றவர்களுடன் புறப்படச் சித்தமாயிருக்க விரும்புகிறார்கள்'' என்றாள். இதை அவள் சொல்வதற்குள் மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கின.

ஊர்மிளை பதிலொன்றும் உடனே பகராததைச் சேடி கவனித்துத் தயங்கியபடி நின்றாள். பிறகு, குறுநகை உதடுகளிலே தவழ ஊர்மிளை அவளிடம் கூறினாள்: ''என் வரவை நினைத்து மற்றவர்கள் காத்திருக்க வேண்டியதில்லை. என் தெய்வ வழிபாடு முடிந்ததும் நான் எது வரைக்கும் எதிர் கொண்டழைக்க இயலுமோ அதுவரை வருவேன் என்று சொல்லடி. போய் வா, நிற்காதே.'' எத்தகைய மனச் சங்கடமோ ஆயாசமோ இன்றி அவள் சொற்கள் மென்மையாக ஒலித்தன. பாங்கியால் அங்கே தாமதிக்க இயலவில்லை. வருகிறவர்களைப் பார்க்க அவள் ஆசைப்பட்டதனால் ஊர்மிளை சொல்வதற்குள் நிற்காமல் விரைந்து சென்றுவிட்டாள்.

ராகவனும் சீதையும் தங்களைச் சூழ்ந்த ஜனங்களையெல்லாம் அவரவர்களுக்கு உகந்தபடி உபசார மொழிகளை வழங்கியவண்ணம் மெல்ல நடந்து வந்துகொண்டிருந்தார்கள். வாயிலை நெருங்கியவுடன் தாய்மார்களைக் கீழே விழுந்து சேவித்தனர். மாண்டவி, சுருதகீர்த்தி இருவரையும் சீதை பரிவுடன் அணைத்தவாறே, ''எங்கே என் தங்கை ஊர்மிளை? அவளை மட்டும் காணவில்லையே!'' என்று வினவினாள். அப்பொழுதுதான் அவர்களும் ஊர்மிளை அங்கே இல்லாததை உணர்ந்தார்கள். இருவரும் ஒரே குரலில், ''எங்கள் அவசரத்தில் அவள் இங்கே இல்லாததைக் கூடக் கவனிக்கவில்லை நாங்கள்'' என்று ஏதோ சால்சாப்பைச் சொன்னார்கள். இதைக் கவனித்த சுமித்திராதேவி நிதானத்தை இழக்காமல், ''வருவாள் சமயத்தில். நாம் வந்த மற்றவர்களைக் கவனிப்போம். வாருங்கள்'' என்று அழைத்தாள்.

இராமன் இதனிடையில் லட்சுமணனிடம், ''என்ன லட்சுமணா, முகத்தில் ஏதோ வாட்டம் காண்கிறதே! எனக்குத் தெரியும்: மற்றவர்களுடன் ஊர்மிளை இல்லையே என்றுதான் நீ கவலைப்படுகிறாய் அல்லவா?'' என்று வேடிக்கையாகப் பேசினான். ஆனால் உள்ளூறச் சிந்தை ஆழத்தில் வேதனை புகுந்தது.

லட்சுமணன் வாய் திறக்கவில்லை. வேறு பலவிதக் காரியங்களில் மனத்தைச் செலுத்தியவனாய்ப் பிறர் சௌகரியங்களுக்கு உதவுவதே தன் பணியாக நடந்துகொண்டான்.

ஊர்வலமாய் நகர்ந்து வந்த ஜனத்திரள் அரண்மனையை நெருங்கியவுடன் தனித் தனி மாளிகைகளுக்கு ஏகும் விருந்தாளிகளுக்கு வழி விட்டு விலகியது.

இராமனும் சீதையும் நேரே தங்கள் அரண்மனைக்குப் போக முற்படவில்லை. சீதைக்குத் தன் பிரியமான சகோதரியைக் காண மிகவும் அவா. இராமனுக்கோ ஊர்மிளையை ஏன் காணவில்லை என்பதை அறிய அக்கறை. லட்சுமணனிடம் சீதை, ''வாரும், போவோம் ஊர்மிளையினிடம். அவளைக் காணாததால் எனக்கு ஒன்றும் ஓடவில்லை'' என்றவாறு மைத்துனனையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு ஊர்

மிளையின் அந்தப்புரத்தினுள் நுழைந்தாள்.

ஊர்மிளை பூஜையை முடித்துக்கொண்டு தெய்வத்துக்குச் சுற்றிய ஆரத்தி நீரை அதற்கெனக் கொட்ட வேண்டிய இடத்தில் கொட்டுவதற்காக வெளி வந்தவள், லட்சுமணனை முன்னால் தள்ளிக்கொண்டு தன் சகோதரியும் இராமனும் பின்னே நுழைவதைக் கவனித்தாள். சிறிதும் பரபரப்பின்றி, தன் கையில் ஏந்திய தட்டிலுள்ள நீரை அவர்களின் எதிரே திருஷ்டி சுற்றினாள். பிற்பாடு நிமிர்ந்து லட்சுமணன் நெற்றியில் தன் விரலால் ஆரத்தி நீரை இட்டாள். இதனைக் கவனித்த லட்சுமணனின் இரு கண்களிலும் நீர் மல்கியது. எத்தனை திடமாக மனத்தை அடக்கிப் பார்த்தும் அவன் உணர்ச்சி அதை லட்சியமே செய்வதாக இல்லை. ஊர்மிளை தன் எதிரே நெகிழ்ந்து நின்ற கணவனை உற்றுப் பார்த்தாள். சிறிது குரலைத் தாழ்த்தி, ''அன்றாடம் உங்களை வழிபடும் என்னைக் காண்பதில் ஏன் இவ்வளவு உணர்ச்சி ஏற்படவேண்டும்?'' என்றாள். இதனைக் கேட்ட எல்லோரும் புதிர் ஒன்றை அவிழ்க்க இயலாத நிலையில் திண்டாடினர். அவள் கருத்துச் சட்டென விளங்காமல் ஒவ்வொருவரும் ஏதேதோ கற்பனை செய்துகொண்டு பிரமித்தார்கள்.

லட்சுமணன் இதயத்தில் தன்னிடம் ஏதோ குற்றம் இருப்பதை அவள் சூசனையாகக் காட்டுகிறாளோ என்றே முதலில் கவலை பிறந்தது. மனத்தை ஒருவாறு கட்டுப்படுத்திக்கொண்டு, ''தேவி, கானகம் போகும் தருணத்தில் நேரில் உன்னிடம் நான் விடை பெறவில்லை என்பது தவறுதான். என்னை மன்னிக்கமாட்டாயா?'' என்று மிகுந்த பச்சாத்தாபத்துடன் சொன்னான்.

ஊர்மிளை இதனைக் கேட்டதும் வாய்விட்டே சிரித்துவிட்டாள். ''என் நாதருக்கு என் சமீபம் நெருங்கவே அப்பொழுது பயம். எங்கே நானும் சீதையைப் போல் காடு போகிறவர்களுடன் வருவேன் என்று பிடிவாதம் பிடிப்பேனோ என்ற கவலை, பாவம்!'' என்றாள். லட்சுமணனுக்கு என்ன பதில் கூறுவதென்றே தோன்றவில்லை. இராமன் மட்டும் இதனிடையில் அவளிடம், ''நீ ஊகிப்பது உண்மை என்றே நினைக்கிறேன். நீயும் உன் தமக்கையுடன் காட்டுக்குப் புறப்பட்டிருந்தால், ஓர் இராவணனை மட்டுமல்ல, இரண்டு இராவணர்களை அல்லவா வதம் செய்ய முனைந்திருக்க வேண்டும்?'' என்றார்.

ஊர்மிளை அந்த விளக்கத்தை ஒப்புக்கொள்ளாதவளைப் போல, ''நான் சீதையுடன் இருந்திருந்தால் அவளைத் தனியே பர்ணசாலையில் விட நேர்ந்திருக்காதல்லவா? என் நாதர் வெளியே போகவும் சந்தர்ப்பம் இருந்திராது. ஒருவருக்கொருவர் துணையாக இருந்திருப்போம்'' என்றாள். லட்சுமணனும் பழைய ஞாபகத்தில் ஆழ்ந்தவனாய், சீதை தன்மேல் எய்த சொல்லம்புகளை மறுமுறை ஏனோ நினைத்துக்கொண்டான். அவன் வாய் வெறுமனே இராமல், ''ஆம், தேவி, அண்ணியும் என்னை

அவ்வாறு அவதூறு செய்திருக்க மாட்டாள்'' என்றது. சீதை அன்று அவனிடம் சந்தேகங் கொண்டு மொழிந்த சொற்களை நினைக்கவும் அவன் இதயம் பதறியது. அப்படியே உணர்ச்சிவசம் ஆகிவிட்டான்.

இராமன் சீதையின் சங்கடமான நிலையை உணர்ந்தான். இருவரையும் சமாதானம் செய்யும் பொருட்டுச் சொல்லலானான்: ''எல்லாம் விதியின் சூழ்ச்சி, அப்பனே! விதி ஆட்டி வைப்பதை ஆண்மகன் மாற்றிவிட முடியும் என்று நீதான் மார் தட்டினாய். அநுபவம் உணர்த்துவது வேறு; விதி ஒருவரையும் விடாது. அதன் ஆட்சிக்குரிய நேரம் கிடைத்தால், தன் முழுப் பலத்தையும் காட்டிவிட்டே ஓய்வு கொள்ளும்.''

இதைக் கேட்டவுடன் மறுபடியும் லட்சுமணனிடம் ஆவேசம் ஏறியது. அவன் இராமன் கூறும் எதையும் ஒப்புக்கொண்டு நடப்பவன்; விதியின் சதியைப்பற்றித் தன் அண்ணன் கொண்டுள்ள கருத்தை மட்டும் விடாமல் தகர்த்தெறியச் சதா முயன்றவன். ஆகையால் இப்போதும் கட்சியாடவே துணிந்தான். ''அப்படி விதி என்னும் ஒன்று மனிதனை வாட்டுவதாயின், மனிதனுடைய யோக்கியதைதான் என்ன? சும்மா அதற்கு இடம் தருவதா? அதை ஒருகாலும் என்னால் ஒப்புக்கொள்ள இயலவில்லை. அண்ணா, உங்கள் வாழ்க்கையில் நேர்ந்த இன்னல்களையெல்லாம் தகர்த்த நீங்களா இன்னமும் விதியின் செயலை நம்புகிறீர்கள்?'' என்றான்.

அவன் குரலில் கோபத்தைவிட ஆச்சரியமே மேலோங்கியிருந்தது.

ஊர்மிளை இந்த விவாதத்தைச் சூட்சுமமாய்க் கவனித்தாள். தானும் அதில் கலந்து கொண்டாள். ''விதியை ஒரு சமயம் பழித்தீர்கள். உங்கள் தந்தையார் சத்தியத்தைக் காப்பதற்காக உங்கள் அண்ணன் கானகம் செல்லச் சித்தமானது நினைவு வருகிறது. எவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்தீர்கள் அன்று! உங்கள் வேகத்தைத் தணிப்பதற்காக உங்கள் அண்ணு பல விதமாய் முயன்றதும் இன்னும் மறக்கவில்லை. அடாத காரியம் ஒன்றைச் செய்ய முற்பட்டது ஞாபகம் இருக்கிறதா? தந்தையை ஒழித்துக் கட்டுவேன் என்று நீங்கள் பொருமியதை மறந்துவிட்டீர்களா? நல்ல காலம்! தமையனுர் சொல்லைக் கேட்டு அடங்காமல் மட்டும் இருந்திருந்தால் என்ன விபரீதங்கள் நேரிட்டிருக்குமோ? அப்பழுக்கற்ற உங்கள் குலப் பெருமைக்கே கேடு விளைந்திருக்கும் அல்லவா?''

லட்சுமணனுக்கு அந்தச் சொற்களைக் கேட்க விருப்பமில்லை; ஆகவே தடுத்தான் அவளை; ''ஊர்மிளை, என்னவெல்லாம் பேசுகிருய்? போனுல் போகிறது; நான் பழைய ஞாபகங்களை விட்டுவிட்டு, இனிச் செய்வதில் தற்சமயம் ஈடுபட விரும்புகிறேன். இத்தனை காலம் என்னைப் பாராமல் இருந்த நீ இனிய வார்த்தை ஒன்றேனும் கூருமல் ஏதேதோ தர்க்கங்களில் மனத்தைச் செலுத்துகிருயே!'' என்ருன் சிறிது ஏக்கத்துடன்,

ஊர்மிளை உடனே தனக்கு இயல்பான அடக்கத்தை மேற்கொண்டாள். தன் கருத்தைச் சொல்லும் அவகாசம் கிடைத்ததை வரவேற்ருள். ''அண்ணலே! என்னைப் பிரிந்ததாக உங்கள் உள்ளத்தில் வேதனைப் படுகிறீர்கள் அல்லவா? என்னிடமே நீங்கள் நிலைத்துவிட்டதனுல் நான் தனிமையில் இருக்கிறேனென்று ஒரு சமயமும் கருதவில்லை. எனக்குப் பிரிவு ஏற்பட்டதென்ற எண்ணம் கணப்பொழுதேனும் உண்டாகவில்லை. துக்கம் என்பதை இதுசாறும் நான் அறியேன். என்னுடன் நீங்கள் இருப்பதாகவே நினைத்து வந்ததனுல் தானே பிறர் உங்களை வரவேற்பதற்காகப் பல ஏற்பாடுகளைச் செய்கையில் எனக்கு எந்த விதமான புதிய எழுச்சியும் இதயத்தில் தோன்றவில்லை? சதா கடவுளை நான் வேண்டிக் கொண்டது என்ன தெரியுமா? 'என் நாதர் எங்கிருப்பினும் என்னுடனேயே இருப்பதுபோல் உணரும் வகையில் என் மனத்தை அவரிடம் செலுத்த அருள் புரிய வேண்டும். எனக்கெனத் தனிச் சுகம் வேண்டாம். அவருடன் தன்னைப் பிணைத்துவிட்ட பின் அவரை நினைக்கும் நினைவில் என் மனம் சாந்தி பெறவேண்டும்' என்று பிரார்த்தித்தேன். மாமி சுமித்திரா தேவியார் சித்திரகூடம் போகையில் என்னையும் தம்முடன் வந்து உங்களைத் தரிசிக்கத் தூண்டினபொழுது கூட, இதே கருத்தை அவர்களிடம் கூறினேன். என் தந்தை ஜனக மகாராஜரும் என்னை மனச்சாந்தி அடையத் தம்முடன் வந்து சிறிது காலம் தங்கும்படி அழைத்தபொழுதுகூட, 'நான் சாந்தியில்லாமலா இருக்கிறேன்? கடவுள் எனக்கு எந்த இடத்திலும் சாந்தி உண்டாகும்படி அருள் புரிவார்' என்றே கூறி, அவருடைய விருப்பத்துக்கு இணங்க மறுத்தேன். விதியை மாற்ற இயலாதுதான். ஆனுல் நம்மை மாற்றிக்கொண்டால் விதியின் விளைவு நம்மைப் பாதிக்காமல் செய்துகொள்ள இயலும் என்பதை உணருகிறேன்'' என்ருள். அவள் சொற்களில் தோய்ந்திருந்த திட நம்பிக்கை மற்றவர்களைப் பிரமிக்கச் செய்தது.

அவளுடைய கருத்து விளங்கியதும், லட்சுமணனுக்குச் சவுக்கடி கொடுத்ததுபோல் இருந்தது. சிறிது மனப் போராட்டம் குறைந்தவனுய்த் தன் இதயத்தைத் திறந்து வெளிக்காட்டவும் முற்பட்டான்: ''ஊர்மிளை, நான் அறிந்தேன் உன் மனப் பலம் எங்கிருந்து பிறக்கிறது என்று. எனக்கு எல்லாத் தெய்வமும் என் அண்ணன் ஒருவனே என்று இறுமாந்திருந்தேன். இப்பொழுது விளங்குகிறது. உன் வைராக்கியம் எந்த உச்சநிலையை அடைந்துள்ளது என்பது. சந்தோஷம், துக்கம் இரண்டுமே உன்னைத் தம் வசமாக்காமல் காத்துக்கொள்ளும் நடுநிலையை அடைந்தவள் நீ என்பதை இனியும் அறியாவிடில் நான் உன் கரத்தைப் பற்றியவனுக எண்ண நியாயமில்லை.'' லட்சுமணன் மொழிகளினூடே மன்னிப்பை யாசிப்பது போன்ற ஒரு சிறிய கருத்தும் ஒளிந்திருந்ததை மற்றவர்கள் புரிந்து

கொண்டார்கள்; அவர்களிலும் இராமன் நன்கு புரிந்துகொண்டான்.

ஊர்மிளை லட்சுமணனைப் பார்த்து, "ஒரே ஒரு விண்ணப்பம்: என் சந்தேகத்தைக் கேட்க வேண்டும். அதைத் தீர்க்க வேண்டும். அண்ணாவே தெய்வம் என்று எப்பொழுதும் நீங்கள் எண்ணி இருந்திருந்தால், சீதா தேவியின் கடுமொழிகளைக் கேட்டவுடன் எதனால் உங்கள் தெய்வம் இட்ட கட்டளையையும் மீறி நீங்கள் வெளியே சென்றீர்கள்? பர்ணசாலையில் தனியே சீதையைவிட்டுச் செல்வதற்கு உங்கள் மனம் துணிந்தது எதனால்? எனக்கு இன்னும் புரியாதது ஒன்று: கணப்பொழுதில், எல்லாவித நன்மையையும் மறந்து, ரோஷத்தின் வலையில் ஏன் சிக்கினீர்கள்? எனக்குத் தெளிவாய் விளக்குங்கள்."

இதைக் கேட்ட இராமனுடைய இதழ் நுனியில் சிறிது புன்னகை அரும்பியது. சீதையோ மன்னிக்க இயலாத தன் நடத்தையை ஊர்மிளை இன்று பலர் முன்னிலையில் அலசுகிறாளே என்று தவித்தாள்.

லட்சுமணனுக்குத் திடீரென்று தன்னிடம் வேரூன்றிய பலவீனத்தை நினைக்க வேண்டி வந்துவிட்டது. ஊர்மிளையின் பக்குவம் அன்றோ அவனைப் பார்த்து இன்று ஏசுகிறது? நடந்தவற்றைப் பற்றி இனிச் சிந்திப்பதிலும் பயன் இல்லாமற் போகவில்லை என்பதை உணரத் தொடங்கினான். அவனால் ஊர்மிளையின் வாதம் சரி என்பதை இனி ஒப்புக்கொள்ளாமலும் இருக்க இயலவில்லை.

"ஆம், ஊர்மிளை, உன் தவம் உன்னிடம் அரிய ஞானத்தைப் பெருகச் செய்திருக்கிறது. விதியின் சதி என்பது நிச்சயம் உள்ளது என்பதை என் அண்ணன் எவ்வளவு தடவை ஞாபகப் படுத்தியும் அறிய இடங் கொடாத இந்த நெஞ்சு இன்று உன் உபதேசத்தினால் தெளிவு பெற்றுவிட்டது. அன்று அண்ணியின் சொற்களை, ஆணவம் குறையாத நிலையில் இருந்ததனால், எனக்கென எடுத்துக்கொண்டு தவித்தேன். தெளிவு இழந்ததனால், என் மனக்கொதிப்பை அடக்கவும் வழிகாணாமல், சீதையை அகன்று வேகமாய் வெளிக் கிளம்பினேன். என் மனிதத்தன்மை எங்கே அப்பொழுது என் உள்ளே இருக்கும் பகைவனை வெல்ல இடம் கொடுத்தது? உன்னை இன்றாவது அறிந்தேனே! அதுவே என் வாழ்க்கையில் இனி ஒரு திருப்பம் உண்டாவதற்கு வழி ஏற்படுத்தும்" என்றான் லட்சுமணன். அவன் சொற்களில் பச்சாத்தாபம், ஏமாற்றம், மன்னிப்பு எல்லாம் இருந்தன; முழுவதும் அவனை வசப்படுத்துவது எது என்ற முயற்சியில் போட்டியிட்டன.

"அபசாரம் அண்ணலே! என்னை அப்படியெல்லாம் புகழ வேண்டாம். என்றுமே தெளிவின் ஊற்றுப் பெருக்கானவர் உங்கள் தமையனாரே. அவர் எவ்வளவு முன்கூட்டியே இந்த உபதேசத்தை உங்களுக்குச் செய்திருக்கிறார்! தந்தையைக் கொன்று பழி தீர்க்கிறேன் என்று நீங்கள் ஆரவாரம் செய்ததும், உங்கள் அண்ணன் சொன்னவை இப்பொழுதாவது ஞாபகம் வரலாம். அவர் மொழிகளை வாங்கிக்கொள்ளும் நிதானம் பெற நாமே பாடுபட வேண்டும். அவரிடம் காணாத உயர்குணம் ஏதாவது இனி உலகில் உண்டாகப் போகிறதா? உண்டாகும் என்று எனக்குத் தோன்றவில்லை."

இராமனும் சீதையும் இருவருமே வாயடைத்து நின்றனர்.

இராமன் மட்டும் மெல்ல இளையவனைப் பார்த்து, "அப்பனே! உன் மனைவியின் கூற்றுக்கு எதிர்வார்த்தையாட இடம் இல்லை. அவள் தந்தைக்கு ஏற்ற மகள் என்பதை உறுதிப்படுத்திவிட்டாள். உண்மையில் அவளே ஜானகி" என்றார்.

சீதையின் தலை சிறிது கவிழ்ந்ததை ஒருவரும் கவனிக்கவில்லை. ★

அகம் காட்டும் கண்ணாடி

முகம் காட்டும் கை

போட்டோ: ஆர். உதயபாஸ்கர்

காலை எட்டரை மணி முதல் பதினெரு மணி வரையில் தீவிரமாக இயங்கும் அசுர யந்திர கதியில் மவுண்ட் ரோடில் வாழ்வும் வாழ்பவர்களும் சுழன்றுகொண் டிருந்தனர். பஸ்களும் கார்களும் சைக்கிள்களும் ஆட்டோ ரிக்ஷாக்களும் அங்கும் இங்கும் எங்கும் பறந்து பறந்து போய்க் கொண்டும் வந்துகொண்டும் இருந்தன. நடந்து போகிறவர்கள்கூடக் காலிலே இறக்கையைக் கட்டிக்கொண்டு பறக்காத குறையாக ஓடிக்கொண் டிருந்தனர்.

எங்கும் ஒரே இரைச்சல். இந்தச் சப்தத்துக்கும் வேகத்துக்கும் சற்றும் உட்படாமலும் கட்டுப்படாமலும் பஞ்சாமி திருவல்லிக்கேணியில் இருக்கும் தம் வீட்டிலிருந்து மவுண்ட் ரோடில் அண்ணு சிலையைப் பார்த்தவாறு இருந்த அலுவலகத்துக்கு மெதுவாக நடந்து போய்க்கொண் டிருந்தார். பஞ்சாமியின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்தவர்களுக்கு, இப்படித்தான் உலகத்தில் எல்லாரும் முன்னேறிக்கொண் டிருக்க, அவர் மட்டும் முன்னேற்றம் என்பது என்னவென்றே தெரியாத, தெரிந்துகொள்ள முடியாத, ஓர் அபூர்வப் பிறவியாக நடந்து வருவது புரியும்.

காவிரி நதி தீரத்தில் புண்ணிய க்ஷேத்திரமான திருவையாற்றில் பஞ்சாமி பிறந்து இன்றோடு 47 ஆண்டுகள் 9 மாதங்கள் உருண்டு ஓடிவிட்டன. பஞ்சநதசுவாமி என்ற அழகான பெயர். எப்படிக் காலப்போக்கில் அது சிதைந்து திரிந்து உருத் தெரியாமற் போய்ப் பஞ்சாமியாக மாறிவிட்டதோ அப்படியேதான் தம் புதல்வனைப் பற்றிப் பஞ்சாமியின் பெற்றோர் கண்ட இனிய கனவுகளும் நிலைகுலைந்து உருத் தெரியாமல் மாறிவிட்டிருந்தன.

பஞ்சாமியின் தந்தை கோமதி சங்கர தீக்ஷிதர் முறையாக அத்தியயனம் செய்தவர்; வேத வித்து; வேத பாராயணத்தில் விற்பன்னர்; அந்தத் துறையிலே தம்மைச் சமூகத்துக்கு மனமகிழ்வுடன் முழுவதும் அர்ப்பித்துக்கொண்டு, பெரும் செல்வம் இல்லாவிடினும் தமக்குப் பெரும் புகழை ஏற்படுத்திக் கொண்டவர். தம் ஒரே மகன் தம்மைப் பின்பற்றி அதே துறையில் தமக்குப் பின் தம்மைக்காட்டிலும் அதிகப் பிரகாசமான நட்சத்திரமாக ஜொலிப்பான் என்று அவர் கனவு கண்டார்.

பஞ்சாமியின் தாய் கோமதி அம்மாளோ தன் பிள்ளை ஆங்கிலப் படிப்புப் பயின்று ஒரு பெரிய 'உத்தியோகஸ்தன்' ஆகி முன்னுக்கு வர வேண்டும் என்று விரும்பினள். இரண்டு பேர் ஆசைகளையும் மண்ணுக்கினர் அவர். வேளையும் அவர் ஜாதகமும் அப்படி. பஞ்சாமிக்குச் சுட்டுப் போட்டாலும் வடமொழி வரவேயில்லை. ஆங்கிலப் படிப்பும் அவருக்கு மீறிய அகலமும் ஆழமும் படைத்ததாகத்தான் இருந்தது. எப்படியோ தட்டுத் தடுமாறிப் பள்ளிக்கூடத்தில் எஸ். எஸ். எல். ஸி. வகுப்பைப் பதினெட்டு வயதில் எட்டிப்பிடித்த அவர் அந்தக் கட்டத்தைத் தாண்ட முடியாமல் நின்றுவிட்ட நிலையில் வீட்டில் சொல்லிக்கொள்ளாமல் சென்னைக்கு ஓடி வந்துவிட்டார்.

இரண்டு ஆண்டுகள் எத்தனையோ இடங்களில் எத்தனையோ விதமான வேலைகளைப் பார்த்துவிட்டுப் பிறகு வீடுகளுக்கும் விழாக்களுக்கும் தேவையான கட்டில், பீரோ, நாற்காலி, மேஜை போன்ற மரச் சாமான்களை வாடகைக்கு விடும் இந்த மவுண்ட் ரோடு ரவுண்ட் டாணு நிறுவனத்தில் 'பில் கலெக்டரா'க ஒரு வேலையைப் பிடித்துக்கொண்டார். தம் இருபத்தைந்தாவது வயதில் அந்த வேலை உறுதியானவுடன் திருவையாற்றுக்குத் திரும்பிச் சென்றார். அங்கே தங்கள் பிள்ளை பொறுப்பான ஓர் இடத்தில் தானாகவே அமர்ந்துவிட்டானே என்ற சந்தோஷத்தில், அவன் தங்களுக்குத் தந்த ஏமாற்றங்களை மறந்து பஞ்சாமியின் பெற்றோர் மகனுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

மனைவி மங்களத்துடன் திருமண வாழ்வு தொடங்கி இருபத்துமூன்று ஆண்டுகளையும் பஞ்சாமி சென்னை வாழ்வு என்னும் பேராற்றுப் போக்கிலே ஒரு புறமாக நின்றுவிட்ட ஒரு பாறை போன்று கழித்துவிட்டார். பஞ்சாமிக்குத் திருமணம் ஆகி நான்கு ஆண்டுகளுக்குள் அவருடைய பெற்றோர் மறைந்துவிட்டனர். பிள்ளைதான் தாங்கள் எதிர்பார்த்தபடி வாழ்ந்து முன்னுக்கு வரவில்லை என்றால் பேரப்பிள்ளைகள் மீது புதிய கோட்டைகள் கட்டலாம் என்று அவர்கள் நினைத்திருந்ததுகூட நடக்கவில்லை. திருமணமாகிப் பத்து ஆண்டுகள் வரையில் பஞ்சாமிக்குக் குழந்தைகளே இல்லை. பிறகு பிறந்தான் சங்கரன். அதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தாள் கோமதி. இப்பொழுது சங்கரன் ஒன்பதாவது வகுப்பிலும் கோமு ஏழாவது வகுப்பிலும் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லிஸ் ரோடு வழியாக அலுவலகத்தை நெருங்கிய பஞ்சாமிக்குக் காலையில் தம் மனைவி மங்களம் சங்கரனைப் பற்றிச் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன: "நீங்கதான் சரியாப் படிச்சு முன்னுக்கு வரலேன்னு ஒங்க பிள்ளையும் அப்படியே இருக்கணுமா? ஏதோ பகவான் அருளால் அவன் நல்ல மார்க் வாங்கிண்டு வரான். அவனுக்குப் போட்டுக்கறதுக்கு ஒரு நல்ல சட்டைகூட இல்லை. அதுதான் போகட்டும். படிக்கிறதுக்குப் பாடப் புஸ்தகங்கூட இல்லாம எவ்வளவு நாள்தான் அவன் போய் வாத்தியார் கிட்டத் திட்டு வாங்குவான்? இதோ பாருங்கோ, சொல்லிட்டேன்! இன்னிக்குச் சாயந்தரம் ஆகறத்துக்குள்ளே கடனே உடனே வாங்கி அவன் புத்தகங்களை வாங்கி வந்துடுங்கோ; புண்ணியமாப் போகும்."

மங்களம் சொன்னதும் சரிதான். சங்கரன் படிப்பில் படுசூடிகையாக இருந்தான். அவனுக்குப் புத்தகம் வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்று பஞ்சாமிக்கு ஆழ்ந்த வருத்தந்தான். என்ன செய்வது? அவருக்குக் கிடைக்கிற 150 ரூபாய்ச் சம்பளத்தில் வீட்டு வாடகையைக் கொடுத்துவிட்டுப் பால் பாக்கி, மளிகை பாக்கி எல்லாவற்றையும் அழுதுவிட்டுப் போதாக் குறைக்கு ஏற்கனவே வாங்கியிருந்த கடன்காரர்களுக்கும் கொஞ்சம் கொஞ்சம் கையைக் காட்டிவிட்டு மிஞ்சும் பணத்தில் அன்றாட வாழ்க்கையை நடத்துவதே பெரும் பாடாக இருக்கிறது.

ஒரு நாள் மங்களம் அவரிடம் ஒரு வழி சொன்னாள்: ''நீங்களும் இருபது வருஷங்களுக்கு மேலே ஓடா ஒழைச்சிருக்கேள். ஒங்க முதலாளிகிட்டத் தைரியமாக் கேட்கிறதுதானே? அகவிலையெல்லாம் ஒசந்து போயிருக்கிறபோது பாக்கிப் பேரெல்லாம் எப்படிச் சமாளிக்கிறா? அவாவா வாயிலே வழி இருக்கு. செய்யற வேலைக்கு அதிகமாச் சம்பளம் கேக்கறா; கிடைக்கிறது; வாங்கிண்டு போய்க் குடித்தனம் பண்ணறா. நீங்க மாத்திரம் ஒண்ணும் கேட்காம வேலையை மாத்திரம் செஞ்சுண்டு இருந்தா அவாளாக் கூப்பிட்டுக் கொடுப்பாளா? மத்தவாளைவிட நீங்க வேலை மட்டும் குறைச்சா செய்யறேள்? ஏன் சம்பளத்தைக் கூட்டிக் கொடுன்னு கேக்கறதுக்குப் பயப்படறேள்?''

மங்களம் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த பஞ்சாமிக்கு அவள் சொல்வது முற்றும் நியாயம் என்றுதான் பட்டது. ஆனால் என்ன முயன்றாலும் அவருக்கு என்னவோ என்றைக்கும் யாரிடமுமே அடித்துப் பேசி அநுபவம் இல்லை.

பஞ்சாமியைப் பார்த்தால், பார்க்கிறவர்களுக்குச் சிரிப்புத்தான் வருமே தவிர மதிப்போ மரியாதையோ கொஞ்சங்கூட இருக்காது. சுமார் ஐந்து அடி நாலு அங்குல உயரம், ஒல்லியான கூனல் விழுந்த உடம்பு. அழுக்கடைந்ததும் கிழிந்ததுமான ஒரு கோட்டு. பஞ்சகச்சம்



வைத்துக் கட்டிய பழுப்பு ஏறிப் போன வேஷ்டி. காலில், மைல் கணக்கில் நடந்து, ஆயிரம் தரம் தேய்ந்து அறுந்து தைத்த பழைய செருப்பு. கையில் பழங்காலத்துக் குடை. பேச்சில் பணிவு, பயம், தன்னம்பிக்கையின்மை. இவ்வளவை யும் வைத்துக்கொண்டு அவரும் ஒரு 'பில் கலெக்ட'ராக 23 ஆண்டுகள் இருந்து, மாதம் 18 ரூபாய் சம்பளத் திலிருந்து மாதம் ரூபாய் 150க்கு உயர்ந்து இன்னும் வேலையில் இருந்து கொண்டிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் அவருடைய பெற்றோரும் முன்னோரும் செய்த பெரும் புண்ணிய மாகத்தான் இருக்க வேண்டும்.

இது பஞ்சாமிக்கே நன்றாகத் தெரி யும். ஒவ்வொரு சமயம் அவரும் நினைத்துப் பார்ப்பார், 'கொஞ்சம் கூடச் சம்பளம் தாருங்கள்' என்று கேட்டுப் பார்ப்போமா என்று. அப் போதெல்லாம் அவருடைய முதலாளி, 'ரொம்ப நன்றாக இருக்கிறது! நீ செய்கிற வேலைக்கு இப்போது கொடுக் கிற பணமே அதிகம். இன்னும் வேறு கேட்கிறாயா? இத்துடன் நீ வேலைக்கு வரவேண்டாம்' என்று எங்கே சீட் டைக் கிழித்து வீட்டுக்கு அனுப்பிவிடு வாரோ என்ற பயம் அவரைப் பிடித்துக் கொள்ளும். அத்துடன் அவர் மனத்தில் எழுந்த எண்ணம் இருந்த இடம் தெரியாமல் பதுங்கிப் போய்விடும்.

காலை மணி 10-15. அலுவல கத்துக்குள் நுழைந்தார் பஞ்சாமி, பதுங்கிப் பதுங்கித்தான். இன்று முதலாளியை எப்படியாவது சம்பள உயர்வு கேட்டுவிட வேண்டும் என்று நினைத்துக்கொண்டார்.

''குட் மார்னிங், மிஸ்டர் பஞ்சாமி'' என்றான் வேலு. அவன் அந்தக் கம்பெனியில் புதிய அக்கௌண் டெண்ட். ஏழெட்டு மாதம் முன்பு, முப்பது வருஷங்களாகக் கம்பெனிக்கு உழைத்து ரிடையர் ஆவதற்கு இரண்டு மாதம் முன்பு பரமபதம் அடைந்த வஜ்ரவேலு முதலியாரின் இடத்தில் புதிதாகச் சேர்ந்தவன். வேலுவுக்கு இருபத்துநாலு அல்லது இருபத்தைந்து வயதுதான் இருக்கும். எப்போதும் 'டிப்டாப்'பாக உடை அணிந்துகொண்டு மிடுக்காக இருப் பான். அவனுக்கு எடுத்த எடுப்பி லேயே மாதச் சம்பளம் நானூறு. பஞ்சாமி இதை நினைத்துப் பொருமினார். இது பெரிய அநீதி என்று அவருக்குத் தோன்றியது. வேலு என்ன வேலைதான் செய்கிறான்? வெளியில் வெயிலில் செல்கிறானா? கண்டவர்களிடமெல்லாம் கடன் காரன் என்று பேச்சுக் கேட்கிறானா? கல்லிலிருந்து நார் உரிப்பதுபோல் கம் பெனிக்கு வரவேண்டிய பணத்தைக் கஷ்டப்பட்டுக் கறந்து வாங்குகிறானா? அவன் பாட்டுக்கு ஆனந்தமாக ஆபீஸ் செலவில் மின்சார விசிறியின் கீழ் உட்கார்ந்திருக்கிறான். 11 மணிக்கு டீ குடிக்கிறான். கணக்காக ஒரு மணிக்குச் சாப்பாட்டுக்குப் போகிறான். முதலாளியை 'ஸார் ஸார்' என்று அடிக்கொரு தரம் சொல்லிக் காக்காய் பிடிக்கிறான். தன்னைக் காட்டிலும் அநுபவம் வாய்ந்த, வயதான, விசுவாசம் உள்ள பழைய கம்பெனி ஆட்களையெல்லாம் கேலி செய்கிறான், விரட்டுகிறான். அப்படிப்பட்டவனுக்கு முதலாளி மாதம் நானூறு ரூபாய் போட்டுத் தருகிறார். 'ஹூம்! வாழ்க்கையே ஒரு மோசடி' என்று நினைத்தார் பஞ் சாமி.

அலுவலகத்துக்குள் நுழையும் பஞ் சாமியிடம் வழக்கம்போல் கிண்ட லாகப் பேசினான் வேலு. ''என்ன ஸார், கலெக்டர் ஸார். ஐயா சௌக் கியமாக இருக்கீங்களா?'' வேலுவைச்

சுற்றியிருந்த இளவட்டங்கள் கொல்லென்று சிரித்தனர். பஞ்சாமிக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. ஆனாலும் வேலுவுடன் சண்டை போட அவர் தயாராக இல்லை. வேலு இங்கிதம் தெரியாத சின்னப் பையன்தான்; வேலையைச் செய்யாமலே பொழுதைப் போக்குகிறவன்தான். ஆனாலும் முதலாளி அவன்மேல் பற்றுதல் வைத்திருக்கிறார். ஆகையால் அவனோடு சண்டை போட்டால் அவன் எங்கே உடனே போய் முதலாளியிடம் ஒன்றுக்குப் பத்தாக இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி வத்தி வைத்துவிடுவானோ என்ற அச்சம் பஞ்சாமிக்கு உண்டு. எனவே, ''ஹி ஹி ஹி! சௌக்கியந்தான், வேலு ஸார்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனார்.

பில் கலெக்டர்களுக்கென்று அலுவலகத்தில் தனித்தனியாக மேஜை நாற்காலி இல்லை. அலுவலகத்தின் ஹாலின் தென்புறத்தில் ஒரு நீண்ட மேஜையும் அதிலேயே சேர்ந்தாற்போல் ரசீதுப் புத்தகங்களையும் கணக்குப் புத்தகங்களையும் வைத்துக் கொள்வதற்குப் பூட்டுப் போட்ட 'ஷெல்பு'களும் போட்டிருந்தார்கள். அங்கே போய் உட்கார்ந்து தம்முடைய புத்தகங்களைப் பஞ்சாமி எடுத்துக்கொண்டார்.

இன்று சனிக்கிழமை. அவர் கிளம்பி மயிலாப்பூர், மந்தைவெளி, அடையாறு பகுதிகளில் வசூல் வேலை பார்த்துவிட்டு மாலையில் திரும்பி வரும்போது நாலரை அல்லது ஐந்து மணி ஆகிவிடும். அப்போது முதலாளியைப் பார்த்துக்கொள்ளலாமா என்று ஒரு கணம் யோசித்தார். ஆனால் முதலாளி மாலையில் அவ்வளவு நேரம் வரையில் இருப்பாரா என்பது சந்தேகம். அதுவும் இன்று சனிக்கிழமையா? முதலாளி ரேஸுக்குப் போகும் நாள். போய்விட்டு மாலையில் வந்தாலும் அப்போது அவருடைய 'மூட்' எப்படி இருக்குமோ? ''இன்றைக்கு எவ்வளவு வசூல், ஐயா?'' என்று கேட்டாலும் கேட்பார். வசூல் தொகை கணிசமாக இல்லை என்றால், அத்துடன் சம்பள உயர்வு கேட்கும் வாய்ப்பும் இல்லை. இப்போதே கேட்டுவிடுவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்தார் பஞ்சாமி. தம்முடைய கசங்கிய கோட்டைக் கையால் அழுத்தி விட்டுக்கொண்டு, அநேகமாக வழுக்கையாகி விட்டிருந்த தலையில் இருக்கும் சில மயிர்களைத் தடவிச் சரி செய்துகொண்டு ஒரு முறை நிமிர்ந்து நின்று, தம் குரலைக் கனைத்துச் சரிசெய்து கொண்டார். பிறகு எப்படியோ தைரியத்தை வரவழைத்துக்கொண்டு முதலாளியின் அறைக்குச் சென்றார். முதலாளியின் அறைக்கு வெளியே பியூன் கேசவன் வழக்கம் போல் முக்காலியில் உட்கார்ந்து சினிமாப் பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான். ''ஐயாவைப் பார்க்க வேண்டும்'' என்று பஞ்சாமி அவனிடம் சொன்னார். அவன் அவரைத் தடுத்து நிறுத்திவிடுவான் என்றுதான் நினைத்தார் அவர். ஆனால் கேசவனுக்கு அப்போது சோம்பலோ அல்லது அவன் பார்த்துக் கொண்டிருந்த நடிகையின் வண்ணப்படத்தின் வசீகரந்தான் காரணமோ தெரியவில்லை; ''சும்மாப் போங்க, ஸார்'' என்று சொல்லிப் பத்திரிகையில் ஆழ்ந்து விட்டான்.

பஞ்சாமிக்கு உடலெல்லாம் வேர்த்துக் கைகால்கள் சில்லிட்டுப் போய்விட்டன. 'ஸ்பிரிங்' கதவைத் திறந்துகொண்டு அறையினுள் நுழைந்தபோது, அங்கே இருந்த 'ஏர்கண்டிஷன்' குளிர் காற்றில் அவருக்குப் பேச்சே எழவில்லை. முதலாளி ஏதோ ஒரு புத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். பஞ்சாமி நுழைந்ததை அவர் கவனிக்கவில்லை. பிறகுதான் பஞ்சாமிக்கு முதலாளி பார்த்துக் கொண்டிருந்தது ரேஸ் புத்தகம் என்று தெரிந்தது. இப்போது முதலாளியைத் தொந்தரவு செய்யலாமா வேண்டாமா, பேசாமல் திரும்பிப் போய்விடலாமா என்று அவர் யோசித்துக்கொண்டிருந்த போதே முதலாளி தலையை உயர்த்தி அவரைப் பார்த்துவிட்டார். ''எஸ், மிஸ்டர் பஞ்சாமி?'' என்று ஆங்கிலத்தில் கேட்டார். எத்தனையோ ஆண்டுகளாக இல்லாத தைரியத்தைச் சேர்த்து, கிழிந்த சேலையைப் போர்த்துக் கொள்ளும் வனிதையைப் போல நாணிப் போர்த்துக்கொண்டு, பஞ்சாமி பொலபொலவென்று வார்த்தைகள் எப்படியோ கிளம்பி வர, தம்முடைய வறுமையையும் தம் பிள்ளைக்குப் பாடப் புத்தகங்கூட வாங்க இயலாத நிலையையும் முதலாளியிடம் சொல்லி முடித்தார். அவருடைய கண்கள் கலங்கி நீர் குளமாக வந்துவிட்டது. ''நீங்கள் சொல்வதைக் கேட்க வருத்தமாக இருக்கிறது. மிகவும் கஷ்டமான காலமாக இருக்கிறதே! இம்!'' என்று ஒரு பிடியும் கொடுக்காமல் சொன்னார் முதலாளி.

பஞ்சாமிக்குத் தம் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதா இல்லையா என்பதே தெரியவில்லை. முதலாளியோ ரேஸ் புத்தகத்தில் மறுபடியும் ஆழ்ந்துவிட்டார்.

மறுபடியும் தொண்டையைக் கனைத்துக்கொண்டு பஞ்சாமி, ''ப்ளீஸ் ஸார். ஐ வான்ட் ஆன் இன்கிரிமென்ட். பத்து ரூபாயாவது கொடுங்க ஸார்'' என்று கெஞ்சினார்.

முதலாளி புத்தகத்திலிருந்து கண்ணை எடுக்காமலே, ''எஸ், மாலையில் வந்து பாருங்கள்'' என்று சொன்னார். தம்மை முதலாளி போகச் சொல்கிறார் என்பதை உணர்ந்து, ''ப்ளீஸ் ஸார், ஐ ஆம் இன் ராக்ஸ். ஐ ஆம் ஸோ புவர். யூ ஆர் ரிச். யூ மஸ்ட் ஹெல்ப் மீ. ப்ளீஸ் ஸார். நான் உங்களைத்தான் நம்பியிருக்கேன்'' என்று சொல்லிவிட்டுத் தம் இடத்துக்குத் திரும்பி வந்தார் பஞ்சாமி. ஏதோ பூகம்பம் நடந்து முடிந்து அதிலிருந்து தப்பியவர் போல் அவர் உடம்பில் இன்னும் அதிர்ச்சி குடிகொண்டிருந்தது. ஐந்து நிமிஷம் இருக்கையில் உட்கார்ந்திருந்து விட்டுத் தம்முடைய கணக்குப் புத்தகங்களையும் ரசீதுப் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு அவர் வசூல் வேலைக்குக் கிளம்பிப் போனார்.

பஞ்சாமிக்கு வசூலில் அன்று அதிர்ஷ்டம் இல்லை. ஏழு வீடுகள்; வர வேண்டிய தொகை ரூ. 490. ஆனால் மூன்று வீடுகளில்தான் அவருக்குப் போன காரியம் பலித்தது. வரவோ ரூ. 120தான். மாலை 4-30 மணிக்குச் சோர்வுடன் அலுவலகத்துக்குத் திரும்பினார் அவர். வேலு வழக்கம்போல் கேலி செய்தான்; ''எத்தனை ஆயிரம் ரூபாய் ஸார், இன்றைக்குக் கலெக்ஷன்?'' என்று கேட்டான். அவன் அப்படிப் பேசினதற்கு ஆத்திரமாக வந்தது பஞ்சாமிக்கு. ஆனால் அதை அடக்கிக் கொண்டு அன்றைய வசூலையும் கணக்கையும் ஒப்படைத்தார்.

முதலாளியின் அறை வாசலில் கேசவன் வழக்கம்போல் பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தான். உள்ளே ஏ. ஸி. அறையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது கண்ணாடி வழியாகத் தெரிந்தது. அப்போது முதலாளி இருக்கிறார்! ''அக்கௌண்டென்ட் ஸார்! முதலாளியை இப்போது பார்க்கலாமா?'' என்று வினவினார் பஞ்சாமி. ''பாருங்கோ, பாருங்கோ! முதலாளி மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறார்; இல்லையா?'' என்று சொல்லிவிட்டுப் பக்கத்தில் இருந்த டைபிஸ்ட் சுபத்திராவைப் பார்த்துச் சிரித்தான் வேலு. அவர்கள் தம்மைக் கேலி செய்கிறார்களா என்று பஞ்சாமிக்குப் புரியவில்லை. குழம்பினார். என்றாலும், 'என்னை மாலையில் பாருங்கள்' என்று முதலாளி சொன்னது அவர் மனத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. முகத்தைத் துடைத்துக்கொண்டு, வேர்வையில் நனைந்து கசங்கிப் போயிருந்த கோட்டை நிமிர்த்தி விட்டுக்கொண்டு முதலாளியின் அறைக்குச் சென்றார். ''ஐயா 'பிஸி'யா இருக்காங்க. யாரோ வந்திருக்காங்க'' என்று கேசவன் அவரைத் தடுத்தான். 'சே! என்ன அபசகுனம்!' என்று நினைத்தார் பஞ்சாமி. உள்ளே முதலாளி அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டிருந்தது கேட்டது. வேலு சொன்னது சரிதான். முதலாளி நல்ல மூடில்தான் இருக்கிறார். 'மூட்' போவதற்குள் அவரைப் பார்த்துவிட வேண்டும்!

ஐந்து நிமிஷங்களில் முதலாளியின் அறையிலிருந்து அழகாகவும் ஆடம்பரமாகவும் உடை உடுத்திருந்த இளம்பெண் ஒருத்தி கிளம்பி வெளியே சென்றாள். முதலாளி கதவு வரையில் வந்து அவளுக்கு விடை கொடுத்தார்.

இதுதான் சமயம் என்று, மூடுகிற கதவைத் திறந்துகொண்டு பஞ்சாமி உள்ளே சென்றார்.

''எஸ் மிஸ்டர் பஞ்சாமி, வாங்கோ. இன்றைக்கு எனக்கு மிக அதிருஷ்ட நாள், மகிழ்ச்சியான நாள். ஆமாம், காலையில் நீங்கள் என்ன கேட்டீர்கள்?'' என்று கேட்டார் முதலாளி.

''இன்கிரிமென்ட் சார். எனக்கு இன்கிரிமென்ட் வேண்டுமென்று கேட்டேன் ஸார்'' என்றார் பஞ்சாமி, மெல்லிய குரலில்.

உங்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

—ராஜம்

எங்கள் உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

பல கலர் லேபில்கள், போஸ்டர்கள் மற்றும் எல்லா விதமான
பிரிண்டிங்களுக்கும் சிறந்த ஸ்தாபனம்

அழகிய காலண்டர்கள் 14"+22" & 16"+22" சைஸ்களில் கிடைக்கும்

உங்கள் வியாபார விருத்திக்கு விளம்பரம் செய்ய எங்கள் காரனேசன்
காலண்டர்களையே தேர்ந்தெடுங்கள்.

தொலைபேசி எண்: 54 & 254 தந்தி: "காரனேசன்"

தி காரனேசன் லித்தோ ஒர்க்ஸ்

தபால் பெட்டி எண்-2, சிவகாசி.

கிளை அலுவலகங்கள்:

56-B, சுவாமி ரெட்டி தெரு,
எழும்பூர், சென்னை-8.
போன்: 20690

"யூசப் மேன்ஷன்"
204-A, கேத்வாடி பேக் ரோடு,
பம்பாய்-4.
போன்: 357737

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!

அத்தகைய செல்வத்தைப் பெற்று ஆனந்தமடையுங்கள்!

மனந்தளர வேண்டாம்

மூல வியாதி குணமடையப் பழனி, மலையப்பசாமி வைத்தியசாலையின்

கருணைக்கிழங்கு லேகியம் & நாக பற்பம்

சாப்பிடுங்கள்

மூலமுளை தானுகக் குறையும். ஆபரேஷன் அவசியமில்லை. மூலச்சூடு, குத்தல், உள்மூலம், வெளிமூலம், இரத்த மூலம், சீழ்மூலம், வாய்வு, வயிற்றுவலி, அரிப்பு, தடிப்பு, ஆசனத் துவாரத்தைச் சுற்றிலும் சிறு கொப்புள முண்டாகுதல், மலபந்தம் முதலிய எல்லாவிதமான மூல வியாதிகளையும் குணப்படுத்துகிறது. கைகண்ட மருந்து.

24 நாள் பற்பம் கருணைக்கிழங்கு லேகியத்துடன் விலை ரூ. 15—00.

நெல்லிக்காய் லேகியம்

(உடல் வளர்ச்சிக்கு)

இளைத்த உடம்பு தேரும். இருதயம், எலும்பு, மூளை, தசை, கண் முதலியவைகளுக்கு நல்ல வலுவை உண்டாக்கி, பசி, சீரணசக்தி, தேக ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது. உடல் எடை கூடுகிறது.

புட்டி 1-க்கு விலை ரூ. 6—00

பவள பற்பம்

(உஷ்ண வியாதிக்கு)

உஷ்ணத்தினுல் உண்டாகும் இரத்தச் சூடு, இருமல், கணைச்சூடு, காங்கை தணியும். இருதயம், குடல்கள், எலும்பு வலுப்படும். பசி, சீரணசக்தி உண்டாகும். உடல் எடை கூடும். நெல்லிக்காய் லேகியத்துடன் சேர்த்துச் சாப்பிடலாம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 6—00

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.

Telegram: "THARANI" Phone: 30060

With the best compliments from

Dwaraka Chit Fund Private Limited

(Incorporated under The Indian Companies Act, 1956)

Premier Auction and Drawing Chit Promoters

(Regd. Office: MADURAI)

H.O.: 242-B, Ramnad Road, (Ist Floor), Madurai-9

PLAN TODAY FOR YOUR
PROGRESSIVE TOMORROW
BY INVESTING YOUR MONEY
IN OUR CHIT FUND.

By order
Board of Directors,
Dwaraka Chit Fund Private Limited,
Madurai-9

முதலாளி தம் கையால் மேஜையை ஓங்கித் தட்டினார். "ஓ! இன்கிரிமெண்டா? அதற்காக என்ன வார்த்தை சொன்னீர்கள்?"

பஞ்சாமி திகைத்தார். என்ன வார்த்தைகளை உபயோகித்தார் என்று அவருக்கு நினைவில்லை. 'ஏதாவது தப்பாகச் சொல்லிவிட்டோமோ? இன்கிரிமென்ட் வருமா வராதா?'

"உங்களுக்கு நினைவில்லையா? நான் சொல்கிறேன் மிஸ்டர் பஞ்சாமி. நீங்கள் என்ன சொன்னீர்கள் தெரியுமா? 'ப்ளீஸ் ஸார், ஐயாம் இன் ராக்ஸ். ஐயாம் ஸோ பூவர். யூ ஆர் ரிச்.' இந்த வார்த்தைகளைத்தானே சொன்னீர்கள்? இல்லையா?"

பஞ்சாமிக்கு முதலாளியின் கேள்வி விபரீதமாகப் பட்டது: ஆமாம், இந்த வார்த்தைகளைத்தான் அவர் சொன்னதாக ஞாபகம். அதில் என்ன தப்பு என்று அவர் யோசித்தார்.

முதலாளி அவர் கையைப் பிடித்துக் குலுக்கு குலுக்கு என்று குலுக்கினார்: பஞ்சாமியை நாற்காலியில் உட்கார வைத்தார். பிறகு தொடர்ந்தார்: "யூ நோ, மிஸ்டர் பஞ்சாமி, 'ராக்ஸ் அண்ட் ரிச்' என்று இரண்டு வார்த்தைகளை நீங்கள் சொன்னீர்கள். உடனே என் மனத்தில் ஒரு மின்னல் வெட்டியது. இன்றைய 'கிளாஸிக்' ரேஸில் எந்தக் குதிரை மேல் பணம் கட்டுவது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் இந்த வார்த்தைகளை நீங்கள் சொன்னீர்கள். உடனே என்ன செய்தேன் தெரியுமா? நீங்கள் சொன்ன வார்த்தைகளைத் தெய்வமே சொன்னதாக எடுத்துக்கொண்டேன். 'ராக்ஸ் டு ரிச்சஸ்' என்று ஒரு குதிரை இன்றைக்கு ஓடிற்று. யாருமே அதில் பணம் கட்டவில்லை. ஏன் தெரியுமா? அது யாரும் கேள்வியே படாத குதிரை. ஒரு ரூபாய்க்கு முப்பது ரூபாய் என்ற விகிதத்தில் அது 'ராங்க் அவுட்சைடர்'. ஆனால் நீங்கள் சொன்ன வார்த்தைகளை வைத்துக்கொண்டு அந்தக் குதிரையிலே நான் ஆயிரம் ரூபாய் கட்டினேன். குதிரை ஜயித்தது. அதனால் எனக்கு எவ்வளவு லாபம் தெரியுமா, மிஸ்டர் பஞ்சாமி? ரூபாய் 29,000! ஆமாம், இன்று எனக்கு உம்மால் இருபத்தொன்பதாயிரம் ரூபாய் கிடைத்தது. நீர் சொன்ன வார்த்தைகளால் கிடைத்தது. எனக்கு மிகவும் சந்தோஷம். இந்தாருங்கள் உங்களுக்கு ரூ. 100!" என்று சொல்லித் தம் தோல்பெட்டியிலிருந்து நூறு ரூபாய்க் கட்டை எடுத்து அதிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டைப் பஞ்சாமியிடம் கொடுத்தார்.

பஞ்சாமிக்குத் தம் கண்களையே நம்ப முடியவில்லை. தம் கையில் இருந்த நோட்டை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். முதலாளி அவரை விடவில்லை. "இது மட்டும் அல்ல; நீங்கள் காலையில் என்னை என்ன கேட்டீர்கள்? சம்பள உயர்வுதானே? இந்த மாதம் முதல் உங்களுக்கு இருபது ரூபாய் 'இன்கிரிமென்ட்' தருகிறேன். போதுமா, சந்தோஷந்தானே?" என்று மீண்டும் எழுந்து, பஞ்சாமியின் கையைக் குலுக்கினார். "தாங்க் யூ வெரி மச் ஸார்" என்ற வார்த்தைகளைத் தழுதழுத்த குரலில் கூறிவிட்டுப் பஞ்சாமி வெளியே வந்தார்.

பஞ்சாமியின் உடம்பிலும் கைகளிலும் கால்களிலும் புதிய தெம்பு பிறந்தது போல் இருந்தது. அவர் தம்மைத் தாமே பார்த்துக் கொண்டார். இந்தக் கிழிசல் கோட்டு, இந்த அறுந்த செருப்பு, இந்த அழுக்கு வேஷ்டி இவற்றையெல்லாம் போட்டுக் கொண்டிருக்கும் அவர் வாயிலிருந்து தெய்வம் பேசிற்று? பேசி அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்ததா? அப்படி வந்த அதிர்ஷ்டத்தை முதலாளி அவருடன் பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்!

'நான் கொண்டு வந்த அந்த அதிர்ஷ்டத்தை நானும் இன்றைக்கே அநுபவிக்க வேண்டும்' என்று நினைத்தார் பஞ்சாமி. காலில் இருந்த அறுந்த செருப்பு அவரைப் பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது. 'சே! இன்றைக்கே இந்த அறுந்த செருப்பைத் தொலைத்துவிட்டு வேறு புதிய செருப்பு ஒரு ஜதை வாங்கிக்கொள்ள வேண்டும்' என்று . நினைத்தார். அலுவலகத்தை விட்டு என்றும் இல்லாத ஜோருடன் கையை வீசிக்கொண்டு நடக்க ஆரம்பித்தார். அவரைக் கேலி செய்ய வேலுகூட இருக்கையில் இல்லை அப்போது.

பஞ்சாமிக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. அவர் கடந்த பத்து ஆண்டுகளாக ஹோட்டலுக்குப் போனதே இல்லை. இன்று அவர் முற்றும் புதிய பஞ்சாமி அல்லவா? சியாம்பிரசாத் ஹோட்டலுக்குள் நுழைந்தார்.

அங்கே ஒரே கூட்டம். அவருக்கு ஒரு மேஜையில் இடம் கிடைப்பதற்குள் கால் கடுத்துவிட்டது. பிறகு கிடைத்த இடத்தில் உட்கார்ந்தார். 'அடேயப்பா! எத்தனை பேர் இங்கே சாப்பிடுகிறார்கள்! இவர்கள் எல்லாருக்கும் தினம் தினம் அதிர்ஷ்டம் அடிக்கிறது போலிருக்கிறது!' பஞ்சாமிக்கு ஒரே வியப்பாக இருந்தது. பெருமையாகவும் இருந்தது: இன்று அவர்களோடு சேர்ந்து அவரும் சரிசமமாக ஒருவர்!

ஒரு யுகம் சென்று சர்வர் வந்து அன்றைப் பட்டியலை ஒப்பித்தார். பஞ்சாமி ஒரு ஜாங்கிரியும், ஒரு மசால் தோசையும், ஒரு பிளேட் போண்டா சாம்பாரும் கொண்டு வரச் சொன்னார். அத்தனையையும் பழக்கம் இல்லாததனால் சாப்பிட முடியாமல் சாப்பிட்டுவிட்டு, பிறகு மீண்டும் ஒரு முறை தம் அதிர்ஷ்டத்தை நினைத்துக்கொண்டு காபிக்குப் பதிலாக ஒரு கிளாஸ் பாதாம்கீர் கொண்டு வரச் சொன்னார். வெளியே வந்து 4 ரூபாய் 75 காசுக்குப் பில் கொடுப்பதற்காக ரூ. 100 நோட்டைக் கல்லாவில் கொடுத்தார் பஞ்சாமி. "சில்லறையாகக் கொடுங்கள் ஸார்" என்றார் கல்லாப் பேர்வழி. "ஸாரி! என்னிடம் சில்லறை இல்லை" என்று கம்பீரமாகப் பதில் சொன்னார் பஞ்சாமி, நூறு ரூபாய் நோட்டுக்குக் கீழ் ரகங்களில் புழங்கி அநுபவப்படாத தோரணையில்.

கல்லாப் பேர்வழி முணுமுணுத்துக்கொண்டே பாக்கிப் பணத்தை எண்ணிக் கொடுத்தார். பஞ்சாமி ஜாக்கிரதையாக அதை எண்ணி வாங்கிக்கொண்டார். 95 ரூபாய், 25 காசு. அடேயப்பா! எவ்வளவு பெரிய தொகை! குபேர சம்பத்து அவரைத் தேடி வந்திருக்கிறது இன்று. பஞ்சாமி சாதாரணமாக வெற்றிலை போட மாட்டார். ஆனால் இன்று 20 காசுக்கு ஒரு பீடாவையும் வாங்கிக்கொண்டார். அதைச் சுவைத்துக்கொண்டே மவுண்ட் ரோடின் மாலை மனோகரத்தில் மயங்கிலயித்தவராக ஆனந்த நடை பயின்றார்.

மாலையில் அலுவலகம் விட்டதும் கால் நடையாகவே எல்லிஸ் ரோடு வழியாகப் பைகிராப்ட்ஸ் ரோடு வந்து, அதன் ஜனம் நெருங்கிய வழியே நடந்து, 'முரளி கபே' தாண்டி, நீல வெள்ளை டியூப் விளக்குகளின் ஒளியை விடுத்து, வலப்புறம் ஓர் இருட்டான சந்தில் திரும்பி, தாம் ஒண்டுக் குடித்தனம் இருக்கும் திருவல்லிக்கேணி வீட்டை அடைவது அவரது நெடுநாள் வழக்கம்.

இன்று ஆண்டவன் என்றும் இல்லாத புது வியாபாரமாக அவருக்கு நூறு ரூபாயை அள்ளிக் கொடுத்திருக்கிறான். பஞ்சாமிக்கு உடல் புல்லரித்தது. வெலிங்டன் சினிமா வழியாக நடந்து ராயப்பேட்டை மணிக்கூண்டு அருகில் வந்துவிட்டார். மணிக்கூண்டுக் கடிகாரத்தின் வெளிச்சமான முகத்தில் மணி ஏழேகால் காட்டிக்கொண் டிருந்தது.

பஞ்சாமி தம் சட்டைப் பையைத் தடவிப் பார்த்துக்கொண்டார். அது அவர் வயிறுபோல் நெஞ்சுக்கும் கைக்கும் இதமாக நிறைந்திருந்தது. பைகிராப்ட்ஸ் ரோடு முனையில் ஒரு பழக் கடை. வீட்டிலே குழந்தைகளுக்குச் சாத்துக்குடிப் பழங்கள் வாங்கிக்கொண்டு போக நினைத்தார். அதைப் பார்த்ததும் பழம் என்ன விலை என்று கேட்டார். ரூபாய்க்கு நாலு என்றான் கடைக்காரன். அது அதிகமான விலையாகப் பட்டது. கையில் எதிர்பாராமல் பணம் கிடைத்ததற்காக என்ன விலையானாலும் கொடுத்து வாங்குவதா?

பஞ்சாமி பைகிராப்ட்ஸ் சாலை வழியே நடந்தார். ஆர்க்காடு நவாப் மாளிகையைக் கடந்து, ஜாம் பஜாரைத் தாண்டிப் பெரிய தெருவை அடைந்தார். அதற்கும் சற்றுத் தள்ளியிருந்த 'பாட்டா' செருப்புக்கடை அவரை, வண்ண விளக்குகளின் அலங்காரக் கோலம் காட்டி வரவேற்றது. எத்தனையோ முறை அவர் அதற்கு முன் நின்று அங்கே விலை போட்டு விற்பனைக்கு வைத்திருந்த செருப்பு ஜோடிகளைப் பார்த்து மனம் ஏங்கியது உண்டு. கையில் சம்பளம் இருந்த முதல் தேதிகளில் ஒரு ஜோடி வாங்கிவிடலாமா என்று எண்ணியதுகூட உண்டு. ஆனால் அப்போதெல்லாம், 'சே! இது வீண் ஆசை. இதற்காகப் பத்து ரூபாயும் பதினைந்து ரூபாயும் செலவழிப்பது பெரிய தவறு' என்று தம் ஆசையை அணைத்துவிட்டு, பழைய செருப்புடனேயே தெரு விளக்குகளின் வெளிச்சத்தில் வீடு செல்வார். இன்று கடைமுன் நின்று

பார்ப்பவரோ அதிர்ஷ்டம் அரவணைத்த புதிய பஞ்சாமி! தைரியமாகக் கடைக்குள் நுழைந்தார்.

கடையில் முதலில் அவரைப் பார்த்ததும் அங்கிருந்தவர்கள் காட்டிய அலட்சியம் அவர் பையில் இருந்த பணத்தைப் பார்த்து மாறியது; அவருக்கு அதற்குப் பின் கிடைத்த உபசரிப்பு அவரைக் கிளுகிளுக்க வைத்தது. கடைப் பணியாள் அவர் கால்களைத் தொட்டுப் பழைய காலணிகளைக் களைந்து விட்டுப் புதிய பல செருப்புக்களைப் போட்டுக் காட்டினான். மிகுந்த வேலைப்பாடுகளும் பெரிய உலோகப் பிடிப்புக்களும் உடைய பல செருப்புக்களை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு, பஞ்சாமி வேலைப்பாடு குறைவான, ஆனால் நேர்த்தியான, ஒரு ஜதையைத் தேர்ந்தெடுத்தார். பழுப்பும் சிவப்புமாக இருந்த அதன் நிறம் அவருக்கு மிகவும் பிடித்துப்போய் விட்டது. விலை 13 ரூபாய் 95 காசு. அது அதிகந்தான். ஆனால் பழைய செருப்புக்கே எட்டு ரூபாய் கொடுக்கும்போது இதற்குக் கொடுக்கக் கூடாதா என்ன? பணியாள் அவருடைய பழைய செருப்பைப் பெட்டியில் போட்டுக் கொடுத்தபோது அவருக்குப் புதுச் செருப்பை அதற்குள் தரையில் போட்டு வீணாக்குகிறோமே என்று இருந்தது. உடனே, 'தினமுமா செருப்பு வாங்குகிறோம்? போட்டுக்கொள்ளத்தானே வாங்கியிருக்கிறோம்?' என்று தம்மைச் சமாதானப்படுத்திக் கொண்டு பில்லைக் கொடுத்தார். வெளியே வந்த பஞ்சாமிக்குக் கால்கள் பறந்தன. புதிய செருப்புப் போட்டுக்கொண்டிருக்கும் அவருக்கு உலகமே தம்மைப் பார்த்து வியப்பதாக மிதப்புத் தோன்றியது. பஞ்சாமி தெருவில் நடந்தார் என்று சொல்வதைவிட அல்லியும் தாமரையும் அலர்ந்த தோர் தடாகத்தில் தன்னந்தனியே ஒய்யாரப் பவனி வரும் ராஜ அன்னம் போல் மிதந்து சென்றார் என்றே சொல்ல வேண்டும்.

அந்த மாலை நேரத்துக்குரிய வழக்கமான ஜன சந்தடியும் நெரிசலும் எப்பொழுதும் போல் இருந்தன.

அந்தச் சந்தடியில் புகுந்து, வருவோர் போவோர்மீது இடித்துக் கொண்டு முன்னேறும் பஞ்சாமிக்குத் தமக்கென்று ஒரு ராஜபாட்டையே தனியாக வகுத்துவிட்டாற்போல் இருந்தது இன்றைக்கு. ஆயிற்று, வீடு நெருங்கிவிட்டது. இன்று பார்க்க வேண்டுமே மங்களத்தின் முகத்தை! எவ்வளவு சந்தோஷப்படுவாள் அவள், சங்கரனின் பாடப்புத்தகத்துடன் அவர் வீட்டில் நுழையும்போது!

விக்டோரியா ஹாஸ்டலின் எதிர்ச்சாரியில் உள்ள ஒரு புத்தகக் கடையில் அவர் சங்கரனின் புத்தகத்தைப் பற்றி ஏற்கனவே விசாரித்து வைத்திருந்தார். விலை நாலு ரூபாய் எண்பது காசு. ஒரு நாள் மங்களத்தின் தொந்தரவு பொறுக்காமல் புத்தகத்தைக் கடனாக, முதல் தேதி சம்பளத்தில் பணம் தருவதாக, அந்தக் கடையில் கேட்டுக்கூடப் பார்த்துவிட்டார் பஞ்சாமி. ஆனால் அந்தக் கடைக்காரன் சிரித்துக்கொண்டே தலையை ஆட்டி, சுவரில், "இன்று ரொக்கம், நாளை கடன்" என்று போட்டிருந்த போர்டைக் காட்டி அவரை வழி அனுப்பிவிட்டான்.

இருக்கட்டும், இன்று ரொக்கமாகவே அதே கடையில் பணம் கொடுத்துப் புத்தகத்தை வாங்கிக்கொள்ளலாமென்று கடையில் நுழைந்தார் பஞ்சாமி. அதே கடைக்கார இளைஞன் இன்றும் இருந்தான்.

"ரெயின்போ போயட்ரி ரீடர், புக் 4" என்றார் பஞ்சாமி.

"ஒண்ணும் தேதி ஆகல்லியே; காசு கொண்டு வந்திருக்கிங்களா?" என்றான் கடைக்காரன்.

"இருக்குப்பா, கொடு. நாலு ரூபாய் எண்பது காசுதானே?" என்று சட்டைப் பையில் கைவைத்த பஞ்சாமிக்குத் 'திடுக்'கென்றது. பையில் பணத்தைக் காணவில்லை. சட்டைப்பையினுள் கையை விட்டுப் பார்த்தார். அதில் கொஞ்சம் சில்லறை தான் இருந்தது; எண்ணி ஐம்பத்து மூன்று காசு. பாக்கிப் பணம் என்ன ஆயிற்று? பதறினார் பஞ்சாமி. முழுசாக எட்டுப் பத்து ரூபாய் நோட்டுக்கள் எங்கே போயின? கோட்டுப் பைகள் எல்லாவற்றிலும் நம்பிக்கையில்லாமல் மீண்டும் துழாவினார். செருப்புக் கடையில் பாக்கி வாங்கிக் கொண்டபோது, சட்டைப் பையில் இருந்த பாக்கி எட்டுப் பத்து ரூபாய் நோட்டுக்களை எண்ணித் திருப்பிச் சட்டையிலேயேதான் வைத்தார் அவர். நன்றாக ஞாபகம் இருந்தது. இப்போது எந்தப் பையிலும் இல்லை அந்தப் பணம்.

"என்ன சாமி, பணம் கொண்டு வரல்லியா?" என்று கேட்டான் கடைக்கார இளைஞன், சிரிப்புடன்.

பஞ்சாமிக்கு அழுகையே வந்துவிடும்போலிருந்தது.

"கொண்டு வந்தேனப்பா! இந்தப் பையில்தான் வைத்திருந்தேன் எண்பது ரூபாய்; எட்டு 10-ரூபாய் நோட்டுக்கள்; கொஞ்சம் பழசான அழுக்கு நோட்டு; இப்போது காணோம்" என்றார், சுரத்து முழுவதும் இறங்கின குரலில். தொண்டையை அடைத்துக்கொண்டது அவருக்கு.

"கூட்டத்தில் நுழைஞ்சு வந்திங்களா சாமி? எந்தப் பயலாச்சும் பிக்பாக்கெட் அடிச்சிருப்பான்! ஜாக்கிரதையா வரவாண்டாம் சாமி, ஒங்க வயசுலே?" என்றான் புத்தகக் கடைக்காரன், அநுதாபத்துடன். நல்ல வேளை, அவன் அவர் பணம் கொண்டு வந்ததை நம்புகிறான்.

பஞ்சாமி தொய்ந்து ஒடிந்து திரும்பினார். "நான் அப்புறம் வருகிறேன்" என்றார். கடையை விட்டு வெளியே வந்தார்.

பைகிராப்ட்ஸ் ரோடில் சந்தடி குறையத் தொடங்கியிருந்தது. தளர்ச்சியுடன் நடந்தார் பஞ்சாமி. அவருக்கு வயிற்றை என்னவோ செய்தது. நெஞ்சை அடைத்துக்கொண்டது. தலையைக் கனத்தது. கண்கள்கூட இருளுவது போல் இருந்தன.

தம்மைச் சமாளித்துக்கொண்டார் பஞ்சாமி. மீண்டும் ஒரு முறை பைகளைப் பார்த்தார். பணம் இல்லை; நிச்சயமாக இல்லை. எந்தப் படுபாவித் திருட்டுப் பயலோ அவர் கூட்டத்தில் வந்தபோது அதைத் தட்டிக் கொண்டு போயிருக்கிறான். அவன் நன்றாக இருப்பானா?

கால் போன போக்கில் நடந்தார் பஞ்சாமி. சிங்கராச்சாரி தெருவில் ஒரு பஜனை மடத்தின் வாசலுக்கு வந்ததும் நின்றார். உள்ளே பஜனை நடந்துகொண்டிருந்தது. அந்த ஈசன் நாமகோஷமும், ஜால்ராவின் சப்தமும், மிருதங்க நாதமும் தம்மை விசேஷமாக அழைப்பது போல் இருந்தன பஞ்சாமிக்கு. வெளியே செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு உள்ளே போய் உட்கார்ந்தார்.

எவ்வளவு நேரம் பஜனை கேட்டாரோ தெரியவில்லை. எங்கேயோ மணி பத்து அடிப்பது கேட்டுத் தம் நினைவுக்கு வந்தார். மங்களம் வீட்டில் காத்துக்கொண்டிருப்பாள்; குழந்தைகள் தூங்கிப் போயிருப்பார்கள். மங்களம் புத்தகத்தைப் பற்றிக் கேட்டால் என்ன சொல்லுவது?

பஞ்சாமி எழுந்திருந்தார். அவர் மடியில் இருந்த செருப்புப் பெட்டி கீழே விழுந்தது. குனிந்து அதை எடுத்துக் கொண்டார். வெளியே அவருடைய புதுச் செருப்புக்கள் அப்படியே இருந்தன. ஏதோ அந்நியன் பொருளைப் பார்ப்பது போல் அவற்றைப் பார்த்தார் பஞ்சாமி. அன்றைய நூறு ரூபாயில் மிஞ்சியவை செருப்பும், அவர் பையில் கொஞ்சம் சில்லறையும், வயிற்றில் சங்கடமாக இருக்கும் டிபனுமே. சங்கரனுக்குப் புத்தகம் இல்லை, குழந்தைகளுக்குப் பழம் இல்லை, மங்களத்துக்குப் பூ இல்லை; சந்தோஷம் இல்லை. அவருக்கு மட்டும் புதுச் செருப்பா? 'சே, இது பெரிய துரோகம்!' என்று பட்டது அவருக்கு.

அவர் விடுவிடென்று தெருவில் நடந்தார். பஜனை மடத்திலிருந்து நூறு அடி சென்று, கையில் இருந்த செருப்புப் பெட்டியைத் திறந்தார். தம்முடைய பழைய தேய்ந்த ரப்பர் டயர் தைத்த செருப்புக்களை எடுத்துக் காலில் போட்டுக்கொண்டார். பெட்டியைத் தூக்கித் தூர எறிந்தார். அது தெருவோரம் படுத்திருந்த ஒரு நாயின் மேல் விழ, அது அழுதுகொண்டே எழுந்து ஓடியது. பஞ்சாமி வெளிர்நீல டியூப் லைட்டுக்களின் வெளிச்சத்தை விட்டுத் தம் ஒண்டுக் குடித்தன வீடு இருந்த இருட்டிய சந்தில் நுழைந்தார்.

பஜனை மடத்து வாசலில் பளீரென்ற விளக்கொளியில் பஞ்சாமியின் உடைமையாக ஒரு மணி நேரங்கூட இருக்கக் கிடைக்காத புதிய செருப்புக்கள் மெருகுடன் கேட்பாரற்றுக் கிடந்தன. ஒரு நாள் பகற்பொழுதில் பழைய பஞ்சாமியாக இருந்து, புதிய பஞ்சாமி ஆகி, மீண்டும் பழைய பஞ்சாமியாகவே மாறிவிட்டவரான, அவற்றின் ஒரு மணி நேர உடைமைக்காரரை, அவர் வீட்டு வாசலில் அவருடைய வாழ்நாள் உடைமைக்காரி மங்களம், "ஏன் இன்னிக்கு இவ்வளவு நேரம்? எங்கே போயிருந்தேள்? என்ன ஆச்சு?" என்று கேட்டுக்கொண்டிருந்தாள். ★

காணவில்லை!

ஏ.எஸ்.ராகவன்

எதிரே உட்கார்ந்திருந்த அந்தப் பெண்-அவள் எவ்வளவு நேரமாக அங்கே உட்கார்ந்திருந்தாளோ!- தன்னையே உற்றுப் பார்ப்பதையும், அந்தப் பார்வை மற்றப் பெண்களின் பார்வைக்கு முற்றும் மாறுபட்டதாக, இனம் தெரியாத குதுகுதுப்பும் குறும்புத்தனமும் நிறைந்து வழிவதையும் கண்ட கோபி, பட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

இங்கேயும் ஒருத்தியா?

போதுமப்பா போதும்!

எதிரே நீல மலைகள், சிறியனவும் பெரியனவுமாக, வரிசைகட்டி நின்றன. அவற்றின்மீது சாம்பர் மேகச் சிதறல்கள் தெரிந்தன. ரெயில்பாதைக்குச் சரியாகக் கீழ்ப்புறம் ஒரு தார் ரோடு. 'ரெயிலுக்கு நான் ஒன்றும் இளைத்ததில்லை' என்கிறாற் போல் அதிலே ஒரு லாரி. சில இடங்களில் தார் ரோடும், லாரியும் காணுமலே போய்விடும். மறுபடியும் சில நாறு கஜங்கள் தாண்டியதும் லாரியின் முதுகு மரக் கிளைகளினூடே தட்டுப்படும். இந்தக் கண்ணுமூச்சி விளையாட்டு அநேகமாக, மலையும் காடும் நிறைந்த, இந்தப் பகுதி போகிறவரையில் தொடரும் என்று தோன்றியது.

கோபி அந்த லாரியையே பார்த்துக் கொண்டிருந்தான். பார்க்கும்படி அதில் ஏதும் இல்லை. அனல் பின்புறம் பார்க்காமல் இருக்க வேண்டுமானுல், அந்தக் குதுகுதுப்பிலும் குறும்புத்தனத்திலும் இடராமல் இருக்க வேண்டுமானுல், விலாப் புடைக்கத் தேங்காய் மூட்டைகளை எற்றிக் கொண்டு முக்கி முனகி முன்னேறும் அந்த லாரியின் மீது கவனத்தைச் செலுத்துவதே வழி.

ஆனுல், பாழாய்ப் போக! என்ன இது? அதோ லாரியின் முதுகிலும் ஒருத்தி! சிவப்புப் புடைவை, பச்சைச் சோளி, முத்துப் பற்கள், கருங்கூந்தல், குதுகுதுப்பு, அதே குறும்பத்தனம்!

பின்னல் எதிர்ப் பலகையில் வளையல் ஒலித்தது.

அந்த ஒலி லாரியின் முதுகில் கேட்டது.

பிரமை! எல்லாம் பிரமை! பார்வையை வெளியே திருப்பினுலும் மனசு வக்கரித்துக் கொண்டு, லாரியில் அவளை ஏற்றி அழகு பார்த்தது.

அவன் கண்களை மூடிக்கொண்டான். சிவப்புப் புடைவைதானே தரித்திருந்தாள்? சிவப்பு அபாயத்தைக் குறிப்பதாகும். பச்சைச் சோளியா? 'இக்கரைக்கு அக்கரை பச்சையடா, முட்டாள்!' என்று சொல்லாமற் சொல்வதல்லவா அது? முத்துப் பற்கள் தாமே? 'வெளுத்ததெல்லாம் பால் அல்ல உஷார்!' கருங் கூந்தலுக்கு என்ன சொல்வாய், கோபி? ஓ! அதுவும் மயக்குமே! அந்தக் கூந்தலின் பின்னணியில், மூளைப் பகுதி இருக்கிறதல்லவா, அது கறுத்த, இருண்ட பகுதியப்பா!

உபமான உபமேயங்களில் ஆத்ம விசாரத்தை உலர்த்தியபோது கோபிக்குத் தனது பேதைமைமீதே பெருமை உண்டாயிற்று.

அநுபவங்கள் கற்றுத் தந்த பாடம் அது. பெண்களைக் கண்டாலே காத தூரம் ஓடிவிட வேண்டும் என்ற வைராக்கியம் உலராத மனநிலையில் தான் இந்தப் பயணத்தையே அவன் மேற்கொண்டான். அதெல்லாம் பெரிய கதை.

''மணி என்னங்க?''

கேள்வி பின்புறத்துச் சிவப்புப் புடைவை, பச்சைச் சோளி, முத்துப் பல்லிலிருந்து வெளிப்பட்டது.

அவன் பதில் சொல்லவில்லை. காதில் விழாத மாதிரி இருந்தான். ஏனெனில் அவனிடம் அவள் மணி கேட்பதே அவனை வம்புக்கு இழுப்பதற்காகவே தவிர, உண்மையில் மணி தெரிய வேண்டுமானுல் வலது மணிக்கட்டில் இருக்கிற தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துக்கொள்ளலாமே!

''உங்களைத்தான் கேட்கிறேன். மணி என்ன ஆகிறது?''

கேள்வி அழுந்திற்று, உரக்க.

''கையில் கடிகாரத்தைக் கட்டிக்கிட்டு என்னிடம் மணி கேட்டால் எப்படி?'' என்றுன் கோபி, திரும்பாமலே.

அவள் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பை அவன் இனம் பிரித்துப் பார்த்தான். 'ஏதடா, ஒரே ஒரு பார்வைதானே பார்த்தான் இவன்? அந்த ஒரு பார்வையிலேயே கைக்கடிகாரத்தைக் கூட விடாமல் கவனித்திருக்கிறுனே!' என்ற வியப்பு அதிலே தெரிந்தது. அதன் அடியிலே அசடு தட்டிற்று. இந்த இரண்டுக்கும் இடையிலே, 'யார் இவன்?' என்ற ஆவலும் தலைநீட்டியது.

''கையிலே கடிகாரம் இருந்துட்டா, பிறரிடம் மணி கேட்கக் கூடாதா?'' என்றுள் அவள்.

இது வீண் அடாவடிதானே? ''என் கையிலே கடிகாரம் இருக்கிறபோது, நான் பிறரிடம் கேட்க மாட்டேன்'' என்றுன் கோபி.

''உங்கள் கடிகாரம் வேகமாகவோ தாமசமாகவோ ஓடாதா? எல்லா ஊரிலேயும், எல்லா நேரமும் ஒரே மாதிரி இருக்கிறதா?'' அவள் கேட்டாள்.

புத்திசாலித்தனமான வாதந்தான். இப்போது இங்கே நடுப்பகல் என்றுல், அமெரிக்காவிலே நடு ராத்திரி இல்லையா?

அவளே தொடர்ந்தாள்: ''கடிகாரத்துக்குச் சாவி கொடுக்க மறந்துவிட்டேன். நின்று போயிருக்கு. ஒருவேளை, உங்க கடிகாரம் இப்படி நின்று போயிருந்தாலுங்கூட, நீங்க கேக்க மாட்டீங்களோ, என்னவோ?''

கோபி சுடச் சுடப் பதில் சொன்னுன்: ''என் கடிகாரம் சாவி வாங்குகிற ரகம் அல்ல; இது ஆடோமாடிக்.''

''அப்படியா? மனசுகூடத்தான் ஆடோமாடிக். சமயத்திலே ஓடாமல் மக்கர் செய்யுதே, அப்போ என்ன செய்வீங்க?''

கோபியை யாரோ முதுகைப் பிடித்துத் தள்ளி விட்டாற் போலிருந்தது. காலடியில் தரை பெயர்ந்தாற்போலிருந்தது. அடியம்மா! ஒரு கேள்வி என்றுலும் எப்படிக் கேட்டுவிட்டாள்?

அவன் திரும்பினுன். அவளைப் பார்த்தான். இப்போது அவள் அவனைப் பார்க்கவில்லை; முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

''கடவுள் பாடு படறதுக்குத்தான் நமக்குக் கைகால்களைக் கொடுத்

திருக்கிறார். எல்லாத்தையும் புரிஞ்சுக்கணும்னுதான் மூளையைக் கொடுத்திருக்கிறார். பாடு படாமல் இருக்கிற கைகால்களையும், புரியாத மூளையையும் கழட்டி எறிஞ்சுட முடியுமா நம்மாலே? சாவி கொடுக்க மறந்தது என் குற்றம். அதுக்காகக் கடிகாரத்தை நான் கழட்டி எறிஞ்சுட முடியுமா? எல்லாருக்கும் உங்க மாதிரி ஆடோமாடிக் கிடைக்குதா என்ன?'' அவள் கேட்டாள்.

இ வ ள் இலேசுப்பட்டவளல்ல. அம்மு, ஸரஸு, அபிராமி மாதிரி வெறும் 'கெக்கெ, பிக்கே'ரகம் அல்ல. இது சுயம்; ஆடோமாடிக். ஓடாத கடிகாரத்தை எல்லாம் ஓட வைக்கிற சாவிக்கொத்தையே கையில் வைத்திருக்கிறவள் இவள்!

''மணி இரண்டு அடித்து நாலு நிமிஷம் ஆகிறது'' என்றான் அவன்.

''அது எவ்வளவானால் என்ன? செங்கோட்டைக்கு எப்போது வண்டி போய்ச் சேரும்?'' என்று கேட்டாள் அவள்.

''நீ செங்கோட்டை போகிறாயா?''

அவள் திரும்பினாள். அவனை உற்றுப் பார்த்தாள். குதுகுதுப்பும் குறும்புத்தனமும் போன மூலை தெரியவில்லை. வேறு ஏதோ ஒன்று அல்லது வேறு எவையோ சில, அந்தப் பார்வையில் ஆரோகணித்தன. ''எந்தக் கேள்விக்கும் நே ர டி யா க ப் பதில் சொல்ல மாட்டீர்களோ நீங்கள்?'' என்றாள் அவள்.

அவன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''செங்கோட்டைக்கு வண்டி எப்போது போய்ச் சேரும் என்று நீ கேட்டாய். அந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லாமல், நீ போகிற ஊர் அதுதானா என்று விசாரித்தது தப்பு என்கிறாய்.''

''ஆமாம்.''

''இதோ பார், இந்த ரெயில் போகிற வேகத்தையும், இது பல இடங்களில் படுபழியாய் நின்று சத்தியாக்கிரகம் செய்வதையும் பார்த்தால் இது செங்கோட்டை போய்ச் சேருமா என்றே சந்தேகமாக இருக்கிறபோது, நான் எப்படிப் பதில் சொல்வதாம்?''

அவளுடைய கண்கள் மின்னின. உதடு சுழித்தது. ''அட! உங்களுக்குத் தமாஷ்கூட வருமா?'' என்றாள், கேலியாக.

''சாவி கொடுத்தால் வரும்.''

''நான் சாவி கொடுத்தேனா?''

''ஊஹூம். நீங்க தூக்கி எறிந்த சாவிக் கொத்தை நானே எடுத்து முடுக்கி விட்டுக்கொண் டிருக்கிறேன்.''

அவன் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

வண்டி நின்றது. அவள் எழுந்து 'டாய்லெட்' அறைக்குள் போய்விட்டாள்.

பிளாட்பாரத்தில் தேநீர் விற்பனை, பழ விற்பனை, ஓலைக் கூடைகள் விற்பனை மும்முரமாக இருந்தன. கோபி தேநீர் வாங்கிப் பருகினான். அவளுக்கும் ஒரு கோப்பை வாங்கலாமென்றால், அவள் திரும்பி வரவில்லையே இன்னமும்!

அவளுடைய கைப்பை, குடை இரண்டும் மேற் பலகையில் இருந்தன. பையில் ஒரு செய்தித் தாள் தலைநீட்டிற்று. மலையாள மொழியில் அச்சான தாள் அது. இவளுக்கு மலையாளம் தெரியுமா? அல்லது பிறப்பிலேயே மலையாளியா?

கோபி அந்தத் தாளை உருவினான் பையிலிருந்து. சும்மா ஒரு பார்வை பார்க்கலாமே! புரட்டிக்கொண்டே வந்தவன் நடுப் பக்கம் வந்ததும் நிமிர்ந்து உட்கார்ந்தான். அங்கே ஒரு மூலையில் அவளுடைய படம் வெளியாகி யிருந்தது. அதன்கீழ் என்ன எழுதியிருந்ததோ, அவனுக்குத் தெரியாது.

வண்டி புறப்பட்டது. அவன் அவசரமாக அந்தத் தாளை யதாஸ்தானத்தில் வைத்தான்.

யார் இவள்? செய்தித் தாளில் இவளுடைய புகைப்படம் எதற்காக வெளியாகியிருந்தது?

''என்ன அப்படிப் பார்க்கிறீங்க?'' அவள் கேட்டாள்.

''ஒன்றும் இல்லை. வெறுமேதான் பார்த்தேன். வண்டி ரொம்ப நேரம் நின்றதே, ஏதாவது சாப்பிட்டிருக்கலாம். ஒரு டீ அல்லது இரண்டு நேந்திரன்பழம்.''

''இரண்டுமே எ ன க் கு ப் பிடிக்காது.''

''அப்படியா? நீ பிறந்தது இந்தப் பகுதி இல்லையா?''

''ஊஹூம். நான் திருநெல்வேலிச் சீமை. என் அத்தை இ ங் கே திருவனந்தபுரத்திலே இருக்கிறார்கள். வரப்போக இருப்பதாலே மலையாளம் தெரியும். பேசுவேன், எழுதுவேன்; அவ்வளவுதான். உங்களுக்கு எந்தப் பகுதி?''

''நான் திருச்செங்கோட்டுக்காரன்.'

''அர்த்தநாரி ஸ்தலமா?''

''ஆமாம்.''

''பின்னே ஏன் முகம் திரும்புது வெளியே, பெண்களைக் கண்டா?'' அவள் சிரித்தாள்.

அவனும் சிரித்தான். அம்மு, ஸரஸு, அபிராமி கதையெல்லாம் சொல்லிப் பயனில்லை. அசட்டுப் பட்டந்தான் கிடைக்கும். பணக்கார வீட்டுப் பிள்ளையாகப் பிறந்து, பிழைக்கத் தெரியாமல், எதையும் நம்பி எங்கும் ஏமாந்த பூர்வாசிரமத்தைக் கிளறாமல் விடுதலே சிறப்பு.

''உன் பேர் என்ன?'' அவன் கேட்டான்.

''கோமதி.''

''செங்கோட்டைக்கா போகிறாய்?''

''ஊஹூம். திருநெல்வேலி போகலாமென்றுதான் நினைச்சேன். இப்போ அதுகூட நிச்சயம் இல்லை.''

''ஏன்?''

''அங்கே போய் என் சின்னம்மாவிடம் பிடுங்கல் படுவதைவிடப் போகாமல் இருக்கலாமென்று தோன்றுகிறது. எங்கப்பா ஒரு தலையாட்டிப் பொம்மை. சி ன் ன ம் மா அதிகாரம் தூள் பறக்கும் வீட்டிலே. அம்மா போன பிறகு எல்லாமே தலைகீழாப் போயிட்டுது. ஓடாத கடிகாரத்தை அலங்காரத்துக்காகக் கட்டிக்கொள்கிற மாதிரி, வேண்டாத குடும்ப உறவிலே பல்லிளிக்க வேண்டியிருக்கிறது.''

அவள் பெருமூச்சு விட்டாள்.

வண்டி ஒரு குலுக்கலுடன் நின்றது. கோபி எட்டிப் பார்த்துவிட்டு, ''கை இறங்கவில்லை போலிருக்கிறது!'' என்றான்.

அவள் அவசர அவசரமாக எழுந்து 'டாய்லெட்' பகுதிக்குப் போனாள்.

கோபி அந்தச் செய்தித் தாளை மறுபடியும் எடுத்துப் பிரித்தான்; பார்த்தான். அவளுடைய துயரக் கதை, ரெயில் நிற்கிற இடங்களிலெல்லாம் அவள் மறைவிடம் நாடுவது இரண்டையும் சேர்த்துப் பார்த்தபோது அந்தப் புகைப்படம் வெளியாகியிருந்த காரணம் அவனுக்குப் புரிந்துவிட்டது. 'காணவில்லை' விளம்பரந் தான் அது! 'கோமதி, நீ எங்கிருந்தாலும் திரும்பி வா. நீ இல்லாமல் நாங்கள் விடுகிற கண்ணீர் கொஞ்ச நஞ்சம் அல்ல.' மலையாளத்திலே இருந்தாலும், வாசகம் இதுவாகத்தான் இருக்கும்.

பைக்குள் தாளைத் திணித்துவிட்டுக் கோபி பெருமூச்சு விட்டான். மனத்துக்குள் ஓர் ஆசை இப்போது எழுந்தது. அவனுக்காகவும் இப்படி ஒரு விளம்பரம் எந்த நாளிதழிலாவது வெளிவரக் கூடாதா? ஒப்புக்கோ உண்மைக்கோ ஒரு சிற்றன்னை, ஒரு தந்தை புலம்புவது ரசமாக இருக்கும். ஆனால் அவனுக்கு யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை.

வண்டி ஒரு குலுக்கலுடன் புறப்பட்டபோதுதான் கோமதி வெளியே வந்தாள். அவனுக்குச் சந்தேகம் ஏற்படக் கூடாது என்பதற்காகவோ என்னவோ, உதடு வழிய முறுவலைப் படர விட்டவாறே, ''இந்தப் பிரயாணம் எனக்கு ஒத்துக்கொள்ளவே இல்லை, போங்கள்'' என்றாள்.

அவன் ஏதும் சொல்லவில்லை. 'இதோ பார், உன் ரகசியமெல்லாம் எனக்குத் தெரியும்' என்று பட்டென்று சொல்லிவிடலாம். சொன்னால் என்ன எண்ணுவாளோ! சொல்வது நாகரிகமாகாது. அவளாகவே சொல்லட்டுமே!

வெளியே சிறு தூறல் விழத் துவங்கியது. ஒரே மப்பும் மந்தாரமுமாய் எட்டியவரை புகை படர்ந்தமாதிரி.

''ஜன்னலைச் சாத்தி விடலாமா?'' அவள் கேட்டாள்.

''ஓ!''

''மழை வலுக்குமா?''

''அப்படித்தான் தோன்றுகிறது.''

ஜன்னல்களைச் சாத்தியபிறகு பெட்டியில் இருள் சூழ்ந்து கொண்டது. கோபி மௌனமாக வெளியே கண்ணாடி ஜன்னலின் வழியாகப் பார்வையை ஓட விட்டுக் கொண்டு, உள்ளூற என்ன என்னவோ யோசித்தவாறு இருந்தான். இன்ன யோசனைகள் தாமென்று இல்லை. அம்மு, ஸரஸூ, அபிராமிகளாக இருந்தால் இந்தச் சூழ்நிலையில் கோபியின் புத்தி காணாமற் போயிருக்கும். ஆனால் எதிரே இருப்பவள் கோமதி ஆயிற்றே!

''என்னங்க, ஏன் திடீர்னு பேச்சை நிறுத்திட்டீங்க?'' என்றாள் கோமதி.

அவன் சிரித்தான். ''பேசினால் தானா? மௌனமாகக்கூடச் சம்பாஷிக்கிறதுண்டு, இல்லையா? கோமதி, உன் கதையைக் கேட்டதிலிருந்து எனக்கு மனசே சரியில்லை. ரொம்ப நாளா ஓடாமல் துருப்பிடிச்சுப் போயிருந்த என் மனசு இப்பத்தான் ஓட ஆரம்பிச்சிருக்கு. ஆனா ரொம்ப வேகமா ஓடுது. தறிகெட்டுடக் கூடாதென்று பயப்படற அளவுக்கு ஓடுது. வாஸ்தவமாச் சொல்றேனே, இது வரையிலே நான் ரொம்ப ஏமாற்றங்களைச் சந்திச்சுட்டேன். மறுபடியும் ஏமாந்தாத் தாங்காது. அந்தப் பயத்திலே பேச்சுத் தடைப்படுது, கோமதி'' என்றான்.

''இதோ பாருங்க, உங்க 'கேஸ்' என்னன்னு, ஆரம்பத்திலேயே எனக்குத் தெரிந்து போயிடுச்சு'' என்றாள் கோமதி.

''என்ன சொல்லேன் பார்க்கலாம்!''

''நீங்க உங்க மனசை, உங்க அறிவைக் காணாமற் போக்கிட்டீங்க. அதைத் தேடிக்கிட்டு இருக்கிறீங்க!''

''கோமதி!'' அவன் கூவியே விட்டான்.

''முகத்தைத் திருப்பிக்கிட்டு வெளியே பார்த்தீங்களே, அப்பவே அதை நான் கண்டுபிடிச்சுட்டேன்.''

''வாஸ்தவம், கோமதி. நீ சரியாச் சொல்லிட்டே. இது காணாமற் போன கேஸ்தான்.'' சொல்லிவிட்டு அவளை அவன் உற்றுப் பார்த்தான்.

அவளுடைய விழிகள் வியப்பால் மின்னுமென்றும், அந்தக் 'காணவில்லை' விளம்பரம் பற்றிச் சூசகமாக அவன் பேசியது அவளைச் சற்றே உலைக்குமென்றும் அவன் எதிர்பார்த்தான். ஊஹூம், அவள் அசையவில்லை. தன் போக்கில் பேசலானாள்: ''இந்தப் பயணத்தை நான் தொடர்ந்தபோது ஒரு வைராக்கியத்தோடுதான் தொடர்ந்தேன். அதாவது என்னை நானே காணாமற் போக்கிக்கொள்ள வேண்டும் என்று.... என்னைச் சிலர் தேடுகிறார்கள்; தேடிக்கொண்டு இருக்கிறார்கள். இதே வண்டியில் கூட எனக்குத் தெரிந்தவர்கள் பயணம் செய்கிறார்கள். ஆனால் யார் கண்ணிலும் நான் இதுவரையில் படவில்லை.''

கோபி குறுக்கிட்டான்: ''என் கண்ணில் பட்டுவிட்டாய், கோமதி! இனி நீ காணாமற் போய்விட முடியாது!'' என்றான், உணர்ச்சிவயப்பட்டு, குரல் தழுதழுக்க.

அவள் சிரித்தாள். ''இல்லை, நான் காணாமற் போய்விடவே விரும்புகிறேன்'' என்றாள்.

''கோமதி!''

''பயப்படாதீர்கள். இந்தக் கோமதிக்கு இனி அவளுக்கென்று ஏதும் இல்லை. எல்லாவற்றையுமே அவள் இழந்துவிட்டு, வலிய அவற்றை வழங்கிவிட்டு, மற்றொரு பிறவி எடுக்கப்போகிறாள்.''

ஓரக் கண்ணால் அவள் பார்த்த அந்தப் பார்வையில் குதுகுதுப்பும் குறும்புத்தனமும் இனம் காட்டின.

கோபி சட்டென்று அவளருகில் போய் அமர்ந்துகொண்டான். அவளுடைய கைகளைப் பற்றிக் கொண்டு, ''வாஸ்தவமாகவே நீ எனக்கு எல்லாவற்றையும் வழங்கப் போகிறாயா, கோமதி? நான் பாக்கியசாலி. இதோ பார், நான் இழந்தவற்றை எல்லாம் நீதான் மீட்டுத் தர வேண்டும். தருவாயா, கோமதி?'' என்றான்.

வண்டி நின்றது.

அது எந்த இடமென்றுகூட அவர்கள் அறியார்கள். ஆயினும் இருவரும் ரெயிலை விட்டு இறங்கினார்கள்.

மழை கொட்டிற்று.

அது லட்சியம் இல்லை அவர்களுக்கு. கைகோத்துக்கொண்டு அந்த இரு 'காணவில்லை'களும் வேறு எதைக் காணவோ அந்த மலைச் சாரலில், சிரித்துக்கொண்டு ஆனந்தமாகப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தன! ★

லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிடெட்
கோயமுத்தூர்-18.
VSKLMC484



முருகனுக்கு அரோகரா

முருகன் எழுந்தருளியுள்ள ஆறு படைவீடுகளில் ஒன்று குன்றுதோருடல். எல்லா மலைகளையும் சேர்ந்த தொகுதி அது. திருத்தணிகை, விராலிமலை, குன்றக்குடி, காந்தமலை முதலிய மலைகள் யாவும் குன்றுதோருடலில் சேர்ந்தவையே. இவற்றில் சிறந்தது திருத்தணிகை. தொண்டை நாட்டில் உள்ளது திருத்தணிகை 365 படிகள் இங்கே இருக்கின்றன. இங்கே பலவகை விழாக்கள் நடைபெறுகின்றன. கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகன். திருத்தணிகையில்தான் முருகன் வள்ளிநாயகியைத் திருமணம் செய்துகொண்டான். அதனுல் இந்தத் தலத்திற்குத் தனிச் சிறப்பு உண்டாயிற்று. சூரனேடு போரிட்டு வெற்றி பெற்றுப் பிறகு கோபம் தணிந்து முருகன் வந்து இருந்த இடம் இது. வள்ளியெம்பெருமாட்டியை வள்ளிமலையிலிருந்து எடுத்து வரும்போது வேடுவரோடு போர் செய்தான்; பிறகு அந்தக் கோபம் தணிந்து வந்து அமர்ந்த இடம் இது. ஆதலால் தணிகை என்ற திருநாமம் இதற்கு அமைந்தது. திருத்தணிகை மிகவும் புகழ்பெற்ற தலம். பக்தர்கள் எப்போதும் ஜேஜே என்று கூட்டம் கூட்டமாக வந்து வழிபடுவார்கள்; பிரார்த்தனை செய்துகொள்வார்கள். தங்கள் வேண்டுகோள் நிறைவேறினுல் நேர்ந்துகொண்டபடி பிரார்த்தனையை நிறைவேற்றுவார்கள். இதோ திருத்தணிகை மலையின் காட்சி. பக்தர்கள் படியில் ஏறிக்கொண்டிருக்கிருர்கள். 'திருத்தணிகை முருகனுக்கு அரோகரா' என்ற முழக்கம் கேட்கிறது.

மேல் படம் உபயம்: ஹிந்து





யில் இடையே உள்ள மண்டபம் இது.
சிறுவன் புஷ்பக்காவடி எடுத்துச்
ல்கிறான். உடம்பெல்லாம் அலகு
ந்திக்கொண்டு ஒரு பக்தர் செல்கிறார்.
வடிக்குப் பூசை போடுகிறார்கள்.



முடியிறக்கிய குழந்தையுடன்
தாயார் இதோ நிற்கிறாள்.
ஆண்டவன் திருக்கோவிலைக் காலால்
வலம் வருவது எங்கும் காணும்
வழக்கம். ஆனால்,
அங்கப் பிரதட்சிணம் செய்யும் சில
பக்தர்களை இங்கே பார்க்கிறீர்கள்!







பெண்மணி ஆவேசம் வந்து கூத்தாடி அயர்ந்து விழுந்திருக்கிறாள். காவடி எடுக்கும் அவன் முகத்தில் எத்தனை ஒளி! மற்றொருவனோ ஆவேசம் வந்து ஆடுகிறான். மூன்று பேர் பிடித்தும் அவனுடைய பக்தியாவேசம் அடங்கவில்லை. சிறுவர் பெரியவர் எல்லாருமே தணிகாசலப்பதியின் திருவருளை வேண்டிப் புஷ்பக்காவடி எடுக்கிறார்கள். அவர்களுக்கு எத்தனை பக்தி!



தணிகையாண்டவனைத் தரிசிக்க முன்னாலே
உள்ள படிக்கட்டோடு பின்பக்கமும் ஒரு வழி
இருக்கிறது. அதையே இங்கே பார்க்கிறீர்கள்.
மலையின் மேல் ஏறி அதற்கு மேலும்
சில படிகள் ஏறித் திருக்கோயிலுக்குள்
நுழைய வேண்டும். கோயிலுக்குள்
போவோரையும் திரும்பி வருவோரையும்
வரிசை வரிசையாக இங்கே பார்க்கிறோம்.
ஆங்கில வருஷ ஆரம்பம்-ஜனவரி மாதம்
முதல் தேதி படித் திருவிழா! முதல்முதலாகத்
திருத்தணிகையில்தான் படித் திருவிழாவை
ஆரம்பித்தார்கள். இப்போது வெவ்வேறு
நாட்களில் வெவ்வேறு இடங்களில் அந்தத்
திருவிழா நடைபெறுகிறது. பஜனை
பண்ணிக்கொண்டு மலைமேல் ஏறும்போது
ஒவ்வொரு படியிலும் கர்ப்பூரம் ஏற்றுகிறார்கள்.
எத்தனையோ பஜனை கோஷ்டிகள் பல
ஊர்களிலிருந்தும் வருகின்றன. இதோ
ஒரு பஜனை கோஷ்டி போகிறது.
அவர்களோடு நாமும் சேர்ந்து போகலாம்;
பாட முடியாவிட்டாலும், ''திருத்தணிகை
ஆண்டவனுக்கு அரோகரா!''
என்று சொல்லலாம் அல்லவா!

போட்டோக்கள்: ஹரலிங்கம்



ராங் டெலிவரி ரைட் மாப்பிள்ளை

கோமதி ஸ்வாமிநாதன்

"இப்படி மசமசவென்று உட்கார்ந்திருந்தால் என்ன காரியம் நடக்கும்? நாலு இடங்களுக்குப் போய் அலைந்து திரிந்து ஜாதகங்கள் கொண்டு வரும் வழியைப் பாருங்கள். நம் வீட்டிலேயும் கல்யாணத்துக்கு ஒரு பெண் குதிராக நிற்கிறது என்ற எண்ணம் உங்களுக்குக் கொஞ்சங்கூட இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வாசனைப் புகையிலையைச் சதா சர்வகாலமும் வாயிலே போட்டுக் குதப்பிக்கொண்டு என்ன கேட்டாலும், 'உம்! உம்!' என்று வாய் திறக்காமல் இருப்பதுதான் உங்கள் வாழ்க்கை லட்சியம் என்றால் அப்புறம் நான் அந்தக் காலிப் புகையிலை டப்பாக்களைத்தான் பேரன் பேத்தி என்று எடுத்துக் கொஞ்ச வேண்டி வரும்!" என்று தொண்ணூறு சதவீதக் குடும்பங்களில் மனைவிமார்கள் எழுப்பும் ஏக்கமும் ஆத்திரமும் கலந்த குரல் பசுபதியின் வீட்டில் ஒலிக்கவில்லை. இத்தனைக்கும் அவருடைய பெண் மாலதி கழுத்தில் மஞ்சள் கயிறு விழும் நாளை நோக்கிக் காத்திருந்தாள். சிறிய விஷயத்துக்கும் பெரிய நாகப்பாம்பாகச் சீறும் அவர் மனைவி நாகலட்சுமி மற்ற விஷயங்களில் நாக்கு என்ற சவுக்கால் அவ்வப்போது அவரைச் சுண்டி இழுத்தாலும் இந்த விஷயத்தில் சும்மாவே இருந்தாள்.

இதற்கு நிறையக் காரணம் இருந்தது. பசுபதி வெளித் தூண்டுதல் இல்லாமலே, விளம்பரம் ஏதும் இல்லாமலே மாப்பிள்ளை வேட்டையில் பல மாதங்களாக ஈடுபட்டிருந்தார்.

மாலதி கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவள். படிப்பு முடிந்தவுடனே மத்திய சர்க்கார் அலுவலகத்தில் உத்தியோகமும் கிடைத்துவிட்டது. சென்னை நகரை விட்டு மாறுதல் ஆகாத இலாக்கா. அவளும் பார்வைக்கு நன்றாகவே இருப்பாள். வீட்டு வேலைகளையும் பொறுப்பாகக் கற்றுக்கொண்டிருந்தாள். 'இது வரை விவகாரத்தை ஒத்திப் போட்டது போதும். இனிமேல் சும்மா இருக்கக் கூடாது' என்ற நினைப்பில் அவர் மெதுவாகத் தம் முயற்சியில் இறங்கினார்.

"சிவராமன், நேற்று உம்முடன் பஸ்ஸில் சிவப்பாக உயரமாக ஒரு பையன் வந்தானே; அந்தப் பையன் யாரு?" மாலை நேரத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும்போது பக்கத்துத் தெரு நண்பர் சிவராமனிடம் பேச்சுக் கொடுத்தார் பசுபதி.

"ஓ! அவனா? ராஜகோபாலன்! எங்கள் ஆபீஸிலேதான் வேலை செய்கிறான். நாலு மாதங்களுக்கு முன்னால்தான் வந்தான். அதற்கு முன்னாலே ஏதோ கம்பெனியிலே இருந்தானாம். என்ன விஷயம்?" சிவராமன் சுவாரசியமில்லாமல் பதில் சொன்னார்.

"பையன் எங்கே குடித்தனம் நடத்துகிறான்?"

"குடித்தனமா? அவன் பிரம்மசாரிக்கட்டை ஐயா! எங்கேயோ லாட்ஜிலே தங்கியிருக்கிறான்."

"அதற்குத்தான் நேரடியாகக் கேட்காமல் சுற்றி வளைத்துக் கேட்டேன். பையன் ஜாதகத்தை வாங்கிக் கொடும். அவனைப் பற்றி நன்றாக விசாரித்துத் தகவல் கொடும். ஆண்டவன் அருள் இருந்தால் இந்த இடம் அமையட்டும்" என்றார் பசுபதி அழுத்தமாக.

சிவராமன் கண்களை இடுக்கிக்கொண்டு சில விநாடிகள் யோசித்தார். பசுபதியின் கையைப் பிடித்துத் தம் குரலைத் தணித்துக்கொண்டு, "பசுபதி, வேறே நல்ல இடமாகத் தேடும்! அந்தப் பயல் ஒரே சீட்டாட்டப் பைத்தியம். பொழுதுபோக்குக் கிளப்புகளிலே போய் விடிய விடிய ரம்மி ஆட்டம் ஆடுகிறானாம். ஆபீஸுக்கு வந்தால் ஃபைல்களைக்கூடச் சீட்டுப் போல விரித்துக் கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிடுகிறான். சங்கர் என்ற ஆபீஸ் பையனே அவனை 'ஜோக்கர்' என்றுதான் கூப்பிடுகிறான்! நானூறு ரூபாய் சம்பளத்தையும் சீட்டாட்டத்திலே தொலைத்துவிட்டுக் கடனாக வாங்கித் தள்ளும் பயலை நம்பி நீர் உம் பெண்ணைக் கொடுக்கத் தயாராக இருந்தால் நான் ஜாதகம் வாங்கித் தரத் தயார்! வேண்டுமா சொல்லும்" என்றவுடன், பசுபதியின் உடம்பு படபடத்தது.

"இவ்வளவுதானா? விட்டுத் தள்ளும்! குறைந்த பட்சம் அறுநூறு ரூபாய் சம்பளத்தில் யோக்கியமாக நல்ல குடும்பத்தில் வந்தவனாக யாராவது பையன் தென்பட்டால் சொல்லும்" என்று சொல்லிவிட்டு, அப்போதுதான் வந்து நின்ற பஸ்ஸை நோக்கிப் பாய்ந்து ஓடினார். அப்புறம் எப்போதாவது சிவராமனைத் தூரத்தில் பார்த்தால்கூட ராஜா, ராணி, ஜாக்கி, ஆஸ், பத்தாம் பந்து எல்லாமாகச் சேர்ந்து கூட்டாக நடந்து வருவதுபோல ஒரு பிரமை ஏற்படும்.

பாவம் பசுபதி! பட்டினவாசியாக இருந்தாலும் அவருக்குச் சீட்டாட்டக் கிளப்பு, கிண்டி ரேஸ்கோர்ஸ் முதலிய விஷயங்களில் பரிசயமில்லை. எல்லாரும் தம்மைப் போல இருக்க வேண்டுமென்று அப்பாவித்தனமாக ஓர் இலக்கணம் வகுத்துக்கொண்டுவிட்டார்.

இரண்டு மாதங்கள் கழித்து நண்பர் ராமலிங்கத்தைச் சந்தித்தார். ராமலிங்கம் தொழில் உலகில் ஒரு பெரிய புள்ளி. பசுபதிக்குப் பல நாள் சிநேகிதம். அவரிடமும் முன்பே பசுபதி தம் வரன் வேட்

டையைப்பற்றிச் சொல்லியிருந்தார்.

''இந்தாப்பா பசுபதி, நான் ஒரு மாதமா ஊரிலே இல்லை. ஒரு வாரப் புரோக்ராமிலே ஜப்பானுக்குப் போனேன். அப்படியே கிழக்கு ஜர்மனிக்குப் போக வேண்டியதாகப் போச்சு. முந்தாநாள்தான் வந்தேன். நீ சொன்ன விஷயம் என் மனத்தைக் குடைந்துகொண்டே இருந்தது. ஆழ்வார்பேட்டை மணி என்று கேள்விப்பட்டிருக்கிறாயோ? பெரிய இஞ்சினீயரிங் கண்ட்ராக்டர். அவனைப் போன வாரம் ஜெனீவா ஏரோடிரோமில் பார்த்தவுடனே எனக்கு உன் ஞாபகம் வந்தது. அவனிடமும் சொல்லிவிட்டேன். அவன் பிள்ளை பாலுவும் அப்பாவுடன் பிஸினஸ் லைன்லேதான் இருக்கிறான். ரொம்பப் பெரிய இடம். 'ராமலிங்கம்! நீ சொன்னா சரிதான்'னு சொல்லிவிட்டான் மணி. நீ தடபுடலாகக் கல்யாணத்தை மாத்திரம் செய்துவிடு. மற்றது ஒன்றும் அவசியம் இல்லை. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நானே வந்து உன்னை மணியிட்ம் அழைத்துப் போகிறேன். நாளைச் சாயங்காலமே ஆறு மணிக்கு மேலே சம்பிரதாயமாகப் பெண் பார்க்க அவர்களையும் வரவழைக்கிறேன். அப்புறம் ஒரு முக்கிய விஷயம்......'' ராமலிங்கம் மூச்சுவிடப் பேச்சை நிறுத்தினார். அவர் பிரயாணம் செய்கிற மாதிரி அவருக்குத் தொடர்ந்து பேசும் பழக்கம்.

பசுபதி காதுகளைத் தீட்டிக் கொண்டார். ராமலிங்கம் தொடர்ந்தார்: ''மாலதி வேலையை விட்டுவிடவேண்டும். குறிப்பாக அவள் உத்தியோகம் பார்த்தாள் என்ற தகவலே அவர்களுக்கு எட்டக் கூடாது. மணி ஒரு மாதிரி. பெண்கள் உத்தியோகம் பார்ப்பதை அவனால் சகிக்க முடியாது. மூன்று கார், இரண்டு பங்களா ஸ்டாண்டர்டுதான் அவனுக்குத் தெரியும்.''

பசுபதி யோசித்தார். ''இதோ பார் ராமலிங்கம்! மாலதி உத்தியோகத்தை விட்டுவிடலாம். அது சிரமமான விஷயமல்ல. ஆனால் அவள் உத்தியோகமே பார்க்கவில்லை என்று சொல்வது இருக்கிறதே, அது மிகவும் சிரமமான விஷயம். இந்த ஆழ்வார்பேட்டை சம்பந்தம் அமைந்து நாளைக்கே கல்யாணம் நிச்சயமானால், கல்யாணத்துக்கு மாலதியின் பழைய ஆபீஸ் சிநேகிதிகளையெல்லாம் அழைக்க வேண்டியிருக்கும். அல்லது, அவள் கணவனுடன் பீச்சுக்குப் போயிருக்கும் வேளையில் எவளாவது தோழி ஒருத்தி, 'என்னடி மாலு, நீ வேலையை விட்டபிறகு தளதளன்னு உப்பிப் போயிட்டேடி!' என்று அசட்டுத்தனமாகப் பேசி வைக்கலாம். அப்போது என் மாப்பிள்ளையின் கண்ணுக்கு நான் பொய்யனாகி விடுவேன். அதனாலே அதற்கு நான் ஒப்புக்கொள்ள முடியாது. கல்யாணம் நிச்சயமாகும் வரையில் உத்தியோகம் பார்த்தாள் என்று உண்மையைச் சொல்லிவிடு.'' பசுபதி முகத்தில் அரும்பிய வேர்வையைத் துடைத்துக்கொண்டார்.

''ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நடத்து என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள், பசுபதி.''

''அரைப் பொய்கூடச் சொல்ல நான் தயாரல்ல, ராமலிங்கம்!''

ராமலிங்கம் அடுத்த வாரமே ஹாங்காங் போய், அங்கிருந்து ஆர் ஜண்டைனாவுக்குப் போய்விட்டார். அவரும் பசுபதியை மறந்துவிட்டார். பசுபதியும் ஆழ்வார்பேட்டை மணியை மறந்துவிட்டார்.

''நேற்று நீங்கள் கொண்டு வந்து போட்ட நான்கு ஜாதகங்களையும் மலையாளத்து ஜோசியரிடம் காண்பித்தேன். ஒன்றுகூடப் பொருத்தமில்லையாம். அது சரி! எதற்கு இப்படிக் கன்னா பின்னா என்று சின்னக் குழந்தைகள் எக்ஸிபிஷன்களிலே கலர் நோட்டீஸ்களைச் சேர்த்துக் கட்டி வீட்டுக்குக் கொண்டுவருகிற மாதிரி ஜாதகங்களை வாங்கிக்கொண்டு வருகிறீர்கள்? அந்த மோட்டார்க் கம்பெனிப் பையனுக்கு மாதச் சம்பளம் இருநூறு ரூபாய்தானே? மாலதி நானூறு வாங்குகிறாளே?'' என்றாள் பசுபதி சம்சாரம்.

''ஹூம்! ஏதோ என் கண்ணுக்கு அவசரத்திலே இரண்டாயிரம் என்று தென்பட்டிருக்கும்! விட்டுத்தள்ளு!''

''இந்தா, இந்தக் கவரிலே இரண்டு ஜாதகங்கள் இருக்கின்றன. எடுத்து வை'' என்று சொல்லிப் பசுபதி ஒரு கவரை நீட்டினார்.

இப்படி ஒத்து வராத ஜாதகங்களின் ஃபைல் நாளுக்கு நாள் கனத்துக் கொண்டே வந்தது. ஒரு ஜாதகம் ஏறத் தாழப் பொருந்தியிருந்தது. பையனுக்கு ரெயில்வே இலாக்காவில் தொழிற்சாலைப் பிரிவில் வேலை. ஐந்நூறு ரூபாய் சம்பளம் என்று அந்த ஜாதகத்தை வாங்கிக் கொடுத்த நண்பர் சொல்லியிருந்தார். பரவாயில்லைபோல் பசுபதிக்குத் தோன்றியது. ஜாதகம் கொடுத்த நண்பரைப் பார்த்து, ஜாதகம் பொருந்தியிருப்பதாகவும், அந்தப் பையன் ஜகதீசன் வீட்டுக்குப் போய்ப் பெரியவர்களைச் சந்திக்க நினைத்திருப்பதாகவும் பசுபதி சொல்லி வைத்தார்.

ஒரு நாள் காலை எட்டு மணி சுமாருக்குப் பசுபதியைத் தேடிக்கொண்டு ஓர் அரை வழுக்கைத் தலை இளைஞன் வந்து சேர்ந்தான். பசுபதிக்கு அந்த இளைஞனை யாரென்று தெரியவில்லை. வந்தவனே, ''நான்தான் ஜகதீசன். தொண்டையார்பேட்டையிலிருந்து வருகிறேன்'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். பசுபதிக்கு நினைவு வந்துவிட்டது. 'நல்ல வேளை! இவனுக்குப் பாதித் தலை வழுக்கை. இல்லாதுபோனால் இவன் முழுக்க முழுக்க ஹிப்பி அலங்காரத்தில் இறங்கியிருப்பான்' என்று மனத்துக்குள் நினைத்துக்கொண்டார். தலையில் எஞ்சியிருந்த கேசத்தை ஜகதீசன் அப்படிப் பின்னால் அந்தக் காலப் பாகவதர் பாணியில் தொங்க விட்டிருந்தான். ''உள்ளே வாருங்கள்'' என்று அழைத்துப் போனார் பசுபதி.

''என் தாயார் மிகுந்த கோபக்காரி'' என்று திடுதிப்பென்று ஆரம்பித்தான் ஜகதீசன். பசுபதிக்கு ஒன்றும் விளங்கவில்லை. நிதானமாக, ''அவர்களை நான் சந்தித்ததில்லை. ஆகவே தெரியாதவர்களைப் பற்றி எந்தவித அபிப்பிராயத்தையும் உருவாக்கிக்கொள்ளத் தயங்குகிறேன்'' என்றார்.

''அவள் ரொம்ப ஆசாரக்காரி'' என்று தொடர்ந்தான் ஜகதீசன்.

''இருக்கட்டுமே! இங்கே யாரும் டைனிங் டேபிளில் சாப்பிடுபவர் இல்லை. தரையில் உட்கார்ந்து சாப்பிடுபவர்கள்தாம்.'' பசுபதியின் குரலில் அவரை அறியாமலே சூடு கலந்திருந்தது.

''வேலை பார்க்கும் மருமகளை அவளுக்குப் பிடிக்காது.''

பசுபதி விழித்துக் கொண்டார்; கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டார். ''பள்ளிக்கூடமே இல்லாத கிராமத்தில் பிறந்து வளர்ந்த பெண்ணாக ஒருத்தியைப் பார்த்து மருமகளாக்கிக் கொள்ளச் சொல்லுங்களேன். வேண்டுமானால் சொல்லுங்கள். காட்டாம்பட்டி கர்ணத்தின் பெண் அபீதகுசாம்பாள் இருக்கிறாள். ஐந்து வருஷம் முயற்சி செய்தும் ஆனா ஆவன்னா வராததால் பள்ளி ஆசிரியருக்கு அழகு காட்டிவிட்டுப் பதினைந்து வருஷமாக வீட்டோடு அழகாகச் சமையல் செய்து கொண்டிருக்கிறாள். எனக்குத் தெரிந்த இடம். கறுப்பாக இருந்தாலும் மூக்கும் முழியுமாக இருப்பாள். அவள் ஒரு பார்வை பார்த்தால் உங்கள் அம்மா கோபங்கூட அடங்கிவிடலாம்.''

பசுபதி விஷமமாகப் பேசுகிறார் என்பதை ஜகதீசன் புரிந்துகொண்டான். ''நான் அதற்காக வரவில்லை ஸார்! ஏதோ என் ஜாதகம் உங்கள் கையில் கிடைத்து உங்கள் பெண் ஜாதகத்துடன் பொருந்தியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். என் தாயாரைப் பற்றி உங்களுக்கு முன்கூட்டியே சொல்லி வைப்பது நல்லது என்று வந்தேன். அவளுக்குக் கொஞ்சம் வைரத்தோடு மோகம் உண்டு. அதை உங்கள் பெண்ணுக்குப் போடுவதாக ஒப்புக்கொண்டால் வேலை பார்த்தாலும் பரவாயில்லை என்று சொல்லலாம். அதற்குத்தான்....''

பசுபதி அவனை முடிக்க விடவில்லை. ''ரொம்ப தாங்க்ஸ்! நான் என் மனத்தை மாற்றிக்கொண்டு விட்டேன். இப்போது நான் என் பெண் மாலதிக்கு வைரத் தோடு போடத் தயாரில்லை. இன்று காலை வரையில் அந்த அபிப்பிராயம் இருந்தது. - நாகலட்சுமி, ஸாருக்குக் காபி கொடு. அப்படியே அவர் ஜாதகம் அலமாரியில் இருக்கிறது; அதையும் எடுத்துக் கையில் கொடு. நீங்கள் இருந்து மெதுவாகக் காபி சாப்பிட்டுவிட்டுப் போங்கள்.''

பசுபதி பதிலுக்குக் காத்திராமல், மொட்டை மாடிக்குப் போய், யாரும் பார்க்க மாட்டார்கள் என்ற தைரியத்தில் தலையில் அடித்துக் கொண்டார். ''கிரகசாரம்! இவங்களும் ஆண்பிள்ளை என்ற பெயரில் உலாவுகிறார்களே!'' என்று பெருமூச்சுவிட்டார்.

''இதோ பாருங்கள். கொஞ்ச நாள் சும்மா இருங்கள். நல்ல இடமாக இருந்து, முதலில் நான் போய்ப் பார்த்துத் திருப்தியாக இருந்தால், அப்புறம் இந்த வீட்டு வாசற்படியை யாரும் மிதிக்கட்டும். 'அம்மா வைரத் தோட்டுக்கு ஆசைப்படுகிறாள். அக்கா ரத்தினஹாரம் கேட்கிறாள். அத்தைப் பாட்டி ஐம்பது சவரனிலே ஒட்டியாணம் போட்டுப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறாள்' என்று எந்தப் பொண்டுக செட்டியும் இங்கே வந்து நிற்க வேண்டாம்'' என்று நாகலட்சுமி ஒரு நாள் படமெடுத்தாற்போல ஆடினாள்.

''நானா அந்தத் தொண்டையார்ப்பேட்டைப் பையனுக்கு வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தேன்? அவனாக வந்தான். அவன் அண்ணன் பெண்டாட்டி ஒரு கம்பெனியிலே வேலை பார்க்கிறாள். மாமியார்க்காரி வாயைத் திறந்தால், 'உன் சின்னப் பிள்ளையுடன் மரியாதையாகத் தனியாகப் போய்விடு' என்கிறாளாம் அவள். இத்தனைக்கும் அவள் தங்கத் தோடுகூடப் போட்டுக்கொண்டு வரவில்லையாம். கவரிங் தோடுதான் அவள் வீட்டில் போட்டிருந்தார்கள். இந்த லட்சணத்திலே அம்மாவைப் பற்றி அளக்கிறான் பிள்ளை. விட்டுத் தள்ளு!'' என்று நாடகபாணியில் கையை வீசிவிட்டு வெளியே போனார்.

சில நாட்கள் இந்த வரன் வேட்டையை நிறுத்தி வைக்கலாம் என்றுதான் நினைத்தார். ஆனாலும் அவரால் அப்படி இருக்க முடியவில்லை. நண்பர் சுந்தரேசனிடம் ஒரு நாள் நினைவுபடுத்தியபோது அவர் சிரித்தார். ''நீர் சுத்தப் பத்தாம் பசலி ஆசாமி ஐயா! பேசாமல் பத்திரிகையில் 'மணமகன் தேவை' என்று உம்முடைய பெண்ணைப்பற்றிச் சில முக்கியத் தகவல்களைக் கொடுத்து விளம்பரம் கொடுத்தால் வரன்களைப் பற்றிய தகவல் வந்து குவியாதோ? அதிலிருந்து பொறுக்கி எடும். அக்கம் பக்கத்திலே விசாரியும். திருப்தியாக இருந்தால் பெண்ணைக் கொடும். என்ன பிரமாதம்? முப்பது ரூபாய் செலவாகும். உமக்கு எவ்வளவோ அலைச்சல் மிச்சமாகும். போன ஞாயிற்றுக்கிழமைப் பேப்பரைப் பாரும். கிட்டத்தட்ட நூறு 'மணமகன், மணமகள் தேவை' விளம்பரங்கள் வந்திருக்கின்றன. அந்த ரகத்தில் ஒன்றை எழுதிக் கொண்டுபோய்ப் பத்திரிகை ஆபீஸில் கொடும்'' என்றார்.

பசுபதி உதட்டைப் பிதுக்கினார். ''போமையா! சோப்பு சீப்பு விளம்பரம் மாதிரி, பெற்ற பெண்ணுக்கும் விளம்பரம் செய்தா மாப்பிள்ளை தேட வேணும்? எனக்கு அந்த முறை தெரியாமலில்லை; ஆனால் பிடிக்கவில்லை. நான் நேரடியாக முயற்சி செய்கிறேன்'' என்றார்.

ஆனால் சொல்லி வைத்தாற்போல நான்கு நாட்கள் கழித்து நாகலட்சுமி இதே கருத்தை அவர் முன் தூக்கி எறிந்தபோது அவரால் தட்ட முடியவில்லை. இருந்தாலும், ''இதெல்லாம் எதற்கு நாகா? நுங்கம்பாக்கம் வேங்கடேசன் அடுத்த வாரம் நிறையத் தகவல் கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறான்'' என்று பலவீனமாகத் தடை எழுப்பிப் பார்த்தார்.

''ஹூஹூம்! நீங்க ஒரு விளம்பரம் கொடுத்துடுங்கள்! என்னவோ எழும்பூர் அலமேலு நேற்றுக் கோவிலிலே பிரமாதமாகப் பீத்திக் கொண்டாள். அவள் பெண்ணுக்காக விளம்பரம் கொடுத்தபோது அவளுக்கு மொத்தம் முப்பத்தொரு பதில்கள் வந்தனவாம். இத்தனைக்கும் அவள் பெண் பி. யூ. சி. தான். ஆகவே நம் விளம்பரத்துக்கு முப்பத்திரண்டு பதில்களாவது வர வேண்டும். அதையும் பார்க்கப் போகிறேன்'' என்றாள் நாகலட்சுமி.

பசுபதி பெருமூச்சு விட்டார். ''முப்பது பதில்களே வந்தன என்றால்?'' என்று நீட்டினார்.

''நூற்றுமுப்பது என்பேன்! என்னவோ ஒலிம்பிக் விளையாட்டுகளிலே 'அம்பயர்' பண்ணிவிட்டு வந்த மாதிரி பேசாதீர்கள். விளம்பரத்தை எழுதிக் கொடுங்கள்'' என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் உள்ளே போய்விட்டாள்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு ஞாயிற்றுக்கிழமைப் பேப்பரில் அறுபத்தேழு விளம்பரங்களில் ஒன்றாகப் பசுபதி கொடுத்திருந்த விளம்பரமும் வந்தது.

''ஐந்தடி உயரம். நல்ல சிவப்பு. பி. எஸ்ஸி. பட்டதாரிப் பெண். இருபத்துமூன்று வயது. மத்திய சர்க்கார் இலாக்காவில் சென்னையில் நல்ல உத்தியோகம். புனர்வசு நட்சத்திரம். கௌசிக கோத்திரம். தகுதியான வரன்கள் முழு விவரங்களுட

னும் ஜாதக நகல்களுடனும் தபாற் பெட்டி 009......பத்திரிகை மேல் பார்த்து என்ற விலாசத்துக்கு எழுதவும்'' என்று விளம்பர வாசகம் வெளியாகியிருந்தது.

நான்கு நாட்கள் கழித்துப் பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து அவருக்கு ஒரு கனமான காக்கிநிற உறை வந்தது. ஆவலுடன் கவரைப் பிரித்தார். அவர் விளம்பரத்துக்கு வந்திருந்த ஏழு பதில்களையும் பத்திரிகை நிறுவனம் அனுப்பியிருந்தது.

பசுபதிக்கு ஒரே ஆனந்தம். லாட்டரிப் பரிசாக லட்ச ரூபாய் விழுந்துவிட்ட உணர்ச்சி. ஏழு கடிதங்களையும் ஒரே மூச்சில் படித்து முடித்தார். அவர் உற்சாகம் கரைந்துகொண்டே வந்தது. ''வயது, சம்பளம், நட்சத்திரம், எதுவுமே ஒத்து வருவதாகத் தெரியவில்லை'' என்று அந்தக் கடிதங்களை அலமாரியில் போட்டுவிட்டுக் காரியாலயத்துக்குக் கிளம்பினுர்.

மறுநாள் பன்னிரண்டு பதில்கள் வந்தன. மூன்ரும் நாள் பதினுன்கு பதில்கள் வந்தன.

''நாகா, நீ ஜயித்துவிட்டாய்! எழும்பூர் அலமேலு அம்மாள் தோற்றுவிட்டாள்'' என்ருர் பசுபதி, உற்சாகமாக அடுக்கலையைப் பார்த்து. நம்பர் முப்பத்தொன்றைத் தாண்டி முப்பத்து மூன்றுக்குப் போய்விட்டதே!

ஆனுல் அந்த முப்பத்து மூன்று பதில்களில் சுமார் என்று கருதப் பட்டவை நான்கு. அந்தப் பதில்கள் சம்பந்தப்பட்ட நான்கு பையன்களும் பம்பாய், ஹைதராபாத், நாக்பூர் என்று எழுதியிருந்தார்கள். பசுபதி தம் பெண்ணைச் சென்னைக்கு வெளியே அனுப்பத் தயாரில்லை.

இரண்டு வார காலத்தில் பத்திரிகைக் காரியாலயம்மூலம் மொத்தம் தொண்ணூற்றேழு பதில்கள் வந்தன. அப்புறம் தொடர்ந்து ஒன்றும் வராமற் போகவே, ஒரு நாள் சாவகாசமாகப் பசுபதி அத்தனை பதில்களையும் எடுத்துப் பிரித்து அடுக்கினுர். 'தள்ளப்பட்டது', 'பார்க்கலாம்' என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார். 'பார்க்கலாம்' பிரிவை மீண்டும் 'உள்ளூர்', 'வெளியூர்' என்று இரண்டு பகுதியாகத் துண்டித்தார். 'உள்ளூர்'ப் பிரிவில் இரண்டு பதில்கள் தேறின. அவ்வளவு திருப்திகரமாக இல்லாமற்போனுலும் பார்த்து வைக்கலாம் என்று வைத்துக்கொண்டார். மூன்று பிரிவுகளுக்கும் தனித் தனிப் பைல்களைப் போட்டார். சூட்டோடு சூடாகத் 'தள்ளப்பட்டது' ஃபைலை எடுத்துப் பார்த்துச் சில பதில்களில் சிவப்புப் பென்சிலால் கோடு போட்டார். தொடர்ந்து பேனுவைத் திறந்து மடமடவென்று எழுத ஆரம்பித்தார். ஒவ்வொன்றும் தனித்தனிக் கடிதம்.

1

சென்னை-202
16-9-72

மிஸ்டர் பார்த்தசாரதி,

நான் கொடுத்திருந்த 'மணமகன் தேவை' விளம்பரத்தை நீர் சரியாகப் படித்தீரா? பெண்ணைப் பெற்ற ஒரு தகப்பன் கொடுத்த விளம்பரமாகப் புரிந்துகொண்டீரா? இல்லை, போட்டோ ஸ்டுடியோ வைத்திருக்கும் புகைப்படக்காரராகப் புரிந்துகொண்டீரா? உம் யோக்கியதையைப் பற்றி ஒரு வரி எழுதக் காணேும். உம் ஜாதகத்தைப் பற்றி ஒரு சிறு தகவல் கூடக் காணேும். மணப்பெண்ணின் முழு உருவப் போட்டோ உடனே வேண்டும் என்று எழுதிவிட்டீரே! பேஷ்! பேஷ்! பொழுதுபோக்குக்காக இப்படி ஓசிப் போட்டோக்களைச் சேர்த்து ஆல்பம் தயாரிக்கும் ஆசாமியா நீர்? உமக்கு நிஜ வாழ்க்கையில் கல்யாணம் நடக்கும் என்று நான் நம்பவில்லை!

தபாற் பெட்டி 009

2

சென்னை-202
16-9-72

ஐயா சாரங்கபாணி!

நீர் சரியான ஆசாமி ஐயா! எஸ். எஸ். எல். ஸி.யிலே கோட் அடித்துத் திருக்காட்டுப்பள்ளியிலே அட்டண்டராக இருக்கும் உம்முடைய ஏழாவது பையன் ஜாதகத்தை அனுப்பியிருக்கிறீர். நீர் என்னுடைய விளம்பரத்தைச் சரியாகப் படித்தீரா? அல்லது படிக்கச் சொல்லியாவது கேட்டீரா? என் பெண் பி. எஸ்ஸி. என்று போட்டிருந்தேனே! நல்ல உத்தியோகம் என்றுகூடச் சேர்த்திருந்தேனே! என்ன இருந்தாலும் நீர் மகா துணிச்சல்காரரர் ஐயா! அந்தத் துணிச்சல் எனக்கு வராது. நீர் ஆசைப்படுவது ஞாயமா? இல்லை! வேலைமெனக்கெட்டு நான் என் பெண்ணைப் படிக்க வைத்ததுதான் அநியாயமா? நீர் இந்தச் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டுவிட்டீர். வாழ்க உம் துணிச்சல்! நான் பின்வாங்குகிறேன்.

தபாற்பெட்டி 009

3

சென்னை-202
16-9-72

நண்பர் வரதராஜனுக்கு,

வணக்கம். என் விளம்பரத்துக்குத் தாங்கள் அனுப்பிய பதிலைப் பார்த்தேன். மூன்று தடவை திருப்பித் திருப்பிக்கூடப் படித்துப் பார்த்தேன். 'நாங்கள் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்' என்று எழுதியிருக்கிறீர்கள். அடுத்தாற்போல, 'என் பையன் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிருன்' என்றும் எழுதியிருக்கிறீர்கள். (என்ன உத்தியோகம் என்று எழுதவில்லை.) கடைசியில் 'பொருத்தமிருந்தால் உயர்ந்த விதத்தில் திருமணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தீர்கள். தங்கள் கடிதத்தை மூன்று தடவை படித்தும், தாங்கள் ஏதோ கழுகுபோல வான வெளியில் வெகு தூரத்தில் உயரத்தில் பறப்பது போலவும், நான் ஏதோ தவளைபோலத் தரையில் தத்தித் தத்திப் போவதுபோலவும் நினைத்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டேன். இந்த நினைவைப் போக்கிக்கொள்ள நான் வேறு ஜாதகத்தைத்தான் நாட வேண்டும்.

தபாற் பெட்டி 009

4

சென்னை-202
16-9-72

மிஸ்டர் ராமசாமி,

என் விளம்பரத்துக்கான உங்கள் பதிலைப் பார்த்தேன். 'எங்கள் வீட்டுக்கு வரும் மருமகள் உத்தியோகம் பார்க்க வேண்டிய அவசியமில்லை' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அடுத்தாற்போல, 'என் வீட்டில் அறுபது வயதான என் மனைவியைத் தவிர வேறு பெண்பிள்ளைகள் இல்லை' என்றும் எழுதியிருக்கிறீர்கள். இதிலிருந்து நான் என்ன ஊகிக்கிறேன் தெரியுமா? உங்கள் வீட்டுக்கு உடனடியாக, சம்பளம் கேட்காத ஒரு சமையற்கார அம்மாள், மருமகள் என்ற மரியாதைப் பெயருடன் தேவை என்று நினைக்கிறேன். என் ஊகம் சரிதானே? என் பெண்ணுக்குச் சமையற்கலையில் நல்ல பரிசயம் உண்டு. அவளாக மனமிருந்து செய்தால் அந்தச் சமையல் அமிர்தமாக இருக்கும். வலுக்கட்டாயத்துக்குச் செய்தால் வாய்க்கு வழங்காது. வயிற்றுவலிதான் மிஞ்சும். தெரிந்துகொள்ளும். ஆகையால் இத்தகைய விளம்பரங்களுக்குப் பதில் எழுதும்போது, 'உத்தியோகம் பார்க்கவில்லை' என்று குறிப்பிட்டுள்ள இடங்களுக்கு மாத்திரம் உங்கள் விண்ணப்பக் கடிதங்களை எழுதுங்கள்.

தபாற் பெட்டி 009.

பசுபதி நான்கு கடிதங்களையும் எழுதி முடித்துத் திருப்பிப் படித்தார். இவற்றை நாகலட்சுமியிடம் படித்துக் காட்ட வேண்டும் என்று ஆசைதான். ஆனுல் அவள் இந்த நகைச்சுவை கலந்த தார்மிகக் கோபத்தை ரசிக்கும் பக்குவத்தில் இருக்கிருளா என்று அவரால் ஊகிக்க முடியவில்லை. 'இந்த நான்கு கடிதங்களுக்கும் செலவாகும் தபால் சார்ஜைக் கொண்டு ஒரு கிலோ உருளைக் கிழங்கு சமையலுக்கு வாங்கலாம்' என்று சொல்லி வைத்தால் அவர் உற்சாகமெல்லாம் உருண்டு ஓடிவிடும். ஆகவே சத்தமில்லாமல் அந்த நான்கு கடிதங்களுக்கும் தபால் தலைகளை ஒட்டித் தம் கைப்படப் பெட்டியில் போட்டுவிட்டு வந்தார்.

ஒரு வாரம் கழித்து ஒரு நாள் பசுபதியின் வீட்டு வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. நடுத்தர வயதுக்காரரர், செழிப்பான குடும்பத்தைச் சேர்ந்த தோற்றத்துடன் அதிலிருந்து இறங்கினுர்.

''மீஸ்டர் பசுபதி என்று இங்கே..'' என்று வந்தவர் விசாரித்தார்.

''எஸ்! நான்தான்! வாருங்கள்!'' என்று உள்ளே அழைத்துப் போனுர் பசுபதி.

உள்ளே வந்து அமர்ந்த பிறகு, வந்தவர், தம் சட்டைப் பையிலிருந்து ஓர் இன்லண்டு லெட்டரை எடுத்துப் பசுபதி முன் வைத்தார். ஒரு வாரத்துக்கு முன்பு, திருவள்ளூரிலுள்ள தேரடித் தெரு ராமசாமிக்கு, மருமகள் என்ற பெயரில் சமையற்

காரி தேடுவதற்காகப் பசுபதி சாடி எழுதிய கடிதம் அது.

பசுபதிக்குத் தூக்கிவாரிப் போட்டது. முகத்தில் அசடு வழிந்தது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, ''மிஸ்டர் ராமசாமி, நீங்கள் இதைத் தப்பிதமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒரு பெண்ணைப் பெற்றவரின் உணர்ச்சியை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு பெண்ணை, இன்னொருவர் வீட்டு அடுக்களைக்கே அடைக்கலம் புகச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன், பெற்றவர்கள் வளர்த்து உருவாக்குவதில்லை.''

கையை அமர்த்தி, வந்தவர் பசுபதியின் பேச்சைத் தடை செய்தார்.

''நான் ராமசாமியும் அல்ல; திருவள்ளூரிலிருந்து வந்தவனுமல்ல'' என்று ஆரம்பித்தார் வந்தவர்.

பசுபதி திடுக்கிட்டார். ''அப்படியானால் இந்தக் கடிதம்.... ஓ! அவர் உங்களுக்கு உறவுக்காரரா?'' என்றார்.

''இல்லை. அவர் யாரென்றே எனக்குத் தெரியாது. என் பெயர் ரங்கசாமி. திருவான்மியூரில் தேரடித் தெருவில் இருக்கிறேன். இந்தக் கடிதம் எப்படியோ என் விலாசத்துக்கு வந்துவிட்டது. நானும் பெயரைக் கவனிக்காமல் பிரித்துப் படித்துவிட்டேன். ஒரு விஷயம்: நான் இந்தப் பதிலை ரசித்தேன். சரியான பதில்.''

''நீங்க ஏதும் பத்திரிகைக்காரரா? என்னைத் தேடிக்கொண்டு....''

''இல்லை; ஒரு பிரம்மசாரிப் பையனின் அப்பா! என் பையன் பட்டணத்தில்தான் வேலை பார்க்கிறான். அறுநூறு ரூபாய் சம்பளம். வீட்டுக்கு அடங்கின யோக்கியமான பையன். கம்பெனி விலாசம் தருகிறேன்; விசாரித்துக் கொள்ளுங்கள். நட்சத்திரப் பொருத்தம் பார்த்தால்போதும். சிம்பிள் கல்யாணம். மற்றவை உங்கள் உசிதம் போல. நான் கொஞ்சம் வசதியானவன். அதனாலே உங்களிடம் கொள்ளையடிக்க வேணும் என்ற ஆசை இல்லை. உங்கள் விலாசத்தைப் பத்திரிகை ஆபீசிலிருந்து தெரிந்துகொண்டேன்.''

''பையன் எங்கே வேலை பார்க்கிறான்? - மாலதி, ஸாருக்குக் காபி கொண்டா! இவள்தான் என் பெண்....லே வேலை பார்க்கிறாள். ......'' பசுபதி ஒரே மூச்சில் ஆரம்பித்தார்.

''பையன் பெயர் ராஜகோபாலன். ....கம்பெனியிலே நாலு மாதத்துக்கு முன்னே சேர்ந்திருக்கிறான். அதற்கு முன்பு பங்களூரில் இருந்தான்.''

சில நாட்களுக்கு முன் சிவராமனைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தது பசுபதியின் நினைவுக்கு வந்தது. சிவராமனுடன் பார்த்த அதே பையன்தான். ஆம், அவன் பெயர் ராஜகோபாலன்தான்.

பசுபதி உஷாரானார். நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''மன்னிக்க வேண்டும். எனக்கு ஒளிவு மறைவு இல்லாமல் பேசிப் பழக்கம். உங்கள் பையனுக்குச் சீட்டாட்டத்தில், குறிப்பாகக் காசு வைத்து ஆடும் ரம்மி ஆட்டத்தில் அதிக ஈடுபாடு உண்டு என்று உங்களுக்குத் தெரியுமா?''

இப்போது திருவான்மியூர் ரங்கசாமி நிமிர்ந்து உட்கார்ந்தார். ''நீங்கள் எப்போதாவது அவனுடன் உட்கார்ந்து ஆடியிருக்கிறீர்களா?'' என்று துப்பாக்கிக் குண்டுபோல அவரிடமிருந்து கேள்வி பாய்ந்தது.

''அபசாரம்! அபசாரம்!'' என்று காதுகளில் கைவைத்து எடுத்த பசுபதி, ''நான் கேள்விப்பட்டதுதான். எனக்குச் சீட்டே பிடிக்கத் தெரியாது. சம்பளங்கூட நானூறுதான் என்று கேள்விப்பட்டேன்'' என்றார்.

''ரொம்ப ரைட் ஸார்! நான் வருகிறேன். ஒரு விஷயம்: என் பையன் ராஜகோபாலனுக்குச் சீட்டுக் கட்டில் எத்தனை சீட்டு இருக்கிறது என்றுகூடத் தெரியாது. இன்னொரு விஷயம்: அவன் சம்பளம் அறுநூற்றெழுபது ரூபாய். பிராவிடண்ட் பண்டு, மற்றப் பிடித்தங்கள் போக வள்ளிசாக என் கையில் அறுநூறு ரூபாய் கொண்டுவந்து கொடுக்கிறான். ஹோட்டல் டிபன் சாப்பிடுக்கூடப் பழக்கம் இல்லை. வீட்டிலிருந்து கொண்டுபோகிறான்.'' ரங்கசாமி எழுந்துவிட்டார்.

பசுபதியின் உள்ளத்தில் சலனம், சபலம், சங்கடம்.

''எக்ஸ்கியூஸ் மீ! உங்கள் பையனோடு வேலை செய்யும் சிவராமன் என்பவர்தாம் இந்தத் தகவலைக் கொடுத்தார். சிவராமன் எனக்குத் தெரிந்தவர்.'' பசுபதி இழுத்தார்.

ரங்கசாமி உட்கார்ந்தார். ''அயோக்கியப்பயல்! அவன் பெண்ணுக்குச் சம்பந்தம் பேச வந்தான். ராஜகோபாலன் விரும்பவில்லை. அதனாலே என் பையன்மீது இப்படிப் பழி வாங்குகிறானா? பேஷ்! பேஷ்! எத்தனை உயர்ந்த மனிதன்! உத்தம எண்ணம்! மிஸ்டர் பசுபதி, நீங்கள் எனக்காக ஒன்று செய்ய வேண்டும்: நீங்கள் இன்றைக்கே அந்தச் சிவராமனைப் போய்ப் பார்த்து விவரத்தைக் கேளுங்கள். அப்புறம் அவசியமானால் என்னை வந்து பாருங்கள்.''

ரங்கசாமி பதிலுக்குக் காத்திராமல் கிளம்பிவிட்டார்.

ராஜகோபாலன் மாலதி திருமணம் அடுத்த மாதம் ஜாம் ஜாம் என்று நடந்தது. அழைப்புக் கிடைத்தும் சிவராமன் எட்டியே பார்க்கவில்லை; திருவான்மியூர்த் தபால் ஆபீஸ் சிப்பந்திகள் அனைவருக்குமே அழைப்புகள் வந்திருந்தன.

''ஒரு தப்பிதப் பட்டுவாடா ஒரு சரியான மாப்பிள்ளையை எனக்குக் கொண்டு வந்து சேர்த்தது'' என்று பசுபதி பல தடவை சொல்லிவிட்டார்.

''அந்தத் திருவள்ளூர்க்காரருக்கும் ஓர் இன்விடேஷன் அனுப்பி வையுங்கள். அவருக்குப் பதில் எழுதப்போகத்தானே இந்த மாப்பிள்ளை கிடைத்தார்?'' என்று நாகலட்சுமி தூண்டினாள்! ★

அசலும் நகலும்



போட்டோ: ஆர். உதயபாஸ்கர்

மனிதாபிமானத்தின் மகத்தான பணி



பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் தமிழ்நாடு அரசின் திட்டங்களிலெல்லாம் போற்றற்குரியது. அடுத்த ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்தில் பிச்சைக்காரர்களே இருக்கமாட்டார்கள்.

எல்லா தொழுநோய் பிச்சைக்காரர்களும் அவர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்படுவர். ஏற்கனவே மூன்று இல்லங்கள் செயல் படுகின்றன; மேலும் ஒன்பது இல்லங்கள் துவக்கப்பட இருக்கின்றன.

தமிழக அரசு வறுமையையும், வளர்ச்சி யின்மையையும், பிணியையும் எதிர்த்து போராடுகிறது.

அரசின் ஆற்றல் ஆக்கப்பணிகளுக்கே

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

திரு *A.* முருகேச முதலியார்
ஸ்தாபகர், நியூடன் அண்டு கம்பெனி,
பிளாக் மேகர்ஸ் & நியூடன் டைப் பவுண்டரி

வாடிக்கையாளர்களுக்கு
எங்கள் உளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

●

ஆப்டோன், லைன், மூவர்ணப் பிளாக்குகளுக்குச்
சென்னையில் புகழ்பெற்ற ஸ்தாபனம்

●

குறித்த நேரத்தில் திருப்திகரமான முறையில்
பிளாக்குகள் தயாரித்துத் தரப்படுகின்றன.

●

விவரங்களுக்கு:
நியூடன் அண்டு கம்பெனி
80, வாலாஜா ரோடு, மதராஸ்-2.

டெலிபோன்: 86729

டாக்டர் மு. வரதராசன்

போட்டி, போட்டி, போட்டி; எதிலும் போட்டி; எங்கும் போட்டி; இதுவே இந்த நாகரிகத்தின் இயல்பாகிவிட்டது.

போர் செய்து மற்ற நாடுகளைக் கைப்பற்றுவதில் போட்டி; போருக்குத் தூண்டுவதில் போட்டி; போர்க் கருவிகளைப் பெருக்குவதில் போட்டி; இப்படி வல்லரசுகளுக்குள் போட்டி நடைபெறுகிறது.

வியாபாரத்தில் நடைபெறும் போட்டியோ நாட்டுக்கு நாடு, மாநிலத்துக்கு மாநிலம், தொழிற்சாலைக்குத் தொழிற்சாலை, கடைக்குக் கடை வேகமாக நடைபெறுகிறது.

குடும்பங்களில் நடைபெறும் போட்டிகள் பல. சடங்குகளைப் பெருக்குவதில் போட்டி; திருமணங்கள் நடத்துவதில், ஆயிரக் கணக்கானவர்களுக்கு விருந்துகள் அளிப்பதில், கச்சேரிகள் பல வகையாக அமைப்பதில், வரிசைகளை வழங்குவதில், சீதனம் தருவதில், பிறந்தநாள் விழா முதலான மற்ற ஆடம்பரங்களில் போட்டிகள் வளர்கின்றன.

சமயக் குழுக்களிடையே போட்டிகள், சாதிகளுக்குள் போட்டிகள், கட்சிகளுக்குள் போட்டிகள் இவற்றிற்கு அளவே இல்லை. தேர்தல் காலங்களில் இவை விசுவரூபம் எடுக்கின்றன எனலாம்.

போட்டி இல்லையேல் சுவை இல்லை என்றும், போட்டி இல்லையேல் வாழ்க்கை இல்லை என்றும் சொல்லக் கூடிய எல்லைக்கு நாகரிகம் நகர்ந்து கொண்டிருக்கிறது.

போட்டிகளால்தான் வாழ்க்கை அமைதி இழந்து வருகிறது, அல்லல் பெருகுகிறது என்பதை மக்கள் உணரவில்லை. ஆனால் காந்தியடிகள் முதலான அறவோர்கள் உணர்ந்தார்கள். காந்தியடிகள் எதிலும் போட்டியை விரும்பாதவர். எல்லோரும் கடவுளின் குடும்பத்தார் என்ற தெளிவு பெற்ற அவருடைய நெஞ்சம் போட்டிகளுக்கு இடம் தரவில்லை. இன்னும் சில காலம் வாழ்ந்திருப்பாரானால், அரசியலிலும் போட்டி இல்லாத தேர்தல் முறைக்கு வழிகாட்டியிருப்பார். பெர்னாட் ஷா முதலான மேனாட்டு அறிஞர்களும் போட்டிகளை வெறுத்திருக்கிறார்கள். ஒரு முறை ஒரு பள்ளிக்கூட விழாவில் பரிசளிப்பதற்கு அவரை அழைத்திருந்தார்கள். அழைத்தவர்களை நோக்கி, ''ஒரு விதிக்கு உடன்பட்டால் வருவேன்'' என்றார். அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். ''பரிசுகள் என் விருப்பப்படி தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குத் தருவேன்'' என்றார். விளக்கம் கேட்டார்கள். ''ஒவ்வொரு வகுப்பிலும் கடைசியாகக் குறைந்த எண் பெற்ற மாணவருக்குப் பரிசுகள் தருவதாக இருந்தால் வருவேன்'' என்றார்.

அந்த அளவிற்கு இந்தக் காலத்துப் போட்டிகள் நல்ல அறிஞர்களின் நெஞ்சை உறுத்தியிருக்கின்றன. குத்துச் சண்டைக்காரர்கள் முன்னெல்லாம் விளம்பரப்படுத்திக் கொள்ளும் போது, இத்தனை கோழி, இத்தனை முட்டை, இவ்வளவு மீன் சாப்பிடுவார் இவர் என்று துண்டு அறிக்கைகள் வெளியிடுவார்கள். இதே முறை இப்போது ஏறக்குறைய எல்லாத் துறைகளிலும் நிரம்பிவிட்டது எனலாம்.

கல்வி நிலையங்களுக்குள் எவ்வளவு போட்டிகள்! இந்த ஆண்டில் இவ்வளவு விழுக்காடு தேறினார்கள், இத்தனை பேர் முதல் வகுப்பில் தேறினார்கள் என்று போட்டி விளம்பரம் செய்கிறார்கள். விளம்பரம் செய்யாத போட்டிகளும் சில உண்டு. எங்கள் பள்ளியில்தான் கார்களில் வந்து இறங்கும் மாணவர்கள் மிகுதி என்றும், அன்றாடம் இத்தனை கார்கள் எங்கள் பள்ளிக்கு வருகின்றன என்றும் பெருமை பேசும் போட்டி நிலைகள் உண்டு.

விளையாட்டில் நிகழும் போட்டிகளுக்குக் கணக்கே இல்லை. பள்ளிக்குப் பள்ளி, கல்லூரிக்குக் கல்லூரி, பல்கலைக் கழகத்துக்குப் பல்கலைக்கழகம், தொழிற்சாலைக்குத் தொழிற்சாலை, நாட்டுக்கு நாடு என்று பள்ளி முதல் உலக ஒலிம்பிக் அரங்கு வரையில் கிரிக்கெட் முதல் நீச்சல் வரையில் எங்கும் எல்லாவற்றிலும் போட்டிகள் பெருகியுள்ளன. போட்டிக்கு இடம் தராத விளையாட்டுக்கு மதிப்பு இல்லை. தோட்ட வேலைபோல் அத்தகைய விளையாட்டுகள் மதிப்பிழந்து போகின்றன. விளம்பரம் செய்யத் தக்க போட்டிகள் எங்கெங்கு உண்டோ, அந்த அந்த விளையாட்டுகளை மட்டுமே மக்கள் மிக்க சுவையுடன் போற்றுகிறார்கள்; பெருந் திரளாகக் கூடுகிறார்கள்; ஊண் உறக்கம் போனாலும் கவலைப் படாமல் கூடி ஆரவாரம் செய்கிறார்கள். செய்தித்தாள்களும் அளவு கடந்த மதிப்புத் தந்து வெளியிடுகின்றன.

பண்பை வளர்ப்பதில், பொறுமையைப் பேணுவதில், அமைதியைக் காப்பதில், உண்மையாய் நடப்பதில் போட்டி காணோம். அவற்றிற்குப் போட்டிகள் அமைக்க முடிவதில்லை. அமைத்தால் சுவையாக ஆக்க முடியாது; மக்கள் திரள மாட்டார்கள்; செய்தித்தாள்களும் விளம்பரம் செய்யா.

இவ்வளவு நீளமுள்ள நீர்த் தேக்கத்தை இத்தனை நிமிசங்களில் நீந்தினார் என்று சிறப்புப் பதிவு (Record) ஏற்படுத்திப் போட்டிகளில் பாராட்டுப் பெறுகிறார்கள். இதுபோலவே மற்றப் போட்டிகளில் சிறப்புப் பதிவு ஏற்படுத்துவோரைப் போட்டிகள் நடத்திக் காண்கிறார்கள். இவ்வளவு எடையைத் தூக்கியவர், இவ்வளவு மைல் ஓடியவர், இவ்வளவு உயரம் தாவியவர் என்றெல்லாம் போட்டிகளில் சிறப்புப் பெறுகிறார்கள். மக்கள் பாராட்டுகிறார்கள். அவர்களை விடச் சிறப்புப் பெற வேண்டும் என்று மற்றவர்கள் போட்டியிடுவதற்கு முயல்கிறார்கள்.

கல்வித் துறையிலும் இவ்வாறே போட்டிகளின் எல்லையில் சிறப்புகள் பெறுவோர் சிலர் உண்டு. அவர்கள் அடைந்த சிறப்புகளையே எல்லைகளாகக் கொண்டு பாடத் திட்டங்களைப்

பெருக்கி அமைக்கிருர்கள். சிறந்த மாணவன் ஒருவன் எவ்வளவு மனப் பாடம் செய்தான், எவ்வளவு பக்கங்கள் விடை எழுதினுன், எவ்வளவு நூல்கள் படித்தான் என்று அறிந்து, அவ்வளவும் மற்றவர்கள் படிக்க வேண்டும் என்று வற்புறுத்தும் வகையில் பாடத் திட்டங்களை அமைக்கிருர்கள். சிறப்புப் பெற்ற அந்த மாணவனின் எல்லேயே மற்றவர்கள் மேலும் திணிக்கப்படுகிறது. ஆகவே அந்தப் போட்டியில் எல்லாரும் கலந்து கொண்டு உழைக்க வேண்டியுள்ளது. அறிவை வளர்ப்பது என்று தொடங்கிய முயற்சி, கடைசியில் மூளையில் செய்திகளைத் திணிக்கும் போட்டியாக, தேர்வுகளில் செய்திகளேக் கக்கும் போட்டியாக முடிகிறது. பண்பை வளர்க்க முடியாமல், அறிவையும் தக்கவாறு வளர்க்க முடியாமல், தேர்வுகளில் போட்டியிட்டு மிக்க மதிப்பெண் பெறுவதற்கு உழைக்கும் உழைப்பாக முடிகிறது. அதனுல், கற்கும் மாணவர்களின் மனமும் கெடுகிறது. எவனே ஒரு குத்துச் சண்டைக்காரன் ஏழு கோழியும் எழுபது முட்டையும் தின்ருன் என்பதற்காக, அதையே எல்லோர்க்கும் வற்புறுத்திப் போட்டியிடச் செய்தால், மற்றவர்களின் வயிறு என்ன ஆகும்? அப்படித்தான் இளைஞர்களின் மூளை வளர்ச்சியும் வற்புறுத்தப்பட்டுக் கெடுகிறது.

''அரம் போன்ற கூர்மை உடையதாக அறிவு வளரப் பெற்றவர்களாக இருப்பினும், பண்பு வளராத மக்கள் மரம் போன்றவர்களே'' என்கிருர் திருவள்ளுவர். இந்த உண்மையை எண்ணிப் பார்க்க, இன்றைய கல்வித் துறைப் போட்டிகள் இடம் தருவதில்லே. புத்தகங்களில் உள்ள எல்லாவற்றையும் மூளையில் திணிக்கும் முயற்சியையும், தேர்வு நாள் வரையில் அவை மூளையில் நின்ருல் போதும் என்ற நிலைமையையுமே இந்தப் போட்டிகள் வளர்க்கின்றன.

புத்தகங்களோ கணக்கற்றவையாகப் பெருகிக்கொண்டு போகின்றன. அவற்றை எழுதுவதில் போட்டிகள்; வெளியிடுவதில் போட்டிகள்; சிறந்தவை என்று விளம்பரம் செய்து பரப்புவதில் போட்டிகள். நூல்கள் மிகச் சிலவாக இருந்த காலத்திலேயே திருவள்ளுவர் கற்கத் தக்கவற்றை மட்டுமே கற்க வேண்டும் என்ருர் (கற்க கற்பவை) ; அவற்றையும் ஐயம் திரிபு அற (கசடறக்) கற்க வேண்டும் என்ருர். நூருயிரக் கணக்கில் நூல்கள் பெருகியுள்ள இந்தக் காலத்தில் அவர் இருந்தால், என்ன அறிவுரை கூறுவாரோ?

உண்மை எந்தத் துறையிலும், சிக்கலற்றதாக, தெளிவாக உள்ளது. ஆனுல் நூல்கள் பலப்பல எழுதி எழுதித் தெளிவான அறிவைக் குழப்பிவிடுகிருர்கள்; எளிய உண்மையைச் சிக்கல் உடைய தாக்கிவிடுகிருர்கள். நாடுகளின் வரலாறுகள் சுருக்கமானவை; ஆனுல் எழுதுவோரின் ஆற்றலால் நூல்கள் பல்கிவிட்டன; வரலாற்று உண்மைகள் சிக்கலுடையவையாகிவிட்டன. வாழ்க்கைத் தத்துவம், சான்ருேர்களின் வாழ்க்கையில் உள்ளவாறு பார்த்தால் எளிதாக உள்ளது. ஆனுல் தத்துவ நூல்களோ பலவாறு திரிபுகள் செய்து சொல்வன்மையால் குழப்பங்களைப் பெருக்கிவிட்டன. மொழியைக் கற்றுப் பேசுவதும் எழுதுவதும் எளியவை ஆயினும், இலக்கண நூல்களும் மொழியியல் நூல்களும் பெருகிப் பெருகி வேண்டாத அளவிற்குச் சிக்கல்களைப் பெருக்கிவிட்டன. உயர்ந்த புலவர்களின் பாடல்களும் கற்பனைகளும் திரும்பத் திரும்பப் படித்து உணர்ந்து சுவைப்பதற்கு இனியனவாக உள்ளன. ஆனுல் இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் பல தோன்றிக் கொள்கைகள் பலவற்றை வளர்த்து இலக்கியக் கட்சிகளைப் பெருக்கி இலக்கியம் இன்பக்கலே என்று உணரவொட்டாமல் குழப்புகின்றன. இவ்வாறே ஒவ்வொரு துறையிலும் ஆயிரக்கணக்கில் நூல்கள் பெருகிப் பெருகி எளிமையும் தெளிவும் ஒதுங்குமாறு செய்து அருமைப்பாடும் சிக்கலும் வளரச் செய்கின்றன. மொழி கருத்தை உணர்த்த அமைந்த கருவி என்று பலரும் கூறுவர். ஆனுல் ஒருவர் அதைக் கடந்து, ''மொழி கருத்தை மறைக்க உதவும் கருவி'' என்ருர். இன்று பெருகி வளரும் நூல்களுக்கும் இது பொருந்துமாறு உள்ளது.

எல்லாம் போட்டிகளின் விளைவுகள். இவற்றிலிருந்து தப்ப முடியுமா? வழி காணேம். கிராமங்களின் முன்னேற்றத்திற்காகவே எந்நாளும் திட்டமிட்டு வந்த காந்தியடிகள், பலகாலம் தில்லியிலும் மற்ற நகரங்களிலும் வாழ நேர்ந்தது அல்லவா? அதுபோல், இந்தப் போட்டிகளை வெறுப்பவர்களும், இன்று இவற்றிற்கு ஆட்பட்டு வாழ்க்கையில் ஒரு பகுதியைக் கழிக்க வேண்டியுள்ளது. நகரங்களில் நீர் கெட்டுவிட்டது, காற்றுக் கெட்டுவிட்டது என்று அறிஞர்கள் எடுத்துக் கூறி



வருகிருர்கள். வாழ்க்கையில் கல்வித் துறை முதலிய பல துறைகளிலும் போட்டிகளின் மிகுதியால் பண்பு கெட்டுவிட்டது, அமைதி கெட்டு விட்டது என்ற உண்மையை எடுத்துக் கூறுவோர் யார்?

மனித இனம் புதுப் புதுக் கருவிகளைப் பெற்று வாழ்க்கையில் சுமைகளைக் குறைத்துக்கொள்ளும் என்று நம்பினர்கள். அறிவியல் வளர்ச்சியால் வாழ்வு எளிதாகும் என்று நம்பினர்கள். ஆனல் மனித மனம் எளிமையை நாடவில்லை. இரண்டு கை உடையவன் மூன்று மூட்டைகள் சுமக்க முயல்கிருன்; நான்கு கைபெற்ருல் ஐந்தாறு மூட்டைகளை எடுத்துவர முயல்வான். புதிதாகப் பெற்ற கைகளுக்கு ஓய்வு தரமாட்டான். அந்த நிலையே மனிதன் பெற்றுவரும் புதிய வாய்ப்புகளிலும் உள்ளது. அவற்றைப் பெற்றும் அமைதியைத் தேட மனம் இல்லை; அல்லலைப் பெருக்கவே அவனுடைய போக்கு அமைகிறது. பெருகி வரும் போட்டிகள் அதையே காட்டுகின்றன. அதனுல் வேகமாக வளரும் அறிவியல் வளர்ச்சியால், போக்குவரத்து, வானெலி, தொலைக்காட்சி முதலிய நல்ல வசதிகள் பல பெற்றபோதிலும் மனித இனம் அமைதியை இழந்து வருந்துகிறது. அன்று அமைதியின் விழுப்பத்தைப் பெறுவதற்காக ஓர் அரசிளங்குமரன் மாடமாளிகையைத் துறந்து போதி மரத்தை நாடி அமர்ந்து நாட்டுக்கு உணர்த்த வேண்டியிருந்தது. எதிர்காலத்தில் அத்தகைய சான்ருேர் பல நாடுகளிலும் தோன்றிப் போட்டிகள் குறைந்த சமுதாயத்தை அமைக்கப் பாடுபடவேண்டியிருக்கும். இல்லையேல், மனித இனம் எல்லாவற்றையும் பெற்றபோதிலும் வாழ்வின் அடிப்படையை இழந்து நிற்க நேரும், ★

எமது
தீபாவளி
வாழ்த்துக்கள்
ஜெயராதா
மாவரைக்கும்
இயந்திரம்
இல்லத்தரசிகளை இன்புற வைக்கும் ஜெயராதா
மாவரைக்கும் இயந்திரம்
ஊறவைத்த தானியங்களை - இட்லி, தோசை,
வடை முதலியவைகளுக்கு அறைக்க மிகவும்
உகந்தது. சிக்கனமானது.
சீக்கிரம் மாவரைக்கக்கூடியது.
ஹோட்டல்கள்,
கான்டீன்களுக்கு
பெரிய அளவிலும்
கிடைக்கும்.
விபரங்களுக்கு
எழுதுங்கள்,
தயாரிப்பாளர்கள் :
ஜெயராதா
இண்டஸ்டிரீஸ்.
கணபதி நகர் மாயூரம்
போன் : 416.
ஸ்டாண்டர்டு
மில் ஸ்டோர்ஸ்,
94. அரண்மனைக்கார தெரு.
சென்னை-1.
போன் : 29638

எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்
CYCLON
சைக்ளான் சைக்கிள் செயின்கள்
சைக்கிள் செயின்கள், ஹெவி டியூட்டி சைக்கிள் செயின்கள்
சைக்கிள் ரிக்ஷா செயின்கள்
சைக்ளான் ப்ராடெக்ஸ் பிரைவேட் லிமிடெட்
சத்தியமங்கலம் ரோடு,
கோயமுத்தூர்-6.
VSK CP 373

அருளிச் செயலில் சிவபெருமான்

அ. ஸ்ரீநிவாசராகவன்

'அருளிச்செயலி'ல் சிவபெருமானா? நல்ல வேடிக்கை! ஸ்ரீமந் நாராயணனையே பரம்பொருளாக எண்ணி, அவனையே நினைந்து நினைந்து நெஞ்சுருகிப் பாடிய ஆழ்வார்களுடைய பாடல்களில், திருமாலையே பரவுகின்ற அந்தப் பரவசத்தில், சிவபெருமானுக்கு இடம் ஏது? நியாயமான கேள்வியாகத் தோன்றுகிறது.

ஆனால் இருங்கள். தேவாரத்திலும் திருவாசகத்திலும், சிவபெருமானையே முழு முதற் கடவுளாக, 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' (திருவாசகம்: திருவெம்பாவை, 1) யாகக் கருதிப் பாடப்பெற்ற அந்தத் தெய்வப் பனுவல்களில், திருமாலைப் பற்றிய குறிப்புகள் இல்லையா? இருக்கின்றன. நாயன்மார்களுடைய பாடல்களில், பல இடங்களில் திருமால் வருகிறார். ஆனால் வைகுந்த நீள் வாசலில், உயிர்களை வரவேற்று நிற்கும் கருணையங் கடலாக, அந்தமில்லாத பேரின்பம் நல்கும் அருளாளனாக, 'உயர்வற உயர் நலம் உடைய' (நம்மாழ்வார்: திருவாய்மொழி, 1-1-1) பரம்பரமாகப் பொதுவாய் வருவதில்லை. பிறகு? சிவபெருமானால் படைக்கப்பெற்று, அம் முழுமுதலின் ஆணைக்கு அடங்கி நிற்கும் பரிவார தேவதையாக, 'பாதாளம் ஏழினுங் கீழ் சொற்கழி' (திருவாசகம், திருவெம்பாவை, 10) வாக விரிந்த சிவனுடைய பாதமலரைத் தேடிக் காண இயலாது கலங்கும் உயிர்களில் ஒன்றாகத் திருமால் வருகிறார். அவருடைய சக்கரங்கூடத் தவங் கிடந்து, சிவபெருமானிடம் பெற்ற பரிசாகவே காட்சி அளிக்கிறது.

சிவபெருமான் பாதத்தைக் காண, பன்றி வடிவெடுத்துச் சென்றும் திருமாலால் காண முடியவில்லை. தேவாரம், திருவாசகத்தில் பொதுவாகத் திருமால் எவ்வாறு இடம் பெறுகிறார் என்பதை உணர்த்த இவை போதும். ஆனால் இப்படிப் பேசுவதெல்லாம் எல்லையற்ற பக்தியின் விளைவு என்பதை மறந்துவிடப்படாது.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் இவற்றைக் குறிக்கும் பல தேவாரப் பாடல்களையும், எங்கள் ஊரில், என் வீட்டருகே வாழ்ந்து வந்த பச்சையப்ப பிள்ளை என்ற சைவப் பெரியவர், அடிக்கடி எடுத்துச் சொல்லி, "உங்கள் திருமாலுக்கு வந்த கதியைப் பார். எங்கள் சிவபெருமான் ஏறுகின்ற காளைதானே அவன்?" என்று என்னை மருட்டியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நான் திகைத்து நிற்பேன். வீட்டிலே என் தந்தை திருவாராதனம் செய்து வணங்கும் ஸ்ரீமந்நாராயணன் இவ்வளவு தாழ்ந்தவனா என்று எனக்கு அழுகைகூட வரும். அப்போது எனக்குத் 'திருமுறை'யும் தெரியாது. 'திவ்யப் பிரபந்த'மும் தெரியாது. இப்போது மட்டும் என்ன?

ஆனால் இப்போது ஒன்று தெரிகிறது: வடிவும் பெயரும் கடந்த சத்தியப் பொருளை, ஒரு வடிவில், ஒரு பெயரில் வழிபடும்போது (வேறு எளிதான வழிதான் ஏது?) அந்த வடிவத்திலும், பெயரிலும், அவற்றை ஒட்டிய செய்திகளிலும் கற்பனைகளிலும் ஆழ்ந்த கற்புநிலையில், நம்மாழ்வாரைப் போல, 'மற்றைத் தெய்வம் நாடுதிரே?' (திருவாய்மொழி, 4.10.1) என்றுதான் கேட்கத் தோன்றும். இப்படிக் கேட்டார்கள் ஆழ்வார்கள். இதனால், திருமாலுக்கு உயர்வற உயர்ந்த இடத்தைத் தமது நெஞ்சிலே தந்துவிட்ட ஆழ்வார்களுடைய அருளிச்செயற் பாடல்களில், சிவபெருமானுக்குத் திருமாலைவிடத் தாழ்ந்த இடமே தரப்பெறுகிறது. இது வழிபாட்டு உறுதியின் தவிர்க்க முடியாத ஒரு நிலை.

ஆகவே, திருமழிசைப் பிரான், திருமாலின் பாதத்திலே சிவபெருமான் வணங்குகிறார் என்று பாடுவதில் வியப்பில்லை.

'தாதுலாவு கொன்றை மாலை
துன்னு செஞ்சடைச் சிவன்
நீதியால் வணங்கு பாத'
(திருச்சந்த விருத்தம், 9)

சிவபெருமான் தொழும் பாதம் உடைய பரனே என்றும்,

'நெற்றி பெற்ற கண்ணன், விண்ணின்
நாதனொடு, போதின் மேல்
நற்றவத்து நாதனோடு மற்றுமுள்ள
வானவர்
கற்ற பெற்றியால் வணங்கு பாத'
(திருச்சந்த விருத்தம், 87)

சிவபெருமானும் இந்திரனும் பிரமனும் மற்றைத் தேவர்களும், உண்மை தெளிந்து வணங்கும் பாதனே என்றும்,

'நான்முகனை நாராயணன் படைத்
தான், நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்
படைத்தான்'
(நான்முகன் திருவந்தாதி, 1)

சிவபிரான் நான்முகனால் படைக்கப் பட்ட உயிரே என்றும்,

'அறியார் சமணர் அயர்த்தார்
பவுத்தர்,
சிறியார் சிவப்பட்டார்'
(நான்முகன் திருவந்தாதி, 6)

என்று, சமணரையும் பௌத்தரையும் சைவரையும் ஒன்றுசேர்த்து, உண்மை அறியாதவர் என்றும் திருமழிசைப் பிரான் பாடுகிறார். 'சிவபெருமான் மண்டை யோட்டை ஏந்தித் திரிந்தபோது, அவருடைய சாபம் தீர்த்த முழுமுதல் திருமாலே' என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடுகிறார்.

'பிண்டியார் மண்டை யேந்திப்
பிறர் மனை திரிதந் துண்ணும்
உண்டியான் சாபம் தீர்த்த ஒருவன்'
(திருக்குறுந்தாண்டகம், 19)

என்றும், திருமால் சிவனுடைய துக்கம் தீர்த்தவன்,

'தக்கன் வேள்வி தகர்த்த தலைவன்
துக்கம் துடைத்த துணைவர்'
(பெரிய திருமொழி, 5.2.6)

என்றும் பேசுகிறார்.

வாணனுக்கு உதவ வந்த, திரிபுரம் எரித்த சிவன், திருமாலிடம் தோற்றதாக நம்மாழ்வார் சொல்கிறார்: 'பரிவின்றி வாணனைக் காத்தும் என்று அன்று படையொடும் வந்து எதிர்ந்த திரிபுரம் செற்றவனும் மகனும்

OBM 2700A/TAM

பின்னும் அங்கியும் போர் தொலைய, பொரு சிறைப் புள்ளைக் கடாவிய மாயன்' (திருவாய்மொழி, 3.10.4)
அது மட்டுமா? சிவனும் பிரமனும் மற்றத் தேவர்களும் திருமாலுக்குள் ஒடுக்கம் என்றும் பேசுகிறார்:

'நக்க பிரானோடு அயன் முதலாக
எல்லாரும் எவையும், தன்னுள்
ஒக்க ஒடுங்க விழுங்க வல்லான்'
(திருவாய்மொழி, 3.10.9)

தொண்டரடிப்பொடியோ, 'திருமாலைக் காணப் பிரமனும் சிவனும் எண்ணிலாக் காலம் தவம் செய்தார்கள், அப்போதும் காணவில்லை' என்று நம்புகிறார்.

'பெண்ணுலாம் சடையினானும்
பிரமனும் உன்னைக் காண்பான்
எண்ணிலா ஊழி ஊழி
தவம் செய்தார் வெள்கி நிற்ப'
(திருமாலை, 44)

என்பது அவருடைய வாக்கு. 'வைகுந்த வாசலில் சிவனும் பிரமனும் இந்திரனும் உள்ளே போக ஆற்றலின்றிக் காத்துக் கிடக்கிறார்கள்' என்பது குலசேகரர் காணும் காட்சி:

'பின்னிட்ட சடையானும்
பிரமனும் இந்திரனும்
துன்னிட்டுப் புகலரிய வைகுந்த
நீள்வாசல்.'
(பெருமாள் திருமொழி, 4.3)



போதுமென்று நினைக்கிறேன். நாயன்மார்களுக்கு ஆழ்வார்கள் சளைத்தவர்கள் அல்ல என்பது தெரிகிறது. அவர்கள் திருமாலைக் குறைத்துப் பேசினால், இவர்கள் சிவனைக் குறைத்துப் பேசுகிறார்கள். இது ஆழ்ந்த நம்பிக்கையின் விளைவு. 'மற்றுமோர் தெய்வமுண்டே?' (திருமாலை, 9) என்று இரு சாராரும் எண்ணினார்கள். பரம்பொருள் 'மூன்று கவடாய் முளைத்தெழுந்தது' (கம்பராமாயணம், ஆரணிய. 15, 40) என்று நம்பினார்கள். நாயன்மார்கள் சிவபெருமானை மூலப்பொருளாகவும், ஆழ்வார்கள் ஸ்ரீமந்நாராயணனை மூவர்க்கும் முதல்வனாய மூர்த்தி என்றும் வழிபட்டார்கள். இந்த நிலையில் அவர்கள் மற்றத் தெய்வங்களைப் பரம்பொருளின் பரிவாரங்களாகப் பேசியது வியப்பில்லை.

ஆனால், பரம்பொருளுக்குப் பெயரும் வடிவமும் தந்து, இல்லை, அவனே அருளால் அந்தப் பெயரும் வடிவமும் ஏற்றான்; அந்த வடிவை வணங்கும் போது, 'ஆயிர நாமம் சொல்லித் தெள்ளேணம் கொட்டும்' போது, 'ஆடி ஆடி அகங் கரைந்து' பாடும் போது, வடிவும் பெயரும் ஏற்றுவந்த அவன், யாவும் கடந்த மெய்ப் பொருள் என்பதை ஆழ்வார்கள் மறக்கவில்லை; நாயன்மார்களும் மறக்கவில்லை. சிவன் வேறு, நாரணன் வேறு?

'உரைக்கின்ற முக்கட்பிரான் யானே'
(திருவாய்மொழி, 5.6.8)

என்று ஆவேசத்தில் பெண்ணொருத்தி பேசுவதாக நம்மாழ்வார் பாடுகிறார். 'முனியே நான்முகனே முக்கண்ணப்பா' (திருவாய்மொழி, 10.10.1) என்று அழைக்கவும் செய்கிறார்.

'ஒருருவம் பொன்னுருவம்,
ஒன்று செந் தீ,
ஒன்று மா கடலுருவம், ஒத்துநின்ற
மூவுருவும் கண்டபோது ஒன்றாம்
சோதி'
(திருநெடுந்தாண்டகம், 2)

அது எங்கள் திருமாலின் 'முகில் உருவம்' என்பார் திருமங்கையாழ்வார். ஸ்ரீமந்நாராயணனா? அவன், 'ஏக மூர்த்தி, மூன்று மூர்த்தி.... புண்ணியத்தின் மூர்த்தி, எண்ணில் மூர்த்தி'
(திருச்சந்த விருத்தம், 17)

எல்லா வடிவுகளும் அவனே என்று, சிவனைப்பற்றிக் கடுமையாகப் பேசும் திருமழிசைப்பிரானே தலைக்கட்டுகிறார்.

இப்படியெல்லாம் பேசுவதற்குக் காரணம் ஒன்றுதான். காரணப் பொருளாகிய ஒன்றின்—அது இரண்டாக இருக்க முடியாது—அலகிலாத் தன்மையை ஆழ்வார்கள் உணர்ந்தார்கள். அது, எங்கும் பரந்து, விரிந்து கிடக்கிறது; அது இல்லாத பொருள் இல்லை; அது இல்லாத இடம் இல்லை என்றார்கள்.

எல்லா உருவமும் அவனே எனக் காணும் தத்துவ நிலையில், சிவனும் நாரணன்தானே என்று தோன்றுகிறது. யார் எந்த வடிவில் வழிபட்டால் என்ன?

'அவரவர் தமதமது அறிவு அறிவகை
வகை
அவரவர் இறையவர் என அடி
அடைவர்கள்'
(திருவாய்மொழி, 1-1-5)

'எந்த வடிவத்தில், எந்தப் பெயரில் வழிபட்டாலும் ஒருவனையே போய் அடைவாய்' என்னும் பகவத்கீதைக் கருத்தை, தமது அநுபவமாக ஆழ்வார் வெளியிடுகிறார்.

'தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுரு
வந்தானே
தமர் உகந்தது எப்பேர் மற்று அப்
பேர்—தமர் உகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையாது
இருப்பரே
அவ்வண்ணம் ஆழியான் ஆம்!'
(முதல் திருவந்தாதி, 44)

என்ற நிலை ஏற்படும்போது, ஆழ்வார்கள் நெஞ்சில், சிவபெருமானும் திருமாலும் ஒன்றாகக் கரைந்து விடுகிறார்கள். அண்ட சராசரம் அனைத்தும் அவனே என்றெண்ணும் உள்ளத்தில், தெய்வங்கள் யாவும் நாரணனாகவே காட்சி அளிக்கின்றன. சிவபெருமான் மட்டும் இதற்கு விலக்கா? அவன் வேறு, திருமால் வேறா? இந்தப் பரந்த தத்துவ நோக்கின் அடிப்படையில்,

'பொன் திகழும் மேனிப் புரிசடை
அம் புண்ணியனும்
நின்று உலகம் தாய நெடுமாலும்
—என்றும்
இரு அரங்கத்தால் திரிவ ரேலும்,
ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன்.'
(முதல் திருவந்தாதி, 98)

என்று பேசாமல் எப்படி இருப்பது? 'ஆண் அல்லன், பெண் அல்லன், அல்லா அலியும் அல்லன்,

காணலும் ஆகான், உளன் அல்லன்
இல்லை அல்லன்
பேணுங்கால் பேணும் உருவாகும்
அல்லனுமாம்,
கோணை பெரிதுடைத்து
எம் பெம்மானைக் கூறுதலே'
(திருவாய்மொழி, 2-5-10)

என்று பேசிய ஒருவருக்கு,

'ஏறாளும் இறையோனும், திசை
முகனும், திருமகளும்
கூறாளும் தனி உடம்பன்'
(திருவாய்மொழி, 4-8-1)

என்று தாம் வணங்கும் திருமாலை வருணிப்பது எளிதுதானே?

'தானே தனக்கு உவமன், தன்னுருவே
எவ்வுருவும்
தானே தவ உருவும் தாரகையும்—
தானே
எரிசுடரும், மால்வரையும்,
எண்திசையும் அண்டத்து
இருசுடரும் ஆய இறை'
(மூன்றாம் திருவந்தாதி, 38)

என்றுபார்க்கும் தத்துவக் கண்களுக்கு,
'தாழ்சடையும், நீண்முடியும்,
ஒண்மழுவும், சக்கரமும்,
சூழரவும் பொன்நாணும் தோன்று
மால்—சூழும்
திரண்டு அருவி பாயும் திருமலைமேல்
எந்தைக்கு,
இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து'
(மூன்றாம் திருவந்தாதி, 63)

என்றுதானே தோன்றும்?

சிவபெருமானைப்பற்றி, இப்படியும் ஆழ்வார்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும்: ஸ்ரீமந்நாராயணனே பரம் பொருள் என்ற உறுதியின் எல்லை நிலத்தில்தான் அவர்கள் நின்றார்கள். 'நாடும் நகரமும் நன்கறிய, நமோ நாராயணாய என்று, பாடும் மனம்' (திருப்பல்லாண்டு, 4) பெற்றவர்களே அவர்கள். 'கண்ணன் கழல் இணை' நண்ணிய மனம் உடையவர்கள். அவர்கள் 'எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே'. (திருவாய்மொழி, 10.5.1.) இதில் ஐயம் எதுவும் இல்லை. பக்தி முதிர்ச்சியில், அவனே சத்தியம். 'மற்றுமோர் தெய்வமுண்டே?', 'மற்றைத் தெய்வம் நாடுதிரே?' என்று திருமால் ஒருவனையே, ஒருவனாகப் பற்றியவர்கள். அந்தப் பக்திப் பெருக்கில் முனைத்த தத்துவ மலர்ச்சியில், எல்லா வடிவங்களும் அவனே, எல்லாம் அவனே என்ற நிலையில், சிவபெருமானையும் தெய்வங்கள் அனைத்தையும் அவனாகவே காணும் பேறு பெற்றவர்கள். இந்தத் தத்துவப் பார்வை நாயன்மார்களிடம் இல்லையா? ஏன் இல்லை?
'ஆதியும் அரனாய் அயன் மாலுமாய்,
பாதி பெண்ணுருவாய பரமன்'
(ஐந்தாம் திருமுறை, 817)

என்று அப்பர் பெருமான் பேசவில்லையா? ஆனால் அதையெல்லாம் விரித்துச் சொல்வதற்கு இக் கட்டுரையில் இடமில்லை. பொய்கையாழ்வார் கூறும் வாழ்த்துப் பாடலோடு முடிக்கிறேன்.

'ஏற்றான், புள்ஊர்ந்தான், எயில் எரித்
தான் மார்வு இடந்தான்,
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்—
கூற்றொருபால்
மங்கையான், பூமகளான், வார்சடை
யான், நீள்முடியான்,
கங்கையான், நீள்கழலான் காப்பு.'
(முதல் திருவந்தாதி, 74)

இப் பாடலில் வரும் சங்கரநாராயண மூர்த்தி நம்மைக் காத்தருள்க!

குறிப்பு—இது எல்லா எடுத்துக் காட்டுக்களையும் ஒன்றுவிடாமற் கோவைப்படுத்தித் தன்னுள் அடக்கிய முடிவான ஆராய்ச்சிக் கட்டுரை அன்று. மதுரையில், ஆழ்வார்களைப் பற்றி நான் பேச நேர்ந்தபோது, காஞ்சி காமகோடி பீடப் புதுப் பெரியவர்கள், 'அருளிச்செயலில் சிவபெருமானைப் பற்றிப் பேசப்படுகிறதா?' என்று என்னைக் கேட்டார்கள். அந்தக் கேள்வியின் விளைவாக, நினைவிலே உடனடியாகத் தோன்றிய சிலவற்றை இந்தக் கட்டுரையின் மூலமாக உங்களோடு பகிர்ந்துகொள்ள முயன்றிருக்கிறேன். அவ்வளவுதான். ★

வாடிக்கையாளர்கள், மற்றும் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

பிராஞ்சுகள்: சென்னை-17 & பம்பாய்-31

போன்: 446166 476967

R. V. C.

பிராண்ட்

அக்மார்க் நெய்

வாங்கி உபயோகியுங்கள்

எல்லாப் பிரதான கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:

Phone: Office 632, Resi: 316 Gram: LABAM

R. VISVANATHAN & Co.,

TIRUPUR-4. (Tamilnadu)

மதுரையில்

உத்திரவாதமுள்ள தங்க நகைகள்
வெள்ளிப் பாத்திரங்களுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்

R. R. C.

R. ராமநாதன் செட்டியார்

40/41, கீழ ஆவணி மூல வீதி

மதுரை - 1.

போன்: 22200 தந்தி: "ஜுவல்லரி"

வெங்கடேஸ்வரா

தீப ஒளி வீசும் தீபாவளிப்
பெருநாளில் எமது அன்பு கலந்த
வாழ்த்துக்கள் !

எக்காலத்திற்கும் ஏற்றவை

ஸ்பைடர்

பனியன்கள்

ஸ்பைடர் நிட்டிங் கம்பெனி

திருப்பூர்-4

நித்திய பூஜைக்கு
பரிசுத்தமான

கோபால் கற்பூர

வில்லைகள்



VSK RG 386

அழகிய அட்டைப்பெட்டிகளிலும் பாட்டில்களிலும் பல சைஸ்களில் கிடைக்கிறது.
எல்லா ஊர்களிலும் எல்லா கடைகளிலும் கிடைக்கிறது. ஞாபகம் இருக்கட்டும்.
கோபால் கற்பூரம் 100க்கு 100 பரிசுத்தமானது பூஜைக்கென்றே தயாரிக்கப்படுகிறது.
நீங்கள் கடைகளில் கற்பூரம் என்று கேட்காமல் கோபால் கற்பூரம் என்று கேட்டு வாங்குங்கள்.

கோபால் கேம்பர் ஒர்க்ஸ்

உரிமையாளர்கள் :

R. கோபாலகிருஷ்ணன் & சன்

24/90, தெலுங்கு பிராமணாள் வீதி - கோயமுத்தூர்.

போன் : 23691. தந்தி : PUBLICITY

பாவம், பஞ்சு சார்!

— அகஸ்தியன் —

காலைப் பத்திரிகையில் முழுகியிருந்தார் பஞ்சு. சாதாரணமாகச் சோடாபுட்டி மூக்குக் கண்ணாடி போட்டிருக்கும்போதே சற்று நெருக்கமாக வைத்துப் படிப்பார். அப்போது கண்ணாடி போட்டுக்கொள்ளாததனால், பேப்பரில் முழுகியிருந்தார் என்பது நாற்றுக்கு நூறு வாஸ்தவமான பேச்சு. ஆகவே திண்ணைக்கு அருகில் திருமதி பஞ்சு வந்ததை அவர் கவனிக்கவில்லை.

''என்ன? ஏதாவது பரீட்சைக்குப் படிக்கிறீங்களா, என்ன? பக்கத்தில் இடி விழுந்தால்கூடத் தெரியாத மாதிரி அப்படிப் படிக்கிறீர்கள்.''

''ஓகோ! நீ வந்திருக்கிறாயா? நீ வந்திருப்பதை நான் கவனிக்கவில்லை. அதற்காக உன்னைப் போய் இடி என்று வர்ணித்துக்கொள்வது? என்னவோ முக்கியமான நியூஸ் படித்துக் கொண்டிருந்தேன்'' என்றார் பஞ்சு. பெரிய கம்பெனி ஒன்றில் பொறுப்பான வேலை பார்க்கிறவர் என்பதை அவரது கம்பீரமான தோற்றம் உணர்த்தும். ''அடியே, நான் பேப்பர் படிக்கும்போது வந்து ஏதாவது தொணதொணத்தால்தான் உனக்கு நிம்மதி. சரி, என்ன சமாசாரம்?''

''பேப்பர் படிக்கிறது நீங்கள். எனக்கு என்ன தெரியும் சமாசாரம்? நான் ஏதாவது ஒரு பொருட்டா உங்களுக்கு? அந்தப் பெண் வந்தால் கண் சிமிட்டாமல் அவளைப் பார்த்துக் கொண்டு வாய் ஓயாமல் பேசிக்கொண்டிருப்பீர்கள்.''

''எந்தப் பெண்ணை சொல்லுகிறாய்?''

''ஐயோ! கேளுங்கடி இந்தக் கதையை! எந்தப் பெண்ணாம்! கேட்கிறார். அதுதான் அந்தப் பவுடர் பாப்பா. அவள் வீட்டில் அவளைக் கேட்க ஆள் இல்லை; ஊர் சுற்றி வருகிறாள். உங்கள் மாதிரி அசடுகள் பல்லிளிப்பதைப் பார்த்து அந்த ரம்பை அப்படியே மனமகிழ்ந்து போகிறாள்.''

''இதோ பார்; ஏதோ கேட்க வந்தாய். என்னவென்று சொல்லாமல், ஒவ்வொருத்தர் தலையாகப் பார்த்து உருட்டறே. அது இருக்கட்டும். அந்தப் பெண்ணைக் கண்டால் உனக்கு ஏன் ஆகவில்லை என்று தெரியவில்லை. சரி, என்ன விஷயம்?''

''விஷயத்தைச் சொல்ல விட்டால் தானே? பி.ஏ. பரீட்சை படிக்கும்போது கூட இப்படித் தலையைக் கவிழ்ந்து கொண்டு படிக்கவில்லை. இப்போது பேப்பரைப் படிக்கிறீர்கள். அந்தக் காலத்தில் இப்படிப் படித்திருந்தால் மூன்று தடவை 'கோட்' அடித்திருக்க வேண்டாமே!''

''என்ன சொல்லி என் வாயைக் கிளறினாலும் உன்னோடு நான் சண்டைக்கு வரப் போகிறதில்லை. நான் மூன்று தடவை போனேனோ, முப்பது தடவை போனேனோ, பி. ஏ. பாஸ் செய்துவிட்டேன். உன் தம்பி போய்க்கொண்டிருக்கிறானே; இவன் கட்டின பரீட்சைப் பணத்தை வைத்துக்கொண்டே யுனிவர்சிடியில் ஒரு ஹால் கட்டியிருக்கிறார்களாம்!''

''இந்த மாதிரி என்னையும் என் வீட்டு மனுஷாளையும் மட்டம் தட்டுவதில் நீங்கள் மன்னர். மூன்றுவது வீட்டுச் சேஷன், அல்சேஷன் மாதிரி பாயும்போது எதிரே ஒரு வார்த்தை பேசத் தைரியம் இல்லை. பக்கத்து வீட்டுக் காயாம்பூ, ரோடு கான்டிராக்டுக்காக வாங்கும் தார் டிரம்களை நம் வீட்டு வாசலை அடைத்து அடுக்கி வைக்கிறார். அதைக் கேட்கத் துணிவு இல்லை. என்னைப்பற்றிப் பேசச் சொன்னால் வாய், 'வாய்ஸ் அப் அமெரிக்கா' மாதிரி, விடாமல் பேசிக் கொண்டேயிருக்கும்!''

''போருமே, போருமே! என் வாயைக் கிளறி ஏதாவது வசை பாடாவிட்டால் உனக்கு நிம்மதி இல்லை.''

''என் வாயை அடக்கத்தான் தெரியும். நானும் நாளையிலிலேருந்து 'அங்க்கிள்' என்று அந்தப் பெண் கூப்பிடுவது மாதிரி குழைவாகக் கூப்பிடுகிறேன். அப்போது பல்லை இளித்துக்கொண்டு பேசுகிறீர்களா என்று பார்க்கிறேன்.''

''இதோ பாருடி. உனக்கு ஏன் அந்தப் பெண் பிரியம்வதாவைப் பிடிக்கவில்லை? அவள் 'அங்க்கிள்' என்று கூப்பிட்டால் உனக்கு ஏன் எரிச்சலாக வருகிறது? நீயுந்தான் அப்படிக் கூப்பிடேன்.''

''ஆகா, கூப்பிடறேன். அவள் மாதிரி வேணுமென்றால் கூப்பிட முடியும். ஆனால் அவள் மாதிரி என்னால் டிரஸ் செய்துகொள்ள முடியாதேடி அம்மா. அரைக்கஜம் துணி வாங்கி அதில் முக்கால் கஜம் துணியை மீத்தி, ரவிக்கை தைத்துப் போட்டுக் கொள்கிறாளே, அது என்னால் முடியாது. உங்களுக்கு முதுகெலும்பு கிடையாது; அவள் ரவிக்கைக்கு முதுகே கிடையாது.''

''ஆண்டவா! கண்களை மூடிக் கொள்ளும் சக்தியை மனிதனுக்குத் தந்தமாதிரி காதுகளை மூடிக்கொள்ள வழி செய்யவில்லையே! பஞ்சுமாமி எல். பி. ரிகார்டு மாதிரி ஓயாமல்..''

அந்தச் சமயத்தில் பஞ்சு வீட்டின் காம்பவுண்டுக் கதவு தனக்கே உரிய சுருதியுடன் 'ஞொய்ங்' என்று மெல்லிசை வழங்கியது.

பஞ்சு திரும்பிப் பார்த்தார். பஞ்சு மாமி சட்டென்று தன் பேச்சை (அதாவது ஏச்சை) நிறுத்திக்கொண்டாள்.

ஓர் அழகிய பெண் வந்துகொண்டிருந்தாள். இத்தனை நேரம் பஞ்சு மாமியின் வாயில் புகுந்து வந்த பெண்தான் அவள்; மிஸ் பிரியம்வதா! பஞ்சுமாமிக்குக் கால்ஷியம் ஊசி போட்ட மாதிரி உள்ளே கணப்பு ஏற்பட்டது.

''வாங்கோ, வாங்கோ, மிஸ் பிரியம்வதா!'' பஞ்சு ஒரே உற்சாகமாக வரவேற்றார்.

தலையை ஒயிலாகச் சாய்த்து, புருவத்தை ஸ்டைலாக உயர்த்தி, உதடுகளை நாசுக்காய்க் குவித்துத் தோள்களை அழகாய் நெளித்துக்கொண்டே; ''நமஸ்தே, அங்கிள், நமஸ்தே மாமி'' என்று 'சாக்கரீன்' கலந்த குரலில் கூறினுள் பிரியம்வதா.

''வாங்கோ, வாங்கோ'' என்று முகமே பல்லாய் இளித்து வரவேற்ருர் பஞ்சு.

''பார்த்து ரொம்ப நாளாயிற்று: அடேய் கஸ்தூரி, ஒரு நாற்காலி கொண்டுவா. இப்பத்தான் மாமி உங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள்.''

''ஓ, அப்படியா, மாமி!''

''ஆமாண்டி குழந்தை. உங்க அங்கிளுக்கு என்னை வம்புக்கு இழுக்காவிட்டால் பொழுது போகாது. உன்னைப்பற்றி நான் என்ன சொல்லப் போகிறேன்? சும்மா சரடுவிடருர். நீயும் நம்புகிருய்.''

''சரி; போய் ஜம்மென்று ஒரு கப் காபி கொண்டுவா, நம் பிரியம்வதாவுக்கு.''

''நோ அங்கிள்!''

''சரி, காபி வேண்டாம் என்ருல் ஓவல் கொண்டு வா.''

பஞ்சுமாமி, முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க உள்ளே சென்ருள்.

''யெஸ். சொல்லுங்கோ....மிஸ் பிரியம்வதா. வாட் கேன் ஐ டு..''

''ஒன்றும் இல்லை அங்கிள். இப்போது மெட்ராஸ் சிடியில் சந்துக்குச் சந்து ஒரு சபா ஆரம்பிச்சுப் பிரமாதமாகப் புரோகிராம் போடருங்க. நம்ம ஊரில் ஒரு சபாகூட இல்லை. ஏன் நாம் ஆரம்பிக்கக் கூடாது என்று என் ஃபிரண்ட்ஸ் சொன்ஞர்கள். இந்த மாதிரி சோஷல் வொர்க்கெல்லாம் உங்களுக்குத்தான் அத்துபடி. ஆகவே நீங்கள் இந்த விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள்தான் காரியதரிசி.''

''மை காட்! என்னை அப்படி எல்லாம் போடாதீர்கள். நீங்கள் நடத்துங்கள். நான் 'மாரல் ஸப்போர்ட்' தருகிறேன்.''

''நோ அங்கிள். மாரல் சப்போர்ட் தருவதற்கும், ஏன், இம்மாரல் சப்போர்ட் தருவதற்கும் நிறையப்பேர் இருக்கிருர்கள். ஊக்கத்துடன் பணி செய்யவும் மக்களிடையே கலையார்வத்தை வளர்க்கவும்....'' பிரியம்வதா சொல்லிக்கொண்டே போனுள். அவள் சொன்னது எதையும் அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவள் பேசும்போது அவளது கருநீல விழிகள் காந்த சக்தியை வீசிக்கொண் டிருப்பதையும், கண் இமைகள் வண்டின் சிறகுபோலப் படபடத்துக்கொண் டிருப்பதையும், அழகான சின்ன உதடுகளில் லிப்ஸ்டிக் ஒயிலாகப் பூசப்பட்டிருப்பதையும் பஞ்சு ரசித்துக்கொண் டிருந்தார்.

''நீங்கள் நிச்சயம் ஒப்புக் கொள்ள வேண்டும். சரி என்று உங்களிடம் சம்மதம் வாங்காமல் திரும்ப மாட்டேன் என்று என் நண்பர்களிடம் சொல்லியிருக்கிறேன்.''

''இல்லை, மிஸ் பிரியம்வதா, நான் ஒரு 'லேஸி' ஆசாமி....''

''அதெல்லாம் சும்மாப் பேச்சு! நான் ஜாயின்ட் செகரட்டரியாக இருக்கிறேன்.''

''விடமாட்டீர்கள்! சரி, வருகிற ஞாயிற்றுக்கிழமை ஒரு மீட்டிங் போடலாம். சபாவின் பெயர், சட்ட திட்டங்கள், நிர்வாகிகள் இவை பற்றி முடிவெடுக்கலாம்.''

''ஓ மை டியர் அங்கிள். உங்களுக்கு ஆயிரம் கோடி தாங்க்ஸ். நம்ம ரம்பா மளமளவென்று வளர்ந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.''

''ரம்பாவா நம் சபாவின் பேர்? வெரி அட்ராக்டிவ். ரம்பா சபா! ஸ்வீட்!''

''வெங்கு, அந்த 'மேக்கப்' மோகினி வந்து அங்கிள் என்று குழைந்திருக்கிருள். இவர்தான் தெரியுமே; ஒரேயடியாகப் பல்லை இளித்துக்கொண்டே சரி என்று சொல்லிவிட்டார்.''

''டோன்ட் பி ஸில்லி, கோபு. நம் ஊரில் சபா அவசியமாக இருக்க வேண்டும். வெளியூர்க் கலைஞர்களை வரவழைப்பதுடன் உள்ளூர்க் கலைஞர்களுக்கும் சான்ஸ் கொடுக்க வேண்டும்'' என்ருர் பஞ்சு.

"என்ன சான்ஸோ. மண்ணே? அந்த பியூட்டிக் குவினுடன் உங்களுக்கு அடிக்கடி பேசச் சான்ஸ். அவளுடைய காரில் உட்கார்ந்து போகச் சான்ஸ். கலிகாலம்! கிழவர்களுக்கு இப்போது சான்ஸ்" என்றான் சிரிப்புடன் வெங்கு.

"இப்படிக் கண்டபடி சொல்லாதீர்கள்."

"நாங்கள் கண்டபடிதான் கூறுவோம். நீங்கள்தான் காணாததை எல்லாம் சொல்வீர்கள். அந்த அப்சரஸ் உங்கள் எதிரில் வந்ததும் இந்திரலோகம், சந்திரலோகம் எல்லாம் உங்கள் கற்பனையில் வந்துவிடுகின்றன."

"போதுமையா. சபாவைப் பற்றிப் பேசலாம் என்றால் என்னைப் பற்றிப் பேசுகிறீர்கள். சபாவுக்கு ரம்பா என்ற பெயர்."

"நல்ல பெயர். சபா நிகழ்ச்சிகள் நன்றாக இருந்தால் எல்லாரும் ரம்பா, ரம்பா பேஷ் என்று பாராட்டுவார்கள். இல்லாவிட்டால். ரம்பம் ரம்பம் என்பார்கள்."

"வெங்கு, கோபு எல்லாரும் கொஞ்சம் நிறுத்துங்கள்! முதலாவது, நம்ம சபாவின் ஆரம்ப நிகழ்ச்சிக்கு நாமே அதாவது உறுப்பினர்களே ஏதாவது கலைநிகழ்ச்சி நடத்த வேண்டும். நிறையப் பேர் சபாவில் சேருவதற்கும் இது வழி செய்யும். அதிகச் செலவும் ஏற்படாது."

"பிரியம்வதா நம்முடன் ஏதாவது குட்டி நாடகத்தில் நடிக்க ஒப்புக்கொள்வாளா? நம்முடன் என்றால், உங்களுடன் என்று வைத்துக்கொள்ளுங்கள்."

"சொல்வதைக் கேளுங்கள். இந்தக் கதம்ப நிகழ்ச்சிக்கு நம்ப சினிமா டைரக்டர் பாஸ்கரைத் தலைமை வகிக்கும்படி சொல்லலாம். கட்டாயம் வருவார். நீங்கள் எல்லாரும் என்னைக் 'கோட்டா' செய்யாமல் ஒத்துழையுங்கள். எல்லாம் வெற்றிகரமாக நடக்கும்."

ரம்பா என்று எழுதிய வண்ணத் திரை, மன்றத்தின் வாயிலில் படபடத்துக்கொண்டிருந்தது. மைக் திரைப்படப் பாடல்களை அலறிக்கொண்டிருந்தது. தோரணங்கள், அலங்கார வரவேற்பு, கலகலப்பு, பரபரப்பு—'ரம்பா' துவக்க விழா! தலைவர்: டைரக்டர் பாஸ்கர். முன்னிலை: திரைப்பட நட்சத்திரம் மிஸ் தாமரைப்பிரியா!

கடந்த இருபது நாட்களாகப் பஞ்சுவும் பிரியம்வதாவும் மற்ற நண்பர்களும் படாத பாடுபட்டு நிகழ்ச்சிகளைத் தயார் செய்திருந்தார்கள். ஊரின் முக்கியப் பிரமுகர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தார்கள். நிதி வசூல் செய்தார்கள். தோளோடு தோள் இணைந்து ஓடியாடி வேலை செய்தார்கள். பஞ்சு மாமி அவ்வப்போது சொல்லாலும் கண் சமிக்கினைகளாலும் 'அந்தத் தளுக்குச் சுந்தரியுடன் ஊர் சுற்றுவிட்டால் என்ன?' என்று கண்டித்ததையும் பஞ்சு 'கண்டு' கொள்ளவில்லை!

பிரமாதமான கூட்டம். (இலவச நிகழ்ச்சி!) மண்டபத்தில் நுழைய இடமில்லை. உரைகள் நிகழ்த்தப்பட்டன. கழுத்துகளில் மாலைகள் போடப்பட்டன. பிளாஷ் விளக்குகளைக் காமிராக்காரர்கள் பளிச்சிட்டார்கள். இடையிடையே பஞ்சுவின் எதிரில் பிரியம்வதாவின் முத்துப் பற்கள் பளிச்சிட்டன.

கடைசி நிகழ்ச்சியாக 'நவீன கச தேவயானி' நாடகம் பஞ்சு அண்ட் குழுவினர் நடித்தார்கள். பிரியம்வதா நவநாகரிகமான தேவயானி. சாதாரணமாகவே நாகரிகமாக உடை உடுத்தும் அவள், 'மாடர்ன்' தேவயானிக்கு மேலும் ஸ்டைலாக உடை உடுத்து, அசல் அப்சரஸ்போல் வந்தாள். (முதல் வரிசையில் மூன்றாவது நாற்காலியில் உட்கார்ந்திருந்த ஒருவர் மட்டும் பிரியம்வதாவை எரித்துவிடுவது போல் பார்த்தார். அவரே பஞ்சுமாமி!)

நாடகம் மிகவும் தமாஷாக இருந்தது. வசனம் நகைச்சுவையாக இருந்ததனால் மட்டுமல்ல; வசனத்தை மறந்துவிட்டு, பஞ்சு ஏதேதோ வசனத்தை உளறிக் கொட்டிக் கிளறி மூடியதைக் கண்டும் ரசித்தார்கள். (ஓசியில் வருபவர்கள்தாம் மிகவும் நன்றாக ரசிப்பார்கள் என்று யாரோ ஒருவர் கூறிய பொன்மொழியை நினைவு கொள்க.)

கடைசியில் டைரக்டர் பாஸ்கர் பேசினார். அந்த ஊரிலேயே படித்து வளர்ந்தவர். பஞ்சு போன்றவர்களுக்கு வெறும் பாஸ்கராக இருக்கும்போதே பழக்கமானவர் என்பதனால், ரம்பா கதம்ப நிகழ்ச்சிகளைப் பாராட்டிப் பேசினார். ''முன்பெல்லாம் அரச சபைகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். கலைஞர்களுக்கு அரசர்கள் பரிசுகளை அளித்து ஊக்கப்படுத்துவார்கள். இன்றைய ஜனநாயகத்தில் மக்கள்தாம் மன்னர்கள். மக்களுக்குத் தர்பார் மண்டபங்கள் இல்லை; ஆனால் சபைகள் உண்டு. ரம்பா சபா போன்ற சபாக்களை அமைத்துக் கலைகளை வளர்க்கிறார்கள்.'' பாஸ்கர் தயாரித்து வந்த பேச்சைப் பேசிக்கொண்டே போனார்.

''இந்தக் கதம்ப நிகழ்ச்சியில் நடைபெற்ற நாடகத்தில் மிஸ்டர் பஞ்சு நன்றாக நடித்தார். அவருக்கு நடிப்பு இயற்கையாக வருகிறது. இம்மாதிரியானவர்கள், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் திரையுலகுக்கு வந்தார்கள் என்றால் அதற்குக் கௌரவமும் அந்தஸ்தும் கிட்டும். மிஸ்டர் பஞ்சுவின் நடிப்பைப் பாராட்டி அவருக்கு இந்தக் கைக்கடிகாரத்தை அன்புப் பரிசாகத் தருகிறேன்.''

பாஸ்கர் கடிகாரத்தைப் பஞ்சுவின் கையில் கட்டிவிட்டார். பஞ்சு பெருமையால் பஞ்சுப் பொதி மாதிரி ஊதிப் போனார்.

''அடியே, பார்த்தியா ஐயாவின் திறமையை! டைரக்டர் பாஸ்கர் என்னமாப் பாராட்டினார் என்று கேட்டாயா? பெண்ணே, என் திறமையை இன்றாவது உணர்ந்தாயா? இம்மாதிரியான கணவனைப் பெற்றதற்கு நீ ஈரேழு ஜன்மத்திலும்...''

''போதுமே உங்க டயலாக்! நான் பிரியம்வதா அல்ல. அவளிடம் போய்க் கொஞ்சுங்கள். ஆமாம், நானே கேட்கவேணும் என்று இருந்தேன். அந்தப் பெண்தான் வெட்கமில்லாமல் நாடகத்தில் உங்கள் தோளின் மேல் கையை வைத்தாள் என்றால், நீங்கள் அவளுடன் கைகோத்துக் கொள்வதா? எனக்கு அவமானம், வெட்கம் பிடுங்கித் தின்றது.''

''பஞ்சு மாமி, நீ இன்னும் போன நூற்றாண்டிலேயே இருக்கிறாய். நான் நன்றாக நடித்ததைப் பாராட்டி டைரக்டர் பாஸ்கர் பரிசு கொடுத்தாரே, அதைப்பற்றி உனக்குச் சந்தோஷமோ பெருமையோ கிடையாது. அந்தப் பெண் தோளில் கை வைத்ததுதான் உனக்குத் தெரிகிறது.''

''உங்களைத் தூக்கி மடியில்தான் வைத்துக்கொள்ளட்டுமே! எனக்கென்ன? எதெது அநுபவிக்கணுமோ அநுபவிக்கிறேன்.''

''த்சொ த்சொ! ரொம்ப அலுத்துக்கொள்ளாதே. பாஸ்கர் சினிமாவில்கூடச் சான்ஸ் கொடுப்பார். யார் கண்டதடி? நானே பெரிய காமெடியனாக வரலாம், அல்லது வில்லனாக வரலாம். போகும்போது, பாஸ்கர் அடுத்த படத்துக்குச் சில புது முகங்களைப் போடப் போவதாகச் சொன்னார்.''

''புது முகம் என்றால் உங்களைத்தான் என்று நீங்களே கற்பனை பண்ணிக்கொண்டு ஏன் வால் அறுந்த பல்லி மாதிரி துடிக்கிறீர்கள்? அந்தத் தளுக்கு மோகினியைப் பார்த்துப் பாஸ்கர் சொல்லியிருக்கலாம். போங்கோ, சினிமாவில் நடிக்கப் போங்கோ. இன்னும் நிறையச் சிங்காரிகளின் சிநேகம் கிடைக்கும்.''

அந்தச் சமயம் பார்த்துக் காலிங் பெல் அடித்தது. பஞ்சுமாமி கதவைத் திறந்தாள். பிரியம்வதாவும் நாலைந்து தோழிகளும், ''மாமி, நமஸ்தே'' என்றார்கள்.

''அங்க்கிள், ரம்பா ஆரம்பம் பிரமாதமாக நடந்துவிட்டது. எல்லாம் நீங்கள் தந்த ஒத்துழைப்புத்தான். பாஸ்கர் போகும்போதுகூட உங்கள் நடிப்பை ரொம்பப் பாராட்டினார்.''

பஞ்சு பெருமையால் லேசாகக் கனவுலகில் பறந்துகொண்டிருந்தார்.

''ஸார் மிஸ்டர் பஞ்சு, உங்களுடைய ஐடியா எனக்குத் தெரிகிறது. கௌரவமானவர்கள் இந்தச் சினிமா உலகுக்கு வருவது பெருமைதான். அதற்கு ஓர் அந்தஸ்தும் கிடைக்கும். உங்களுடன் நாடகத்தில் நடித்த பெண்ணை எனக்கு ஞாபகம் இருக்கிறது. நானும் நினைத்தேன், ஏதாவது படத்தில் 'ட்ரை' பண்ணலாம் என்று. இப்போது நான் எடுக்கிற 'லட்சுமி கல்யாண'ப் புராணப் படம் முடிவடைகிற கட்டத்தில் இருக்கிறது.'' டைரக்டர் பாஸ்கர் தம் ஏர்-கண்டிஷன் அறையில் பஞ்சுவிடம் கூறிக்கொண்டிருக்கிறார்.

தமக்குச் சான்ஸ் கிடைக்குமா என்று போனார் பஞ்சு. டைரக்டரோ பிரியம்வதாவைப்பற்றிப் பேசினார்.

''பிரியம்வதா இருக்கட்டும், மிஸ்டர் பாஸ்கர்! அதாவது என்ன சொல்கிறேன் என்றால், உங்களுக்கு என் நடிப்பைப்பற்றி.. அதாவது.. தெரியும்.. என்ன சொல்ல வருகிறேன் என்றால்....''

''மிஸ்டர் பஞ்சு ஸார், எனக்குப் புரிந்துவிட்டது. என்னுடைய படத்தில் உங்களுக்கு ஒரு சின்ன வாய்ப்பாவது கிடைக்குமா என்று கேட்க முயலுகிறீர்கள்; இல்லையா?''

''ஹி ஹி!'' பஞ்சு ஹிளித்தார்!

''உங்களுக்கு என்ன வேஷம் கொடுக்க முடியும்? அடுத்த படத்தில் தரப் பார்க்கிறேனே.''

''நோ நோ. எந்த ரோலாக இருந்தாலும் நான் தயார், மிஸ்டர் பாஸ்கர்! கலை என்று வந்துவிட்டால் சின்னப் பாகமோ பெரிய வேடமோ எதற்கும் தயங்கக்கூடாது. இது என் கொள்கை. புராணப் படமாக இருந்தால் என்ன, ஏதாவது ஒரு ரிஷி, முனி, பணியாள் என்று ரோல் இருக்காதா? கொஞ்சம் தயவு செய்யுங்கள், என் நடிப்புக்காகக் கடிகாரமே பரிசாகக் கொடுத்தீர்களே.''

''இல்லை ஸார். இன்னும் ஒரு நாள் ஷூட்டிங்தான். கல்யாண சீன், இதில் உங்களை எப்படி உபயோகித்துக் கொள்ள முடியும்?''

''சொன்னால் தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள். கல்யாண சீன் தானே? ஏன், நான் கல்யாணப் புரோகிதராக வருகிறேன். எனக்கு எல்லா மந்திரங்களும் தலைகீழ்ப் பாடம்.''

''ஸார்..நீங்கள் போய்......''

''அதெல்லாம் ஒன்றும் தவறில்லை. நான்தான் புரோகிதர். நீங்கள் சரி என்றால்தான் விடுவேன்.''

''இல்லை.. ஸார்.. வந்து.. சரி.. புரோகிதர் ரோலில் நீங்கள் வரலாம். வருகிற புதன்கிழமை ஷூட்டிங். நேரே 'செட்'டிற்கு....''

பாஸ்கர் சொன்னது பஞ்சுவின் காதில் ஏறவில்லை. அவருடைய மனம் வானவெளியில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது.

பஞ்சு ஏதேதோ சம்ஸ்கிருத மந்திரங்களைப் பாடம் செய்துகொண்டிருந்தார். வாயில் வார்த்தைகள் நுழையவில்லை; மனத்திலும் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியவில்லை.

பஞ்சு மாமிக்கு, இப்படிப்பட்ட பாகத்தில் பஞ்சு நடிப்பது பிடிக்கவில்லை. நண்பர்கள் அவரைச் சக்கையாகக் கலாட்டா செய்தார்கள். பிரியம்வதாவிடம் அவர் சொல்லவில்லை, ஒரு 'சர்ப்ரைஸாக' இருக்கட்டுமே என்று!

''புரோகிதர் வேஷந்தானே? அதற்கு எதற்கு முந்நூறு ரூபாயில் ஸூட் தைத்தீர்கள் ?''

பஞ்சுமாமி கேட்டாள்.

''அடியே, உனக்கு ஒன்றும் தெரியாது. ஸ்டுடியோவுக்குப் போகும்போது ஜம்மென்று டிரஸ் போட்டுக்கொண்டால்தானே நம்மை நாலுபேர் மதிப்பார்கள்? இதெல்லாம் தேவையான செலவுதான்.''

''என்னவோ பெரிய ஹீரோ வேஷம் மாதிரி துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்காகப் பாரத் பட்டம் தயாராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைப்போ?''

''பெண்ணே, நீ பேதை; பேதையிலும் பேதை. என் திறமையை, கலைவன்மையை, நடிப்புத்திறனை அறியாத பெரும் பேதை; பரிதாபத்துக்குரிய பேதை!''

''நான் பேதையோ என்னவோ, நீங்கள் இப்படிப் பேசுவதைக் கேட்டால், உங்களுக்குப் போதை என்று நினைப்பார்கள்.''

பிரபல நட்சத்திரங்களுடன் செட்டில் பஞ்சு இருந்தார். விளக்குகள் போடப்பட்டன. வசனகர்த்தா என்ன மாதிரி வசனங்களைப் பேச வேண்டும் என்று விளக்கினார். பஞ்சு

வுக்கு வசனம் ஏதும் அதிகம் இல்லை. ஷூட்டிங்கே மொத்தம் அரைமணி தான் என்றார் டைரக்டர். பஞ்சுவுக்குத் தலைகால் புரியவில்லை. வேர்த்தது. ஏதோ இமயத்தின் உச்சிக்குச் சென்றதுபோல் ஒரு பரபரப்பு.

ஷூட்டிங் ஆரம்பித்தது. எல்லாம் சரியாக நடந்தன. பஞ்சுவும் தம் பாகத்தைத் திருப்திகரமாக (அவரைப் பொறுத்தவரையில்) செய்தார். லட்சுமியை மகாவிஷ்ணுவுக்குக் கல்யாணம் செய்து வைத்தார். டைரக்டர் பாஸ்கர் சபாஷ் போட்டார். மற்ற நட்சத்திரங்களுக்கு இவரைப் பிரமாதமாக அறிமுகப் படுத்தினார். இந்த அநுபவங்களைப் பஞ்சு தம் ஆயுட்காலம் வரையில் மறக்கமாட்டார். மற்றவர்களும் மறக்க முடியாதபடி பேசிப் பேசி அறுத்திருப்பார். ஆனால்....

இரண்டு மாதமாக வட இந்திய மாநிலங்களில் பஞ்சு 'டூர்' செய்து கொண்டிருந்தார். தீபாவளியன்று பங்களூர் வந்து இறங்கினார்.

'லட்சுமி கல்யாணம்' தீபாவளி வெளியீடு. ஆகவே பங்களூரில் எந்தத் தியேட்டரில் படம் நடக்கிறது என்று பார்த்து, கறுப்பில் டிக்கட் வாங்கிப் போய் உட்கார்ந்தார்.

படம் துவங்கியது. பஞ்சு, எப்போது கடைசிக் காட்சி வரும் என்று துடித்துக் கொண்டே பார்த்தார். இரண்டரை மணி நேரம் அவரை வாட்டி எடுத்துவிட்டு அந்தக் கடைசிக் காட்சி வந்தது.

லட்சுமி கல்யாணக் காட்சி.

ஐயோ! இதென்ன விபரீதம்! கல்யாண சீன்தான். அதே நடிகர்கள் தாம், சாமரம் வீசுபவர்கள் உட்பட!

ஆனால்? புரோகிதர் பஞ்சுவைக் காணோம்! கடிகாரப் பரிசு பெற்ற புகழ் பெற்ற நடிகர் பஞ்சுவைக் காணோம்! 'ரம்பா'வின் பொதுக் காரியதரிசி பஞ்சுவைக் காணவேயில்லை!

பஞ்சுவுக்குக் கண்கள், இதென்ன, கோபமா அழுகையா ஏமாற்றமா வருத்தமா என்று இனம் தெரியாத ஏதோ ஒன்று அல்லது இரண்டு அவர் மனத்தை அழுத்தின.

நிச்சயம் ஊரில் பஞ்சு மாமி படத்தைப் பார்த்து ஏமாந்திருப்பாள். பிரியம்வதாவுக்கு இந்த வால்கள் சொல்லியிருக்கும். அவளும் ஏமாற்றமடைந்திருப்பாள். இந்தப் பாஸ்கரை என்ன செய்வது ?

''ஸார், உங்களால் எனக்குக் கிட்டத்தட்ட ஆறாயிரம் ரூபாய் நஷ்டம். மறுபடியும் அந்தக் கல்யாண சீனை எடுக்க வேண்டி வந்தது. பெரிய ஆர்ட்டிஸ்ட்டுகளிடம் திரும்பவும் கால்ஷீட் வாங்கி அந்தக் காட்சியைத் திரும்ப எடுப்பதற்குள் எனக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.'' மூச்சு விடாமல் டைரக்டர் பாஸ்கர் பஞ்சுவிடம் படபடத்துக்கொண்டிருந்தார்.

''பின் என்ன, ஸார்? படத்தைப் பிரின்ட் போட்டு 'ரஷ்' போட்டுப் பார்த்தால், அதிர்ச்சி ஏற்பட்டது. நடுவில் ஓர் இடத்தில் நீங்கள் 'எல்லாம் ரெடியா?' என்று சொந்த வசனத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். நவீன கச தேவயானி மாதிரி, நவீன லட்சுமி கல்யாணம் படமா எடுக்கிறேன்? அல்லது அமெரிக்காவில் திரையிடுவதற்காக இங்கிலீஷில் படம் எடுக்கிறேனா?''

''அப்படியா? வெரி ஸாரி, பாஸ்கர் ஸார். ஒரு பழக்கத்தில் சொல்லி விட்டேன். அந்த இடத்தை வெட்டியிருக்கலாமே!''

''வசனத்தை வெட்டினால் சரியாகி விடும்தான். ஆனால் கையில் கடிகாரம் கட்டிக்கொண்டே சீனில் வந்திருக்கிறீர்களே. புராணப்படத்தில் கடிகாரம் வரலாமா? என் உதவியாளனும் கவனிக்கவில்லை. 'ரஷ்' போட்டுப் பார்த்தபோதுதான் தெரிந்தது.''

பஞ்சு உட்கார்ந்தபடிதான் இருந்தார். ஆனால் ஈரேழு பதினாலு உலகமும் தரதரவென்று அவர் கண்முன் சுழன்றன. கையில் கட்டியிருந்த பரிசுக் கடிகாரமும் அவரைப் பார்த்துப் பரிதாபப்பட்டது! ★

உடைந்த சட்டியில் உல்லாசம்

அழகுத் தலைப்பாகையில் அழுகை!

போட்டோ: ஆர். பி. எஸ். மணி

TO MAKE YOUR
HEARTS AND HOMES BRIGHT AND LIGHT

STEAM GENERATORS FOR POWER AND INDUSTRIES

BHEL

BHARAT HEAVY ELECTRICALS LIMITED
(A Government of India Undertaking)
Unit: High Pressure Boiler Plant Tiruchirapalli 14
Regd. Office: 5, Parliament Street, New Delhi-1

BHEL/CPO/08/72-73

விண்வெளியில்
கோலாகலத்
திருவிழா!
ஏர்-இந்தியா விண்வெளியில் கோலா
கலத் திருவிழாவைக கொண்டாடுகிறது.
இரவும், பகலும், வருடம் 365
நாட்களும், ஐந்து கண்டங்களின்
வானவீதிகளில் ஏர்-இந்தியா
விமானங்கள் ஜகஜ்ஜோதியாக வலம்
வருகின்றன.
ஏர்-இந்தியா

எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள் !!

இவ்வருஷ தீபாவளிக்கு எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அளித்த பேராதரவிற்கு எங்களது மனமார்ந்த நன்றி. மேலும் தொடர்ந்து சேவைசெய்ய வாய்ப்பளிக்க வேண்டுகிறோம்.

நல்லி சின்னசாமி செட்டி

தி. நகர் பனகல் பார்க் மதராஸ்-17

போன்: 444115 & 445657

வண்ண வண்ணச் சேலைகள்

''அணியெல்லாம் ஆடையின்பின்'' என்பது பழமொழி. பெண்ணினம் இயல்பாகவே அழகானது. அந்த அழகுக்கு அழகு செய்பவை வண்ண வண்ணச் சேலைகள். பட்டுச் சேலைகளில்தான் எத்தனை வகை! கரை, தலைப்பு, உடல் என்ற மூன்று பகுதிகளிலும் வெவ்வேறு வேலைப்பாடுகளைச் செய்து நெசவுக் கலைஞர்கள் பட்டாடைகளை உற்பத்தி செய்கிறார்கள்.

சலவை செய்த நூலை வெவ்வேறு சாயத்தில் தோய்த்து வண்ணப்பட்டு நூலாக்குகிறார்கள். இப்போது எத்தனையோ வகையான சாயங்கள் வந்திருக்கின்றன. உறுதியான சாயங்களில் தோய்த்து உலர்த்துவார்கள். அந்த நூலைக் கண்டை என்ற கருவியில் சுற்றுவார்கள். அதற்குத் தாறு என்று பெயரும் உண்டு. இதோ இந்தப் பெண் இராட்டையிலிருந்து சுற்றுகிறாள். பெண்கள் பொறுமையாக எதையும் செய்வார்கள் அல்லவா? நூலை ஒழுங்காகக் கவனத்துடன் இந்தப் பெண்மணி சுற்றிக் கொண்டிருக்கிறாள். இதை இழைப்பது என்பார்கள். நூல் மெல்லிழை; அவளும் மெல்லியல். மெல்லிழையாக இருந்தாலும் உறுதியானது. மற்ற நூல்களைப் போல எளிதில் அற்றுவிடாது. இயற்கையில் இப்படி ஒரு நூல் அமைந்திருப்பது ஆச்சரியம் அல்லவா?

பட்டுப் பூச்சி தன் கூட்டைப் பட்டு நூலால் கட்டுகிறது. அந்தக் கூடுகளைக் கொண்டுவந்து பூச்சிகளைக் கொன்றுவிட்டு நூலைப் பிரித்து எடுக்கிறார்கள். பட்டுப் பூச்சி நூற்கும் நூல் உறுதியானது. அதில் அழுக்கு எளிதில் ஒட்டாது. வழுவழுப்பாக இருக்கும். அதனால்தான் பட்டு ஆடையை நனைக்காமல் வெகு நாள் வைத்திருக்க முடிகிறது. இழையும் மிக மெல்லியதாக இருக்கும். இயற்கையான பட்டு நூலில் ஒரு வகையான பிசின் இருக்கும். அதனால் நூலின் நிறம் மங்கலாக இருக்கும். அதைச் சலவை பண்ணினால் பளபளப்பாகிவிடும். சலவை பண்ணின நூலைச் சாயத்தில் தோய்க்கிறார்கள்.

இதோ இவர் நூலைத் தாப்பாக்கட்டையிலிருந்து பரிவட்டத்தில் சுற்றுகிறார். இவர் வலக்கையில் வைத்திருப்பது பரிவட்டம். இதை வேகமாகவும் ஒழுங்காகவும் சுற்றுவதற்குத் தனித் திறமை வேண்டும். சிடுக்கு இல்லாமல் ஒழுங்காகச் சுற்றிய பரிவட்டத்திலிருந்துதான் கண்டை சுற்ற வேண்டும். பட்டு நூலுக்கு மின்சக்தி இருக்கிறதென்று சொல்வார்கள். பட்டுத் தொழில் முதல்முதலில் சீனாவில் தோன்றியதாம். பட்டு இழைகளினால் ஆடைகளை முதலில் நெய்தவர்கள் சீனர்கள். ஆனாலும் இந்தியாவில் அதற்கு உள்ள மதிப்பு அதிகம். இங்கே அதைப் புனிதமாகக் கருதுகிறார்கள். பூஜை செய்யவும், ஜபம் செய்யவும் பட்டைப் பயன்படுத்துகிறார்கள். அதிகமாகப் பட்டை உற்பத்தி செய்யும் நாடு ஜப்பான். பட்டை அதிகமாகப் பயன்படுத்துகிறவர்கள் அமெரிக்கர்கள். அவர்கள் செல்வச் செழிப்புள்ளவர்கள். பழங்காலத்தில் நம் நாட்டிலும் வளம் இருந்ததனால் பட்டும் பட்டாவளிகளும் மக்களை அழகு செய்தன. தயாரான பட்டு நூலைத் தறியில் நெய்வதற்கு ஏற்றபடி பாவு அமைக்க வேண்டும். நீளமாக இருக்கும் நூல் பரப்புக்குப் பாவு என்று பெயர். குறுக்கே குழல் அல்லது நாடாவால் செலுத்தும் நூலுக்கு ஊடையென்று பெயர்.

''ஊடும் பாவும்போல'' என்று பழமொழி வழங்குகிறது. தறி நெய்யும்போது, நாடா குறுக்கே போய் வரும்போது டக், டக் என்ற ஒலி எழும்பும். தறியில் விளையும் சங்கீதத்துக்கு ஏற்ற லயமாக அந்த ஒலி அமையும். நாடாவுக்குள் நூல் சுற்றிய சிறு கண்டுகளை இணைத்திருப்பார்கள். நாடா ஓடும்போது அதிலுள்ள நூல் அதிலிருந்து பிரிந்து ஊடையாகக் குறுக்கே அமைந்து சேலையை உருவாக்குவதற்குத் துணை செய்யும். முதலில் பாவைத் தயார் செய்துகொள்கிறார்கள். பாவைச் செப்பம் செய்வதை அனுக்கட்டுவது என்பார்கள். இந்த ஆடவரும் பெண்மணியும் அனுக்கட்டுகிறார்கள். அந்த முண்டாசு ஆசாமி சட்டங்களைச் சரிப்படுத்துகிறார். கீழே இரண்டு மூன்று பேர் சேர்ந்து பாவைச் சீராக ஒழுங்குபடுத்துகிறார்கள்: இப்படிச் செய்யாவிட்டால் சேலையின் உடல் சரியாக அமையாது.







இப்போது தறியில் இழையைப் பிணைக்கிறார்கள். இதோ இரண்டு பேர்கள் இழையைக் கொடுத்து வாங்குகிறார்கள். கீழே மூன்று பேர் இழைகளைச் சரிவரப் பிணைக்கிறார்கள். நூல் அறுந்து போனால் சிறிது வாயில் விரலை வைத்து அதை நெருடிப் பிணைப்பார்கள். ''நாவில் இழை நக்கி நூல் நெருடும் ஏழை'' என்று நெசவு வேலை செய்த திருவள்ளுவர் சொல்லிக்கொண்டதாக ஒரு பழம் பாட்டு இருக்கிறது அல்லவா?



இதுதான் தறி; இதை மக்கம் என்றும் சொல்வார்கள். நாடா அலலது குழலில் உள்ள நூலைப் பாவின் நூல்களிடையே ஓட்டுகிறார்கள். ஒரு கயிற்றைப் பிடித்து இழுத்தால் அந்த நாடா ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் ஓடும். ஊடை இழை ஒன்று குறுக்கே ஓடியிருக்கும். தறியை அடித்துப் பாவும் ஊடையும் இணையும்படி செய்கிறார்கள். நாடாவிலும் வெவ்வேறு வண்ணம் உள்ள நூல்கள் இருக்கும. எந்த எந்த இடத்தில் எந்த நிறம் வேண்டுமோ அதற்கு ஏற்றபடி நூலை ஊடையாக ஓட்டுவார்கள். பாவின் வண்ணமும் ஊடையின் வண்ணமும் ஒன்றாகவும் இருக்கும்; வெவ்வேறாகவும் இருக்கும். கரை, தலைப்பு இவற்றை மிகவும் ஜாக்கிரதையாக நெய்வார்கள். புடைவையின் உடலில் நடுநடுவே நட்சத்திரத்தைப் போலவும் பூக்களைப் போலவும் அமைப்பது மிகவும் சிரமமான காரியம். அந்த அந்த இடத்தில் சரிகை நூல் அமையும்படி செய்ய வேண்டும். தொழில் திறமையும் கலைத் திறமையும் ஒருங்கே இணைந்த படைப்பு இது. தமிழ் நாட்டில் நெய்த பட்டுப் புடைவைகள் இப்போது உலகப் புகழ் பெற்றுவிட்டன; அமெரிக்க மங்கையர் திருமேனியை அழகு செய்கின்றன; ஆங்கிலப் பெண்மணிகள் அவற்றை அணிந்து மினுக்குகின்றனர்.

பாவைச் சரியாக அமைக்காவிட்டால் சிக்கல் வந்துவிடும். ஒரு நூலோடு மற்றொரு நூல் இணைந்து சிக்குப்படாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் சேலையின் உடல் சரியாக அமையும். இந்தப் பாவை அமைப்பதற்குத்தான் அதிகமாகப் பாடுபட வேண்டியிருக்கும். சரியாகச் செப்பஞ் செய்த பாவில் இப்போது பசை போடுகிறார்கள் பருத்தி நூலுக்குப் பசை போடுவார்கள்.

இந்தப் பாவு அமைக்கும் இடத்தில் கல் தூண்களையோ கம்பங்களையோ நட்டிருப்பதைக் காணலாம். இங்கே நான்கு பேர் பாவில் பசை போடுகிறார்கள். சிப்புப்போல இருக்கும் பில்லு என்னும் நீளமான கருவிகளைக் கொண்டு இரண்டு இரண்டு பேர் நூலிழைகளைச் சிராக்குகிறார்கள். இழைகள் ஒன்றோடு ஒன்று பிணையாமல் பின்னாமல் தனித்தனியே இருக்கும்படி செய்வதற்காகவும் பசை போடுவதற்காகவும் இந்தக் கருவியை இழுத்து வருகிறார்கள். இப்படியெல்லாம் செப்பஞ் செய்தால்தான் தறியில் நெசவு யாதொரு சிக்கலும் இல்லாமல் நடக்கும். எளிதிலே சேலையை உடுத்து அழகு பார்க்கிறோம். ஆனால் அது உருவாவதற்கு எத்தனை பேர் எத்தனை வகையில் உழைக்கிறார்கள்! கைத்தறியினால் நெய்யும் பட்டுச் சேலையில் எத்தனை விதமான கலைத்திறமையைக் காட்டுகிறார்கள்! பாவுதல் என்றால் பரப்புதல் என்று பொருள். நீளமாகப் பரப்பிக் கட்டி அமைத்த பாவில் நூற்றுக் கணக்கான இழைகள் இருக்கும். சேலையின் உடலில் எந்த எந்தப் பாகம் எந்த எந்த நிறத்தில் அமைய வேண்டுமோ அதற்கு ஏற்றபடி வண்ண நூல்கள் பாவில் இருக்கும்.

பட்டுப் புடைவைகள் மகளிர் மேனிக்கு அழகு செய்கின்றன வென்றால், இளங் குமரிகளுக்கு ஏற்றபடி கைத்தறிச் சேலைகளும் மில் ஆடைகளும் பலவகையான பூத் தொழில்களுடன் கண்ணுக்குக் குளிர்ச்சியான வண்ணங்களையும் உடையனவாக ஒளிர்கின்றன. தமிழ் நாட்டுக் கைத்தறிச் சேலைகள் கடல் கடந்து சென்று இந்தியாவுக்கு அயல் நாட்டு நாணயத்தை வாங்கித் தருகின்றன. வண்ண மாட்சியிலும் சித்திரச் சிறப்பிலும் கரையின் கவினிலும் மிகமிக எடுப்பானவை அவை. நெடுநாள் உழைப்பன. நாளுக்கு நாள் புதுப்புது மோஸ்தரில் வருகின்றன.

நம்முடைய நாட்டில் உள்ள ஆலைகள் வெவ்வேறு வகையான ஆடைகளை உற்பத்தி செய்கின்றன. ஜார்ஜெட், புரோகேட், பொச்சாம்பள்ளி, கிரேப் முதலிய பலவகைகள் உண்டு. இதோ இந்தக் கட்டிளங்குமரி வாயில் சேலையை அணிந்து மகிழ்கிறாள். அவள் மேனியழகுக்கு மெருகூட்டுகிறது இந்த அழகிய சேலை. நீலவானமே அவளைச் சூழ்ந்து அணி செய்கின்றதோ!







சேலையின் உடலில் உள்ள பூ வேலைகளைப் புட்டாக்கள் என்பார்கள். இந்தப் பூ வேலைகள் கண்ணைப் பறிக்கின்றன. பழங்காலத்தில் பூந்துகில் என்று பாராட்டிப் பேசும் ஆடை வகைகளை இவை நினைப்பூட்டுகின்றன. அவற்றில்தான் எத்தனை எத்தனை வகையான சித்திர விசித்திரங்கள்! மாங்காய் வடிவம் ஒருபுறம்; செடியின் வடிவம் மற்றொருபுறம்; தூவி இறைத்த மலர்கள் ஒருபுறம்; வளைந்த கொடியும் நிமிர்ந்த செடியும் ஒருபுறம்; அணிந்துகொள்ளாமல் பார்க்கும்போதே கண்ணைப் பறிக்கின்றன.
அணிந்துகொண்டாலோ!

சேலைகளை உடுத்தும் பாங்கிலிருந்து, 'இந்த மங்கை நல்லாள் இன்னது செய்யப் போகிறாள்' என்று சொல்லிவிடலாம். சேலையை உடுத்துக்கொண்டிருக்கும் பாணியிலிருந்து அவர்களின் வகுப்பைத் தெரிந்துகொள்ளலாம்.

போட்டோ: பி. வி. சுப்பிரமணியம் (ப. 2, 3, 4, 5), உத்ரா (ப. 1, 6, 7, 8).
உபயம்: (6-ஆம் பக்கத்தில் உள்ள தறி: பி அண்ட் ஸி மில்ஸ்)
ஆடை அணிந்திருப்பவர்கள்: குமாரி லதா வேங்கடராமன் (ப. 1, 8), குமாரி அமலா பிரியதரிசினி (ப. 6, 8), குமாரி நளினி மணி (ப. 8)



திருமணப் பெண் தன் கோலத்துக்கு ஏற்றபடி அழகிய சேலையைப் புனைந்துகொள்கிறாள். பல பேரைச் சந்தித்து அளவளாவும் சமுதாய விழாவிற்கென்று சில வகையான ஆடையலங்காரங்கள் இருக்கின்றன. விசேஷ நாட்களில் அணிந்துகொள்வதற்கென்று கவர்ச்சியான சேலை வகைகள் இருக்கின்றன. இது வரையில் எத்தனையோ வந்திருக்கின்றன. இனியும் வந்துகொண்டே யிருக்கின்றன. ஆற்றுமணலை எண்ணினாலும் எண்ணலாம்; அழகிகளின் சேலை வகையை எண்ண முடியாது.





அழகிய மங்கையைக் கண்ட கலைஞன் அவளுக்கு அழகிய வண்ண ஆடை புனைந்து அழகு பார்க்க எண்ணினான். அவளுடைய மோகன எழிலுக்கும் மென்மையான இயல்புக்கும் மேனியின் வழுவழுப்புக்கும் வடிவக் கவர்ச்சிக்கும் ஏற்றபடி பட்டையும் துகிலையும் வடித்தான். அழகு மங்கை ஆடை புனைந்து அசையும்போது, அழகுக் கடல் அலை வீசுவதைப் போல இருக்கிறது. ஆம், அந்த அலைதான் அவள் புனைந்த பூந்துகில்!

காதினிலே
மொழிந்திடுவீர்
காலி-ஸிந்த்
கணமதிலே
மலர்ந்திடும்
100% போலியெஸ்டர்
இரகசியம் பேசுவது போன்று மிருதுவானது, காலி-ஸிந்த
இளந்தென்றல் போன்று இலேசானது, காலி-ஸிந்த்
எல்லா காலி-தளாத கடைகளிலும், மற்ற பிரபல துணிக் கடைகளிலும் கிடைக்கிறது.

எங்கள் தீபாவளி நல் வாழ்த்துக்கள்

அரசு சிமெண்ட்

நீடித்த உழைப்பிற்கும், தரமான கட்டுமானத்திற்கும்,
சிக்கனத்திற்கும் சிறந்தது.

அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

தொழிற்சாலை: தமிழ் நாடு சிமெண்ட்ஸ்
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

TIDCO
தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்
(தமிழ் நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A அண்ணாசாலை, சென்னை-2.

ஜோதிப்பூ

கல்பனா

இச்சிப்புடி முழுக்க அந்தச் சந்தியா வேளையில் விதிர்விதிர்த்துப் போய்விட்டது—பையன் செல்லப்பா பண்ணின ஆர்ப்பாட்டத்தில்.

காலையில் அத்தனை 'ஷோக்காக' டிரஸ் பண்ணிக்கொண்டு, 'தம்மாரே'யைச் சீட்டியடித்துக்கொண்டு, கிருதாவும் மீசையுமாய், 'டைட்'டில் குஷியாக ஆபீஸ் போன பயலா, இப்படித் தலைகால் தெரியாமல் குதிக்கிறான் என்றே எல்லாருக்கும் சந்தேகமாகிவிட்டது.

அப்போது அநேகமாகக் கையெழுத்து மறைந்துவிட்டது. ஈசுவரன் கோயிலில் சின்ன நாயனமும், சேகண்டியும் பலியுடன் பிராகார தேவதைகளைத் தேடிப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயம்.

பையனோ குதியாய்க் குதிக்கிறான்; ஆஞ்சனேயராய் எகிறுகிறான்.

''என்னை விடுங்கோ! என்னை விடுங்கோ!'' என்று திமிறுகிறான். ''நான் இனிமே மனுஷன் இல்லே; மிருகம்; அடிபட்ட மிருகம். பழி வாங்கத் துடிக்கிற மிருகம்; பழி வாங்காட்டா என் உடம்பு அடங்காது'' என்று எகிறுகிறான். ''விடறேளா, இல்லை, உங்களை எல்லாமே ஹதம் பண்ணிட்டுப் போயிடட்டுமா?'' என்று கர்ஜிக்கிறான்.

கண் இரண்டும் கோவைப் பழமாய்ச் சிவந்து கிடந்தன. உடம்பில் முறுக்கேறாத நரம்பு பாக்கியில்லை. ஆள் ஏற்கனவே வாட்ட சாட்டம். ஆறடி! நாலடி இரும்புக் கம்பியை மார்பிலேயும் சுவரிலேயுமாக வைத்துக்கொண்டு ஒரு 'ஹம்'மில் வளைத்து வளைத்துத் திடமேறிப் போன உடம்பு.

அவனை அவர்களால் அடக்கிப் பிடித்துக்கொள்ளவே முடியவில்லை. ஏழெட்டுப் பேர் 'எனக்கோ, உனக்கோ' என்கிற கதையாகத்தான் பிடித்துக் கொண்டு மல்லுக்கு நின்றார்கள்; புத்தி சொன்னார்கள்.

''வேண்டாண்டா! சொன்னாக் கேளடா. கோபம் சண்டாளம்டா. காலைக் கடிச்ச செருப்பைக் கழற்றி எறிஞ்சுட்டுப் பேசாமெப் போகிறது தாண்டா விவேகம்'' என்றார்கள். கஷ்டப்பட்டுக் கையிலிருந்த கொடுவாளைப் பறித்தார்கள்.

''செருப்பா? செருப்பா அது?'' என்று ஆத்திரமாகக் கூவினான் செல்லப்பா. ''அந்தச் செருப்பாலேயே மூஞ்சி, மூக்கு, கண் பாராமல் செம்மையா அடிச்சு, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, கழுதை மேலே ஏத்தி, துணியை உருவிண்டு விரட்ட வேண்டிய நரின்னு—அது பொட்டை நரின்னு—''

வாசலில் கூடி நின்ற கூட்டத்திலிருந்து ஒரு 'கெக்கலி' கிளம்பி வந்தது. 'ஹெஹ் ஹே! அது உனக்குத் தெரிய இத்தனை நாளாச்சா? எங்களுக்கு அப்பவே தெரியுமே, அது?' என்கிறமாதிரி சிரித்தது அது.

''யாரடா சிரிச்சது இப்போ?'' என்று உறுமிக்கொண்டு கோபமாகத் திரும்பினான் செல்லப்பா.

இருட்டில் முகம் தெரியவில்லை. முன் வரிசையில் நின்றவர்களின் முகங்கள் சலனமற்று நின்றன.

''யாரடா சிரிச்சது இப்போ என்று கேட்கிறேன்; காதிலே விழவில்லை? ஆண்பிள்ளையானால் முன்னால் வந்து மூஞ்சியைக் காட்டடா! உனக்குப் பாடம் கற்பிச்சுட்டு அப்பறம் அந்த நாய்க்குப் பாடம் கற்பிக்கப் போகிறேன்.''

இதற்கும் பதிலில்லை. ஹரிகேன் வெளிச்சத்தில் எல்லா முகங்களும் பதுமைகளாகவே நின்றன.

''ஹூம். வரமாட்டே?'' என்று உறுமினான் செல்லப்பா.

''விடுங்கடா, என்னை'' என்று ஓர் ஆஞ்சனேய அதட்டல் போட்டுக் கொண்டே 'தம்' பிடித்து, தன்னைப் பிடித்திருந்தவர்களைப் புளியம்பழம் உதிர்ப்பது போல உதிர்த்துவிட்டு, விருட்டென்று பாய்ந்து பக்கத்துப் பந்தற்காலை அநாயாசமாகப் பற்றிக் கொண்டு வாசலில் குதித்தான். 'எங்கே என் இரை?' என்கிறமாதிரி கூட்டத்தை இங்குமங்கும் பார்த்தான்.

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிற்று. முகமெல்லாம் ஆறாக வேர்வை. கண்களிலோ கோவைப்பழங்கள் எல்லாம் செஞ்சுடராகவே மாறிவிட்டன.

''நான் ஏமாந்துட்டு வந்து நிக்கறவன்தாண்டா! ஒரு பொட்டைச்சிகிட்டே மூக்கறுந்துட்டு வந்தவன் தாண்டா. ஆனால் நொந்து கிடக்கிற என் மேலே அக்கினி அஸ்திரமா ஒரு கெக்கலியை வீசிப்புட்டு, பேடிமாதிரி மறைஞ்சு நிக்கற பயல் யாரு? தெரியணும் இப்ப எனக்கு!—உம்!''

இதற்கும் பதிலில்லை. ஆனால் அரை விநாடி அமைதிக்குப் பிறகு, இடப்புறமிருந்து, 'நான்தாண்டா அது' என்கிற மாதிரி, முன்னைவிட அழுத்தமாகவும் அலட்சியமாகவும் அதே குரலில், இன்னொரு கெக்கலிச் சிரிப்பு, புறப்பட்டு வந்து கணீரென்று ஒலித்து, எல்லாரையுமே திடுக்கிடச் செய்துவிட்டது.

''ஆங்!'' என்று வெகுண்டு திரும்பின செல்லப்பாவின் முகத்திலேகூடத் திகைப்பு.

பூனைமாதிரி நின்ற இரண்டு பேர் சட்டென்று விலக, அங்கே கழியை ஊன்றிக்கொண்டு, கண்களை இடுக்கியபடி, தாடை மார்பு எல்லாம் நரை நுரைத்துப் படர்ந்து கிடக்க, நிலை கொள்ளாமல் ஆடும் வயோதிகத் தலையை ஒரு 'ரிதத்'தோடு ஆட்டிக் கொண்டு, ராஜப்பா தாத்தா நின்றார்.

பிரபஞ்சமே நின்றுவிட்ட மாதிரி இருந்தது, ஒரு நிமிஷம்.

அந்த ஒரு நிமிஷமும், தாத்தா அங்கேயே நின்று தம் வெள்ளெழுத்துக் கண்ணாடி வழியாகப் பையனை விழித்து பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு தம் இரும்புப் பூண் போட்ட தடியை ஒரு 'ஹம்'முடன் தரையில் 'டங்' என்று அழுத்தமாக ஒரு தட்டுத் தட்டினார். கையில் பந்தற்காலுடன் இரைக்க இரைக்க நின்ற பையனுடைய உடம்பு அந்தச் சத்தத்தில் நடுங்கிற்று.

''நீங்களா—நீங்களா—நீங்களா?''

ராஜப்பா தாத்தா 'டங், டங்' என்று தடியை ஓசைப்படுத்திக் கொண்டே பையனை நோக்கிப் போனார். கிட்ட வந்ததும், நின்று நிதானமாகக் குனிந்து பையன் முகத்தை உற்றுப் பார்த்தார். பிறகு, தம் வலக் கையை ஓங்கிப் பையன் கன்னத்தில் ஓர் அறை அறைந்து, ''சீ கழுதை! கீழே போடு கட்டையை'' என்று அதட்டினார்.

அடேயப்பா! எப்பேர்ப்பட்ட அடி அது? வாழ்நாள் முழுவதும் அவர் காத்த பிரம்மசரியத்தின் அத்தனை திடமும் அந்த அறையில் எதிரொலித்தது.

செல்லப்பா கிடுகிடுத்துப் போய் விட்டான். கட்டை தன்னை அறியாமலே நழுவித் தரையில் விழுந்தது. அது மட்டுமல்ல; அடுத்த கணம், ''தாத்தா!'' என்று பெரிதாகக் கதறிவிட்டு அவனே ராஜப்பா காலடியில் விழுந்துவிட்டான்.

''தூக்கி உட்கார்த்துங்கோ இவனை!''

சடசடவென்று வந்து தூக்கி உட்கார்த்தினர்கள்.

''ஜலம் இருக்கா? குளிர்ந்த ஜலம்! கொண்டாங்கோ சட்டுனு.''

அடுத்த நிமிஷமே தண்ணீரும் வந்துவிட்டது. மடமடவென்று அதை வலக் கையில் ஊற்றிக்கொண்டு, 'சளக் சளக்'கென்று, ராஜப்பா பையன் முகத்தில் அடித்தார்.

''கொண்டுபோய்த் திண்ணையில் சாய்வா உட்கார்த்துங்கோ.''

நாலு பேர் அப்படியே செய்தார்கள்.

தாத்தா திரும்பிக் கூட்டத்தைப் பார்த்தார். எதிரே நின்ற என்னைத் தெரிந்துகொண்டு, ''ஏலே, மஞ்சக் குடியாடா?'' என்றார்.

''ஆமாம், மாமா'' என்று அருகில் போனேன்.

''இப்போ என்னடா நேரம்?'' என்று கணீரென்று கேட்டார்.

''கோயில்லே சாயரட்சை நடந்துண்டிருக்கு மாமா!''

''இந்த நேரத்திலே ஈசுவரன் சந்நிதானத்திலே போய் மனசை அவன் மேலே குவிச்சுண்டு நிக்காமல், இவாள்ளாம் எதுக்காகடா வெட்டிப் பனையாட்டம் இங்கே நிக்கறு?''

அப்புறம் யாருக்கு அங்கே நிற்கத் தைரியம்? சட்டென்று கூட்டம் இருளில் நழுவி, அரை நிமிஷத்தில் கரைந்துவிட்டது. ராஜப்பாவிடம் அத்தனை பயம்; மரியாதை.

எல்லாரும் போனதும், ''ஏலே மஞ்சக்குடி, வாடா என் பின்னாலே'' என்று உத்தரவிட்டுவிட்டு ராஜப்பா திண்ணையை நோக்கிப் போனார். அரையிருட்டில் மங்கிக் கிடந்தது செல்லப்பா வீட்டுத் திண்ணை. பெரிய திண்ணையில் ராஜப்பா உட்கார்ந்து கொண்டார். சின்னத் திண்ணையில், கேவிக்கொண்டு, நிலைகுலைந்து சுவரில் சாய்ந்திருக்கிற பையனைச் சற்று நேரம் பார்த்தார்.

பிறகு, பையனைக் கொண்டு வந்து உட்கார்த்தினவர்களைப் பார்த்து, ''நீங்களும் போகலாம்'' என்றார். ''சரி, மாமா'' என்று போனார்கள்.

திண்ணையில் பையனுடைய கேவலைத் தவிரப் பரம அமைதி நிலவிற்று.

''ரங்கநாதா, உன் பையன் யாருக்காக இப்போ அழறான்னு கேளடா?'' என்று கேட்ட ராஜப்பா, தம் தடியைக் 'கேளடா' என்கிறபோது தரையில் 'டங்' என்று ஒரு குத்துக் குத்தினார். அந்தக் குத்தில் அதிர்ந்து போய்விட்டான் செல்லப்பா.

''அந்த நீலி என்னை ஏமாற்றி மோசம் பண்ணிட்டா, மாமா!'' என்று கதறினான்.

''யாருடா? வெங்காயச் சருகுச்சேலை கட்டிண்டு, அரைச்சாண் ரவிக்கையுடன், எதிரே வருகிற ஆண்பிள்ளைக்கெல்லாம் இடக் கையைத் தூக்கி ஆபாச நாட்டியமாடிக் காட்டிண்டு, உன்கூட ஒரொரு லீவுக்கும் வந்து ஊரிலே விஷத்தைப் பரப்பி, எல்லாரையும் பயித்தியமா அடிச்சுதே ஒண்ணு? அதுவாடா?''

ஒவ்வொரு வார்த்தையும் ஒரு குண்டு; அனல்குண்டு.

''பித்தளையாச் சிரிச்சு, 'நான் தங்கமில்லே; தங்கமில்லே'ன்னு ஒரொரு நிமிஷமும் தனக்குத் தானே சாட்சி சொல்லிண்டுதே, அதுவாடா?''

இது அனல்குண்டுக்கும் மேலே.

''அட பைத்தியமே! அந்தக் கழுதை கைவிட்டுப் போயிடுத்தேன்னு இந்தப் பொட்டை அழுகை? ....ஹ்ஹ்ஹா....!''

என்ன சிரிப்பு இது? பிரபஞ்சத்தையே கொல்லைக் கிணற்றில் சகடையாகப் போட்டுக் கடைகிற மாதிரி!

அந்தச் சிரிப்பும் பாதியிலே 'சட்'டென்று அறுந்தது. ராஜப்பா உள்ளே திரும்பி, ''யார் உள்ளே? ஆண்டாளு? ஆண்டாளு இல்லை?'' என்று இரைந்தார்.

''இதோ இருக்கேனே, மாமா?'' என்று தலைப்பை இழுத்து விட்டுக் கொண்டு செல்லப்பாவின் அம்மா வந்து கதவோரம் நின்றாள்.

''போர்ன்விடா, ஹார்லிக்ஸ் - எது இருக்கு ஆத்திலே?''

''ஹார்லிக்ஸ் இருக்கு, மாமா!''

''சட்னு ஒரு டம்ளர் கரைச்சுண்டு வந்து உன் பிள்ளைட்டே குடு.''

''இதோ கொண்டு வரேன், மாமா.''

ஆண்டாளு தலை மறைந்ததும், ராஜப்பா திரும்பிச் சொன்னார் கணீரென்று: ''கண்ணைத் துடைச்சுண்டு, ஆண்பிள்ளையா லட்சணமா நிமிர்ந்து உட்காருடா முண்டம்! என்ன குடிமுழுகிப் போச்சு இப்போ?'' 'டங்' என்று கூடவே தரையில் தடியால் ஒரு தட்டல், அந்த 'இப்போ'வின்போது.

''மாணிக்கம் தவறிப் போச்சுன்னு கண்ணீர் சிந்தலாம். மந்தி கைவிட்டுப் போனதுக்காகக் கண்ணீரைச் செலவிடலாமோ? கண்ணீரைப் பெறுவதற்கும் ஒருத்தருக்குத் தகுதி வேண்டுமடா. என்ன தகுதி தெரியுமா? கர்ப்பூரத் தகுதி. கர்ப்பூரம் சத்தியத்தை அங்கம் அங்கமாகக் காட்டி நம்மைச் சேவிக்கப் பண்ணும். அதைக் கையொற்றிக் கண்ணிலே அணைச்சுக்கத் தோணும். ஆனா முடி

யாது: மேலாகக் கையைக் காட்டி வளைச்சுட்டு வெறுமனே திரும்பிடத் தான் முடியும். அந்தக் கர்ப்பூரம் மாதிரி அடங்கி எரிஞ்சு, அன்பை அங்கம் அங்கமாகக் காட்டுகிற மனுஷாள் இருந்து அவாளை நாம் இழக்கும்படி நேர்ந்தால் அவாளுக்காக அழலாம். ஒரு நாள் இல்லே; இரண்டு நாள் இல்லே; ஆயுள் முழுக்கக் கண்ணீர் சிந்தலாம். அப்பேர்ப்பட்ட ஜாதிப் பூவை அடைய நமக்குக் குடுத்து வைக்கலேயேன்னு மருகலாம். மஞ்சக் குடி, டேய்! உனக்கு ஞாபகம் இருக்காடா, நாற்பது வருஷத்துக்கு முந்தி, அப்படி ஒரு ஜாதிப்பூவுக்காகக் கண்ணீர் விட்டுண்டு, அழுது புலம்பிண்டு, நான் திரும்பி வந்தது?''

அவர் குரலின் கம்பீரம் எங்கே போய்விட்டது? ஏன் இப்படிப் பச்சைக் குழந்தையாய்த் தழுதழுக்கிறது? நாற்பது வருஷமாக மனத்துக்குள் கெட்டியாகிப் போன ஒரு கர்ப்பூரந்தான் இளக ஆரம்பித்துவிட்டதோ? ஓ! கண்ணிலிருந்து மாலே மாலேயாய் வழியக்கூட வழிகிறதே!

''அப்போ உன்னைப் போல எனக்கும் வாலிபம்டா, செல்லப்பா. உன்னைவிட ஜோரா, சிவப்பா, கட்டு மஸ்தா இருப்பேன்டா. உன்னைவிடச் சீர்திருத்தக் கருத்து இருந்துடா எங்களுக்கும். வர்தாவிலே இருந்தாரே கிழவர், அவர் ஏத்தி

வைச்ச தீபங்களிலே ஒருத்தனு நானும் இருந்தேண்டா.

''அப்போ எல்லாம் பத்திலேயும் பன்னெண்டுலேயும் நம்ப பெண்டுகளுக்குக் கல்யாணம் ஆயிடும். அதிலே பாதி ஒண்ணு ரெண்டு வருஷத்திலேயே பூவையும் பொட்டையும் இழந்துட்டு வந்து மருகிண்டு நிக்கும். உள்ளூற எரிகிற கர்ப்பூரமா ஆயுசு முழுக்க நிக்கும். அதுங்களை எல்லாம் திரும்ப வாழ வைக்கிறதுதான் இளைஞர்களுடைய முதல் வேலைன்னு எங்க தெய்வம் காந்தி எங்களுக்குக் கட்டளையிட்டுதுடா.

''அந்தக் கட்டளையைச் சிரமேற்கொண்டு, நீ எப்படி ஒரு ரெண்டுங்கெட்டான் கிறிஸ்துவச்சியைப் பண்ணிக்கொண்டு பெரிசாகப் புரட்சி செய்யப் போறதா முழங்கினயோ, அதே மாதிரி எங்க ருக்குவுக்கு விமோசனம் அளிக்க நான் ஓடினேண்டா. கதர்க் குல்லாயும் ஜிப்பாவும் காந்திக் கொடியுமா - அதாண்டா மூவர்ணக்கொடி—சரி, ஆண்டாளு ஹார்லிக்ஸ் கொண்டு வந்திருக்கா. வாயிலே கொட்டிக்கோ முதல்லே. அப்புறம் அடியைப் பிடிச்சுக் கதையைச் சொல்றேன். நாற்பத்தெட்டு ஐம்பது வருஷமா என் மனசிலே தெய்வமா நிக்கற ஓர் உத்தம ஸ்திரீயோட கதையடா இது. கேட்டா மெய்சிலிர்த்துப் போயிடுவே. விட்டா, இப்பேர்ப்பட்ட ஜாதிப்பூவுக்காக அல்லவா கண்ணீர் விடணும்னு நீயே சொல்லுவே.''

மடமடவென்று செல்லப்பா ஹார்லிக்ஸை வாயில் கொட்டிக்கொண்டான். அவன் குடித்து முடிக்கிற வரைக்கும் ராஜப்பா தாத்தா மௌனமாக வாசல் இருட்டையே பார்த்துக்கொண்டிருந்தார்.

ஆகாசவெளியில் ஜாஜ்வல்யமாக ஒரு நட்சத்திரம் மின்னிற்று. ஒரு பெரிய மூக்குத்தி மாதிரி அது ஒளி சிந்திற்று. ராஜப்பா அதையே வெறித்துப் பார்த்தார். ருக்கு மாமியின் மூக்குத்தி மாதிரி அது அவருக்குத் தோன்றியதோ?

2

கேட்கிறயோடா, செல்லப்பா?

பால்யத்திலே நான் ஊருக்கு அடங்காத பிள்ளையாக இருந்தேன். தட்டிக் கேட்கத் தோப்பனர் இல்லை. மஞ்சக்குடியிலே - இதோ பெரிய கதாசிரியனு என்கூட உட்கார்ந்துண்டிருக்கானே—இவா ஆத்துக்கு அடுத்த அகத்திலே, கண் தெரியாத மாமாவோட ஆதரவிலே, அவரையும் தாயாரையும் படிக்கிறதா ஏமாத்திண்டு ஊர் சுத்திண்டிருந்தேன்.

ஸ்கூலுக்கே போக மாட்டேன். மாந்தோப்பிலேதான் சதா வாசம். வேளைக்கு வந்து கொட்டிக்கொண்டு போக மட்டுந்தான் வீடு. படிப்புன்னு ஒரே வேம்பு. கணக்குன்னு அடிவயிறு வரை கசப்பு. கணக்கைவிட அதைச் சொல்லிக் கொடுக்க வந்த வாத்தியார் மேலே பரம வெறுப்பு. எம். எஸ். கிருஷ்ணையர்னு பேரு. எம். எஸ். கே. என்பா பசங்க. நாங்க ரகசியத்திலே, 'டேய், மசக்கை வருகிறதுடோய்!' என்போம்.

பஞ்சகச்சமும் கோட்டும் சிண்டுமா வருவார். எல்லாம் கதர்மயமாகவே இருக்கும். காந்தி பக்தர். கட்டவிரல்லேயும் ஆள்காட்டி விரல்லேயும் நகத்தை அரை இஞ்சு வளர்த்துண்டிருப்பார். கணக்குச் சரியாப் போடாத பயலைக் கூப்பிட்டுப் பக்கத்திலே நிறுத்தி வச்சுண்டு, சபை கிட்ட இனிக்க இனிக்கச் சிரிச்சுப் பேசிண்டே, அந்த இரண்டு நகத்தாலேயும் காதை நிமிட்டுவார். வலி பிராணன் போகும். காது கன்னிச் சிவந்துடும். பிளாட்பாரத்திலே பையன்கள் அவர் நகத்தடியில் நர்த்தனமே ஆடுவான்கள். அதிகமாக அவர் நகங்கள்கிட்ட மாட்டிக்கிறது என் காதாகத்தான் இருக்கும்.

ரொம்ப நாள்வரை அந்தத் தண்டனை சகிக்க முடியாததாக இருந்தது. அப்புறம் திடீரென்று ஒரு நாள் அந்தத் தண்டனையின் பயங்கரம் குறைஞ்ச மாதிரி உணர்ந்தேன். இடப்புறத்திலே, பெண்கள் பத்தியிலே, இரண்டாவது வரிசையிலிருந்து நீர்மல்க என்னை அநுதாபத்தோடு பார்த்த இரண்டு கண்களை நான் கவனித்து விட்டதுதான் காரணம். அவை ருக்குமிணியின் கண்கள்.

'அப்பா அப்பா இவனை விட்டுடுங்கோ அப்பா. நல்லவன் அப்பா!' என்று அந்தக் கண்கள் தகப்பனரிடம் இறைஞ்சும். 'மாட்டிண்டுட்டே பாவி!' என்று என்னிடம் புலம்பும்.

ருக்கு எம். எஸ். கே. யோட பெண். என் பக்கத்து வீட்டிலேதான் இருந்தாள். கொல்லைப் பக்கம் இரண்டு விட்டுத்தாழ்வாரத்தையும் ஒரு நீண்ட குட்டிச்சுவர்தான் பிரித்தது. லீவு நாட்களிலே அந்தக் குட்டிச் சுவருக்கு அந்தப் பக்கம் உட்கார்ந்து அவள் படிப்பாள்; இந்தப் பக்கம் உட்கார்ந்து நான் படிப்பேன். இரண்டு பேருக்கும் கிட்டத்தட்ட ஒரே வயசு; ஒரே ஸ்கூல்; ஒரே கிளாஸ்.

சில நாள் அங்கிருந்தவாறே, ''சித்தே மெள்ளப் படியேண்டா!'' என்று இரைவாள்.

''நீதான் சித்தே மெதுவாப் படியேன்'' என்பேன் முரட்டுத்தனமாக.

''முரட்டு ராஜப்பா என்கிறது சரியாத்தான் இருக்கு!'' என்பாள்.

ஊரெல்லாம் அப்படிச் சொன்னலும், அவள் வாயால் அப்படிக் கேட்டதும் பெட்டிப் பாம்பா அடங்கிவிடுவேன். அவள் மட்டும் என்னை உயர்வா நினைக்க வேண்டும் என்று எனக்கு ஆர்வம். 'ருக்கு நம்மை இப்படி நினைக்கும்படி ஆச்சே!'' என்று மருகிக்கொண்டு உட்கார்ந்திருப்பேன். குரலே எழும்பாது.

பத்து நிமிஷம் கழித்து, 'நான் அப்படி உன்னை நினைக்கலையடா' என்கிற மாதிரி, ஒரு சின்னக் காகிதப் பொட்டலம் சுவர் மேலாக வந்து மடியில் விழும். பிரித்தால் சீடை, முறுக்கு இந்த மாதிரி ஏதாவது இருக்கும். போன உற்சாகம் திரும்பி வந்துவிடும்.

சில நாட்கள் விளக்கு வைத்த பிறகும் படிக்க வராமல் சுற்றிக்கொண்டிருப்பேன். ''ருக்கு, நீபோய்ச் சொன்னல்தாண்டி அந்த மதயானை அடங்கி வரும். சித்தே போய்ச் சொல்லி இழுத்துண்டு வாடி'' என்று அம்மா ருக்குவை அனுப்புவாள்.

ருக்கு என்னைத் தேடி வந்து, ''ஏண்டா, விளக்கு வைச்சு எத்தனை நாழியாச்சு? வாடா படிக்க'' என்று அதட்டுவாள். ''இல்லே, இதோ கிளம்பிண்டுதானிருந்தேன்'' என்று என்னையறியாமல் பின்னல் போவேன்.

''வந்தானு? ஏண்டா, ஆத்துக்காரி வந்து அதட்டல் போட்டாத்தான் ஆத்து நினைப்பு வர்ரதோ?'' என்று சிரிப்பார் மாமா. குத்து விளக்கு மாதிரி அடக்கமாகச் சிரிச்சுண்டு ருக்கு போவாள்.

ஒரு நாள் எம். எஸ். கே. எங்க ஆத்துக்கு வந்து மாமாவிடம் ரொம்ப நேரம் பேசிக்கொண்டிருந்தார். பேச்சின் நடுவே என் பிரஸ்தாபம் வந்ததாம். ''உங்க மருமான் படிக்கவே மாட்டேன் என்கிறனே, சீமா. கற்றுக்கொள்கிற ஆசையே இல்லையே''ன்னுராம்.

''உங்க ருக்குவை அவன் கழுத்திலே கட்டிடுங்கோ, கிருஷ்ணையர். உம்ம கிட்ட கத்துக்காததை எல்லாங்கூடக் கத்துக்கிற ஆசை தன்னலே வந்துடும்''ன்னு மாமா சிரிச்சாராம்.

''எனக்கொண்ணும் ஆட்சேபம் இல்லை. நான் போட்டுக்கிறது கதர்; நான் போகிறது காந்தி வழி. நம்ப ஸ்கூல்லே கதர் போட்டுண்டு வரதே நான் ஒருத்தன்தான். எனக்கு மனுஷாள்லே சாதி குல வித்தியாசமே கிடையாது. ஆனு சீமா, புருஷனுக்கு லட்சணம் கல்வி. கல்வி கேள்விகளிலே சிறந்தவனு வருகிறவனுக்குத்தான் என் பெண் ருக்கு'' என்றுராம்.

சாயங்காலம் ஸ்கூலிலிருந்து (நிஜத்தில் தோப்பிலிருந்து) வந்ததும் அம்மா வாயெல்லாம் பல்லாக்கிக் கொண்டு இதைச் சொன்னள்.

மயிர்க்கூச்செறிஞ்ச மாதிரி இருந்தது. சுவாமி கிட்டேயே போய் நின்னுட்ட மாதிரி புல்லரிச்சது. என்னவோ புரிஞ்சும் புரியாத பரவசம். ருக்குவை உடனே பார்க்கணும்போல மனசு துடிச்சுது.

அன்றைக்குச் சனிக்கிழமை. கோயில்லே நவக்கிரகத்துக்கு என்னையும் திரியுமிட ருக்கு வருவாள் என்று தெரியும்—பாவாடையும் தாவணியுமாய்.

ஓடினேன். அம்பாள் சந்நிதியிலே, சின்ன லோகமாதா மாதிரியே நின்றிருந்தாள். என்னைப் பார்த்ததும் முகம் மலர்ந்தது. கண்ணில் என்றுமில்லாத கனிவு சுடர் விட்டது. அம்மா என்கிட்டச் சொன்னதை எல்லாம் அவளிடமும் சொல்லிவிட்டாள் போலிருக்கிறது!

பிராகாரத்தில் சுற்றி வரும்போது ஒரு தனியிடத்தில் அவளை மடக்கி, ''ருக்கு, நீ யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறே? என்னைத் தானே?'' என்று நெஞ்சம் படபடக்கக் கேட்டேன்.

''கல்யாணத்துக்கென்ன இப்ப? முதல்லே நீ நன்னுப் படி'' என்றுள் எங்கோ பார்த்துக்கொண்டு, கனிரென்று.

''சொல்லேன் முதல்லே!''

''சொல்றதுக்கு என்ன இருக்கு, சுரைக்காய்?'நன்னுப் படி' என்கிறேன். 'ஆகட்டும், ருக்கு. இனிமே பஸ்ட்

தந்தி: "AMRUTHAM" போன்: 26006

ஆர்யவைத்திய பார்மஸி (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு தபால் பெட்டி நெ. 1382, கோயமுத்தூர்-18

எங்களுக்கு 15 கிளைகளும், 150-க்கும் மேலான அதிகாரம் பெற்ற விற்பனையாளர்களும்,
ஸ்டாக்கிஸ்டுகளும் இருக்கிறார்கள்.

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும், வைத்திய ஆலோசனைகளுக்கும்,
சிகிச்சைக்கும் பிரசித்திபெற்ற ஸ்தாபனம்**

REGISTERED

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD.

AVP

TRADE MARK

Factory:
KANJIKODE(Kerala)

எங்களுடைய எல்லாக் கிளைகளிலும் அனுபவமுள்ள வைத்திய
ஆலோசனையும், சிகிச்சையும் கிடைக்கும்.

சென்னைக் கிளை:
140-A, கௌடியா மடத் தெரு,
ராயப்பேட்டை, மதராஸ்-14. போன்: 85752

சென்னையில் வைத்திய விசாரத & ஆயுர்வேத சிரோன்மணி
ஸ்ரீ T. P. தெய்வசிகாமணி
அவர்களிடம் வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும்
பெற்றுக்கொள்ளலாம்.

**விசேஷ சிகிச்சைகள் கோயமுத்தூரில் திருச்சி ரோடிலுள்ள எங்களுடைய
நர்ஸிங் ஹோமில் பெற்றுக்கொள்ளலாம்.**

மேலும் விபரங்களுக்குத் தலைமை அலுவலகத்திற்கு எழுதவும்.
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர் ஆர்யவைத்தியன் P. V. **ராமவாரியர்**

OSR

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்



Athmas

There is no rival to the Mysore Government Sandalwood Oil for its enchanting Perfume. It has won world fame for its purity and genuineness.

The pure Sandalwood Oil is available only in Mysore Government Sealed and labled bottles.

Mysore Government Sandalwood Oil Factory
Mysore & Shimoga.

ARC

தமிழ் நாட்டில் முதன் முறையாக டிராக்டர் டயர்களை முழுவட்ட ரிட்டிரேடிங் (FULL CIRCLE RETREADING) செய்து தருகிறோம்

உங்களின் கார், லாரி, பஸ், மற்றும் ஸ்கூட்டர்களின் தேய்ந்த டயர்களை நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கும் எமது தொழிற்சாலையில் விஞ்ஞான முறையில் நன்கு பயிற்சி பெற்றவர்களால் சூபர் லோடி மோல்டில் முழு வட்ட ரிட்டிரேடிங் செய்யப்படுகிறது

கரடு முரடான பாதையிலும் வழவழப்பான சாலையிலும் ஒரே சீராக பாதுகாப்புடன் செயல்படுகிறது.

தி ஆனைமலைஸ் ரிட்டிரேடிங் கார்பொரேஷன்

42, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை-32. போன்: 801200 & 802926.

ஆனைமலைஸ் மோட்டார்ஸ்

42, மவுண்ட் ரோடு, சென்னை-32.

எல்லா வகை வாகனங்களுக்கும் சகலவிதமான ரிப்பேர்களையும் குறைந்த நேரத்தில் சிறப்பாக ரிப்பேர் செய்து தரப்படும்.

மார்க் வாங்கறேனு இல்லையா, பார்' என்பியா—''

''வாங்கறேன், ருக்கு!''

''சுவாமி உனக்கு அதுக்கான புத்தியையும் ஊக்கத்தையும் கொடுக்கட்டும். இன்னி ராத்திரியே படிக்க ஆரம்பி'' என்று சொல்லிப் போய் விட்டாள்.

அன்றைக்கு இரவு பன்னிரண்டு வரையில் நான் சத்தம் போட்டுப் படித்ததைக் கண்டு மஞ்சக்குடி அக்கிரகாரமே அதிசயித்தது. காலையிலும் சீக்கிரமாக எழுந்துகொண்டு படித்தேன். மனசில் யாரோ ஒரு மறையைத் திருகிவிட்ட மாதிரி இருந்தது. ''ஸ்வாமி, என் முரட்டுத்தனமெல்லாம் இன்னியோடு போயிட ம்'' என்று வேண்டிக்கொண்டேன்.

வேண்டிண்ட மாதிரியே என் முரட்டுத்தனமெல்லாம் அன்னியோடு போயிடுத்து. ஆனு அதற்கு நான் கொடுத்த விலை இருக்கிறதே, அதை நினைச்சால் இப்பக்கூட மனசு நடுங்குகிறது.

3

கேட்கிருயோடா, செல்லப்பா?

அன்னிக்கு என் மனசிலே பொங்கிப் பிரவகிச்ச உற்சாகத்துக்கு ஈடும் கிடையாது; இணையும் கிடையாது. ஏதோ உலகத்தையே ஜெயித்துவிட்ட 'ஹீரோ' மாதிரி, ஜோராக ஒரு பாட்டைச் சீட்டியடித்துக்கொண்டு ஸ்கூலுக்குப் போனேன்.

அன்றைய 'ஹோம்ஒர்க்' கணக்கை வெகு வேகமாக மளமளவென்று போட்டு, நோட்டுப் புத்தகத்தை மூடி, ஆசிரியர் மேஜைமீது கொண்டு போய் வைத்தேன். மணி அடித்ததும் வகுப்புக் கூடும். முதல் பிரீயட் கணக்கு. எம். எஸ். கே. நான் கரெக்டாகப் போட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியத்தை வாய்விட்டுச் சொல்லுவார். வகுப்பே அதிசயிக்கும். அந்தப் பெண்கள் பகுதி, இரண்டாம் வரிசைச் 'சிள்வண்டின்' (ருக்குவுக்கு நாங்கள் வைத்திருந்த பெயர்) கண்களோ ஆச்சரியத்தால் ஸ்தம்பித்தே போய்விடும்.

என் கற்பனையை அறுத்துக்கொண்டு மணி அடித்தது. வகுப்புக் கூடியது. எம். எஸ். கே. அமர்க்களமாக வந்தார். ஆனுல் அவர் பின்னுல் வருகிற ருக்குவை ஏன் இன்று காணவில்லை?

ஏதோ ஒரு வேகம் என்னுள் கிளர்ந்தெழுந்தது. எம். எஸ். கே, பக்கம் திரும்பினேன். அவர் சிரித்துக்கொண்டிருந்தார். என்னைப் பார்த்துச் சிரித்த மாதிரி இருந்தது.

அப்படியே ஏதேதோ நினைப்புடன் திகைத்து நின்றேன்.

திடீரென்று எம். எஸ். கே. யின் கடூரக் குரல். ''சீ மடையா! என்ன கணக்குப் போட்டிருக்கிருய்! ஒரு சின்ன பிராக்ஷன் தெரியாது?'' என்று கர்ஜித்தது. தொடர்ந்து என் நோட்டுப் புத்தகம் என் முகத்தில் வந்து விழுந்தது.

அப்போது, 'நேற்றிரவு எனக்கு ஆசை காட்டிவிட்டு, இன்று ருக்குவை என் கண்ணிற் படாமல் இந்த எம். எஸ். கே. தான் மறைத்துவிட்டார்' என்ற ஆத்திரம் என்னுள் பொங்கிக்கொண்டிருந்தது.

மூஞ்சியில் தாக்கப்பட்டதும் உடனே நான் முரட்டு ராஜப்பா ஆகிவிட்டேன். உடனே அவரைத் தண்டிக்கத் தீர்மானித்துவிட்டேன். சடக்கென்று துள்ளி எழுந்து, ''வாட் ஆர் யூ ஆஸ்கிங் மிஸ்டர் மசக்கே?'' என்று கம்பிரமாக இரைந்தேன்.

வகுப்பு முழுக்கக் 'கொல்'லென்று சிரித்துவிட்டது.

எம். எஸ். கே. இந்த அசாதாரணத் தாக்குதலால் ஒரு கணம் நிலைகுலைந்து போய்விட்டார். பிறகு சமாளித்துக்கொண்டு, என்னைப் பிடித்துத் தரதரவென்று ஹெட்மாஸ்டரிடம் இழுத்துப் போனுர்.

அப்புறம் என்ன?

அன்று மாலையே டி. ஸி. கொடுத்து என்னை விரட்டிவிட்டார்கள். அம்மா கொல்லைத் தாழ்வாரத்தில் தள்ளி என்னை மிதிமிதி என்று மிதித்தாள். ''எத்தனை ஆசைப்பட்டுக்கொண்டிருந்தேண்டா! மண்ணைவாரிப் போட்டுவிட்டாயே'' என்று அழுதாள். ''உன்னை இன்னியோடு கை கழுவிவிட்டேன். கொல்லையிலே கிடந்துசா'' என்று கதவைத் தாழிட்டுக்கொண்டு போய்விட்டாள்.

அறையிருளில், கண்ணுடிச் சாமான்களை உடைச்ச அல்நாஷர் மாதிரி, கேவிக்கொண்டு அங்கேயே கிடந்தேன். 'நான் பண்ணினது தப்பு' என்று எனக்கே தெரிந்துவிட்டது.

திடீரென்று என்னவோ குறுகுறுப்பாக இருந்தது. யாரோ ரொம்ப நாழிகையா மேலே இருந்து என்னையே பார்த்துக்கொண்டிருக்கிற மாதிரி உணர்ந்தேன். திடுக்கிட்டு நிமிர்ந்தேன். நிஜமாகவே ஒரு ஜோடிக் கண்கள் என்னைப் பரிதாபத்தோடு பார்த்துக்கொண்டிருந்தன.

''ஐயோ, ருக்கு!'' என்று கம்மின குரலில் கதறினேன்.

''இப்படிப் பண்ணிட்டயே, ஐயோ அசட்டுப்பிள்ளையே!'' என்ருள் ருக்கு உடைந்த குரலில். ''அப்பாவை அப்படி எல்லார் எதிரிலேயும் அவமானப்படுத்தலாமாடா?''

''தெரியாமெ பண்ணிவிட்டேன், ருக்கு. மோசம் போயிட்டேன்'' என்று விம்மினேன்.

''இனிமே அழுது என்ன பிரயோசனம்? அம்மாவுக்குத்தான் உன்மேல் அதிகக் கோபம்'' என்ருள் ருக்கு, உடைந்த குரலில். சடக்கென்று இரண்டு துளி நீர் வந்து என் முகத்தில் விழுந்தது.

''கண்ணைத் துடைச்சுண்டு, காலம் பறவே கும்மாணம் போயி, ஹாஸ்டல்லே சேர்ந்து நன்னுப் படி. இரண்டு வருஷத்திலே ஒரு ஆளா வர்ர வழியைப் பாரு. அப்பத்தான் என் மனசு ஆறும்!''

''ஆகட்டும், ருக்கு; அப்படியே செய்யறேன். என்னை மறந்துட மாட்டியே?''

''மனசை மனசு எங்கேயானும் மறக்குமோ? ஸ்வாமி உன் பக்கம் இருப்பார். போய் வா. நான் வரேன்.''

சடக்கென்று அவள் தலை மறைந்தது. மறுநாளே கும்பகோணம் வந்து ஒரு ஹாஸ்டலில் சேர்ந்து கவனமாகப் படிக்க ஆரம்பித்தேன். இராப் பகலாப் படிச்சேன். யாருக்கோ வாக்குக் கொடுத்துட்டு வந்து அதை நிறைவேற்றுகிற ஆர்வம் வந்துவிட்டது. ருக்குவின் முகத்தைச் சதா மனசில் இருத்திக்கொண்டு, அது காட்டின வழியே கதி என்று நடந்தேன்.

4

கேட்கிருயாடா, செல்லப்பா?

'காற்றிலேறி அவ் விண்ணையும் சாடுவோம்—காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே' என்று பாரதி பாடின மாதிரி, ருக்கு என்கிற துருவ நட்சத்திரத்தை அடைவதற்கான ஊக்கமும் உத்வேகமுமே எனக்கு உண்டாயிட்டுது.

கும்பகோணம் வந்தபிறகு என்க்கு உலகம் தெரிய ஆரம்பித்தது. தேசத்திலே அடிக்க ஆரம்பிச்சிருந்த காந்தி புயலின் வேகமும் தெரிந்தது. காதற் சுடரோடு தேசச் சுடரும் மனசிலே சேர்ந்து ஒளிர ஆரம்பித்தது.

கதர் உடுத்த ஆரம்பித்தேன். காந்தி குல்லாய் தரித்தேன். பாரதி பாடல்களை ஆவேசமாகப் பாடக் கற்றுக்கொண்டேன். கூடப் படிக்கிற பத்துப் பசங்களைச் சேர்த்துண்டு ஞாயிறு தோறும் மஞ்சக்குடிக்கு வந்து தேசபக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டே துப்புரவு செய்யறது, சேரிக்குழந்தைகளைக்குளிப்பாட்டுவது, பாடம் சொல்லித் தருவது, ராட்டை சுத்தக் கற்றுத் தருவது, ஊரைக் கூட்டிக் காந்தி மகானைப் பற்றிப் பேசுகிறது என்று இந்த மாதிரி பணிகளைச் செய்ய ஆரம்பித்தேன்.

சீக்கிரத்திலேயே ''நம்ப முரட்டு ராஜப்பாவா இது!'' என்று எல்லாரும் அசந்து போகிற அளவுக்கு மாறிவிட்டேன். எம். எஸ். கே.க்குத்தான் ரொம்பச் சந்தோஷம். ஒரு நாள் 'ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்' என்று பாடிக்கொண்டே வீதியைத் துப்புரவு செய்து வருகையில், திண்ணையிலிருந்து ''வந்தே மாதரம், மகாத்மா காந்திக்கு ஜே'' என்று கூவிக்கொண்டே இறங்கி வந்து, ''அட ஐய்யா! எத்தனை உசந்தவனு ஆயிட்டேடா'' என்று கட்டிக் கொண்டுவிட்டார்.

ஜன்னலில் ருக்குவின் முகம் தெரிந்தது. அவள் விழிகளில் நீர் ததும்பிப் பளபளத்தது. அது ஆனந்தக் கண்ணீர்தான் என்று தெரிந்து கொண்டேன்.

மனப்புண் முழுக்க ஆறிவிட்ட மனநிலையில் கும்பகோணம் திரும்பினேன். ஆனால் இன்னொரு ஆத்மாவோட மனப்புண் இன்னும் ஆறவில்லை என்பது சில மாதங்களிலேயே தெரியவந்தது. அது,ருக்குவின் அம்மாவுடையதுதான்.

அப்போது நான் கும்பகோணம் போய் இரண்டாவது வருஷம். அடுத்த வருஷம் பணம் கட்டிப் பெரிய பரீட்சை எழுதணும். அந்த நிலையில், "அடே! உங்க ருக்குவுக்குக் கிழக் கொல்லையிலே வரன் பார்த்திண்டிருக்காடா!" என்ற தகவல் வந்து தூக்கி வாரிப் போட்டுவிட்டது.

"ஆங்!" என்று பதறிக்கொண்டு ஓடினேன்.

"நான் என்னடாப்பா பண்ணுவேன்? ருக்குவோட அம்மா 'அதெல்லாம் முடியாது. இரண்டு பேருக்கும் நாலஞ்சு மாசங்கூட வயசு வித்தியாசமில்லை. பண்ணக்கூடாது. சாஸ்திர விரோதம்' என்று கூறிவிட்டாளேடா" என்று எம். எஸ். கே. தனிமையில் அழுதார்.

மாமி எந்த இடத்தில் பிடித்து மடக்கிவிட்டாள் என்று தெரிந்ததும் அதிர்ந்து போனேன். அப்பீலே இல்லாத விலங்கை எடுத்துப் பூட்டிவிட்டாள்!

அது மட்டும் அல்ல; அடுத்த ஆவணியிலேயே ருக்குவுக்கு ஓரிடத்தில் கல்யாணத்தையும் முடித்துவிட்டாள். அப்போ வந்து ஹாஸ்டலில் விழுந்தவன்தான். மூன்று மாதம் எழுந்திருக்கவே இல்லை. எழுந்தபோது உலகம், வாழ்க்கை எல்லாம் வெறுத்தே போய்விட்டது. 'சீ! இனிமே எதற்காக இருக்கணும்? தேசத்துக்காகவாவது உயிரை விடுவோம்' என்று விதேசி மறியலில் போய்க் கலந்துகொண்டேன். பிடித்து ஆறு மாசம் திட்டிச் சிறைக்கு அனுப்பினர்கள். அப்புறம் வெளியே வருவதும், வேறு ஏதாவது இயக்கத்தில் சேர்ந்து சிறைக்குப் போவதுமாக இருந்தேன். மூன்றுவது தடவை வெளியே வந்தபோது உடம்பு நோய்வாய்ப்பட்டு விட்டது. 'இனிமே நீ சிறைக்குப் போனுல் உசிரோடு திரும்ப மாட்டாயடா' என்று சொல்லி, என்னைப் பட்டணத்துக்கு இழுத்துண்டு வந்து, தன் பாக்டரியிலே வைச்சுண்டுட்டான் என் சிநேகிதன் ஒருத்தன்.

இரண்டு வருஷம் அவனேடு இருந்தேன். ஒரு நாள் பியூன் வந்து, "ஸார்! மஞ்சக்குடியிலேந்து யாரோ வந்திருக்காங்க. உங்களைப் பார்க்கணுமாம்" என்றுன்.

'மஞ்சக்குடியா?' என்று பரபரப்போடு போனேன்.

எம். எஸ். கே.தான் கிழடு தட்டிப்போய், தாடியும் மீசையுமாக உட்கார்ந்திருந்தார். "ராஜப்பா, உன்கிட்டே ஒரு வரம் கேட்க வந்திருக்கேண்டா" என்று என்னை அப்படியே கட்டிக்கொண்டு அழுதார். "ருக்குவின் வாழ்க்கையிலே நீ ஒளி ஏத்தி வைக்கணும்டா. அதைப் பார்க்காமல் போனு என் நெஞ்சு வேகாதுடா! நாங்கள்ளாம் அவளுக்குப் பெரிய அபகாரம் பண்ணிட்டோம்டா. நாங்க ஏத்தி வைச்ச ஒளி மூணும் மாசமே அணைஞ்சு போச்சு! புக்ககத்துக்கு அந்தத் தீபம் போகவே இல்லையடா, அப்பா!" என்று கதறினுர்.

பாதாதிகேசம் ஆயிரம் வேலைச் செருகினுற் போல மெய் நடுங்கிற்று. 'ருக்கு ருக்கு! உனக்கா இந்த நிலை?' என்று உசிர் கதறிற்று.

"என்ன யோசிக்கிறே, ராஜப்பா? இனிமே எந்தத் தடையுமே இல்லை. எனக்குச் சம்மதம்; எங்காத்துக்காரிக்கும் சம்மதம். இனிமே சமூகமோ ஊரோ எதுவும் எங்களுக்கு லட்சியம் இல்லை. எங்க பெண் வாழ்வுதான் பெரிசு. 'சரி'ன்னு சொல்லி எங்க வயித்திலே பாலை வாருடா ராஜா!" என்றுர்.

"சரி, கிளம்புங்கோ, மாமா" என்று புறப்பட்டேன். பழைய ஆசை, பாசம், மோகம் எல்லாம் கார்மேகமாக மனசில் வந்து குழுமிவிட்டன.

மஞ்சக்குடிக்கு வந்தபோது இருட்டிவிட்டது. வீட்டில் நுழையும்போது கூடத்துத் தென்கோடியில், ஹரிகேன் விளக்குகளைத் துடைத்து ஏற்றிக்கொண்டு ருக்கு உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

எங்களைப் பார்த்ததும் அவள் சட்டென்று எழுந்து உள்ளே போய்விட்டாள். படபடக்கும் நெஞ்சுடன் பெஞ்சியில் உட்கார்ந்துகொண்டோம். இரண்டு நிமிஷம் அமைதி நிலவிற்று.

பிறகு, "அம்மா, ருக்கு!" என்றுர் எம். எஸ். கே.

"ஏனப்பா?" என்று கொல்லைத் தாழ்வாரத்திலிருந்து குரல் வந்தது.

"இப்படி வாயேம்மா."

அரை நிமிஷம் பதிலே வரவில்லை. பிறகு சமையலறைக் கதவருகிலிருந்து, "சொல்லுங்கோ, அப்பா" என்று குரல் வந்தது.

"அம்மா, உனக்குத் தெரியாமல் ஒரு காரியம் பண்ணிவிட்டேன். நீ இந்த வயசிலே இப்படி நிற்கிறது, என் மனசை வாளா அறுக்கிறதம்மா. அதனுலே மீண்டும் உன் வாழ்க்கையிலே ஒளி ஏத்தி வைக்கிறதுன்னு தீர்மானிச்சு...."

'களுக்'கென்று ஒரு விரக்திச் சிரிப்பு, சமையலறையிலிருந்து வந்தது. "அப்பா, உங்களுக்கென்ன பைத்தியமா? நாற்பது வயசு மனுஷன் தவழ்ந்தா நன்னுயிருக்குமா? மங்களம்பாடினப்புறம் முதல் ஸீன் வந்தா சிரிக்கமாட்டாளா? உடம்பைப் பெரிசா நினைக்கிற வாழ்க்கை இல்லைப்பா, பாரத ரிஷிகள் நமக்குக் கற்றுக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிற வாழ்க்கை. உடம்பை ஜயிக்கிற கலையைக் கைவந்த சித்தாக, வாழையடி வாழையாகச் செய்து காட்டி வருகிற வாழ்க்கை. நம் சமூகத்திலே பூக்கிற பெண்பூவெல்லாம் ஒரு கொடியில் ஒரு முறைதான் மலரும்; இரண்டாவது முறை மலராது. மலர இஷ்டப்படவும் படாது. என்னைப் பொறுத்தவரையிலே எல்லாம் முடிஞ்சு போச்சு. இனிமே அந்தப் பேச்சே வேண்டாம்."

"அம்மா, அப்படிச் சொல்லிடாதேம்மா" என்று எம். எஸ். கே. கதறினுர். "வந்திருக்கிறது யார்னு பாரும்மா. உன் உசிரை உன்னேடு சேர்ப்பிக்கக் கொண்டு வந்திருக்கேன் அம்மா. மறுக்காதேம்மா."

"என் உசிரா?" மீண்டும் ஒரு 'களுக்' சிரிப்பு.

"ஆமாம், ருக்கு. என்னைத் தெரியலையா? உன்னை ஒரொரு நிமிஷமும் நினைச்சு உருகிக்கொண்டிருக்கிற உன் ராஜப்பா வந்திருக்கிறேன்."

ஒரு நிமிஷம் கதவடியில் மௌனம் நிலவிற்று.

பிறகு, "ராஜப்பாவா? அது யார்? எனக்கு எந்த ராஜப்பாவையும் ஞாபகமில்லையே? தெரியாதே!" என்ற பதில் கணீரென்று வந்தது.

"ருக்கு!" என்று அண்டபேரண்டங்களும் அதிர ஒரு கத்துக் கத்தினேன். "என்னையா தெரியாதுன்னுட்டே?" என்று கதறிக்கொண்டு வெளியே ஓடி வந்துவிட்டேன்.

எங்கள் வீட்டுக் கொல்லைத் தாழ்வாரத்தில் நான் வழக்கமாக உட்கார்ந்து படிக்கிற பழைய இடத்தில் போய்க் கல்லாய் உட்கார்ந்துவிட்டேன். அழக்கூடத் திராணியில்லாமல் கிடந்தேன்.

வெகு நேரம் கழித்துப் பிரக்ஞை வந்தது. ரேடியம் கையில் மணி எட்டு என்பதைக் காட்டிற்று. அரை மணியில் பட்டணத்துக்கு ஒரு வண்டி இருப்பது நினைவு வந்தது.

'சீ! இது ஒரு ஊரா? இனி இதன் முகத்திலேயே விழிக்கக்கூடாது!' என்று விருட்டென்று கிளம்பினேன்.

சட்டென்று ஏதோ என் கவனத்தைக் கவர்ந்தது. சுவருக்கு அப்பால் யாரோ அடங்கின குரலில் கேவின மாதிரி இருந்தது. 'சுவாமி பகவானே! யாரை அல்லும் பகலும் மனசிலே வச்சு மருகிண்டிருக்கேனே அந்தத் தெய்வத்தை இன்னிக்குத் தெரியாதுன்னுட்டேன். என்னை மன்னிச்சுடு' என்று புலம்பின மாதிரி இருந்தது.

நிஜம்னும் தெரியலை; பிரமைன்னும் தெரியலை. அப்புறம் எந்தச் சத்தமும் இல்லை.

இராவோடு இராவா பட்டணம் வந்துட்டேன். பதினைஞ்சு வருஷமா ஊரோடு முகாலோபனம் பண்ணலை. அப்புறம் ஒரு நாள் இந்த மஞ்சக்குடி, அம்மாவோடு பட்டணம் வந்து காலேஜ் படித்தபோது, அவன் அம்மா சொன்னுள்: "மாமி, நான் உதிர்ந்த பூவாகிவிட்டேன். என் மீது வெறுப்பு ஏற்பட்டாத்தான் இன்னெருத்தி மேலே அவர் மனசு போகும்னுதான் அவரைத் தெரியாதுன்னு சொல்லிட்டேன், மாமி" என்று நான் வந்த பிறகு ருக்கு சொல்லி அழுதாளாம்.

"ஆனு என் உத்தேசம் பலிக்காமல் போயிடுத்து மாமி. இன்னும் அவர் பிரம்மசாரியாத்தான் இருக்கார்னு கேள்வி" என்று அழுதாளாம்.

"நீ கல்யாணம் பண்ணிண்டாத்தாண்டா அவ மனசு ஆறும்" என்றுள் மாமி.

"ஒரு கொடியில் ஒரு முறை மட்டுமே பூக்கிற ஜாதி மாமி, நாங்க ரெண்டு பேரும்"'ன்னுட்டேன்.

அப்பேர்ப்பட்ட ஜாதிப்பூவுக்காக அல்லவாடா கண்ணீர் சிந்தணும்? ★

அரசன் 5 டன் - 6 டன்
டிரையிலர்



- காடு முரடான சாலைகளுக்கு வயற்புற உபயோகத்திற்கு பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது
- எல்லா டிராக்டர்களுக்கும் பொருந்தும் ஏற்றி இறக்கி மாட்டக் கூடிய டோபார அமைப்புகொண்டது
- முன் சக்கரங்களை திருப்பும் டேபிள் அமைப்பு அதிக பரப்புடன் அமைக்கப்பட்டிருப்பதால் லகுவாக திருப்பவும் அதிக ஆட்டமில்லாமல் ஓடவும் முடிகிறது
- பிளாட்பாம் மிக தாழ்வாக அமைத்திருப்பதால்-சுலபமாக பாரத்தை ஏற்ற முடிவதுடன் நிலையான பாதுகாப்பான ஓட்டத்திற்கு ஏதுவாகிறது
- மழையிலும் வெயிலிலும் துரு பிடிக்காமலிருக்க கதவு மற்றும் முக்கிய பாகங்கள் பாஸ்பேட் டிரிட்மெட் செய்யப்பட்டுள்ளது
- ஒரு வருட உத்திரவாதம் கொண்டது

கிளைகள்:

180, வடக்கு வெளிவீதி, மதுரை.

D-13, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம்.

அரசன் & கம்பெனி
திருநெல்வேலி.

பெருமதிப்பிற்குரிய
எமது
வாடிக்கைக்காரர்கள்
மற்றும்
விவசாயப் பெருமக்கள்
அனைவருக்கும்
எங்கள் உளங்கனிந்த

தீபாவளி
வாழ்த்துக்கள்

—ஆத்மாஸ்

MIRACLE MAN WITH MYSTERIOUS POWERS

Consult India's Greatest Tantric Yogi, Prof. R. T. Thevar, who has attained unparalleled renown not only in India but all over the world including countries like U K., U.S.A., Africa, Ceylon, Malaya, etc. Whatever be the nature of your problem and however insoluble it may seem, write in detail for invaluable FREE SPIRITUAL GUIDANCE enclosing 85/- paise Stamps for reply postage and catalogue. Correspondence should be in English language only.

A FEW APPRECIATIONS OUT OF NUMEROUS

Hon'ble **Shri L. N. Misra,** Minister of Foreign Trade, New Delhi :—"Respected Swamiji, I must express my deep gratitude to you for having been kind enough to send me the Kavacha which I have been wearing since August last and I am glad to inform you that it has worked wonderfully well."

Shri P. K. Deo, Member of Parliament, New Delhi :—"My Dear Prof. Thevar, I must express my deep gratitude to you for having sent to me the Kavacha which I have been wearing for the last four months. It has worked wonderfully well and I am fully satisfied by wearing it."

Shri M. S. Nadkarni, IRS, Jt. Secretary to the Govt. of India, New Delhi :—"Respected Swamiji, I express my deep debt of gratitude to you for being kind enough to send me the KAVACHA which I have been wearing for the last 6 months. It has worked wonderfully wel and is a tribute to the high spiritual powers which you have acquired by the practice of the ancient Tantric science."

Shri P. Paramaguru, M.A.,B.L.,I.P.S., Deputy Inspector General of Police, Vigilance, Madras :—"After receiving the KAVACHA prepared for me with special care, all my endeavours are being crowned with success. I enjoy mental happiness and earn public goodwill and support in an increasing measure."

Shri R. K. Muniswamy, I.P.S., Deputy Inspector General of Police, Central Range, Nellore :—"Dear Swamiji, I have very great pleasure in informing you that I have had the fortune of using the Kavachas prepared by you both for my children and myself and that I have had astounding results. The Kavachas have presented us results with remarkable accuracy."

Sri M. Sriramulu, Registrar of Co-operative Societies, Pondicherry :—"Revered Swamiji, I am happy to inform you that the Kavachas prepared for me and my family members have produced marvellous results. It is no exaggeration to call you a Miracle Man with Mysterious Powers."

Shri T. V. Venkataraman, I.A.S., Joint Secretary to Government, Public Department, Madras :—"Dear Thiru Swami, I have used the Kavacha given by Prof. R. T. Thevar, Tantric. It has given me very good results. Prof. Thevar has been rendering yeoman service in the cause of Tantric philosophy. Any body who comes under his influence is bound to be benefited by it."

Sri S. Subramaniam, Finance Secretary, Govt. of Manipur :—"Regarding the efficacy of the KAVACHA you supplied in the past, I have no hesitation to admit that they had the desired effect."

Sri T. Srinivasan, I.A.S., Deputy Secretary, Ministry of Food and Agriculture, New Delhi :—"During the last four months since I have been wearing your KAVACHAS, I could see sure remarkable and astounding beneficial effects. My son for whom you had prepared a KAVACHA informs me that he had passed the B.Sc., Examination in First Class."

Sri P. Sankaran, I.A.S., District Collector, Dharmapuri:—"I have been using your wonderful KAVACHAS for the past four years and I am very happy to convey to you that they are producing marvellous effects."

Mr. K. L. Bharati, I.A.S., District Collector, Madurai :—"I feel extremely glad to inform that I got my promotion within three months of wearing your KAVACHA."

Sri B. K. Gajapathi, Editor, "The Ringing Bells," Madras :—"I need not look into your testimonials to gauge your worth. You are really a great soul having supernatural power at your command. You have cured my daughter, who was tormented by evil spirits."

Vidwan KU. Sivapraghassan, B.O.L.,M.A., (Tamil), M.A. (English), M.A. (Economics), M.A. (History), M.A. (Politics), B.L., State Public Prosecutor, Pondicherry :—"Revered and Beloved Swamiji, My son has come out with First Class in Part Two French. My heart goes out in inexpressible gratefulness to the kindness with which you graced him with your powerful Special Kavacha which has bestowed on him the pride of place in a foreign language like French."

Sri A. Vadivelu, B.A.,B.L., Sub-divisional Magistrate, Dindigul :—"Respected Swamiji, you are no doubt a great personage with divine powers. You have cured my brother-in-law, who was under the influence of evil spirits and black magic."

Mr. S. S. Mhd. Ismail, B.E., Superintending Engineer, Kodayar Lower Camp Post, Kanyakumari District :—"Respected Sir, Indeed you are a very great man and your wonderful Kavacha had given me promotion as Superintending Engineer in a short period. I am always grateful to you for your kind help done to me and I will never forget you."

Sri V. Ramamurthy, I.A.S., District Collector, North Arcot :—"In February last I obtained a Talisman for my mother from you and I am happy to report the effects of it were remarkably wonderful."

MOST IMPORTANT

Since most of the letters addressed to me either do not reach me or reach me without stamps enclosed therewith for reply, correspondents are advised to adopt Registered Post.

Prof. R. T. THEVAR, TANTRIC

POST BOX NO. 14, PHONE NO. 310,
PALANI (SOUTH INDIA)

ரோசம்

பூவை ஆறுமுகம்

"தண்டோராச் சத்தம் கேட்டடியும், நான் ஐயனர் குதிரையாட்டம் அப்படியே திகைச்சு நின்னுப்புட்டேன். காலம் கெட்ட இந்தக் கலியிலே எதுதான் நடக்கும், எதுதான் நடக்காது என்கிற விவரமும் விவகாரமும் வரவரப் புத்திக்கே மட்டுப்பட மாட்டேங்குதே! இல்லையாடி, செல்லாயி?"

"ஆமாடி, சொர்ணம்! அந்தச் சங்கதி காதுக்கு எட்டினதும், மருக் கொண்டாப்பிலே நானுந்தான் அசந்து போயிட்டேனுக்கும்! மெய்யாலுந் தாண்டி! இந்த அதிசயக் கூத்து எம் மாங்கொத்த தீவினையைக் கொண்டு செலுத்தப் போகுதோ, புரியலையே!"

"ஊம்; நம்ப அன்னக் கிளிக்கும் அதோட மொறைமச்சான் முத்தையனுக்கும் பொறக்கு மாசம் தீவாளி கழிஞ்ச கையோட கண்ணலம் நடக்கப் போகுதின்னு ஊர் நாட்டிலே பேச்சு அடிபட்டுக்கிட்டு இருக்கையிலே, இப்ப இப்படித் தண்டோராச் சத்தம் அடிபட்டு ஊர் சாடாவையும் ஒண்ணு கூட்டியிருக்குதே! அதாண்டி செல்லாயி, கூத்துக் கணக்கிலே தோ வுது!"

"ஆத்தா மூத்தவ இந்தத் தவசலுக்கு என்னமாய்க் கண்டு தண்டி எப்பிடித்தான் நாயம் பொளக்கப் போருளோ? விளங்குதில்லேடி, சொரணம்!"

"மயிர் பொளந்து ஞாயம் செப்புறத்துக்கு இந்தக் குளமங்கலத்திலேயும் சரி, அண்டை அசல் பத்துக் குடி காடுகளிலயும் சரி, ஆத்தா மகமாயியைத் தவிர, வேறு ஆருக்கு அம்மாங் கொத்த மனசும் தெம்பும் விதியும் இருக்க ஏலும்? சொல்லேண்டி, செல்லாயி!"

"சொரணம் அக்கா புட்டுவச்சாப்பிலே சொன்னது நூத்துக்கு ஒரு சேதி! சரி சரி. பரிவோம் பஞ்சாயத்துத் திடலுக்கு!"

"ஊம்!"

மகமாயி திடலில் எள் போட இடம் இல்லை.

ஒரு முனையில் விடலைகள். எதிர் முனையில் கன்னிகழியாச் சிறிசுகள்.

காதல் விளையாட அது நேரமா? விதி விளையாடும் வேளை ஆயிற்றே!

"டே மூக்கா! உன் மூக்கு பத்திரம். சமைஞ்ச குட்டிங்ககிட்டே சரசம் கொஞ்சிற சங்கதியை இன்னிக்கோட நிப்பாட்டிக்கிடு! முத்தையனுக்கு நேர்ந்திட்ட கதியை லேஞ்சிலே முடிச்சுப்போட்டு வச்சுக்கிடு!"

சேக்காளி காளியப்பனை ஏற இறங்கப் பார்த்தான் மூக்கன். அப்புறம் அவன் பார்வை கன்னி மூலையை நாடுமா என்ன? அவன் அதோ, சாமியாடித் திட்டில் குனிந்த தலையுடன் உடலொடுங்கி நிற்கிருனே முத்தையன், அவனைத்தான் இப்போது அநுதாபம் மூள நோக்கினுன். எதிர்வசத்தில் அவனுடைய விழிகள் மறுகின தருணம், அங்கே வீராங்கனையாகத் தலைநிமிர்ந்து காணப்பட்ட அன்னக்கிளி தட்டுப்பட்டாள். குட்டுப் பட்ட மாதிரி அதிர்ந்து போய்த் தன் நோக்கை மீட்டுக்கொண்டான் மூக்கன்.

வெயில் சரம் கட்டி, ஏறுமுகம் காட்டியது.

"ஏட்டி செலம்பி! அந்தாலே வந்திட்டாரடி ஆறுகரைத் தலைப்புள்ளி சுப்பையா அம்பலகாரர். போன கடுத்தம், அவர் தன்னேட சொந்த மச்சானை—அதாண்டி நம்ப அன்னக்கிளியோட அப்பன்காரர் முத்தரசன் அம்பலகாரரை இதே பஞ்சாயத்துத் திட்டிலே அலக்கா நிறுத்திவச்சு மன்னிப்புக் கேக்க வச்சு அபராதம் வாங்கின அசகாயசூரராச்சே! ஆத்தாடியோ!" என்று சேரிக் கிழவன் குப்பன் தன் அருமைப் பெண்டாட்டியின் காதைக் கடிக்கலானுன்.

"அந்தச் சூரருக்கும் இப்பச் சோதனை மூண்டிடுச் சேங்கிறேன், மச்சானே!" என்ருள் பல் போனுலும் சொல் போகாத குப்பாயிக் கிழவி.

"அடியே, வாயை அடக்கிக்கடி! ஊருக்கு ஒசந்தவுகளைப் பத்தி நாம பல்லுமேலே பல்லுப் போட்டு இப்பிடிச் சத்தம் காட்ட வாய்க்குமாடி? ஒரு வாட்டிக்குப் புகையிலைக் காம்பு கிள்ளித் தந்துப்புட்டு, வேடிக்கை பாருடி, செலம்பிப் பொம்பளை!"

சொர்ணமும் செல்லாயியும் அன்னக்கிளியையே வைத்த கண் வாங்காமல் பார்த்தவாறு நின்ருர்கள்

முன்னடியான் சாமிக்கும் ஆறுகரைத் தலைமைப்புள்ளி சுப்பையா அம்பலகாரருக்கும் ஒரே ஒரு வேறுபாடுதான் இப்போது காணக்கிடக்கிறது.

இறங்கி அறியாத அம்பலகாரரின் தலை பாவம், இறங்கிக் கிடக்கிறதே!

ஆனுல்....

ஆகா! அந்தக் கருக்கரிவாள் மீசைக்குத்தான் எவ்வளவு கம்பீரமான ஆணவம்! திட்சண்யம் வழிந்த அந்தக் கண்கள் ஏன் அப்படித் துடித்துக்கொண் டிருக்க வேண்டும்?

ஆறுகரை முதற் புள்ளி சுப்பையா அம்பலகாரர் வெள்ளிப் பூண் கட்டிய கைத்தடி சுழல, மனம் சுழல, விழிகள் சுழல, இறங்கிக் கிடந்த முகத்தை உயர்த்தி நிறுத்த எத்தனம் செய்தவராக, பஞ்சாயத்து அரங்கில் குந்தலானுர். கால்கள் அட்டணைக்கால் போட்டுக் கொண்டன; மீசையை நீவி விட்டன விரல்கள். காற்றில் அலைபாய்ந்த குடுமியைத் தட்டிமுடிந்த வண்ணம், சுற்றுமுற்றும் கண்களை நிமிர்த்தித் துழாவினுர் பெரியவர். அந்தக் கண்கள் யாரைத் தேடுகின்றன?—'ஓ! இப்பத்தான் வாரானு என்னேட வைரி?'

முத்தரசன் அம்பலகாரர் வேர்க்க விறுவிறுக்க வந்து நின்ருர். ஊர் அடங்கலும் கூடியிருந்த அந்தப் பெருங் கும்பலிலே சலசலப்பு எழுந்தது. ஆறுகரைச் சுப்பையா அம்பலகாரரின் நெஞ்சில் சுழன்ற முத்தையனும் அன்னக்கிளியும் இப்போது அவரது கண் வட்டங்களிலே ஆறு வட்டம் சுழல்கின்ருர்கள்!

சங்கம் முழங்கிற்று;

'பஞ்சாயம்' தொடங்கியாக வேண்டும். புண்ணிய பூமியின் அமைதி கோலோச்சிற்று.

சுப்பையா அம்பலகாரர் திருவாய் மலரலானார்: "அன்னக்கிளி!.... அன்னக்கிளி!"

அன்னக்கிளி ஆணவமாகத் தலையை நீட்டினாள். "இந்தாலே நின்னுக்கிட்டு இருக்கேனே அன்னக்கிளி!" என்றாள். ஈரம் சொட்டிய சுங்கடிப் புடைவையும் கொட்டடி ரவிக்கையும் ஈரம் உலர்ந்துவிட்டன போலும்!

அம்பலகாரர் நெடுமூச்சுடன் தலையைத் தாழ்த்தினார். "முத்தையன்! ....முத்தையன்!" என்று குரல் கொடுத்தார்.

முத்தையன் சோகம் இழைபின்ன, குனிந்த முகத்தை நிமிர்த்தமாட்டாமல், "இதோ இருக்கேன்!" என்றான்.

ஆயி மகமாயியை நாற்புறமும் சூழ்ந்து . மொய்த்திருந்த அத்தனை கண்களும் அம்பலகாரரின் வாயையே திறந்த வாய் மூடாமல் நோக்கத் தலைப்பட்டன.

அம்பலகாரரின் துடித்த உதடுகள் விம்மின; விலகின: "இந்தக் குளமங்கலம் ஊர்ப் பொதுசனங்க அம்புட்டுப் பேரும் ஆத்தா மகமாயி சந்நிதானத்துக்கு முன்னாடி கூடியிருக்கீக. நம்ம தலைமுறையிலே இம்மாங்கொத்த அதிசயமான வழக்கை யாரும் இதுபரியந்தம் கண்டிருக்க ஏலாது; கேட்டிருக்கவும் வாய்க்காது! உங்க எல்லாருக்கும் வழக்கோட கதை இந்நேரம் விளங்கியிருக்கலாம். பஞ்சாயத்துத் தீர்ப்பைச் செப்பியாகத் தக்க விதி எனக்குச் வாய்ச்சிருக்குது!"



அம்பலகாரர் பேச்சைத் துண்டித்து, பிறகு மகமாயி சந்நிதியை ஊடுருவி நோக்கி, நடுங்கும் கரங்களைக் குவித்து, "உலகாளும் மூத்தவளே! ஊருக்கு ஒசந்தவளே! மயிர் பிளந்து நியாயம் சொல்லத் தெரிஞ்ச புண்ணியவதி நீ! நீதி சொல்லு, ஆத்தா!" என்று உணர்ச்சிச் சுழிப்போடு வேண்டிக்கொண்டார். இப்பொழுது முத்தையனையும் அன்னக்கிளியையும் மீண்டும் துழாவினார். நெற்றி நரம்புகள் நாணேறிப் புடைத்தன.

"அன்னக்கிளி! உன்னோட வழக்கை ஊரறியச் சொல்லிப்பிடு. ஆத்தாளும் இன்னொரு மூச்சு உம் பேச்சைக் காதிலே விழுக்காடிக்கிடட்டும்!"

அம்பலகாரரின் ஆணை இது:

அன்னக்கிளியின் செம்பவழ இதழ்களிலே சொற்கள் மிதந்தன:

"அரை நாழிப் பொழுதுக்கு முந்தி நான் செல்லத்தேவன் ஊரணியிலே விழுந்து எழுந்து குளியலாடிப்புட்டுத் திரும்பிக்கிட்டு இருந்தேன், தடத்தோட. அப்போ, ஆவாரஞ்செடிப் பத்தைக்குள்ளாற இருந்து அந்த ஆம்பளை—அதான் முத்தையன், நல்ல பாம்புக் கணக்கிலே வெளிக் கிளம்பி, வெறி துள்ள எம்புட்டுக் கையைப் புடிச்சி இழுத்தாருங்க! திகைச்சுப் பூட்ட நான் அந்தடியும் என்னோட ரவிக்கைத் துணியினாலே கையும் மெய்யுமா அந்த ஆளோட கை இரண்டையும் கட்டிப் போட்டு ஆத்தா சந்நதிக்கு இட்டாந்தேன். மூவுதக்கும் ஊர் வளமைக்கொப்ப மணியை அடிச்சேன். ஆறுகரைத் தலைமை அம்பலகாரவுக ஓடிவந்தாக. சேதியை உடைச்சேன். தமுக்குப் போட்டாக. ஊர் கூடியிருக்கு. இப்ப எனக்கு நாயம் வேணும், நாயம்!"

கொண்டையை அள்ளிச் செருகிக் கொண்டாள் கன்னிப்பூ. அழகு குழைந்த இளம் மார்பகம் எம்பிக் கொண்டிருந்தது.

அம்பலகாரரின் முகம் கடுகடுப்படைந்தது. "முத்தையா! இனி நீ பேசு!" என்று உத்தரவிட்டார். கரிய பெருவிழிகள் நாவற்பழமாயின.

முத்தையன் எழிலார்ந்த வதனத்தை நிமிர்த்தமாட்டானா? "சொந்தத்துக்குள்ளே சொந்தம். அதிலேயும் நாளைக்கு, ஐப்பசி பொறந்ததும் நான் கண்ணாலம் கட்டிக்கப் போற முறைப் பொண்ணுதானே என்கிற தனி உரிமையிலே - உறவிலே - சபலத்திலே நான் அன்னக் கிளியோட அழகான கையைப் பிடிச்சி இழுத்தது மெய்தான்!" என்றான். தாழ்குரல் பிசிறு தட்டிற்று.

"ஓகோ!" என்று ஓங்காரமாக உறுமினார் சுப்பையா அம்பலகாரர். வெட்டரிவாளும் கையுமாகத் தரிசனம் தந்த முன்னடியானா அவர்?

"தன்னோட மான அவமானத்தைக் கூடத் துச்சமாய் மதிச்சு, பொண்ணைப் பொறந்த அன்னம் இப்பிடி ஊரைக் கூட்டிச் சோதிக்கும்னு நான் கனாக்கூடக் காணலீங்களே!" தொடர்ந்து நின்றான் விடலை முத்தையன். துடிப்பு நரம்போடிய கண்கள் கலங்கின.

அம்பலகாரர் உதட்டைக் கடித்துக் கொண்டார்: "நீ சொல்லுற மான அவமானம் அல்லாம் அன்னக்கிளியோட சொந்த விசயம். இப்போ நீ செஞ்சது அடாவடி, அநியாயம்! புரியுதா? அ மட்டுமில்லே. இப்பைக்கு உன்னோட மானமும் அந்தரத்திலே ஊசலாடுதே, அந்தத் துப்பும் புரியுதா?" என்று கொடூரமான கோபத்தோடு கேட்டார் அவர்.

"ம்!"

"நீ பண்ணின தப்புத் தண்டாவுக்கு-கன்னிகழியாப் பொண்ணோட கையைப் புடிச்சிழுத்த அநியாய அவகேட்டுக்கு என்ன தண்டனை தெரியுமா உனக்கு?" என்று வீறுபூண்டு பேசிக்கொண்டே எழுந்த ஆறுகரை அம்பலகாரர் சாரையெனச் சரேலென்று பாய்ந்து முன்னடியான் கரம் பற்றியிருந்த வெட்டரிவாளைப் பற்றி, முத்தையனை நோக்கி ஆவேசத்துடன் அந்த அரிவாளை ஓங்கப் போன சமயத்திலே, "ஆண்டே!" என்ற குரல் விண்முட்டி எழுந்தது.

சேரிக் குப்பன் அங்கே ஆறுகரைச் சுப்பையா அம்பலகாரருக்கும் முத்தையனுக்கும் குறுக்கே பாய்ந்து விழுந்தான். "ஆண்டே, ஆத்தா கொடுத்த உசிரை வாங்கிறதுக்கு



உங்களுக்குச் சட்டம் கிடையாதுங் களே!'' என்று கும்பிட்டான்.

தலைக்கட்டின் தலைமை அம்பல காரர் தம் கருக்கரிவாள் மீசையை முறுக்கி விட்டுக்கொள்ளத் தவற வில்லைதான். ''முத்தையன் உசிரை வாங்க நான் யார்? அவன் கைகளை—அந்தப் பாவக் கைகளைச் சீவி ஆத்தாளுக்குக் காவு போடத் தான் துடிச்சேன்! ம். முத்தையா! நீ செஞ்ச பாவம் ஆத்தாளுக்கே அடுக்காதாக்கும்! அந்தக் குத்தத் துக்கு நீ உன்னையே காவு கொடுத்துக் கிட வேணும்! ம். இப்ப நீ ஆத்தா ளுக்கு ரூவா நூறு அபராதம் செலுத்தி யாக வேணும்!'' என்று தீர்ப்பு முழங் கினார்.

முத்தரசன் அம்பலகாரரின், ஆமாம், வாதி அன்னக்கிளியின் அப் பன் முத்தரசன் அம்பலகாரரின், முகம் ஏன் இன்னமும் சலனம் காட் டிக்கொண் டிருக்க வேண்டும்?

முத்தையன் இடுப்பு வேட்டியில் முடிந்து வைத்திருந்த பணத்தை எண்ணி அபராதத் தொகையை எடுத் துக்கொண் டிருந்தான்.

தமிழச் சாதியின் விந்தைக் கன்னி யாகத் தலைநிமிர்த்தி, தனக்கே உரிய கருவம் சிறக்க, புன்னகையும் புது நிலவுமாக நின்றாள் அன்னக்கிளி. அவளது கன்னிமனம் அலைபாய்ந்தது.

''அப்பா! அண்ணைக்கு ஒரு சமயம் ஆத்தாளோட வேப்பமரத்திலேருந்து நடுறதுக்காக நீங்க ஒரு போத்து வெட் டினீங்க. அதைக் கையும் மெய்யுமாக் கண்டுக்கிட்ட இந்த அம்பல காரர் கிட்டே நீங்க எம்புட்டோ கெஞ்சியும் கேளாது, ஊரைக்கூட்டி, உங்களை மன்னிப்புக் கேட்க வச்சு, அவ ராதமும் கட்டச் செஞ்சார் இந்தக் தலைப்புள்ளி அம்பலகாரர்! அந்த வடு உங்க நெஞ்சிலேருந்து மறை யாது என்கிற துப்பைப் புரிஞ்சுக் கிட்ட பொண்ணு நான்.....ஆனா லும் பழைய பகையை மறந்துப்புட்டு என்னையும் மச்சான் முத்தையனையும் புருசன் பெண்சாதியாக ஆக்கிப்போட நீங்களும் முனைஞ்சீங்க. அம்பல காரரும் ஒப்பினாங்க. இந்தப் புது ஒட்டுதலிலே நானும் மச்சானும் பழகினோம். காலம்பற என் ஆசை மச்சான் எம் பேரிலே கொண்டிருக் கிற மயக்கத்திலே புத்தி மயங்கி, மூளை தட்டுக்கெட்டு, எங் கையைப் புடிச்சி இழுத்துப்புடுச்சு. அந்தச் சமயந்தான் என் மனசான மனசிலே பழிக்குப் பழி வாங்க வேணுமிங்கிற வர்மம் கொழுந்து விட்டு எரியத் தொடங்கிச்சு. என் மான அவமா னம் பத்தியெல்லாம் ரோசிக்காம, கவலைப்படாம, இதோ நேச மச் சான் முத்தையனைச் சந்தியிலே நிறுத்திப்புட்டேனாக்கும்! இனி உங்க நெஞ்சுப்பாரம் குறைஞ்சிடுமில்லே?''

மனம் சதுரங்கமாக, நினைவுகள் பகடைகள் ஆயின. துடித்த மார்பைத் துடிப்புடன் அழுத்தியவளாக, பார் வையைத் திசை மாற்றினாள் அன்னக் கிளி. மறுகணம், ''ஐயையோ! மச் சானே!'' என்று கதிகலங்கிக் கூவி ஓடி, முத்தையனின் கைகளைப் பிடித்து இழுத்துவிட்டாள்!

இரண்டு எட்டுத் தள்ளி விழுந்தான் முத்தையன்!

முத்தையன் நின்ற சாமியாடித் திட்டில் இப்போது கருநாகம் ஒன்று படம் விரித்து ஆடிக்கொண் டிருந்தது. ஆறுகரைத் தலைப்புள்ளியான சுப் பையா அம்பலகாரரின் கண்களினின் றும் கண்ணீர் சிந்திக்கொண் டிருந்தது. அடித்துவைத்த சிலையாக நின்ற முத்தையன் உணர்வு பெற்று, அப ராதம் செலுத்தினான்.

''ஆண்டே, இந்தச் சேரிக் குப்பன் மறுபடியும் குறுக்கே மறிக்கிறதுக் காவ சமிக்க வேணுமுங்க. உங்க அருமை மகன் முத்தையனுக்கின் னேதான் உங்க மச்சான் மகள் அன் னக்கிளியை இந்த மண்ணிலே புடிச் சுப் போட்டிருக்கா ஆத்தா மூத்த வள்! ஆகச்சே, சின்னஞ் சிறுசுக ரெண்டோட விளையாட்டுப் புத்தி யைப் பெரிய மனசு பண்ணி மன்னிச் சுப் போடுங்க, ஐயா பெரியவுகளே! அதுக ரெண்டுக்கும் கண்ணாலம் கட் டிப் போட்டுப்புடுங்க, ஆண்டே!'' என்று குடுகுடு கிழவன் குப்பன் வேண்டுதல் விடுத்தான்.

''ஆமாங்க; அதான் நியாயம்!''

பலதரப்பட்ட குரல்கள் திக்குத் திசை மறித்து எதிரொலித்தன.

ஆறுகரைத் தலைமை கொண்ட சுப்பையா அம்பலகாரர் சிரித்தார். பஞ்சாயத்துத் திட்டினின்றும் எழுந்து இறங்கினார். அவர் பார்வை முத்தை யனையும் அன்னக் கிளியையும் மாறி மாறிப் பார்வையிட்டனவோ?

''முத்தையா!''

''என்னாங்க, ஐயா!''

''முத்தையா, நான் இப்ப உன் அப்பன்! நான் கேட்கிறதுக்கு நெஞ் சுக்கு வஞ்சனை பண்ணாமல் பதிலைச் சொல்லு!''

''கேளுங்க, அப்பா!''

''உனக்கு உன் அத்தை மகள் அன்னக்கிளியைக் கண்ணாலம் கட்டிக்கிறதுக்கு இஷ்டந்தானா?''

''ஆமா; இஷ்டந்தான், அப்பா!''

அம்பலகாரர் மீண்டும் சிரித்தார். பிறகு, ''அன்னம்! நீயும் எனக்கு இப்போ பதில் சொன்னால் தேவலாம். உன்னோட மாமன்காரனுக்கும் இப்ப கேட்கிறது!'' என்றார்.

அன்னக்கிளி நாணம் தாங்கி, ''ஊம்'' என்றாள்.

''ஒனக்கு உன் மச்சான் முத்தையனைக் கொண்டுக்கிறதுக்குச் சம்மதந்தானா?'' என்று கேட்டார் சுப்பையா அம்பலகாரர்.

''சம்மதந்தானுங்க, மாமா!'' என்று விடை பகர்ந்தாள் கிளி.

அம்பலகாரர் மறுமுறையும் சிரிக்கலானார். ஆயி மகமாயியை நின்ற திசையில் இருந்தபடியே ஊடுருவினார். பின்னர், சேரிக் குப்பனை விளித்தார்.

குப்பன் ஓடோடி வந்தான்.

''குப்பா! கொஞ்ச முந்தி நடந்திச்சே வழக்கு, அதுக்குப் பின்னாலே ஒரு சங்கதி கமுக்கமாய் ஒளிஞ்சிருக்குதாக்கும்! அது ஒனக்கு மட்டுப்பட நியாயமில்லே. எங்க குடும்பமும் அன்னக்கிளி குடும்பமும் பகையாகியுங்கூட, அந்தப் பகையைத் தாண்டி, என் மச்சான் மகள் அன்னமும் என் மகன் முத்தையனும் ஆசை பாராட்டி நேசம் பாராட்டி வந்தாங்க என்கிறது ஊரறிஞ்ச சங்கதிதான். அப்படியிருக்கையிலே, இந்தப் பொண்ணு அன்னக்கிளி, தான் முந்தானை போடப்போற மச்சான் தன்னோட கையைப் பிடிச்சு இழுத்ததை இப்பிடி அம்பலப்படுத்தி முத்தையனை அபராதம் கட்டிப்பூட வச்சிச்சே, அந்தச் சங்கதி உனக்கும் சரி, இங்கிட்டாலே கூடிக்கிடக்கிற ஊராருங்களுக்கும் சரி, பிடிபடாத ரகசியமாய்த்தான் இருக்கும்! விசயத்தைக் கேட்டுக்கிடு.

''குப்பா! ஒரு கடுத்தம், அன்னக்கிளியோட அப்பன் முத்தரசன் ஆத்தா கோயில் வேப்பமரக் கிளையைக் காணைக் கடவாய்க் களவாடிக் கொண்டுக் கிட்டுப் போக எத்தனிக்கையிலே, நான் அதைக் கண்டேன். என் கடமையைச் செஞ்சேன். முத்தரசன் அபராதம் கட்ட நேர்ந்திடுச்சு. அது ஆத்தா விதிச்ச விதி. அதுக்குப் பழிக்குப் பழிவாங்கத்தானுக்கும் இப்ப எம் மகனை அபராதம் செலுத்த வைக்க எங்க அன்னம் ஊரைக் கூட்டிச்சுதாக்கும்! என் ஊகம் மெய்யா பொய்யான்னு எங்க அன்னக்கிளியை நீயே கேட்டுக்கிடு, குப்பா!''

ஆறுகரைச் சுப்பையா அம்பலகாரர் பேச்சை முடித்தார்.

அன்னக்கிளி, ''ஆமா, மெய்யேதான்!'' என்று தலையை உலுக்கினாள்.

மீளவும் சிரித்தார் அம்பலகாரர். ''குப்பா!'' என்றார்.

''ஐயா, மூத்தவுகளே!''

''குப்பா! எம் மச்சான் மகள் அன்னத்தோட கையைப் பிடிச்சு இழுத்தான் எம் மகன் முத்தையன்; அதுக்கு நீதி கொடுத்துப் புட்டா ஆயிமகமாயி. சரி!...ஆனா, கொஞ்சப் பொழுதுக்கு முந்தி, எம் மகன் முத்தையனோட கையைப் புடிச்சு இழுத்திச்சே எங்க அன்னம், அதுக்கு ஆயி நாயம் சொல்லலையே'' என்று கேட்டுவிட்டுச் சிரிக்கலானார் சுப்பையா அம்பலகாரர்.

''ஆண்டே! ஆயி நாயம் சொன்னா என்ன, நீங்க நாயம் சொன்னா என்னுங்க? உங்க மகன்காரரோட உசிரைக் காப்பாத்'றத்துக்காவ அன்னம் முத்தையனோட கையைப் பிடிச்சு இழுத்திச்சுது. இல்லாங்காட்டி, அந்தச் சர்ப்பம் உங்க குலக் கொழுந்தைத் தீண்டியிருக்குங்களே! இந்த ஒரு நடப்பிலேருந்து, அன்னக்கிளிக்கு அதோட மச்சான் பேரிலே உள்ள கட்டுக்கடங்காத நேசம் புட்டுவச்சாப்பிலே புரியுதுங்களே! ரெண்டு வகையிலே கையைப் பிடிச்சு இழுத்துக்கிட்ட முத்தையன் அன்னக்கிளி ரெண்டு பேர் கையையும் சேர்த்து வைக்கப் போறீங்க நீங்க.''

உணர்ச்சிப் பெருக்கோடு சேரிக் கிழவன் குப்பன் பேசினான்.

''பலே, குப்பா!'' என்று கடகடவென்று வானம் அதிரச் சிரித்தார் ஆறுகரைத் தலைவர் சுப்பையா அம்பலகாரர். ''முத்தையா!'' என்று அலட்டினார். ''மகனே! ரோசம்னு ஒண்ணு உனக்கு மெய்யாலுமே இருந்திச்சுன்னா, நீ இந்த விநாடியிலேயே அன்னக்கிளியை மறந்துப்புடவே வும்! ஆமா, சொல்லிப்புட்டேன்!'' என்றார். மலையேறிய மதுரை வீரனைக் காட்சி கொடுத்தார் அவர்.

இரு ஜோடிக் கண்கள் அழுதன.

ஆனா, ஆயி மகமாயியோ சிரித்துக் கொண்டேயிருக்கிறாள்! ★

எல்லோருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!

RISING SUN BRAND

உதய சூரியன் மார்க்

மைதா, சூஜி, ஆட்டா

தயாரிப்பாளர்கள்:

செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட்

இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ் (முதல் மாடி)
எஸ்பிளனேட், சென்னை-1.

போன்: தலைமை அலுவலகம்—21043 (2 லைன்கள்)
மில்ஸ்: ஓட்டேரி, பெரம்பூர், சென்னை-12 போன்: 661701
தந்தி: "CENTURY"

SAKTHI - TPB-KAL

புனித நீராடி
புத்தாடை உடுத்தி மகிழ்ந்திருக்கும்
இந்நன்னாளில் அனைவருக்கும்
எங்கள் தீபாவளி வாழ்த்துகள்:
இந்நன்னாளில் மக்கள் சேவைக்கு
எம்மை மகிழ்வுடன் அர்பணிக்கிறோம்.
சேவிங்ஸ் பாங்க்-பிக்சட் டிபாசிட்
ரெக்கரிங் டிபாசிட்-மினி டிபாசிட்
விவசாயக் கடனுதவி மற்றும்
பல்வேறு பாங்கி தொழில்கள்

இன்ப தீபாவளி வாழ்த்துக்கள்

THE TANJORE PERMANENT BANK LTD. ESTD. 1901

தஞ்சாவூர் பர்மனெண்ட் பாங்க் லிமிடெட்

தஞ்சாவூர் பர்மனெண்ட் பாங்க் லிட்.

பதிவு அலுவலகம்: 1087 மிஷன்தெரு தஞ்சாவூர்
B. K. மாதவன் - சேர்மன்
R. சொக்கப்பா - செக்ரட்டரி

அனைவருக்கும் எங்களது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

திருமண
பட்டு
ஜவுளிகளுக்கு

ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்

போன்: 25859

121, ராஜவீதி, கோவை. 1

சார்பு நிறுவனங்கள்
கடை வீதி, சேலம்-1. | காந்தி ரோடு, காஞ்சீபுரம்-1.

தயாரிப்பு நிலையம்
ஸ்ரீராஜேஸ்வரி சில்க்ஸ்
காஞ்சீபுரம்

OSR

தீபாவளி
வாழ்த்துக்கள்
காமதேனு வனஸ்பதி
காமதேனு இருமுறை
சுத்திகரிக்கப்பட்ட
தாவர எண்ணெய்
காவேரி பார் சோப்
காவேரி சோப்புத்தூள்
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை-2, சேலம் ஜில்லா, தமிழ்நாடு
easterns MC 268


GOPAL TOOTHPOWDER
TRADE MARK
S.P.S. JAYAM & Co. MADURA
கோபால்பல்பொடி
வேல் கெமிக்கல் ஒர்க்ஸ், மதுரை.
அஞ்சால்
ANJOL
Manufactured By:- S.P.S. JAYAM & Co.,
VEL CHEMICAL WORKS...... MADURAI (S. India)
பல் வலி, பல் அரணை வாய் நாற்றம், பல்லில் இரத்தம் வடிதல் முதலிய பல் வியாதிகளைக்குணப்படுத்தி பல்களுக்கு வெண்மையும் பலத்தையும் தருகிறது.
அலுப்பினால் உண்டாகும் தலைவலி, ஜலதோஷம், தடுமல், காய்ச்சல், இருமல், திரேகவலி, நெஞ்சுவலி முதலியவைகளுக்கு சிறந்த அலுப்பு மருந்து
தயாரிப்பவர்கள்:- எஸ்.பி.எஸ்.ஜெயம் & கோ 25, கீழநாப்பாளையத்தெரு, மதுரை.
MINERVA

இருகுரல்

படைப்பது காப்பது துடைப்பதெல் லாமந்தப்
பரம்பொருளாலே நடக்கிறது - இங்கு
நடப்பது நடக்கும்; நடந்தே தீரும்;
நம்கையில் என்ன இருக்கிறது? - இந்த
நினைப்புடன் என்றும் நீயிரு! ஆமாம்,
நிம்மதி அதில்தான் கிடைக்கிறது-இரு
வினைப்பகை அறும்;இறை மலர்ப்பதம் தொழுவென
விரும்பி ஒருகுரல் அழைக்கிறது!
ஆல யந்தொழ அழைக்கிறது - பெரும்
ஆனந் தம்பெற உரைக்கிறது!
இருந்தால் இருக்கட்டும்; இழுக்கா தேயந்த
இறைவனைத் தனியே இருக்கவிடு! - மனம்
வருந்தா தே!உழை; வம்பளக் காதே:
வாழ்வெனும் பயிரைச் செழிக்கவிடு!
உடலுள் வளரும் உன்னத அறிவின்
ஊற்றுக் கண்ணை அடைப்பதுவோ - ஒரு
கடவுள் வகுத்த கணக்குப் படியெனக்
கைகளைக் கட்டிக் இடப்பதுவோ? - என்று
விஞ்ஞா னக்குரல் ஒலிக்கிறது! - தலை
விதியென் றுலது சிரிக்கிறது!
எதிரெதி ரான இருகுரல் கேட்டே
இதயம் மிகவும் குழம்புகிறேன்;
விதிவழி எதுவும் விளையுமென் றுல்இறை
வழிபா டேனென மயங்குகிறேன்;
முதிர்அறி வுழைப்பு முயற்சியில் எல்லாம்
முடியுமென் றுரைக்கவும் தயங்குகிறேன்!
புதிர்புதிர் தானோ? விடைகிடை யாதோ?
பொழுதெல் லாம்நான் புலம்புகிறேன்!
புலம்பல் முடியும்; முடியும்வரை - நின்று
பொறுத்திருப் பேன்,மனம் தெளியும்வரை!

சௌந்தரா கைலாசம்

தீபாவளி வந்தது!

எங்கள் வீட்டில் தீபாவளி
இன்று வந்தது!—அது
யாவ ருக்கும் புதியஆடை
எடுத்துத் தந்தது!

கங்கா ஸ்நானம் செய்யஅதி
காலை வந்தது!—உடன்
கடவு ளைநாம் வணங்கியதும்
களிப்புத் தந்தது!

தங்கை தம்பி மகிழவேமத்
தாப்பு வந்தது!—வெடி
சடச டன்னு விதிளங்கும்
சத்தம் தந்தது!

தின்ன முடி யாதுபண்டம்
தெவிட்டி விட்டது!—முழுதும்
தின்ப தற்குள் தீபாவளி
ஓடி விட்டது!

நெல்லை. ஆ. கணபதி

நீ

கண்ணிலும் நீயே, கண்மலர் காணுக்
கனவிலே இனிக்கும் கருப்பொருள் நீயே,
விண்ணிலும் நீயே, விண்வெளி அறியா
மேதினி வாழ்வின் கீதமும் நீயே.
தனிமையை நீக்க இனிமையாய் எழுவாய்;
தளிர்முகம் காட்டிப் புளகிதம் அருள்வாய்;
மனமெனும் பொழிலில் மதுகரம் ஆவாய்;
மந்தமா ருதமாய் வந்தெனைத் தொடுவாய்.
அருகிலே அமர்ந்தால் கண்ணிமைக் காமல்
அதிசயப் பொருள்போல் என்னையே பார்ப்பாய்,
உரிமையாய் நெருங்கி உன்னுயிர் மூச்சும்
உணர்ச்சியும் என்மேல் ஊர்வலம் விடுவாய்.
புத்தகம் எடுத்தால் அச்செழுத் தெல்லாம்
புகுந்துநீ மாயப் புன்னகை புரிவாய்,
நித்திரை நேரம் முத்தமிழ்ச் சுவைபோல்
நெஞ்சிலே புதிய பஞ்சணை விரிப்பாய்.
சித்திரச் செல்வி, சிறுநடை பயிலும்
சிந்துரச் சிமிழே, சந்தனச் சுடரே,
பத்தியம் தீர்ந்த பாயச விருந்தே,
பால்மணம் கமழும் பவளவாய் மகளே!

ர. அய்யாசாமி

அவள் அழகி!

ஆகாயப் பந்தலுக்குள்
அண்டமெண்ணிச் சுழலவிட்டு
வாகாய்அப் பந்தலுக்குள்
வடிவழகாய் அமர்பவள்காண்!

ஏழ்கடலின் யாழ்நரம்பில்
இன்னிசைப்பண் மீட்டிவிட்டு
நீள்கடலின் ஓரமொன்றில்
நிறைதவமாய் உறைபவள்காண்!

கன்னியர்தம் ஓரவிழிக்
கவர்ச்சியிலே தூண்டிவிட்டெவ்
வன்னியர்தம் நெஞ்சையும்ஓர்
அழைப்பின்றி வளைப்பவள்காண்!

மழலைமொழிச் செல்வரிடம்
மணிப்பரல்கள் உருட்டிவிட்டுக்
குழலைமொழித் தமிழைவெல்லக்
குறுகுறுப்பாய்ச் சிரிப்பவள்காண்!

தமிழழகன்

அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

DWARAKA CHIT FUND (P) LTD
REGD. OFFICE MADURAI-1.

தந்தி: தாரணி

போன்: 26978 30060

துவாரகா சிட் பண்ட் (பி) லிட்.,

(1956 இந்தியக் கம்பெனி சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டது)

இந்தியாவில் சிறந்த முறையில் ஏலச் சீட்டு நடத்துபவர்கள்

தலைமை & பதிவு அலுவலகம்: **மதுரை-9.**

பிரதி மாதமும் 12-50 செலுத்தி ரூ. 500/- சீட்டு முதல், ரூ. 12-50/- செலுத்தி ரூ. 50,000/- சீட்டுவரை எங்கள் எல்லா கிளைகளிலும் ஏலம் நடைபெற்று வருகின்றன என்பதை தெரியப் படுத்திக்கொள்கிறோம். இதர விபரங்களுக்கு எங்கள் கிளை அலுவலக மானேஜரை அணுகவும்.

தங்களின் தொடர்ந்த ஆதரவை விரும்பும்

S. சௌந்தரபாண்டியன், மானேஜிங் டைரக்டர்

ராஜம்

அனைவருக்கும் எமது மனமார்ந்த

தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

★

கண்கவர் பலரக கலர் போட்டோ

ஆப்செட் படக் காலண்டர்கள் தயாரிப்பதில்

தனிச் சிறப்புகள் வாய்ந்த ஒரே ஸ்தாபனம்

தயாரிப்பாளர்கள் :

ஓரியண்ட் லித்தோ பிரஸ்

P. B. 17

தந்தி: "YENPEYES"

சிவகாசி

போன் : 65, 124, 149

தம்பி மகன்

க. சிதம்பரசுப்ரமண்யன்



விசுவநாதையர் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ''நான்தான் பிரான்ஸிஸ் ஜகந்நாதன். என்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னீர்களாம். என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று பணிவுடனும் கம்பீரத்துடனும் மரியாதையுடனும் வரவேற்கும் அந்தக் கிறிஸ்தவரைப் பார்த்துத் திடுக்கிட்டார். நல்ல ஆஜானுபாகுவான சரீரம்; உயரத்துக்கேற்ற நல்ல பருமன். முகத்தில் கனமான பிரேமுடன் கூடிய கண்ணாடி. பாதிரியாவதற்கு முன்பு சகோதரர் போட்டுக் கொள்ளும் வெள்ளை அங்கி கழுத்திலிருந்து கால் வரையில் தொங்கிக்கொண்டிருந்தது. இடுப்பில் இடைக் கச்சை. கையில் கனத்த அட்டையுடன் கூடிய கிறிஸ்துவச் சமயப் புத்தகம். முகத்தில் அறிவின் ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது.

விசுவநாதையர் ஆச்சரியத்தினால் பேச முடியாமல் திகைத்து நின்றார். பிறகு தம்மைச் சிறிது சமாளித்துக்கொண்டு, ''மன்னிக்கவேண்டும். நான் தேடி வந்தது உங்களைத்தானா என்று சந்தேகிக்கிறேன். இங்கு ஜகந்நாதன் என்ற பெயரில் வேறு யாராவது இருக்கிறார்களா? சுமார் இருபது வருஷங்களுக்கு முன்பு சோமசுந்தரம் என்பவர் ஜகந்நாதன் என்ற பத்து வயதுப் பையனை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார். நான் பார்க்க வந்திருப்பது அந்தப் பையனைத்தான். அவன் இங்கேதான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். தாங்கள் தயவுசெய்து அவன் யார் என்று கண்டுபிடித்து அனுப்பி வைக்க முடியுமா? தங்களுக்குச் சிரமம் கொடுப்பதற்கு மன்னிக்க வேண்டும்!''

''இங்கே வேறு ஜகந்நாதன் கிடையாது. ஜகந்நாதன் என்ற பெயர் கொண்டவன் நான் ஒருவனே. நீங்கள் தேடி வந்த பையன் நானாக இருக்க முடியாது என்று முடிவுகட்டி விட்டீர்கள். ஆனால், அதிருஷ்ட வசத்தாலோ துரதிருஷ்ட வசத்தாலோ நானேதான் அந்தப் பையன். நீங்கள் என்னை எளிதில் கண்டுபிடித்திருக்க முடியாது. ஆனால், நான் உங்களைக் கண்டு பிடிப்பதில் சிரமப்படவே இல்லை. நீங்கள்தாமே விசுவநாதையர்; என் தகப்பனாரின் அண்ணன்?''

விசுவநாதையர் மறுபடியும் அதிர்ச்சியால் சிறிது குழம்பிப் போனார். திரும்பவும் மனம் தேறிப் புன்னகையை வரவழைத்துக்கொண்டு, ''நீ....நீங்கள்'' என்று ஆரம்பித்தார்.

''நீ என்றே கூப்பிடுங்கள். அதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. வயதிலும் பெரியவர்கள்; தகப்பனார் இடத்தில் இருக்கிறீர்கள்'' என்றார் ஜகந்நாதன் அடக்கத்துடன்.

''நான் உன்னைச் சிறுவனாக இருந்தபொழுது பார்த்தது. அதற்குப் பிறகு எத்தனை மாறுதல்! அதனால்தான் நான் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.''

''உண்மைதான். எவ்வளவோ மாறுதல்கள்; உடம்பிலே மாறுதல்; உடையிலே மாறுதல்; உள்ளத்திலே மாறுதல்; எண்ணத்திலே மாறுதல்; நம்பிக்கையில் மாறுதல்'' என்றார் ஜகந்நாதன் சிரித்துக்கொண்டே.

''ஆனால், நான் அன்றுபோல் இன்றும் இருக்கிறேன். வயதினால் ஏற்பட்ட முதிர்ச்சியைத் தவிர வேறு மாறுதல் ஒன்றும் இல்லை. அதனால் என்னை உனக்குக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படவில்லை. ஆனால், என்னை அதிகங்கூடப் பார்த்ததில்லையே; அப்படியும் ஞாபகம் வைத்திருக்கிறாயே!''

''நான் உங்களைப் பார்த்தது ஒரே ஒரு தடவைதான். நீங்கள் பழனி, மதுரை, திருச்செந்தூர் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று பிரார்த்தனைகளை முடித்துவிட்டு, உங்கள் மனைவி அதாவது என் பெரிய தாயார், உங்கள் பையன், பெண் (இவர்கள் பெயர் எனக்கு ஞாபகம் வரவில்லை) ஆகியவர்களுடன் இரண்டு நாள் தங்கிவிட்டுப் போகலாம் என்று எங்கள் வீட்டுக்கு வந்தீர்கள். ஆனால், வந்ததிலிருந்து உங்கள் மனைவிக்குக் கிடுகிடுவென ஜுரம் கடுமையாகி விட்டது. பெரிய வைத்தியர்களைக் கொண்டு காட்டினதில், எல்லாப் பரிசோதனைகளும் செய்துவிட்டு 'டைபாயிடு' என்றார்கள். உங்களுடைய 'ரஜா' தீர்ந்து விட்டது. நாலைந்து நாள் இருந்து விட்டு நீங்கள் போய்விட்டீர்கள். உங்கள் மனைவிக்கு உடம்பு சரியாக இரண்டு மாதங்கள் ஆயின. அதன் பிறகு அவர் புறப்பட்டு வந்தார்.''

''பேஷ்! ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறாயே! அது போகட்டும். உன் பாட்டனாரை, என் தகப்பனாரை, ஞாபகம் இருக்கிறதா?''

''ஓ! நன்றாக ஞாபகம் இருக்கிறது. அவரையும் இரண்டு மூன்று தடவைக்கு மேல் பார்த்ததில்லை. ஆள் குட்டையாகவும் கட்டையாகவும் இருப்பார். அவர் பேசுகையில் சிறிது திக்கல் இருக்கும். அவரைப் போலவே பேசிக் கேலி செய்வேன். அதைக் கேட்டுக் கேட்டுச் சிரித்துச் சந்தோஷப்படுவார். படிப்பிலே நான் மகா மேதாவி என்று அவர் நினைப்பு. 'ராஜா! உன்னை எம். ஏ. வரையில் படிக்க வைக்கப் போறேண்டா. எல்லாரையும் படிப்பிலே தூக்கி அடிக்கணும் நீ' என்று மார்தட்டிப் பேசுவார்'' என்று சொல்லிவிட்டுப் பழைய நினைவிலே மனத்தைச் சிறிது பறி கொடுத்து நிறுத்தினார்.

விசுவநாதையருக்கும் அந்தப் பழைய நினைவுகள் நெஞ்சிலே புகுந்து உள்ளத்தைக் குழப்பின. சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிரான்ஸிஸ் ஜகந்நாதன், மனத்தைத் தற்காலத்துக்குப் பிடித்து இழுத்து வந்து, புன்முறுவலுடன், ''நீங்கள் தேடி வந்த உங்கள் தம்பியின் மகன் நான் என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் கொடுத்துவிட்டேன் அல்லவா? இனியும் சந்தேகம் இல்லையே?'' என்றார்,

"சந்தேகம் என்ன? அதற்குச் சிறிதும் இடம் கொடுக்காதபடி பழைய சம்பவங்களைச் சொல்லி நிரூபித்துவிட்டாயே!"

"தாங்கள் இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டு என்னைத் தேடி வந்த காரணம்?"

"காரணமா? உன் பாட்டனார் சாகும் காலத்தில் உன்னைத் தேடிக் கண்டுபிடித்து, உனக்குத் திருமணம் செய்வித்து, உன் வாழ்க்கையை உருவாக்க வேண்டும் என்று என்னிடம் உறுதிமொழி வாங்கிப் போயிருக்கிறார்."

"அப்படியா! ஆனால் என்னைத் தேடிக் கண்டுபிடிக்க இருபது வருஷங்கள்!

"நீ பரிகசிப்பது நியாயந்தான். உனக்கு என்ன பதில் சொல்வது என்றுதான் புரியவில்லை. நான் என் வாழ்நாள் முழுவதும் வடக்கேயே உத்தியோகத்தில் இருந்துவிட்டேன். போன வருஷந்தான் ஓய்வுபெற்று இங்கு வந்து சேர்ந்தேன். வந்ததிலிருந்து உன்னைக் கண்டுபிடிக்க மிகவும் பிரயாசைப்பட்டுத்தான் வருகிறேன். ஆனால் இப்படி நடந்திருக்கும் என்று கனவிலும் நினைக்கவில்லை."

"இதற்கு யார் பொறுப்பு?"

"விதிதான்."

"மன்னிக்க வேண்டும். மனிதனுடைய பொறுப்பற்ற செயல்களுக்கும், செய்த தவறுகளுக்கும், செய்யாமல் விட்ட காரியங்களுக்கும் 'விதி' என்று சொல்வது இந்து சமூகத்தின் இயல்பாகிவிட்டதல்லவா?"

"இப்பொழுது கிறிஸ்தவன் என்ற முறையில் பேசுகிறாயா?"

"இல்லவே இல்லை. நான் பத்து வயது வரையில் ஹிந்துவாகவும் பிராம்மணனாகவும் இருந்தவன்தான். இந்துவாக இருந்தாலும் இதையே கேட்டிருப்பேன். மனிதன் என்ற முறையில்தான் கேட்டேன். ஆதரவில்லாத ஒரு சிறுவனை வைத்துக் காப்பாற்ற முடியாத ஒரு சமூகத்துக்குத் தத்துவம் என்ன? பண்பாடு என்ன? பழமை என்ன வேண்டியிருக்கிறது?"

"உன் குற்றச்சாட்டுக்கு மன்னிப்புக் கோருவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் நேர்ந்தது என்னவோ சந்தர்ப்பங்களின் சூழ்ச்சியே."

"என்ன சந்தர்ப்பங்கள்?"

"உன் தகப்பனார் இறந்தவுடன், உன் தாய் உன்னையும் அழைத்துக்கொண்டு அவள் தமக்கை வீட்டுக்குப் போய்விட்டாள்...."

"வேறு வழி? அவள் என்ன செய்திருக்க முடியும்? என் பாட்டனார் என்னையும் என் தாயையும் தம்முடன் வைத்துக் காப்பாற்றியிருக்கலாமே?"

"அதற்குக்கூட அவருக்கு அப்பொழுது வசதி இல்லை. அவருக்கு வருமானம் அவருடைய பென்ஷன்தான். அதுவும் சிறு தொகை. அவர் ஒருவருக்கே இழுத்துப் பறித்துக் கொண்டு வரும். ஆஸ்தி, ஒன்றுக்கும் உபயோகமில்லாத கரம்பை நிலம். வருஷந்தோறும் வரி கட்டுவதுதான் மிச்சம். அவரோ ஒண்டிக்கட்டை. மனைவி முன்பே காலமாகிவிட்டாள். அவரைக் கவனிக்க யார்? நாலு குழந்தைகளுடன் விதவையாகியிருந்த பெண்ணிடம் தம் பென்ஷனைக் கொடுத்துவிட்டுக் காலத்தைக் கடத்தி வந்தார். பெண்ணும் வசதியானவள் அல்ல. நடுத்தரக் குடித்தனம். பெண்ணை விட்டு உங்களுடன் இருந்துவிடலாமென்றால், அதை வைத்துக்கொண்டு மூன்று பேர் காலந் தள்ள முடியாது. இதை எல்லாம் எண்ணித் தவித்துக்கொண்டுதான் இருந்தார்."

"நீங்களாவது ஏதாவது செய்திருக்கலாமே? உடன் பிறந்த தம்பியின் குடும்பம்தானே?"

"அந்தக் காலத்தில் நான் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தேன். அப்பொழுது உத்தியோகம் சின்னது. சம்பளம் குறைவு. குடும்பம் இப்பொழுதுள்ளது போலவேதான். வரும்படி அரைவயிற்றுக்குக் கூடப் போதவில்லை. நான் பல பரீட்சைகள் தேறி, பெரிய உத்தியோகம் அடைய விட்டுத்தான் சிறிது சௌகரியம். நான் சௌகரியம் அடைந்த காலத்தில் உங்கள் தொடர்பே இல்லாமற் போய்விட்டது."

"சரி. இங்கு எப்படி வந்து சேர்ந்தேன்? அதில் எனக்கு வருத்தம் சிறிதும் இல்லை. அதை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். எப்படித் துணிந்து என்னை இந்தக் கிறிஸ்தவ விடுதியில் சேர்த்தார்கள் என்பது புரியவில்லை. நடந்தது எப்படி என்று அறியவே அதைக் கேட்கிறேன்."

"அதுவும் சந்தர்ப்ப விபரீதத்தினால்தான் நடந்தது. உன் தாய் தன் தமக்கையுடன் இருந்தாள் அல்லவா? இருக்கவாவது? சில மாதங்களே இருந்திருப்பாள்; அதற்குள்ளாகவே தன் புருஷன் சென்ற இடத்துக்குப் போய்விட்டாள். இந்தத் தகவல்கூட எங்களுக்குத் தெரியாது. ஏனென்றால் உன் தாயாரின் தமக்கை புருஷன் சோமசுந்தரத்துக்கு எங்களுடன் ஒரு தொடர்பும் கிடையாது. ஆகையால் அந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை. அவர் நிலைமையோ மிகவும் பரிதாபமானது. உத்தியோகம் போய்த் தம் குடும்பத்தையே காப்பாற்ற வழியில்லாமல் திணறிக்கொண்டிருந்தார். காலமோ பஞ்ச காலம். அரிசி கிடையாது. சர்க்கரை கிடையாது. விறகு கிடையாது. பருப்புக் கிடையாது. எல்லாவற்றுக்கும் கட்டுப்பாடு. அவருக்கு வருமானமே கிடையாது. இந்த நிலையில் அவர் பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. அப்பொழுது, அவருடைய நண்பர், அவருக்குக் கொழும்பிலே ஒரு வேலை சிபாரிசு செய்து வாங்கிக் கொடுத்தார். ஒரு மாதத்தில் கிளம்ப வேண்டும். உன்னையும் கொழும்புக்கு அழைத்துப் போகத்தான் விரும்பினாள் உன் பெரிய தாயார். ஆனால் சோமசுந்தரம் அதை விரும்பவில்லை."

"ஏன், ஒரு சிறு பையன் அவருக்குப் பாரமாகிவிட்டானா?"

"ஓரளவு பாரந்தான். அந்தக் காரணத்துக்காக அவர் உன்னை அழைத்துப் போகாமல் இருக்கவில்லை. அவருக்கு ஏற்படுத்தப்பட்ட சம்பளம் மிகக் குறைவு. அங்குள்ள விலைவாசிகளின் நிலையும் தெரியவில்லை. வசதியான நிலையில் இருக்காது என்று மாத்திரம் ஊகித்தார். இந்த நிலையில் உன்னையும் எப்படி அழைத்துப் போவது என்றுதான் தயங்கினார்."

"இவ்வளவு பரந்த தேசத்தில், இவ்வளவு பழமையான சமூகத்தில் ஓர் அநாதைப் பையனைக் காப்பாற்ற ஓர் ஆள் கிடைக்கவில்லை. அன்பையும் பண்பையும் போதிக்கும் பழமையான சமூகம் அல்லவா?"

"இந்தச் சமூகத்திலே எத்தனையோ ஏழைப் பையன்களுக்கு வாரச் சாப்பாடு (ஒரு வாரத்தில் ஒரு நாள் சாப்பாடு) போட்டுப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வந்து பெயரும் புகழும் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சோமசுந்தரத்துக்கு எங்கு அநாதாசிரமம் இருக்கிறது, யார் நடத்துகிறார்கள், அந்தப் பையனை அங்குச் சேர்ப்பது உசிதமா என்று விசாரித்துப் பொருத்தமான இடத்தில் சேர்க்க நேரம் இல்லை. அயல்நாட்டுக்குப் போக வேண்டிய அரசாங்கப் பத்திரங்களைப் பெறுவதும், வரவு செலவுகளை முடித்துக் கொள்வதுங்கூட அவருக்குச் சிரமமாக இருந்தன."

"அப்போது ஹோலி க்ரைஸ்ட் அநாதை விடுதி ஒன்றுதான் தன் இரு கைகளையும் விரித்து அந்தப் பையனுக்கு இருப்பிடமும் வாழ்க்கையும் தர முன்வந்தது போலும்!"

"அது உண்மைதான். ஆனாலும், சோமசுந்தரம் முழு மனத்துடன் இங்கே சேர்த்துவிடவில்லை. இங்கே உன்னைச் சேர்த்துவிட உதவியாக இருந்த நண்பர் சொன்னாராம். 'நீங்கள் பையனைச் சேர்த்துவிட்டுக் கொழும்பு போய்விடுங்கள். உங்கள் நிலைமை அங்கே திருப்திகரமாக இருந்தால் அங்கேயே அழைத்துக்கொண்டு விடலாம்' என்று இதமாகச் சொல்லியிருக்கிறார். உன் பெரிய தகப்பனார் சோமசுந்தரத்துக்கும் அது சரியாகவே பட்டது. சேர்த்துவிட்டார்."

"பிறகு?"

"சோமசுந்தரம் என்ன ஆனார் என்பதே தெரியவில்லை. உன்னைப் பற்றிய தகவல் எனக்கு ஒன்றுமே தெரியாமற் போய்விட்டது. நான் ஓய்வு பெற்று இங்கு வந்த பிறகுதான் தீவிரமாக உன்னைத் தேடப் புறப்பட்டேன். சங்கிலித் தொடர்போல், நம்முடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவராகத் தேடிப் பிடித்து விசாரித்து, உன் பெரிய தகப்பனார் சோமசுந்தரத்தின் நண்பர் திரு அருள்சாமியைக் கண்டுபிடித்தேன். அவர்தாம் உன்னை இங்கே சேர்க்க உதவி செய்திருக்கிறார். அவர் மூலந்தான் இங்கே உன்னைத் தேடி வந்தேன்."

"இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?"

"அதுதான் எனக்கு இப்பொழுது புரியவில்லை. என் சொந்தத் தம்பி மகனாக இருந்தாலும் நீ அந்நிய மதத்தினனாகி விட்டாய்; அந்நியனாகி விட்டாய். இனி நாம் எப்படி இணைந்திருக்க முடியும் என்பது புரியவில்லை."

"இனி எதற்கு இணைப்பு? நீங்கள் உங்கள் வழி போங்கள். நான் என் வழி போகிறேன்."

"நீ கிறிஸ்தவனாகிவிட்டபடியால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. ஒவ்வொரு தீர்க்கதரிசியும் அவரவர்

மதந்தான் உண்மையானதென்பதைப் பறை சாற்றியிருக்கிறார்கள். ஆனால் இந்து மதம் ஒன்றுதான், எல்லா மதங்களும் சம்மதம் என்று சொல்கிறது. கீதையில் பகவான் கண்ணன், 'நீ எந்த விதமாக வணங்கி வழிபடுகிறாயோ அந்த விதத்திலேயே வந்து உன்னைக் காக்கிறேன்' என்று சொல்லியிருக்கிறான்.''

''ஸார், நீங்கள் பெரியவர்கள். உங்களுடன் மத சம்பந்தமாகச் சர்ச்சையில் ஈடுபட நான் விரும்பவில்லை. ஆனால் அதை நீங்கள் ஆரம்பித்து விட்டதனால் சொல்ல வேண்டி வருகிறது. உங்கள் மதத்தில் லட்சியங்கள், கொள்கைகள், கருத்துக்கள், தத்துவங்கள் எல்லாம் உயர்ந்தனவாகத்தான் இருக்கின்றன. ஆனால், வாழ்க்கையில் அவற்றில் ஒன்றாவது அநுஷ்டிக்கப்படுவதில்லை.''

''எப்படி?''

''நந்தனார் சரித்திரத்தைப் பக்தியுடன் கேட்பார்கள். ஆனால் தீண்டத்தகாதவர்கள் என்று சிலரை ஒதுக்குவார்கள். தங்கள் பண்ணையாளை விரட்டி விரட்டி ஓடச்செய்வார்கள். பசுவே தெய்வம் என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். பசு வதை தடை செய்யப்பட வேண்டும் என்று சட்டசபைகளில் முழங்குவார்கள். ஆனால், பசுவைச் சரியாகப் பராமரிக்க மாட்டார்கள்; கன்றுக்குப் பால் விட மாட்டார்கள். ஆகவே, நம் எண்ணங்களும் கருத்துக்களும் மாத்திரம் உயர்ந்தனவாக மட்டும் இருந்தால் போதாது; நம் செயலும் உயர்ந்ததாக இருக்க வேண்டும்.''

''அதாவது இந்து மதத்தில் கருத்து இருக்கிறது, செயல் இல்லை என்று சொல்கிறாய். உண்மை அப்படி அல்ல. எல்லாவற்றையும் தனக்குள்ளே வாங்கிக்கொள்ளும் ஆன்மிக உணர்வே இந்து சமயக் கோட்பாடு.''

''ஆனால் மக்கள் எப்படி வாழ்ந்து காட்டுகிறார்கள் என்பதைத்தான் நான் கேட்கிறேன். எவ்வளவு தூரம் இந்தச் சமயக் கோட்பாடுகள் நடைமுறையில் கையாளப்படுகின்றன என்றுதான் கேட்கிறேன். எங்கள் பகவான் ஏசு தம் மதத்தை உருவாக்கினார். ஆனால் அவர் வெறும் மதபோதகராக இருந்து உபதேசித்து மாத்திரம் போகவில்லை. அவர் உபதேசப்படியே வாழ்ந்து காட்டினார். தம்மைப் போலவே பிறரையும் உயர்த்தினார். சிலுவை என்பது ஒரு சின்னம். பிறருக்காக யார் கஷ்டங்களை ஏற்கிறார்களோ அவர்கள் எல்லாரும் சிலுவையை ஏற்கிறார்கள். அதையேதான் நான் ஏற்க விரும்புகிறேன். என்னால் பிறருக்குச் சிறிதளவாவது நன்மை ஏற்பட்டால், அதுவே என் பயனாகக் கருதுவேன். உலகத்துக்கு நாம் செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. என்னால் உலகத்துக்குச் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று ஆகுமேயானால், அதுவே என் பிறவியின் பயன் எனக் கருதுவேன். தமக்காக வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்து சென்ற எங்கள் பெரியார்களைப் பின்பற்ற முயல்வேன். எங்கள் ஏசு, அதற்கு ஊக்கத்தையும் ஆவேசத்தையும் ஊட்டி வருகிறார்.''

''பிறருக்காக வாழ்வது, பிறருக்காகத் தியாகம் செய்வது என்பது ஒரு தனிச் சமயத்துக்கோ சமூகத்துக்கோ தனி உரிமையல்ல. எல்லாச் சமயங்களிலும் எல்லாச் சமூகங்களிலும் இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருக்கிறார்கள். ததீசி முனிவர் முதல் மகாத்மா காந்தி ஈறாக, தன்னலமற்றுத்தான் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் உலகம் நம் சேவைக்குக் காத்துக்கொண்டு இருப்பதாக நாம் எண்ணிவிடக் கூடாது. நம்மால் மாத்திரம் உலகத்தை உயர்த்திவிடவும் முடியாது. கன்பூஷியஸ், மோஸஸ், புத்தன், ஏசு, காந்தி இவ்வளவு பேர்களுக்கும் பிறகு, உலகம் பிரமாதமாக உயர்ந்துவிடவில்லை. நான் உலகத்தைச் சீர்திருத்துகிறேன், உலகத்துக்காகப் பாடுபடுகிறேன் என்பதில் ஆணவந்தான் அதிகம் தொனிக்கிறது. சிலுவையின் அர்த்தம் என்ன என்று கேட்டதற்கு ஒரு பாதிரி மகான் என்ன சொன்னார் தெரியுமா?''

''என்ன சொன்னார்?''

''தான் என்ற அகங்காரத்தை வெட்டுவதுதான் உயர்வு என்றார்.''

''ஆகா! எவ்வளவு உயர்ந்த கற்பனை!''

''பார்க்கப் போனால், நாம் செய்வது ஒன்றும் இல்லை. நாம் செய்வதாக நினைத்துக் கொள்கிறோம். பகவான் சொன்னார்: 'நீ ஒன்றும் செய்யவில்லையப்பா. நான்தான் செய்கிறேன். ஆனால் நீ செய்ததாக உனக்குப் பேரும் புகழும் வாங்கிக் கொடுக்கிறேன்' என்று சொல்லி விட்டு, 'செய்வதைப் பயன் கருதாது செய்' என்றார். பயன் கருதாது செய்யும் பொழுது அங்கு ஆணவத்துக்கு இடமே இல்லை.''

ஜகந்நாதன் சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. விசுவநாதையர் ஆணவத்தைப் பற்றிச் சொன்னது அவர் மனத்தில் பதிந்துவிட்டது போலும்! யோசனையில் ஆழ்ந்து நின்றார். விசுவநாதையரும் தாம் பேசிய போக்கிலேயே எண்ணத்தைத் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தார். ஐந்து நிமிஷ நேரம் அவரவர் சிந்தனையிலேயே லயித்து நின்றனர். ஜகந்நாதன் மறுபடியும் புன்னகையை வரவழைத்துக்கொண்டு, ''மிக்க நன்றி. உங்களுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தாலும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. என்னை இவ்வளவு பிரயாசையுடன் தேடி வந்ததற்கு மிக்க நன்றி. நான் செய்ய வேண்டிய காரியம் ஏதாவது இருக்கிறதா? சொல்லுங்கள். முடியக் கூடியதைச் செய்கிறேன்.''

''இருக்கிறது. அதற்காகத்தான் உன்னைத் தேடி வந்தேன்.''

''என்ன என்று சொல்லலாமோ?''

''உன் பாட்டனாருக்கு, ஒன்றும் உபயோகப்படாத கரம்பை நிலந்தான் ஆஸ்தி என்று சொன்னேன் அல்லவா? இப்பொழுது அந்த இடத்துக்குப் பெரிய மவுசு ஏற்பட்டிருக்கிறது. நாலு பக்கத்திலும் பாக்டரிகள் ஏற்பட்டுவிட்டன. அதனால் இந்த இடத்துக்கும் கிராக்கி. அறுபதினாயிரத்துக்குப் பேசியிருக்கிறேன். உன்னைக் கண்டு பிடிக்காமல் விட்டு, நான்தான் வாரிசு என்று சொல்லி விக்கிரயம் செய்ய என் மனம் இடம் கொடுக்கவில்லை. கிரயப் பத்திரத்தில் நீயும் கையெழுத்து இட வேண்டும்; உன் பங்கை நீ எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் உன்னைத் தேடி வந்தேன். இப்பொழுது ஒரு புதுச் சிக்கல் வந்திருக்கிறது. ஹிந்து வாரிசுரிமைச் சட்டப்படி, ஒரு கிறிஸ்தவருக்கு உரிமை இருக்கிறதா என்ற பிரச்னை வரும் போல இருக்கிறது. இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்றுதான் தெரியவில்லை.''

''ஓ! அதுவா? நீங்கள் அவஸ்தைப் படவேண்டாம். நான் அதற்கு வழி சொல்லிக் கொடுக்கிறேன். இதைப் பற்றிச் சட்ட நிபுணர்களை விசாரியுங்கள். எனக்கு உரிமை கிடையாது என்றால் தொல்லை விட்டது. நீங்களே சட்டப்படி கிரயம் செய்து கொடுத்துவிடுங்கள். எனக்கு உரிமை உண்டு என்றால் நான் உங்களுக்கு விடுதலை எழுதிக் கொடுத்து விடுகிறேன். எனக்கு அந்தச் சொத்தில் பங்கு வேண்டாம்.''

''ஏன் வேண்டாம்? சட்டம் எப்படி இருந்தாலும் உன் பங்கு எனக்கும் வேண்டாம். சட்டம் என்பது உறுதிப் பொருள் அல்ல; அதற்கும் மேல் தர்மம் இருக்கிறது. அதன்படிதான் நான் நடக்க விரும்புகிறேன். சட்டத்துக்குச் செல்வாக்கும் செலாவணியும் இருக்கலாம். தருமத்துக்குத்தான் மதிப்பு உண்டு. உனக்குத் தெரியுமோ என்னவோ? தேசபந்து சி. ஆர். தாஸ் பெரிய சட்ட நிபுணர். அவருடைய தந்தை கடன் பட்டு, அதைக் கொடுக்க முடியாமல் இன்ஸால்வெண்டு மனு கொடுத்துவிட்டார். சி. ஆர். தாஸ் பெரியவராகிப் புகழ் பெற்ற வக்கீலாகி ஏராளமாகப் பணம் திரட்டினார். சட்டப்படி தகப்பனாருடைய கடனை அவர் தீர்க்கவேண்டியதில்லை. ஆனால் தந்தை பட்ட கடன் தம் கடனே என்ற தர்மத்தின்படி அந்தக் கடனையெல்லாம் பைசா பாக்கியில்லாமல் கொடுத்துத் தீர்த்தார். ஆகவே, சட்டப்படி எப்படிச் செய்ய வேண்டுமோ செய்துகொள்ளுவோம். ஆனால், தருமப்படி உனக்குச் சேர வேண்டியதை உனக்குக் கொடுத்தே தீருவேன்.''

''ஆனால் அதைப் பெற்றுக்கொள்ளவே மாட்டேன்.''

''ஏன்?''

''எனக்குப் பணம், பாதுகாப்பு, அன்பு இவை தேவைப்பட்ட பொழுது நீங்கள் அவற்றில் ஒன்றையும் கொடுத்து உதவவில்லை. இப்பொழுது அதற்குப் பதிலாகப் பணத்தைக் கொடுத்து ஈடுகட்ட முயல்கிறீர்கள். இப்பொழுது அது எனக்குத் தேவையும் இல்லை. நான் விரும்பவும் இல்லை.''

''அப்பொழுது நாங்கள் செய்த பிழைக்கு இது பிராயச்சித்தம் ஆகும் அல்லவா? அதுவும் உன்னுடைய சொத்துத்தானே?''

''புறக்கணிக்கப்பட்ட எனக்குச் சொத்துக்கு மாத்திரம் உரிமை எங்கு வரும்? அது மாத்திரம் அல்ல; நான் பிரம்மசரிய விரதம் பூண்டவன். சேவைக்கு என் உடல் பொருள் ஆவியை அர்ப்பித்தவன். நான் இந்தப் பணத்தை வாங்கி என்ன செய்வது? தன் தேவைக்கு மேல் உள்ள பணத்தை வைத்துக்கொண்டிருப்பதே தீய செயல் என்று மகான்கள் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? தேவையே இல்லாத ஒரு பொருளை வாங்கிக்கொண்டு நான் என்ன செய்வது? இவ்வளவு நாள் கழித்து என்னைத் தேடி வந்து என்னைப் பாவத்துக்கு உள்ளாக்காதீர்கள்.''

விசுவநாதையர் சிறிது தயங்கினார். ''நான் பாவத்தைக் கண்டு பயப்படுகிறவன். அப்படியிருக்க நான் உன்னைத் தீய செயல்களிலே இறங்கச் சொல்வேனா? அப்படி உனக்குப் பணம் தேவையில்லையானால் இந்த ஸ்தாபனத்துக்கு நன்கொடையாக அளித்துவிடலாமே?''

பிரான்ஸிஸ் ஜகந்நாதன் சிறிது யோசித்தார். அவர் சொன்னது சிறிது உசிதமாகப் பட்டது. தம்மை ஆளாக்கிய அந்தத் தர்ம ஸ்தாபனத்துக்குத் தாம் பட்டிருக்கும் கடனைத் தீர்த்துக் கொள்ளலாம் அல்லவா? ஆனால் அடுத்த நிமிஷம் அது சரியாகப் படவில்லை. 'என்னைப் பெற்ற சிரமத்துக்குக் கூலியாக இதை வைத்துக் கொள்' என்று யாராவது தாயிடம் கொடுப்பார்களா? அதுபோல, நிராதரவாக, ஒன்றுமே இல்லாமல் நின்ற தமக்குப் புகலிடம் கொடுத்த அந்தத் தர்ம ஸ்தாபனத்துக்குப் பணத்தால் ஈடு செய்துவிட முடியுமா? முடியாது. அது தீர்க்க முடியாத கடன். தம் உழைப்பாலும், தம் சேவையாலும் அவர் தீர்க்கவேண்டிய கடன் அது. அத்துடன் பணம் என்ற விவகாரம் வரும்பொழுதே புனிதத் தன்மை போய்விடுகிறது. 'இந்த ஸ்தாபனம் எனக்குச் செய்ததைவிடப் பதின்மடங்கு நான் செய்துவிட்டேன்' என்ற எண்ணமும் வந்துவிடலாம். ஆகவே அது வேண்டாம்.'

அவர் சொன்னார்: ''நான் வேறு ஓர் ஏற்பாடு சொல்லுகிறேன். இந்த ஸ்தாபனத்துக்கும் எனக்கும் உள்ள உறவு புனிதமானது. அதில் பணத்தைக் கொண்டு வந்து தெய்விகத்தன்மையைப் பாழ்படுத்த விரும்பவில்லை. அதற்குப் பதிலாக நீங்கள் வேறு ஒன்று செய்யலாம்.''

''என்ன செய்ய வேண்டும்?''

''என்னைக் காப்பாற்றத் தவறினீர்கள். அது போல மறுபடியும் ஏற்படாமல் உங்கள் சமூகத்துக்கு ஓர் அநாதாசிரமம் ஆரம்பிக்கக் கூடாதா? எனக்குக் கிடைக்காத சந்தர்ப்பத்தை மற்றப் பையன்களுக்குக் கொடுங்கள். நான் நஷ்டமடைந்துவிட்டதாக நினைத்துவிட வேண்டாம். உங்களுக்கு, உங்கள் சமூகத்துக்கு லாபம்.''

விசுவநாதையர் மெய்ம்மறந்து நின்றார். அவர் உள்ளம் கசிந்து நின்றது. கண்கள் பனித்தன.

''எங்கள் இந்து அநாதாசிரமத்துக்கு, பிரான்ஸிஸ் ஜகந்நாதன் நன்கொடைதான் முதல் நன்கொடை!''

''வேண்டாம். வேண்டாம் என் பெயரே வேண்டாம். நீங்கள் சிறிது நேரத்துக்கு முன்பு சொன்னீர்களே, அந்த ஆணவத்தை என்மேல் சுமத்தாதீர்கள். உங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன். விநோபா பாவே ஒரு புண்ணிய ஸ்தலத்துக்குச் சென்றிருந்தார். அந்தக் கோவில் படிக்கட்டு ஒவ்வொன்றிலும் யார் யார் அந்தப் படிகள் கட்டுவதற்கு உபயம் செய்தது என்று பொறித்திருந்ததாம். அதைப் பார்த்தவுடனே விநோபாஜி, 'இவ்வளவு ஆணவமும் விளம்பரமும் உள்ள இடத்திலே ஆண்டவன் எங்கு இருக்கப் போகிறார்?' என்று சொல்லிக் கோவிலுக்குள் செல்லாமலே திரும்பிவிட்டாராம். அது போல, இந்த நன்கொடைக்கு என் ஆணவ முத்திரை வேண்டாம். 'ஓர் உண்மைக் கிறிஸ்துவனின் நன்கொடை' என்று வேண்டுமானால் போட்டுக்கொள்ளுங்கள்.''

பிரமிப்பினால் விசுவநாதையர் பூரித்து நின்றார். அவர் சொன்னார்: ''மனிதனுடைய ஆன்மிக வளர்ச்சிக்கு ஞானம் வைராக்கியம் ஆகிய இரண்டுமே அஸ்திவாரங்கள் என்று எங்கள் பெரியவர்கள் சொல்லுவார்கள். இவை இரண்டும் உன்னிடம் நிரம்பியிருக்கின்றன. உனக்கு இந்த மனப் பக்குவம் வந்ததற்கு நான் பெருமைப் படுகிறேன். 'பிரான்ஸிஸ் ஜகந்நாதன் என் தம்பி மகன்' என்று சொல்லிக் கொள்வதில் அளவற்ற மகிழ்ச்சி கொள்வேன்'' என்றார். ★

கங்கா ஸ்நானம் செய்து
காசிப்பட்டு, காஞ்சிப்பட்டு,
ஆரணிப்பட்டு, தர்மாவரம் பட்டு
"நடராஜா"வில் வாங்கி அணியும்
அன்பர்களுக்கும், அனைத்து
ஆதரவாளர்களுக்கும் மங்கள
தீபாவளி நல் வாழ்த்துக்களை
சமர்ப்பிக்கிறார்கள்.

நடராஜா ஸ்டோர்

அனைத்து ஜவுளிகள் நிறைந்த ஒரே கடை

போன்: 22408 • 92, அம்மன் சன்னதி, மதுரை-1.

-ராஜம்

அன்பர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

★ பண்டைக் காலமாகப் பழனி சித்தர் வைத்தியசாலை உண்மையான முறையான நேர்மையான வைத்திய சேவை புரிகிறது!

வாலிப - வயோதிக - அன்பர்களே!

★ பழனி சித்தர் மருந்துகளே பாரில் உயர்ந்த ' என்பது உலகம் அறிந்த உண்மை!

பிரபல பழனி

வைத்திய திலகம்

வைத்திய ராஜ்

Dr. S. காளிமுத்து
R.M.P. (IND) V.V C A.M.I.H.

தங்களின் உடல் மிகவும் பலமில்லாமல் இளைத்து உடல் வலுவில்லாமல் குடும்ப வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் வயோதிகரைப்போல் களைப்பு மேலிட்டு வேலைகளைச் சரிவரச் செய்ய இயலாமை - இதனால் கஷ்டப்படுகிறீர்களா? வாலிப வயதில் தெரிந்தும், தெரியாமலும் செய்கிற தவறுதல்களே, இப்போது உடல் கெட்டு பலகீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலகீனம், உடல்வலி, களைப்பு, தூக்கக்குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி, தாய் தந்தையரிடமும், மற்றவர்களிடமும் சொல்ல முடியாமல் மனவேதனையும் கஷ்டமும் அடைந்து, நிம்மதியில்லாமல் வாழ்கிறார்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும் கவலைப்பட வேண்டாம். இம்மாதிரியான வியாதியஸ்தர்கள் 75 வருட அனுபவம் பெற்ற நமது சாஸ்த்ரீய முறையான மிக உயர்தரம், முதல்தரம், 2-ந் தரம் எதுவாகிலும் சாப்பிட்டாலே எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் உடல் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். எவ்விதமான பத்யமும் இல்லை. ஆர்டரில் தேவைப்பட்ட மருந்தின் விலைகளைக் குறிப்பிட்டு எழுதவும். வி. பி. பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள். சென்னையிலும், பழனியிலும், கேம்புகளிலும் நேரில் பெறலாம். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. மருந்து உபயோகிக்கும் பொழுதே பலனைக் காணலாம். வி. பி. பி. செலவு இலவசம். வெறும் கடிதம் கவனிக்க இயலாது. சித்த வைத்திய மருந்துகளும், பழனி மருந்துகளும் நல்ல பலன் தரும் என்பதை அறியவும்.

ஒரு மாத சிகிச்சை மருந்துகள்: **மிக உயர்தரம் ரூ. 90. உயர்தரம் ரூ. 42. முதல் தரம் ரூ. 33. 2-ந்தரம் ரூ. 24.**

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி விலாசங்கள் கவனிக்கவும்

கிளை: 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை. போன்: 21448.

சென்னை கிளை ஆபீஸில் 1 முதல் 7 தேதி மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்

GOVT REGD. T. M. NO. 204341. REGD. 16443

வைத்திய திலகம் வைத்திய ராஜ் டாக்டர் எஸ். காளிமுத்து

பழனி சித்தர் வைத்தியசாலை (P) பழனி S. I.

போன்: 316 (தியேட்டர் ஸ்ரீ ரங்கராஜா பக்கம்) தந்தி: சித்தர்

-ராமு

கற்பனைக் கன்னி

உள்ளம் எனப்படும் வீதியிலே—துள்ளி
ஓடிக் குதித்து மறைந்துவிடும்
கள்ளத் தனமிகு கற்பனையாம்—எழிற்
கன்னியை ஓர்நாள் வழிமறித்தேன்.

வெட்டும் விழிக்கடை ஓரத்திலே—ஒளி
வெள்ளம் பளிச்சிட ஒல்கிநின்றுள்
கட்டித் தழுவிடும் ஆவலினுல்—அவள்
கைத்தலம் பற்ற நினைகையிலே

மின்னெனத் தாவி ஒதுங்கிநின்றுள்—மன
மேகத் திருளில் பதுங்கிநின்றுள்
"என்னை யொளித்தெங்குச் செல்லுகிருய்—அடி
என்னுயி ரே!" எனக் கெஞ்சிநின்றேன்.

"சேரிப் பரத்தையர் போல்நினைத்தே—எனைச்
சேர விரும்பிடும் சீரியரே!
பூரித் தலர்ந்த மலரல்லநான்!—வண்டாய்ப்
புத்தம் புதுமது வுண்ணுதற்கே."

"நின்னிடம் தேனைப் பருகியபின்—உன்னை
நீங்கிடும் காமுகன் நானல்லடீ!
கன்னி யுனைமனக் கோயிலிலே—தெய்வக்
காமினி யாக வழிபடுவேன்."

"ஆர்வத்தி லிப்படிப் பேசுகிறீர்—பின்னர்
ஆவல் தணிந்ததும் ஏசிடுவீர்!
நார்வைத்துக் கட்டிய மாலையிலே—அந்த
நாரின் கதியிங்கு நான்படவோ?"

"நாரில் மணப்பது மாலையடி—என்றும்
நானும் மணப்பது நங்கையுன்னுல்!
ஏரில் மணக்கும் உனவினைப்போல்—நம்மில்
இன்பத் தமிழும் மணக்குமடி!"

புன்னகை பூத்தவள் நிற்கையிலே—அந்தப்
பொற்கொடி யின்கரம் பற்றிவிட்டேன்.
என்னில் அவளாய்க் கரைந்துவிட்டாள்!—அந்த
இன்பத்தில் என்னை இழந்துவிட்டேன்!

வி. துரைசாமி

வாழைப்பூ!

வாழைப்பூ! வாழைப்பூ!
மலர்ச்சி தெரியா ஏழைப்பூ!
கும்பிடு போடும் கைபோலே
குவிந்தி ருக்கும் கோலப்பூ!
செம்பு கலந்த கறுப்புநிறம்
சேர்ந்தி ருக்கும் நீலப்பூ!

வரிசை அடுக்கில் இருக்கும்பூ!
மணமில் லாமல் துவர்க்கும்பூ!
கறிச மைக்கக் கிடைக்கும்பூ!
கள்ளனை உள்ளே அடைக்கும்பூ!

தலையில் சூட உதவாப்பூ!
தனியே பலகாய் உதவும்பூ!
குலையின் ஒரேபூ! செல்லப்பூ!
குடும்பப் பூவே வாழைப்பூ!

புத்தனேரி சுப்பிரமணியம்

நீயும் நானும் நிலவும்

புல்லாந் தரிசிற் கொன்றைப்
பூக்கள் உமிழும் நெருப்பு;
முல்லைச் சிரிப்பு, குவளை
மூடி விரியும் அழைப்பு.
சொல்லை இழந்த குரலில்
சூடு சுருளும் முனகல்.
நில்லா தலையுந் திடரில்
நீயும் நானும் நிலவும்.

தாவித் தாவிப் பிடிக்கத்
தவித்து வீழும் பதைப்பு.
ஆவி கலக்கக் கூட்டில்
அனலைக் கடையும் மதர்ப்பு.
சாவின் அலைகள் சாடிச்
சரிந்த வானக் கிடுகில்
வாஎன் றழைக்கும் எதையோ
மருவத் துடிக்கும் எதுவோ?

உடம்பை விழுங்க உடம்பு
ஒட்டி வளையும் வேகம்.
தடவித் தடவி எதுவும்
தட்டுப் படாத தாபம்.
கடலைக் கழுவக் கண்ணீர்
கையில் ஏந்தும் கானல்
மடத்தில் நீயும் நானும்,
மடங்கும் நிழலும் நிழலும்.

'நாணல்'

பொழுது போக்கு

பெய்மழையில் முகம் நனைந்த ரோஜாப் பூவின்
பேசாத கண்ணீரைத் துடைப்பேன்; ஆழி
நொய்ம்மணலில் சிதறியதாம் சிப்பி மேனி
நோகாமல் பெயர்பொறிப்பேன்; கண்ம யங்கச்
செய்யுமொரு மயிலிறகை எடுத்து வைத்துச்
சிரிக்கும்ஒளி, அந்தி, இருள், வான்வில் யாவும்
எய்தியுறை கின்றஎழில் அதனில் காண்பேன்;
ஈதெல்லாம் என்இனிய பொழுது போக்காம்!

மின்னூர் சீனிவாசன்

பெயருக்கேற்ற சிறப்பு

பிரேக்ஸ் இந்தியா சிறப்பான பிரேக் சாதனங்களை வடிவமைத்து, உருவாக்கி, செம்மைப்படுத்தியுள்ளது

இவை இந்திய ஊர்திகள், இந்திய சாலைகள், இந்திய போக்குவரத்து நிலைமைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன.

பிரேக்ஸ் இந்தியா தயாரிக்கும் பிரேக் சாதனங்களில் ஒவ்வோர் உறுப்பும் நுணுக்கமான வேலைப்பாட்டுடன் அமைந்திருப்பதில் ஆச்சர்யமில்லை. பி.ஐ. கர்லிங் உதிரி உறுப்புகளைக் கேட்டு வாங்கி, பிரேக் சாதனங்களை நம்பகமான நிலையில் வைத்திருங்கள்.

பிரேக்குகள் திறமையாக இயங்க—

- *பிரேக்குகளை அவ்வப்போது அட்ஜஸ்ட் செய்யுங்கள்.*
- *8000 கி.மீ.க்கு ஒரு முறை லைனிங்குகளின் தேய்வைச் சரிபாருங்கள்.*
- *லைனிங்குகள் ரிவெட்டுகள் வரை தேய்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.*
- *ஹைட்ராலிக் திரவத்தின் அளவை அவ்வப்போது சரி பாருங்கள். திடீரென திரவ அளவு இறங்கினால், அது கோளாறுக்கு அறிகுறி.*
- *சிபாரிசு செய்யப்பட்ட பிரேக் திரவத்தையே உபயோகியுங்கள்.*
- *ஒரு முறை உபயோகிக்கப்பட்ட திரவத்தை மீண்டும் உபயோகிக்காதீர்கள்.*

அசல் பி.ஐ. கர்லிங் பிரேக் உதிரி உறுப்புகளை அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளிடமிருந்தே வாங்குங்கள்.

பி.ஐ. கர்லிங் பிரேக்குகள், ஹைட்ராலிக் பிரேக் மற்றும் கிளட்ச் ஆக்சுவேஷன் சாதனங்களைத் தயாரிப்பவர்கள்:

பிரேக்ஸ் இந்தியா லிமிடெட்
(ஒரு டிவிஎஸ்-கர்லிங் நிறுவனம்)
பாடி, சென்னை 50

FDSBI 1768 TM

எந்தவித இசையையும் எந்த நேரத்திலும், எவ்விடத்திலும் அளிப்பது எச்எம்வி ஸ:.பாரி மட்டும்தான்

—இந்தியாவின் போர்ட்டபிள்
டிரான்சிஸ்டர் ரேடியோ கிராம்
இது ஒன்றே

விலை ரூ. 508 மட்டுமே

எக்ஸைஸ் வரி உள்பட உள்ளூர் வரிகள் தனி

உள்நாட்டிலும் அயல்நாட்டிலும் ஆயிரக்கணக்கானோர் அனுபவிக்கும் ஆழ்ந்த, தத்ரூபமான ஒலியையுடையது எச்எம்வி ஸஃபாரி, இந்தியாவின் எடுததுச் செல்லக்கூடிய ஒன்றில் இரண்டமைந்த மியூசிகல் கிட் இதுவே ஆகும்.

பாட்டரியில் இயங்கும் எச்எம்வி ஸஃபாரி ஒரு துல்லியமான தயாரிப்பு. டக்-அவே கைப்பிடியுடனுள்ள, வழவழப்பான மர காபினெட்டின் உள்ளே இரண்டு பாண்ட் ரேடியோ மற்றும் 4-ஸ்பீடு ரிகார்ட் ப்ளேயர் அமைக்கப்பட்டுள்ளது.

வழங்குங்கள்! அன்பளிப்பாக எச்எம்வி ஸஃபாரியை!! அல்லது வாங்குங்கள்! உங்களுடைய குடும்பத்துக்காக!! இது பெருமிதத்துக்குரிய ஒரு ரேடியோ கிராம்!!!

ரசிகர்கள் விரும்புவது
ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்
ஒலியிலும், தரத்திலும் கைதேர்ந்த நிபுணர்கள்

எச்எம்வி மூலம் புதிய சிறந்த பாடல்களை ரேடியோ சிலோனில் கேளுங்கள்.

எச்எம்வி ஸ்டார் ஷோ
(ஆங்கிலம்)
திங்கட்கிழமைகளில் இரவு 8 முதல் 8.30 மணி வரை

எச்எம்வி கே சிதாரே (ஹிந்தி)
செவ்வாய்க் கிழமைகளில் இரவு 8 முதல் 8.30 மணி வரை

அக்கினித் திராவகம்

முகுந்தன்

ராஜசுந்தரம், எம். ஏ. (வயது 25; உயரம்: 5 அடி 2 அங்குலம்; நிறம்: சம்பா கோதுமை; பருமன்: நடுத்தரம்; தோற்றம்: கண்ணியம்) மிகப் பொறுமையுடன் அந்த நீண்ட 'க்யூ' வரிசையில் காத்திருந்தார். இதுவரை அவர் ஐந்து சிகரெட்டுகள் (ஃபில்டர்வில்ஸ்) ஊதித் தள்ளியாகிவிட்டது; மூன்று ஸ்வீட் 'சுபாரி' பொட்டலங்களைக் காலி பண்ணியாகிவிட்டது; 'லாக்டோ பான்பான்' மிட்டாய்களில் ஐந்தைச் சப்பிக் கரைத்து விழுங்கியாகிவிட்டது. ஆனால் 'க்யூ'வில் அவர் கண்டிருந்த முன்னேற்றமோ பத்தடி தூரந்தான் இருக்கும். டிக்கெட் கொடுக்கப்படும் புறாக் கூண்டை அவர் அடைய வேண்டுமானால்? இன்னும் முப்பது கஜ தூரமாவது சவுக்குக் கட்டை வரிசைகளுக்கிடையே புகுந்து கடந்தாக வேண்டும்.

வெறுப்புடன் மணிக்கட்டைத் திருப்பி 'ரோலக்ஸி'ல் நேரம் பார்த்தார் ராஜசுந்தரம். ஏழு நாற்பது. அவர் டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே போகக் குறைந்த பட்சம் ஒன்றரை மணி நேரமாவது ஆகும். அது வரையில் பொழுதை எப்படிப் போக்குவது என்பதுகூடப் பெரிய பிரச்னையாகத் தோன்றவில்லை. அந்த 'முத்தமிழ்ப் பொழுதுபோக்குக் கண்காட்சி'க்கு வரும் ஆசாமிகளில் யாரும் அவரை அடையாளம் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டுமே! அதுதான் பிரச்னை. பான்ட் பாக்கெட்டில் இருந்த கைக்குட்டையை எடுத்துத் தலையிலே கட்டிக் கொண்டார். கையில் வைத்திருந்த தோல்பையைத் திறந்து அதிலிருந்து ஓர் ஆங்கில நாவலை (மிட்வுட் ஸீரிஸ்) எடுத்துக் கையில் பிரித்து வைத்துக்கொண்டார். கைக்குட்டை அவரைக் காப்பாற்றுகிறதோ இல்லையோ, நாவல் படிப்பதாகப் பாவனை செய்வது அறிந்தவர் தெரிந்தவர் பார்வைகளை அவர் சந்திக்காமல் இருக்கவாவது உதவுமே!

கண்ணியமான நடுத்தர வயதுக்காரரான ராஜசுந்தரம் இப்படிக் கூனிக் குறுகிக் கூசிக் கொண்டு 'க்யூ'வில் நின்றது வேறு எதற்காகவும் அல்ல— 'கலை நிகழ்ச்சி' என்ற கௌரவமான போர்வைக்குள் நடத்தப்பெறும் கண்ணராவிக் கூத்தான இசைத்தட்டு நடனங்களைப் பார்க்கத்தான்!

நகரம் முழுவதும் பேட்டைக்குப் பேட்டை தொத்து நோயெனப் பரவி வரும் அந்த வகையான நடனங்களைப் பற்றி ராஜசுந்தரம் நிறையக் கேள்வியுற்றிருக்கிறார். அப்போதெல்லாம் அவற்றைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையோ சபலமோ அவருள் எழுந்ததில்லை. ஆனால் இன்று அவராகவே விரும்பி அந்த நடனங்களைப் பார்க்க வந்திருக்கிறாரென்றால் அதற்குத் தகுந்த காரணம் இருந்தது. அங்கு வந்து கூடியிருந்த அரைவெட்டு, கால் வெட்டுக்களைப் போல, அந்தத் துணிச்சல் மிகுந்த நடனக்காரிகளின் வெட்கம் கெட்ட அங்க அசைவுகளையும், தரக்குறைவான அபிநயங்களையும் கைகொட்டி ரசித்துவிட்டு ஏக்கத்தைச் சுமந்து கொண்டு திரும்ப வேண்டும் என்பது அவரது நோக்கமல்ல. தாம் அங்கே கண்டதையும் கேட்டதையும் கற்பனை என்ற மெருகேற்றி, கதை என்ற வெண்ணெய்த்தாளில் சுற்றிக் கடைச்சரக்காக்கும் 'உயர்ந்த' நோக்கத்துடனேயே அவர் அங்கு விஜயம் செய்திருந்தார்!

புரிந்துகொண்டிருப்பீர்களே! ராஜசுந்தரம் ஓர் எழுத்தாளர். அவரை இயற்பெயரில் அறிந்தவர்கள் ஒரு நூறு பேர் என்று வைத்துக்கொண்டோமானால், 'ஷோபா', 'உதயதாரா' என்கிற புனைபெயர்கள் மூலம் அவரை இனம் கண்டு கொள்பவர்கள் ஆயிரம் பேராவது இருப்பார்கள். ஆனால் 'பத்மா ராகவேந்தர்' என்ற கற்பனைப் பெயரில் அவரை அறிந்தவர்களோ குறைந்த பட்சம் லட்சம் வாசகர்களாவது தேறுவார்கள்.

ராஜசுந்தரத்துக்கு எழுத்து மூச்சுமல்ல; எழுதுகோல் தெய்வமுமல்ல. அயல்நாட்டு நிறுவனம் ஒன்றில் இரண்டு கையும் வழிய வழியச் சம்பளம் வாங்குகிற கொடுத்து வைத்த புண்ணியவான் அவர். ஆனால் யார்தான் இந்தக் காலத்தில் பேனா பிடிக்கவில்லை? திடுமென்று ராஜசுந்தரமும் ஒரு நாள் எழுதத் தொடங்கினார். முதலில் தாம் கண்டதையும் கேட்டதையும் கண் காது மூக்கு வைத்து ஜோடித்துக் கதை என்று உலவவிட்டு நாலு காசு பண்ண முடியுமா என்றுதான் பார்த்தார். முடிந்தது. நாலு என்ன, நானூறு ரூபாய்கூடத் தம்மால் பண்ண முடியும் என்று விரைவிலேயே கண்டுகொண்டார். அன்று முதலே அபாரமான தன்னம்பிக்கை அவருள் வந்து குடிகொண்டது.

அவரது எழுத்திலே ஒரு தனி ஜொலிப்பு இருந்தது. மற்றவர்களது கண்ணுக்குப் புலப்படாத சில விஷயங்கள் அவரது பார்வையில் விழுந்தன. மற்ற எழுத்தாளர்களுக்குத் தோன்றாத சில புதுமையான உத்திகளையும் சொற் பிரயோகங்களையும் அவர் கைக்கொண்டார். அவரது லாகவமும் பேனாவின் வீச்சும் மளமளவென்று அவருக்கு வாசகர்களைத் தேடித் தந்தன.

சாதாரண விஷயங்களைக் கூடத் தம்முடைய அபாரக் கற்பனையினாலும் வளம் செறிந்த வார்த்தைக் கோவைகளினாலும் மறக்க முடியாத படைப்புக்களாக உருமாற்றிக் காட்டும் ஜாலவித்தை ராஜசுந்தரத்தின் பேனாவுக்குள் ஒளிந்துகொண்டிருப்பதைத் தாமும் உணர்ந்ததோடு, வெளியுலகத்துக்கும் எடுத்துக் காட்டியவர் 'தேனருவி' ஆசிரியர் சங்கரசுப்புதாம். எனவே சங்கரசுப்புவை ராஜசுந்தரம் தெய்வம் போல நினைத்துப் போற்றியதில் ஆச்சரியமில்லை.

''இது உங்களுடைய எத்தனாவது கதை?'' என்று ஒரு கதையை ராஜ

சுந்தரம் நேரில் கொடுக்கப் போயிருந்தபோது கேட்டார் சங்கரசுப்பு.

''முப்பத்தாறாவது.''

''இருக்கட்டும். இதுவரை நீங்கள் எழுதியுள்ள கதைகளினால் பெற்றிருக்கும் புகழைப் போலப் பத்து மடங்கு புகழைப் பத்தே கதைகளில் பெற விருப்பமா உங்களுக்கு?''

''பிரா வேண்டாம் என்று சொல்லும் காலேஜ்கேர்ல் உண்டா?'' என்று திருப்பிக் கேட்டார் ராஜசுந்தரம். (அவரது சொற்பிரயோகத்துக்கு இதைவிட 'ஸாம்பிள்' வேண்டுமா என்ன?)

''சரி, அப்படியானால் நான் சொல்கிறபடி செய்யுங்கள்.''

''என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?''

''உங்கள் கதைகளில் நிறைய 'ஸெக்ஸ்' சேருங்கள்.''

''ஸெக்ஸ்க்யூஸ் மீ?''

''கரெக்ட்! இது போலத்தான் சட்டென்று பிடித்துக்கொள்ள வேண்டும் எந்த விஷயத்தையும். ஸெக்ஸ், ஸெக்ஸ்! அதுதான் இப்போதைய தேவை. அதை உங்கள் கதைகளில் தாராளமாக அள்ளித் தெளியுங்கள். வார்த்தைக்கு வார்த்தை, வரிக்கு வரி ஸெக்ஸ் இருந்துகொண்டே இருக்க வேண்டும். இளம் வாசகர்களை அப்படியே தூண்டில் போட்டு இழுத்தாக வேண்டும். உங்களால் அது முடியும்.''

''..........''

''உங்களுக்கு என்ன வயதாகிறது இப்போது?''

''ஐம்பத்தேழுக்கு முன்னாலே 'வாஸெக்டமி' செய்துகொள்ளக் கூடாது என்பது என் தீர்மானம். என்னால் கு. க. புரோக்கருக்கு முப்பது ரூபாய் கிடைக்க வேண்டுமென்றால் அவன் இன்னும் ஐந்து வருஷங்கள் காத்திருக்க வேண்டும்!''

''வெரிகுட்! பின்னே என்ன ஐயா! அறுபதாம் கல்யாணம் செய்துகொண்டவர்கள் எல்லாரும் சும்மா புகுந்து விளாசுகிறார்கள். உமக்கென்ன, வாலிபம்தானே? ஜமாயுங்கள்!''

''அப்போ இந்தக் கதை......''

''இது இருக்கட்டும். அடுத்த இதழுக்கு நான் சொன்னபடி ஜாம் ஜாம் என்று ஒரு கதை எழுதிக் கொண்டு வாருங்கள், பார்க்கலாம்! கதை அம்சம் பிரமாதமாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நிறைய ஸெக்ஸ் இருந்தால் போதும்!''

நினைத்தாலே முறுக்கேற்றி விடுகிற 'ஸப்ஜெக்ட்' அல்லவா ஸெக்ஸ்? ராஜசுந்தரம் முனைந்து உட்கார்ந்தார். கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு முன்பு திருவல்லிக்கேணியில் ஒண்டுக் குடித்தனம் இருந்தபோது வீட்டுக்காரர் பெண்ணுடன் அவர் ஆடிய 'கண்ணாமூச்சி' விளையாட்டுக்கள், மணமான புதிதில் கிடைத்த பழமையும் புதுமையுமான அநுபவங்கள், அந்த ரங்கமான நண்பர்களுடன் அவ்வப்போது பகிர்ந்து கொண்ட சமாசாரங்கள்—அத்தனையும் நினைவில் வந்து முட்டி மோதின. ஒரு கதையை எழுதி எடுத்துக்கொண்டு மறு வாரமே சங்கரசுப்புவிடம் போனார்.

கதையின் முதல் பாராவைத்தான் படித்தார் சங்கரசுப்பு. பிறகு அதை மூடி வைத்தார்.

''ஏன் ஸார், பிடிக்கவில்லையா?'' என்று தயக்கத்துடன் கேட்டார் ராஜசுந்தரம்.

''ஆமாம் ஐயா, பிடிக்கவில்லைதான். அதாவது இங்கே, இந்த ஸீட்டிலே, இப்படி உட்கார்ந்துகொண்டு படிக்க எனக்குப் பிடிக்கவில்லைதான்! வீட்டிலே போய், இரவு பத்து மணிக்கு மேலே படுக்கையிலே சாய்ந்து

கொண்டு பக்கத்திலே அவள்—என்ன! அப்படிப் படிக்க வேண்டிய கதை ஐயா இது! உம்ம பாஷையிலே சொல்வதானால் முதல் பாராவே ஸெக்ஸலெண்ட்!''

''ரொம்பத் தாங்க்ஸ் ஸார்!''

''தாங்க்ஸாவது! உம்மை நான் சும்மா விடப் போவதில்லை. போய் உட்கார்ந்துகொண்டு இதே போல இன்னொரு கதை எழுதும்! இன்னொரு விஷயம்: இனிமேல் உம்ம பெயர் 'பத்மா ராகவேந்தர்'! புரிந்ததா?''

''புதுப் பெயராக இருக்கிறதே!''

''புதுசுதான்; உம்ம எழுத்து, கதை, அதன் ஆதாரசுருதியான 'ஸெக்ஸ்'—எல்லாமே புதுசுதானே! பாரும், 'யார் இந்தப் பத்மா ராகவேந்தர்?' என்று ஊர் பூராப் பேச வைக்கிறேன்! இந்தப் பெயரை வைத்துக் கொண்டு ஜனங்களைப் பைத்தியமாக அடிக்கிறேன் பாருங்கள்! உங்களாலே அது முடியும். நீங்கள் போய் எழுதுங்கள்!''

'பத்மா ராகவேந்தரின்' முதல் கதை வெளிவந்தபோது வாசகர் வட்டாரத்தில் கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டதென்னவோ வாஸ்தவந்தான்.

''என்ன இது, இவ்வளவு பச்சையாக ஒரு கதையா?'' என்று முகத்தைச் சுளித்தவர்கள் கால்வாசி என்றால், ''ஆகா! என்னமாய் எழுதியிருக்கிறாள்! துணிச்சல்காரக் கட்டைதான்!'' என்று ரசித்துப் பாராட்டியவர்கள் முக்கால்வாசி.

வளர்த்துவானேன்? அன்று முதல் 'பத்மா ராகவேந்தர்' என்ற பெயர் வாசகர்களின் பேச்சில் அதிகமாக அடிபடத் தொடங்கியது. ''இந்த வாரம் 'பத்மா ராகவேந்தர்' கதை படித்தீர்களோ?'' என்று ஆர்வத்துடன் விசாரித்துக்கொள்ளும் அளவுக்கு அந்தப் பெயர் பிரபலமடைந்தது.

ராஜசுந்தரமும் அலுக்காமல் சளைக்காமல் 'ஸெக்ஸ்' ஒன்றையே மையமாக வைத்துக் கதைகள் ஜோடிக்கத் தொடங்கினார். வளைவுகள், குழைவுகள், நெளிவுகள், மேடுபள்ளங்கள், கதுப்புகள், திண்மை, மென்மை, திரட்சி, உருட்சி, ஏற்ற இறக்கங்கள் சதை—போன்ற பதங்கள் அவரது 'கதை' களில் தவறாமல் இடம் பெறலாயின. வெறும் வார்த்தைகளில் மட்டுமின்றி வர்ணனைகளிலும் நிகழ்ச்சிக்கோப்பிலுங்கூட ஸெக்ஸ் நிரம்பியிருக்கும்படி பார்த்துக்கொண்டார் அவர். நீச்சல் குளம், கல்லூரி விடுதி, கடற்கரையில் படகின் மறைவிடம், திரைப்படக் கொட்டகையின் அரை இருட்டு, ரெயில் வண்டியின் நீலநிற விடிவிளக்கு—இவற்றை நிலைக்களமாகக் கொண்டு அவரது நாயகநாயகிகள் வெளிப்படுத்திய ஸெக்ஸ் உணர்வுகளை அவர் வடிக்க வடிக்க, எத்தனையோ இளைஞர்கள் அப்படியே கிறங்கிப் போனார்கள். ''சே! சுத்த மோசம் இந்த இவ!'' என்று சொன்னபடியே கல்லூரி மாணவிகள் பலர் அவர் கதைகளை விழுந்து விழுந்து படித்தார்கள். ஒவ்வொரு கதையிலும் ஸெக்ஸ் வர்ணனை புதுமையானதாக இருக்க வேண்டுமென்ற அக்கறையுடன் ராஜசுந்தரம் தம்முடைய கௌரவத்தையும் பொருட்படுத்தாமல் இசைத்தட்டு நடனத்துக்கான 'கியூ'விலும் போய் நின்றார்!

இரண்டே மாதத்தில் புகழை வாரிக் குவித்து விட்டார் ராஜசுந்தரம். அவரது கதைகளால் 'தேனருவி'யின் விற்பனையும் எக்கச்சக்கமாக உயரவே, அவரது சம்மானத்தொகையும் ஐம்பதிலிருந்து நூறாக உயர்ந்தது!

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் ஒரு நாள் அந்தக் கடிதம் வந்தது. 'தேனருவி' அலுவலகத்திலிருந்து 'ரீ-டைரக்ட்' செய்து அனுப்பியிருந்தார்கள்.

கடிதத்தைப் பிரிக்கும்போதே உயர்தர 'ஸென்ட்'டின் வாசனை குப்பென்று அடித்தது. ராஜசுந்தரத்துக்குச் 'ஸென்ட்' என்றாலே பிடிக்காததால் ஒரு விநாடி முகத்தைச் சுளித்துக் கொண்டுவிட்டு, கடிதத்தைப் படிப்பதில் முனைந்தார்.

நீல நிறக் காகிதத்தில் முத்து முத்தாகப் பத்துப் பக்கங்கள் எழுதியிருந்தான் கங்காதரன் என்று யாரோ ஒருவன். அத்தனையும் பாராட்டுத்தான். அவர்தாம் இந்த நூற்றாண்டின் இணையில்லாத சிறுகதை ஆசிரியராம். ஹெரால்ட் ராபின்ஸ் அவர் கால்தூசுக்குச் சமமாம். வார்த்தைக்கு வார்த்தை பணம் கொடுத்தாலும் தகுமாம். விரைவிலேயே அவருக்குப் பாராட்டு விழாவை எதிர்பார்க்கிறானாம். வேண்டுமானால் அவனேகூட முன்னின்று ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்வானாம். (உங்கள் எழுத்தாளர் ஜாதியிலேதான் பங்காளிக் காய்ச்சல் நிறைய உண்டே!....)

அந்தக் கடிதத்தைப் படிக்கப் படிக்கப் பன்னீரிலே குளித்து, பச்சைக் கர்ப்பூரத்தையும் சந்தனத்தையும் சேர்த்து உடம்பெங்கும் பூசிக்கொண்டது போல ஜிலுஜிலுவென்று இருந்தது அவருக்கு. சாதாரணமாகத் தம்முடைய கதைகளைப் பாராட்டி எழுதுகிறவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பத்துப் பைசா கார்டு எழுதிப் போடுவது அவர் வழக்கம். ஆனால் இந்தக் கடிதத்தைப் பார்த்ததும், 'இவனை நேரிலேயே போய்ப் பார்த்தால் என்ன?' என்று தோன்றியது. விலாசத்தைக் குறித்துக்கொண்டு புறப்பட்டார்.

அந்தக் கங்காதரன் திருவல்லிக்கேணி வெங்கடாசல செட்டித்

தெருவிலே ஒரு வீட்டு மாடியில் அறை வைத்துக்கொண்டிருந்தான். மாடிப் படியேறும்போதே 'தம்மாரோ தம்' மேலிருந்து புறப்பட்டு வந்து அவரை எதிர்கொண்டழைத்தது.

''மிஸ்டர் கங்காதரன்!''

''கமின்!'' என்றபடியே நாடாக் கட்டிலில் அதுவரை படுத்திருந்த 'ஸைட்பர்ன்ஸ்' பேர்வழி எழுந்து உட்கார்ந்துகொண்டான்.

ராஜசுந்தரம் அறைக்குள் நுழைந்தார். கையிலிருந்த 'பிளேபாய்' இதழை மூடித் தலையணைக்கடியில் வைத்துவிட்டு, ''பிளீஸ் டேக் யுவர் ஸீட்!'' என்று உபசரித்தான் கங்காதரன். ''யார் நீங்கள்? என்ன வேண்டும் உங்களுக்கு?''

''நான்....நான்தான் பத்மா ராகவேந்தர்....''

''ஹாய்!'' ஒரு துள்ளலுடன் கட்டிலிலிருந்து எழுந்து கொண்டவன் அவரது கைகளைப் பலமாகப் பிடித்துக் குலுக்கினுன்.

''நீங்கள்? நீங்கள்தான அது? நீங்கள் என்னைத் தேடி வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ரியல்லி!....சொல்லுங்கள், என்ன சாப்பிடுகிறீர்கள்? கோக்? ஃபாண்டா? அல்லது சூடாக ஒவல்?''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். சும்மா இந்தப் பக்கம் வந்தேன். உங்கள் அட்ரஸ் நினைவு வந்தது. உள்ளே நுழைந்தேன்.''

''கொஞ்சம் இருங்கள், இதோ வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டு, 'ஸைக்கடெலிக்' வண்ணங்கள் கொண்ட ஒரு 'ஸ்லாக்'கை எடுத்து மாட்டிக்கொண்டு கீழே பாய்ந்தான் கங்காதரன். அவன் திரும்பி வந்தபோது இரண்டு கைகளிலும் இரண்டு 'கோக்'; ஒரு பாக்கெட் சிகரெட்.

குளிர்பானத்தை நீட்டிக்கொண்டே, ''டூ யூ ஸ்மோக்?'' என்று விசாரித்தான்.

''என்கிட்டே இல்லாத கெட்ட பழக்கமே கிடையாது!'' என்று சொல்லிச் சிரித்தார் ராஜசுந்தரம்.

''ஐ லைக் தட்! சில பேரைப் போல நீங்க 'இன்ஹிபிடட்' ஆக இல்லாமல் இருப்பதனுல்தான் அவ்வளவு 'பிரில்லியன்ட்'டாகக் கதை எழுத வருகிறது உங்களுக்கு! ஐ லைக் யுவர் ஸ்டஃப் வெரிமச்!''

''தாங்க் யூ!''

''செக்ஸை இவ்வளவு பிரமாதமாகத் தமிழிலே எழுத முடியும்னு காட்டியவர் நீங்கதான்! குடோஸ்!''

''எதையுமே எழுதணும்ஞ அதுக்கு நிறைய 'எக்ஸ்பீரியன்ஸ்' வேணும். எனக்கு அந்த அநுபவம் இதிலே நிறைய உண்டு!''

''ரியல்லி?''

''மனசளவிலே நான் இன்னிக்கும் இளைஞன்தான். ஆமாம், உங்க அநுபவம் எப்படி? நீங்கள் 'யங்மேன்' ஆச்சே!''

''ஸார், உங்ககிட்டே சொல்றதுக்கு என்ன? நான் ஒரு பெண்ணை லவ் பண்ணறேன். ஷி இஸ் ஸச் எ ஸ்வீட் திங். ஆனு, ரொம்பக் கூச்சம். ரொம்பவும் பயப்படுகிருள். நீங்களே சொல்லுங்க ஸார், செக்ஸ் இல்லாம என்ன ஸார் லவ் வேண்டிக் கிடக்கு?''

''கர்ரெக்ட்!''

''இதிலே ஒண்ணும் தப்பு இல்லேன்னு நான் சொல்றதை அவ கேக்க மாட்டேங்கரு. இத்தனைக்கும் அவ ரொம்ப மாடர்ன் கேர்ல் ஸார்.''

''கூச்சமாக இருக்கும்!''

''போங்க ஸார், நீங்க ஒண்ணு! அவ அல்ட்ரா மாடர்ன்! கூச்சம் தான் அவகிட்டே வரக் கூச்சப்படவும். 'அது குற்றம்'கிரு ஸார். தப்பா ஸார் அது?''

''நீங்க கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்கணும்!''

''ஸார், நீங்க எனக்கு ஒரு உதவி பண்ணுவீங்களா? 'ப்ரீ-மாரிடல் செக்ஸ்' குற்றம் இல்லேங்கற மாதிரி ரெண்டு கதை எழுதுங்களேன்!''

''அதை வைத்து அவளைச் சம்மதிக்க வைக்கலாம் என்பது உங்கள் திட்டமா?''

''அப்படி ஒரு முயற்சி பண்ணிப் பார்ப்போமே என்றுதான்!''

''சரி, பார்ப்போம்.''

''ஸார், நீங்க அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. கட்டாயமா அந்தத் 'தீமை' வச்சுக் கதை எழுதித்தான் ஆகனும்.''

''பார்க்கலாம்.''

''தயவு செய்து காலை வாரி விட்டுடாதீங்க ஸார். இது நீங்க எனக்குச் செய்யற 'பர்ஸனல் ஹெல்ப்'! நான் உங்களை மறக்கவே மாட்டேன்!''

''பாய், லெட் மீ ட்ரை!'' என்று எழுந்துகொண்டார் ராஜசுந்தரம்.

வாசகன் ஒருவனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவிட்டால் அப்புறம் எழுத்தாளன் என்ற பெருமை என்ன வேண்டிக் கிடக்கிறது? கங்காதரனின் வேண்டுகோள் ராஜசுந்தரத்தின் மூளையை உசுப்பிவிட்டது. 'செக்ஸ் என்பதற்கும் திருமணம் என்பதற்கும் புனிதமான முடிச்சை நாமாகப் போட்டுக்கொண்டு தவிக்க வேண்டிய அவசியமே இல்லை. அந்த அந்தப் பருவத்தில் ஏற்படும் உணர்ச்சிகளுக்கு உடனடியாக மதிப்புக் கொடுத்து உணர்ச்சிவசப்படுவது குற்றமல்ல. சொல்லப் போனுல் அதுதான் புத்திசாலித்தனம்' என்ற 'கருத்தை' மையமாக வைத்து மூன்று கதைகள் எழுதினுர். அந்த மூன்றிலும் கதாநாயகிகள் கல்யாணத்துக்கு முன்னுல்....

அந்தக் கதைகளுக்கு இளம் வாசகர்களிடையே எக்கச்சக்கமான வரவேற்பு. படம் போட்ட ஓவியர் வேறு தம் கைவரிசையைக் காட்டியிருந்ததனுல் 'தேனருவி' பிய்த்துக்கொண்டு போயிற்று. அந்தப் பையன்—கங்காதரன்—'தாங்க்ஸ், தாங்க்ஸ்' என்று நாலு பக்கம் எழுதி நன்றி தெரிவித்திருந்தான்.

இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் சங்கரசுப்புவைப் போய்ப் பார்த்து விட்டுப் பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றுர் ராஜசுந்தரம். பஸ் வருகிற வழியாகக் காணும். பல்லவனைச் சபித்துக்கொண்டே அடுத்த கதைக்கான செக்ஸ் வரிகளை மனத்தில் கோத்துக்கொண்டு அவர் நின்றிருந்தபோது வேகமாக ஸ்கூட்டரில் அவர்முன் வந்து நின்றுன் கங்காதரன். 'பில்லியனி'ல் ஒரு பெண். மறைக்க வேண்டியதன் அவசியத்தையே மறந்து விட்டாற் போலிருந்த ஒரு 'பெண்'.

ஸ்கூட்டரைச் சற்றுத் தள்ளி 'ஸ்டாண்ட்' போட்டு நிறுத்திவிட்டு வந்தான் கங்காதரன். அந்தப் பெண் கீழே இறங்கி வேறு பக்கம் பார்த்துக்கொண்டு நின்றுள்.

''கங்கிராட்ஸ்!'' என்றுர் ராஜசுந்தரம், கண்ணைச் சிமிட்டியபடி. ''காரியம் வெற்றிதானே?''

''பின்னே? வெற்றிமேல் வெற்றி என்று சொல்வேன்!''

''இதுதான் அதுவா?''

''நோ நோ நோ! இது வேறே சரக்கு ஸார்!''

''அது....''

''சுத்த மோசம் ஸார் அது; நமக்கும் அதுக்கும் சரிப்பட்டு வரல்லே.''

''அப்போ உங்க விருப்பம் என்ன ஆச்சு?''

''அது நிறைவேருமப் போயிடுமா? தாங்க்ஸ் டு யூ! அது நிறைவேறினதுக்கு அப்புறந்தான் டாட்டா சொன்னேன்!''

''ஏன் அப்படி?''

''பின்னே என்ன ஸார்? சும்மா இப்படி 'ஜாலி'யாக இருப்பதை விட்டு, கல்யாணமாம் கல்யாணம்! நடக்கிற காரியமா ஸார் அது? எதுக்கும் ஒரு 'லிமிட்' இல்லையா? கல்யாணம் பண்ணிக்கிட்டா அப்புறம் என்ன ஸார் என்ஜாய்மெண்ட் இருக்கிறது?''

அவனுக்குப் பதில் சொல்ல யோசிப்பதற்குள் அவருடைய பஸ் வந்து விட்டது. ''ஸீ யூ!'' என்று சொல்லிவிட்டுப் பஸ்ஸைப் பிடிக்க விரைந்தார் ராஜசுந்தரம்.

வீட்டுக்குள் அவர் நுழைந்தபோது நிச்சப்தமாக இருந்தது. அவருடைய மனைவி 'ஷாப்பிங்' போயிருக்கிருள் போலிருக்கிறது. கடைசிப் பையன் பாப்ஜி மட்டும் கூடத்தில் ஒரு 'ஜிக்-ஸா' புதிரை வைத்துக்கொண்டு குப்புறப் படுத்திருந்தான்.

மாடிக்குப் போனுர். ஹாலில் ரேடியோவுக்குப் பக்கத்தில் அவரது பெண்ணின் கல்லூரிப் புத்தகங்களுக்கு நடுவே பளபளவென்று வைத்திருந்த ஓர் ஆங்கில நாவல் அவரது கவனத்தைக் கவர்ந்திழுத்தது.

ஆவலுடன் அந்த நாவலைக் கையில் எடுத்துத் தலைப்பைப் பார்த்தார். 'த அமோரஸ் ஒய்ஃப்'. புத்தகத்தைப் பிரித்தார். அதற்குள்ளிருந்து 'தொப்'பென்று ஏதோ கீழே விழுந்தது.

குனிந்து எடுத்தார். நீல நிறக் காகிதம், மூக்கைத் துளைக்கும் ஸென்ட் மணம். முத்து முத்தான கையெழுத்து: 'மை டியர் ஜே....'

வெளிமாடியிலிருந்து ஏதோ சப்தம் கேட்டது. பாய்ந்து போய்ப் பார்த்தார்.

அங்கே அவருடைய பதினெட்டு வயதுப் பெண் ஜயந்தி தலையை இரு கைகளாலும் பிடித்தவண்ணம் வாந்தி எடுத்துக்கொண்டிருந்தாள். ★

THE POWERFUL ENGINE TODAY PERKINS P6-354



Vehicle Diesel Engine Rated to develop 120 BHP at 2800 RPM

Salient Features:

1. Direct injection combustion system and distributor type fuel injection pump with automatic advance and retard. Also hydraulic governing which ensures proper measuring of the fuel in direct proportion to the load. Exceptionally low fuel consumption under all operating conditions.
2. New standard for diesel power weight ratio and compactness which means extra payload.
3. Timing drive through helical gears.
4. Designed to reduce maintenance to a minimum—all components requiring routine servicing easily accessible. No external oil pipes.
5. 12 volt electrical epuipment ensures positive starting under all normal conditions.

For PERKINS Engines
Simpsons Genuine Spare Parts

Simpson & Co. Ltd

Head Office & Works:
202, Mount Road, Madras-2
Branches: Bangalore. Ootacamund
Tiruchirapalli. Secunderabad



S-358

இந்த அறுவடையை விற்று நீங்கள் என்ன செய்வீர்கள்?

ஸ்டேட் பாங்க் ஆப் மைசூரில் ரூ. 500 டிபாஸிட் செய்வேன்

...தேவப்பாவின் படிப்புக்கு... உமாவின் திருமணத்துக்கு ஏற்பாடு செய்ய. வயலில் என் வருங்காலத் தேவைகளுக்குச் சேமிக்க. இன்னும் எவ்வளவோ, சொல்ல முடியுமா?

சேமிப்பு மாந்தரின் சிறந்த நண்பன். அது தேவைக்கு உதவுகிறது... வட்டியும் ஈட்டுகிறது!

குடும்பம் நாளைக்கு வளமாக இருக்க, இன்று நான் சேமிக்கிறேன்— ஸ்டேட் பாங்க் ஆப் மைசூரில்தான், நிச்சயமாக!

ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர்

எப்போதும் உங்கள் பணியில்

(ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வின் துணை நிறுவனம்)

தலைமை அலுவலகம்:
அவென்யூ ரோடு, பங்களூர் 9

AIYARS-SBM-711

சென்னையில் எங்கள் கிளைகள்:
1. 377, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-1.
2. 47, வடக்கு உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-17.

விரைவில் திறக்க இருக்கும் கிளைகள்:
சாஸ்திரி நகர், சாந்தோம்,
ஸ்ரீனிவாச அவென்யூ, அபிராமபுரம்

திலகா வைத்தியக் கல்வி நிலையம்

28, மேலப் பொன்னகரம் 8-வது தெரு, மதுரை-10.

பொன்னான வாய்ப்பு

ஆங்கில வைத்தியத்தைத் தமிழில் தபால் வழியும் நேர்முகமாகவும் பயிற்சியளிக்கும் கல்வி நிலையம் தமிழகத்தில் இது ஒன்றேயாகும். பயிற்சி விவரங்களுக்கு 0-50 காசு தபால்தலையுடன் விண்ணப்பிக்கவும்.

கீழே குறிப்பிடும் நூல்கள் திலகாவின் சிறப்பான வெளியீடுகளாக மருத்துவர்களால் ஏற்கப்பட்டவை.

1. 400க்கு அதிகமான வியாதிகளுக்குப் பத்தாயிரத்துக்கு அதிகமான மருந்துகளின் விளக்கம் தமிழிலும், ஆங்கிலத்திலும் நிறைந்த ''ஸ்டீபன்ஸ் பிரிஸ்கிருப்ஷன் கைடு'' என்ற புத்தகம் விலை ரூ. 10-00.
2. ''ஸல்பா & ஆண்டிபயோட்டிக்ஸ்'' மருந்துகள் சம்பந்தமான புத்தகம் தமிழில் 350-பக்கம் கொண்டது விலை ரூ. 9-00.
3. ''ஊட்டச் சத்துக்களும் அவற்றின் பயனும்'' என்ற விரிவான புத்தகம் இலவசமாகப் பெறுவதற்கு 420-பக்கம் கொண்ட ஒரே ஒரு ''தாய்மை மருத்துவ நூல்'' என்ற புத்தகம் விலை ரூ. 10-50.
4. ''மருந்துப் பொருளியலும் நோய் நீக்கக் கலையும்'' (பார்மகாலஜி) என்ற இந்நூல் வைத்தியத்துறையில் மிக மிகக் கட்டாயமாகப் படிக்க வேண்டிய பாடம் என்பதை எந்த ஆங்கில முறை மருத்துவர்களும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. இப்புத்தகத்தின் விலை ரூ. 10-00.

(மேலே உள்ள புத்தகங்களுக்குத் தபால் செலவுக்கென ரூ. 1-50 சேர்த்து அனுப்புதல் வேண்டும்.)

5. ''பார்மகோ மெடிக்கா'' தமிழ். அலோபதி மருத்துவத் துறையில் தினசரி பார்வையிடும் பல வகையான நோய்களுக்கும் உரிய வெவ்வேறான சிகிச்சை முறைகள் நிறைந்த 10-பகுதிகளுடன் 800-பக்கம் கொண்ட இப்புத்தகம் தபால் செலவுடன் ரூ. 25-00
6. ஆங்கில வைத்திய முறையில் புதுப் புது மருந்துகளைப் பற்றியும் வைத்திய அறிவைப் பெருக்கும் கட்டுரைகளுடன் வெளிவரும் மாத இதழ் தமிழ்ப் பதிப்பான ''ஹெலன் வைத்திய சஞ்சிகை''யில் சந்தாதாரராகுங்கள். ஒரு வருட சந்தா ரூ. 6-00. ½ வருட சந்தா ரூ. 3-50.

★

ஓமியோபதி வைத்தியத்தை 4-வருடக் கல்லூரிப் பயிற்சியாகக் கற்று D. H. M. S. டிப்ளமோ பெறுங்கள். இதற்காக இனிமேல் பிற மாகாணங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை. தமிழகத்தில் வேறு எங்கும் இல்லாத தனிப் பெரும் ஒரே கல்லூரியாக விளங்கும் ''ஓமியோபதி மருத்துவக் கல்லூரி''யின் உதவியால் நீங்கள் பட்டதாரி ஆகி உங்கள் ஆவலைப் பூர்த்தி செய்யுங்கள். ஒவ்வொரு ஜூன் மாதமும் இக்கல்லூரியில் பயில விண்ணப்பிக்கலாம். அதற்குரிய விவரங்களுக்கு ரூ. 5-00 அனுப்பிப் பெறலாம்.

டாக்டர் என். தங்கராஜ், இயக்குநர்,
ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, மதுரை-10.



நீலத் திகிரி

எஸ்.மகராஜன்



பூமியின் சுற்றளவு 25000 மைல். இவ்வளவு பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு மனோ வேகத்தில் சுற்றிக் கொண்டே இருக்கிறது பூமி. சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் இருக்கும் தூரம் 9 கோடி மைல். தான் சுற்றுவதுமல்லாமல் சூரியனையும் பிராகாரமாகச் சுற்றி வருகிறது பூமி. இந்தப் பிராகாரத்தின் சுற்றளவு 54 கோடி மைல். ஒரு பிராகாரம் சுற்ற ஒரு வருஷம் ஆகிறது. பூமியைப் போலப் பல அண்டங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியனும் தன் பரிவாரக் கிரகங்களோடு எட்டாத வெட்ட வெளியில் சுற்றிக் கொண்டிருக்கிறது. இதைப் போல எத்தனை எத்தனையோ சூரியர்கள் வானவெளியில் வட்டம் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு சலியாது சுற்றும் அண்டங்களும் பிரம்மாண்டங்களும் உருளைகளை அல்லது சக்கரங்களை ஒத்திருக்கின்றன, கவியின் கண்ணுக்கு. இப் பேரண்ட சக்கரங்களை 'ஞாலத் திகிரி' என்று அழைக்கிறார் கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். [திகிரி - சக்கரம் அல்லது உருளை.]

ஒவ்வோர் அண்டமும் சுற்றுவது ஒரு பக்கம் இருக்க, ஒவ்வோர் அண்டத்தினுள்ளிருக்கும் பொருள்களும் உருமாறி வட்டம் சுற்றுகின்றன. உதாரணமாக, கடல்நீர் சூரிய வெப்பத்தின் உதவியால், ஆவியாக மாறுகிறது. நீராவி பூமிக்குப் பத்து மைல் உயரம் வரை சென்று பின் குளிர்ந்து இறுகி மேகமாக உருக் கொள்கிறது. மேகம் சூல் கொண்டு இருண்டு கறுத்து மழையாக மலைமேல் பொழிகிறது; ஆறாகப் பாய்ந்து கடலொடு கலக்கிறது. மறுபடியும் சக்கரம் சுழல்கிறது, ஆவி—மேகம்—மழை—கடல் என்று. இவ்வாறு வட்டவளையம் போடும் இயக்கத்தை 'முதுநீர்த் திகிரி' என்று அழைக்கிறார் கவிஞர். [முதுநீர் கடல்நீர்].

முதுநீர்ச் சக்கரத்தைப் போலவே, பருவ சக்கரமும் சுழல்கிறது; வசந்தம், கோடை, காற்று, மழை, பனி, மறுபடியும் வசந்தம் என்று பருவங்கள் எல்லாம் ஒரு நியதிப்படி வளைய வளைய வருகின்றன. பிறப்பு இறப்பு என்ற சக்கரம் வேறு சுழன்று கொண்டேயிருக்கிறது.

'ஞாலத் திகிரி', 'முதுநீர்த் திகிரி' முதலியவற்றைச் சுற்றச்செய்யும் மூலத் திகிரி எதுவென்றால், காலம் என்ற கண்ணுக்குத் தெரியாத திகிரிதான். பிரம்மாண்டமான ஆலமரம் ஒன்றை இன்று பார்க்கிறோம். அதன் வயது 200 இருக்கும். 200 ஆண்டுகளுக்கு முன் அது ஒரு சிறிய ஆலவிதையில் ஒளிந்துகொண்டிருந்தது. காலசக்கரம் சுழன்று சுழன்று, விதையில் ஒளிந்து கொண்டிருந்த ஆலமரத்தை மெல்ல மெல்ல இழுத்து வெளிக்கொணர்ந்திருக்கிறது. பிரபஞ்சத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாமே கால சக்கரத்தின் சுழற்சியால் வெளிவந்தவைகளே.

சென்னையிலிருந்து மதுரை போகும் வழியிலே திருச்சி வருகிறது. இல்லாத திருச்சியா திடீரென்று தோன்றுகிறது? முன்னமேயே இருந்த ஊர்தான் திருச்சி. இடத்தை விட்டு இடம் பயணம் செய்யும் போது அவ்வூரை நாம் சந்திக்கிறோம். 1982-இல் நடக்கப் போகும் நிகழ்ச்சிகள் நிகழ்பவையல்ல. பத்து ஆண்டுகளுக்கப்பால் காலமண்டலத்தில் அவை இருந்து கொண்டிருக்கின்றன; 200 மைல்களுக்கப்பால் இருந்து கொண்டிருக்கும் திருச்சியைப் போல. தூரம் என்ற திரை திருச்சியை மறைத்துக்கொண்டிருப்பது போல, காலம் என்ற திரை எதிர்கால நிகழ்ச்சிகளை மறைத்துக் கொண்டிருக்கிறது. இந்த உண்மையை வேறு விதமாகவும் சொல்லலாம்; காலம் என்ற வாகனத்தில் ஏறி நாம் பயணம் செய்யும்போது, முன்னமேயே இருந்து கொண்டிருக்கும் அந் நிகழ்ச்சிகளை நாம் சந்திக்கின்றோம், இடப் பயணத்தில் திருச்சியை நாம் சந்திப்பது போல. காலம் என்ற தத்துவம் எல்லா நிகழ்ச்சிகளையும் பூத்து விரியச் செய்கிறது. ஆகவே, நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டும் சூத்திரதாரியாக இருக்கிறது காலம் என்ற திகிரி. 'ஞாலத்திகிரி முதுநீர்த்திகிரி நடாத்தும் அந்தக் காலத்திகிரி' என்று சொல்லி அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து வியக்கிறார் கவிஞர்.

நீளம், அகலம், உயரம் என்ற மூன்று அளவைகளோடு கலந்து பிரிக்க முடியாத நான்காவது அளவை ஒன்றிருக்கிறது, அதுவே காலம் என்ற அளவை என்பதை விஞ்ஞான முறையிலே நிலைநாட்டினார் ஐன்ஸ்டைன். காலத்துக்கு அப்பால் ஐந்தாவது அளவை ஒன்றிருக்கிறது என்று ஊஸ்பென்ஸ்கி என்ற ரஷ்ய விஞ்ஞானி சொல்லுகிறார். விஞ்ஞானிகள் இன்னும் பலப் பல அளவைகளைப் புதிதாகக் கண்டுபிடிக்கலாம். ஆகவே அவற்றிற்கும் இடம் கொடுக்க வேண்டும் என்று எண்ணி, எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்,

''ஞாலத்திகிரி முதுநீர்த் திகிரி
நடாத்தும் அந்தக்
காலத்திகிரி முதலான யாவும்''

என்று பாடினார்.

காலம் முதலான மூலச் சக்கரங்களுக்கெல்லாம் விசை கொடுத்து முடுக்கிவிட்ட முதல் மூல சக்கரம் ஒன்று இருக்கிறது. அதைப் பற்றிப் பேசப் போகிறார் கவிஞர். அவர் சொல்லப் போவதைப் புரிந்து கொள்வதற்காக ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஞாபகப் படுத்திக்கொள்ளலாம். நீலகிரியின் உச்சியில் இப்போது ஒய்யாரமாக அமர்ந்திருக்கும் உதகமண்டலம் அந்தக் காலத்தில் இல்லை. அது மனித சஞ்சாரம் இல்லாத ஒரே மலங்காடாக இருந்தது கிழக்கு. இந்தியக் கம்பெனியில் வேலைபார்த்த ஆங்கிலேயர் ஒருவர் தற்செயலாக மலைமேலேறிச் சுற்றி வந்த போது, இப்போது உதகமண்டலம் இருக்கும் மலையுச்சியைக் கண்டு, அங்கு ஓர் அழகிய நகரத்தை நிருமிக்கலாம் என்று எண்ணினார். இங்கிலாந்திலிருந்து ஒரு சிற்பியை வரவழைத்து, கோடைக் கொடுமையினின்றும் தப்பி ஆங்கிலேயர் வாழ்வதற்குரிய ஒரு நகரத்தை அமைக்கும்படி ஏவினார். நகரத்தை அணி செய்வதற்காக மனத்துக்கு இதமான ஒரு பூங்காவையும் அமைக்க வேண்டும் என்று ஒரு கற்பனைத் திட்டம் போட்டார் சிற்பி. அவருடைய கற்பனையில் விதம் விதமான பூஞ் செடிகள் பூத்

துக் குலுங்கின; விதம் விதமான மரங்கள் கப்பும் கவடுமாக வளர்ந்து வானைத் தொட்டுக்கொண்டு நின்றன. அவர் உள்ளத்தில் உதயமான சோலையை அவரோடு ஒத்துழைத்தவர்கள் காணவில்லை.

ஒரு பனைமட்டையைக் கையில் வைத்துக்கொண்டு சுண்ணாம்புத் தண்ணீரில் அதை முக்கி முக்கிக் கோலம் போட்டுக்கொண்டே போனார் சிற்பி. பின் சென்றவர்கள் அவர் கட்டளைப்படி, அந்தக் கோலத்தின் புள்ளிகளிலும், வளைந்து நெளியும் கோடுகளிலும் விதைகளை விதைத்தார்கள்; பதிகளைப் பதித்தார்கள்; செடிகளை நட்டார்கள். பலப் பல ஆண்டுகள் உருண்டோடின. அதன் பின்தான் இப்போது உதகையில் நாம் பார்க்கும் அற்புதமான பூங்காவை (Botanical gardens), நனவாகிய சிற்பியின் கனவை, மற்றவர்களும் கண்டு மகிழ முடிந்தது; மற்றவர்களுக்கு அருவமாக இருந்த சிற்பியின் அகக் காட்சி, இப்போது மற்றவர்களுக்கும் காணக் கிடைத்த புறக் காட்சியாக உருவாயிற்று.

இதைப் போலவேதான், இறைவன் என்ற மாபெரும் சிற்பியின் அகக் காட்சியிலே உதித்தது பேரண்டம்; பின்னர் அது புறக் காட்சியாக மாறியது. வெறும் பாழாக இருந்த எல்லையிலாப் பரவெளியில் பல்லாயிரங் கோடி அண்டங்கள் பூத்து மலர்ந்தன. சூரிய சந்திரர்களும் விண்மீன்களும் தோன்றி, மாபெரும் உருளைகளைப் போல, வெட்டவெளியில் சுழன்றன; சுழல்கின்றன; ஒரு கணக்குப்படி சுழல்கின்றன; ஒன்றோடொன்று மோதாமல், யாரோ இட்ட கோலங்களின் கோடுகளிலும் புள்ளிகளிலும் ஆணைக்கு அடங்கி நின்று, ஆனால் கற்பனை கடந்த வேகத்தில் சுழல்கின்றன.

வெட்ட வெளியிலே கோலத்தை இட்டவர் யார்? திருவரங்கத்திலே பள்ளிகொண்டிருக்கும் நம் பெருமாள்தான். பாற்கடலைக் கடைந்த போது, ஒரு நீலமலையை மத்தாக வைத்துக் கடைந்தார் அவர். அந்த மத்தைப் போல நீலமேனியை உடையவர் நம் அரங்கர். அறிதுயிலில் இருக்கும் அவர் பாதங்கள் நோவ எழுந்து சென்று, பனை மட்டையைக் கையில் வைத்துக் கொண்டு, சுண்ணாம்புத் தண்ணீரில் அதை முக்கி முக்கியா அவர் கோலத்தைப் போடுவார்? இல்லை. நியதிக் கோலத்தைப் போட வேண்டும், அதற்கு அடங்கிப் பேரண்ட உருளைகள் உருளவேண்டும் என்று அறிதுயிலில் இருந்தவர் தீர்மானித்தார். அவ்வளவுதான். உடனே அவர் கையிலிருக்கும் அழகிய சக்கரம், கோலத் திகிரி, அவர் கையை விட்டு அகன்று, பாய்ந்து, வெறும் பாழிலே சுழன்று சுழன்று சென்று ஒரு மாபெரும் கோலத்தை யிட்டுவிட்டு, மீண்டும் அவர் கையிலே வந்து அமர்ந்து கொண்டது. மூலத் திகிரி யிட்ட கோலத்திலே, காலத்திகிரி பயபக்தியோடு உருண்டு சென்றது. காலத் திகிரியினின்றும் பிறந்து, அதோடு இணைந்து நிற்கும் ஞாலத் திகிரி, முதுநீர்த் திகிரி முதலிய திகிரிகள் எல்லாம், நியதி தவறாமல் தொடர்ந்து சுழன்றன. இந்தத் திகிரித் தொடரைப் பார்த்து அநுபவிக்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

ஞாலத்திகிரி, முதுநீர்த்திகிரி
நடாத்தும் அந்தக்
காலத்திகிரி முதலான யாவும்,
கடல் கடைந்த
நீலத்திகிரி அனையார், அரங்கர்
நிறைந்த செங்கைக்
கோலத்திகிரி தலைநாளில்
இட்ட கோலங்களே.

படைத்துக் கொண்டே யிருக்கும் வளம் நிறைந்த கையை, 'நிறைந்த செங்கை' என்றார். செங்கை எப்படிப் படைக்கிறதாம்? பாற்கடலைக் கடையக் கடையப் புதுப் புதுப் பொருள்கள் உண்டாகின்றன. விண்ணில் தோன்றுகிற குறிப்பிட்ட நக்ஷத்திரக் கூட்டத்தை Milky way அல்லது பாலோடை என்று ஆங்கிலேயர் அழைக்கிறார்கள். இந்தப் பாலோடையைப் பாற்கடல் என்று அழைத்தார்கள் நம் முன்னோர்கள். இந்தப் பாற்கடலின் தனிச் சிறப்பைப் பற்றித் தற்கால விஞ்ஞானிகள் அதிசயித்துக் கொண்டே யிருக்கிறார்கள். பேரண்டத்தில் வேறு எங்கும் நடக்காத ஒரு நாடகம் இங்கு நடந்துகொண்டே இருக்கிறது. மற்ற இடங்களிலெல்லாம் ஒரு பொருள் உருவம் மாறி மற்றொரு பொருள் ஆகுமேயொழிய, சூனியத்திலிருந்து ஒரு பொருளும் உண்டாவதில்லை. ஆனால், பாலோடை மாத்திரம் இந்த விதிக்கு விலக்காக அமைந்திருக்கிறது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். ஏன்? வெறும் பாழிலிருந்து, அதாவது இன்மையிலிருந்து, ஹைட்ரோஜன் அணுக்கள் பாலோடையில் எப்படியோ படைக்கப்படுகின்றன, இந்த அற்புதம் விளங்கவில்லையே என்று தற்கால விஞ்ஞானிகள் வியக்கின்றார்கள். கோலத்திகிரியைக் கையில் வைத்துக்கொண்டு, பாலோடையில் துயிலும், அந்த நீலத் திகிரி (நீலமலை) அனையாருக்கே அது வெளிச்சம். *

உங்களுடைய பம்பு செட் அடிக்கடி பழுதடையாமல் ஒழுங்காக இயங்கி வயலில் தங்கு தடையின்றி தண்ணீர் கிடைக்க வேண்டும் என்று நீங்கள் எண்ணினால் அதற்காக சரியான நடவடிக்கை எடுங்கள். அதாவது, உங்கள் பம்பு செட்டின் மோட்டாருக்கு பூர்ண பாது காப்பளிக்க 'எல் அண்ட் டி' (L & T) ஸ்டார்டர் பொருத்துங்கள்.

ஓவர்லோட் ஏற்பட்டாலோ, கரெண்டின் வோல்டேஜ் குறைந்தாலோ இந்த ஸ்டார்டர் உடனேயே மோட்டாரை லைனிலிருந்து விடுபடுத்தி அது எரிந்துவிடாமல் பாது காக்கும். இந்த ஸ்டார்டர் நெடுநாள் உழைக்கிறது. ஏனென்றால் இதன் காண்டாக்டுகள் அசல் வெள்ளியால் தடிப்பாக செய்யப்பட்டவை. லார்ஸன் அண்ட் டுப்ரோவின் பெயரே இதன் உயர்தரத்திற்கும் நம்பகத் தன்மைக்கும் உறுதி. டைரக்ட்-ஆன்-லைன், ஸ்டார்-டெல்டா போன்ற எல்லா ரகங்களிலும் 'எல் அண்ட் டி ஸ்டார்டர்கள் கிடைக்கின்றன. உங்கள் தேவைக்கு ஏற்றதைத் தேர்ந்தெடுங்கள்.



ஸ்விட்ச்கியர் டிவிஷன்

லார்ஸன் அண்ட் டுப்ரோ லிட்.

தபால் பெட்டி 278, பம்பாய்-1
தபால் பெட்டி 619, கல்கத்தா-16
தபால் பெட்டி 323, புது டெல்லி-1
தபால் பை 5247, மதராஸ்-2

மழை எப்படிப் பெய்யும்?

— நெ. து. சுந்தரவடிவேலு —

"எங்கே செல்கிறது? நாடு எங்கே செல்கிறது?" இதுவே எல்லோர் உள்ளங்களிலும் ஊறும் உணர்ச்சி.

இறக்கம். எது? விலைவாசியா? இல்லை; பின் எது? நீர்மட்டம்! தேக்கங்களில் நீர்மட்டம் இறங்கிவிட்டது; மிக இறங்கிவிட்டது. பயிர் என்னவாகும்? நகரங்களில் குடி தண்ணீர் கிடைக்குமா? இப்படியெல்லாம் அச்ச மேகம் கௌவும் பருவத்திலே காலந் தள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் நாம்.

நீர்மட்டம் மிகக் குறைந்துவிட்டதால், மின் உற்பத்தி குறையும். விளைவு? பழைய அளவில் மின்சாரம் கிடைக்காது. அதிலும் வெட்டு. அநேகமாக நாடு முழுவதிலும் வெட்டு. இது தொல்லையான நிலைமை. மாற்று என்ன?



தெருவோர வித்தைக்காரன் மாங்கொட்டையைக் காட்டி மறைத்து, மறுவிநாடி மாஞ்செடியைக் காட்டப் பார்த்திருக்கிறோம். அத்தகைய வித்தையில் மாஞ்செடியை நட்டு, மரமாக வளர்ந்ததை எங்கும் கண்டதில்லை. வித்தைக்குப் பயன்படும் அந்தச் செடி, வாழ்க்கைக்குப் பயன்படுவதில்லை.

நாம் படும் தொல்லைகளுக்கு மருந்தும் தந்திரத்தால் கிடைக்காது. நீண்ட முயற்சியால் கிடைக்கலாம்.

மின்வெட்டு எதனால்? மின்னுற்பத்திக் குறைவால். மின் உற்பத்திக் குறைவு எதனால்? நீர்மட்டக் குறைவால். நீர்மட்டக் குறைவு எதனால்? மழையின்மையால். மழையின்மை எதனால்? பலரும் பல வகையாகப் பதில் கூறுவர். நானும் ஒருவகைப் பதில் கூறுகிறேன். முடிவை உங்கள் சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன்.

மழை பெய்தல், இயற்கையின் கொடை. இயற்கையும் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டது. மாறாத சட்ட திட்டங்களுக்கு அடங்கியே இயற்கையும் செயல் புரிகிறது. சில வேளை அதன் திருவிளையாடல்கள் நமக்குப் புரியாமல் இருக்கலாம். அந்தக் குற்றம் இயற்கையைச் சாராது; மானிடத்தின் அறிவு அவ்வளவு கூர்மையாகவில்லை என்றே பொருள். பந்தாட்டப் பந்தயத்தில் ஈடுபடுகிறோம். பொழுதுபோக்குக்கான, மகிழ்ச்சிக்கான, உடற்பயிற்சிக்கான அந்த ஈடுபாட்டுக்குக் கூடச் சில விதிமுறைகளை வகுத்துக் கொண்டு, அவற்றிற்கு அடங்கி ஆடும் வரையில் ஆட்டம் நடக்கும்; பார்க்கத் தக்கதாயிருக்கும். விதிமுறைகளைத் தூக்கி யெறிந்துவிட்டு, பந்தை எப்படி வேண்டுமானாலும் யார்பேரில் வேண்டுமானாலும் அடிக்கலாம் என்று தொடங்கினால் அது ஆட்டமாகாது; கலகமாகும்; கலக்கமாகும்.

இயற்கையின் விதிமுறைகளுக்கு ஏற்ப நாம் நடந்தவரையில் இயற்கையும் நமக்குத் துணை நின்றது. இயற்கையை அடக்குவதும் அதன் விதிகளுக்கு உட்பட்டே நிகழ வேண்டும். பசித்தே உண்ணும் பழக்கம் இருந்த வரையில், மக்கள் உடல்நலம் நன்றாக இருந்தது. கிடைத்த போதெல்லாம் திணிக்கும் பழக்கம் வளர வளர நோய்களும் படர்ந்தன.

காடுகள் இயற்கை. அதே போல் இயற்கை, ஆற்றோர மரங்கள். ஏரிக்கரை மரங்களும், மந்தை வெளி மரங்களும், சாலையோர மரங்களும் இயற்கையானவை. அவை பெரும்பாலும் தாமே முளைத்தவை. காடுகளும் சோலைகளும் மழையை இழுப்பன. இயற்கையான பசுமரச் செல்வம் குறையாதிருந்த வரையில், மழையும் பெய்தது; பயிரும் வளர்ந்தது; உயிர்களும் வாழ்ந்தன.

நம் மக்கள் மரங்களைப் பட்டை உரிக்கத் தொடங்கினர். மக்கள் வாழ்வைப் பாழாக்கத் தொடங்கிவிட்டோம் என்பதைப் பாமரர்களாகிய அவர்கள் அறியார். எனவே இந்த அழிவுத் தொழில் வளர்ந்தது. அரசியல் விடுதலைக்குப் பிறகு, உரிமையோடு, கேட்பாரற்று, எவனெவனோ பொது மரங்களையெல்லாம் வெட்டி வெட்டி அழித்து விட்டான். இருபத்தைந்து ஆண்டுகளாக, பல்லாயிரக் கணக்கான பாமரர்கள், தன்னலம் முற்றிய சமூக விரோதிகள் தம் தேவையை மட்டுமே கருதி, பொது நன்மையைச் சிந்தியாமல் செய்து வந்த தீச் செயல்களின் விளைவு, நாடு முழுவதிலும் தாவரவளம் குறைந்து விட்டது. சென்னையிலிருந்து செங்கற்பட்டு வரை சாலையின் இரு மருங்கிலும் ஐம்பது கிலோ மீட்டர் தூரமும் உயர்ந்த மரங்கள் கைகோத்து நின்ற காலம் என் இளமைக் காலம். என் மணிவிழாக் காலமோ, சிற்சில இடங்களில் மட்டுமே, பட்டுப் போகக் காத்திருக்கும் கிழட்டு மரங்களைக் காணும் காலம். இதே நிலை, எல்லாச் சாலைகளிலும். ஊர்ப் பொதுவிலாவது மரங்கள் அடர்ந்து உள்ளனவா? இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எல்லாச் சிற்றூர்களிலும் மரங்கள் படர்ந்து கிடந்தன. இன்று அந்த நன்னிலை இல்லை. எங்கோ சில ஊர்களே பசுமையாக உள்ளன.

புதியவற்றை உருவாக்க வேண்டும். வாழ்க்கைக்கு வேண்டியவற்றை உற்பத்தி செய்ய வேண்டும். உண்மை. ஆனால், உள்ளதைக் காக்கத் தெரியாதவர்கள் எப்படி வளர்வார்கள்? இயற்கைத் தாவர வளத்தை அழித்து விட்டால், பருவநிலை கெடாமல் இருக்குமா? மலைக் காடுகளும் போய், ஊர்ச் சோலைகளும் போய், சாலைப் பசுமரங்களும் போய், விரிச்சோடி விட்ட காலத்தில் மழை எப்படிப் பெய்யும்? இது சாபம் அல்ல; வேதனையான விஞ்ஞான உண்மை. ஆண்டுக்கு ஆண்டு மழை குறைந்துகொண்டே வந்தது. அதைப் பற்றிச் சிந்திப்பார் இல்லை. எங்கோ ஓர் இயற்கை விஞ்ஞானி சிந்தித்தாலும், அவன் குரல் கேட்குமா? விஞ்ஞானத்திற்கு நோபெல் பரிசு பெற்ற ஒரே தமிழர் சர் சி. வி. இராமனுக்குக்கூடச் சிறிது இடம் ஒதுக்க முடியாத அளவு நம் எழுத்துலகைக் கௌவியுள்ள அரசியல் செல்வாக்கும் நட்சத்திரக் கவர்ச்சியும் வருமுன் காக்கக் குரல் கொடுக்கும் ஏழை விஞ்ஞானியின் கருத்துக்கு இடம் கொடுக்குமா?

எனவே, ஆண்டுக்கு ஆண்டு மேலும் மும்முரமாக வளர்ந்து வந்த மர அழிவு வேலை, இன்று நம்மைப் பெரிய நெருக்கடியில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது. இவ்வாண்டு 'இனி







யாவது மழை பெய்யுமா?' என்பதே எல்லோர் உதட்டிலும் துடிக்கும் கேள்வி. மண்டையிடியை அப்போதே குறைக்கும் மாத்திரையைத் தேடுவோர் பலர். அவர்களும் தேவை. எந்த மனித சமுதாயத்திற்கும் பல்வகையான பொதுத் தொண்டர்கள் தேவை. சில காலமாவது மண்டையிடி இல்லாதிருக்க வழி சொல்வோரும் தேவை. மண்டையிடியின் காரணத்தைக் கண்டுபிடித்து, அதற்கு நிலையான மருந்தாகிய தக்க கண்ணுடியைக் கொடுப்பவர்கள் சிலரே. அத்தகைய சிலரும் இருந்தால், சமுதாயத்தின் எதிர்காலம் நலமான காலமாக இருக்கும்.

மர அழிவுக்கு ஆளுக்கு ஆளைக் குற்றவாளிகளாக்கி, உரக்க உரைத்துப் பயனில்லை. நாம் அன்றாட நோக்கை அப்புறப்படுத்தி விட்டு, குறுகிய கண்ணோட்டத்தைத் தள்ளிவிட்டு, தொலைநோக்கோடு பாடுபட வேண்டும். நாம் அனைவரும் ஒல்லும் வகையெல்லாம் மரம் வளர்க்க முனைய வேண்டும். நாளைக்கே பலன் கொடுக்காதே என்பதற்காகச் செய்ய வேண்டிய நல்லதைச் செய்யத் தவறி விடக் கூடாது. மார்கழி மாதத்தில் மரமாகிவிடாதே என்று அயர்வு கொள்ள வேண்டாம். நல்லதை விதைத்தால் நல்லது விளையும். பாட்டன் நட்டால்தான் பேரன் பலன் பெற முடியும் என்ற பண்டைத் தெளிவை மீண்டும் பெற்று, தொலைநோக்கோடு பொது நன்மைகளைச் செய்ய வேண்டும்.

மரம் வளர்ப்பதில் தொலைநோக்குத் தேவைப்படுவது போல், பிற துறைகளிலும் தொலைநோக்குத் தேவை.

அதோ உயர்ந்த மரம். குலை குலையாகச் செவ்விளநீரைத் தாங்கி நிற்கும் நன்மரம். பல்லாண்டு உயர்ந்து நின்று, பல்லோர் கண்ணிலும் கருத்திலும் இருக்கப் போகும் இத் தென்னைமரம், முன்னர்ச் சில நாள் வெளியில் கிடக்காமல், வெளிச்சம் போடாமல் நெற்றாக மண்ணில் மறைந்து கிடந்தது. நேற்று, நெற்றாக அடங்கி யிருந்ததால் இன்று உயர்ந்து சிறந்து பயன்படுகிறது; பெருமைப்படுகிறது.

தென்னை கற்பிக்கும் பாடம் என்ன? பல்லாண்டு சிறந்து விளங்க வேண்டிய நீ, நற்பயன் கொடுக்க வேண்டிய நீ, சிலபோது அடங்கித் தவம் கிட என்பதே அப் பாடம். நெற்று, குழியில் அடங்கிக் கிடப்பது, அதன் முழு வளர்ச்சிக்கும் பயனுக்கும் முதற் படி; தேவையான முதற் படி.

'ஐம்பது அறுபது ஆண்டுக் காலம் மக்களுக்கும் நாட்டிற்கும் உலகிற்கும் அமுதமாய், மாமருந்தாய் விளங்கும் ஆற்றலையும் பண்பையும் உன்னுள் அடக்கி வைத்துள்ள தம்பி! நீ சிலபோது தென்னம் நெற்றைப் போல், அடங்கிப் படி. அதன் நன்மை பின்னர்த் தெரியும்; பல்லாண்டு தெரியும்' என்று தென்னை நமக்கு அறிவுறுத்துகிறது.

இதை இளைஞர்கள் தாமே உணர முடியுமா? முடியாது. நெற்று, தானே சென்று குழியில் தவம் இருக்கவில்லை. தெரிந்தவர் ஒருவர் உரிய நிலையில் பள்ளத்தில் பதுக்கி வைத்தார். அவ்வண்ணமே, தொலைநோக்குடையவர்கள், தெரிந்தவர்கள், மாணவ மாணவிகளை வெளியில் திரிய விடாமல் கல்வி ஈடுபாட்டில் பதித்து வைக்க வேண்டும். தனிப்பட்ட சிலரது நன்மைக்காக அல்ல; நாட்டின் மொத்த நன்மைக்காக. ஒரு நாளைய நன்மைக்காக அல்ல; சில நாளைய நன்மைக்காகவும் அல்ல.

நீண்ட எதிர்காலத்தின் நன்மைக்காக நம் நாட்டின் இளைஞர்களைத் தென்னை நெற்றுகளாகக் கருதிக் காக்க வேண்டும்; வளரத் துணை செய்ய வேண்டும்.

நாளை நலத்திற்காக, இன்றைய துய்ப்பை, களிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்வதும் தள்ளிப் போடுவதுமே நாட்டு நலனின் கரு. நெற்றாகாத தேங்காயே சட்னிக்குச் சரி. அத்தகையோர் ஏராளம். எனவே அவர்களை, அன்றாட வழக்குகளுக்கு வைத்துக்கொண்டு, முற்றிய நெற்றுக்களாகிய மாணவர்களை முளைத்து வளர்த்துச் சிறந்து நாட்டை வாழ வைக்க விட்டுவிடுவோம். ★

SAKTHI-KVBI

எமது
தீபாவளி
வாழ்த்துக்கள்

வளரும் தேவைக்கு
கை கொடுக்கிறது

கரூர் வைஸ்யா
பாங்கு லிமிடெட்
பதிவு அலுவலகம் : கரூர்

G. S. அண்ணுசாமி,
சேர்மன்.

புதிய பார்லே மாரி பிஸ்கெட்டுடன்
காப்பியின் சுவையை அனுபவிப்பீர்

க்ளூகோ, மொனகோ
மற்றும் சுவைமிக்க இதர
பிஸ்கெட்டுகளின்
தயாரிப்பாளர்களான பார்லே
உங்களுக்கென பிரத்யேகமாக
வழங்குகின்றனர்—
காப்பியின் சுவைக்குச் சுவையூட்டும்—

பார்லே
மாரி
பிஸ்கெட்டுகள்

அருமையான ருசியுள்ளவை-:பாயில்-ஸீல்டு பேக்குகளில்

everest/1080G/PP tam



- ராஜம்

படவிளக்கம்

ஊர்வசி

காலைக் கதிரவனின் ஒளியில் வானம் பொன்மய மாகத் திகழ்ந்தது. புரூரவஸ் வழக்கப்படி சூரியனை வழிபட்டுத் திரும்பி வந்துகொண் டிருந்தான். தொலைவில் விண்ணுலக மங்கையர் அலறும் கூக்குரல் கேட்டது: ''எங்களைக் காப்பவர் யாரும் இல்லையா?'' மான்கொடி பறக்க, சோம தத்தம் என்ற தேர் விரைந்தது. விண்ணுலக எழிலரசி ஊர்வசியைக் கவர்ந்து சென்ற கேசி என்ற அசுரனை ஒரே அம்பினால் வீழ்த்தினான் மன்னன். அவளை விடுவித்துத் தேரிலேற்றித் தோழிகளிடம் கொண்டு சேர்த்தான். பொங்கும் ஆசையோடு மன்னனைப் பார்த்தாள் தேவநங்கை. அவளிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தான் புரூரவஸ்.

தேவேந்திரன் தலைமையில், 'திருமகள் சுயம்வரம்' என்ற நாடகம் தொடங்கியது. ஊர்வசி, திருமகள்; மேனகை, திருமகளின் தோழி வாருணி. பரத முனிவர் தமது நாடகத்தை அவர்கள் நடிக்கும் திற மையைக் கண்டு வியந்தார். ''இந்தத் தேவர்களில் யாருக்கு நீ மாலையிடுவாய்?'' என்று வாருணி கேட்கிறாள். ஊர்வசி தன்னையும் மறந்து, ''புரூரவஸுக்குத்தான் மாலையிடுவேன்'' என்றாள். 'புருஷோத்தமனுக்கு' என்று சொல்ல வேண்டியவள் மாற்றிச் சொல்லவே, பரத முனிவருக்குக் கோபம் தாங்கவில்லை; ''என் நாடகத்தைப் பாழாக்கிய மையால் நீ தெய்வத் தன்மையை இழப்பாய்'' என்று சபித்தார். ஊர்வசி வெட்கி நின்றாள். ''புரூரவஸ் பல போர்களில் எனக்கு உதவிய வீரர். ஆகவே நீ அவரிடம் இருந்து, நீ பெற்ற மகனை அவர் பார்த்த பின் இங்கே திரும்பு'' என்று இந்திரன் அருளினான்.

தண்மையான மந்தாகினிக் கரையில், ஊர்வசி யுடன் இன்புற்று வாழ்ந்தான் மன்னன். ஒரு நாள் அவள் அவனுடன் ஊடலுற்றுக் குமாரவனத்தில் புகுந்துவிட்டாள். கார்த்தி கேயன் விரதமிருக்கப் படைவீடு கொண்ட அந்த வனத்தில் எந்தப் பெண் வந்தாலும் கொடியாக மாறுவாள். ஊர்வசி அங்கே திராட்சைக் கொடி யானாள். அவளைத் தேடி அலுத்த புரூரவஸுக்குச் 'சங்கமனீயம்' என்ற அருமை ரத்தினம் கிடைத்தது. பிரிந்தவரைச் சேர்க்க வைக்கும் மணி அது. தனியே நின்ற திராட்சைக் கொடியைத் தேடிக் கண்டான் அரசன். சங்கமனீய ஸ்பரிசம் பட்டதும், கொடி ஊர்வசியாக மாறியது. அவளுடன் ராஜதானிக்குத் திரும்பினான் மன்னவன்.

அரசன் ஒரு தடவை சங்கமத்தில் நீராடச் சென்ற பொழுது, சங்கமனீய மணியை ஒரு கழுகு கொத்திப் பறந்தது. பறவையைத் தேடிச் சென்ற சேவகன், மணியுடனும் ஓர் அம்புடனும் திரும்பி வந்தான். அம்பில், 'ஊர்வசியின் மகன், வில்லாளன் புரூரவஸின் மைந்தன்—குமாரன் ஆயுஸின் அம்பு இது' என்று வரைந்திருந்தது. 'என் மகனா!' என்று அரசன் வியக் கையில், ஒரு சிறுவனுடன் தாபதப் பெண் ஒருத்தி, அரசவைக்கு வந்தாள். ''நீங்கள் நைமிசாரணியம் சென்றிருந்தபோது இவன் பிறந்தான். இவனை நீங்கள் கண்டால், இந்திரன் வாக்குப்படி உங்களைப் பிரிய நேருமே என்று அஞ்சிய ஊர்வசி, இவனை என்னிடம் கொடுத்து வளர்க்கச் சொன்னாள்'' என்றாள். மகனைக் கண்டதும், இனி மன்னனை விட்டுப் பிரிய வேண்டுமே என்று ஊர்வசி கவலையுற்ற நேரத்தில், மகிழ்ச்சியான செய்தி வந்தது: 'தேவா சுரப் போர் தொடங்கிவிட்டது. ஆதலால் புரூர வஸின் உதவி நமக்குத் தேவை. ஊர்வசி வாழ்நாள் முழுவதும் மன்னனுடன் இனிதிருக்க அருளுகிறோம்' என்று இந்திரன் விடுத்த செய்தியை, நாரதர் வந்து தெரிவித்தார். ஆயுஸ் இளவரசனானான்.

ஆதாரம்: மகாகவி காளிதாசரின் 'விக்ரமோர்வசீயம்'

ஓவியர்: ஜி. கே. மூர்த்தி



ஊர்வசி

ஊர்வசியைக் கவர்ந்து செல்கிறான் கேசி என்ற அசுரன். அவளை மீட்டுத் தோழிகளிடம் சேர்க்கிறான் புரூரவஸ். அவனது வீரப் புகழை விண்ணுலகம் கொண்டு செல்கிறாள் தேவமங்கை.

1972

இந்திர சபையில் நடக்கும் 'திருமகள் சுயம்வரம்' என்ற நாடகத்தில், 'புரூரவஸுக்கே மாலையிடுவேன்' என்று தவறாகச் சொல்கிறாள் ஊர்வசி. பரத முனிவர் அவளைச் சினந்து சபிக்கிறார்.



குமாரவனத்தில் புகுந்த ஊர்வசி திராட்சைக் கொடியாக மாறுகிறாள். அவளைத் தேடிய புரூரவஸுக்குச் சங்கமனீய ரத்தினம் கிடைக்கிறது. அதன் ஸ்பரிசத்தினால், ஊர்வசி பழைய உருவம் பெற, மன்னன் மகிழ்ச்சியுடன் அவளை நகரத்துக்கு அழைத்துச் செல்கிறான்.



புரூரவஸ் தன் மகன் ஆயுஸைச் சந்திக்கிறான். ஊர்வசியின் அழியாக் காதலைக் கண்டு வியந்த இந்திரன், அவள் வாழ்நாள் முழுவதும் மன்னனிடம் இருக்க வரம் தந்திருக்கும் சந்தோஷச் செய்தியை, நாரதர் வந்து தெரிவிக்கிறார்.

தெளிவு

எஸ். லட்சுமிசுப்பிரமணியம்

புது வீட்டின் வர்ண அழகிலும், மொஸாயிக் தரையின் வழுவழுப்பிலும், கண்ணுடிகளின் புதுப் பளபளப்பிலும் கூடி இருந்த மெருகு மணியின் முகத்திலும் தெரிந்தது. வளர்ந்து செழித்த வியாபாரம். பரவி வரும் அதன் கிளேகள். பசுமை தெரியக் குலுங்கும் செல்வம். அந்த அழகான வீடு அதற்கு இன்னேர் அடையாளம்.

போவோரும் வருவோருமாகக் கலகலவென்று இருந்த சூழ்நிலேயில் கோபு மட்டுந்தான் ஒதுங்கினுற் போல இருந்தான். கரை ததும்பும் அந்த மகிழ்ச்சி அலேகள் கால்களில் படவும் கூசினுற் போலத் தயங்கித் தயங்கி உட்கார்ந்திருந்தான். பெண்களின் நடுவே சந்தனம் கொடுத்துக் கொண்டிருந்த ராதையின் மேல் அவன் கண் தங்கியது.

நடுவகிட்டின் இரு மருங்கிலும் வங்கி வங்கியாகப் படிந்த கூந்தல். மின் விசிறியின் காற்றில் அவள் நெற்றியில் விளேயாடிய இரு சுருள்கள். புருவ வளேவுகளின் எழுச்சியின்மேல் மிதந்த பொட்டு. பட்டுப் புடைவையும் புது ரவிக்கையும் தந்த உடல் மெருகுக்கு அணியாக அமைந்தது போல முகத்தில் ஒரு பிரசன்னம்.

ராதையின் புறமாக யாருடைய பார்வை திரும்பினுலும் அவனுக்கும் கூடவே மனத்தில் அந்த இரு வித உணர்ச்சிகள் கிளே பிரிந்தன. அந்த அழகையும் முகக் களேயையும் வியக்கும் பெருமிதம்; அவன் மனப் புழுங்கலில் அவள் மட்டும் அப்படித் தென்றலாக நடமாடுவதைக் காணும் பொருமை. அந்த இடத்தின் புது மணமும் மலர்ச்சியும் அவளிடமும் ஒன்றி நிற்பதைப் போலத் தோன்றியது. அதை உணரும்போதே அவன் நெஞ்சில் வண்டலாகப் படிந்து பொருமை உறுத்திற்று.

கணவன் புறமாகத் திரும்பினுள் ராதை. புருவங்களே உயர்த்தி மணிக் கட்டைத் தொட்டுக் காட்டினுன் கோபு; போவதற்கு நேரமாயிற்று என்று சொல்லாமல் சொல்லுவதைப் போல. அவரவர் சாப்பிட எழுந்து உள்ளே ஹாலுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் மட்டும் அப்படிக் கையை உதறிக்கொண்டு கிளம்புவதா? மணியும் கௌரியும் என்ன நினேப்பார்கள்?

சந்தனக் கிண்ணமும் கையுமாக அவன் அருகே வந்தாள். ''கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். சாப்பிடாமல் போனுல் நன்ருக இராது.'' சிலந்தி நூல்போல அவள் குரல் பிறர் அறியாமல், இழை பிரிந்து வந்து அவனே எட்டிற்று. ஒருவேளே வீட்டில் சமையல் தயாராக இல்லாமல் இருக்கலாம். கௌரியின் அருகில் உட்கார்ந்து விருந்து சாப்பிட்டுத் தாம்பூலம் அணியும் ஆசையும் ராதைக்கு இருக்கலாம். வெகு நாட்களாகப் பழகிய தோழிகள் அவர்கள்.

அவனும் மணியும்? ஏன் அந்த மகிழ்ச்சி உணர்வை அவனுல் பகிர்ந்து கொள்ள முடியவில்லே? தனது முயற்சியில் பெற்ற ஏமாற்றமா? பக்கத்தில் இருப்பவன் முன்னுக்கு வருவதைக் கண்டு கோபு மனம் புழுங்கியதில்லே. ஆனுல் அந்தப் பக்கத்து மனிதன் முன்பின் தெரியாதவனுக இருந்தால்தான் அவன் மனம் பாராட்டக் காத்திருந்தது. ஆனுல் அது மணியாக இருந்தால்? தன்னேவிட அறிவில், சாமர்த்தியத்தில், சுறுசுறுப்பில் ஒரு படி கீழேயே இருந்து, அதிருஷ்டத்தை அடைவதில் மட்டும் அத்தனே படிகள் மேலே போய்விட்ட மணியாக இருந்தால்? அவனுக்குப் புரியத்தான் இல்லே. புரியாததே எரிச்சலாகவும் இருந்தது.

சாப்பிட்டுவிட்டு எழுந்து வெளியே வந்தார்கள். ராதை தன் ஸ்லிப்பரைத் தேடி எடுத்து மாட்டிக்கொண்டாள். குதிகாலில் சிறிது லேசாகப் பிய்ந்து போயிருந்தது அது. அதை மாற்ற, புதிதாக ஒன்று வாங்க, பதினெட்டு ரூபாய் ஆகும். இப்போது பணமில்லே அதற்கு. அன்று அவன் வாங்கி வந்த பரிசு முப்பது ரூபாய். கௌரவத்தை விட்டுக் கொடுக்க முடியாமல் செய்த செலவு அது.

''என்ன யோசனேயாம் உங்களுக்கு?''

தாம்பூலத்தில் சிவந்த இதழ்கள். பூரித்துக் கொழுவிய கன்னங்கள். முப்பது வயதைக் கடந்து, பத்து வயதுப் பையனுக்குத் தாயாக இருக்கும் நிலேயிலும், குன்ருத இளமை அழகு.

''உன்னேப் போல் மகிழ்ச்சியோடு இருக்க முடியவில்லே எனக்கு. ஏன் என்று என்னேக் கேட்காதே ராது!''

அவள் சட்டென்று அவனே நிமிர்ந்து பார்த்தாள், அவன் மனத்தைப் புரிந்து கொண்டது போன்ற உணர்வில் அவள் முகமும் விழுந்தது. காரில் ஏறி அமர்ந்த பின்பும் அவள் பேசவில்லே. அந்தப் புடைவையும் அவள் அணிந்த விதமும் அவனுக்குப் பிடிக்கும். புது உடை கசங்குமே என்றுகூட நினேக்காமல் அவன் ஆசையுடன் தழுவிக்கொண்ட நாட்கள் உண்டு. இன்று அவன் பார்வையில் ஒரு சலிப்பின் நிழல்தான்.

கார் ஓடிக்கொண்டிருந்தது. அவள் தலேயைக் குனிந்து தலேப்பின் நுனியை யோசனேயாக முறுக்கிக்கொண்டிருந்தாள். சட்டென்று அவன் 'பிரேக்'கை அழுத்திய அதிர்ச்சியில், எதிரலேயில் படகு போலக் கார் குலுங்கி அடங்கிற்று. ஓரமாகச் சென்று திரும்பிய சைக்கிள் மயிரிழையில் தப்பிற்று.

''என்ன ஆச்சு?''

அந்த நிமிடத்தின் அவசரத்தில், மனத்தின் பரபரப்பில், அவர்களேச் சூழ்ந்த சாலேயின் இரைச்சலில், அவள் கேள்வி அவன் மனத்தில் பதிவாகவில்லே. ஒரு விநாடியில் தன்னேச் சமாளித்துக் கொண்டு, சுருதிகூட்டு

வதைப் போல மெதுவாகக் காரின் வேகத்தை உயர்த்தினான்.

''கவனித்து ஓட்டுங்கள். வரவர உங்களுக்கு எங்கேயோ யோசனை. தனியாக நீங்கள் காரில் போவதை நினைத்தாலே பயமாக இருக்கிறது.''

அவன் பதில் சொல்லவில்லை. பசுமை இல்லாத ஒரு புன்னகை அவன் இதழ்களில் தோன்றி மறைந்தது.

வீட்டை அடைந்ததும், உடைகளைக் கழற்றக்கூட மனமில்லாமல், கால்களையும் கைகளையும் சோபாவில் வழிய விட்டுக்கொண்டு, சாய்ந்து கொண்டான் கோபு. சோபாவின் கைமேல் உட்கார்ந்துகொண்டாள் ராதை.

''உடம்பு சரியாக இல்லையா உங்களுக்கு?''

அவள் விரல்கள் அவன் நெற்றி மீது படிந்தன. லேசான தலைவலியுங்கூட அந்தத் தொட்டுணர்வில் அடங்குவதுபோல இருந்தது. அவன் தலையைக் கோதினாள். காதோடு பேசுகிற குரலாகச் சொல் கம்மிற்று.

''ஏன் என்னிடம் மனம் விட்டு எதையும் சொல்லமாட்டேன் என்கிறீர்கள்?''

அவன் அவள் கைகளை எடுத்து நெஞ்சில் வைத்துக் கொண்டான். இடையில் கை கொடுத்துத் தன்னருகே இழுத்துக் கொண்டான். அந்த நெருங்கிய நேரத்திலுங்கூட மனம் விட்டுப் பேசத்தான் முடியவில்லை. நெஞ்சில் அவ்வளவு கனம்.

அவனுடைய வியாபாரம் விழுந்து கொண்டிருந்தது. அந்த நீண்ட வேலை நிறுத்தத்துக்குப் பிறகு தயாரிப்புகள் தலை எடுக்கவே இல்லை. வாங்குவோர் விலகிவிட்டார்கள். வேலை செய்பவர்களிடம் சுறுசுறுப்பு இல்லை. ஊதியமாகக் கொடுத்த தொகை, போனஸ், இவற்றைச் சமாளிக்க வலுவில்லாமல், சிக்குப் பிடித்த குழந்தையாக அவன் வியாபாரம் சோர்ந்து சுருண்டுகொண் டிருந்தது.

மிகவும் கவனமாக இருந்தால் இன்னும் இரண்டு மாதங்கள். அதற்கு மேல் சமாளிக்க வகை இல்லை. பிற கம்பெனிகளில் வாங்கியிருந்த பங்குகளை விற்றுக்கொண் டிருந்தான். பாங்கில் கைமீறிய முன்பணத் தொகை கிடைப்பதில்லை இப்போது நண்பர்களுக்குப் 'போன்' செய்தால் 'வீட்டில் இல்லை' என்ற பதில்தான் வந்தது.

வீட்டில் இப்போதெல்லாம் அவன் பேசுவதில்லை. பொறுமையாகப் பதில் சொல்வதில்லை. எதற்கும் 'சுருக்' கென்று கோபம் வந்தது. பையன் ராமுவிடம் அவன் சிரித்து விளையாடிய நாட்கள் உண்டு. தோட்டத்தில் இருவருமாகக் கிரிக்கெட் ஆடுவதும் உண்டு. அவனுக்குப் பந்து பொறுக்கிப் போடும் வேலை. அந்த இனிய சூழல் இப்போது எங்கே?

''நான் கொஞ்ச நேரம் போய்ப் படுத்துக்கொள்கிறேன் ராது. நான்கு மணிக்கு நானாக எழுந்திராவிட்டால் என்னை எழுப்பு.''

அவன் எழுந்து போய்விட்டான். அவள் பார்வை, வேதனையுடன் நடை தள்ளாடும் அவன் உருவத்தைத் தொடர்ந்து சென்றது. அவளால் நம்ப முடியவில்லை. வெளியே சொன்னாலும் நம்ப மாட்டார்கள். அப்படி ஒரு தோல்வியில் கோபு சோர்ந்து விழுந்துகொண் டிருந்தான் என்று ஒப்புக்கொள்ளத்தான் மாட்டார்கள்.

மணியைப் பார்க்கப் போனான் கோபு.

ஒரு வாரமாக யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்து, காலையிலேயே ஒரு தடவை 'போன்' செய்து ஏற்பாடு பண்ணிக் கொண்டுதான் வந்திருந்தான். இருந்தும் அவனிடம் பேச மனத்தில் இன்னும் கூச்சம் தெளியவில்லை. 'லிப்டில்' மேலே ஏறி வந்து, கம்பளம் விரித்த வரவேற்பு அறையில் உட்கார்ந்து கொண்டு, தன் பெயர்ச் சீட்டை உள்ளே கொடுத்தனுப்பிய பிறகு ஐந்து நிமிஷம் காத்திருக்க வேண்டியிருந்தது. மணிக்கட்டின் விநாடி முள்ளைப் போல விரைவாகப் பேசி முடிக்க நினைக்கும் தீவிரம்.

மணி அடித்தது. குளிர்சாதனம் செய்த அறைக் கதவைத் திறந்து உள்ளே கோபுவை அனுப்பினான் பையன். மேஜைமுன் அமர்ந்திருந்த மணி தலையைச் சற்றுச் சாய்த்து வரவேற்றான். உதட்டில் உபசாரமாக ஒரு புன்னகை.

''வா கோபு. என்ன சமாசாரம்? வீட்டில் ராதையும் ராமுவும் சௌக்கியந்தானே?''

''தாங்க்ஸ். அவர்கள் நிம்மதியாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு எதுவும் தெரியாது.''

மணி குலுங்கி நிமிர்ந்தான். ''எதைப்பற்றி?''

''என்னுடைய தொழில் உலகம் என்னைச் சுற்றி இழந்துகொண் டிருப்பதைப் பற்றி.''

மணி நிதானமாக நாற்காலியில் சாய்ந்து கொண்டான். விரல்கள் அதன் பிடியில் தாளமிட்டன. ''தெரியும். நானும் கேள்விப்பட்டேன்.''

''எப்படித் தெரியும்?''

''நானும் உன்னைப் போல ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பவன்தானே கோபு? இருவருக்கும் பொதுவான பங்கு, பொதுவான வாடிக்கைக் காரர்கள், நலம் விரும்பும் நண்பர்கள்—''

''நலம் விரும்பும் நண்பர்கள்கூட இருக்கிறார்களா மணி?''

''ஏன்?''

''இதுவரை அப்படி ஒருவரை நான் சந்திக்கவில்லை. ஒருவேளை உன்னிடம் அப்படி ஓர் உதவும் கை கிடைக்குமோ என்னவோ?''

காலையில் 'போன்' வந்த நேரத்திலிருந்தே மணி தன்னைத் தயார் செய்துகொண் டிருக்க வேண்டும். ஆயினும் ஒளியைக் காணக் கூசுவதைப் போல அவன் கண்கள் சுருங்கின. அவன் மனமும் அப்படிச் சுருங்கிக் கொள்ளும் போலத் தோன்றியது கோபுவுக்கு.

''என்னிடம் என்ன எதிர்பார்க்கிறாய் கோபு?''

''என் 'பிஸினஸை' நீ எடுத்துக் கொள். அதில் இன்னும் செழுமை வற்றிவிடவில்லை. எனக்குத்தான் தன்னம்பிக்கை இல்லை. நான் உன்னுடன் பங்குதாரனாக இருக்கிறேன். நீ என்ன கொடுத்தாலும் சரி.''

மணி பதில் சொல்லவில்லை. ஒரு சிகரெட்டை எடுத்து நிதானமாகப் பற்ற வைத்துக் கொண்டான். யோசனையின் அடையாளமாக நெற்றியை உழுத வரிகள்.

''உனக்கு உதவத் தயாராக இருக்கிறேன் கோபு. ஆனால் இந்த வகையில் அல்ல. என்னிடம் ஏற்கனவே எத்தனையோ பொறுப்புகள் இருக்கின்றன. அவற்றைச் சுமக்கவே எனக்குச் சக்தி இல்லை.''

''உன்னால் முடியாதா மணி? உனக்கு உன் சாமர்த்தியம், திறமை, சுறுசுறுப்பு, அதிருஷ்டம் இவ்வளவும் துணை செய்யும்போது—'' கடைசிச் சொல் மட்டுந்தான் அவன் மனதார நம்பிச் சொன்னது. மற்றவை எல்லாம் உதட்டளவு உபசாரம் மட்டுமே.

''மன்னித்துக்கொள் கோபு. நிலவரம் சரியாக இல்லை. புதிய பொறுப்பு எதையும் நான் ஏற்பதற்கு இல்லை.''

''அப்படியானால்?''

''உனக்கு இஷ்டமானால் ஒரு வேலையை ஏற்றுக்கொள் இங்கே.''

வேலை? மணியின் நிறுவனத்தில் அவன் சம்பளம் பெறும் நிலையில் வேலை ஏற்பதா? என்ன சொல்கிறான் மணி? குரலில் தோன்றிய நடுக்கத்தைக் காட்டிக்கொள்ளாமல் இருப்பதற்காக, பேசாமல் நிறுத்திக் கொண்டான் கோபு. துக்கம் நெஞ்சைக் கட்டி அடைத்துக் கொண்டது. சிறுமையில் உடல் குறுகிச் சோர்ந்தது.

''கோபித்துக்கொள்ளாதே கோபு. இருவருக்கும் நன்மையாக இருக்கக் கூடிய ஒன்றைத்தான் நான் சொன்னேன். அது உன் மனத்தைப் புண்படுத்தி இருந்தால் மன்னித்துக் கொள்.''

''உன்மேல் தவறு இல்லை மணி. உறுதியான ஒன்றை ஆணி அடிப்பதைப் போலச் சொன்னாய் நீ. அவ்வளவுதான். ஆனால் அந்த ஆணியின் அடிமுனை ஏற்கனவே நொந்துபோன என் நெஞ்சில் இருந்தது. உனக்கு அது தெரிந்திருக்க நியாயம் இல்லை!'' எழுந்து நின்றான் கோபு.

''நன்றாக யோசித்துச் சொல் கோபு.''

''எதையும் யோசிக்கும் தெம்பு என் மனத்தில் இப்போது இல்லை. அப்புறம் வந்து பார்க்கிறேன்.''

குளிர்ந்த அறையிலிருந்து வெளியே வந்ததும் ஒரு வெப்பம் உடலைப் புழுக்கிற்று. மனத்திலும் அப்படி ஒரு வெதுவெதுப்பு. மணியின் வாழ்க்கையில் இருந்த குளிர்ச்சி அவனுக்கு மட்டுந்தான். கோபுவினால் எட்ட முடியாத ஒன்று இது.

தோட்டத்தில் பூப்பறித்துக்கொண் டிருந்தாள் ராதை. விரல்கள் பறித்துக்கொண் டிருந்தாலும் உள்ளே ஏக்கம் நிழலைப் போல விழுந்து கொண்டுதான் இருந்தது. 'உஸ்' என்று வாயை விட்டே சொன்னபடி முகத்தைச் சுளித்துக்கொண்டாள்,

''ராதா, உன்னைத்தானே?''

கம்பி வேலிக்கு அப்பால் மலர்ச்செடிகளுக்கு நடுவே அடுத்த வீட்டு அம்மாளின் முகம் தெரிந்தது. கண்ஜாடை அருகே அழைத்தது. கீழே குனிந்து, முள் ஏதும் இல்லையா என்று பார்த்தபடி வேலியை நெருங்கினாள்.

''நான் ஒன்று கேட்பேன். தப்பாக நினைத்துக்கொள்ள மாட்டாயே?''

''சொல்லுங்கம்மா.''

''என் பெரிய பிள்ளை பம்பாயிலிருந்து இங்கே வருகிறான். இங்கேயே தங்கிவிடுவதாக உத்தேசம். ஒரு நல்ல வீடு வேண்டுமென்று பார்த்துக் கொண்டிருக்கிறான்.''

''அப்படியா?''

''இங்கே பார். உங்கள் வீட்டை விற்கப் போவதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையானால், நானே அதை எடுத்துக்கொள்கிறேன். உன் வீட்டுக்காரரிடம் நீதான் கேட்டுச் சொல்ல வேண்டும்.''

''என்னது?''

''என் காதில் விழுந்ததைத்தான் சொல்லுகிறேன் ராதா. அவருடைய 'பிஸினஸ்', கார், வீடு, எல்லாவற்றையுமே விற்கப் போவதாகப் பேச்சு அடிபடுகிறதாம். என் கணவர் சொன்னார். அதுதான் உனக்குத் தெரிந்திருக்குமே என்று கேட்டேன்.''

''எனக்குத் தெரியாதம்மா. அவரிடம் கேட்டுப் பதில் சொல்கிறேன்.''

தலையைக் குனிந்தபடி திரும்பினாள். இந்தத் தடவை கண் முள்ளைத் தேடவில்லை. கண்ணுக்குத் தெரியாத முள் நெஞ்சில் தைத்துவிட்டது.

கோபு ஏன் அவளிடம் எதையும் சொல்லவில்லை?

மலர்க்கூடையை எடுத்துக் கொண்டு உள்ளே திரும்பிவிட்டாள். உள்ளே பூஜையறையில் முருகன் படத்துக்கு முன் வைக்கும்போது அவளையறியாமல் கண்கள் மூடின.

கோபு வந்ததும் அவள் கேட்பாள். அவனிடமிருந்து பதில் இராது; வழக்கம்போல.

அவனுடைய தொழில் வாழ்க்கையைப்பற்றி அவள் ஏதும் கேட்டதில்லை. அவனுடைய சுய முயற்சியில் மனத்தெம்பில் அவளுக்கு ஒரு நம்பிக்கை. அவன் செய்வது எதுவும் நல்ல பயன் கொடுப்பதாகத்தான் இருக்கும் என்ற உறுதி. இப்போது அந்த நம்பிக்கையும் உறுதியும் தளர்ந்து கொண்டிருந்தன. அவள் கேட்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. விழுவதானாலுங்கூட அவர்கள் சேர்ந்துதான் விழ வேண்டும். அதை அவள் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும். அவளுடைய உரிமை அது.

இரவு நேரம்.

அவன் படுத்துக்கொண்டுவிட்டான்; இன்னும் தூக்கம் பிடிக்கவில்லை. நிலாத்துண்டு விழுந்த ஜன்னலோரம் ராதை நின்று கொண்டிருந்தாள். அவனுடைய இளமையையும் பொலிவையுங்கூட அவள் வாங்கிக் கொண்டு இன்னும் மெருகுடன் ஒளிவிட்டு நிற்பது போலத் தோன்றியது. வயதுக்கு மீறிய முதுமை அவனுக்குத்தான் முன்கூட்டியே நேர்ந்துவிட்டது.

அவள் திரும்பி அவனருகில் வந்து அமர்ந்தாள். வளையின் சிணுக்கம் கழுத்தில் குறுகுறுத்தது. முகம் தெரியாவிட்டாலும் குரலில் கலக்கம் புரிந்தது. சொற்கள் மாலை அறுந்து சிதறிய மணிகளாக உதிர்ந்தன.

''என்ன கஷ்டம் உங்களுக்கு? என்னிடம் ஏன் நீங்கள் சொல்லுவதில்லை?''

''இந்தச் சௌகரியம், வசதி, செலவு எல்லாவற்றையும் நாம் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது ராது! வளருவதற்காக அல்ல இந்தச் சிக்கனம்—''

''நான் இருக்கிறேன், உங்களுக்குத் துணையாக. என்னிடம் உங்கள் சிரமத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள். நான் தர முடியாத உதவி ஏதும் உங்களுக்குத் தேவையானால்—''

''அப்படிப்பட்ட ஓர் உதவியை இன்று எனக்குத் தரக்கூடியவர்கள் யாரும் இல்லை ராது! நான் கேட்டுப்



பார்த்தாகிவிட்டது. கொஞ்சங் கொஞ்சமாக எனக்குள்ளேயே....''

அவசரமாக அவள் விரல்களை உதட்டின் மேல் வைத்துப் பொத்தினாள். அவள் விரல்களின் அடியில் இதழ்கள் பொரிந்தன.

'பிஸினஸ்'..கார்..வீடு.. அவன் விற்கப்போவது....அவளுக்கு எல்லாம் தெரியும் இப்போது. ஆனால் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ள மாட்டாள். அவனுடைய பலவீனம் அவளுக்குப் புரிந்திருப்பதாகக்கூடக் காட்டக்கூடாது. கட்டவிழ்ந்த பொட்டலம் கலைவது போல அவன் குலைந்து, அவளைத் தழுவிக்கொண்டிருந்தான். மார்பினுள் முகம் குலுங்கிற்று. ஒரு குழந்தைக்கு ஆறுதல் சொல்வதைப் போல அவள் அவன் தலைமயிரைத் தொட்டு நீவிக்கொண்டிருந்தாள். இனம் புரியாத ஒரு கலவரம் உள்ளே மொளுமொளுவென்று அரித்தது.

வீட்டை விற்றாகிவிட்டது. ஓர் இடமாறுதல் கிடைத்தால் மனத்துக்குத் தெம்பாக இருக்கும் என்று நினைத்தான் கோபு. கும்பகோணத்துக்கு அருகில் அவர்களுடைய சொந்த ஊர் இருந்தது. அந்தப் பக்கம் போகக்கூட எண்ணியதில்லை அவன். வயதான மாமா ஒருவர்தாம் வீட்டிலும் இருந்துகொண்டு நிலங்களின் சாகுபடியையும் பார்த்துக்கொண்டிருந்தார்.

ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டு, மாமாவின் மனத்தில் அந்த ஆச்சரியம் தெளிவதற்கு முன்பே குடும்பத்தோடு போய் இறங்கிவிட்டான் கோபு. ஆற்றங்கரையில் நிழல் விரிக்கும் ஆலமரம். காற்றை முள்ளால் கீறும் மூங்கில்தோப்பு. 'ட்ருவ் ட்ருவ்' என்று கத்தும் மணிப்புறுவின் குரல் கேட்கும் ஆற்றுவெளியின் அமைதி. அங்கிருந்து குறுக்கு வழியில் மூன்று நிமிஷம் நடந்தால் எட்டிவிடும், வீட்டின் பின்புறம் இருந்த கறிகாய்-பூக்கொல்லை.

அந்த நிழலும் குளிர்ச்சியும் அவன் மனத்துக்கு அமைதியைத் தந்தன. பகல் முழுவதும் விநாடி நேரம் ஓய்வில்லாமல் வேலை செய்து பழகிய அவனுக்கு, கூடத்தின் பாதி இருளில், காற்றுப் புகுந்து வீசும்படி வாசற் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு, பாயில் முடங்கிப் படுத்துக்கொண்டிருக்கும் பிற்பகல் நேரம் ஓர் ஆனந்தத்தை ஏற்றுவது போலிருந்தது. பித்தளைக் கமலப்பூண்கள் போட்ட மழமழவென்ற கருங்காலிப் பலகை ஊஞ்சலில் அமர்ந்து ஆடுவதே ஒரு சுகமாக இருந்தது.

ராதையும் பழக ஆரம்பித்துவிட்டாள், அந்தச் சூழ்நிலைக்கு. ஆற்றங்கரைக்குப் போய்க் குளிப்பதும், நீர் எடுத்து வருவதும், மாலையில் பிள்ளையார் கோயிலுக்குப் போய் வருவதும், கொள்ளையாகப் பூத்திருந்த மலர்களை நிதானமாக அரைமணி நேரம் உட்கார்ந்து தொடுப்பதும் அவளுக்குப் பிடித்திருந்தன.

பையன் ராமுவுக்குத்தான் பொழுது போகவில்லை. தெருவில் இருந்த நாலைந்து பையன்கள் அவனைக் கண்டாலே ஒதுங்கினார்கள். அவனுடைய பேச்சே அவர்களுக்கு வேற்றுமையாக இருந்தது. அவனுக்குப் பழக்கமான 'கிரிக்கெட்' அவர்களுக்குப் புரியவும் இல்லை; பிடிக்கவும் இல்லை. ஆங்கிலம் கலந்த கொச்சையான அவன் பேச்சு அவர்களுக்கு ரசிக்க முடியாத புதுமையாக இருந்தது.

ராமுவைப் பார்க்கும்போது கோபுவின் மனத்தில் ஒரு பரிதாபம் ததும்பும். வசதியாகவே வளர்த்து அவனை நிழல் பயிர் செய்து விட்டோமோ என்று ஒரு சந்தேகம் தோன்றும். தன்னுடைய தொழிலை வளமாக வளர்த்து அவனை அதன் உச்சியில் உட்கார வைத்துத் தான் விலகிவிடுவது என்றே அவன் திட்டம் போட்டிருந்தான். இனி அது முடியாது. வெயிலையும் மழையையும் தாங்கப் பழகிக்கொண்டு, நாளைய உழலுக்குத் தயார் செய்து கொள்ளத்தான் வேண்டும் ராமு.

அவனைக் காவேரிக் கரைக்கு அழைத்துக்கொண்டு போவார் மாமா. நீந்தக் கற்றுக் கொடுப்பார். அரையில் மூன்று முடி ஈரிழைத் துண்டும், மார்பில் உலர்ந்து பளிச்சிட்ட விபூதியின் வெண்மையுமாகக் கோவில் பிராகாரத்தைச் சுற்ற வைப்பார். அவர் துணி தோய்த்துக்கொண்டிருக்கும் போது, கரையில் படிக்கட்டில் அமர்ந்து, தவளைக்கல் வீசுவான் ராமு. தண்ணீருள் செங்குத்தாகப் பாய்ந்து, அலகில் எதையோ கவ்விக்கொண்டு, சிலுப்பியபடி பறந்து போகும் மீன் குத்தியைப் பார்த்துக்கொண்டிருப்பான்.

ஆனால் அந்தச் சூழ்நிலையில் அவனால் ஒன்றிவிட முடியத்தான் இல்லை. நகர வாழ்க்கையில் அவனுக்குக் கிடைத்திருந்த அநுபவம், பேச்சிலும் பழக்கத்திலும் இருந்த வயதுக்குச் சற்றுக் கூடுதலாக முற்றியிருந்த பக்குவம், இங்கே தனித்து ஒதுங்கித் தெரிந்தது. 'செஸ்' பலகையை எடுத்து வைத்துக்கொண்டு, அப்பாவை விளையாட அழைப்பதற்குப் பயந்துகொண்டு, தனக்குத் தானே தனியாக விளையாடிக் கொண்டிருப்பான்.

அந்தப் பிஞ்சு மனத்திலும் ஏதோ தெரிந்து போயிருந்தது. இன்னதென்று புரியாவிட்டாலும், குடும்பத்தின் கலக்கமும் குழப்பமும் அவனிடமும் பரவியிருந்தது.

பூஜையறையில் நின்று கண்ணை மூடிக்கொண்டு முணுமுணுப்பான். பின்புறமாக வந்து நின்று ராதை அவன் தோளைத் தொட்டுக் கேட்பாள்: ''என்ன வேண்டிக் கொள்கிறாய் ராமு?''

''எல்லாம் முன்னே இருந்ததைப் போல ஆகவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன் அம்மா.''

''முன்னால் இருந்தது என்ன இப்போது இல்லை? என்ன குறைச்சல்?''

அவனுக்குப் பதில் சொல்லத் தெரியாது. மிரள மிரள விழித்துவிட்டு ஒதுங்கிப் போய்விடுவான்.

ஆடிப் பெருக்கு.

ஆற்றங்கரையில் கட்டுச்சாதச் சாப்பாடு. ஐயனார் கோயில் முன் திருவிழாக் கூட்டம். இரவில் 'காஸ்' விளக்கின் ஒளியில் கூத்து. வீட்டுக்குத் திரும்பிக் கட்டிலில் படுக்க மணி பதினொன்றாகிவிட்டது. வேலை மிகுதியினால் கண் விழித்துப் பழக்கம் அவனுக்கு. இது பொழுதுபோக்குக்காகக் கண்விழிப்பு. உடல் அயர்ந்தாலும் உள்ளத்தில் ஒரு தென்றல் வடிந்த சிலிர்ப்பு.

சிறு பெட்ரூம் விளக்கின் பழுப்பிருட்டில் ராதை காலடியில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

''நீ தூங்கவில்லை?''

அவன் குரல் மெத்தென்று இருந்தது. உள்ளக்கசப்பின் வாடை இல்லை அதில். எங்கோ ஒரு சில்வண்டு சுருதி எழுப்பிக்கொண்டிருந்தது.

''எனக்குத் தூக்கம் வரவில்லை. உங்கள் மனசு எனக்குப் புரியவில்லை. என்னதான் செய்யப்போகிறீர்கள்?''

''ஏன்? கொஞ்ச நாள் நிம்மதியாகத்தான் இருப்போமே? பின்பக்கம் சுவர் விரிசல் கண்டிருக்கிறது. சமையலறை ஓடு உடைந்து கூரை ஒழுகுகிறது. பழுது பார்த்துப் புதிசு பண்ணுவோமே?''

அவள் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். அவர்களுடைய குடும்பத்தில் கண்ட விரிசலை அடைப்பவர் யார்? சரிந்துகொண்டிருந்த நிலையில் சேமித்திருந்ததெல்லாம் பொத்தல் கண்டு ஒழுகிக்கொண்டிருந்தது. அதைப் பழுது பார்க்க அவனுக்கு ஏன் தீவிரம் இல்லை? சட்டென்று ஒரு திருப்தியில் சமாதானம் ஆகிவிட்டானா கோபு? இந்தச் சூழ்நிலையும் அமைதியும் கொடுக்கும் நிம்மதியில், இப்படியே இருந்துவிட்டால் தேவலை என்று நினைக்கிறானா?

''எப்போது ஊருக்குத் திரும்புகிறீர்கள்?''

''எதற்கு?''

''ஏதாவது வேலை பார்க்க வேண்டாமா? உங்களுக்கு, ராமுவுக்கு, எனக்கு, ஓர் எதிர்காலம் இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?''

''அதற்கு நான் சம்பாதித்திருக்கிறேன் ராது. இதைப் போல எளிமையான வாழ்க்கையில் நீங்கள் நிம்மதியாக உட்கார்ந்து சாப்பிடலாம். அது போதும்.''

''என்ன பேச்சு இது? உங்களுக்கு வயது நாற்பது நிறையவில்லை இன்னும்.''

''தெரியும் ராது. உடம்பு அசந்து போனால் ஓய்வு பெறத்தான் ஐம்பத்தைந்து. எனக்கு மனத்தில் அந்த அலுப்பும் சலிப்பும் இப்போதே வந்துவிட்டன. ஒரு வேலை என்று போய் உட்கார்ந்து பிழைக்க என்னால் முடியும் என்று தோன்றவில்லை.''

விளக்கின் ஒளியில் அவன் முகம் தெரிந்தது. இந்த நிம்மதியில் அவன் உடம்பு தேறியிருந்தது. முகத்தில் அமைதி பொலிந்தது.

விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக்கொண்டாள். கோபுவின் கைகள் நீண்டு அவளைத் தேற்றுவதைப்போல அணைத்தன. தொலைவிலிருந்து வரும் நாகசுர இசை மனத்தை மயக்கிற்று. நீர்மல்கும் கண்களைத் துடைத்தபடி தூங்க முயன்றாள்.

விடியற்காலை. கோபு சீக்கிரமாகவே எழுந்து கதவைத் திறந்துகொண்டு போய்விட்டான். தெருவில் இன்னும் சாணம் தெளிக்கும்

விவசாயியின் நண்பன்

டன்லப் ஹெலி:.ப்ளேக்ஸ் ஹோஸ்

உண்மையான நண்பனைப்போல்·டன்லப் ஹெலி ஃப்ளெக்ஸ் ஹோஸும் நிச்சயமாக உமது நிலத்தை பசுமை பெறச் செய்கின்றது—வருடமுழுவதும் நிலத்தில் நன்ருக நீரைப்பாய்ச்சுகின்றது.

நம்பக்கூடியது

நவீனகால செய்முறைப்படி கிரேக்க நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டது. மிக இலேசான இந்த ஹோஸ், நீரை இழுப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் உபயோகிக்கக் கூடியது. உண்மையில் இது அநேக மாய் இந்தியா முழுவதுமே வெவ்வேறுன நிலைகளில் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக உபயோகிக்கப்பட்டு நீர்ப்பாசனத்திற்கு முற்றிலும் பொருந்திய ஹோஸ் என்பதை நிருபித்திருக்கின்றது.

நீடித்திருப்பது

இதன் ஸ்பைரல் P.V.C. அமைப்பு காரணமாக, மற்ற ஹோஸைப்போல் முறுக்கிக் கொள்ளாது, நசுங்கவும் செய்யாது. இது நீடித்திருக்கிறது, தொந்தரவளிக்கும் பூச்சிகள், பயிர்களை அழிக்கும் பிராணிகள், புழுக்கள் காளான் ஆகியவை இதனை தாக்க முடியாது.

பலவகைகளிலும் உபயோகிக்கக்கூடியது

பருவம் கடந்த காலத்தில் நீர்பாய்ச்ச தேவைப்படா விட்டால் இதனை ஃபர்டிலைஸர்களுக்கும் (உப்பு உரங்கள்) பூச்சி மருந்துகளுக்கும் நீங்கள் உபயோகிக்கலாம். ஏனெனில், இது எண்ணிறந்த ரசாயன உப்புக்களைத் தாங்கும் தன்மையுடையது.

இலவசம்

டன்லப் ஹெலிஃப்ளெக்ஸ் ஹோஸ் பற்றி இன்னும் தேவையான விவரங்களுக்கு: விளம்பர இலாகா, டன்லப் இந்தியா லிமிடெட், 62A, மீர்ஸா கலீஃப் தெரு, கல்கத்தா-16 என்ற முகவரிக்கு எழுதிக் கேளுங்கள்.

பெயர் ....

தொழில் ....

முகவரி ....

....

தயாரிப்பாளர்கள்:

டன்லப் இந்தியா லிமிடெட்

இண்டஸ்ட்ரியல் ப்ராடக்ட்ஸ் டிவிஷன்
ஏ.ஜி. பெட்ஸெடகிஸ் எஸ்.ஏ. யினிடமிருந்து லைஸென்ஸ் பெற்றது.

டன்லப் தொழிற்கலையில் பணம் போடுவது லாபகரமானது

OBM 2494A/1 TAM

62 ஆண்டுகளாக மக்களின் அமோக ஆதரவையும்,
நம்பிக்கையையும் பெற்று விளங்குவது

ஆர். எஸ். பதி மருந்து

(REGD)

**தலைவலி, ஜலதோஷம், ஃப்ளு, கைகால் வலி
முதலியவைகளுக்குச் சிறந்த மருந்து**

★ டிரக் லைசென்ஸ், சேல்ஸ் டாக்ஸ் லைசென்ஸ் உள்ள வணிகர்கள் எங்களுக்கு நேரிடையாக ஆர்டர் எழுதலாம்.

★ போலி மருந்துகள் மார்க்கெட்டில் உலவுவதால், நம்பிக்கையான கடைகளில் வாங்குங்கள்.

ஆர்.எஸ். பதி அன் கோ

(ஸ்தாபிதம்: 1909)

214 & 215, மேல மாசி வீதி, த. பெ. எண் 99, மதுரை-1.

Phone: 21061
29605

Grams: AHAMEDCO
Telex: Ms 472

With the best compliments of:

A. M. Ahmed & Co.

Export - Import

Shipping - Clearing - Forwarding - Transport

Post Box No. 1792

255, Linghi Chetty Street, Madras-1

Head Office: Madras

Branches: SIRKALI - ADIRAMPATTINAM - TUTICORIN - AVADI

சப்தம் கேட்கவில்லை. அவள் கண் விழித்தபடி படுத்திருந்தாள். இரவு மனத்தில் இருந்த தவிப்பு இன்னும் அடங்கவில்லை. கோபுவின் அணைப்பும் மேனியின் இதமுங்கூட அதைச் சமாதானப்படுத்த முடியவில்லை. தன்னம்பிக்கை இழந்து அவன் தவிப்பதை அவள் புரிந்து கொண்டாள். நாட்கள் செல்லச் செல்ல அது மெதுவாகத் திரும்பிவிடும் என்று அவள் நம்பிக் கொண்டிருந்தாள். ஆனால் அப்படி ஏதும் நேரவில்லை.

இரண்டு வாரங்கள் ஆகியிருக்கும்.

சாப்பிட்டுவிட்டு வந்து தாம்பூலமும் கையுமாக உட்கார்ந்திருந்தான் கோபு. தபாலில் வந்த அந்தக் கடித உறையை அவனிடம் கொடுத்துவிட்டு வாசலுக்கு ஓடிவிட்டான் ராமு. நீளமான உறை அது. மேலே நிறுவனம் ஒன்றின் முத்திரை அடித்திருந்தது. ராதையின் பெயருக்கு வந்த கடிதம் அது. அவளுக்கு அப்படி வரக்கூடிய தகவல்தான் என்ன?

ஓர் ஆவல் உந்த, அவளுக்குச் சமாதானம் சொல்லிக்கொள்ளலாம் என்று நினைத்தபடி உறையைக் கிழித்தான் கோபு. அவன் பார்வை கடித வரிகளில் நிலைத்து நின்றது. ஒரு வாரத்தில் உத்தியோகத்தில் வந்து சேர அழைக்கும் அழைப்பு அது.

ராதையா வேலைக்குப் போகப் போகிறாள்? அவனிடம் சொல்லக்கூட இல்லையே?

அதிர்ந்து உட்கார்ந்திருந்தவன் அருகே செம்பில் தண்ணீரைக் கொண்டு வந்து வைத்தாள் ராதை. அவன் மனத்தைப்போல உள்ளே நீர் குலுங்கித் ததும்பிற்று. அவன் கேட்கவில்லை. அவள் அவன் கையிலிருந்த உறையைப் பார்த்துவிட்டாள்.

''நான் வேலைக்குப் போகலாமென்று உத்தேசம்.''

அவள் கண் வெறித்தது—ஒரு நிமிஷம்.

''உங்களுக்கு அது ஒரு தூண்டுதலாக இருக்கலாமோ என்னவோ? ராமுவின் எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதில் உங்களுக்கு எவ்வளவு பொறுப்பும் அக்கறையும் உண்டோ அவ்வளவு எனக்கும் உண்டு. என்னால் ஆனதைச் செய்வது என் கடமை என்று நினைக்கிறேன்.''

அவனுடைய மனம் கூசிற்று. அவளை நிமிர்ந்து பார்க்க அவன் கண்ணும் கூசிற்று. உள்ளும் புறமுமாக அத்தனை ஆண்டுகள் அவன் அறிந்திருந்த மனைவி—அவனுடைய ராதை—அந்த நேரத்தில் வேற்றாகத் தோற்றினாள்.

தாம்பூலத்தை விழுங்கவும் முடியவில்லை; துப்பவும் முடியவில்லை.

சுவாமிமலைக்குப் போயிருந்தார்கள். ஆற்றுநீரின் சலசலப்பும், மதகுக் கடியில் அதன் கிளுகிளுப்பும் வண்டியில் போனவர்களின் கண்ணையும் மனத்தையும் பற்றிக்கொண்டிருந்தன. ராமுவுக்கு ஒரே களிப்பு. கொஞ்சம் விட்டுவிட்டால் இறங்கி ஆற்றுவெளிக்கே ஓடிவிடுவான்போல இருந்தது.

அறுபது படிக்கட்டையும் தாண்டி, சுவாமிநாதன் சந்நிதியை எட்டி அடைந்து கொண்டிருந்தார்கள் ராதையும் கோபுவும். இரு புறமும் கம்பியிட்டு வகுத்த சந்நிதியில் அடுக்கடுக்காகப் பக்தர்கள் கூட்டம். கோபு அப்படியே கண்ணை மூடிக் கொண்டு நின்றான். ராதை முருகனை மனத்தில் இருத்தி வணங்கினாள்.

தந்தைக்கு உபதேசம் செய்த காட்சியையும், மயிலையும் நீலம் பூசின வானையும் பார்த்தபடி பிராகாரத்தை வலம் வந்தார்கள். உண்டியலில் காசு போடப் பர்ஸை எடுத்தான் கோபு. எப்போதும் ராமுதான் அதை வாங்கிப் போடுவேன் என்று பிடிவாதம் செய்வான். இப்போது—

ராமு எங்கே?

''நீங்கள் பிடித்துக்கொண்டிருக்கவில்லை?'' என்று திகிலுடன் கேட்டாள் ராதை. கோபுவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

அவள் மிரண்டு திரும்பினாள். விசித்து விசித்து வந்த அழுகையைப் புடைவைத் தலைப்பால் மூடி அடக்கிக் கொண்டு கோயில் முழுவதும் பம்பரமாகச் சுற்றிச் சுற்றித் தேடினாள் ராதை. கோபு படிகளில் இறங்கி வெளியே ஓடினான். அவனுக்கு வேறு சந்தேகம்.

அவன் நினைத்தது சரியாகப் போயிற்று. ராமு காவேரிக்கரையில்தான் இருந்தான். சட்டையைப் படிக்கட்டில் கழற்றி வைத்துவிட்டு நிஜாருடன் தண்ணீரில் இறங்கியிருந்தான். அரைகுறையாகக் கற்றுக் கொண்ட, தெப்பமாக மிதக்கும் நீச்சல் யுக்தியை, அங்கே முயன்று பார்த்துக்கொண்டிருந்தான். கடைகளிலிருந்தும் வயல்களிலிருந்தும் வந்திருந்தவர்கள் சலசலப்புடன் பேசிக் கால்களைக் கழுவித் தேய்த்துக் கொண்டிருந்தார்கள்.

''பிடியுங்கள் அவனை!''

கோபுவின் குரல் காதில் விழுந்ததும் ராமு தன்னை மறந்து துள்ளினான். ஆற்றினுள் நீந்திச் செல்லத் தொடங்கினான்.

அவனுடைய வயதையும் சக்தியையும் மீறிய ஓட்டமும் இழுப்பும் இருந்தன ஆற்றுக்கு. இரண்டொரு நிமிஷங்களில் அவன் தத்தளிப்பது தெரிந்தது.

''பிள்ளையாண்டானைச் சீக்கிரமாக் கரைக்கு இழுங்க!''

கரையிலிருந்து யாரோ கூவினார்கள். ஒருவர் வேட்டியை வரிந்துகொண்டு தண்ணீரில் இறங்கிவிட்டார். கோபுவுக்குத் தன் நினைவே இல்லை. தனக்குப் போதுமான அளவு நீச்சல் போடும் பழக்கம் இல்லை என்பதுங்கூட மறந்துவிட்டது.

மடக் மடக்கென்று நீரை விழுங்கியபடி கூச்சல் போட்டான் ராமு. ''அப்பா. நீ இங்கே வராதே. உனக்கு நீச்சல்.....வராது......நீ என்னைக்......காப்பாத்த முடியாது ....நீ வேணும்....நீ வேணும்.''

அந்த வேகத்திலும் திக்பிரமித்து நின்றான் கோபு. குழப்பத்தில் கால்கள் நகர மறுத்தன.

சட்டென்று ராமுவின் தலையைக் காணவில்லை.

அவனுக்கு நீச்சல் தெரியாது. அவனால் ராமுவைக் காப்பாற்ற முடியாது. அவனுக்குச் சக்தியும் சாமர்த்தியமும் இல்லை. அவனால் தன் மகனுக்கு உதவ முடியாது.

அவனுக்கே புரியாத திகிலும் பரபரப்பும் ஒரு சுழற்சியில் அவனைப் பிடித்துக்கொண்டன. வேகத்துடன் காலை எட்டி ராமுவின் புறமாக நீருள் பாய்ந்தான். சட்டென்று ஓர் இரும்புக் கரம் அவனைப் பிடித்துக்கொண்டது.

''எங்கே போறீங்க? கரையிலே பாருங்க.''

தோள் மேல் ராமுவைக் கிடத்திப் பிடித்தபடி கரையை நோக்கி நீந்தி வந்து சேர்ந்து கொண்டிருந்தார் ஒருவர். நீர் மழை கண்ணை மறைத்தது. வானமும் ஆற்றுவெளியும் தெரியவில்லை.

அவனை நழுவாமல் பிடித்துக் கொண்டார் பக்கத்தில் இருந்தவர்.

கரையில் கொண்டு வந்து தலைக்கு மேலே பிடித்து ராமுவைச் சக்கர வட்டமாகச் சுற்றினார்கள். தலையைத் துவட்டிச் சாம்பிராணிப் புகை போட்டார்கள். நினைவு தெரியச் சில நிமிஷங்கள் ஆயின. கரைக்கே ஓடிவந்து விட்ட ராதையின் மடியில் துவண்டு படுத்துக்கொண்டான் ராமு. அம்மாவை அழைத்து அழைத்துக் குரல் முனகிற்று.

வேதனை வந்துவிட்டால் சொல்வது 'அம்மா' தான். இங்கே அவனுக்குத் தெம்புக்கும் அம்மாதான். இதுவும் மனத்தின் பேச்சில் சேர்ந்ததா? அவனுக்குப் புரிய வைப்பதா? கேள்விகள் வெல்லப்பாகுபோலப் பிசுக்காய் நெஞ்சில் சுற்றிச் சிக்கின.

அந்தி மாலை முதிர்ந்துவிட்டது. இருள் தோயத் தொடங்கிவிட்டது. அவர்கள் வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். சாலையோரம் நீர்கட்டிய வயல் வரப்புகளிடையே மங்கும் பொன் வெளிச்சம் தகடாக நிழலிட்டுக்கொண்டிருந்தது. ஆற்று வெளியில் ஒரு மோனம் துயிலத் தொடங்கிவிட்டது.

எப்பொழுதேனும் எதிர்த் திசையிலிருந்து ஒரு பஸ் இருளைக் கிழித்துக்கொண்டு இரட்டைக்கண் ஒளியுடன் வரும். அது கடந்து போனபின் மறுபடி இருள்திரை விழுந்து மூடிக்கொள்ளும். கோபு பேசாமல் உட்கார்ந்திருந்தான். ராமு இன்னும் தெளிவாகப் பேசவில்லை. ஆனால் இனிப் பயமில்லை.

பயத்தோடு அவன் தெளிவாகப் பேசியது—மூழ்கு முன் காதில் விழுந்த குரல்—இன்னும் கோபுவின் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது.

''நாம் சென்னைக்குத் திரும்பலாம் ராது.''

அவள் வியப்புடன் அவன் புறமாக முகம் நிமிர்ந்தாள்.

"நீ வேலைக்குப் போவதற்காக அல்ல; நான் வேலைக்குப் போவதற்காக."

தேய்ந்து அலம்பிய செப்புச்சிலை போல அவள் முகத்தில் ஒரு பளபளப்பு. விண்மீன் தெறிப்பாக ஒரு புன்னகை. முகத்தில் ஆறுதல் ததும்ப அவன் கையைப் பற்றிக்கொண்டாள்.

''உண்மையாகவா? நிலையான தீர்மானமா இது?''

''ஆமாம். எனக்கு ஒரு சம்பாத்தியம் தேவை இல்லாமல் இருக்கலாம். ஆனால் ராமுவை வழிகாட்டி வளர்க்க, அவன் மனத்தில் தன்னம்பிக்கை விதை ஊன்றி வளர, நான் ஓர் உத்தியோகத்தில், பதவியில், பொறுப்பில், இருந்து காட்டவேண்டும். தன்னிடமே நம்பிக்கை இல்லாத தந்தையிடம், சிரமங்களுக்கு நடுவே நீச்சல் போடத் தெரியாத, அந்தத் துணிவில்லாத தகப்பனிடம், அவன் அதைக் கற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவனே சொன்னான்: அவனை நான் காப்பாற்றிக் கரை சேர்க்க முடியாது என்று.''

அவன் குரல் விக்கி நின்றது. அவள் கைவிரல்கள் அவன் மார்பின் மீது படிந்தன. அவளுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

''நாளைக்கு அவன் வயதும் விவரமும் புரிந்து எப்படி வாழ வேண்டும் என்பதை, நான் இன்று வாழ்ந்து காட்டவேண்டும். அதுதான் என் கடமை. திருப்தியாக அதைச் செய்து முடிக்கும்வரை நான் ஓய்வு தேடிக்கொள்ள முடியாது. நாளைக்கே மணிக்குக் கடிதம் எழுதுகிறேன். வருத்தப்படாதே ராது. எனக்கு யார் மீதும் வருத்தம் இல்லை. நொந்து போகவும் இல்லை. முருகன் சந்நிதியிலிருந்து வந்த புதுத் தெம்போடுதான் பேசுகிறேன்!''

அவன் குரலிலும் பேச்சிலும் புதிய உறுதி ஒன்றை அவளால் உணர முடிந்தது. கண்கள் மகிழ்ச்சியில் அகல விரிந்தன. புது உருவமாகத் தெரிந்த கோபுவின் மீது தனி மதிப்பும் மரியாதையும் பொங்கி எழுந்தன.

சொகுசாக இருவர் மடிமீதும் படுத்துக்கொண்டு, இருவருக்கும் இடையே பாலமாகத் தூங்கிக்கொண்டிருந்தான் ராமு. ★



With best wishes for a
Happy Deepavali to our esteemed clients

We offer quality paper—foreign and
Indian at attractive prices

SANTHANAM BROTHERS

47 Big Street, Madras 5

Phone No. 87952

STOCKISTS OF:

The Orient Paper Mills Ltd.
The Titaghur Paper Mills Co. Ltd.
The West Coast Paper Mills Ltd.
The Arvind Board Paper Products Ltd.
The Sirpur Paper Mills Ltd.
The Bengal Paper Mills Co. (P.) Ltd.
The Mysore Paper Mills Ltd.
The Hooghly Printing Inks

காட்டூரில் கரடி சார்

'லைமன்'

கரடிசாரும் அவர் குடும்பத்தாரும் புதிதாகக் காட்டுருக்குக் குடி வந்தவர்கள். காட்டூர் சரியான பட்டிக் காடு. அங்கே கடைகண்ணிகளோ, பள்ளிக்கூடமோ இன்னும் ஏற்படவில்லை.

கரடிசாருக்கு அதைப்பற்றிச் சந்தோஷந்தான். ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர் அவர். எப்போதும் பிள்ளைகளை அதட்டியும் மிரட்டியும் பழகிப் போனவர். ஆனால் பாடம் சொல்லித் தருவதில் மகா கெட்டிக்காரர். மற்ற விஷயங்களிலும் அப்படித்தான்.

காட்டூரில் நவீனமான ஒரு பள்ளிக்கூடம் நடத்தக் கரடிசார் திட்டம் போட்டார். பாடம் ஏறுகிறதோ இல்லையோ, பள்ளிப் பிள்ளைகளிடம் நிறையச் சம்பளம் வாங்கலாம்; தாராளமாக டியூஷன்கள் எதிர்பார்க்கலாம்; வெகு சௌகரியமாக வாழ்க்கை நடத்தலாம் என்று நினைத்தார் கரடிசார்.

வனநகருக்குப் போய் விளம்பர நோட்டீசுகள் அச்சடித்துக்கொண்டு வந்தார். பாண்டு வாத்தியம் முழங்க அவற்றைக் காட்டூர் எங்கும் விநியோகம் செய்தார். 'ஜாம்பவா நவீன பாடசாலை' என்ற போர்டும் எழுதி வாசலில் மாட்டினர். மற்றும் பள்ளிக்குத் தேவையான பெஞ்சுகள்,



சிறுவர் பகுதி

டெஸ்க்குகள், விளையாட்டுச் சாதனங்கள் எல்லாம் வாங்கி நிரப்பினர்.

ஒரு நல்ல நாளில் பூஜை போட்டுவிட்டு ஜாம்பவா பள்ளியைத் திறந்தார் கரடிசார். வண்ணத் தோரணங்களாலும் பலூன்களாலும் பள்ளியெங்கும் அலங்கரிக்க ஏற்பாடு செய்தார். வாசலில் மிட்டாய்க் கூடையை வைத்துக்கொண்டு கரடிசாரின் மகள் ஜாம்பவி நின்றிருந்தாள்.

பிள்ளைகள் எல்லோரும் வேடிக்கை பார்க்க வந்து சூழ்ந்துகொண்டார்கள். ஆனால் ஒருவராவது பள்ளிக்கு உள்ளே நுழையவில்லை. சில வானரப் பிள்ளைகள் சாகலேட்டுக்கும் மிட்டாய்க்கும் ஆசைப்பட்டு ஜாம்பவியின் அருகே போனார்கள். வாயில் நீர் ஊறிவர, கையை நீட்டினார்கள்.

''எல்லோரும் பள்ளிக்கு உள்ளே வந்து வரிசையாக உட்காருங்கள். அப்போதுதான் மிட்டாய் தருவேன். இன்று மிக நல்ல நாள். கரடிசார் உங்களுக்கெல்லாம் இன்றே பாடம் ஆரம்பித்து வைப்பார். பிறகு உங்கள் இஷ்டம் போல் விளையாட விடுவார்!'' என்று திரும்பத் திரும்பச் சொன்னாள் ஜாம்பவி.

''சரிதான்'' என்று உள்ளே நுழைந்து சாகலேட்டும் மிட்டாயும் பெற்றுக்கொண்டார்கள் சில முயல் பிள்ளைகள். ஆனால் ஆசிரியர்கள் கவனிக்காதபோது வேலியின் ஊடே தாவி வெளியே ஓடினார்கள்.

முதல் நாள் என்பதால் யாரையும் கண்டிக்க முடியாமல் இருந்தது. மழைத் தூற்றல் போட்டபோதும் வன விலங்குப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் வந்து ஒதுங்கவில்லை.

ஒரு புதிர்!

யாரோ வழிப்போக்கன் ஒரு கிராமத்தானிடம் கேட்டான்:

''இன்று என்ன கிழமை?''

அந்த வாயாடி சொன்னான்:

''நாளை மறுநாள் என்ன கிழமையோ அது நேற்று ஆனபோது ஞாயிறிலிருந்து எத்தனை நாட்கள் பின்தள்ளி வந்ததோ அதேபோல, நேற்று முந்தின நாள் என்ன கிழமையோ அது நாளை ஆகும்போதும் ஞாயிற்றிலிருந்து அத்தனை நாட்கள் முன்தள்ளி வருமானால் அது என்ன கிழமையோ அந்தக் கிழமைதான் இன்று. புரிந்ததா? போய் வா!''

புரிந்துகொண்டான் வழிப்போக்கன். அப்படியென்றால் அன்று என்ன கிழமை?

பெற்றோர்கள்கூடத் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பத் தயங்கினார்கள். இவ்வளவு காலமாகத் தாங்கள் படித்துப் பாஸ் பண்ணாததால் என்ன குறைந்து விட்டதாம் என்றார்கள்.

தவிர, விலங்குப் பிள்ளைகள் யாரானாலும் சரியான சீருடை அணிந்து பள்ளிக்கு வர வேண்டும். இது விஷயத்தில் கரடிசார் வெகு கண்டிப்பாக இருந்தார். அந்தச் சீருடைகளைக் குறிப்பிட்ட 'ரெடிமேட் ஷாப்'பில் போய் வாங்கிக்கொள்ள வற்புறுத்தினார்.

இப்படியே மற்ற ஒவ்வொன்றும். சிலேட்டுகள், நோட்டுகள், பலப்பம், பென்சில், பாடப் புத்தகங்கள் எல்லாம் கரடிசாருக்குத் தெரிந்த 'ஜாம்போ ஸ்டோரி'லேதான் வாங்க வேண்டும் என்றார்.

'ஜாம்போ ஸ்டோர்' கரடிசாரின் நெருங்கிய நண்பர் ஒருவருக்குச் சொந்தமானது. தினசரி அங்கே நிறைய வியாபாரம் நடந்தது. கூடிய விரைவில் அது சூபர் மார்க்கெட்டாக மாறினாலும் ஆச்சரியமில்லை என்று ஊரார் பேசிக்கொண்டார்கள்.

ஜாம்பவா பள்ளி ஆரம்பித்த நோக்கமே அதுதானோ என்னவோ? கரடிசாரின் பள்ளி ஏற்பட்டதை ஒட்டி, காட்டூர் டவுனாக மாறட்டுமே என்றும் சிலபேர் ஆசைப்பட்டார்கள். ஆனால் ஒருவராவது ஆர்வத்தோடு பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப முன்வரவில்லை.

அதற்காக அவர்களைக் குற்றம் சொல்லவும் முடியாது. பள்ளிக்குப் போகமாட்டோம் என்று வனவிலங்குப் பிள்ளைகள் அடம் பிடித்தார்கள். அந்தப் பக்கம் தலை வைத்துப் படுக்கவும் அவர்கள் தயாராக இல்லை. பழக்கம் இல்லாத சீருடைகளை மாட்டிக்கொண்டு மணிக் கணக்காகப் பள்ளியில் அடைந்து கிடக்கப் பைத்தியமா என்று கேட்டார்கள்.

'ஹம்ப்டி டம்ப்டி, ஹிக்கரி டிக்கரி' என்று ஏதேதோ பாடல்களை அங்கே சொல்லித் தந்தார்கள். முதலில் அதெல்லாம் வேடிக்கையாக இருந்தது. திரும்பத் திரும்பக் கேட்டதும் காது புளித்துப் போயிற்று. திருப்பிச் சொல்ல முடியாதவர்கள் சிலேட்டிலோ நோட்டிலோ எழுதிக் காட்டலாம் என்றார் கரடிசார்.

ஆனால் விலங்குப் பிள்ளைகளுக்குச் சிலேட்டுப் புத்தகங்களைப் பத்திரமாக வைத்துக் கொள்ளவே தெரியவில்லை. முன்பின் பழக்கம் இல்லாததுதான் காரணம்.

காட்டிலும் மேட்டிலும் வைத்துக் காணாமல் அடித்த பொருள்களுக்குக் கணக்கே இல்லை. அந்த வகையில் 'ஜாம்போ ஸ்டோர்' கரடியாருக்கு நல்ல லாபம் கிடைத்தது. எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான்.

பெற்றோர்கள் பலர் ஆரம்பத்தில் புதிது புதிதாகச் சிலேட்டு, புத்தகங்களை வாங்கிக் கொடுத்தார்கள். பிறகு அதை அடியோடு நிறுத்திக்கொண்டார்கள்.

''ஹூம். எல்லோரும் படித்துப் புரட்டினது போதும். பேசாமல் எங்களோடு வந்து காட்டு வேலையைப் பாருங்கள். அதுதான் நாளை உங்களுக்குச் சோறு போடும்!'' என்று சொல்லிவிட்டார்கள்.

பெற்றோர்கள் அப்படிச் சொல்ல வேண்டுமே என்றுதான் பிள்ளைகளும் காத்திருந்தார்கள். இதுதான் சாக்கு என்று ஜாம்பவா பள்ளிக்கு உடனே முழுக்குப் போட்டுவிட்டார்கள்!

கரடிசாரின் மகள் ஜாம்பவி என்ன என்னவோ ஜாலமெல்லாம் செய்து பார்த்தாள். இனிமேல் எல்லோருக்கும் இலவசக் கல்வி, இலவசத் தீனி என்றெல்லாம் ஆசைகாட்டினாள். இனாமாகப் பாடப் புத்தகங்களும் விளையாட்டுச் சாதனங்களும் தர முன்வந்தார் கரடிசார்.

அப்புறம் நன்கொடை கேட்டுக் காட்டூர் முழுவதும் அவர் வருலுக்கு வருவார் என்று பெற்றோர்கள் எதிர் பார்த்தார்கள். தவிர, 'பிள்ளைகளே விரும்பிப் படித்தால் படிக்கட்டும்; இல்லாவிட்டால் எக்கேடும் கெடட்டும்' என்று இருந்து விட்டார்கள்.

பிள்ளைகளை வீடு வீடாகப் போய் அழைத்து வரவும், விட்டு வரவும் 'வான்' ஒன்றைக் கரடிசார் தருவித்தார். அதிலே ஏறிக்கொண்டு ஊர் சுற்றி வரும் குஷிக்காக விலங்குப் பிள்ளைகள் முண்டியடித்து ஓடி வந்தார்கள்.

''ஆகா, நம் திட்டம் நூற்றுக்கு நூறு வெற்றி!'' என்று மகிழ்ந்து போனார் கரடிசார். ஆனால் ஒரே வாரத்தில் காட்டூர்ப் பிள்ளைகளின் குதியாட்டம் தாங்காமல் அந்த 'வான்' காயலான் கடைக்குச் போய்ச் சேர்ந்தது!

கரடிசாருக்குப் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டது. இதை இப்படியே விட்டால் சரிப்படாது என்று எண்ணினார். ஜாம்பவா பள்ளி வைப்பதற்குச் செலவு செய்த பணத்தையாவது சம்பாதித்துவிடத் தீர்மானித்தார். தம்முடைய நண்பர்களையும் குடும்பத்

தாரையும் அழைத்து ஆலோசனை நடத்தினர்.

ஆனல் ஊராருக்கு அவருடைய கஷ்ட நஷ்டங்கள் ஒன்றும் தெரியவில்லை; ஜாம்பவா பள்ளி வைத்து அவர் ஏகமாகச் சம்பாதிக்கிருர் என்று வயிறு எரிந்தார்கள். போட்டிப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கலாமா என்றும் சிலர் யோசித்தார்கள். ஆனல் காட்டூர்ப் பிள்ளைகளை நம்பிக் கல்விக் கூடம் வைக்க முடியாது. கைத்தொழிற் பள்ளியோ, கலைப்பயிற்சிப் பள்ளியோ நடத்தலாம் என்ருர் நரியார். நட்டுவக் குரங்காரும் பாகவதர் கழுதையாரும் அதைப்பற்றி யோசனை செய்தார்கள்.

மறுவாரம் காட்டூரே திமிலோகப் பட்டது. வனநகரிலிருந்து மீண்டும் பாண்டு கோஷ்டி வந்து ஊரெல்லாம் கொட்டி முழக்கியது. பார்த்த இடமெங்கும் வண்ணச் சுவரொட்டிகள். எல்லாச் சுவரொட்டிகளிலும் கரடிசாரும் அவர் மகள் ஜாம்பவியும் ஜாம்ஜாம் என்று காட்சி தந்தார்கள். கூடவே—

"கல்வியே தெய்வம்,
கல்வியே செல்வம்!
கண்ணுனது கல்வி,
பொன்னுனது கல்வி!"

என்ற வரிகள் எங்கும் பளிச்சிட்டன. ஜாம்பவா பள்ளி ஊழியர்கள் போட்ட இதே கோஷங்கள் காதைச் செவிடாக்கின.

காட்டூர்வாசிகள் விவரம் அறிய ஜாம்பவா பள்ளிக்கு வந்து கூடினுர்கள். கரடிசார் எல்லோரையும் வரவேற்றுச் சில வார்த்தைகள் சொன்னுர்.

''வணக்கம், வருக வனவிலங்குப் பிரமுகர்களே! இன்ருேடு இந்த ஜாம்பவா பள்ளிக்கு ஓர் ஆண்டு நிறைகிறது. காட்டூரில் எமது பள்ளி ஆற்றிவரும் பணி நீங்கள் யாவரும் அறிந்ததே. ஆனுலும் உங்களுடைய செல்லப் பிள்ளைகள் இந்த அரிய பள்ளியைப் புறக்கணித்து வருகிருர்கள். இதை நான் வருத்தத்தோடே குறிப்பிட விரும்புகிறேன். பகலெல்லாம் வாலைச் சுருட்டிக்கொண்டு வகுப்பறையில் அமர்ந்து பாடம் கேட்க அவர்கள் இன்னும் பழகவில்லை. எனவே அவர்களது வருங்கால நலனைப் பற்றிச் சற்றுச் சிந்திக்க வேண்டும். பெற்ருேர்களாகிய நீங்களே பொறுப்போடு அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்!''

''நாங்கள் என்ன சார் வழிகாட்டுவது? எங்களால் ஆன மட்டும் எவ்வளவோ சொல்லுகிருேம்; செய்கிருேம். இந்தச் சண்டிப்பிள்ளைகள் கேட்டால்தானே?'' என்று சிடுசிடுத்தார் யானையார்.

''உங்கள் யாரையும் நான் குறை சொல்லவில்லை யானையாரே! இங்கே அனைவரும் படிக்காத மேதைகள் என்பதை நான் அறிவேன். இருந்தாலும் உங்களில் ஒரு சிலராவது எண்ணும் எழுத்தும் கற்று மேன்மை அடைய வேண்டுகிறேன். உங்களைப் போன்ற அறிவாளிகள் ஓரிரு மாதங்களாவது எங்கள் பள்ளிக்கு வந்தாலே போதுமானது. உங்களைப் பார்த்து உங்கள் பிள்ளைகளும் பள்ளியில் வந்து உட்காரத் தொடங்குவார்கள்...'' என்று பேசிக் கொண்டே போனுர் கரடிசார்.

''நாங்களா? இந்த வயதிலா? நர்சரி பள்ளிக்கு வருவதா?'' என்று உரக்க நையாண்டி செய்தார் சிவிங்கியார். சபையோர் கேட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள்.

''நன்ருய்க் கேட்டீர்கள் சிவிங்கியாரே! அப்படி என்ன உங்களுக்கு வயதாகிவிட்டதாம்? அதுவும் தவிர, கல்வி கற்பதற்கு வயது வரம்பே கிடையாது. எங்கள் வனநகரில் சென்ற ஆண்டு முதல் முதியோர் கல்விக்காக ஒரு பள்ளி நடத்துகிருர்கள். மிகவும் நன்ருக நடைபெறுகிறது. நம் காட்டூரிலும் அதுபோல் முதியோர்களுக்காக ஓர் இரவுப் பள்ளி நடத்தப் போகிறேன் நான். அதைத் தெரிவிக்கத்தான் இந்தக் கோலாகலமான கூட்டம்!'' என்ருர் கரடிசார்.

''இரவுப் பள்ளியா? இந்த ஊரிலேயே நடத்தப் போகிறீர்களா? ரொம்ப சரி! அப்படியானுல் நாங்கள் எல்லாம் வந்து, வேண்டியது கற்றுக் கொள்ளுகிருேம் கரடிசார்! ஃபீஸ் என்ன சொல்லுங்கள்!'' என்று காளையாரும் எருமையாரும் எகிறி விழுந்து கேட்டார்கள்.

ஃபீஸ்பற்றிப் பண்ணைக்காரர்களான அந்த இருவரும் கேட்டதில், கரடிசாருக்குக் கொள்ளை மகிழ்ச்சி. ஆனுல் அதைக் காட்டிக் கொள்ளாமல், ''ஃபீஸ் என்ன சார் பிரமாத ஃபீஸ்? உங்களைப் போன்றவர்களுக்காக மேல்நாட்டு முறையில் விசேஷப் பயிற்சிகள் அளிக்கப் போகிருேம். மூன்றே மாதம். ஃபீஸ் ஆயிரம் ரூபாய்தான்!'' என்ருர் கரடிசார்.

''ஆயிரம் ரூபாயா! காட்டுக் கொள்ளையாக இருக்கிறதே!'' என்று குரங்காரும் கழுதையாரும் காதைக் கடித்துக்கொண்டார்கள்.

முதியோர் கல்வி பயில, காளையாரையும் எருமையாரையும் பின்பற்றி மேலும் சிலர் ஜாம்பவியிடம் பெயர் கொடுத்தார்கள். கரடிசார் 'நம் திட்டம் வெற்றிதான்' என்ற நிம்மதியோடு படுக்கப் போனுர்.

அடுத்த நாள் பொழுது விடிந்தது. ஜாம்பவா பள்ளியின் அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து பெருத்த ஆரவாரம் கேட்டது. கரடிசாரும் ஜாம்பவியும் கண்ணைக் கசக்கிக் கொண்டே வெளியே பார்த்தார்கள்.

இடப் பக்கம் குரங்காரின் 'அஞ்சனு நடனப்பள்ளி' யிலிருந்து தாதை தகதை - தகதிமிதை என்ற சொற்கட்டுகள் கேட்டன.

காளையார் கன ஜோராக முன்னங்களால் ஜதி போட்டுக்கொண் டிருந்தார். இன்னெரு பக்கம் —

கழுதையாரின் 'கர்த்தப கானுலய'த்திலிருந்து ஸரி ஸரி ஸரி ஸரி ஸரிகம பதநிச என்று சுரம் பழகிக்கொண் டிருந்தார் எருமையார். காட்டூர்ப் பிள்ளைகளில் பாதிப் பேர் அங்கேயும் மீதிப் பேர் இங்கேயும் திரண்டிருந்தார்கள்!

''இனிமேல் இந்த ஊரில் பள்ளிக்கூடம் ஒழுங்காக நடந்தமாதிரிதான்!'' என்று நொந்துகொண்டாள் ஜாம்பவி.

''எந்த வேளையில் ஜாம்பவா பள்ளிக்குப் பூஜை போட்டோமோ?'' என்றபடி போர்டைக் கழற்றினுர் கரடிசார்! ★

புதிர் புரிகிறது

விடை: அன்று ஞாயிற்றுக்கிழமை. எப்படி?

நாளை மறுநாள்—செவ்வாய்.

செவ்வாய் நேற்று ஆனபோது

இன்று புதன்கிழமை.

அதேபோல

நேற்று முந்தின நாள்—வெள்ளி.

வெள்ளி நாளை ஆகும்போது

இன்று வியாழக்கிழமை.

வியாழனிலிருந்து இரண்டு நாட்கள் பின்தள்ளி வருவது ஞாயிற்றுக்கிழமை.

அப்படியே—

புதன்கிழமையிலிருந்து இரண்டு நாட்கள் முன் தள்ளி வருவதும் ஞாயிற்றுக்கிழமைதானே?

ஆலங் காட்டில் ரெண்டு கிளிகள்
அண்ணன் தங்கச்சி.
ஆண் கிளியின் பேரு ரங்கன்;
தங்கை மீனாச்சி.

வேலங் காட்டில் சுற்றிச் சுற்றி
வழிமறந் தாச்சு.
வேடர் வலையில் சிக்கி ரெண்டும்
வேறுவே றாச்சு.

ரங்கா ரங்கா என்னும்சதா
தங்கை மீனாச்சி.
மீனா மீனா என்னும்சதா
ரங்க அண்ணாச்சி.

ரங்காக் கிளி மாய னோடே
மதுரைக்குப் போச்சு.
மீனாக் கிளி சித்த னோடே
சீரங்கம் போச்சு.

மீனா மீனா என்று கத்துது
மதுரை அண்ணாச்சி.
ரங்கா ரங்கா என்று கத்துது
சீரங்கம் தங்கச்சி.

இரு கிளிகள்

ஆனால் பாவம் இளங் கிளிகள்
அண்ணன் தங்கச்சி,
வீணாப் பிரிஞ்சு தவிக்கும் போது
விசயம் என்னாச்சு?

சீரங்கம் பார்க்கப் போன மாரி -
சின்னியின் அண்ணாச்சி,
சித்தன் கிட்டே பெண் கிளியை
வாங்கி வந்தாச்சு.

மதுரை பார்க்கப் போன சின்னி -
மாரியின் தங்கச்சி,
மாயன் கிட்டே ஆண் கிளியை
வாங்கி வந்தாச்சு.

ஆண் கிளியும் பெண் கிளியும்
அண்ணன் தங்கச்சி;
ஆகா ரெண்டும் ஒரே வீட்டில்
வந்து சேர்ந்தாச்சு.

மீனா மீனா என்று கொஞ்சுது
அருமை அண்ணாச்சி;
ரங்கா ரங்கா என்று கொஞ்சுது
ஆசைத் தங்கச்சி.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை

1 மண்டலம் (48 நாள்) கிரமப்படி பூஜை செய்யப்பட்டது
ஆயுள் பூராவும் பலன் தரக்கூடிய வெள்ளி ரக்ஷை ரூ. 43-75.

தற்போது அனுப்ப வேண்டியது ரூ. 10-75. ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் கீழே கொடுத்திருக்கும் கோரிக்கைகளில் எது தேவையோ அதை எழுதி ரூ. 10-75 மணியார்டர் செய்யவும். நம்மிடம் ரக்ஷை வாங்கிய பிறகு 108 நாட்களுக்குள் நன்மையான பலன்களை அனுபவித்துத் திருப்தியிருப்பின் மீதி 33-ம் அனுப்பவும். தற்போது கேட்கும் தொகை வெள்ளி, விளம்பரம், ரிஜிஸ்டர் செலவுகளுக்காகக் கேட்கப்படுகிறது.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை அணிந்தால் ஏற்படும் நன்மைகள்

1. சுக சரீரிகளாகவும், எப்போதும் போஜனாதிகளில் குறைவின்றியும் இருப்பார்கள்.
2. குடும்ப ஒற்றுமை, குடும்ப அபிவிருத்தி, தனதான்யாதிகள், வாக்குப் பலிதம், குடும்ப நிர்வாகத் திருப்தி.
3. சகோதர ஒற்றுமை, சகோதரமில்லாதவர்களுக்குச் சகோதரம் ஏற்படும். பிரிந்த சகோதரர் ஒன்று கூடுவர்.
4. மாதுர் அபிவிருத்தி, வாகன அபிவிருத்தி, பூமி கட்டட அபிவிருத்தி ஏற்படும்.
5. புத்திரர்களுக்கு ரோக நிவர்த்தி, மலடு உடையவர்களாயிருந்தாலும் புத்திரம் ஏற்படும்.
6. சத்துருக்கள் பங்கமடைவார்கள், தீராத ரோகமும் தீரும், ரணம் நிவர்த்தி.
7. வாலிபர்களுக்கு நல்ல குணவதி லபிப்பார்கள். மற்றவர்களுக்கு ஸ்திரீ நேசமும், ஸ்திரீயின் சுசுருஷையும் கிடைக்கும். பால்யப் பெண்கள் அணிவதால் சத்புருஷனை அடைவார்கள். மற்றவர்கள் அணிவதால் கணவன் ஒற்றுமை, பிரிந்த கணவனை அடைவார்கள்.
8. ஸ்திரீகள் அணிவதால் மாங்கல்ய தீர்க்கமும், புருஷர் அணிவதால் ஆயுள்தீர்க்கமும்.
9. வாலிபர் அணிவதால் பிதுருவின் பிரீதியை அடைவர். விசேஷ பாக்கியமும் லக்ஷ்மி கடாக்ஷமும் ஏற்படும்.
10. கல்வி பயிலுபவர்கள் அணிந்தால் கல்வித் தேர்ச்சியும், படித்தவர்கள் அணிந்தால் உத்தியோகமும் கிடைக்கும். விவசாயிகளுக்குக் கிருஷிகம் மேன்மைப்படும். வியாபார அபிவிருத்தி ஏற்படும்.
11. அவரவர்கள் செய்யும் தொழிலில் நல்ல ஆதாயம் வரும்.
12. நல்ல போக பாக்கியமும் லாபத்தை உத்தேசித்துப் பண விரயமும் ஏற்படும்.

குறிப்பு:- 1. நியாயமான கோரிக்கைகளுக்கு மட்டில் ரக்ஷை பலன் தரும்: 2. ரக்ஷை ஆர்டர் செய்பவர்களுக்கு, ஆர்டர் கிடைத்த 9-ம் நாள்தான் ரக்ஷை பிரசாதத்துடன் அனுப்பப்படும். 3. வி. பி. பி.யில் அனுப்பச் சாத்தியப்படாது. 4. வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகைக்குப் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி அனுப்பவும்.

ஜோஸ்யர் பாரத்வாஜ ஸ்ரீ ஜயராம அய்யர்

கோட்டமருதூர்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்

அரகண்டநல்லூர் போஸ்டு [தென் ஆற்காடு ஜில்லா]

(ESTD. 1-12-1937)



சட்டம் என்ற கழுதை

அகிலன்

சட்டம் என்ற அந்தப் பழைய கழுதைக்குப் புதிதாக இளமை திரும்பிவிட்டதோ, அல்லது அதற்கு வலிப்பு வந்துவிட்டதோ தெரியவில்லை. கோடீசுவரப் பிரமுகர் குஞ்சிதபாதத்துக்கு அது கொடுத்த ஒரே உதையில் அவருடைய முன்வரிசைப் பற்களில் ஐந்து பற்கள் கழன்று விழுந்துவிட்டன. கணக்கில் வராத கள்ளப்பணம் என்று சொல்லி, ஐம்பது லட்ச ரூபாய் நோட்டுக் கற்றைகளை, சட்டத்தின் பெயரால் வந்தவர்கள் ஒரே நாள் தேட்டத்தில் வெளியே கொண்டுவந்து விட்டார்கள்.

ஒன்றா, இரண்டா, ஓராயிரமா, பத்தாயிரமா, அல்லது ஒரு லட்சமா, குஞ்சிதபாதம் சும்மா இருந்துவிடுவதற்கு? சுளைசுளையாக, பளபளப்பாக, ரொக்கம் ரொக்கமாகப் பலாப் பழத்தைக் கீறி வெளியே சுளைகளை எடுத்து அடுக்குவது போல், சட்டம் என்ற கழுதையை மேய்க்கும் அந்தப் பொல்லாத அதிகாரிகள் நூறு ரூபாய் நோட்டுக் கற்றைகளை எடுத்து வெளியே அடுக்கலானார்கள். ஐம்பது லட்ச ரூபாய்க்கு மேல் நோட்டுக் கற்றைகள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! வந்தவர்களில் பலர் அவ்வளவு பணத்தை ஒரே இடத்தில் கண்ணால்கூடக் கண்டதில்லை. பாவம்! கணக்குப்படி கையெழுத்துப் போட்டு மாதச் சம்பளம் வாங்கும் அப்பாவிகள்!

எல்லாம் நாடகத்தில் நடப்பது போல் நடந்து முடிந்துவிட்டன. கார்களிலும் ஜீப்புகளிலும் சிலர் விரைந்து வந்து குஞ்சிதபாதத்தின் பங்களாவைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். உள்ளே ஐந்தாறு பேர் நுழைந்தார்கள். அவர்களில் ஒருவர் குஞ்சிதபாதத்தின் ஆபீஸ் அறைக்குள் புகுந்து அவரிடம் ஓர் உத்தரவைக் காட்டினார். வந்தவர்களின் தலைமை அதிகாரி அவர். அவர் நீட்டிய உத்தரவைப் பார்த்தவுடனேயே குஞ்சிதபாதத்தின் முகம் வெளுத்துவிட்டது; நாடி தளர்ந்துவிட்டது; வெலவெலத்துப் போனார்.

ஆனால் இவ்வளவும் ஐந்தே நிமிஷங்களுக்குத்தான்.

குஞ்சிதபாதத்துக்கு உடம்பெல்லாம் மூளை என்று அவரோடு பழகும் பிரமுகர்கள் கூறுவார்கள். ஐந்து நிமிஷ அதிர்ச்சிக்கு ஆளாகியிருந்த அவருடைய மூளை பிறகு திடீரென்று வேலை செய்யத் தொடங்கியது. சட்டங்களுக்கெல்லாம் அதிபராகவும் சட்டங்களை ஆட்டி வைப்பவராகவும் உள்ள தம் அந்தரங்க நண்பர் ஒருவருக்குப் போன் செய்ய நினைத்தார் குஞ்சிதபாதம். டெலிபோன் குழாயைக் கையிலெடுத்தார்.

''மன்னிக்க வேண்டும்'' என்று குறுக்கிட்டுத் தொலைபேசியின்மேல் தம் கையை வைத்தார் அதிகாரி; ''வீண் முயற்சிகளில் நீங்கள் உங்கள் நேரத்தை விரயம் செய்யாமல், எங்களோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்; எந்தப் பெரியவரின் சிபாரிசும் எங்களிடம் எடுபடாது'' என்றார்.

குஞ்சிதபாதத்தின் ஒத்துழைப்புக்காகக் காத்துக் கொண்டிராமலே அங்குக் காரியங்கள் மளமளவென்று நடந்தன. சொல்லி வைத்ததுபோல் அங்கங்கே குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று கதவுகளைத் தட்டினார்கள்; திறந்து கொண்டன. கிடைத்தவற்றை வாரிக்கொண்டார்கள்.

'கேளுங்கள், கொடுக்கப்படும்; தட்டுங்கள், திறக்கப்படும்' என்று எப்போதோ ஏசுபெருமான் சொல்லி வைத்தாராம். வருமான வரிக்காரர்களுந்தாம் பத்துப் பதினைந்து வருஷங்களாகக் குஞ்சிதபாதத்திடம் நயமாகவும் பயமாகவும் கேட்டுப் பார்த்தார்கள். அவர்கள் உத்தேசமாக வரி விதித்தால், 'அநியாயம் செய்துவிட்டார்கள்; அக்கிரமம் பண்ணுகிறார்கள்' என்று நீதிமன்றம் வரைக்கும் போய் முறையிடுவார் குஞ்சிதபாதம். கீழ்க் கோர்ட்டில் அவருக்குச் சாதகமாகவில்லை என்றால் அப்பீலுக்கும் போவார். இப்படியே ரூபாய் அணா பைசா விவகாரங்களில் வழக்காடி வழக்காடி, அநுபவ ஞானத்தால் அவரே ஒரு குறுக்கு வழி வக்கீலாகவும் பொய்க் கணக்கு நிபுணராகவும் மாறிப் போயிருந்தார். உள்ளங்கால் முதல் உச்சந் தலைவரையில் அவருக்குச் சட்டங்களும் பொய்க் கணக்கு வித்தைகளும் அத்துப்படியாகி இருந்தன.

கேட்டுப் பார்த்தார்கள் அரசாங்கத்தார்; கொடுக்கவில்லை.

வரி போட்டுப் பார்த்தார்கள்; அதைக் கட்டாமல் வரி போட்டவர்களுக்கே அவர் பட்டை நாமம் போட்டுவிட்டார்.

கடைசியில் எப்படியோ வலையை விசாலமாக விரித்துப் போட்டு, சுருக்குக் கயிற்றை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, பங்களாவுக்குள் பணம் பதுங்கியிருந்த இடங்களைப் பார்த்துத் தட்டத் தொடங்கிவிட்டார்கள். தட்ட வேண்டிய இடங்களைத் தேர்ந்தெடுத்துத் தட்ட வேண்டிய முறையில் தட்டினார்கள்.

கேட்டபோது பதுங்கிக்கொண்டு பத்தினித்தனம் செய்த கறுப்புப் பணம், தட்டியபோது மட்டும் தன் பல்லைக் காட்டிக்கொண்டு குதித்தோடி வந்து முன்னே விழுந்தது. தான் பரத்தைதான் என்பதை ஒப்புக் கொண்டுவிட்டது.

எங்கெங்கோ, எப்படி எப்படியோ, அங்கே அந்த அதிகாரிகளுக்குப் பணம் கிடைத்தது. பூச்செடிகள், குப்பைக் கூடைகள், சாக்கடைகள், புடைவை மடிப்புக்கள், பூசை அறைகள் - இங்கெல்லாங்கூடப் பணச்செடி காய்த்துக் கனிந்து இலை மறைவு காய் மறைவாகக் குலுங்கிக் கொண்டிருந்தது. இவை போதா என்று அந்தப் பங்களாவில் வைரமும் தங்கமுமாய் ஜொலித்த நகைகள், திருப்பதி வேங்கடேசப் பெருமாளையேகூடப் பொருமை கொள்ளத் தூண்டுபவையாக இருந்தன.

இரண்டு மூன்று இலாக்காவினர் சேர்ந்து திட்டம் வகுத்துக்கொண்டு அங்கே வந்தபோது அவர்கள் அங்கே ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்குமென்றுதான் எதிர்பார்த்தார்கள். அதற்கான கள்ளக் கணக்குகள் அவர்கள் வசம் அகப்பட்டிருந்தன. ஆனால் கிடைத்ததென்னவோ படிக்குப் பாதிதான். பாக்கியை வேறு எங்கு அவர் பதுக்கியிருந்தாரோ அவர்களுக்குத் தெரியவில்லை.

போய்ச் சேர்ந்தார்கள், ஒரு வழியாக. கணக்குக் காட்டிக் கையெழுத்து வாங்கிக்கொண்டு போனார்கள்.

பங்களா, சூறாவளி புகுந்தடித்துவிட்டு வெளியேறிய குப்பைமேடு போல் காட்சியளித்தது.

அலமாரிகள், மேசை டிராயர்கள், பெட்டிகள், சுவர்களில் படங்களுக்குப் பின்னிருந்த ரகசிய மாடங்கள், தரையின் பாதாள அறைகள் இவை யாவும் தங்கள் வாய்களை அகலத் திறந்துகொண்டு ஓலமிட்டன.

குஞ்சிதபாதம் நிதானமாக ஒரு முறை தம் பங்களாவைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தார். மனைவி, குழந்தை குட்டிகள், வீட்டு வேலையாட்கள் முதலியோரைக் கூப்பிட்டு முன்போலவே ஒவ்வொன்றையும் ஒழுங்குபடுத்தச் சொன்னார். அவர் மனைவியால்கூட அவர் முகத்திலிருந்து எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அவதிப் பட்ட அந்த அம்மாளிடம், "நீ பேசாமல் இரு; பைசாக் குறையாமல் இவ்வளவையும் கொண்டு வந்து கொடுக்கச் சொல்கிறேன் பார்! இந்தப் பாச்சாவெல்லாம் என்னிடம் பலிக்காது!" என்றார். சட்டம் உதைத்த உதையில் முன்பற்களில் ஐந்து கழன்றுவிட்டன என்றாலும், ஐந்து நிமிஷங்களில் அவரால் பொய்ப் பல் கட்டிக் கொள்ள முடிந்தது.

ஆபீஸ் அறைக்கு அவர் திரும்பி வந்து, அங்கு வேலை செய்வதற்காக வந்திருந்த ஊழியர் ஒவ்வொருவர் முகத்தையும் கோபத்தோடு உற்றுப் பார்த்தார்: குமாஸ்தாக்கள், கணக்கெழுதுவோர், டைப்பிஸ்ட், வேலையாள்....

அவர் பார்வையில் தெறித்த சந்தேகத்தைக் கண்டு எல்லோருமே நடுங்கினர். குறிப்பாகத் தலைமைக் கணக்கருக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. பிள்ளை குட்டிக்காரர்; பெரிய குடும்பம்; குறைந்த சம்பளம். சில மாதங்களாகக் குஞ்சிதபாதத்திடம் தமக்குச் சம்பளம் போதவில்லை என்று நச்சரித்துக்கொண்டிருந்தவர் அவர்.

"அந்தப் பரமேசுவரனுக்கே வெளிச்சம்! எங்கள் மேலே அநாவசியமாய்ச் சந்தேகப் படக் கூடாது. எங்களுக்கு உங்களை விட்டா வேறே நாதி கிடையாது" என்று கையெடுத்துக் கும்பிட்டார் தலைமைக் கணக்கர்.

"யாரும் யார் மேலேயும் சந்தேகப் படலே. வரிக்காரன் நம்ம மேலே சந்தேகப்பட்டதுதான் தப்பு. ஆனால் ஒரு விஷயம்; இங்கே நடந்தது ஒரு ஈ காக்காய் குருவிக்குக்கூடத் தெரியப்படாது."

"நாங்க சொல்லலே; இருந்தாலும் ...." என்றார் ஒரு குமாஸ்தா.

"என்ன, இருந்தாலும்?"

"வெளியிலே கூட்டம் இருந்தது. பத்திரிகைக்காரங்களும் சில பேர் வந்திருந்தாங்க. இங்கே வந்த ஆபீஸர் பத்திரிகைக்காரங்களோடு பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தா...."

"என்ன!"

"ஆமா."

"சரி சரி, நீங்க எல்லாரும் வீட்டுக்குப் போயிட்டு நாளைக்கு வாங்க. உங்க வாயிலேருந்து எதுவும் வந்திடாமல் பார்த்துக்குங்க!"

"சரிங்க."

வெளியில் போன அந்த ஊழியர்களில் ஒருவன் மற்றொருவனிடம் சொன்னான்: "நம்ம ஐயாவிடம் இவனுங்க ஜம்பம் ஒண்ணும் பலிக்காது. பத்து லட்சம் கடன் குடுத்து, ஒரே வருஷத்திலே வட்டியா மட்டும் அதுக்குப் பதினைஞ்சு லட்சம் சம்பாதிக்கிறவர் இவர். பன்றி குட்டி போடுறப்பலே இல்ல இவர்கிட்டே பணம் குட்டி போடுது? பத்து லட்சம் போனால் போகுதுன்னு சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போய் ஒரு கை பார்த்திட மாட்டாரா!"

"வெறும் அம்பது காசுக்கு, சமயத்திலே நம்ப ஆலாப் பறக்கிறமே; அம்பது லட்சமில்ல இப்போ வெளியே வந்திருக்கு? இவ்வளவுக்கும் ஆள் அசைஞ்சு குடுக்கிறாரா பார்த்தியா?"

வழக்கமாக எதற்கும் அசைந்தே கொடுக்காத குஞ்சிதபாதம் அப்போது பரபரப்போடு பத்திரிகை அலுவலகங்களுக்குப் போன் செய்து கொண்டிருந்தார். "நான் குஞ்சிதபாதம் பேசுறேன். என்னைப் பத்தி ஏதாவது நியூஸ் வந்திருந்தா அதைத் தயவு செய்து போடாதீங்க. எல்லாத்துக்கும் என்னிடம் கணக்கு இருக்கு. நான் அவுங்க மேலே கேஸ் போடப் போறேன்."

சிலர் அந்தச் செய்தியை ஒப்புக் கொண்டார்கள். வேறு சிலர் செய்தி வந்து அது அச்சாகி முடிந்துவிட்டது என்றார்கள். இன்னும் சிலர் குஞ்சிதபாதத்தின் பெயரை வெளியிடாமல் செய்தியை மட்டும் வெளியிடுவதாக வாக்களித்தார்கள்.

அடுத்தாற்போல் என்ன செய்வது என்பது பற்றித் தீவிரமாக யோசனை செய்தார் குஞ்சிதபாதம். நெஞ்சிலே ஒரு பக்கம் புழுக் குடைவது போல் குடைச்சல் இருந்தாலும் அவருடைய மூளையின் அடித்தளம் மட்டும் குழம்பிவிடவில்லை. மூளை என்ற அந்த ஒரே யந்திரத்தை ஒரே காரியத்துக்காக முடுக்கிவிட்டுத்தான் அவர் இதுவரை நோட்டுக் கற்றைகளைக் குட்டி போட வைக்கும் கலையை மிகச் சாதுரியமாகச் செய்துகொண்டு வந்திருக்கிறார்.

தாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளில் எது சிறந்தது என்பது பற்றி அவர் சற்று நேரம் ஆழ்ந்து சிந்திக்கலானார். சிந்தனையால் செல்வம் திரட்டிய சிந்தனைச் செல்வரல்லவா?

வேறு பல வேலைகளை அவர் எளிதாக லஞ்சம் கொடுத்து முடித்துக் கொண்டிருந்தாலும், இந்த விஷயத்தில் லஞ்சம் கொஞ்சமும் எடுபடாது என்பது அவருக்குப் புரிந்துவிட்டது. சிபாரிசால் ஏதும் நடக்குமா என்று சில நிமிஷங்கள் யோசித்துப் பார்த்தார். வருமான வரித் துறையினரோடு மத்தியப் புலனாய்வுத் துறையினரும் ஒன்றாகச் சேர்ந்து வந்து தொலைத்ததனால், அவர்களிடம் எந்தச் சிபாரிசும் பலிக்காது என்பதும் உறுதியாகிவிட்டது.

வேறு வழியில்லை. வழக்கமான வழியில் போக வேண்டியதுதான். சட்டத்தைச் சட்டத்தால் மோத வேண்டியதுதான். சட்டம் என்ற கழுதை முன்னால் போனால் கடிக்கிறது; பின்னால் போனால் உதைக்கிறது. ஆனாலும் இப்போதைக்கு அதைக் கொண்டு அதையே மோதித் தூளாக்க வேண்டியதுதான்.

நம்பிக்கையான ஒரு துணை அவருக்கு இந்தச் சமயத்தில் தேவைப்பட்டது. சட்டம் என்ற கழுதையின் வாயைக் கட்ட ஒருவர் கிடைத்தால், அதன் காலைக் கட்டும் வேலையைத் தாமே முடித்துவிடலாம். என்ன செய்வது, எப்படிச் செய்வது, எவ்வளவு செலவாகும் என்ற விவரங்கள் எல்லாம் பளிச்சுப் பளிச்சென்று அவரது அற்புதமான மூளையிலிருந்து முளைத்துக் கிளைக்கத் தொடங்கின. "சரியான கிரிமினல் 'பிரெய்ன்' உங்களுக்கு" என்று ஒரு முறை அவருடைய நண்பர் வேலப்பன் அவரிடம் வேடிக்கையாகச் சொன்னது குஞ்சிதபாதத்தின் நினைவுக்கு இப்போது வந்தது. அதை நினைவுபடுத்திச் சிரித்துக்கொண்டே, 'வேலப்பன்தான் இதற்குச் சரியான ஆள்' என்ற முடிவுக்கு வந்தார் குஞ்சிதபாதம்.

டெலிபோன் மணி கிணுகிணுத்தது. கையில் எடுத்துக் காதில் வைத்தார். "குஞ்சிதபாதம் இருக்காரா? நான்தான் வேலப்பன் பேசுறேன்."

"நூறு வயசு உங்களுக்கு! கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தாப்பிலே வந்திட்டீங்க. இப்பத்தான் நான் உங்களைக் கூப்பிட

the best range money can buy
CO—80 DELUXE MK II
COSMIC
Solid State
Stereo
CO-60 DELUXE
COSMIC LAB 3000
COVOX-3500
We make our products worth your money, by making liberal use of the best electronic technology available. A superb reproduction, sounds only part of the story. A flawless finish and an excellent service complete the rest.
That is why we can say with confidence, that the COSMIC Range, is the best range money can buy.
COSMIC RADIO
9-B, MAHAL INDUSTRIAL ESTATE, MAHAKALI CAVES ROAD, ANDHERI EAST, BOMBAY-93
Gram : SOLIDSTATE

எமது தீபாவளி வாழ்த்துக்கள்!!

பட்டு சேலைகளுக்கென விஸ்தரிக்கப்பெற்ற
நல்லியின் புதிய டிலக்ஸ் ஷோ-ரூம்!
கைத்தறி மற்றும் மில் ஜவுளிகளும் கிடைக்கும்

நல்லி
சில்க் எம்போரியம்

தியாகராய நகர் | பாண்டி பஜார் | போன்: 442567 · சென்னை-17

கைத்தறி மற்றும் மில் ஜவுளி ரகங்களனைத்தும் கிடைக்கும்.

சகாயமான விலையில் தரமான ஜவுளி மற்றும்
பின்னியின் எல்லா ரகங்களும் எம்மிடம் கிடைக்கும்.

லஸ், மயிலாப்பூர், சென்னை-4
போன்: 71595

நல்லி ஸ்டோர்ஸ்

பட்டுச் சேலைகளுக்கு மட்டும் பிரத்தியேகமான புதிய ஷோ-ரூம்

நல்லி சில்க்ஸ்
82, ராயப்பேட்டை ஹை ரோட்
லஸ் - மயிலாப்பூர் · போன் 74862 · சென்னை 4

பனாரஸ், பான்ஸி சேலைகளுக்குத் தனி ஷோ-ரூம்

நல்லி சில்க்ஸ் பனாரஸ் ஹால்

2, ராயப்பேட்டை ஹை ரோட், லஸ், மயிலாப்பூர், சென்னை
(போன்: 76444)

பின்னியின்
எல்லா ரகங்களுக்கும்
நல்லி
சின்னசாமி செட்டி & ஸன்ஸ்
பாண்டி பஜார்
தி. நகர் - சென்னை-17
போன்: 444347

With the best compliments from

Lakshmi Machine Works Limited

(In Collaboration with
M/s Rieter Machine Works Ltd, Switzerland)

Registered Office & Factory

PERIANAICKENPALAYAM
S. R. K. V. Post
COIMBATORE 20

Telegram : LAKMAWORKS, Coimbatore
Telephone : 5 Lines: 34233 to 34237-Coimbatore
Telex : 042/212, Coimbatore

Manufacturers of Textile Machinery

HIGH SPEED DRAW FRAMES—Model DO/2B (2 deliveries)
SPEED FRAMES—Model F/1 (Type GS)
RING SPINNING FRAMES—(Type DJ5)
HIGH SPEED RING SPINDLES—M.2
SLIVER LAP MACHINES (Model E 2/4A)
RIBBON LAP MACHINE (Model E 4/1A)
HIGH SPEED COMBERS (Model E 7/4)
BLOW ROOM LINES

Our Mechanised Foundry set up with German Krupp's Collaboration can supply Castings as per Indian Standard Grades 15, 20 and 25

FOR PARTICULARS PLEASE CONTACT

VOLTAS LIMITED

BOMBAY AND BRANCHES



நினைச்சேன்.'' கலகலவென்று சிரித்துக் கொண்டே, ''ஓய்வா இருந்தா நேரிலே வாங்க, பேசலாம்'' என்றார்.

''நான் கேள்விப்பட்டது உண்மை தானா?' பதற்றத்தோடும் பரபரப் போடும் கவலையோடும் கேட்டார் வேலப்பன்.

''ஆமா, அம்பதுக்கு மேலே ரொக் கம். அஞ்சு லட்சத்துக்கு மேலே நகை நட்டு. இவ்வளவும் பறிமுதல் செய்துக்கிட்டுப் போயிருக்காங்க. எங்கே போயிடப் போகுது? பத்திர மாய்த் திருப்பிக் கொடுக்கப் போறாங்க!'' மறுபடியும் சிரித்தார் குஞ்சிதபாதம். தாம் எவ்வளவு அலட்சியமாக இதை எடுத்துக்கொண் டிருக்கிறார் என்பது தம் நண்பருக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக அவர் சிரித்தார்.

''என்னாலேயே இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியலே. எப்படி நீங்க கவலையில்லாமல் சிரிக்கிறீங்க?''

''நீங்கதான் சொல்லியிருக்கிங்களே, என்னோட மூளை 'கிரிமினல்' மூளைன்னு! அது சரி, உடனே புறப்பட்டு வாங்க, நேரிலே பேச வேண்டியது கொஞ்சம் இருக்கு.''

வேலப்பன் அங்கு வந்து சேர்ந்த வுடன் அவருக்கும் தமக்கும் காபி பலகாரம் கொண்டு வரும்படி வீட் டில் சொல்லி வைத்தார் குஞ்சித பாதம். சற்று நேரத்துக்கெல்லாம் வேலப்பனின் கார் அவர் பங்களாவுக் குள் நுழைந்தது. தாமே வாசலுக்குச் சென்று வேலப்பனை வரவேற்றுத் தம் அறைக்குள் அழைத்து வந்தார். பல காரத்தைச் சாப்பிட்டுக் கொண்டே நடந்த விஷயங்களை யெல்லாம் அவ ரிடம் விவரித்தார் கோடீசுவரர்.

''பாடுபட்டுத் தேடி வச்சா இப் படியா தட்டிப் பறிக்கிறது? இதுக்குத் தான் நாட்டிலேயே அரசாங்கம் இருக் கக் கூடாதுங்கறேன் நான்.''

''அரசாங்கம் இல்லேன்னா அப் புறம் போலீஸ் இருக்காது. போலீஸ் இல்லேன்னா அப்புறம் நம்ப வீட் டிலே காசுபணம் வைக்க முடியாது. இந்தக் குடிசைக்காரப் பசங்க நம் மைச் சும்மா விடமாட்டாங்க'' என் றார் வேலப்பன்.

''நீங்க சொல்றதும் சரிதான். அர சாங்கம் இருக்கணும். போலீசும் இருக்கணும். ஆனால் அது நம்ப விஷ யத்திலே மட்டும் தலையிடக்கூடாது.''

''நீங்க இப்ப என்ன செய்யப் போறதா உத்தேசம்?'' என்று கேட் டார் வேலப்பன்.

''சட்டம்கிற கழுதைக்கு வாய்க்கு ஒரு பூட்டும் காலுக்கு ஒரு விலங்கும் மாட்டுறதா உத்தேசம். மேலே அஞ்சு லட்சம் பத்து லட்சம் செலவானால் செலவாகட்டும். நம்ம கிட்டே இனி மேல் அவுங்க பாச்சா பலிக்காதுங்க றதை அவுங்க உணரணும். அதுவரை யிலே நான் இதை விடப் போற தில்லே!''

கோடீசுவர உலகத்துக்கும் அப் பட்டமான கோழைத்தனத்துக்குந் தான் எப்போதும் தொடர்பு உண்டே தவிர, தங்களைப் போன்ற கள்ளப் பணப் பேர்வழிகளிடம் வழக்கமாக இப்படிப்பட்ட துணிச்சலை வேலப் பன் கண்டதில்லை. மேற்கொண்டு குஞ்சிதபாதம் என்ன செய்யப்போகி றார் என்பதை அவரிடமே வியப் போடு கேட்டார்.

''அம்பது லட்ச ரூபாயிலே நான் ஒரு கம்பெனி ஆரம்பிக்கிறதா இருக் கேன். என்னோட சொந்தப் பணம் அதிலே அஞ்சு லட்சமோ, பத்து லட்சமோதான். பாக்கியைக் கூட்டுச் சேரச் சொல்லிச் சில பேர் கிட்ட வாங்கினேன். இன்னும் சில பேர் கிட்டப் 'புரோ நோட்டு'க் கடனா வாங்கினேன். இப்போ அரசாங்கம் வந்து என்னோட பணத்தோட ஊரார் பணத்தையும் எடுத்துக்கிட்டுப் போயிருக்கு. இந்த அநியாயத்திலே இருந்து சட்டம் என்னைப் பாதுகாக்க ணும்.—இப்படி நான் அவுங்க மேலேயே திருப்பிக்கிட்டுக் கேஸ் போடப் போறேன்!''

''பணம் உங்களுக்குக் குடுத்தவங்க அதை அவங்களோட சொந்த வரு மானத்திலே காட்டணும்; அதுக்கான வருமான வரியைக் கட்டணும்; நீங்க அவங்களுக்குப் புரோ நோட்டு, பத்திரமெல்லாம் எழுதிக் கொடுக்க ணும்....இவ்வளவும் கணக்கிலே வந்தாகணுமே?''

''வரி நாலு பேருக்குப் பிரியத் தானே செய்யும்? மற்றவங்களுக்கு அதிகப்படியா ஆகிற வரியை நானே கட்டிடறேன். இதுவரை புரோ நோட்டு வாங்கித்தான் எனக்கு வழக்கம். இப்போ அதுக்குப் பதிலா நான் எழுதிக் கொடுத்திட்டாப் போகுது. இந்த விஷயத்துக்கு உங்க ளைப் போலே நாலஞ்சு பேரோட



உதவி - முக்கியமா உங்களோட உதவி - எனக்கு வேணும். அவ்வளவு தான். மற்றதையெல்லாம் நான் சமாளிச்சுக்குவேன்.''

''உதவி செய்யறவங்களுக்குச் சிரமம் வராமல் இருக்கணுமே?'' என்று பயத்தோடு கேட்டார் வேலப்பன்.

''சிரமம் என்ன சிரமம்? அவுங்களுக்கு அதிகமாய்ப் போட்ற வரியைத் தான் நான் கட்டப் போறேன். அவசியமானல் கோர்ட்டுக்கு வந்து எனக்குப் பணம் கொடுத்ததாய்ச் சாட்சி சொல்லணும். இவ்வளவுதான்.''

''செய்துவிடலாம்'' என்று ஒப்புக் கொண்டார் வேலப்பன்.

''உங்க கணக்கிலே ஒரு பத்து லட்சம், இன்னம் உங்களோட நாலு சிநேகிதர்கள் கணக்கிலே மொத்தமாய் ஒரு இருபதுன்னு வச்சுக்குங்க. பாக்கியை நான் என் சார்பில் சரி பண்ணிக்கிறேன்.''

இருவருமே ஒருவருக் கொருவர் கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் ஒத்துழைக்கும் புள்ளிகள். மேல் மட்டத்துப் பிரமுகர்கள் தங்கள் தங்கள் சொந்த வசதிக்காகவே இப்படி ஒரு கூட்டுறவுப் பழக்கத்தை வைத்துக் கொண்டிருப்பது வழக்கம். 'இன்றைக்கு அவருக்கு வருவதுதான் நாளைக்கு நமக்கும் வரும்' என்ற அச்சம் அவர்களுக்குள் ஒரு வகைக் கட்டாயக் கல்யாணத்தை ஏற்படுத்தியிருந்தது.

குஞ்சிதபாதமும் வேலப்பனும் கூடிப் பேசி விரிவான திட்டத்தை வகுத்துக்கொண்டார்கள். சட்டம் என்ற கழுதைக்கு வாய்ப்பூட்டுப் போடும் வேலை வேலப்பனிடம் ஒப்படைக்கப் பட்டது. அதன் கால்களுக்கு விலங்கு மாட்டும் வேலையைத் தமக்கென்று வைத்துக்கொண்டார், குஞ்சிதபாதம். காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெற்றன. வக்கீல்களிடமும் ஆடிட்டர்களிடமும் இவர்கள் தயாரித்திருந்த 'உண்மைகள்' காகிதச் சான்றுகளோடு விளக்கப்பட்டன. நம்முடைய சட்டங்களுக்கு மனிதர்களை விடக் காகிதச் சாட்சியங்களின்மேல் தான் அளவு கடந்த நம்பிக்கை. நியாய தர்மங்களைவிட நிரூபிக்கப் படும் சாட்சியங்களின் அடிப்படையில்தான் அவை இயங்க முடியும்.

வழக்கு நடந்தது. குஞ்சிதபாதத்தின் உதவிக்கு வந்த பிரமுகர் ஒவ்வொருவரும், 'நான் சொல்வதெல்லாம் சத்தியம்; சத்தியம் தவிர வேறில்லை' என்று சாட்சிக் கூண்டில் ஏறிப் பொய்ச் சத்தியம் செய்து விட்டு, குஞ்சிதபாதத்துக்குக் கடனாகவும் கம்பெனியில் கூட்டுச் சேரவும் பணம் கொடுத்ததாய்ச் சாதித்தார்கள். பிராமிசரி நோட்டுக்களும் ஒப்பந்தப் பத்திரங்களும் சாட்சியங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டன. மதிப்புக்குரிய பிரமுகர்களின் 'சத்திய வாக்கை' நீதிமன்றத்தால் நம்பாமல் இருக்க முடியவில்லை. சான்றுகளை வைத்துக் கொண்டுதான் அவை இயங்க முடியும்.—வெற்றி பெற்றுவிட்டார் குஞ்சிதபாதம்!

ஆனால் ஏனோ அரசாங்கம் அவரை அத்தோடு விடுவதாக இல்லை. மேல் கோர்ட்டுக்கு அப்பீலுக்கு இழுத்தது. இதற்குள் இரண்டு வருஷங்கள் பறந்தோடி விட்டன. அப்பீலில் அவ்வப்போது அரசாங்க வக்கீலும் குஞ்சிதபாதத்தின் வக்கீலும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த சட்ட நுணுக்கங்களை எடுத்துக் காட்டி மோதிக் கொண்டார்கள். வழக்கு அடிக்கடி தள்ளிப் போடப்பட்டு இழுபறியில் இருந்தது. இதற்கிடையில் திடீரென்று குஞ்சிதபாதத்துக்கும் வேலப்பனுக்குமே மோதல் ஏற்பட்டு விட்டது. எல்லாம் பண விஷயந்தான்; கணக்கில் வராத கள்ளப் பண விஷயம். தம்மிடமே குஞ்சிதபாதம் அவருடைய 'கிரிமினல்' தனத்தைக் காட்டிவிட்டதாக வேலப்பன் அவர் மீது கடுங் கோபங் கொண்டார். வேலப்பனிடம் கைமாற்றாய்க் கொடுத்த லட்சத்துக்கு வட்டி மட்டும் அவர் லட்ச ரூபாய் கேட்டாராம்!

அப்பீலிலும் அரசாங்கத்துக்குத் தோல்விதான். அதிகாரிகளுந்தாம் எவ்வளவோ பாடுபட்டுப் பணத்தைப் பிடித்தார்கள். இருந்தாலும் வெற்றி வாகை சூடிவிட்டார் குஞ்சிதபாதம். ஐம்பது லட்சமும் நகைகளும் கடைசியில் அவரிடமே திரும்பி வந்து சேர்ந்தன. ஆனால் பொய் வழக்கை உருவாக்கவும் அதில் வெற்றி பெறவும் அவர் செலவுசெய்த தொகையைக் கணக்கிட்டபோது அவருக்குத் தலை சுற்றாமல் இல்லை. முப்பது லட்சத்துக்குமேல் அவர் பணம் அதற்காகவே கரைந் திருந்தது. ஐம்பதை மீட்க முப்பது செலவானாலும், அரசாங்கச் சட்டத்தை உடைப்பதில் அவர் கண்ட வெற்றி தம்முடைய மூளையின் பலத்தின்மேல் அவருக்கிருந்த நம்பிக்கையை உறுதிப் படுத்தியது. மறுபடியும் அவரிடம் குட்டி போடும் பணத்தைக் கைப் பற்றிக் கொண்டு போக அதிகாரிகள் வரமாட்டார்கள் அல்லவா?

சில நாட்கள் கழித்து, ஒரு நாள் முற்பகலில் திடீரென்று அவர் பெயருக்கு ஐந்தாறு வக்கீல் நோட்டீஸ்கள் வந்து சேர்ந்தன. வாங்கிப் பிரித்துப் பார்த்தார் குஞ்சிதபாதம். அவருடைய அடி வயிறு குபீரென்று பற்றிக் கொண்டு எரிந்தது. அவருடைய கிரிமினல் மூளை அப்போது ஏனோ அவரிடம் வேலை நிறுத்தம் செய்து விட்டது. அவருக்குக் கடனாகவும், கம்பெனிப் பங்குக்காகவும் 'சட்டப்படி பணம் கொடுத்திருந்தவர்கள்' தங்கள் பணத்தை ஒரு வாரத்துக்குள் கட்டி விடும்படியும் அல்லது நீதி மன்றத்தில் சந்திக்கும்படியும் கடுமையான சொற்களால் எழுதி யிருந்தார்கள். வட்டியும் முதலுமாகச் சேர்த்துச் சுமார் ஐம்பது லட்சத்துக்கு அவருக்கு நோட்டீஸ்கள் வந்திருந்தன. இவ்வளவும் வேலப்பனின் தூண்டுதல் வேலை என்பது அவருக்கு விளங்கிவிட்டது. ஆயினும், இந்தத் தடவை வேலப்பனை எப்படிச் சரிப்படுத்துவது என்று அவருக்கு விளங்கவில்லை.

அவர் பதற்றத்தோடு வேலப்பனுக்குப் போன் செய்தபோது, ''உங்களுக்குத்தான் இப்போது பணம் வந்திருக்குமே! நோட்டீஸில் கண்டபடி நீங்கள் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விட்டால் எங்களுக்கும் கோர்ட்டுச் செலவு மிச்சமாகும்!'' என்று சொல்லிப் போனை டக்கென்று வைத்து விட்டார், அவருடைய முன்னாள் நண்பர்.

சட்டம் என்ற கழுதை உதைத்ததால் முன்பு பொய்ப்பல் கட்டிக் கொண்ட குஞ்சிதபாதத்துக்கு இப்போது என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவர் எந்தக் கழுதையை வெற்றி கொண்டு விட்டதாக நினைத்தாரோ அதே கழுதை இப்போது அவருடைய எல்லாப் பற்களையும் கழற்றிவிடும் போலிருந்தது. சட்டம் இப்போது அவர் கையில் இல்லை; அது எதிர்க்கட்சிக்குக் கை மாறி விட்டது. ★



ரைஸ் மில் பேன் பாக்ஸ்   ரைஸ் ஹல்லர் சல்லடைகள்   நிலக்கடலை உடைக்கும் டிகார்டிகேட்டர்கள்

(1) "அசோக்" ரைஸ் ஹல்லர் சல்லடைகள், (4) நெல் அவியல் தொட்டிகள்-சல்லடைகள் (7) ரைஸ் மில் பேன் பாக்ஸ்
(2) "அசோக்" காபி ஹல்லர் சல்லடைகள், (5) கடலைப்பெட்டி சல்லடைகள் (8) கடலை உடைக்கும் மிஷின்கள்,
(3) பருப்பு அலசை கை சல்லடைகள், (6) தேவையான சல்லடை ரகங்கள், (9) பருப்பு அசைசும் மிஷின்கள்

"சிறந்த முறையில் 27 வருட காலமாகத் தயாரிப்பவர்கள்;"

ஸ்ரீராமகிருஷ்ணு & கோ.,

சல்லடை தயாரிப்பாளர்கள், விருதுநகர்.

Royal

Rangan

என் அருமை வாலிப நண்பர்களே! பெரியோர்களே!!

Dr. S.R. சிவராஜ்

இப்பவும தங்கள் திரேகம் மிகவும் இளைத்து, நாடி நரம்புகள் தளர்ச்சியடைந்து, இல்லற வாழ்க்கையில் சக்தி இழந்து, வயோதிகரைப் போல் காணப்படுகிறீர்களா? இதற்கு காரணம் என்ன?

நீங்கள் வாலிபத்திலே தெரியாமல் செய்கிற தவறுதல்களினால், இப்போது உங்கள் உடல் உஷ்ண மிகுதியால் எரிச்சல், முகம் ஒட்டிப் போதல, கைகால அசதி, கெட்ட கனவு மூலம் சக்தி வெளியாதல், சிறுநீரில் சக்தி வெளியாதல், தளர்ச்சியடைதல, தலைவலி, வயிற்றுவலி, மலச்சிக்கல, இடுப்பு, முதுகு நடுதண்டில வலி, கைகால் மூட்டுகளில வலி, பயம், வெட்கம இவைகள் ஏற்பட்டு இவைகளை பிறரிடமோ, பெற்றோர்களிடமோ சொலல வெட்கப்பட்டுக் கொண்டு மணவாழ்க்கைக்கு முன கஷ்டப்படுகிறார்கள ஒரு சிலர். மணமானபின் இல்லற வாழ்க்கையில் இன்பமுற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் மற்றும் பலர்.

இம்மாதிரி உடல் நலம் கெட்டவர்களும், இதற்காகப் பலரிடம் வைத்தியம் செய்து ஏமாற்றப் பட்டவர்களும் இனி கவலைப்பட வேண்டாம். இப்படிப்பட்ட வியாதிக்கு ஒரு நாளிலோ, ஒன்றிரண்டு மாதங்களிலோ, எந்த மருந்திலும் குணம் பெற முடியாது. சில மாதங்கள் தொடர்ந்து மருந்துகளை உபயோகித்து வந்தால்தான் படிப் படியாக உஷ்ணம் குறைந்து, இரத்த விர்த்தியாகி சக்தி திடப்பட்டு நாடி நரம்பு களுக்கு வலுவு ஏற்படுத்தி, புதிய சக்தியும், புத்துணர்ச்சியும் பெற்று வரலாம்.

குறிப்பு:- மேலே சொன்ன காரணங்களை நன்குகபடித்துப் பார்த்து, மனதில் திருபதி கொண்டவாகள் மட்டும் என்னிடம சில மாதங்கள சிகிச்சை பெற்று, மீண்டும் வாழக்கையில் வெற்றி பெற விருமபுபவர்களை மட்டும் அழைக்கிறேன தொடாபு கொளக

ஒரு மாதம் உபயோகிக்கும் மருந்துகள்:

ஸ்பெஷல் சிகிச்சை	1.நெ.செட்	2.நெ.செட்	போஸ்டேஜ்
ரூ.65/-	ரூ.50/-	ரூ.40/-	ரூ.6/-தனி

சிவராஜ் சித்த வைத்தியசாலை,
சித்கர் கோவில் ரோடு, சிவதாபுரம், S.O. சேலம்.

சென்னை விற்பனை ஏஜண்டு:-
ராமச்சந்திரா லாட்ஜ், (போன்: 83353) 6, அத்திப்பட்டன் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-2.

-மினர்வா

எமது தீபாவளி வாழ்த்துக்கள்

தந்தி: 'பாண்மோபைல்' போன்: 24331 - 24332

TATA
DIESEL VEHICLES

பாண்டியன் ஆட்டோமொபைல்ஸ்

பிரைவேட் லிமிடெட்

பைபாஸ் ரோடு, மதுரை - 16

கிளை அலுவலகங்கள்:

பாளையங்கோட்டை,
திருநெல்வேலி 2
போன்: 555

ஸ்டேடியம் பில்டிங்,
பாலமோர் ரோடு,
நாகர்கோவில்

ராஜம்

பி. வி. தயாரிப்புகள்

சாம்பார் பொடி
ஊறுகாய்கள்
சாஸ் வகைகள்



பி. வெங்கடாசலம் காண்டிமென்ட்ஸ் *1 & 2 பிராட்வே, சென்னை-1.*

(ஸ்தாபிதம்: 1860)

மயில் மார்க்

எங்கள் தயாரிப்புகளின் முழு விவரமடங்கிய பிரசுரத்திற்கும் விலைப்பட்டியலுக்கும் எழுதுங்கள்.



அப்பாவும் பிள்ளையும்

அன்னையின் மென்கரங்களில் தவழ்ந்தும் மலர் மேனியில் அணைந்தும் விளையாடுவது குழந்தைக்கு இயற்கை. ஆயினும் தந்தையின் அன்பிலும் பெருமிதத்திலும் அது வளர்கிறது. தந்தையும் குழந்தைக்கு மெல்லப் பால் புகட்டக் கற்றிருக்கிறார். தந்தை தரும் பாலைக் குடிக்கக் குழந்தைக்குத் தெரிகிறதே!

அன்னையின் மார்மேல் விளையாடும் குழந்தை, அப்பாவின் மார்பின்மேல் ஏறிச் சவாரி செய்கிறது! அதற்கு எத்தனை ஆர்வம்! தந்தைக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி!







அவன் கண் ஒளிர்கிறது; அப்பா அவனை உயரத் தூக்கிப்பார்க்கிறார்; ஆம், அவன் தன் நிலையில் உயர வேண்டுமென்று எதிர்பார்க்கிறவர் அல்லவா அவர்?

அப்பாவின் கால்கள் எவ்வளவு உயரம்! குழந்தை வியப்புடன் அண்ணாந்து பார்க்கிறது.

'அப்பா பகலிலே தூங்குகிறாரே! உட்கார்ந்தபடியே தூங்க முடியுமோ?' கூர்ந்து கவனிக்கிறான் குழந்தை.

அப்பா கண்ணை மூடிக்கொண்டு என்ன செய்கிறார்! குழந்தை பார்க்கிறான்; பயபக்தியோடு பார்க்கிறான்.

தந்தை போகும் வழியில் நாமும் போக வேண்டும் என்று அவனுக்குத் தோன்றுகிறது. அவனும் அமர்ந்து கண்ணை மூடிக் கொள்கிறான்.

அப்பா முகரோமம் களைகிறார். 'நாமும் பெரியவன் ஆனால் ....?' அதைப் பார்க்கும் அவனுக்கு எண்ணம் ஓடுகிறது.



அப்பாவோடு உட்கார்ந்து விளையாடும் அளவுக்கு அவன் அறிவிலே உயர்ந்து விட்டான். ஆம், இருவரும் சரிசமமாக அல்லவா விளையாடுகிறார்கள்?

'நானும் அப்பா மாதிரி ஆகிவிட்டேனே! எவ்வளவு பெரியவனாக வளர்ந்து விட்டேன்! அப்பாவின் ஷர்ட்டைப் போட்டுப் பார்க்கட்டுமா! ஆ ஆ! நான் அப்பாமாதிரி ரொம்பப் பெரியவன் ஆகிவிட்டேன்!'

தந்தை மகனுக்கு எப்படி டை அணிவது என்று காட்டுகிறார். நிமிர்ந்து நிற்கும் அப்பாவுக்கும் பிள்ளைக்கும் எத்தனை ஆனந்தம்! அவர் வழிகாட்ட அவன் அப்படியே நடப்பான் என்று அவர் எண்ணுவதில் பெருமை இருக்கத்தானே இருக்கும்?

போட்டோ: வி. விசுவநாதன், சென்னை

இக்கால சிறுவர் சிறுமியர்க்கேற்ற விறு விறுப்பு வாய்ந்த டிஸைன்கள்
ஈவா 10 ரூ 14.95, 16.95, 19.95
ஈவா 64 ரூ 13.95 15.95, 17.95
பின்டு 61 ரூ 7.95 8.95, 10.95
வேஃபைண்டர்ஸ் 70 ரூ. 16.95, 18.95, 21.95
வேஃபைண்டர்ஸ் 03 ரூ 18.95, 20.95. 24.95
நியுஸ்ட்ராங் 41 ரூ 15.95, 17.95, 20.95
சூப்பர்டஃப் 04 ரூ 20.95, 24.95
லண்வே 41 ரூ 9.95 11.95, 14.95
சிறியவர்களின் மனதை அறிவதை விட கடினம் அவர்களின் பாதங்களின் நுட்பங்களையும் தேவைகளையும் தெரிந்து கொள்வது. இதையே தொழிலாகக்கொண்ட பாட்டா சிற்பிகளின் ஆராய்ச்சியின் விளைவுகளை உங்களுக்கு பழக்கமான பாட்டா கடையில் பாருங்கள். அழகும், நவீன விறு விறுப்பும் கலந்த எத்தனையோ டிஸைன்கள்! வளரும் இளங்கால்களுக்கு பாதுகாப்பும் சுகமும் அளிக்கும். என்னபாடு படுத்தி வைத்தாலும் உறுதியுடனிருக்கும் இந்த செருப்புகளும் பூட்சுகளும். சிறியவர்கள் இஷ்டப்படி எடுக்க விடுங்கள்.
Bata

இம்ப்காப்ஸ்

புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில்
நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.

இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த. யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறு மலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

impcops

உண்மையான ஆயுர்வேத, சித்த. யூனானி
மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்
இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முககிய
மருந்து கடைகளிலும் கிடைக்கும

இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ லிட்
அடையார், சென்னை 20

விற்பனை நிலையங்கள்: 4/186, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 86520
16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.
48, தெற்கு மாசி தெரு, மதுரை. போன்: 30875

maa/IMP/961/M Tam

ஜெஸ்ஸூரில் பாகிஸ்தான் ராணுவமான பலூச் ரெஜிமெண்ட் தங்கியிருந்தது. அதில் ரகிமான் ஒரு கேப்டன். வங்காள தேசத்தின் முரபரா என்ற ஊரைச் சேர்ந்தவர்.

சென்ற ஆண்டு மார்ச் இருபத்தைந்தாம் தேதி மாலையில் அவர் மனம் குழம்பிக் கொண்டிருந்தது. காரணம், அன்று இரவிலிருந்து பாக் ராணுவம் மக்கள் மீது ஏவப்படப் போகிறது என்பதுதான்.

அவருடைய குடும்பம் டாக்காவில் இருந்தது. மனைவியும் ஒரே மகனுமே குடும்பம். அவர்களை டாக்காவை விட்டுத் தங்கள் சொந்தக் கிராமமான பச்தோனுவுக்கு அழைத்துப் போக ஏற்பாடு செய்திருந்தார். அவர்கள் போயிருப்பார்களோ, மாட்டார்களோ என்று கவலை.

இருட்டியதும், மிலிடெரி கண்டோன்மெண்டிலிருந்து மெதுவாக நழுவினுர். நகர எல்லைக்குள் வந்ததும் ஓரமாக ஒதுங்கி ராணுவ உடையைக் கழற்றினுர். சிவில் ஆடைகளை அணிந்து கொண்டார். நேரே ரெயில் நிலையம் சென்று மைமன் சிங் என்ற ஊருக்கு ரெயிலேறினுர்.

மறுநாள் நடுப்பகலில் மைமன்சிங் போய்ச் சேர்ந்தார். வெளியே ஒரே பரபரப்பு. விசாரித்ததில் முந்திய தினம் டாக்காவில் பாக் ராணுவம் செய்த கொடுமைகள் தெரிய வந்தன.

அவர் ரத்தம் கொதித்தது. என்ன செய்வதென்று தீவிரமாக யோசித்தார்.

இதற்குள் அருகில் ஜய்தேவ்பூரில் இருந்த இரண்டாவது வங்காள ரெஜிமெண்ட் (இது வங்காளி வீரர்களைக் கொண்ட ரெஜிமெண்ட். இதைத் தோற்றுவித்தவர்கள் பாகிஸ்தானியர்களே) பாக் ராணுவத்துக்கு எதிராகக் கலகம் செய்தது. அந்த ரெஜிமெண்டைச் சேர்ந்த வங்காளிகள் அணியணியாகப் பிரிந்து போய் மைமன் சிங்கில் ஒன்றுகூடினுர்கள்.

ரகிமானுக்கு இது தெரியவந்தது. அவருக்கு ஒரே மகிழ்ச்சி. உடனே சென்று அந்த ரெஜிமெண்டின் தளபதியான மேஜர் சபிபுல்லாவைச் சந்தித்தார். இருவரும் யோசித்தார்கள். டாக்காவைத் தாக்குவது என்று திட்டமிட்டார்கள். இருவரும் இரு கிளைகளாகப் பிரிந்து டாக்காவை நோக்கிப் பிரயாணமானுர்கள்.

நூற்றுமுப்பது வங்காளச் சிப்பாய்களுடன் ரகிமான் புறப்பட்டார். இரவுகளில் மாத்திரம் பிரயாணம் செய்து டாக்கா அருகிலுள்ள டங்கா என்ற இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

இரண்டு நாட்கள் சென்றன. எனினும் சபிபுல்லாவின் துருப்புகள் டாக்கா அருகில் வந்து சேரவில்லை. இது ரகிமானுக்குக் கவலையை அளித்தது. என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்துக்கொண்டு இருந்தார்.

மூன்றும் நாள் இரவு. ஒல்லியான ஓர் ஆசாமி அவரைத் தேடி வந்தார்.

"ஸாப்! உடனே நீங்கள் மைமன் சிங் வாபஸ் ஆகவேண்டும்" என்றுன்.

"ஏன்?"

"ஒரு பெரிய பாக் படை மைமன் சிங்கை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இதை அறிந்துதான் சபிபுல்லா டாக்கா வர விரும்பவில்லை. வந்தால் எதிரில் அந்தப் படையைச் சந்தித்திருக்க வேண்டியிருக்கும்."

ரகிமான் தலைகுனிந்தார். முதல் திட்டமே உடைந்துவிட்டது! இருப்பினும் மனம் சளைக்கவில்லை. தம் ஆட்களோடு பச்தோனுவை நோக்கிப் போக ஆரம்பித்தார்.

ஏப்ரல் ஆறு. கல்கத்தாவிலிருந்து சுதந்தர பாங்களா தேஷ் ரேடியோ ஓர் அறிவிப்புக் கொடுத்தது. பச்தோனுவை முக்தி வாகினிப் படைகள் (விடுதலைப் படைகள்) நெருங்கிக் கொண்டிருப்பதாகவும் சில நாட்களில் அவை பாக் ராணுவத்தை எதிர்க்கப் போவதாகவும் அந்த அறிக்கை கூறியது.

இதைக் கேட்ட பாக் ராணுவம் தயாராகியது. ஒரு பாக் படை பச்தோனுவை நோக்கி நகர ஆரம்பித்தது.

தமது கிராமத்தை நெருங்கு முன்பே ரகிமானுக்கு இது தெரிய வந்தது. உடனே அவர் யோசனையில் ஆழ்ந்தார். பாக் படையை எப்படியும் எதிர்ப்பது என்று முடிவு செய்தார். அப்போது அவர் பச்தோனுவிலிருந்து ஒரு மைல் தூரத்தில் இருந்தார். சாலையின் இரு பக்கத்திலும் தம் ஆட்களை மறைந்திருக்கச் சொல்லி எதிரிப் படையின் வருகைக்காகக் காத்திருந்தார்.

சீக்கிரத்தில் எதிரியின் முதல் லாரி சாலையில் வர ஆரம்பித்தது. ரகிமானும் அவர் ஆட்களும் புதர்களில் பதுங்கியிருந்து லாரிகள் வருவதைக் கவனித்தார்கள். தங்களைத் தாண்டிப்

நான் விரும்பி உபயோகிப்பது
நம்பகமான
ஐடெக்ஸ்
அழகு சாதனங்கள்

ஜெய கௌசல்யா

Aravind Laboratories
MADRAS-33

GP- AL-6

Our Heartiest Deepavali Greetings

Caravan Goods Carriers Private Limited

(AGENTS)

M. B. T. (WEST)

BIGGEST CARGO MOVERS

36 Second Line Beach, Madras 1

Tel: 20217/8, 22605, 24593 Telex: 041/7184

Head Office:
Chheda Bhavan
Masjid Siding Road, Bombay 9
Tel: 321831/2/3
Tlx: 011/2996

Admn. Office:
25, K. H. Road
Shantinagar, Bangalore 27
Tel: 53622/3
Tlx: 043/208

Service Centres in the States of
TAMIL NADU, MYSORE, KERALA, ANDHRA, MAHARASHTRA, MADHYA PRADESH, DELHI, GUJARAT, CALCUTTA, ETC.

போகும் மட்டும் ரகிமான் காத்திருந் தார். லாரிகள் கடந்தபின் கையைத் தூக்கிச் சைகை செய்தார். திடீ ரென்று துப்பாக்கிகள் முழங்க ஆரம் பித்தன. எதிரிகள் திடுக்கிட்டார்கள். லாரிகளிலிருந்து கீழே குதித்துச் சுட ஆரம்பித்தார்கள். கடும் போர் நிகழ்ந்தது. அரை மணியில் பாக் முன்னணித் துருப்புகள் சின்னபின்ன மாயின. ரகிமானின் படையினரில் ஒரே ஓர் ஆளுக்கு மட்டுமே குண்டுக் காயம் ஏற்பட்டது.

விட்டு வந்தார் அவர். அவர் மனத் திற்கு ஒரு திருப்தி.

மறு நாளும் அதே இடத்தில் சண்டை நடநதது. பாக் ராணுவம் இந்தத் தடவை பெரிய தாக்குதலே நடத்தியது. ரகிமானின் ஆட்களில் பலர் காயமுற்றுர்கள். இருந்தாலும் தொடர்ந்து சண்டை நடந்தது. பாக் ராணுவத்தால் முன்னேற முடிய வில்லே. பின்வாங்க ஆரம்பித்தது.

மாலே நேரமானதும் ரகிமான் யோசனே செய்தார். அவரிடம்

சண்டை முடிந்தபின் களேப்போடு கீழே உட்கார்ந்தார் ரகிபான்.

“அப்பா!” என்று குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார். அவர் பையன் கைசர் நின்றுகொண் டிருந்தான். அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. “கைசர்!” என்று இரைந்தார். ஒரே மகிழ்ச்சியினுல் அவனேக் கட்டிக் கொண்டார்.

“டீ, இந்தாருங்கள்” என்முன் கைசர். தந்தையும், அவர் படைகளும் அங்கே வந்து போர் புரிவதை அறிந்து டீக்கு ஏற்பாடு செய்திருந்தான் அவன்.

எல்லாருக்கும் டீ வழங்கப்பட்டது.

“அப்பா! நீங்கள் சண்டையிடுவதை நான் ஒளிந்திருந்து பார்த்தேன். என்னுல் இனிச் சும்மா இருக்க முடியாது. நானும் உங்களுடன் சேர விரும்புகிறேன்” என்முன்.

“நீ எனக்கு ஒரே மகன். உனக்கு இது வேண்டாம்” என்று கூறினுர் ரகிமான். பிறகு அவனுடன் வீடு சென்று தம் மனேவியைப் பார்த்து

உள்ளது சிறு படைதான். (130 பேர்.)அதைப் பாக் அறிந்தால் ஆபத்து விளேயும் என்று நம்பினுர். ஆகவே, அந்த இடத்தை விட்டுப் போய் விடுவது என்று தீர்மானித்தார்.

அவர் திட்டப்படியே அவருடைய படைகள் நகர ஆரம்பித்தன. பத்து நாட்களில் அவை தெலிபாராவை (இந்திய எல்லேக்குள் உள்ள ஊர்) அடைந்தன.

அவரைத் துரத்தி வந்த பாக் ராணுவம் அடுத்த இரண்டு நாட்களுக் குள் அந்த இடத்தை அடைந்தது.

எல்லேயை அடைந்த பாகிஸ்தான் ராணுவத்தின் மேஜர் பக்ருல் தமது ஜீப்பிலிருந்து இறங்கினுர். நேராக எல்லேக்குள் நுழைந்தார். இந்திய எல்லேயிலுள்ள அவுட் போஸ்டைச் சேர்ந்த ஜவான்கள் அவரை நிறுத் தினுர்கள்.

“எங்கே உங்கள் சுபேதார்?” என்முர் பக்ருல்.

சுபேதார் வந்தார்.

“முக்தி வாகினி ஆட்கள் இங்கே ஓடி வந்திருக்கிறுர்களா?” என்முர் அதட்டலுடன்.

“தெரியாது” என்று மிகவும் அமைதியாகப் பதில் சொன்னுர் சுபே தார்.

“அவர்கள் உங்கள் எல்லேக்குள் இருக்கிறுர்கள்.”

“இல்லே; நிச்சயமாக இல்லே.”

“நான் நம்பவில்லே. அவர்களே எங்களிடம் ஒப்படையுங்கள். இல்லா விட்டால் எங்கள் படைகளே விட்டு இங்கே தேடச் சொல்வேன்.”

சுபேதார் ஆத்திரமடைந்தார்.

“இந்திய எல்லேக்குள் ஒரு பாக் சிப்பாய்கூட நுழைய முடியாது. ஜாக்கிரதை! நீங்கள் உடனே வெளி யேறுங்கள்” என்முர் கடுமையாக.

மேஜர் பக்ருல் ஏமாற்றத்தோடு திரும்பினுர். இந்திய ராணுவம் தம்மை அநுமதிக்காது என்பதை உணர்ந்தார்.

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

ஹெடன்ஸா

களிம்பு
உபயோகித்து
நிவாரணம் அடையுங்கள்;
—ரண சிகிச்சையையும்
தடுங்கள்

பொறுக்க முடியாத வலியா? தாங்க முடியாத அரிப்பா? எரிச்சலெடுக்கும் உணர்ச்சியா? ரத்தக் கசிவா? உடனடியாக சிகிச்சை செய்யத் தாமதி யாதீர்கள்! அலட்சியம் செய்தால், நோய் முற்றி ரணசிகிச்சை செய்யவேண்டிவரும். 108 தேசங் களிலுள்ள டாக்டர்களால் சிபாரிசு செய்யப் பட்ட, நம்பிக்கையான ஜெர்மன் மூல நோய் களிம்பு ஹெடன்ஸா உபயோகித்து இப்பொழுதே நிவாரணம் பெறுங்கள்! ஹெடன்ஸா வலியையும் அரிப்பையும் சீக்கிரம் நிறுத்தி, மலப்பிரவிருத்தி யைச் சுலபமாக கஷ்டமில்லாமல் செய்கிறது. முக்கியமாக, ஹெடன்ஸாவிலுள்ள சக்திவாய்ந்த மருந்துப் பொருள்கள் நீடித்த நிவாரணமளிப்ப தோடு, வெடிப்புகளைச் சுருங்கச் செய்து, ஆரோக் கியமான தசைகளை வளர்க்கிறது.

மூலநோய்க்குக் காலாகாலத்தில் ஹெடன்ஸா உபயோகித்தால் பிற்காலத்தில் ரண சிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்படாது என்பது ஞாபக மிருக்கட்டும்.

ஹெடன்ஸாவில் உணர்வழிக்கும் மருந்து கிடையாது.

ஹெடன்ஸா

மூல நோய்க்கு



OBM-2144-TAM

நினைத்த மாத்திரத்தில் தயார்
—இனி, மேலே வாசியுங்கள்!

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

SRI GANESHRAM'S 777 BRAND FOOD PRODUCTS·MADRAS·S.INDIA

(REGD.)

'திடீரெக்ஸ்' Dhideerex (FOR INSTANT PREPARATION) 'திடீர்'

மிளகு மசாலா (மிளகு ரசம்) **தக்காளி மசாலா** (தக்காளி சூப்)

நல்ல ஜீரண சக்திக்கும் பசி எடுக்கவும் இவ் விரண்டும் வெஜிடபிள் புரதங்கள் நிறைந்து விளங்குவதால் உங்களுக்கு நல்ல தெம்பளிக்கக் கூடியது. 114, 225 & 454 கிராம் பாட்டில் களில் கிடைக்கும்.

திடீர் வெஜிட்டபிள் பிரிஞ்சி

கொதிக்கும் தண்ணீரில் சிறிது நேரம் போட்டு வைத்து அதற்கு அளவான உடனிருக்கும் பவுடரையும் சிறிது நெய்யையும் சேர்த்தால் பிரிஞ்சி ரெடி.

திடீர் அரிசி சேவை (சேமியா) மிக்ஸ்

கொதிக்கும் தண்ணீரில் கலந்தவுடன் ரெடி.

குறிப்பு:— மேற்படி தயாரிப்புகளனைத்தும் அசல் தயாரிப்புகளுக்கு ஈடான ருசியுடன் இருப்பது நிச்சயம்.

ஜாதிக்காய் கலவையுடன் கூடிய எமது புதிய ஊறுகாய்! மாங்காய், எலுமிச்சை மற்றும் குருத்து இஞ்சி முதலியவைகளுடன் கூட்டு சேர்த்து தனித்தனியே உப்பு அல்லது எண்ணெயுடன் பக்குவம் செய்யப்பெற்றது. நாவிற்கினியது; நலமிக்கது!

தயாரிப்பாளர்கள்:

M/s R. S. N. அய்யர் & R. S. G. அய்யர்

உரிமையாளர்கள்:

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,

46, தம்பு செட்டி தெரு, சென்னை-1.
(போன்: 20401)

தயாரிப்பு முறைகளை உருவாக்கியவர்கள்:
ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்
அனலிட்டிக்கல் லாபரட்டரீஸ்
சென்னை-1.

தெலிபாராவில் பல மாதங்கள் வரை ரகிமானின் வங்காளி ரெஜிமெண்ட் தங்கவேண்டி வந்தது. அவர்களுக்குத் தீவிரப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. புதிய வங்காள இளைஞர்களும் அதில் சேர்ந்துகொண்டார்கள்.

நீண்ட காலம் ரகிமானால் சும்மா இருக்க முடியவில்லை. எப்படியும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தார். நவம்பர் இருபத்தெட்டாம் தேதியன்று அவர் தம் படையுடன் புறப்பட்டார். வங்காளத்திலுள்ள அகவ்ராப் பகுதியில் நுழைந்தார். நான்கு நாட்கள் வரை போர் நடந்தது. அகவ்ரா விரைவில் விடுதலைப் படையின் வசமாகியது.

போர் முடிந்த அன்று இரவு அவருக்கு ஒரு செய்தி கிடைத்தது. அவருடைய மகன் கைசர் விடுதலைப் படையில் சேர்ந்திருக்கிறான் என்ற செய்திதான் அது.

''எப்போது சேர்ந்தான்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் ரகிமான், செய்தி கொண்டு வந்தவனிடம்.

''மூன்று மாதகாலம் ஆகிவிட்டது. பச்தோனாவில் நீங்கள் நடத்திய போரைப் பார்த்ததும் அவனுக்கு ஆவேசம் வந்துவிட்டது. உங்களுக்குத் தெரியாமல் விடுதலைப் படையில் சேர்ந்துவிட்டான். இந்திய எல்லைக்குள் அவனுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்போது பைரம் பஜார் அருகே உள்ள கொரில்லா விடுதலைப் படைக்குத் துணைத் தலைவனாக இருக்கிறான்'' என்றான் செய்தி கொணர்ந்தவன்.

ரகிமானுக்கு ஒரு கணம் தயக்கம்; மறுகணம் தம்மைச் சூழ்ந்துள்ள எத்தனையோ இளைஞர்களைப் பார்த்ததும், தமது வருத்தத்தை மகிழ்ச்சியாக மாற்றிக் கொண்டார்.

டிசம்பர் நாலாம் தேதி இந்திய ராணுவம் போரில் இறங்கிவிட்டது. இரண்டு நாட்களுக்குள் கங்கா நகர், சுல்தான்பூர் நகரங்கள் கைப்பற்றப்பட்டன. ரகிமானின் விடுதலைப் படையும் இந்தியப் படையும் ஒன்று சேர்ந்துவிட்டன.

டாக்காவுக்கு விரைவில் போய் விடவேண்டும் என்ற எண்ணத்துடன் இரண்டு படைகளும் டாக்காவை நோக்கி முன்னேறத் தொடங்கின.

இடையே மேகனா நதி வந்தது. அதைக் கடப்பதற்கு ஒரே ஒரு பாலந்தான் இருந்தது. அது ரெயில் பாலம். அதை நோக்கி இந்தியப் படையினர் விரைந்தார்கள்.

டிசம்பர் ஒன்பதாம் தேதி அந்தப் பாலத்தை அடைந்தார்கள். எதிர்பார்த்தபடியே பாக் படையினர் ரெயில் பாலத்தைச் சேதப்படுத்தியிருந்தார்கள்.

நதியைக் கடப்பது எப்படி என்று ரகிமானும் மற்ற ரா ுவ அதிகாரிகளும் யோசித்தனர். ஒரு திட்டம் தோன்றியது. அருகிலுள்ள கிராமத்தை நோக்கிச் சென்றார். அந்த ஊர்க்காரர்களைத் திரட்டி நதியருகில் அழைத்து வந்தார் ரகிமான். அவர்கள் மகிழ்ச்சியோடு தங்கள் படகுகளையும் கட்டுமரங்களையும் கொண்டு வந்தார்கள், இந்திய அதிகாரிகளுக்கு மிக்க மகிழ்ச்சி. சிறு முன்னணிப் படை ஒன்றை அந்தப் படகுகள் மூலம் மறு கரைக்கு அனுப்பினார்கள். பிறகு பிரிகேட் முழுவதையும் மறு கரைக்கு அனுப்புவது என்று முடிவு எடுத்தார்கள்.

கன ரக ஆயுதங்களைப் படகுகளில் அனுப்புவது கடினமாக இருந்தது. எனினும் ஒருவாறு படகுகளில் அவற்றை ஏற்றி மறு கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

கடைசியில் -76 டாங்குகள்! இந்த ரஷ்யத் தயாரிப்புகள் தண்ணீரில் நீந்தக் கூடியவை. ஆனால் மேகனா நதி போன்ற ஓடும் வெள்ளத்தில் அவை நீந்துமா என்ற பயம் இருந்தது. அரை மணி நேரந்தான் அதன் நீச்சல் சக்தியைப் பயன்படுத்த முடியும். அதற்கு மேல் டாங்கியில் அளவிட முடியாத சூடு ஏறிவிடும். நதியைக் கடப்பதற்குச் சுமார் மூன்று மணி நேரமாவது தேவைப்படும்.

எனினும், இந்திய அதிகாரிகள் தயங்கவில்லை. டாங்குகளைத் தண்ணீரில் இறக்க உத்தரவிட்டார்கள். அவை வெள்ளத்தில் நீந்த ஆரம்பித்தன. அரை மணி நேரம் நீந்திய பிறகு அவற்றின் எஞ்சின்கள் அணைக்கப்பட்டன. அதன் பின் அவற்றைச் சாதாரணப் படகுகள் தண்ணீரில் இழுக்க ஆரம்பித்தன. முன்னால் தள்ளியும், பின்னாலிருந்து உந்தியும் அவற்றைப் படகுகள் மறு கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தன.

கடைசியில் படகுகள் மூலம் கொண்டு போக முடியாத ஆயுதங்களை ஹெலிகாப்டர்கள் மறு கரைக்குக் கொண்டு போக ஆரம்பித்தன.

இந்த 'ஹெலிகாப்டர் பாலம்' ஏற்படுத்தியபோது இந்தியத் துருப்புகளுக்கு ஒரு கவலை இருந்தது. நதியின் மறு கரைக்கு வெகு அருகிலுள்ள பைரம் பஜார் என்ற இடத்தில் பாக் படை ஒன்று தங்கியிருந்தது. அவர்கள் இருக்குமிடத்திலிருந்து இந்திய ஹெலிகாப்டர்கள் பறப்பதை அவர்களால் எளிதில் பார்க்க முடியும், பார்த்தால் ஆபத்தாயிற்றே என்று அதிகாரிகள் நினைத்தார்கள். ஆனால் ஏனோ பாக் துருப்புகள் சுடவில்லை!

ஒரு நாள் முழுவதும் நதியைக் கடக்கும் வேலை நடந்தது. டிசம்பர் பதினோராம் தேதி மாலை இந்தியத் துருப்புகளின் கடைசிப் பகுதிகூட நதியின் மறு கரைக்கு வந்துவிட்டது. ரகிமானின் விடுதலைப் படையும் அவர்களுடன் நதியைக் கடந்துவிட்டது.

எல்லாரும் ஒன்று சேர்ந்ததுதான் தாமதம், கரையிலிருந்து பாங்களா தேஷின் கொடியை ஆட்டிக்கொண்டு அநேக வங்காளி வீரர்கள் ரகிமானையும் இந்தியத் துருப்புத் தலைவர்களையும் வரவேற்றார்கள். பைரம் பஜார்ப் பகுதிகளில் மறைந்திருந்த விடுதலைப் படையினர்தாம் (கொரில்லா) அவர்கள்.

கொரில்லாத் தலைவர் ரகிமானை இனம் கண்டுகொண்டார்.

''நீங்கள் இங்கே வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். நீங்களும் இந்தியப் படையும் மேகனாவைக் கடக்க முயன்றதைப் பார்த்ததும் எங்களுக்கு மகிழ்ச்சி'' என்றார் அவர்.

''ஏன் இங்கே எதிர்ப்பு இல்லை?'' என்றார் ரகிமான்.

''எதிர்ப்பை ஒடுக்கி விட்டோம். நூற்றுக் கணக்கில் பாக் துருப்புகளைக் கொரில்லாப் போரில் கொன்றுவிட்டோம். எங்களுக்குப் பயந்துதான் பைரம் பஜாரிலுள்ள பாக் படை வெளியே வரவில்லை. அவர்கள் வந்திருந்தால் நீங்கள் நதியை இவ்வளவு விரைவில் கடந்திருக்க முடியாது'' என்றார் தளபதி.

இந்தியத் தளபதியும் ரகிமானும் அந்தக் கொரில்லாத தலைவரை வெகுவாகப் பாராட்டினார்கள். ரகிமானுக்கு அப்போது திடீரென்று ஒரு நினைவு வந்தது; தம் மகன் கைசர் விடுதலைப் படையில் சேர்ந்து இந்த வட்டாரத்தில்தானே எங்கோ இருப்பதாகக் கேள்வியுற்றிருந்தார்? இங்கே எங்கேயாவது இருக்கிறானா?

''கேப்டன்'' என்றார் ரகிமான்; 'உங்கள் படையில் கைசர் என்ற பையன் இருக்கிறானா?''

''கைசர்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் கேப்டன்.

''ஆமாம், என் மகன் அவன்!''

ஒரு கணம் கேப்டன் யோசித்தார். பிறகு, ''இங்கே வாருங்கள்!'' என்று அழைத்துப் போனார். ஒரு பர்லாங் தொலைவில் நதிக் கரையில் பல மண் மேடுகள் தென்பட்டன. அதன் அருகே நின்றதும் கேப்டன் திரும்பினார்.

''உங்கள் மகன் தைரியத்துடன் போரிட்டான். பதினெட்டுப் பாக் சிப்பாய்களைக் கொன்றான். அவனும் அவனுடைய ஆறு சகாக்களும். . .'' என்று கூறி மண்மேடுகளைக் காண்பித்தார் அவர்.

ரகிமானின் கண்களில் புலபுலவென நீர் வழிந்தது. அவரைச் சட்டென்று பிடித்துக்கொண்டார் கேப்டன்.

கண் விழித்தபோது ரகிமான், ''எப்போது இது நடந்தது?'' என்று கேட்டார்.

''நான்கு நாட்களாகி விட்டன. எதிரியின் குண்டு ஒன்று அவன் தலையை ஊடுருவிவிட்டது.''

அடையாளமே இல்லாத அந்த மண் சமாதி முன் சிறிது நேரம் கண்மூடி நின்றார் ரகிமான். பிறகு கண்களைத் துடைத்துக்கொண்டுமேலே நடந்தார்.

அவர் உருவாக்க உதவும் சுதந்தர வங்காளம் அவருடைய மகனுக்கு இல்லாமற் போய்விட்டது. போகட்டும். மற்றவர்களின் மக்களுக்காவது பயன்படட்டும். கண்ணீருடன் இந்தியத் துருப்புகளைத் தொடர்ந்து சென்றார்.

டாக்கா சரணடைந்தவுடன் ரகிமான் நேராக மேகனா நதிக் கரைக்கு வந்தார். மகனது சமாதியின் முன் இரண்டு தினங்கள் வரை கண்ணீரில் மூழ்கியிருந்தார்.

இன்று பாங்களா தேஷின் ராணுவத்தில் மேஜர் பதவியை ஏற்றிருக்கிறார் ரகிமான், ★

Deepavali Greetings

from

VIJAY TANKS & VESSELS PRIVATE LIMITED

Manufacturers of

Floating Roof Tanks, Low Temperature Tanks, Spheres, Pressure Vessels etc. for Refineries, Fertilizer and Petro-Chemical Industries

Licensees of

GRAVER TANK & MFG. CO., U.S.A.

Registered Office:

Haji Adam Mansion, Homji Street, Bombay I



தேவி எண்டர் பிரைசஸ்
அனுப்புபாளையம் P.O.
திருப்பூர்-3
தீபாவளி
காமதேனு பிராண்டு
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
பார்வைக்கு மிக
அழகானவை.
மங்காத ஜொலிப்
புக்கும், மிக
நீடித்த உழைப்
புக்கும் முதன்மை
யானவை.
KAMADHENU
TIRUPUR
BRAND
காமதேனு பிராண்டு
உயர்ந்த ரக அலு
மினிய வில்லைகளும்
எல்லாவிதமான
மிக அழகான
அலுமினியப்
பாத்திரங்களும்
கிடைக்கும்.
வாழ்த்துக்கள்.
ஸ்ரீ குருவாயூரப்பன் இண்டஸ்ட்ரீஸ்
அனுப்புபாளையம் P. O.
திருப்பூர்-3

தீபாவளி
வாழ்த்துக்கள்....
அழகு தரும்
பொருள் ஒன்று
ஆனந்தம் தரும்
என்றும்!
புகழ்பெற்ற இப்பொன் மொழி
நீங்கள் உம்மிடியாரின் நகைகளை
தேர்ந்தெடுத்து வாங்கிடும்
பொழுது நிரந்தர
உண்மையாவதைக்
கண் கூடாகக் காண்பீர்கள்.
சிறப்பான நகைகளுக்குச் சிறந்த இடம்
உம்மிடியார்
உம்மிடி ராமையா செட்டி குருசாமி செட்டி & சன்ஸ்
எல். ஐ. ஸி. கட்டிடம் மவுண்ட்ரோடு-சென்னை-2
போன்: 84488-81607
VSK-V 105

எங்கள் அன்பார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி அளிக்கும் கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களால் உங்களுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. தவிரவும் உங்கள் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான விவசாயத் தொழிலுக்கும் கடனுதவி அளிக்க உபயோகப்படுத்தப்படுகின்றன.

இந்த தீபாவளி நன்னாளில் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்ய ஆரம்பியுங்கள்.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி
லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.

போன்: **20367, 20368, 20369.** தந்தி: **'அர்பாங்கி'**
டெலக்ஸ்: Ms **7225**

ஆர். கனகசபை — தலைவர்
குடவாசல் சி. கிருட்டினமூர்த்தி — துணைத்தலைவர்
டி. வர்த்தமானன், செயலர்

Introducing 'THE SMALL BIG CAR'

STANDARD GAZEL

with more space, more beauty.

Standard Motor Products of India Limited have been working on the principle of offering small cars that are as roomy and comfortable as big ones. Seems impossible? Let us demonstrate it to you:

HERE!
Standard Motors are proud to present their new model — STANDARD GAZEL — the small big car. It is a new concept. See what the GAZEL has for you:

MORE SEATING CAPACITY: With full bench seat in front as well as large space at the back — to seat 5 or 6 persons.

MORE COMFORT: With greater leg-room both in front and back; easy entry and exit; improved rear suspension.

MORE BEAUTY: With graceful lines and contours; new dash-board with piano-key switches; new sleek grill.

GAZEL can be inspected at our Distributor's showroom.





STANDARD MOTOR PRODUCTS OF INDIA LTD., MADRAS

STANDARD

Distributors:

THE UNION CO. (MOTORS) PRIVATE LTD., Madras & Ootacamund
UNICORN (BANGALORE) PRIVATE LTD., Bangalore

தவருமல் பிரஷ் கொண்டு பல் துலக்கி, ஈறுகளைத் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்.

ஈறுகளை உறுதியுடனும் ஆரோக்கியத்துடனும் வைத்திருக்க, அவற்றைத் தினமும் தவருமல் தேய்த்துக் கொடுப்பது சிறந்த வழி என்று பல் வைத்தியர்கள் கூறுகிருர்கள். அது போலவே, பற்சிதை வைத் தடுக்கும் சிறந்த வழி, இரவிலும் காலையிலும், ஒவ்வொரு முறை உணவருந்திய பின்னும், தவருமல் பிரஷ் கொண்டு பல் துலக்கி, பற்சிதைவைத் தோற்றுவிக்கும் உணவுத் துகள்களை அகற்றுவது. தவருமல் போர்ஹென்ஸால் பற்களைத் துலக்கி, ஈறுகளைத் தேய்த்துக் கொடுக்க, உங்கள் குழந்தைக்குக் கற்பியுங்கள். ஏனெனில், போர்ஹென்ஸ் பற்பசை பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்டது.

போர்ஹென்ஸ் பற்பராமரிப்பு பற்றிக் கற்பிக்க இதுவே தக்க வயது.

போர்ஹென்ஸ்

—பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

இலவசம்! **"பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்னும் விவரமான வண்ணப் புத்தகம்*** பெற, 25 பைசா தபால் தலையுடன் (தபால் செலவுக்காக) கீழ்க்கண்ட கூப்பனை "மானர்ஸ் டென்டல் அட்வைசரி பயூரோ தபால் பை எண் 10031, பம்பாய்-1" என்னும் முகவரிக்கு அனுப்புக.

பெயர்________________ வயது ________ K 8

முகவரி________________

____

*விரும்பும் மொழியின் கீழ் கோடிடவும்—ஆங்கிலம், இந்தி, மராட்டி, குஜராத்தி, உருது, வங்காளி, அஸ்ஸாமி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.

103F-R-203 TM

ASP/G/C-4

உங்கள் உடலுக்குத் தேவை 23 ஊட்டச் சத்துக்கள்

பாலிலே உள்ளவை 9

காம்ப்ளான் 23 சத்துக்களும் கொண்டது

(புரதம், வைட்டமின்கள், தாதுப்பொருள்கள் உள்பட)

காம்ப்ளானில் உள்ள 23 சத்துக்களும் அவை உங்களுக்கு அளிக்கும் நலன்களும்

புரதம்	திசுக்களையும் ஜீவ அணுக்களையும் வளர்க்கவும் சரி செய்யவும் இன்றியமையாதது.
லிபிட்ஸ்	ஆற்றலின் அடர்ந்த உறைவிடம்
கார்போஹைட்ரேட்	உடல் ஆற்றலுடன் இயங்க
கால்ஷியம்	ஆரோக்கியமான பற்களையும் எலும்புகளையும் வளர்க்கிறது.
பாஸ்பரஸ்	உடல் திரவங்கள், எலும்புகள் மற்றும் பற்களுக்கு
ஸோடியம்	சாதாரண இரத்த ஓட்டத்திற்கு
குளோரைடு (ஸி1 ஆக)	தசை இயக்கத்திற்கு அவசியமானது பிடிப்புக்களைத் தடுக்கிறது
பொட்டாஸியம்	இதன் பற்றுக்குறை மனநோயையும் தசைத் தளர்ச்சியையும் அளிக்கும்
இரும்புச் சத்து	ஆரோக்கியமான இரத்தத்திற்கு
அயோடின்	தைராய்டு சமனத்திற்கு அவசியமானது. பற்றுக்குறை நேர்ந்தால், எடைப் பிரச்னையும், கோய்ட்ரேயும் நேரலாம்
வைட்டமின் ஏ	கண்கள் மற்றும் எபிதிகல் திசுக்களை ஆரோக்கியமாக வைக்கிறது
வைட்டமின் பி-1	வளர்ச்சிக்கும், வலிமையான நரம்புகளுக்கும், பெரி-பெரி நோயைத்தடுப்பதற்கும் தேவை
ரிபோ:.ப்ளேவின்	ஆரோக்கியமான வாய், நாக்கு உதடுகள் கண்கள் முதலியவற்றிற்கு
நிகோடினமைடு	சருமம் ஆரோக்கியமாகவும் பொலிவுடனும் திகழ
கால்ஷியம் பெந்டோதினேட்	நரம்புகளையும், தசைகளையும் இறுக்கமாக்குகிறது
கோலீன்	ஆரோக்கியமான ஈரல் இயக்கத்திற்கு
பெரிடாக்ஸைன் (பி6)	தசைகளுக்கு இதமளிக்கிறது
வைட்டமின் பி 12	இரத்த சோகையை எதிர்க்கிறது
:.போலிக் அமிலம்	புதிய இரத்த அணுக்களை உருவாக்குகிறது.
வைட்டமின் ஸி	நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது ஸ்கர்வி நோயைத் தடுக்கிறது
வைட்டமின் டி	வலிமையான எலும்புகளுக்கும் பற்களுக்கும்
வைட்டமின் இ	ஜீவ உற்பத்திக்கு
வைட்டமின் கே	சாதாரண இரத்தக் கட்டுக்கு
டரேஸ் எலிமெண்ட்ஸ்	வைட்டமின்களின் உபயோகத்தை உடல் நன்கு பெறவும் ஆரோக்கியமான சுரப்பிகளின் இயக்கத்திற்கும் இன்றியமையாதது

ஊட்டச் சத்துப் பற்றுக்குறை உங்களுக்குக் கேடு விளைவிக்கக் கூடும். காம்ப்ளான் ஒரு முழுமையான உணவு—சிறந்த துணை உணவு-முழுமையான மாற்றுணவு.

காம்ப்ளானை நீரில் கரைக்கவும். நீங்கள் விரும்பினுலொழிய பால் சேர்க்கத் தேவையில்லை. ஏனெனில், காம்ப்ளானில் ஏடு நீக்கிய பால் ஏற்கனவே சேர்க்கப் பட்டுள்ளது. ப்ளெயின்காம்ப்ளானை உங்களுக்கு விருப்பமான காபி, வனில்லா, கேசர் முதலிய வற்றேடு கலந்து பருகுங்கள். (ஆரஞ்சு அல்லது எலுமிச்சை சாற்றேடு கலக்காதீர்கள்.)

காம்ப்ளான் எளிதில் சீரணிக்கக்கூடியது. அதுவளரும் குழந்தைகள், சுறுசுறுப்பாக இயங்கும் பெரியவர்கள், சூலுற்ற பெண்மணிகள், பாலூட்டும் தாய்மார்கள் முதியவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்குச் சிறந்தது.

நோயாளிகளுக்கும் பிணியாறி வருபவர்களுக்கும் அது உன்னதமான திரவ உணவு.

காம்ப்ளான் பருகும் பழக்கத்தை மேற்கொண்டு, சத்துப் பற்றுக் குறைகளிலிருந்து உங்கள் உடலுக்குப் பாதுகாப்பளியுங்கள்.



250 கிராம் காம்ப்ளான் ஹேண்டி பேக்

500 கிராம் காம்ப்ளான் எகானமி பேக்

250 கிராம் காம்ப்ளான் வாழைப்பழச்சுவை

காம்ப்ளான்® — முழுமையான உணவு

சத்துப் பற்றுக்குறைகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.

க்ளாக்ஸோ ஆராய்ச்சியின் உலகறிந்த தயாரிப்பு.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
சுற்றுலா ஒரு சிறப்பான அனுபவம். பல்லாயிரக் கணக்கானோர் வேலை வாய்ப்புப் பெறுவதோடு, நாட்டிற்குத் தேவைப்படும் அந்நியச் செலாவணியைக் கோடிக்கணக்கில் ஈட்டித் தருகிறது. பல்வேறு நாட்டு மக்களிடையே நட்பையும் ஒற்றுமையையும் உறவையும் வளர்க்கிறது.
விருந்தோம்பலில் சிறந்த தமிழர்களின் உயரிய நாகரீகத்தை வெளிஉலகுக்கு எடுத்துக்காட்டும் வண்ணம், தமிழகத்தின் எண்ணற்ற எழில்மிகு காட்சிகளைக் காணவரும் வெளிநாட்டு, வெளிமாநில சுற்றுலாப் பயணிகளை முகமலர்ந்து வரவேற்று நண்பர்களாகத் திருப்பி அனுப்புவோம்.
சுற்றுலா இயக்குநர்
தமிழ் நாடு அரசு

பண்டிகையின் மகிழ்ச்சிக்கு
நிறைவு அளிக்கும் காபி

COFFEE BOARD, BANGALORE

inca/cb/4

ரேயான். நெசவுலகிலே நிகரில்லா வசியமந்திர வலை பின்னும் நூல். பாரதநாட்டின் நெசவுத் தொழிலுக்கு மிகப் பெருமளவிலே ரேயான் நூலை வழங்கிவருவோராகிய NRC—நாட்டின் உடைத் தேவைகளை நிறைவு செய்திடவும், பருத்தி விளையும் நிலத்தினை உணவுச் சாகுபடிக்கென விடுவிக்கவும் உரிய பங்கு செலுத்தி வருகின்றனர்.

தவிர, ரேயான் டயர் கார்டு, பலதரப்பட்ட இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றையும் உற்பத்தி செய்து வருகின்றனர் NRC—மகாராஷ்டிரத்தில் கல்யாண் நகருக்கு அருகே மொஹோனே என்ற இடத்திலுள்ள தொழிற்களத்திலே. நல்வாழ்வுக்கான வசதிகள், பயிற்சி நிலையங்கள், உள்ளூரமேறிய ஒத்துழைப்பு மனப்பான்மை—யாவும் ஒருங்கிணைந்த மொஹோனே, அதன் ஊழியர்களுக்கு வெறும் தொழிற்பேட்டையாகத் தென்படவில்லை—குதூகலமான ஒரு புது வாழ்வு நெறி.

தி நேஷனல் ரேயான் கார்ப்பொரேஷன் லிட்.,
எவர்ட் ஹவுஸ், ப்ரூஸ் ஸ்ட்ரீட், ஃபோர்ட், பம்பாய்-1.

அருமையான ரேயான் நூலை நெசவுத் தொழிலுக்கு அளித்து,
அதன்மூலம் NRC® அழகழகான ஆடைகளை அவளுக்கு அணிவிக்கிறது.

NRC/11A TM

கோலாகலமான பண்டிகை நாளில்
குதூகலமாக நடைபோடுவீர்
தீபாவளி நல்வாழ்த்துகள்
ப்யூமா—குழந்தைகளுக்கு
ரூ. 23·50*
சரிதா—பெண்மணிகளுக்கு
ரூ. 12·95*
ஃபைனலிஸ்ட்—ஆடவருக்கு
ரூ. 17·95*
ஒமேகா—ஆடவருக்கு
ரூ. 34·00*
*வரிகள் தனி
கரோனு மிதியடிகள்
கரோனு ஷாஹூ கோ. லிட்., 221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு, பம்பாய்-1

STATE BANK OF INDIA
GIFT CHEQUE
ON DEMAND PAY TO
"தீபாவளி நல்வாழ்த்துகள்"
உங்கள் நல்வாழ்த்துகளைத் தெரிவிக்க
ஒரு புதுமையான வழி—
ஸ்டேட் பாங்க் அன்பளிப்புச் செக்!
ஸ்டேட் பாங்க்
AIYARS-S. 314 TM

டிஐ அளிக்கும் கவர்ச்சியான
சைக்கிள்கள்
TI
பிலிப்ஸ்
ஹெர்குலிஸ்
பிஎஸ்ஏ
கைதேர்ந்த நிபுணர்களின் தயாரிப்புகள்
டிஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், சென்னை 53
உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை-1
TIC/7309

குழந்தைகளுக்கு ஏற்ற கோலாகலமான துணிகள்!

'கோல்ட் ஃபாயில்,'
'டைமண்ட் ஸ்டார்' மற்றும் 'ஸில்வர் ஃபாயில்'
சேலைகளில் எம்பிராய்டரி வேலைப்பாடு செய்தால்
எத்தனை அழகு! சலவைக்குப்பின் சுருங்காது.
இதமாக ஸ்டார்ச் போடலாம். கண்ணைக்
கவரும் வண்ணங்களில் பற்பல ஆர்கண்டி
தினுசுகள். எப்போதும் நீங்கள்
விரும்பும் துணிகளை, இப்போது ஸ்வான்
மில்ஸ் தானே சொந்தமாகத் தயாரித்தளிக்கிறது
முற்றிலும் புதுப் பொலிவோடு.

ஸ்வான் மில்ஸ் லிமிடெட்

UD-55-TAM



வண்ணங்களும் வகைகளும் பலப் பல
ஆனல் தரம் ஒன்றேதான்: உயர்தரம்!
அதுவே 'பாரிவேர்'

தரத்தை விரும்புவோர் பாரிவேரை நாடுவதற்கு இதுதான் காரணம்.
வழவழப்புடன் கூடிய பளபளப்பு கொண்டது. நீரை உறிஞ்சாதது. விரிசல் விழாதது.
முற்றிலும் சுகாதாரமானது. முத்துப் போன்ற வெண்ணிறம், மற்றும் பிங்க்,
பிரிம்ரோஸ், டர்க்காயிஸ், ஸ்கைப்ளூ, மெல்லோ கிரீன்,
மிஸ்ட் கிரே ஆகிய நிறங்களில் கிடைக்கிறது.

Parryware
VITREOUS

பொலிவான வாழ்க்கைக்கு
— பாரிவேர் விட்ரியஸ்

ஐ.எஸ்.ஐ. மற்றும் டி.ஜி.எஸ்.
அண்ட் டி. பட்டியல்களில்
இடம் பெற்றிருப்பது

ஈ.ஐ.டி. - பாரி லிமிடெட்
ராயல் டௌல்டன்ஸ், யு.கே.யின்
தொழில்நுட்ப ஆலோசனை கொண்டது
டேர் ஹவுஸ், சென்னை-1

இந்தியாவின் மிகப் பெரிய
ஸெராமிக் தொழிற்சாலையில்
தயாரிக்கப்பட்டு, அகில
உலகப் புகழ் பெற்றது

டிஸைன்
இண்டெக்ஸுக்கான
யு.கே. கவுன்ஸில் ஆஃப்
இண்டஸ்ட்ரியல் டிஸைன்
நிறுவனத்தின் பட்டியலில்
இடம் பெற்றிருப்பது

FDSPW 1334 B-TM

தீபாவளி வாழ்த்துக்கள்

தந்தி: "EXPORT"

போன்: பேக்டரி: 21
ஆபீஸ்: 94

ஈகிள் பிராண்டு பட்டாஸ், கம்பி மத்தாப்புக்கள் & பேபி பிராண்டு கேப், வெடிகள்

தயாரிப்பாளர்கள்:

சதர்ன் இந்தியா எக்ஸ்போர்ட்டிங் கம்பெனி

லார்டு பயர் ஒர்க்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

லார்டு பேப்பர் கேப் பேக்டரி

சிவகாசி.

THE STORY OF GROWTH

The story of SIDCO is the story of growth, growth in a problem solving context. The problems of—Small Scale Industries—Problems created out of—scarcity—scarcity of raw materials, knowhow—insfrastructure, finance of various kinds

SIDCO's record of service to help solve the problems of Small Industries in Tamil Nadu has resulted in many a smiling face

SIDCO has so far distributed scarce raw materials iron and steel and the like worth over Rs. 722 lakhs.

SIDCO has constructed work-sheds for 17 small industries in Ambattur. Another phase of 50 work-sheds is under-way.

Over 305 entrepreneurs assisted to purchase machinery worth over 139 lakhs. Special attractive schemes for educated unemployed.

SIDCO's new loan scheme provides fixed and working capital to small industries.

Entrepreneurs may obtain all the assistance required by them under the single roof of SIDCO, operating through its head office at Madras and Branch offices at Madurai, Tiruchy, Coimbatore and Vellore.

"SIDCO shares anything with entrepreneurs except their profits"

COME TO SIDCO—the Understanding people

122, ANNA SALAI, MADRAS-6

Phone Nos: 810316, 810317, 81599

SPEEDY AND SURE SUPPORT TO SMALL INDUSTRIES

எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத் தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,

பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

உயர்ரகத்தைக் குறிக்கும்
வாட்டர் மார்க்



FDS.SPB 777

உங்களுக்கு
ஐ.டி.ஐ—ன்
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

ஐ.டி.ஐ. உங்களுக்கு வாழ்த்துரை வழங்குகிற இந்த நேரத்தில், நீங்களும் உங்களுடைய உற்றார் உறவினர்களுக்கு உளங்கனிந்த நல்வாழ்த்துச் செய்திகளை அனுப்பி இருப்பீர்கள்.

இந்த நற்செய்தியையும் மற்றும் பலவகையான செய்திகளையும் நீங்கள் தெரியப்படுத்துவதற்கு சாதாரண தொலைபேசியிலிருந்து நுட்பமான பல்வழி செய்தி ஏந்தும் கருவிகள் வரை ஐ.டி.ஐ தயாரித்து அளிக்கும் பலதரப்பட்ட தொலைதூர செய்தித் தொடர்புக் கருவிகள் உதவுகின்றன.

இந்த நற்பணிகள் அனைத்தும் பாரதத்தின் பல பகுதிகளையும் மக்களையும் ஒருமைப்பாட்டுடன் இணைத்திடவே.

Communication is our business

இந்தியன் டெலிபோன் இண்டஸ்டிரீஸ் லிமிடெட்
பெங்களூர்-16.

AIYARS-ITI-1972 TAM.

எழுச்சி

ஒரு புத்தெழுச்சி நம் நாட்டின் பெரும் பாகங்களில் பெருக்கெடுத்தோடுகிறது. பல பாசன நிலப்பகுதிகளில் உயர் விளைச்சல் வகைகள், உரங்கள், பூச்சித்தடுப்பு மருந்துகள், விவசாய இயந்திரங்கள் போன்றவற்றைக் கையாண்டு விவசாயிகள் பயிர் விளைச்சலில் அநேக அரிய சாதனைகள் புரிந்து வெற்றி கண்டுள்ளனர்.

இது ஓர் ஏற்றமிகு எழுச்சி. இதனைப் போற்றிக்காக்க வேண்டும். நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் இதனைப் பரப்ப வேண்டும். இப்பசுமைப்புரட்சிக்கு உதவிய கருவிகளும் செய்முறைகளும் பல்லாயிரம் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் பெருக்கெடுத்தோடும் எழுச்சி நிரந்தரமான வளத்திற்கு வழி வகுக்கும்.

உலகில் மிகவும் விரும்பப்படும் டிராக்டரையும் விவசாய இயந்திரங்களையும் உற்பத்தி செய்யும் டஃபே இப்பசுமைப் புரட்சியில் தனது பங்கு குறித்துப் பெருமையுறுவதோடு இந்திய விவசாயத்தை நன்மைப்படுத்தும் மகத்தான பணியில் மேலும் உறுதியான பங்கேற்கக் காத்துக் கொண்டிருக்கிறது.

TAFE
டிராக்டர்ஸ் அண்டு ஃபார்ம் எக்விப்மெண்ட் லிமிடெட், மதராஸ்.

AIYARS-M. 302 T79

மபத்லால் க்ரூப் வழங்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

With the best compliments from

JAYANTHI FILMS (MADURAI) PRIVATE LIMITED

Madras-18 Madurai-1

AWAIT OUR RELEASE

Nadigar Thilagam SHIVAJI GANESAN - VANI SRI

IN

"Sivakamyin Selvan"

தீபாவளி

தீபாவளி - நம் நாட்டின் வரலாற்றிலே முக்கியமான திருநாள். நன்மையும் பெருந்தன்மையும் தீமையை வெற்றிகண்ட விழா. யாவரும் கொண்டாட வேண்டிய நாள். சுருங்கச் சொன்னால், இன்பத்தைக் குறிப்பது தீபாவளி.

மக்களுக்குப் போதுமான உணவும், உடுத்த உடையும், வாழ வீடும் இருந்தால்தான் அது உண்மையில் மகிழ்ச்சியாகும். வேலை வாய்ப்பே இந்த லட்சியத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இந்தச் சமயத்திலேதான் எங்கள் உதவி தேவைப்படும். வேலையில்லாதோர் சொந்தமாகவே தொழில் முயற்சி தொடங்குவதற்கு உதவ முன்வருகிறோம். ஏனெனில், சொந்தமாகத் தொழிலில் முனைவதுதான் முன்னேற்றத்துக்கும் சுபிட்சத்துக்கும் அடிப்படை என்பதை நாங்கள் நம்புகிறோம். உண்மையில் நமக்கு நாமே உதவி. நம் சொந்த முயற்சியால் தொழிலில் ஈடுபடும் ஆண்டாகவே 1972-ஆம் ஆண்டை நாங்கள் கருதுகிறோம்.

கனரா பாங்க்

தலைமை அலுவலகம் :: பங்களூர்-2



மைகோ — தொழில்துறை முன்னேற்றங்களுக்கான மாற்றங்களுக்கு உதவுகிறது

ஓராயிரம் தொழிற்கூடங்கள் பெருகட்டும்

ரோஜாச் செடிகளை நீங்கள் வளர்த்ததுண்டா? அவற்றைப் பேணுவது, பாதுகாப்பது, முழுமையான பொலிவுடன் அவை மலர சூழ்நிலைகளை உருவாக்கித் தருவது, எத்தகைய கடினமான பணி என்பதை அப்போது அறிவீர்கள்.

இதைப் போன்றதொரு அனுபவம் எங்களுக்கும் உண்டு. ஆனால், அது 200க்கும் மேற்பட்ட சிறு தொழில் நிறுவனங்கள் வளர உதவியபோது ஏற்பட்டது. இந்நிறுவனங்கள் எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்பவை. அவற்றுக்கு மைகோ துணை ஒப்பந்தப் பணிகளின் மூலம் தன் முழு ஆதரவையும் அளித்துள்ளது. அது மட்டுமல்ல. மைகோவின் தொழில்துறை விற்பன்னர்களின் உதவியும் ஆலோசனைகளும் கூட அவற்றுக்கு உண்டு.

அவை இப்போது தனித்தியங்கும் வலிமை பெற்றுள்ளன. புதிய தொழில்களை மேற்கொள்ளும் ஆற்றல் பெற்றுள்ளன.

நம்பிக்கை என்னும் சிறு வித்திலிருந்து தொடங்கி இன்று ஆற்றல் நிறைந்த வளர்ச்சியை அவை பெற்றுள்ளன. இவை தவிர, சுமார் 800 சிறு தொழில் நிறுவனங்களும் எங்களுடைய மூலக் கருவிகளை வாங்கும் வாடிக்கையாளராக உள்ளன.

முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டுள்ள ஒரு நாட்டில் இத்தகைய அடிப்படைத் திறன் கொண்டுள்ள சிறு தொழில் நிறுவனங்களின் பணி எவ்வளவு முக்கியமானது என்பதை மைகோவில் நாங்கள் உணர்ந்திருக்கிறோம். குறிக்கோள்கள் நிறைந்த புதிய மாற்றங்கள் மூலம் முன்னேற்றம் என்பதில் நாங்கள் உறுதியாக நிற்கிறோம்.

மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட், பெங்களூர்

மைகோ
-முன்னேற்ற சக்கரங்களை சுழல்விக்கிறது

MICO

LICENCE BOSCH

MICO/6576



தந்தி: "ISRINGAR" டெலிபோன்: 23693

I. S. R. IYENGAR & CO.

ரைஸ்மில் இஞ்சினீயர்ஸ் & மெஷினரி மெர்ச்சண்ட்ஸ்

தபால் பெட்டி நெ. 1719

40-A, லிங்கி செட்டித் தெரு · சென்னை-1

விற்பனையாளர்கள்:

- ரைஸ் ஹல்லர்கள்
- மாவு மில்கள்
- சீயக்காய் மில்கள்
- பால்பேரிங்குகள்
- புல்லி, ஷாப்ட்கள்
- கடலைக்காய் பெட்டி
- சல்லடைகள்
- ஹேர், ரப்பர், பெல்டுகள்

எப்பொழுதும் கிடைக்கும்

எழில்மிகு தோற்றம்
இதயம்கவர் வண்ணம்
உறுதியான அமைப்பு

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் உற்பத்தி செய்யும்

எஃகு மர சாமான்கள்
பல வண்ண பீங்கான் பொருட்கள்

உங்கள் இல்லத்தின்
கூடம், உணவு அறை,
படுக்கும் அறை, மற்றும்
அலுவலகத்தின் எல்லா தேவைகளுக்கும் ஏற்றது

கிடைக்குமிடம்:

1. டான்சி விற்பனை அகம்,
113, என். எஸ். சி. போஸ் சாலை
சென்னை-1 (தொலைபேசி எண். 38197)
2. டான்சி விற்பனை அகம்,
4/141, அண்ணா சாலை,
சென்னை-6 (தொலைபேசி எண். 81816)
3. டான்சி விற்பனை அகம்,
312, கிராஸ்கட் ரோடு,
கோவை-12 (தொலைபேசி எண். 30755)
4. டான்சி விற்பனை அகம்,
அமெரிக்கன் கல்லூரி கட்டிடம்,
மதுரை-2 (தொலைபேசி எண். 27101)

விவரங்களுக்கு:

நிருவாக இயக்குனர்,
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்,
35/2 உட்ஸ் சாலை,
சென்னை-2

Published by N. Ramaratnam
and Printed at the M.L.J. Press Private Ltd., 55/56, Mundakkanni Amman Koil Street, Madras-4.
Editor: N. Ramaratnam, Managing Editor: K. V. Jagannathan.

SANKAR
I C
CEMENT
தீபாவளி வாழ்த்துகள்
இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
தன் பில்டிங், சென்னை-2
சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்
ADSIC 1834 TM

Flower-fresh kissed by sunbeam

She wears a sari of her dream

Khatau

VOILES

THE KHATAU MAKANJI SPG. & WVG. CO. LTD.

Head Office: Laxmi Building, Ballard Estate, Bombay-1

Mill: Haines Road, Byculla, Bombay-27

Wholesale Shop: Mulji Jetha Market, Bombay-2